ஆபீஸ் முடியற நேரத்துல அலாரம் வைக்காமலே எழுந்து உற்சாகமாக சோம்பல் முறிச்சுட்டு வீட்டுக்கு எழுந்து ஓடுறார்.!
நன்றி குங்குமம்

டாக்டர்.. என் கனவருக்கு இப்போ எப்படி இருக்கு ?
அவர் கவர்மெண்ட் ஆஃபீஸரா ?
ஆமாம் !

அப்போ சந்தோஷமான விஷயம்தான். கவர்மெண்ட்ல இருந்து நிறைய பணம் உங்களுக்கு வரப்போகுது. !

ஏங்க.. நம்ம பையன் பொண்ணுங்களைக் கண்டாலே பயந்து ஒதுங்கறான் !
அப்ப அவனுக்குச் கல்யாண ஆசை வந்துடுச்சுன்னு சொல்லு !

இந்தத் தரகர் இதுக்க முன்னாடி மாட்டுத் தரகரா இருந்திருக்கலாம் அதுக்காக இப்படியா ..?
ஏன் - என்ன பண்ணினார் ?
பெண்ணோட பல்லை வெச்சுத் தான் வயசைக் கணக்குப் பண்ணுவராம்..!

என்ன இது.. .. ஜோசியர், முதலாம் இடத்தில் மௌஸ் இருக்கான். இரண்டாம் இடத்தில் மானிடர் இருக்கான், றார் ?
கம்ப்யூட்டர் ஜாதகம் கணிக்கறாராம்.!

புதுமையா ஒரு கதையை யோசிச்சு வைக்கக் சொன்னீங்களே'.. வைச்சிருக்கேன். படமா எடுத்தா சூப்பரா ஓடும் !
சொல்லுங்க.. ..
கென்னடியைச் சசுடறதுக்கு நம்ம ஹீரோ போறான். அதுக்குள்ள யாரோ அவரைச் சுட்டுடறாங்க.. !

எதுக்குத்தான் பெயர் வைக்க அரசியல்வாதியைக் கூப்பிடுறதுன்னு ஒரு விவஸ்தை இல்லாமப் போச்சு ..!
ஏன் இப்படிச் சொல்றே ?
ஒரு புது வியாதிக்குப் பெயர் வைக்க நம்ம தலைவரைக் கூப்பிட்டிருக்காங்களாம் !

இப்பெல்லாம் என் கனவுல அடிக்கடி நீங்க வர்றீங்க டாக்டர்..
ஃபீஸ் பாக்கியைக் கொடுங்க அப்புறம் வரமாட்டேன்.. !

கட்சில நீ தீக்குளிப்புப் பிரிவா ?
இல்லை .. தீ வைப்புப் பிரிவு..

ஒரே கேள்விக்கு ரெண்டு தடவை விடை எழுதியிருக்காயே ?
அது ஆக்ஷன் ரிப்ளே டீச்சர் !

ரெண்டு இட்லியைக் கூட முழுசா சாப்பிட முடியலை டாக்டர் !
அப்போ புட்டுப் புட்டு சாப்பிடுங்க !

மேஜை மேலே ஏறி உட்கார்ந்துகிட்டு, அப்படி என்ன சாப்பிடறார். இவர் ?
வெஜி 'டேபிள்' பிரியாணி !

சமத்துவபுரத்தத்துல இருக்கறவங்கள்லாம் ஒண்ணா சந்திக்கறதுக்கு ஒரு பூங்கா அமைக்கணும் தலைவரே ..!
அதான் பக்கத்திலேயே ஒயின் ஷாப் அமைச்சுட்டோமே !

போருக்குப் போறதா சொல்றாரு.. ஆனா தலைவரோட கையில் ஆயுதமே இல்லையே ..?
அட நீ வேற.. அவர் வீட்டு வைக்கோல் போருக்குப் போறதைத்தான் இப்படி பந்தாவா சொல்லிட்டுப் போறாரு. !
நன்றி இதயம் பேசுகிறது.

லோன் செக்ஷனில் வேலைபார்க்கிறவரை மாத்திடணும் சார் .. ..
ஏன் .. .. ?
எதோ கடனுக்கு வேலை பார்க்கிறார் !

எங்க வீட்டுல என் மனைவிக்கும் மாமியாருக்கும் இதுவரை சண்டையே வந்ததில்லை .. ..
பேஷ் அவ்வளவு ஒற்றுமையா .. .. ?
நீங்க வேற .. .. நான் சொன்னது என் மனைவிக்கும் என்னோட மாமியாருக்கும்

அந்த ஆள் போலி டாக்கடர்னு எப்படிச் சொல்றீங்க .. .. ?
பின்ன .. .. பதினெட்டு வயசுக்கு மேல இருந்தால்தான் மேஜர் ஆபரேஷன் பண்ணுவாராம் .. .. ..

டெலிபோனை கறையான் அரிச்சா என்ன ஆகும் .. .. ?
செல்போன் ஆகும் .. ..

டாக்டர் .. .. எல்லா வார்டுகள்லேயும் உள்ள பேஷண்ட்ஸ் கூட்டமா வந்து நிக்கறாங்க .. .. !
என்னவாம் .. .. ?
அவங்களுக்குள்ளே வார்டு தலைவர் எலெக்ஷன் நடத்தணுமாம்

வக்கீல் யுவர் ஆனார் .. .. இந்தக் குற்றவாளி மிகவும் சாதுரியமாக, புத்திசாலித்தனமாக, கைரேகை படாமல் மிகவும் சாமர்த்தியமாக போலீஸாரின் கண்களில் மண்ணைத் தூவி கிரிமினல் மூளையோடு இந்தக் கொலையைத் திறம்படச் செய்திருக்கிறார். !
குற்றவாளி வக்கீல் ஐயா என்னை ரொம்பவும் புகழ்ந்து பேசறாரு .. .. எனக்கு ரொம்ப வெட்கமா இருக்கு யுவர் ஆனர். .. .. !

சரியான மக்கு சார் அந்த ஆள் ! வோர்ல்ட் கப் கிரிக்கெட் பார்க்க ரெண்டு டிக்கெட் எவனோ வித்திருக்கான் .. ..
இவரும் வாங்கியிருக்காரு ..
அதுல என்ன தப்பு .. .. ?
அட, டி.வி-ல மேட்ச் பார்க்கிறதுக்கான டிக்கெட்டை வாங்கியிருக்கார் சார் .. .!

நெட் ஜோக்
ஜேம்ஸ் என்பவன் தன் நண்பனான டேவிட்டிடம் ஓடி வந்தான் கை, கால் எல்லாம் பதற்றம்.
டேவிட், நாம ரெண்டு வருஷத்தக்கு முன்னால பிக்னிக் போனபோது ஒரு பண்ணை வீட்டுல தங்கினோமே ஞாபகமிருக்கா ? என்றான்.
டேவிட்டுக்கு உதறல் ஆரம்பித்தது ஆமா அதுக்கு என்ன இப்போ ?
அங்கே ஒரு பொண்ணு தனியா இருந்தா நம்ம கூடவே தங்கினாளே .. ..
டேவிட்டின் உதறல் அதிகரித்தது ஞாபகமிருக்கு. இதெல்லாம் இப்ப என்னத்துக்கு .. .. ?
ஜேம்ஸ் விடவில்லை அன்னிக்கு நீ நான்தான் ஜேம்ஸ்னு பொய் சொல்லி அவகிட்டே தப்பா நடந்துகிட்டேல்ல .. .. என்றான்.
ஸாரி .. .. ஜேம்ஸ் நான் பேரைக் கெடுத்ததுக்கு மன்னிச்சுக்கோ என்றான் டேவிட்.
அடப்போடா கிறுக்கா .. .. அந்தப் பொண்ணு போன வாரம் செத்துப் போயிட்டா. அந்தப் பண்ணை வீட்டுல ஜேம்ஸ், அதான் நீ நடந்துகிட்ட விதத்தைப் பாராட்டி ஜேம்ஸ்னு என்னோட பேருக்குத் தன் பூரா சொத்தையும் எழுதி வெச்சிட்டுப் போயிருக்கா .. .. !

எனக்கு தினமும் காலையில் பேப்பர் படிக்கலையின்னா தலையை வெடிச்சிடுங்க
அப்படி என்ன பேப்பரிலே பார்ப்பீங்க ?

லாட்டரி சீட் நம்பர்தான்

தயாரிப்பாளர் நீங்கள் அப்பா - மகன் இரட்டை வேடத்தில் நடிக்கணும்.
நடிகர் மேக்-அப் கெலவு ரொம்ப ஆகுமே !
தயாரிப்பாளர் அதெல்லாம் இல்லை அப்பாவாக நடிக்கும்போது நீங்கள் டை அடிக்காமல் வந்தால் போதும்.

தாய்ப் பாலே தண்ணியா இருக்காம் ! குழந்தை குடிக்காம அழுது !
யாரோட குழந்தை ?
பால்காரியின் குழந்தைதானம் !

அழி ரப்பர் தொழிற்சாலை நடத்திக்கிட்டிருந்தீங்களே, ஏன் நிறத்திட்டீங்க ?
என் குடும்பத்தையே அழிச் சிருச்சே .. .. !

செருப்பு காலை கடிக்காம இருக்க என்ன செய்யலாம் .. ?
கைல எடுத்துனு போங்க .. .. !

ஆனாலும் ! உங்க பையன் இவ்வளவு மக்கா இருக்கக் கூடாது .. ..
ஏன் .. .. .. ?
எட்டுக்கால் பூச்சிக்கு எவ்வளவு கால்னு கேட்டால் தெரியாதன்னு சொல்றான் ?

---குருவிபோல் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்த்து வைத்தேன்.
என்ன ஆச்சு .. .. ?
கழுகுபோல் என் கணவர் தூக்கிக் கொண்டு போய் விட்டார்.

என் மனைவிக்கு வாசனைப் பொருட்கள் மேல ரொம்ப பிரியம் .. .. !
அதுக்கு ஏன் கவலைப்படுற ?
மசக்கை கமயத்துல முகப்பவுடர் சாப்பிடுறா !

டாக்டருக்கு தன்னம்பிக்கை குறைவு போல !
எதை வச்சி சொல்ற ?
தினசரி பத்து பக்கத்துக்கு ஆபரேஷன் சக்ஸஸ்னு எழுதிக்கிட்டு வர்றாரே !

உன் படிப்பு சரியில்லைனு உங்கப்பாவைக் கூட்டிட்டு வரச் சொன்னேனே .. .. ஏன் வரல .. .. ?
முதியோர் பள்ளில எங்க தாத்தா போக்கு சரியில்லைன்னு புகார் வந்து அங்கே போயிருக்கார் .. .. .. !

பெண் பார்க்க வந்த கோஷ்டி வீட்டுக்குள்ள நுழையாமலே திரும்பிப் போகுதே, ஏன் ?
இன்றைய டிபன் என்னென்ன வகையறான்னு பெண் வீட்டார் எழுதிப் போட்டிருந்த அயிட்டம் பிடிக்கலியாம் .. .. !

என் பையனுக்கு நிறைய காம்ப்ளான் வாங்கிக் கொடுத்தது தப்பாய் போச்சு .. ..
ஏன் .. .. !
ஸ்கூல்ல வாத்தியார் நீ யாரோட பையன்னு கேட்டால் ஐம் ஏ காம்ப்ளான் பாய்னு சொல்றான்
நன்றி குங்குமம்

தலைவர் நம்ம எல்லோரையும் மனுஷனாவே மதிக்கறதில்லைனு எப்படிச் சொல்றே .. .. ?
யாரும் என்கிட்டே வாலாட்டக் கூடாதுன்னு அடிக்கடி கொல்றாரே .. .. !

சுட்டுப்போட்டாக்கூட அவன் வாயில் நல்ல வார்த்தையே வராது .. .. !
அப்படியா .. .. ?
பின்ன .. .. சுட்டுப்போட்டா அவந்தான் செத்துடுவானே .. .. !

மாப்ள ஸ்டார் ஓட்டல்ல சர்வராம் அதனால கல்யாண விருந்துல சாப்பிட்டவங்க எல்லாரும் டிப்ஸ் குடுத்திட்டுத்தான் போகணும்னு சொல்றாராம் ..

ஜம்ப் பண்ணி .. .. ..

ஜம்ப் பண்ணிப் போறாரே .. ! அவரு யாருங்க .. .. ?
அவர்தான் ஜம்புலிங்கம் .. .. .. !

அவர் கிரிக்கெட் பைத்தியம்னு எப்படிச் சொல்றே .. .. ?
விதி விளையாடிருச்சினு சொன்னா, ஸ்கோர் என்னனு கேட்கறார் .. ..!

ஒருத்தரைச் சிரிக்க வைக்க முயற்சி செஞ்சேன் .. .. ! கொலை முயற்சின்னு உள்ளே தள்ளிட்டாங்க .. .. !
ஏன் .. .. ?
பஸ்ஸில் தொங்கிட்டு வந்தவரை கிச்சுக் கிச்சு மூட்டக்கூடாதாம் .. !

என் முதல் மனைவி உங்க கையாலதான் மேல போய் சேந்தா .. .. ! என் மாமியாரும் உங்க கையாலதான்
எமலோகம் போய் சேந்தா .. ! இப்ப என் வப்பாட்டியக் கூட்டிகிட்டு வந்திருக்கேன் .. .. பாத்து உங்க கைராசியைக்
காட்டுங்க டாக்டர்.. .. !

ஏன் பாத்ரூம் கதவைத் திறந்து வெச்சுக்கிட்டே குளிக்கிற .. .. ?
அப்பதான் யாராவது எட்டிப் பார்த்தா தெரியும் .. .. !

உங்ககூட ஹீரோயினா நடிச்ச நடிகை, இன்னைக்கு உங்க அம்மாவா நடிக்கறதப் பத்தி என்ன நினைக்கறீங்க .. .. ?
அப்பெல்லாம் மேக்-அப் நல்லா இருந்தது .. .. . !!

நாம் போகும் ஸ்கூட்டருக்கு முன், உன் அப்பா கட்டையைப் போடுகிறாரே .. ?
நம் காதலுக்கு அவர் முட்டுக்கட்டை போடுவார் என்று சொன்னேனே .. !

இன்னிக்கு இல்லாட்டி ஒருநாள் உன்னை அடைஞ்சே தீருவேன்னு சொல்றாரே யார் அவர் .. .. ?
அவர்தான் என்னோட கணவர் .. .. !

சித்தா டாக்டரைக் காதலிக்கிறியா .. .. எத்தனை நாளா .. .. ?
ஒரு மண்டலமா .. .. !

எங்க வீட்டுக்காரர் எப்பப் பார்த்தாலும் டி.வி-யைப் பார்த்துக் கிட்டிருக்கார் டாக்டர் .. .. ! இது ஒண்ணும் பெரிய
பிரச்சினை இல்லையே .. .. ?
பவர்-கட் ஆனா கூட மெழுகு வர்த்தியைக் கொளத்தி வச்சிக்கிட்டு பார்த்துக்கிட்டிருக்காரே .. .. !

மாமியார் புலம்பல்
ஸ்டண்டு மாஸ்டர் பொண்ணை என் பையனுக்குச் கட்டி வைச்சது தப்பா போச்சு .. .. !
என்ன ஆச்சு .. .. ?
என்னோட சண்டை போட்டுட்டு பேட்டா கேட்கறா .. .. !

அப்பா அம்மா சாமிகிட்ட போயிட்டா அழாதோடா கண்ணு
மகன் இனிமேல் நீங்களும் அழத்தேவையில்லை .. .. நானும் அழத்தேவையில்லை .. .. பாவம் சாமி .. .. !

என்ன இது பொண்ணு பார்க்க வந்தவங்க .. .. . பாத்திரம் கொண்டு வந்திருக்காங்க .. .. ?
நீங்க தர்ற பஜ்ஜி சொஜ்ஜி எல்லாத்தையும் பாத்த்திரத்திலே போட்டுகிட்டு இன்னும் மூணு இடம் பொண்ணு பார்க்கப்
போகணுமாம் .. .. !

குடி குடியைக் கெடுக்கும்னு சொன்னாங்களே .. .. அது ரொம்ப கரெக்ட் .. ..
எப்படிச் சொல்றீங்க .. .. ?
ரெண்டு கடைச் சரக்கையும் ஒண்ணா கலந்து குடிச்சேன் போதையே ஏறலை ..!

அந்த பேங்க்ல கொள்ளையடிச்சுட்டு நம்மள பாம்பே போகச் சொல்றாரே இன்ஸ்பெக்டர் .. .. !
நம்மளப் பிடிக்கிற சாக்குல அப்படியே அவரு பாம்பே பார்க்கத்தான் !

உங்க படத்துக்கு மட்டும் எங்க தியேட்டர்ல இடைவெளியே விடமாட்டோம் ..!
பரவாயில்லையே .. .. ! ஏன் .. .. ?

தூங்கறவங்களை எழுப்பறது பாவமாச்சே .. .. !

கூட்டத்துல பேச்சு நடுவே ஏன் உண்டி கொடுத்தோர் உயிர் குடுத்தோர்ன்னு தலைவர் சொல்றாரு .. .. ?
உண்டியல் குலுக்கறவன் புது ஆள் அவன் பத்திரமா தன்கிட்டே திரும்பி வரணம்னுதான் அப்படிப் பேசறார் .. .. !

என்ன இது இவ்வளவு நேரமாச்சு உள்ளே போன ஆளு வரலியே .. .. ?
அவர் அரசியல்வாதிங்க ! உக்கார இடம்கிடைச்சா விடமாட்டாரு .. .. !

என்னை எங்க ஆபிஸ்ல கதாசிரியர்னு தான் கூப்புடுவாங்க .. . ?
நல்லா கதை எழுதுவீங்களா .. ..
ஊஹூம் .. .. ஆபிஸுக்கு லேட்டா போன .. .. அதுக்குக் காரணத்தைச் சொல்லியே இந்தப் பேர் வந்துடுச்சி .. ..

தலைவருக்குதான் டாக்டர் பட்டம் கொடுத்தாச்சே இன்னும் என்ன கேட்கிறார் ?
அவரோட சின்ன வீடுகளுக்கும் நர்ஸ் பட்டம் கொடுக்கணுமாம் .. .. !

கல்லூரி ஜோக்ஸ்

ஆப்ரிக்கக் காட்டுல மனுசங்களைத் திங்கற ஒரு பயங்கரப் புலி இருந்துச்சு .. .. ஆப்பிரிக்கா போலீசால அதைப் புடிக்கவே முடியல .. .. உடனே புடிக்கறவங்களுக்குப் பரிசுன்னு போட்டி வெச்சாங்க .. .. ஜப்பான், சைனா, இந்தியா மூணு நாட்டுப் போலீசும் போச்சு இந்தியாவுலேயே ரொம்ப டாப்புல இருக்கிறவங்க தமிழ் நாட்டுப் போலீஸ்தான்னு இந்தியா சர்பா அதை அனுப்பினாங்கா .. .. !
முதல் நாள் ஜப்பான் போலீஸ் போச்சு .. .. முடியலைன்னு வந்துருச்சு .. .. ரெண்டாம் நாள் போன சைனா போலீசாலயும் புலியைப் பிடிக்க முடியலை ! மூணாம் நாளு தமிழ்நாடு போலீஸ் போச்சு .. .. போய் மூணு நாள் ஆகியும் வெளியில வரலேன்னதும் போட்டி வெச்சவங்க உள்ளே போய்ப் பாத்தாங்க .!
அங்க ஒரு மரத்துல ஒரு கரடியைக் கட்டி வச்சு நான்தான் புலின்னு ஒத்துக்கோ ஒத்துக்கோ ன்னு அதை அடிச்சிட்டிருந்தாங்க.

எமன் ஒரு மனஷன்கிட்ட, நீ சொர்க்கத்துக்குப் போறியா ? நரகத்துக்குப் போறியான்னு கேட்டாரு அதுக்கு மனுஷன் எது எப்படி இருக்கும்னு தெரிஞ்சாத்தோனே சொல்ல முடியும்னு கேட்டான் சரி ஏதாவது ஒண்ணை மட்டும் காட்டறேன் எதைப் பாக்கணும் ? னு கேட்டதும் நரகத்தையே காட்டுங்கிறான் மனுஷன். எமன் காட்டறார் ரம்பா, ஊர்வசி எல்லாம் தெரியறாங்க .. .. எல்லாரும் ஆடிப் பாடி சந்தோஷமா இருக்காங்க .. .. !
இது நல்லா இருக்கு .. .. நான் நரகத்துக்கே போறேன்ங்கறான் மனுஷன். எமன் அனுப்பறார் நரகத்துல மனுஷன் நுழைஞ்சதும் அவனைத் தூக்கி எண்ணெய்க் கொப்பரையில் போடுங்கன்னு சொல்றார் எமன் என்ன எமதர்மா கீழே வேற காமிசியேன்னு மனுஷன் கேக்கறான். எமன் சிரிச்சுகிட்டே சொன்னாரு.
அது நரகத்தோட அட்வர்டைஸ்மென்ட் .. .. !

ஏ. ஜோக்

அவனுக்கு எதிர்ல ரெண்டுபேர் வந்தாங்க. அதுல ஒருத்தன் அவனை மாதிரியே இருந்தான். அவன்கிட்ட போய், இருபது வருஷத்துக்கு முன்னால் உங்கம்மா எங்க வீட்ல வேலை பாத்தாங்களா ?ன்னு கேட்டான். அதுக்கு அவன் சொன்னான். இல்லை எங்கப்பாதான் வேலை பார்த்தார் ! என்றான்.

ரெண்டு தெரு நாய்ங்க ரோட்டுல லவ் பண்ணுச்சுங்க மோந்து பார்த்து, நக்கிக் குடுத்து, ஒண்ணு மேல ஒண்ணு ஏறி இறங்கிக் காதல் ஹைவேல் ஓடிட்டிருந்துச்சுங்க ! அந்த நேரம் பார்த்து அந்த வழியாப் போன ஒரு மனுஷன் கல்லெடுத்து அடிக்கிறான் .. .. அப்ப அந்த நாய்ங்க என்னா பாட்டு பாடும் .. .. ?
மனிதர் உணர்ந்து கொள்ள . இது மனிதக் காதல் அல்ல.

அந்தத் தியேட்டர்ல பிச்சைக்காரங்க கூட்டமா இருக்கே .. .. ?
அப்படி என்ன படம் ஓடுது .. ?
பார்த்தால் பசி தீரும்
நன்றி (இதயம் பேசுகிறது 2-4-2000)

போருக்கு வந்த எதிரி நாட்டு மன்னர், படையோடு திரும்பி ஓடுறாரே .. .. ஏன்?
அவர் அரண்மனைல இன்கம்டாக்ஸ் ரெய்டு நடக்கறதா புரளியைக் கிளப்பிவிட்டுட்டேன் அதான் `

தினமும் காலையில் வெறும் வயிற்றில் நடங்க .. ..
யார் வயிற்றின் மீது டாக்டர் .. .. ?

இந்த ஆள் டி.வி. மெக்கானிக்கா .. .. இல்லே சைக்கிள் மெக்கானிக்கா .. .. ?
ஏன் கேக்கறீங்க .. .. ?
டி.வி-யில பிக்சர்டியூப் சரியில்லேங்கறேன் .. .. பங்க்ச்சர் ஒட்டிடலாம்ங்கறான் !

எங்கப்பா யார் எது சொன்னாலும் நம்பிடுவார் .. .. !
சரி .. .. அதுக்கும் சுவர்ல ஜிமிக்கியா மாட்டி வெச்சிருக்காரே .. .. அதுக்கும் என்ன சம்பந்தம் .. .. ?
சுவருக்கும் காது உண்டுனு யாரோ அவர்கிட்ட சொல்லிட்டாங்க அதான் !

நீங்க நர்ஸ் ஆயிட்டா உங்களுக்குக் கல்யாணமே ஆகாதா .. .. ? ஏன் அப்படிப் பயப்படறீங்க .. ?
வரவங்க எல்லோருமே என்னை சிஸ்டர், சிஸ்டர்னு தானே கூப்பிடுவாங்க அதான் .. .. !

கடைசில எங்க ஊர் இன்ஸ்பெக்டரே என் காதலுக்கு எதிரி ஆகிட்டார் !
அடப்பாவமே ! ரெண்டுபேரையும் பிரிச்சு வெச்சுட்டாரா .. .. ?
ம்ஹும் .. .. சேர்த்து வெச்சுட்டார் .. .. !

என்னப்பா இது .. .. நீ பாட்டுக்கு ஒவ்வொரு தோசையா கொண்டாந்து வெச்சிக்கிட்டு இருக்கே .. .. ?
நீங்கதானே சுட சுட தோசை வேணம்னு கேட்டீங்க சரக்குமாஸ்டர் தோசை சுட்டுக்கிட்டே இருக்காரு .. .. !

இந்த டாக்டர் சித்த மருத்துவரா, அலோபதியா, ஹோமியோபதியா .. .. ?
அதெல்லாமில்லை .. .. நூறு படங்களுக்கு மேல கௌரவ டாக்டர் காரெக்டர் பண்ணியிருக்காரு .. .. !

முழுங்க முடியலைன்னு சொல்லி டாக்டர்கிட்டே போனீங்களே .. .. என்ன ஆச்சு .. .. ?
டாக்டர் அம்பது ரூபாயை முழுங்கிட்டாரு .. .. !

நான் உடம்மை பார்த்தே என்ன வியாதின்னு சொல்லிவிடுவேன் .. ..
அப்ப என்னை எதுக்கு டாக்டர் ஸ்கேன், எக்ஸ்ரேவெல்லாம் எடுக்கச் சொல்றீங்க .. .. ?

அந்த டாக்டர் என்ன டைரக்டர் ஷங்கரோட ரசிகரா .. .. ஏன் .. ..?
பின்ன .. .. எக்ஸ்ரேவைக்கூட பிரமாண்டமா எடுக்கச் சொல்றாரே .. ..

காரட் சாப்பிட்டா கண் நல்லா தெரியும்னு டாக்டர் சொன்னாரு .. .. அதான்
நீங்க சாப்பிடறது காரட் இல்லை .. .. முள்ளங்கி .. ..!

என் வீட்டுக்காரர், பண்ண காரியத்தையே ஞாபகமறதியா ரெண்டாவது தடவை மறுபடியும் பண்றாரு டாக்டர் .. .. ..
இந்த சின்ன விஷயத்துக்குப் போய் ஏன் இப்படி வரத்தப்படறீங்க .. ..?
நீங்க வேற டாக்டர் ! அவரு மறுபடியும் கல்யாணம் பண்ணிக்கப் பொண்ணு பாரத்துட்டு இருக்காரு .. .. !

டாக்டர் . .. ! ஆபரேஷன் பண்ணிக்கிட்டா காது நல்லா கேட்குமா .. ..?
சந்தேகம்தான் .. .. அதனால இப்பவே நான் ஃபீஸை சொல்லிடறேன், கேட்டுக்குங்க .. ..

இருந்தாலும் அந்த ஆளுக்குத் திமிர் ரொம்ப ஜாஸ்தி .. .. நாய் கழுத்துல லைசென்ஸ் வாங்கி மாட்டியிருக்கு பாருங்க .. ..
இல்லாட்டி காரப்பரேஷன்ல பிடிச்சுக்கிட்டுப் போயிடுவாங்களே .. ..
அட நீங்க வேற நாய்க்கு டிரைவிங் லைசென்ஸ் வாங்கி மாட்டிவிட்டிருக்காருங்க .. .. !

ஏண்டி .. .. நேத்து ராத்திரி உன் பாய்ஃப்ரெண்ட்டோட ஜாலியா நடந்து போய்க்கிட்டிருந்தியாமே ! எனக்கு நியூஸ் வந்தது.
நீதானேம்மா சொன்னே சாயந்திரம் விளக்கு வெச்சதும் ஒரு பொண்ணு தனியா வெளியில போகக்கூடாதுனு .. .. !

நெட் ஜோக்

இரண்டு சர்தார்ஜிக்கள் ஒரு காட்டுக்குள் நடந்துபோய்க் கொண்டிருந்தார்கள். தரையில் தென்பட்ட ஒரு தடத்தைப் பாரத்து. ஆகா .. .. இங்கே பார் மானின் தடம் என்றார். ஒரு சர்தார்ஜி அடுத்த சர்தார்ஜி அதைப் பார்த்துவிட்டு ம்ஹூம் இது மானின் தடமே இல்லை. நரியின் தடம்தான் ! என்றார் வாக்குவாதம் ஆரம்பித்தது. மான்தான் இல்லையில்லை நரிதான் என்று கிட்டத்தட்ட அரை மணி நேரத்துக்கு ஒலித்த வாக்குவாதக் குரல்கள் ஒரு குறிப்பிட்ட விநாடியில் சட்டென்று நின்றன. இருவரையும் அடித்துப் போட்டுவிட்டுப் போயிருந்தது அந்த ரயில் தடத்தில் பாய்ந்து வந்திருந்த ஒரு எக்ஸ்பிரஸ் ரயில் .. .. !

பையன் சாவி விழுங்கி இத்தனை நாள் கழிச்சு வர்றீங்களே .. .. ?
டூப்ளிகேட் சாவிதானேன்னு அலட்சியமா இருந்துட்டேன் டாக்டர் .. .. !

வாடகைக்கு சைக்கிள் வேணும் .. ..
அம்பது ரூபா அட்வான்ஸ் கொடுத்துட்டு எடுத்துட்டுப் போங்க .. ..!
என்னை யாருன்னுகூட கேட்கலையே .. ..
பேசிட்டிருக்காம மளமளன்னு சைக்கிளை எடுத்துட்டு நகருங்க கடைக்காரர் வந்துடப் போறார் .. .. .. !

வண்டியை நிறுத்து லைசென்ஸ் இருக்கா .. .. ?
இந்தாங்க சார் .. .. ..
என்னப்பா .. .. .. இந்த போட்டோ உன்னது மாதிரியே இல்லையே .. .. ?
இந்த கார்கூடத்தான் என்னது இல்லே !

போற போக்கைப் பார்த்தா நாடாளுமன்றத்துலே பிரதமர் மந்திரி எந்த மொழியில பேசணங்கிறதைப் பத்திக் கூச்சல், குழப்பம், தர்ணா, வெளிநடப்பு, ஒத்திவைப்பு எல்லாம் நடந்தாலும் ஆச்சரியப்படறதுக்கு இல்லீங்க .. ..!

கல்லூரி ஜோக்

ஒரு காட்டில் சிங்கம் ஒன்று இருந்தது, அதற்கு ரொம்ப வயசாகி அதோட பலம் முழுவதும் போய்விட்டாலும் தான்தான் பலசாலின்னு நினைப்பு. தினமும் ஒவ்வொரு மிருகத்திடம் போய் இந்தக் காட்டுலயே பலசாலி யார் ?னு கேட்கும் இதைவிடப் பலம் வாய்ந்த மற்ற மிருகங்கள்கூட இந்த சிங்கத்தின் மீது பரிதாபப்பட்டு நீங்கதான் தலைவா பலசாலின்னு சொல்லிடும் உடனே சிங்கம் சந்தோசமாயிடும் இப்படித் தான் ஒரு நாள் ஒரு குட்டி யானையிடமும் இதே கேள்வியைக் கேட்டது சிங்கம். குட்டி யானைக்குக் கோபம் வந்துடுச்சு சிங்கத்தைத் தும்பிக்கையால் அலேக்காக தூக்கி ஒரு சுழற்றுச் சுழற்றி எறிஞ்சுது. கீழே விழுந்ததில் சிங்கத்துக்கு சரியான அடி பாவம் ! முக்கி முனகிக்கிட்டே எழுந்து குட்டி யானைகிட்டே வந்த அந்தக் கிழ சிங்கம் தெரியலேன்னா தெரியலைனு சொல்ல வேண்டியது தானே அதுக்கேன் டென்ஷனாகி இப்படி என்னைத் தூக்கிப் போடறே ?னு கேட்டுச்சாம்.

ஒரு அழகான இளம் பெண் யானை. அந்த யானையும் ஒரு கட்டிளம் சுட்டெறும்பும் லவ் பண்ணிச்சாம். கல்யாணத்தக்கப்புறம் வாழ்க்கை எப்படியிருக்குமோனு யானைக்குப் பயம் வந்துவிட்டது. அப்போ எறும்பு சொல்லிச்சாம். அந்தக் கவலையே உனக்கு வேணாம் உன்னை என் உள்ளங்கையில வெச்சுத் தாங்குவேன் .. .!

அது கோயில் திருவிழா சமயம் .. .. பயங்கர கூட்டம் ஒரு பஸ்ல மக்கள் முண்டியடிச்சு ஏறினாங்க. ஜன்னல் படிக்கட்டுனு கிடைச்ச இடத்திலெல்லாம் தொங்கினாங்க மலைப்பாதையில் வளைஞ்சு வளைஞ்சு போச்சு ஆனா பஸ் கீழே விழல எப்படி ?
அது தான் விழா-ப் பேருந்தாச்சே !

ஒரு கம்பெனிக்கு அடிக்கடி ஹெட் ஆபீஸ்லேர்ந்து திட்டித் திட்டித் கடிதம் வரும் உங்களோட விற்பனை வர வர மோசமாகுது .. .. என்ன காரணம் ?னு கேட்டு பதினஞ்சு நாளுக்கு ஒரு லெட்டர் எங்களை மீறி இது நடந்திட்டது. ஏன் இய்படியாச்சுனு எங்களுக்கே தெரியல இனிமே இந்தக் தப்பு நடக்காது-னு பதில் கடிதம் போடுவாங்க இந்த பிராஞ்ச்காரங்க ! இந்த விஷயம் ஆறு மாசம் தொடர்ந்தது.
ஒரு முறை ஹெட் ஆபீஸ்லேர்ந்து, குட் .. .. இந்த முறை விற்பனை கொஞ்சம் உயர்ந்திருக்குனு பாரராட்டிக் கடிதம் வந்தது. கம்பெனிக்காரங்க வழக்கம்போல எங்களை மீறி எங்களுக்குத் தெரியாம இது நடந்திட்டது. இனிமே இந்தத் தப்பு நடக்காம பார்த்துக்கறோம்னு பதில் போட்டுட்டாங்க.

டாக்டர்கிட்டே போய் ஒரு சர்தார்ஜி அழுதாராம், என் உடம்புல எங்கே தொட்டாலும் வலிக்குது டாக்டர் .. .. ஏதாவது செய்யுங்கன்னு டாக்டரும் சர்தார்ஜியின் உடம்பு முழுக்க செக் பண்ணிப் பார்த்துட்டு நல்லாதானே இருக்கீங்க-ன்னார். ஐயோ நெஜமா எங்கே தொட்டாலும் வலிக்குது டாக்டர் என்று சரிதார்ஜி மறுபடியும் அலற

உடம்பு முழுக்க எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தாராம் டாக்டர் ஒரு கோளாறும் இல்லை அப்புறம் திடீர்னு ஏதோ தோன்றி சர்தார்ஜியின் கையைப் பார்த்தார்.
அடடா .. .. உங்க ஆள்காட்டி விரல்லதான் பலமா அடிபட்டு புண்ணாகியிருக்கு.

அகிலும் நிகிலும் நண்பர்கள். ஒரு நாள் அகில் ரொம்பக் கவலையா இருந்தான்.
என்ன விஷயம் .. .. ?னு கேட்டான் நிகில் .
ஒரு பந்தயத்துல ஆயிரம் ரூபாய் தோத்துட்டேன்னான் அகில்
என்ன பந்தயம் .. ..?
இந்தியா சௌத் ஆப்பிரிக்கா கிரிக்கெட் மேட்ச்சில் இந்தியா ஜெயிக்கும்னு ஐந்நூறு ரூபா பந்தயம் கட்டினேன், தோத்துட்டேன்.
சரி அது ஐந்நூறு ரூபாதானே மீதி ஐந்நூறு ரூபா எங்க போச்சு.. ?
நான் ஹைலைட்ஸுக்கும் பந்தயம் கட்டினேன்.
நன்றி (ஆனந்த விகடன் 2-4-2000)

பாலம் கட்டுனதுல ஊழல் நடந்திருக்கும்னு எதை வச்சு சொல்றே .. .. ?
மழை பெய்ஞ்சா மேம்பாலத்துல முழங்கால் அளவு தண்ணி நிக்குதே .. !

பாலிடெக்னிக் பிரின்ஸிபாலை போலீஸ்பிடிச்சிக்கிட்டு போறாங்களே ஏன் ?
டிப்ளமா இன் திருட்டு வி.சி.டி. டெக்னலஜினு புதுசா கோர்ஸ் ஆரம்பிச்சாராம்

போலீஸ்காரர்களின் உரையாடல்
என்னப்பா தொப்பை குறைஞ்சி போச்சு .. .. ?
ரெண்டு மாசம் லீவுல போயிருந்தேம்பா .. .. .. !

என்னங்க ! இந்த கவர்ன்மெண்ட் ஆஸ்பிட்டலில் மட்டும் ரெண்டு ஆபரேஷன் தியேட்டர் இருக்கு .. .. ?
ஒன்று சொர்க்கத்துக்கு மற்றொன்று நரகத்திற்கு .. .. அதான்.

வாட்டர் மேக்கப்புல இருக்கிற ஷப்னா ஆஷ்மியை ஹீரோயினாப் போட்டு அலைபாயுதே படத்தை மணிரத்னம் எடுத்தால் என்ன டைட்டில் வைப்பாரு ..
தலை காயுதே .. .. ..

வினாத்தாள்களை திருட முயன்ற குற்றத்திற்காக தலைவரின் மகனை கைது செஞ்சாங்களே அப்புறம் என்னாச்சு .. ..?
கடினமான கல்விமுறைதான் காரணம்னு விடுதலை பண்ணியாச்சு

கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்னு டாக்டர் குதிக்கறாரே .. .. சினிமா பைத்தியமா .. .. ?
அதெல்லாம் இல்லை, ரொம்பநாள் கழிச்சு வந்த இரண்டாவது பேஷண்டை பாரத்ததும் கத்தறாரு .. .. !

காலேஜ் கடிகள்
மீன் சாப்பிடும் போது முள் குத்தாமல் இருக்க என்ன செய்யணும் .. ?
செருப்புப் போட்டுக்கணும் .. .. !

ஒரு நாய் கோபுரத்திற்குக் கீழே நின்னுக்கிட்டு மேலே பார்க்குது, பிறகு கீழே பார்க்குது, ஏன் .. .. . ?
ஏன்னா, ஒரே நேரத்தில் ரெண்டையும் பார்க்க முடியாது.

ஒரு லெட்டரில் சந்தனம் தடவி வருது ஏன் .. .. ?
அது மொட்டைக் கடிதம்

முட்டை அதிகம் உள்ள இடம் எது .. .?
எக் மோர் .. .. !

போஸ்ட் ஆபீஸில் என்ன விலங்கு இருக்கும் ?
ஒட்ட-கம் !

வாஜ்பாயை காலை 12 மணிக்கு முன்னாடி பார்க்கக் கூடாது ஏன் .. ?

அவர் ீ.ஆ.

பௌலர்கள் பேசும்போது எப்படிப் பேசுவார்கள் .. ?
டிஎநச-ஆ

ஆப்பிள், மாங்கோ ரெண்டுல எது ஸ்வீட் .. ..?
ரெண்டும் ஸ்வீட் இல்ல ஃப்ருட் ..!

பஸ் போகாத ரூட் எது .. . ?
பீட்-ரூட்

அம்மாவைக் கூப்பிடும் போது மம்-ன்னு கூப்பிடுவோம் பெரியம்மா, சின்னம்மாவை எப்படிக் கூப்பிடுவோம் .. .. ?
மேக்ஸிமம், மினிமம்.

அரசியலில் அதிகம் மதிறடநனபந உள்ளவர் யார் .. ?
மு.மு. மூப்பனார்

கிளிண்டனுக்குப் பிடித்த காய் எது .. .. ?
லேடீஸ் ஃபிங்கர்.

ஜெயலலிதாவுக்கு பிடித்த கவிஞர் யார் .. .. ?
வைரமுத்து ஏன்னா அவர்கிட்டதான் வைரமும், முத்துவும் இருக்கே.

டைப்ரைட்டர் பெண்ணா ? ஆணா ?
பெண்ணுங்க ! ஏன்னா அதுல ரிப்பன் இருக்கே.
நன்றி குமுதம் 6-2-2000

அவரு ஒவ்வொருத்தர் கிட்டேயும் ஏதோ சொல்லிக் கிட்டிருக்காரே என்னது ..?
அவரு ரெண்டு நாளா மவுன விரதம் இருக்கறதா எல்லார்கிட்டேயும் சொல்லிக் கிட்டிருக்காரு .. .. .. !

எங்க வீட்டுக்காரர்கிட்ட கீரையில சுண்ணாம்புச் சத்து நிறைய இருக்குன்னு ஒரு டாக்டர் சொன்னாரு !.
இப்ப அதுக்கென்ன .. .. ?
சுண்ணாம்பு அடிக்கறேன்னு வெறும் கீரைக் கட்டை அவரு சுவத்துல தேய்ச்சிக்கிட்டிருக்காரு !

டாக்டர் எனக்கு தினசரி ராத்திரி படுத்தா தூக்கமே வராம ரொம்ப கஷ்டப்படுறேன். ஏதாவது மருந்து கொடுங்க .. ..
நேத்து வரும் போது தினசரி பத்து மணிநேரம் தூங்கறேன்னு சொன்னீங்களே
அது பகல்லே டாக்டர் .. .. !

நான் ஆபீஸ்லேர்ந்து வீட்டுக்கு வரும்போது பஸ்ஸில் அசந்து தூங்கிடுவேன் நீங்க எப்படி .. ?
நான் அந்த வேலைய ஆபீஸ்லேயே முடிச்சிடுவேன் !

உங்க மானேஜர் ஆபீஸ்ல எதுக்கு தர்மாமீட்டரை வெச்சுக்கிட்டு இருக்காரு .. ?
யாராவது ஆபீஸ்ல ஜுரம்னு சொல்லி லீவு கேட்டா உடனே வாய்ல வெச்சு டெஸ்ட் பண்ணுவாரு

டாக்டர் ! எச்சில்கூட முழுங்க முடியலை.
நான் ஐம்பது ருபாய் முழுங்குவேன் பரவாயில்லையா ?

எனக்கு மண்டைல ஸ்கேன் எடுத்து பார்த்துட்டு டாக்டர் ஒண்ணுமில்லைன்னு சொல்லிட்டாரு .. ..
இதுக்கு போய் எதுக்கு ஸ்கேன் எடுத்து பார்த்தீங்க .. .. ?

போலீஸ்னா தொந்தியும் தொப்பையுமால்ல இருப்பாங்க .. .. நீங்க இப்படி எலும்புக்கூடு மாதிரி இருக்கீங்களே .. ..?
ஹி .. .. ஹி .. .. நான் போலீஸ் வேலையில சேர்ந்து 2 மாசம்தான் ஆகுது. இன்னம் 2-3 மாசம் போனபிறகுதான் தொப்பை விழும் !

பெண்ணுக்கு .. .. மூக்கு ரொம்ப பெரிசா இருக்குன்னு சொன்னாங்களே, எப்படி சம்மதம் சொன்னாங்க ?
வைரமூக்குத்தி பெரிசா போடறோம்னு சொன்னோம் உடனே கல்யாணத்துக்கு சம்மதிச்சிட்டாங்க .. .. !

அந்த ஊழல்ல அரசியல்வாதி யாருக்கும் பங்கு இருக்க வாய்ப் பில்லைனு எப்படி உறுதியா சொல்றீங்க ?
ஊழல் தொகை ரொம்ப குறைச்சலா இருக்கே !

நீதிபதி கத்தியலால ஓங்கித் தட்டினாரே, ஏன் ?
வாதாட வந்த வக்கீல் தூங்கிட்டிருந்தா வேற எப்படி எழுப்புவாராம் !.

சார் .. .. ஒரு 5 ரூபாய் இருந்தால் கொடுங்களேன்.
சுத்தமா 5 ரூபா நோட்டே இல்லை சார்.
அழுக்கா இருந்தாலும் பரவாயில்லே கொடுங்க.

நீங்க ஒரு டெலிபோன் வச்சுக்கிட்டா என்ன சார் .. .. ?
தபால் மூலம் வர்ற மிரட்டல் பத்ததுன்னு ஃபோன் மிரட்டலும் சேர்ந்துக்கணுமா என்ன ?

அந்தக் கடை வாசல்ல ஏன் சின்ன சைஸ்ல சவப்பெட்டி செஞ்சு தொங்க விட்டிருக்காங்க .. !
அந்தக் கடைக்காரரு எல்லாப் பொருட்களையும் அடக்க விலைக்கே விற்பனை செய்றாராம் .. .. அதுக்குத்தான் சிம்பாலிக்கா சவப்பெட்டிய தொங்க விட்டிருக்காங்க .. !

உடையவே உடையாதுன்னு சொல்லி ஒரு டம்பளர் கொடுத்தீங்களே .. .. அது நேத்து கீழே விழுந்து உடைஞ்சு போச்சுங்க !
நான் அப்படிச் சொன்னது டம்பளர் கீழே விழாத வரைக்கும்தான்
நன்றி குங்குமம்.

நீங்க சினிமாவை விட்டுட்டு ஏன் விவசாயத் தொழிலுக்கு வந்தீங்க ?
இதுல எப்பவும் ஃபீல்டுல இருக்கலாமே... !

ஹோட்டல் முதலாளி வீட்டுக் கல்யாணத்துக்குப் போனது தப்பாப் போச்சி !
ஏன் ?
மொய் வைக்கலேனு மாவட்டச் சொல்லிட்டாங்க !

திகில் தொடர் பரிசுப் போட்டியில் கலந்துகிட்டது தப்பா போச்சு !
என்னங்க ஆச்சு ?
முதல் பரிசா எலும்புக்கூட்டை அனுப்பி வெச்சுட்டாங்க !

வரதட்சணை கேட்டா போலீஸ் புகார் சொல்லி கையில விலங்கை மாட்டிடுவோம் !
விலங்கைத் தங்கத்தால் மாட்டுங்க... போதும் !

நாங்கதான் கல்யாணத்துக்கு முன்னாடியே சொன்னோமே... பொண்ணுக்குச் சரியா சமையல் பண்ணத் தெரியாதுன்னு ?
அதுக்காக முழு பூசணிக்காயை அப்படியே சாம்பார்ல போடறது நல்லாயில்லை..!

ஏன்யா வித்தவுட்லே போறே..... இதிலே ஏ.சி. கேக்குதா...?
ஏதிலேயும் நான் கொஞ்சம் கவுரவமா நடந்துக்குவேன் ஸார் !

என்னப்பா... செக்யூரிட்டியோட பிச்சை எடுக்க வந்திருக்கே...?
வரவர வழிப்பறி அதிகமாயிடுச்சு தாயே.... பிச்சையெடுத்த பணத்தை நிம்மதியா வீட்டுக்குக் கொண்டு போக முடியலை...!

நேற்று நடந்து போகும் போது ஒரு பெண் என்னைத் திரும்பி பார்த்தாள்.
அது ஒரு எதிர்பாராத திருப்பம்னு சொல்லு !

ஐஸ்வர்யாராய் மாதிரியே பாடுறீங்க....

அவங்களுக்குப் பாட வராதே !
உங்களுக்கும்தான் !

உங்களுக்கு குழந்தை பிறந்து இரண்டு வருடம் ஆகிவிட்டதே குழந்தை பேசுமா ?
இப்போது கொஞ்சம் கொஞ்சமாக மூப்பனார் மாதிரி பேச ஆரம்பிக்குது !

தலைவர் வாழ்ந்த வீட்டை நினைவுச் சின்னம் ஆக்கறேன்னு சொல்லிட்டு ஏன் கை விட்டுட்டாங்க !
அவரு ஏகப்பட்ட வீட்டுல வாழ்ந்ததால அரசாங்கத்தால முடியாதாம் !

டிக்கெட் தரும்போதே ஆளுக்கொரு சீப்பு தராங்களே... ஏன் ?
திகில் படமாம்... மயிர்க்கூச்செறியுமாம் !

நான் ஆபீஸிலிருந்து வீட்டுக்குப் போக லேட்டாயிடுச்சின்னா என் மனைவியே சமையல் செய்துடுவா....
பயங்கரமான தண்டனை தான் !

என் மனைவி எனக்கு நாய்க் குணம்னு அடிக்கடி சொல்லுவா !
உன் மனைவி தேவலையே.... என் மனைவி என்னை நாயேன்னுதான் கூப்பிடுவா !

நம்ம தலைவருக்கு ரொம்பத்தான் குசும்பு !
ஏன்.... என்னாச்சு ?
கோர்ட்டுக்கும் வீட்டுக்கும் அலைய முடியலையாம்.... கோர்ட்லயே ஒரு ரூம் வாடகைக்குக் கேக்கிறார் !

எதை வெச்சிப் படம் எடுத்தா நல்லா ஓடும் ?
முயலை வெச்சிப் படம் எடுத்தா நல்லா துள்ளித் துள்ளி ஓடும் !

வக்கீல் ஏன் கோரட்டுக்கு நேரா வராம சுவரேறிக் குதிச்சு குறுக்கு வழில வர்றாரு ?
குறுக்கு விசாரணை செய்யப் போறாராம் !

வாட்டர் படப்பிடிப்பை உங்க மாநிலத்திலே எடுக்க அனுமதிப்பீங்களா ?
இங்கே தண்ணீர் கஷ்டம்... முடியாது !

உங்க ஆஸ்பத்திரியில் வந்து நான் கச்சேரி பண்ணணுமா... எதுக்கு ?
நிறைய பேஷண்ட்ஸ் தூக்கம் வராமத் தவிக்கறாங்க !
-நன்றி **இதயம்** 9-4-2000

கல்யாணத்தை ஆயிரங்காலத்துப் பயிர்னுதானே சொல்லுவாங்க .. .. நீங்க என்ன இரண்டாயிரங் காலத்துப் பயிர்னு சொல்றீங்க ?
ஹி .. ஹி .. நான் சொன்னது இரண்டாங் கல்யாணத்தை !

செந்திலுக்கு, கவுண்டமணி லெட்டர் எழுதினா எப்படி ஆரம்பிப்பார் தெரியுமா
தெரியாதே !
மிதிப்பிற்குரிய-னுதான்.

எதிர்க்கட்சிக்கு பாடம் புகட்டுவேன்னு சொன்ன தலைவர், பக்கம் பக்கமா எதோ எழுதி போஸ்ட் பண்றாரே எதுக்கு ?
கரஸ்பாண்டன்ஸ்லே பாடம் நடத்துறாராம் !

என் பையன் பண்ண காரியத்துனால என்னால வெளியே தலை காட்ட முடியலை .. ..
அப்படி என்ன பண்ணிட்டான் .. ..?
என்னோட விக்கை எடுத்து அவன் போட்டு கிட்டுப் போய்ட்டான்.

பள்ளிக்கூட திறப்பு விழாவுக்கு நம்ம தலைவரைக் கூப்பிட்டது தப்பா போச்சு
எதனால .. ..?

வகுப்பு அறைகளைப் பார்த்துட்டு இதென்ன ரூம், ரூமா கட்டியிருக்கு லாட்ஜா? -னு கேட்கிறாரு

அந்த வீட்ல ஒப்பாரி சத்தம் கேட்குதே .. யார் செத்துட்டாங்க ?
அட நீங்க வேற .. .. குடும்பத்தோட டி.வி. சீரியலை பார்க்கிறாங்க ..

ஏண்டீ என் கல்யாண பட்டு வேட்டி பத்திரமா இருக்கா .. .
பாத்திரமா இருக்கு .. ..

வேலை நேரத்துல ஆபீசுல இருக்கிற கதவையெல்லாம் சாத்திடுறாங்களே ஏன்?
அங்க வேலை செய்யறவங்கள்ல பாதிப் பேருக்கு தூக்கத்துல நடக்கற வியாதி இருக்காம்.

டாக்டர் கோபமா இருக்காரே, ஏன் ?
ஆபரேஷன் தியேட்டர்ல யாரோ உடல் மண்ணுக்கு, உயிர் டாக்டருக்கு-னு எழுதி வெச்சிருக்காங்களாம்

நம்ம தலைவரை நெடுஞ்சாலைத் துறையிலிருந்து விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சராக்கினது தப்பாப்போச்சு .. .. !
ஏன்யா .. .. ?
ஏர்போர்ட் ரன்வேயில ஏகப்பட்ட ஸ்பீட் பிரேக்கர் போட்டு வெச்சிட்டார் !

ஒவ்வொரு வாத்தியத்தையும் தனித்தனியா போட்டோ எடுக்கிறியே .. .ஏன் ?
இசை ஆல்பம் போடப் போறேன் .. ..

மாமியார் முகத்துல அயர்ன் பாக்ஸை வச்சு தேச்சியா .. .. ஏன் ?
முகத்துல சுருக்கம் விழுதுன்னு கவலைப்பட்டாங்க !

தலைவர் மேடையில பேசுறது அர்ஜுனனுக்காக கிருஷ்ணர் கீதை சொல்றது மாதிரி.
அவ்வளவு நல்லா இருக்குமா ?
ம்ஹும் .. .. கேட்க நான் மட்டும்தான் இருப்பேன் ..

நன்றி **குமுதம்** 13-4-2000

உங்க வீட்டுக்காரர் வருமான வரி ஆபீஸ்ல வேலை செய்யறாரா ?
எப்படிக் கண்டுபிடிச்சீங்க .. . ?
குழந்தைகளுக்கு ஈஸ்வரி, கோதாவரி, ஜெகதீஸ்வரி, புவனேஸ்வரின்னு பேர் வெச்சு இருக்காரே !

என் மனைவிக்குக் கொஞ்சம்கூடத் தற்பெருமையே கிடையாது .. ..
நிஜமாவா .. .. ?
ஆமாம் .. .. இவ மாமியாரை அடிப்பா ஆனா, வெளியே எல்லார்கிட்டேயும் தான் அடி வாங்கினதா சொல்லிக்குவா .. ..

சம்பளம் வாங்கின உடனே கொடுத்துடறேன்.. .. .. ஒரு நூறு ரூபாய் இருந்தா கொடுங்களேன் .. ..
சம்பளம் எப்ப வாங்குவீங்க .. .. ?
வேலை கிடைச்ச உடனே .. !

எங்க தாத்தா சாகும்போது ஏகப்பட்ட சொத்தை வெச்சிருந்தாரு .. .. !
அப்ப நிறைய நிலம், வீடெல்லாம் இருக்குன்னு சொல்லுங்க .. ..
அட, நீங்க வேற ! அவரு பல்வலியாலே செத்துப்போனாரு .. ..

ஃபைனான்ஸ் கம்பெனி முதலாளியோட பையனைக் காதலிச்சது தப்பாய் போச்சு
ஏன் .. .. ?
எப்பப் பார்த்தாலும், ஓடிடலாமானு கேட்கிறாரு .. !

அடடா .. .. எழுந்திருங்க ! புதுசா வந்திருக்கிற மானேஜர் ரொம்பக் கண்டிப்பான பேர்வழின்னு தெரியாதா உங்களுக்கு .. ..?

என்ன சொல்றீங்க .. .. ?
ஆமாம் சாயங்காலம் அஞ்சு மணியானா, அவங்களேதான் எழுந்திருக்கணும் அதுக்காக ஆள்வெச்சு எழுப்ப முடியாதுனு சர்க்குலர் அனுப்பியிருக்காரே .. .. பார்க்கலையா நீங்க .. .. ?

நெட் ஜோக்

இரண்டு முனிவர்கள் வெகுவேகமாக ஒரு ஸ்கூட்டரில் பறக்க, பாய்ந்துபோய்த் தடுத்து நிறுத்தினார் ஒரு கான்ஸ்டபிள்.
இவ்வளவு வேகமா போறீங்களே .. . ஆக்ஸிடெண்ட் ஆயிடாதா .. ..? என்று கேட்டார், அக்கறையும் கனிவும் கலந்த குரலில்.
கவலைப்படாதே மகனே ! எங்களோடு கடவுளும் இருக்கிறார் .. ஒன்றும் ஆகாது ! என்று அந்த முனிவர்களிடமிருந்து பதில் வரவும் இவரிடம் கனிவு மறைந்து, கடமை உணர்ச்சி விழித்துக் கொண்டது.
அப்படின்னா, நான் உங்கமேல கேஸ் போடவேண்டி இருக்கும். ஒரு ஸ்கூட்டர்ஸ் மூணு பேர் போக அனுமதியில்லை ! என்றார் கான்ஸ்டபிள் கறாராக.

சின்ன வீட்டைக் கொலை பண்ண முயற்சி செய்தாயாமே .. ஏன் ?
மோகத்தைக் கொன்றுவிடுனு ஒரு புக்ல படிச்சேன் !

நம்ம ஸ்கூல்ல புதுசா ப்ளம்பருங்களுக்கெல்லாம் வேலை கொடுக்கறாங்களாமே எதுக்காம்.. ..?
அடிக்கடி கொஸ்டின் பேப்பரெல்லாம் லீக் ஆவுதாம் !

தலைவருக்குக் கிட்டபார்வையா, எட்டபார்வையா .. .. ?
ஜாக்கிரதையா இருக்கணும் .. .. ரொம்பக் கெட்ட பார்வை !

என்னிடம் ஒரு மசாலா கதை இருக்கு கொஞ்சம் கேட்கறீங்களா .. ?
சொல்லுங்க
கதாநாயகன் கொத்துமல்லி, சீரகம் விற்பவருடைய பையன். கடுகு, உளுத்தம்பருப்பு விற்பவருடைய மகளைக் காதலிக்கிறான். பெருங்காய வியாபாரியோட மகன் வில்லனா வர்றான் . .. .

இது ஒரு கவர்ச்சி நடிகை நடத்துற சீட்டு கம்பெனி .. .
அப்ப இழுத்து மூடமாட்டாங்க !

என்ன .. .. அவங்க வீட்டுலே வாழை மரமும் மாவிலைத் தோரணமும் அமர்க்களப்படுது .. ..?
ஒரு மாசமா கம்ப்ளெயிண்ட் குடுத்து, நேத்து டெலிபோனை ரிப்பேர் பண்ணிட்டாங்களாம் அதைக் கொண்டாடறாங்க.

என்ன சார் இது அந்தப் பிச்சைக்காரனுக்கு ஆயிரம் ரூபா பிச்சை போடுறீங்க?
அவர் நம்ம ஸ்டேஷன் போலீஸ்காரருங்க .. இப்படி மாறுவேஷத்துல வந்துதான் மாமூல் வாங்கிட்டுப் போவாரு

என்னங்க இது .. . எப்போதும் புது யூனிஃபார்ம் புது தொப்பிதானே தருவாங்க இப்ப ஏன் கிழிஞ்சுபோன பழைய சட்டை, வேஷ்டி, திருவோடெல்லாம் தந்திருக்காங்க ?
பிச்சைக்கார வேஷத்துல நான் ரோந்து போகணுமாம்.

நம்ம இன்ஸ்பெக்டர் ரோந்து போன இடத்துல யாரோ ஒரு பொண்ணை கையைப் பிடிச்சு இழுத்து மாட்டிக்கிட்டாராம்.
சாமியார் வேஷத்துல அவர் கிளம்பினப்பவே இப்படி ஏதாச்சும் நடக்கும்னு நினைச்சேன்.

கேடி வேஷம் போட்டுக்கிட்டு பக்கிரியைப் புடிக்கப்போனியே .. என்னாச்சு ..?
அவன் போலீஸ் வேஷம் போட்டுக்கிட்டு தப்பிச்சுப் போயிட்டான் சார் .. ..

பத்திரிகையிலே என்னங்க உடனே தேவைன்னு பெரிசா விளம்பரம் குடுத்திருக்காங்க .. ..
நாலு முன்னாள் பிரதமர்கள் புதுக் கட்சி தொடங்கப்போறாங்களாம். தலைவர், துணைத் தலைவர், செயலர், பொருளாளர் இவங்களைத் தேர்ந்தெடுத்தாச்சாம் .. தொண்டர்களும் ஆதரவாளர்களும் உடனே தேவையாம் !
- நன்றி **ஆனந்த விகடன்** 9-4-2000

உங்க வீட்டு முகவரியைக் கண்டுபிடிக்கிறதுக்குள்ளே நாயா அலைஞ்சுட்டேன் !

சரி உள்ளே வாங்க, என்ன சாப்பிடறீங்க, பொறையா, பிஸ்கட்டா ?

நாடக நடிகர் வீட்டுக்குத் திருட போயிட்டு வெறுமனே திரும்பி வந்துட்டியாமே?
ஆமாம், ஒத்திகை பார்க்கத்தான் போனேன் !

தண்ணி அடிச்சாதான் என்னால கதையே எழுத முடியும் !
அட ! நீங்க வேற .. .. காப்பியடிச்சாதான் என்னால கதை எழுத முடியும் !

அவர்கிட்டே போறவங்க எல்லாம், வாயடைச்சுப் போய் திரும்பி வருவாங்க !
அப்படியா ? யாருங்க அவரு ?
பல் டாக்டர் பரமசிவம்தான் !

இந்த டாக்டர் ஒரு பிளாஸ்டிக் சர்ஜன்னு சொன்னதை நிறையப் பேர் தப்பா புரிஞ்சிட்டாங்க.
எப்படிச் சொல்றே ?
உடைஞ்ச பிளாஸ்டிக் குடம், வாளியை சரி பண்ணித் தருவாரான்னு வந்து கேட்கறாங்களே

என்ன சார் இது வெங்காயத்துக்கு பச்சை கலர் பூசப் பார்க்கறீங்க ?
டாக்டர் வெங்காயத்தை பச்சையா சாப்பிடச் சொன்னாரே !

அப்பா - நம்ம பையன் இப்படி தண்டச் சோறா வீட்டில் இருப்பான்னு முதல்லயே தெரியாம போச்சு
அம்மா - தெரிஞ்சிருந்தா ?
அப்பா - நானாவது வேலைக்குப்போய் காசு சேர்த்திருப்பேன்

பிள்ளை வீட்டுக்காருங்க ஸ்கூட்டர் வாங்கிக் கொடுங்கன்னு கேட்டாங்க!
கல்யாணம்ங்கிறது ஆயிரம் காலத்துப் பயிர் இப்படி கேக்கலாமான்னு சொல்ல வேண்டியது தானே !
அப்படியேதான் சொன்னோம் உடனே அவுங்க - அப்ப சரி ! ஒரு டிராக்டர் வாங்கிக் கொடுங்க அப்படீன்னாங்க !

போலீஸ் ஏன் அவரை கைது செய்துகிட்டுப் போறாங்க ?
மூலிகையில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் ஆராய்ச்சி செய்தாராம் அதான் !

கணக்கு வாத்தியாரைக் கட்டிக்கிட்டது தப்பாப் போச்சு !
ஏன் ?
சமையல் அறைல கூட கால்குலேட்டரை வச்சுக் கிட்டு எவ்வளவு சாம்பாருக்கு எத்தனை கரண்டி உப்பு போடணும்னு கணக்கு போடறார் !

என்னப்பா நீ இப்படி பாத்திரம் எதுவுமே இல்லாம வந்து பிச்சை கேட்கறியே?
ஏன் சாமீ ?
பாத்திரமறிந்து தானே பிச்சை போடச் சொல்லியிருக்காங்க !

பேப்பர் போடறவனை தினம் பால் பாக்கெட் வாங்கச் சொன்னது தப்பா போச்சு
ஏன் ?
பால் பாக்கெட்டை ஜன்னல் வழியா விசிறி அடிச்சிட்டுப் போறான் !

என்னது பேமிலி டாக்டரால பிரச்சனையா ?
ஆமாங்க சொத்துல பங்கு கேட்கறார் !

வயசான தகப்பனைப் பிச்சை எடுக்க விட்டுட்டு மகன் என்ன செய்றான் ?
அவனும் பிச்சைதான் எடுக்கறான் !

அந்த நர்ஸிங்ஹோம்ல பத்தாயிரம் ரூபாய் கட்டினா போதும் ஆயுள் பூராவும் வைத்தியம் பண்ணிக்கலாம் .. ..
நல்ல திட்டமா இருக்குதே
ஆனா இந்தத் திட்டம் தொண்ணூறு வயசுக்கு மேல இருக்கிறவங்களுக்கு மட்டும் தானாம்.

கிளிண்டன் வரவாலே எங்க வீட்ல குழப்பம் !

என்ன ?
கிளிண்டன் அவரோட மாமியாரை வெளிநாட்டுக்கெல்லாம் கூட்டிப் போறாராம் ஆனா நான் என் மாமியாரை வெளியிடங்களுக்குக் கூட்டிப் போறதில்லையாம்

கொஞ்ச நேரம் பேசினாவே ரொம்ப ஐவ்வு போடறாரே .. யார் அவரு ?
அவருதான் ஐவ்வரிசி ஆலை அதிபர் ஜகந்நாதன் !

உங்க படத்துக்கு கேதுனு பேர் வெச்சிருக்கீங்களே !
படத்தின் ஹீரோ ஒரு ஜோசியன் ! .. கிளி ஜோசியனா ஆரம்பிச்சி, அரசியலில் பெரிய ஆளா வர்றதுதாங்க கதை !

டாக்டர் எனக்கு பயங்கரமான கனவா வருது
இந்த மாத்திரைய சாப்பிடுங்க
இந்த மாத்திரைய சாப்பிட்டா கனவு வராதுங்களா டாக்டர் ?
இல்ல தூக்கமே வராது.

இது ஒரு டாக்டர் வீடுனு எப்படிச் சொல்றே ?
வீட்டு வாசல்ல ஒரு சிகப்பு பல்பும், ஒரு பச்சை பல்பும் எரியுது பாரேன்.

ஏண்டி உனக்கு பார்வை சரியில்லைன்னு டாக்டர் கிட்ட போனியே என்னாச்சு
அந்த டாக்டர் பார்வையும் சரியில்ல அதான் வந்துட்டேன்.

எப்பங்க டாக்டர் என்னை டிஸ்சார்ஜ் செய்வீங்க ?
அவசரப்படாதீங்க இந்த பெட்டிற்கு வேற ஆள் வந்த உடனே டிஸ்சார்ஜ் செய்துடலாம் !

டாக்டர் விதிய நம்புறீங்களா ?
நிச்சயமா ! விதி முடிஞ்சவங்கதானே என்கிட்டே வர்றாங்க

நீங்க பிழைக்கமாட்டீங்க ! உங்க கடைசி ஆசை என்ன ?
நீங்க எனக்கு ஆபரேஷன் செஞ்ச மாதிரி நான் உங்களுக்கு ஒரு ஆபரேஷன் செஞ்சி பார்க்கணும்.
நன்றி **குங்குமம்** 14-4-2000

அவன் வித்தியாசமான பக்தன்னு எப்படிச் சொல்றே ?
திருப்பதிக்கு மொட்டைக் கடுதாசி போடுறேன்னு வேண்டியிருக்கான் !

நம்ம ஆவி உலகத்தில் என்ன பரபரப்பு ?
ரெண்டாயிரத்தில் முதல்லே சாகறவங்களோட ஆவிக்குப் பரிசு தராங்களாம் !

உங்க வீட்ல தொங்கிக்கிட்டு இருக்கற ஸ்டார் ஏன் கருப்பா இருக்கு ?
அது சூப்பர் ஸ்டார் .. .. !

நான் தயாரிச்ச படத்தைத் திருட்டு வீடியோவில் பார்க்கிறவங்களைப் பிடிச்சிக் கொடுத்தா 1000 ரூபாய் சன்மானம் கொடுக்கப்படும்னு அறிவிச்சது தப்பாப் போச்சி !
ஏன் ?
பத்தாயிரம் பேரைப் பிடிச்சிக் கொடுத்து கோடிக்கணக்கில் நஷ்டப் படுத்திட்டாங்க !

என் கணவருக்கு மறுபிறவியில் நம்பிக்கை அதிகம் உண்டு !
எப்படி ?
அவர் தன் பெயருக்கே உயில் எழுதி வைச்சிருக்காரு !

உங்க கூட்டணியில இப்ப புகைச்சல்னு பேச்சு அடிபடுதே .. ?
ஆலோசனைக் கூட்டத்துல எங்க கூட்டணியைச் சேர்ந்த ஒருத்தர் சிகரெட் பிடிச்சார் அதான் !

உங்க கரும்புத் தோட்டத்தையும், நெல் வயலையும் வித்துட்டு அந்தப் பணத்தை வச்சுப் படம் எடுக்கப் போறேன்னு சொல்றீங்களே .. .. படத்துக்கு என்ன பேரு வைக்கப் போறீங்க ?

கரு-நெல்-வேலி .. !

டைரக்டர் சார் .. உங்க அசிஸ்டெண்ட்டை ஏன் வேலையை விட்டுத் தூக்கிட்டீங்க ?
நான் புதுசா எடுக்கப்போற டி.வி. சீரியலுக்கு செட் போட ஆள் வேணும்னேன் .. இந்த ஆளு சீரியல் செட் போடற எலக்ட்ரீஷியனைக் கூட்டிக் கிட்டு வந்தா என்ன செய்யறதாம்?

நீங்க சமயத்துல செஞ்ச உதவிக்கு என் தோலை செருப்பாத் தச்சுப் போடணும் சார் !
வெரிகுட் ! என் சைஸ் எட்டாம் நம்பர் மறந்துபோய் பெருசா தச்சுடாதே !.

டாக்டர் நீங்கதான் இவருக்கு அட்வைஸ் சொல்லணும் !
என்ன பிரச்னை ?
ராத்திர் தூக்கத்தில் நடக்கறதுக்கு பயமா இருக்காம் ! என்னையும் துணைக்கு வரச் சொல்றாரு !

நேத்து எவனோ என் பையில பிளேடு போட்டுட்டான்.
ஐயையோ .. .. அப்புறம் ?
அதை எடுத்து வெளியில போட்டுட்டேன் !

என்னுடைய கல்யாண நாள் வரும் போதெல்லாம் உங்க ஞாபகம் தான் சார் வரும் .. ..
எதனால ?
நீங்க மொய் எழுதாம போனீங்கல . .. அதனால !

மாப்பிள்ளை பையன் நாலும் தெரிஞ்சவர்னு தரகர் சொன்னதை நம்பி ஏமாந்துட்டோம்
ஏன் .. .. என்னாச்சு ?
குடி, சீட்டு, லாட்டரி, பொண்ணு-ன்னு நாலும் தெரியுமாம்.

ஏன்யா ! வீட்டுல இருக்கிற ஜன்னல் கண்ணாடி எல்லாத்தையும் உடைச்சு .. ?
நீங்கதானே வீட்டை காலி பண்ணச் சொன்னீங்க .. ..

அந்த ஆட்டோவுல கல்யாணத்துக்கு வயது 31-ன்னு எழுதியிருக்கே, எப்படி ?
அந்த ஆட்டோக்காரரோட பேரு கல்யாணம் அவருக்க வயசு முப்பத்தி ஒண்ணு

பதவிப் பிரமாணம் எடுக்க தலைவர் ரொம்ப கூச்சபடுறாரே .. ஏன் ?
எதையும் யாருக்கும் தெரியாம எடுத்துதான் பழக்கமாம் !

ஐநூறு ரூபாய்க்குச் சில்லறை வேணும் .. ..
அய்யோ முடியாது டியூப்ளி கேட்டா இருந்தா !
சரி, இந்தாங்க நானூறு ரூபாய் நோட்டு

உங்க மாமியார்கிட்டே போய், கேரட் அல்வா .. .. கேரட் அல்வா-ன் சொல்லிட்டு வர்றியே ஏன் ?
கேரட் அல்வா-ன்னா உயிரையே விட்டுடுவேன்-னு அவங்க சொன்னாங்களே .!

உண்மையிலேயே நான் கொடுத்த கருந்து மாத்திரைகளைச் சாப்பிட்டீங்களா .. .. நெஞ்சுல கை வச்சு சொல்லுங்க !
யார் நெஞ்சுல உங்க நெஞ்சிலையா, நர்ஸ் நெஞ்சிலயா ?

ஆறிலும் சாவு, நூறிலும் சாவுங்கிறது உண்மைதான்னு எதை வச்சு சொல்றீங்க ?
ஆறு வயசுப் பையனுக்கும், நூறு வயசு ஆளுக்கம் நம்ம டாக்டர் ஆபரேஷன் பண்ணப் போறாரே !

வயிறு எரியுது டாக்டர் !
எப்பத்திலயிருந்து ?
போன தடவை நான் வந்த போது என்கிட்ட அநியாயமா ஃபீஸ் வாங்கினீங்களே .. .. அப்பத்திலேயிருந்துதான் !

நம்ம தலைவர், திட்ட அறிக்கை எதோ தயாரிச்சிருக்காராமே ?
எதிர்க்கட்சிக்காரங்களைச் சேகரிச்சு வச்சிருக்கிறதைத்தான் அப்படிச் சொல்றாங்க !

என்னம்மா .. .. ஆபீசுக்கு தினமும் லோஹிப்ல வர்றே ?
எனக்கு .. .. தாழ்வு மனப்பான்மை ஜாஸ்தி சார் !
- நன்றி குமுதம் 20-04-2000

நிச்சயதாம்பூலத்துக்கும் கல்யாணத்துக்கும் ரொம்ப நாள் இடைவெளிவிட்டது தப்பா போச்சு ..
என்ன ஆச்சு !
கல்யாணத்துக்கு முன்னாடியே பையன் பொண்ணோட புடவையைத் தோய்க்க ஆரம்பிச்சுட்டான்.

என்ன கல்யாண சீர்ல எல்லாம் பித்தளை பாத்திரமாவே இருக்கு ?
மாப்பிள்ளைக்குப் பேரீச்சம்பழம் ரொம்பப் பிடிக்கமாம் .. அதான் .. .. !

மாப்பிள்ளை பையன் ஊமை பரவாயில்லையா ?
பரவாயில்லை .. .. எப்படியும் கல்யாணம் ஆனதுக்கு அப்புறம் வாயைத் திறக்கப் போறதில்லையே !

என்னோட சின்ன சண்டை வந்தால்கூட என் கணவர் உடனே கோர்ட்டுக்குப் போயிடுவாரு
ஆமாம் .. .. அவர் கோர்ட்டுலதான் குமாஸ்தாவா இருக்காரு !

காப்பி அடித்ததாக 50 பேர் பிடிபட்டனர் (நியூஸ் ஜோக்ஸ்)
என்னது .. .. பிட் போனாவா ?
ஆமா .. .. அஞ்சு அடி நீளத்துக்கு பிட் எழுதி இதுல வெச்சுக்கலாம்

உன் பக்கத்துல உக்காந்து பரீட்சை எழுதின மனோகரைப் பார்த்து நீ காப்பி அடிச்சிருக்கேங்கறதை வாத்தியார் எப்படிக் கண்டுபிடிச்சார் .. .. ?
பரீட்சை பேப்பர்ல கடைசியா நன்றி - மனோகர்னு எழுதித் தொலைச்சுட்டேன்.

இந்த ஞாபக சக்தி மாத்திரையைச் சாப்பிட்டா, எல்லாமே ஞாபகத்துக்கு வந்துடும்.
படிச்சது எல்லாமேவா .. .. ?
ஊஹூம் .. .. உடம்புல எந்தெந்த இடத்துல, எந்தெந்த பிட் வெச்சிருக்கோம்னு ஞாபகம் வரும்.

நெட் ஜோக் !
இரண்டு காதுகளும் தீய்ந்துபோன நிலையில் முக்கல் முனகலோடு டாக்டரிடம் ஓடிவந்தான் ஒருவன்.
எப்படிப்பா இப்படி ஆச்சு ? என்று வியப்போ கேட்டார் டாக்டர்.
நான் சட்டையை அயர்ன் பண்ணிட்டிருந்தேன். அந்த நேரம் பார்த்து டெலிபோன் மணி அடிச்சது. சூபான் ரிஸீவரை படுத்துக் காதுல வைக்கறதக்குப் பதிலா அயர்ன் பாக்ஸை வெச்சுட்டேன். காது தீய்ஞ்சுபோயிட்டுது !
என்றான் அவன்.

சரி .. .. இன்னொரு காதும் எப்படித் தீய்ஞ்சது .. ?
அந்த ராஸ்கல் மறுபடியும் போன் பண்ணினான் டாக்டர் !

கிரிக்கெட் ஆட்டக்காரங்க மெள்ள அரசியலுக்கு வந்துடுவாங்களா ? வருமானத்துக்கு மேலே சொத்து சேர்க்க கத்துக்கிட்டாங்களாமே !
- நன்றி ஆனந்த விகடன்

ஏன் எல்லாருடைய வீட்டுக்கு முன்னாடியும் சந்தனமரம் நடச் சொல்றீங்க ?
மரம் பெருசானாதுக்கப்புறம் வீரப்பன் வெட்ட வந்தா மக்களாவது புடிச்சி போலீஸ்ல ஒப்படைக்கட்டும்னுதான் .. .. !

நல்ல புத்தகம் கொடுத்த போ ! சிரிச்சிச் சிரிச்சி உடம்புல பாதி உசிரு போயிடுச்சி .!
அப்படின்னா இன்னும் ஒரு முறை படிங்களேன்.

ஏன் உடம்பெல்லாம் கட்டுப் போட்டிருக்கே ?
போன வாரம்தான் எனக்குக் கால்கட்டுப் போட்டாங்க !

சல்லடை-ன்னு ஒரு கதை எழுதி அனுப்பிச்சீங்களே .. .. ? அதை ஏன் திருப்பி அனுப்பிட்டாங்க ?
அதுல நிறைய ஓட்டை இருக்காம் !

கடைசில என்னோட நாடகம் வெளிச்சத்துக்க வந்துடுச்சு !
எப்படி ?
ஆடிட்டோரியத்துல லைட் போட்டுட்டதாலதான் !

அந்த ஆஸ்பத்திரியில் என்ன பரபரப்பு ?
ஆபரேஷன் தியேட்டர் வாசலில் யாரோ ஒருத்தன் பிளாக் டிக்கெட் வித்துகிட்டு இருந்தானாம் !

இதோ பாரும்மா கனமான பொருளை எல்லாம் உன்னைத் தூக்கக்கூடாதுன்னு நான் சொன்னது வாஸ்தவம்தான் !
அதுக்காக் பாத்ரூம்ல வழுக்கி விழுந்த உன் மாமியாரைத் தூக்காம இருந்தது கொஞ்சம் கூட நியாயமில்ல .. .. !

அப்பாவைக் கொலை செஞ்சவனை ஹீரோ பழிக்குப் பழி வாங்குற படம் இது .. !
அது சரி .. .. ஹீரோவோட அப்பாவை ரசிகர்களா கொலை செஞ்சாங்க !

ஃபைனான்ஸ் கம்பெனி ஆரம்பிச்சது தப்பாப் போச்சி !
ஏன் .....?
ஜாக்கிங் போனாகூட பின்னாடி நூறு பேர் ஓடிவர்றாங்க !

என்ன இது .. .. ஒவ்வொருத்தரும் ஆட்டு மாட்டோட நிக்கிறாங்க .. ..
தலைவரே ! கால்நடைப் பயணம் போகணும்னு நீங்க சொன்னதை தப்பா புரிஞ்சிகிட்டாங்க ..

நான் நிறைய கடி ஜோக் எழுதுவேன் .. ..
அதுக்காக புனைப்பெயரை ஞநாய்ஞ-னு வச்சுக்கிட்டது அவ்வளவு நல்லா இல்லை !

பெண் வீட்டுக்காரங்க ஏன் இன்னும் கல்யாணத்தைத் தள்ளி வச்சிக்கிட்டே இருக்காங்க ?
ஆயிரம் பொய் சொல்ல இன்னும் முன்னூறு பொய் பாக்கியிருக்காம் .. .. அதனாலதான் .. !

அந்த பௌலர் ஏன் பேப்பர் பேனாவோட கிரவுண்டுக்குப் போறார் .. ?
அவர் டெஸ்ட் மாட்ச்ல கலந்துக்கப் போறாராம் .. .. ?

கடந்த ஆட்சியிலே இலவசத் திருமணங்கள் மட்டும்தான் செய்து வைத்தார்கள். ஆனால் எதிலும் புதுமை செய்யும் எங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால், இலவச விவாகரத்துகளையும் நடத்திக் காட்டுவோம் !

அடிக்கடி சரக்கு ரெயில் தடம் புரண்டுதே .. .. இதுக்கு என்ன காரணம் ?
சரக்கு-தான் காரணம் !
- நன்றி இதயம் பேசுகிறது 16-4-2000

மாப்பிள்ளை முறுக்கு சகஜம்தான் அதுக்குன்னு இப்படியா ?
கல்யாணம் ஆன புதுசல இது சகஜம்தானே !
அட ! அவருக்கு ஆனது அறுபதாம் கல்யாணம் !

ஒளிவு மறைவு இல்லாத வெள்ளை மனசு பொண்ணாக வேணும்னு கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பா போச்சு !
ஏன் .. ?
பாத்ரும் கதவை திறந்து வச்சுக்கிட்டு குளிக்கிறா !

என் மனைவி என்னை தெய்வமா மதிக்கிறா.
அப்ப ! உங்களை மனுஷனாவே மதிக்கறதில்லைன்னு சொல்லுங்க !

டாக்டர் வயிற்றைக் கலக்குது
எப்போலேருந்து ?
எனக்கு முன்னாடி வந்திட்டுப் போனவர்கிட்டே நீங்க வாங்கின பீஸைப் பார்த்ததிலேருந்து !

இந்தப் படத்தை எல்லோரும் செம போர்னு திட்டிட்டு போறாங்க. நீங்க மட்டும் ஆஹா ஒஹோன்னு சொல்றீங்களே ?
வேற வழி நான்தான் அந்தப் படத்தோட டைரக்டர் !

உங்க ஜாதகப்படி நீங்க ரெண்டு கண்டங்களை பார்ப்பீங்க !
ஐயையோ ! என்ன சொல்றீங்க ஜோசியரே ?
பயப்படாதீங்க நான் சொன்னது ஆபிரிக்கா ஆஸ்திரேலியா கண்டங்களைத்தான் !

என்னம்மா உங்க கணவர் காணாம போய் இருபது நாள் ஆச்சுன்னு சொல்றீங்க. ஏன் இவ்வளவு நாள் கழிச்சு வந்து கம்ப்ளைண்ட் பண்றீங்க ?
இன்னிக்கதான் சார் அவரோட சம்பள நாள் .. ... !

பையனை சட்டம் படிக்க வெச்சது தப்பாப் போச்சு .. ..
ஏன் .. .. தனியா பிராக்டீஸ் பண்ணப் போயிட்டானா .. .. ?
இல்ல .. .. தாத்தாவின் சொத்துக்களை உடனடியாக என்னிடம் ஒப்படைக்கணம்னு சட்டம் பேசறான் !

வீட்டுக்காரம்மா நம்ம வீட்டு ஐயா எனக்கத் தெரியாமல் எதுவுமே செய்ய மாட்டார்டீ.
வேலைக்காரி அப்ப என்னை சினிமாவுக்கு அழைச்சிட்டுப் போனதைக் கூட சொல்லிட்டாங்களா .. .. ?

அடிக்கடி ஓட்டப் பந்தயத்துல கலந்துக்கிட்டு ஒடுற மாதிரி கனவு வருது டாக்டர் !
என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க .. .. ?
பைனான்ஸ் கம்பெனி வச்சிருக்கேன் டாக்டர் !

என்னப்பா இது இட்லி ஜில்லுன்னு இருக்கு ?
விலையைப் பாருங்க சார், சரியாயிடும்.

உங்க நாய்க்கு ஏன் மூக்கு கண்ணாடி போட்டு விட்டிருக்கீங்க ?
பார்வை மங்கிட்டதாலே ஒரு வாட்டி என்னையே கடிச்சிருச்சி !

பேஷண்ட் காணாம போனதுக்கா விளம்பரம் கொடுக்கறீங்க.

ஆமா ! அவருகிட்ட பீஸ் வாங்கித்தானே இந்த மாத வாடகையை உங்களுக்குத் தர முடியும்.

நடுரோட்டில் டி.வி தொடர் இயக்குநரை அடித்தார் ஒரு நடிகை நியூஸ்.
நிருபர் - எப்போ ஷூட்டிங் வந்தாலும் கையில ஒரு பிரம்போட வர்றீங்களே ஏன் ?
நடிகை - எனக்கு ரொம்ப போரடிச்சா டைரக்டரை விளாசத்தான் !

ஒருவர் - நம்ம டைரக்டரோட டூப்புங்க அவரு !
மற்றவர் - என்னது டைரக்டருக்கு டூப்பா ?
ஒருவர் - ஆமா ! நடிகைங்க கிட்டேருந்து டைரக்டருக்கு விழ வேண்டிய அடியை எல்லாம் அவருதான் வாங்கிப்பாரு !

தயாரிப்பாளர் - டைரக்டர் சார் .. .. எங்க படத்துல நீங்க கெஸ்ட் ரோல் பண்ணணும் !
டைரக்டர் - எந்த மாதிரி சீன் ?
தயாரிப்பாளர் - படத்துல வர்ற நடிகைகிட்டே நீங்க பளார் பளார்னு அறை வாங்கிட்டு சிரிக்கணும் !

ஏன் நிச்சயதார்த்தத்தை பாத்ரூம்ல வைச்சிக்கலாம்னு சொல்றீங்க .. .. ?
பொண்ணைப் பாடச் சொல்வீங்க .. .. பொண்ணுக்கு பாத்ரூம்ல தான் பாட வரும் அதுதான்.

அந்த பிளேயர் டக்-அவுட் ஆயிட்டா மட்டும் ஏன் ஸ்கோர் போர்டில் வாத்து முட்டை போடறதுக்குப் பதிலா அப்பளத்தைக் காட்டறாங்க ?
அவர் சைவமாம் !

மேடையில மைக் டெஸ்ட் பண்ணியது தப்பாப் போச்சி ஏன் ?
ஒன் டூ த்ரீன்னு சொன்னதும் எல்லோரும் ஓடிட்டாங்க !

வீட்டுக்காரம்மா - ஐயாவோட பாடியைப் பார்த்துத்தான் நான் காதலிச்சுக் கல்யாணம் பண்ணினேன் !
வேலைக்காரி - நான் அவர் வாங்கி தந்த பாடியைப் பார்த்து மயங்கிட்டேன்.

என்னடி நீ ! பஸ்ஸில் உன் பின்னால் நின்னவன் உன் ஜாக்கெட்டுக்குள்ள கையை விடறான் .. .. நீ பேசாம இருக்கியே ?
நான் மணிபர்சை ஜாக்கெட்டுக்குள்ள வைக்கலையே .. .. ! கையை விட்டு அவன் ஏமாறட்டுமேன்னுதான் சும்மா இருந்தேன் !

நம்ம இந்திய கிரிக்கெட் டீமுக்கு ரொம்ப பிடிச்ச கொசுவர்த்தி எதுன்னு சொல்லு பார்ப்போம் !
தெரியலையே !
ஆல் அவுட் !

உங்க வீட்ல பால் கறக்கறதுக்கு ஏன் டான்ஸ் மாஸ்டரை வேலைக்கு வெச்சிருக்கீங்க
ஆடற மாட்டை ஆடி கறக்கத்தான் ... ..

உன் பையனுக்கு ஏன் ரொம்ப குண்டா பெண் பார்க்கறே ?
அவளைத் தலையில தூக்கி வெச்சுக்கிட்டு ஆட முடியாது பாரு .. ..

கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிர்னு நான் சொல்லி இருக்கலாம் ! அதுக்காக கல்யாணப் பரிசா இப்படி உர மூட்டைகளா கொண்டு வந்து கொடுக்கறது கொஞ்சம்கூட நல்லா இல்லை !

அந்த ஆள் உங்க ஆபிஸ்ல பெரிய பதவியில இருக்காரா .. .. ?
ஆமாம் ஆபிஸ்ல அவருக்கு கீழே பத்து பேர் தூங்கறாங்க .. ..

தலைவரை ஏன் கட்சியில இருந்து நீக்கிட்டாங்க ?
மக்களின் ஒளிமயமான வாழ்க்கைக்கு கரண்ட் பில் கட்டிய செலவுன்னு சில லட்சங்களை கணக்குக் காட்டிட்டாராம் !.

அத்தனை எம்.எல்.ஏக்களுக்கும் மந்திரி பதவி கொடுத்தும் அவுங்க திருப்தி அடையல்லை இன்னும் என்ன வேணுமாம் ?
சுழற்சி முறையிலே ஒவ்வொருத்தரும் முதலமைச்சர் ஆகணுமாம் !
- நன்றி 23-4-2000 இதயம் பேசுகிறது.

<u>வாகனங்களில் காஸ் சிலிண்டர் பொருத்த அனுமதி - நியூஸ்</u>
பரவாயில்லையே .. .. சைக்கிள்கூட காஸ்ல ஓடுதா .. ?
யோவ் விளையாடாதே ! நான் காஸ் சிலிண்டர் டெலிவரி கொடுக்கறவன் .. .. !

என்ன சார்.. .. வண்டியில காஸ் பொருத்தினப்புறம் ஆபீஸ் போறது கஷ்டமா இருக்காதே .. .. !
நீங்க வேற ... இப்ப ராத்திரி சமையலையும் கார்லேயே பண்ணி முடிச்சுடுங்கனு சொல்லிட்டா என் பொண்டாட்டி !

நெட் ஜோக் !
சர்தார்ஜியும் அவரது நண்பரும் சினிமா பார்த்துக் கொண்டிருந்தார்கள். உயரமான கட்டடத்தின் உச்சிக்குச் சென்ற ஒரு ஆள் அங்கிருந்த குதிக்கப் பார்ப்பதாக ஒரு காட்சி, பரபரப்பான இந்தக் கட்டத்தில் இடைவேளை விடப்பட வெளியே வந்த நண்பர்கள் இந்த காட்சி பற்றியே விவாதித்தார்கள்.
பேச்சுவாக்கில் அந்த ஆள் கீழே குதிக்கப் போகிறான் கால் எலும்பு முறியப் போகுது ! என்று பந்தயமே கட்டினார் நண்பர்.
சர்தார்ஜியும் விடவில்லை பந்தயத்துக்கு நானும் தயார். அவன் கண்டிப்பாக கீழே குதிக்கமாட்டான் ! என்றார் நம்பிக்கையோடு
பந்தயத்தில் தோற்பவர், வெல்பவருக்கு விருந்து தரவேண்டும் என்று முடிவு செய்து கொண்டு இருவரும் தியேட்டருக்குள் போனார்கள். சர்தார்ஜிதான் பாவம் ! அந்த ஆள் உச்சியிலிருந்து கீழே குதித்துவிட்டான்.
பந்தயத்தின்படி, வென்ற நண்பருக்கு விருந்து வைத்தார் சர்தார்ஜி. அப்போது நண்பர், ஜி ! உங்களை நான் எமாத்திட்டதா என்னோட மனச்சாட்சி உறுத்துது. அந்த ஆள் கீழே குதிக்கப்போறது எனக்கு முன்னாடியே தெரியும். படத்தை நான் எற்கெனவே பார்த்துட்டேன் ! என்றார்.
நானும்தான் படத்தைப் பார்த்திருந்தேன். ஆனால் அந்த முட்டாள் மறுபடியும் இப்படிக் கீழே குதிப்பான்னு துளிகூட நான் எதிர்பார்க்கலை ! என்றார் சர்தார்ஜி வருத்தத்தோடு !

<u>சென்னையில் போலி குளிர்பானம் தயாரிப்பு 7 பேர் பிடிபட்டனர் செய்தி</u>
போலீஸ்காரர் - யாருமே மாமூல் கூட்டித் தரமாட்டேங்கிறாங்க சார் .. .. கள்ளச்சாராயத்திலிருந்து கள்ள கூல்டிரிங்க்ஸுக்கு இப்பத்தான் மாறியிருக்கோம். தொழில் இன்னும் ஸ்டெடியாகலைனு சொல்றாங்க சார் .. .. !

இதுதான் புதுசா வந்திருக்கற மீட்டர்-கம்-ஸ்ட்ரா .. .. போலி எது நிஜம் எதுன்னு சரியா கண்டுபிடிச்சுடும் .. .. !

ஏன் ... உன் வீட்டுக்காரர் புடவையெல்லாம் போட்டுட்டுப் பாத்திரம் வாங்கிக்கோனு சொல்றாரு .. ..?
புடவையைத் தோய்க்கறதைவிட, பாத்திரம் தேய்க்கறது அவருக்கு ரொம்ப சுலபமா இருக்காம் !

என்ன .. .. உங்க மானேஜர் உங்களை குண்டூசியால குத்தறாரு .. ?
நான்தான் சொன்னேனே .. .. ஆபீஸ்ல வேலை செய்யலைனா எங்க மானேஜர் குத்திக் காண்பிப்பாருன்னு .. .. !

கமகமன்னு வாசனை வருது உங்க வீட்ல என்ன சமையல் .. .. மீனா .. ?
என் பேர் மீனா இல்லை ராஜேஸ்வரி .. ..

டாக்டர் கல்யாணமாகி எட்டு வருஷமாகியும் என் மனைவி வயத்துல ஒரு புழு பூச்சிகூட இல்லை.
வெரிகுட் ! நல்ல ஆரோக்கியமான உடம்புனு சொல்லுங்க !

உங்க மாமாவுக்கு விபத்துல அடியாமே .. .. எந்த இடத்துலே ?
தண்டுவடத்துல .. ..
இந்த ஊர்ல அப்படி ஒரு இடம் இருக்காடூ தெரியாம போச்சே !

இந்தக் கண்ணாடி என்ன விலைங்க .. .. ?
முப்பத்தஞ்சு ரூபாய்
கொஞ்சம் பாத்து சொல்லுங்க .. ..
சொல்றது மட்டும்தான் என் வேலை பாக்கறதெல்லாம் உங்க வேலைங்க !

உங்க அம்மா முடியாம இருந்தாங்களே என்ன பண்ணினே ?
ரப்பர் பேண்டு வாங்கிக் கொடுத்தேன் !

காலேஜ் ஜோக்ஸ்

மூணு யானை கர்ப்பமா இருக்குது, அதுல ஒண்ணுக்கு பன்னிரண்டு மாசம். இன்னொண்ணுக்கு பதினாறு மாசம். கடைசி யானை இருபது மாசம். இதுல எந்த யானை முதல - குட்டி போடும்.
கடைசி யானைதான் !
தப்பு ! எதுவுமே முதலைக் குட்டி போடாது. எல்லாமே யானைக் குட்டிதான் போடும்.

ரேடியோவில் கிரிக்கெட் ரன்னிங் காமெண்டரி சொல்லிக் கொண்டிருந்தார்கள் .. சச்சின் 100 அடித்து சிறப்பாக ஆடிக் கொண்டிருக்கிறார்.
அப்போது அங்கு வந்த போதையில் இருந்த ஒருவர் சொன்னார்.
நானே 500 அடிச்சிட்டு ஆடாம ஸ்டேடியா இருக்கேன் சச்சின் 100 அடிச்சிட்டு ஆடறான் பாரு .. .. !

எட்டுக்கால் பூச்சியும் ஆயிரங்கால் பூச்சியும் கிரிக்கெட் விளையாடப் போச்சாம். எட்டுக்கால் பூச்சி மட்டும் சரியான டயத்துக்கு கிரவுண்டுக்கு வந்துடுச்சாம் ஆனா ஆயிரங்கால் பூச்சி வர லேட்டாயிடுச்சு ஏன் சொல்லு .. ?
தெரியலையே !
ஆயிரங்கால் பூச்சிக்கு ஷூஇ பேடு மாட்டவே நேரம் ஆயிடாதா .. .. ?

டெலிபோன் ஆபரேட்டரைக் காதலிச்சுட்டு டீச்சரான என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களே ஏன் ?
அவ எப்பப் பார்த்தாலும் டுநேநே ரைளல - ன்னு கிட்டே இருந்தா .. நீ மட்டும்தான் ஐவஙள டிமயல .. .. வசல வை நேஒவ வஅைந-னு சொன்னே, அதனாலதான் !

புதுவீடு கட்டித் திறப்பு விழா நடத்தும் போது மட்டும் பசுமாட்டை கூட்டிக்கிட்டுப் போறாங்களே .. .. அது போல கல்யாண வீட்டுக்கு மட்டும் அதைக் கூட்டிக்கிட்டுப் போறதில்லையே ஏன் ?
ஏன்னா .. .. கல்யாணங்கிறது ஆயிரம் காலத்துப் பயிர் மாட்டைக் கூட்டிக் கிட்டுப் போன மேஞ்சுடும் ..

முகத்துல ஏன் ஐலதோஷம் பிடிக்குது .. .. ?
அங்குதானே மூக்கு இருக்கு அதனாலதான் !
அது இல்லைப்பா .. .. முகத்துலதானே ஐஸ் இருக்கு.

பாலத்தை எதுக்கு இடிச்சுக் கட்டணும்ங்கறீங்க ?
நான் இப்ப ரொம்ப நிதி நெருக்கடியில் இருக்கேன் !

ஏங்க உங்களுக்கு மொத்தம் ஆறு பசங்கன்றீங்க .. .. கேட்டா சின்ன குடும்பம்கறீங்களே ?
ஆமாம் சார் .. .. எனக்கு அஞ்சு பொண்டாட்டி ! அப்படிப் பார்த்தா சின்ன குடும்பம்தானே .. .. !

எல்லா ஆட்டோக்களிலும் பிரம்மச்சாரிகளுக்கு இலவசம் எழுதியிருக்காங்க அப்படியாவது ஜனத்தொகை ஒரு கட்டுக்குள்ள நிக்குதான்னு பார்க்கலாம் !

நீங்க வருமானத்துக்கு மேலே சொத்து சேர்த்திருக்கிறதா பேசிக்கறாங்களே ..
ஐயையோ .. .. அது பச்சைப் பொய் ! எனக்கு வருமானமே கிடையாது. சொத்து மட்டும்தான் சேர்க்கறேன் !

எங்க வீட்டுலே ஜன்னலைத் திறந்து வெச்சா காத்து பிச்சுக்கிட்டுப் போகும் ..
எங்க வீட்டுலே காத்து வேணும்னா குழாயைத் திறந்து வெச்சா போதும் !

எனக்கும் என் மனைவிக்கும் சண்டை வந்தா, என் மனைவி கைதான் ஓங்கும் ..
உங்க கை .. .. ?
வீங்கும் !

மனைவி - கொஞ்ச நாளைக்கு என்கூடச் சந்தோஷமா இருக்கிற மாதிரி நடிங்க !
கணவன் - ஏன் .. .. ?
மனைவி - அதைப் பார்த்துட்டுத் தான் கண்ணை மூடுவேன்னு உங்கம்மா அடம் பிடிக்கிறாங்களே !

டாக்டர்இ என் மாமியாருக்கு நீங்க வைத்தியம் பண்றது இது மூணாவது தடவை ! இந்த முறையும் அவங்க தேறிட்டாங்கன்னா, நான் டாக்டரை மாத்த வேண்டியிருக்கும்.

சென்ஸார் அதிகாரிங்க வந்திருக்காங்க .. ..
எதுக்காம் .. .. ?
நீயும் என் அம்மாவும் போடற சண்டையில் அளவுக்கு மீறி வன்முறை இருக்குனு அவங்களுக்குத் தகவல் போயிருக்குதாம் !

உங்க மனைவி, உங்களைச் சமையல் பண்ணச் சொல்லி அதிகாரம் பண்ணிட்டுப் போறாங்களே .. .. நீங்க ஒண்ணும் கேட்கமாட்டீங்களா .. .. ?
கேட்டேனே .. .. என்ன சமையல் பண்ணணும்னு .. .. !

மாடி போர்ஷன் எங்கே காட்டினாலும் வேண்டாம்னு சொல்லிட்டே இருக்கீங்களே ஏன் .. .. ?
என் மனைவி என்னை எடுத்தெறிஞ்சு பேசுவா அதான் பயமா இருக்கு !

- நன்றி ஆனந்த விகடன்

ஒரு சர்தார்ஜி முதல் தடவை ஸ்கூட்டரில் செல்லும்போது ஒரிடத்தில் சிக்னலில் நிற்க வேண்டியிருந்தது. சிவப்பு விளக்கு அனைந்து பச்சை விளக்கு எரிய ஆரம்பித்தும் அவர் நகராமல் சிக்னல் அருகே குனிந்து பார்த்தவாறு இருந்தார். அதைக் கவனித்த டிராஃபிக் சார்ஜென்ட் அவரிடம், ஒடிவந்து ஏன் இன்னும் இங்கு நின்று கொண்டிருக்கிறீர்கள் ? சிக்னலைக் கவனிக்கவில்லையா ? எனக் கோபமாகக் கேட்டார். அதற்கு சர்தார்ஜி சிக்னல் விழுந்த பிறகு செல்லவும் என டிராஃபிக் ரூல்ஸ் கூறுகிறது. எப்பொழுது சிக்னல் கீழே விழும் எனத் தெரியவில்லையே என்றார்.

தன் வீட்டருகே இருந்த பைனான்ஸ் கம்பெனி திடீரென்று மூடப்பட்டுவிட்டதாக தன் நண்பனிடம் வருத்தத்தோடு சொன்னார் சர்தார்ஜி.
ஏன் .. .. நீ எதுவும் பணம் போட்டிருந்தியா .. .. ? என்று கேட்டார் நண்பர்.
பத்தாயிரம் ரூபாயை இன்னிக்கு அங்கே டெபாசிட் பண்ணலாம்னு நினைச்சிருந்தேன் படுபாவி அதுக்குள்ளே ஒடிட்டானே .. ! முன்பை விட வருத்தமாய் சொன்னார் சர்தார்ஜி.

என் கணவர் பஸ்சுல போறப்பல்லாம் டிக்கட் வாங்கின பிறகுதான் சீட்டுலே உட்கார்றாரு .. .. ! அலுத்துக் கொண்டாள் சர்தார்ஜியின் மனைவி.
ஏன் .. அது நல்ல பழக்கம்தானே .. ! என்றாள் அவள் சிநேகிதி.
இருக்கலாம் .. .. ஆனால், பஸ் டிரைவர் எதுக்காக டிக்கெட் எடுக்கணும் .. ! சலித்தபடியே சொன்னாள் சர்தார்ஜியின் மனைவி.

ரெண்டு லாரி ஆட்களுக்கு பணம் வாங்கிட்டு ஒரு லாரி கூட்டம் தானே கொண்டு போறே.. .. தலைவர் திட்ட மாட்டாரா ..?
போதையில அவருக்கு எல்லாமே ரெண்டு ரெண்டாதான் தெரியும்.

ஜலதோஷம் என்று டாக்டரிடம் போன சர்தார்ஜி, மறுநாள் மேலும் அதிகமாகி விட, மறுபடியும் அதே டாக்டரிடம் போனார். பச்சைத் தண்ணீர் குடித்தீர்களா ? என்று கேட்டார் டாக்டர்.
சர்தார்ஜி கூலாகச் சொன்னார், இல்லை டாக்டர் நான் குடிச்ச ஜஸ் வாட்டர் கலரே இல்லாமத்தான் இருந்துச்சு .. !

முதல் நாள், ஃபிரிட்ஜ் ஒன்றை வாங்கிப்போன சர்தார்ஜி ஒருவர் இ மறுநாள் அதே கடைக்குப் போனார். நேத்து நான் ஃபிரிட்ஜை வாங்கினப்போ இதுல வைக்கிறது வைக்கிறபடியே ஃபிரஷ்ஷா இருக்கும்னு சொன்னீங்கள்ல ,, ,, என்று கோபமாகக் கேட்டார்.
ஆமாம் .. .. அதுல என்ன சார் பிரச்சனை என்ற கேட்டார் கடைக்காரர்.
நேத்து ராத்திரி அதுல ஒரு கிளாஸ் வெந்நீரை வெச்சேன், ஜில்லுன்னு மாறிடுச்சு .. ! என்ற கோபமாகச் சொன்னார் சர்தார்ஜி.

சர்தார்ஜி ஒருவர் வேலை விஷயமாக ஒரு கம்பெனிக்குச் சென்றார். அங்கே, அவசரமாக பத்து ஓயிட் பேப்பர்கள் தேவைப்பட்டது அவருக்கு ஆனால், அவரிடமிருந்ததோ ஒரே ஒரு பேப்பர் மட்டும்.
பக்கத்தில் இருந்த கடைகளில் பேப்பர் கிடைக்காததால் ஒரு ஐடியாவுடன் ஜெராக்ஸ் கடை ஒன்றிற்குள் நுழைந்து கையிலிருந்த ஓயிட் பேப்பரைக் குடுத்து அவசரமா, பத்து காப்பி போட்டுக்குடுங்க என்றவர் இ சட்டென்று ஏதோ நினைவுக்கு வந்தவராய் பேக் அண்ட் ஃப்ரெண்ட் ரெண்டு சைடும் காப்பி போட்டுடுங்க - என்றார்.

நீங்கதானே தமிழ்செல்வன் .. . ?
ஆமாங்க .. .. ?
உங்க பேர்லே கணக்கு இருக்கா .. .. ?
கணக்கு- இல்லைங்க தமிழ்-தான் இருக்கு ?

நான் தண்ணியடிக்கிறதை நிறுத்திட்டேன்.
ஆச்சரியமா இருக்கே எப்படி .. .. ?
அடிபம்புல தண்ணிதான் வரலையே .. .. !

டெல்லில இருக்கிற அந்த அமைச்சருக்கு ஊழல்னா என்னனு தெரியாது .. ..
ரொம்ப நேர்மையானவரா .. .. ?
இல்ல ! தமிழ்ல ஊழல்னா என்ன அர்த்தம்னு அவருக்குத் தெரியாதுன்னு சொன்னேன்.

இண்டர்வியூவிற்கு வந்தவர்களிடம் தரப்பட்ட படிவத்தை அனைவரும் பூர்த்தி செய்து கொண்டிருக்க, சர்தார்ஜி மட்டும் எதுவும் செய்யாமல் அமர்ந்திருந்தார். காரணத்தை கேட்க என்னிடம் ப்ளூ இங்க் பேனாத்தான் இருக்கிறது. படிவத்தை பிளாக் லெட்டரில் பூர்த்தி செய்ய வேண்டும் என்றல்லவா போட்டிருக்கிறார்கள் என்றார் சர்தார்ஜி.

புத்தகத்தின் பக்கங்களை எச்சில் தொட்டுத் திரும்பியதற்காக டீச்சர் தன்னை அடித்ததாக சர்தார்ஜியிடம் சொன்னான் அவர் மகன். உங்க டீச்சர் பேர் சுமதியா ? என்றார் ஆமா எப்படி தெரியும் என்ற மகனிடம் அதே காரணத்துக்காக என்னை அடிச்ச டீச்சர் பேர் சுமதியாச்சே !

எல்லோரும் முட்டாள்தாண்டா !
சர்தார்ஜிகள் முட்டாள்களாக ஜோக்குகளில் சித்திக்கப்படுவதை கடுமையாக எதிர்ப்பவர் சுக்பீர்சிங் இந்த உலகில் சர்தார்ஜிகள் மட்டும் தான் முட்டாள்களா ? எல்லோரும் ஒரு வகையில் முட்டாள்கள்தான். இதை நிரூபித்துக் காட்டுவேன் என்று தன் நண்பர்களிடம் ஒரு நாள் சவால் விட்ட சுக்பீர் சிங், குதுப்பினாருக்கு போனார். குதுப் பினாரின் உச்சியில் நின்று கொண்டு கீழே எதையோ சுவாரஸ்யமாக பார்த்துக் கொண்டிருந்தார் கீழே அப்படி என்ன சுவாரஸ்யமாக இருக்கிறது என்று அவர் காதருகில் ஒரு குரல் கேட்டது. பேசாமல் என் பின்னால் கியுவில் நில், நான் கொஞ்ச நேரம் பார்த்த பிறகு உனக்கு விஷயத்தை சொல்கிறேன் என்றார் சுக்பீர் சிங்.
கிட்டத்தட்ட அரை மணி நேரம் ஆன பின் இ சர்தார்ஜியின் பின்னால் நின்றவருக்கு கோபம் வந்தது. என்னய்யா இது நீ பார்த்து ரசிக்க குதுப்மினாரின் உச்சியில் இருந்து தரை வரை நீண்ட கியூ நிற்கிறது. நீ என்ன பார்க்கிறாய் என்பதை இப்போதாவது சொல்லமாட்டாயா ? என்று சிங்கின் காதருகே சென்று கத்தினார்.
இதைக் கேட்டதும் சுக்பீர் சிங்குக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. ஒரு சர்தார்ஜியை நம்பி எத்தனை முட்டாள்கள் ஒன்றுமில்லாததைப் பார்க்க கியுவில் நிற்கிறார்கள் என்று நினைத்தவாறு திரும்பிப் பார்த்த சுக்பீர்கிங்கின் முகம் குறுகியது. குதுப்பினாரின் உச்சி முதல் தரை வரை கியுவில் நின்றிருந்தவர்கள் எல்லோருமே சர்தாஜிகள் !.
- நன்றி குமுதம் 27-04-2000

சரியான கஞ்சன் வீட்டுக் கல்யாணமா இருக்கு ?
ஏன் .. .. ?
வாழை இலை போடாம பந்தில சாப்பாடு பரிமாற எல்லாருக்கம் வெத்தனை போட்டு இருக்காங்களே ?

டாக்டர் எனக்கு வாய் கூசாத மாதிரி மாத்திரை குடுங்க
ஏன் ? அடிக்கடி மாங்கா சாப்பிடுவீர்களா ?
நான் ஒரு வக்கீல் டாக்டர் கோர்ட்ல வாய் கூசமா நிறைய பொய் சொல்ல வேண்டி இருக்கு.

அவரு பேசறத வெச்சே அவர் ஒரு நக்சலைட்னு எப்படி கண்டுபிடிச்சீங்க ?
வெடி உதவற மாதிரி அண்ணன் தம்பிகூட உதவ மாட்டான்னு சொன்னாரே ?

வாரம் ஆறு நாளைக்கு என் மனைவி என்னை கிட்ட நெருங்கவே விடறதில்லை
ஏன் .. .. ?
காதல் செவ்வாய் அன்னைக்குத்தானம்.

நானும் என் ஆளும் சினிமா தியேட்டர்ல படம் பார்த்துட்டு இருக்கறப்ப திடீர்னு கரண்ட் கட் ஆகிடுச்சு
வெரிகுட் என்ன செஞ்சே ?
தைரியமா அவளைப் பார்த்து கண்ணடிச்சேன்

மாப்பிள்ளை இவ்வளவு ஸ்பீடா இருப்பார்னு எதிர்பார்க்கவே இல்லை.
ஏன் .. .. ?
முதலிரவு முடிஞ்சதும் உடனே நைட் 12-30 மணிக்கு மாமியார் வீட்டுக்கு பிரசவத்தக்கு பஸ் ஏத்தி விட்டுட்டாரே !

இன்ஸ்பெக்டருக்கு குழந்தை மனசு
எப்படி .. .. ?
தீவிரவாதிங்க பைலை பிரவுன் அட்டை போட்டு லேபிள் ஒட்டிட்டு இருக்காரே !

லேடிஸ் பிரா போடறத ஆண்கள் ஏன் விரும்புறதில்லை-ன்னு ஒரு டி.வி. புரோக்ராம் பண்றோம்.
அப்போ ப்ரா-க்ராம்னு சொல்லுங்க.

அத்தான் நம்ம ரெண்டு பேருக்கு நிச்சயம் நடந்தது வாஸ்தவம். அதுக்காக தாலி கட்றதுக்க முன்னால இப்படி கேட்கலாமா ?
அய்யய்யோ ! நான் என்ன கேட்டேன் ?
வரதட்சணைப் பணத்துல இருந்து 100 ரூபா கடன் அட்வான்ஸா கேட்டீங்களே ?

டாக்டர், என் பையனுக்கு ரம்பா போபியா-ங்கற வியாதி வந்திருக்கு.
அதென்ன புதுசா இருக்கே ... ..?
சரியான தொடை நடுங்கியா இருக்கான்.

டாக்டர் என் கணவர் என்னை எதிர்த்துப் பேசறார் ?
இந்தப் பிரசினைக்கு ஏன் இங்கே வந்தீங்க ?
நான் வீட்ல இல்லாதப்ப தனியா அவர் பாட்டுக்கு எதிர்த்துப் பேறார் டாக்டர்.

என் மனைவியைப்பற்றி சொல்லணும்னா இன்னைக்குப் பூரா சொல்லிட்டே இருக்கலாம்.
வேணாம் சார் மொத்தப் பேட்டியை பத்து நிமிஷம்தான்.

விநாடி வினா நிகழ்ச்சில அந்தப் பொண்ணை ஏன் கட்டிப்பிடிச்சு முத்தம் குடுத்தீங்க ?
ஸாரிங்க குவிஸ் புரோக்ராம்னு தெரியாது கிஸ் புரோக்ராம்னு நினைச்சுட்டேன்.

என்னடா ? போஸ்ட்மேன் வேலை கிடைச்சதுக்கு இவ்வளவு சந்தோஷப்படறே ?
பின்னே ? இனி எந்த ஃபிகரைப் பார்த்து லெட்டர் குடுத்தாலும் யாரும் தப்பா நினைக்க மாட்டாங்க.
- நன்றி குங்குமம்

சார் பர்ஸை வீட்லயே வெச்சிட்டு ஆஃபீஸ் வந்துட்டேன். ஒரு நூறு ரூபா இருந்தா கொடுங்களேன்.
இந்தா ரெண்டு ரூபா பஸ்ல வீடு போய் பர்ஸை எடுத்துட்டு வந்துடு.

நிருபர் - திடீர்னு ஒரு காய்கறிக் கடையை விலைக்கு வாங்கிட்டீங்களே ?
நடிகை - மார்க்கெட் இல்லாத நடிகைன்னு யாரும் சொல்லிடக்கூடாது பாருங்க.

இந்தத் தேர்தல்ல நம்ம தலைவர் தோத்தா மொட்டை போட்டுக்கிறதா சொல்லி இருக்காரு .. ..
ஜெயிச்சா ?
ஜனங்களுக்கு மொட்டை போடுவாரு.
- நன்றி குமுதம்

ஏன் தோசை நடுவுல ஓட்டை இருக்கு .. ?
இதுதான் புதுசா வந்திருக்கிற சிடி தோசைங்க !

அந்த சாஃப்ட்வேர் இன்ஜினீயர் ஃப்ராடுன்னு எப்படிக் கண்டுபிடிச்சீங்க ?
இது மூலிகையால செஞ்ச ஃப்ளாப்பி இதுல வைரஸ் வந்தா செத்துடும்னு சொல்றாரு

தமிழ் இன்டர்நெட் மாநாடுல நம்ம தலைவர் பேசினது பிரச்சினையாயிடிச்சி
அப்படி என்ன பேசினார் ?
ஏதோ இன்டர்நெட் ஈமெயில்னு ஈ-மூலம் மெயில் அனுப்புறது தப்பு. நம்ம பாரம்பரிய புறா மெயிலைத்தான் கடைபிடிக்கணும்னு பேசிட்டார்.

என்னது நம்ப ஆபீஸ் கம்ப்யூட்டரை செக்கப் பண்ண டாக்டரைக் கூட்டிக்கிட்டு வந்திருக்கியா எதுக்குய்யா .. .. !
அதுல வைரஸ் அட்டாக் பண்ணியிருக்குன்னு சொன்னீங்களே அதனாலதான் !

மௌஸ் ப்ராப்ளம்னீங்களே, எலிப்பொறி வெச்சுப் பிடிச்சு ஒழிச்சுட வேண்டியதுதானே .. .!
அய்யோ ! நான் சொன்னது என்னோட கம்ப்யூட்டர்ஸ் இருக்கிற மௌஸ் ரிப்பேர் ஆயிடுச்சுன்னுதான் !
நன்றி குமுதம் 4-5-2000

என்ன பண்ணுவீங்களோ தெரியாது .. .. இந்த மேட்சலே ஒரு சங்கீத வித்வான் ஸ்பின் பௌலரா நம்ம டீம்லே விளையாடுவாருனு பெரிய அளவுலே பெட் கட்டியிருக்கோம் .. .. !

தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர் பிரச்னையை எப்படித் தீர்க்கலாம்னு நீங்க நினைக்கறீங்க .. .?
காங்கிரஸ் மேலிடம் பன்னண்டு நபர்களைத் தேர்ந்தெடுக்கணும் அவங்களோட பேர்களை அவக வரிசையில வெளியிடணும். அந்த லிஸ்ட்படி மாசத்துக்கு ஒருத்தர் தலைவராயிருக்கணும் எப்படி நம்ம ஐடியா .. ?

எங்க தியேட்டர்ல இன்னும் ஒரு மாசத்துக்கு உங்க படம்தான் .. ..
பரவாயில்லையே ! ஏன் அப்படி .. . ?
தியேட்டர்ல சுண்ணாம்பு அடிக்கப் போறோம் ஆளுங்க வந்துட்டு போயிட்டு இருந்தா வேலைக்கு இடைஞ்சலா இருக்குமே !

இரண்டு நடிகைள் உரையாடல் இருந்து.
யாராவது பழம் கொடுத்தால் வாங்காதே .. ..
ஏன் .. ?
பழம் பெறும் நடிகைனு சொல்லிடுவாங்க .. .!

நீங்கதான் அம்மாவோட பி.ஏ.வா .. ..?
ஆமா .. .. !
அம்மா இருக்காங்களா .. .. ?
குளிச்சிக்கிட்டிருக்காங்க .. ..
அவங்களைப் பார்க்கணுமே
யோவ் முண்டம் குளிச்சிக்கிட்டிருக்காங்கன்னு சொல்றேன்ல .. .?

தண்ணி கஷ்டத்துலேயும் ஒரு நன்மை இருக்கா எப்படி ..?

வழக்கமா சம்மர் லீவ்-ல கல்கத்தாவிலேருந்தும், மும்பைலேருந்தும் வர்ற என் நாத்தனார் மச்சினன் குடும்பங்கள் தண்ணி கஷ்டம் தெரிஞ்சு இந்த தடவை வரலே .. .. !

கிரிக்கெட் பெட்டிங் சட்டபூர்வமாக்கப்படலாம் செய்தி.
இந்த ஆள் நம்ம டீம்ல விளையாட லாயக்கு இல்லே .. .. எந்த காட்ச் வந்தாலும் விட்டுடறான் !
உளறாதே இவனை மாதிரி ஆளுங்கதான் பெட்டில் ஜெயிக்க ரொம்ப யூஸ்ஃபுல்லா இருப்பாங்க !

ஹான்ஸி குரோனியே கோடிக்கணக்குல பணம் வாங்கினதா சொல்றாங்களே இப்ப அவர் என்ன ஆவாருங்க .. ?
கரன்ஸி-குரோனியே ஆயிடுவாரு !

<u>நெட் ஜோக் !</u>

ஒரு புலனாய்வு நிறுவனம் இன்டர்வியூவுக்கு மூன்று பேரை அழைத்திருந்தது.
முதலாவது நபர் அலுவலகத்துக்குள் போனதும் அவரிடம் ஒரு துப்பாக்கி கொடுக்கப்பட்டது. இதோ பாருங்க எங்களோட ஊழியராக இருக்கணும்னா நீங்க எங்களுக்கு விசுவாசமா, நாங்க சொல்ற எதையும் கேட்கற ஆளா இருக்கணும்னா நீங்க எங்களுக்கு விசுவாகமா, நாங்க சொல்ற எதையும் கேட்கற ஆளா இருக்கணும் உங்க மனைவி பக்கத்து ரூம்ல இருக்காங்க போய் அவங்களை இந்தத் துப்பாக்கியால சுட்டுக் கொன்னுட்டு வாங்க ! என்றார்கள் இன்டர்வியு கமிட்டியில் இருந்தவர்கள்.
இவர் துப்பாக்கியை எடுத்தார் ஆனால் அடுத்த நிமிஷமே ஸாரி என்னால என் மனைவியைக் கொல்ல முடியாது ! என்று துப்பாக்கியைத் தந்துவிட்டுக் கிளம்பி விட்டார்.
இரண்டாவது நபர் வந்தார் அவரிடமும் அதே கட்டளை ! துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு தனது மனைவி இருந்த அறை வரைக்கும் போனவர் மனசு தாங்காமல் எனக்கு என் பெண்டாட்டிதான் வேணும் ஆளை விடுங்க ! என்று ஜகா வாங்கிவிட்டார்.
மூன்றாவது நபரிடம் இதே விஷயம் சொல்லப்பட துப்பாக்கியோடு அவரது மனைவி இருந்த அறைக்குள் நுழைந்து விட்டார். சிறிது நேரத்தில் அறையிலிருந்து அந்தப் பெண்ணின் அலறல் கிளம்பியது. இன்டர்வியு கமிட்டிக்காரர்கள் ஒடிப்போய் பார்த்தபோது அங்கே தன் மனைவியைத் துப்பாக்கிக் கட்டையால் அடித்துக் கொண்டிருந்தார் அந்த நபர் எம்பா இப்படி அடிக்கிறே ? என்று கேட்டபோது துப்பாக்கியில குண்டு நிரப்பாம கொடுத்து இருக்கீங்களே அடிக்காம பின்னே எப்படி சார் இவளை கொல்றது ? என்றார் அவர்.

தலைவர் பாக்கெட்ல பேனா வைக்கறதுக்குப் பதிலா எதக்கு ஸ்டாம்ப் பேட் வெச்சிருக்கார் ?
கை நாட்டு வைக்கதான்.

தண்ணீர் பஞ்சம்
ஐயையோ .. .. கழுத்துலேருந்து ரெண்டு பவுன் செயினை அறுத்துட்டுப் போயிருந்தாலும் பரவாயில்லே இடுப்புலேருந்து குடம் தண்ணியைத் தூக்கிட்டு ஓடறானே .. .. பிடிங்க .. .. பிடிங்க .. . !

<u>கல்லூரி ஜோக்</u>

பிரம்மாவும் நாரதரும் பேசிட்டு இருக்கும்போது மூணு லோகத்திலும் அதிகமா பொய் பேசுறது யாரு .. . ?னு பேச்சு வந்தது. பூலோகத்தில் இருக்கிற மெடிக்கல் ரெப்ரசன்டெடிவ்கள்தான் அதிகமா பொய் சொல்வாங்கனு நாரதர் சொன்னார். பிரம்மா அதை நம்பலை உடனே ஒரு மணியைக் கொண்டுவந்து மாட்டிட்டு குறிப்பிட்ட ஒரு ரெப் பொய் சொல்லும்போது இந்த மணி அடிக்கும்னு சொன்னார் நாரதர்.
காலை ஒன்பது மணிக்கு மணி அடிச்சது வேலை பார்க்கப் போறேன்னு வீட்டுல சொல்றான் என்று விளக்கம் கொடுத்தார் நாரதர் அடுத்து பதினோரு மணிக்கு மீண்டும் மணியடிக்க இந்தியாவிலேயே எங்களது கம்பெனி மட்டும்தான் இந்த மருந்தைத் தயாரிக்கிறது என்று டாக்டரிடம் சொல்லிக் கொண்டிருக்கிறான் என்றார் நாரதர் பிறகு மாலை மீண்டும் மணியடிக்க போதுமான மருந்துகள் ஸ்டாக் இருக்கிறது என்று ஆர்டர் எடுத்துக் கொண்டீருக்கிறான் என்றார் அதன்பிறகு இரவு பத்து மணிவரை மணியடிக்கவில்லை.
நாரதரை கோபத்தோடு பார்த்த பிரம்மா ஒரு நாளைக்கு மூன்று பொய் என்பது சாதாரண விஷயம் இதை ஒரு பெரிய விஷயமாகச் சொல்கிறாயா .. ? என்று நாரதரை விரட்டிவிட்டுப் படுக்கப் போய்விட்டார் நாரதர் போன சில நிமிடங்களில் மணியடிக்க ஆரம்பித்தது இரவு பத்து மணிக்கு ஆரம்பித்த மணிச்சத்தம் நள்ளிரவு ஒரு மணிவரை ஓயவில்லை பதறிப்போன பிரமன்மா நாரதரைத் தேடி ஓடினார்.
நாரதர் சொன்னார் ஒண்ணுமில்லை பிரபு அந்த ரெப் இப்போது தனது ஆபீஸுக்கு அனுப்பவேண்டிய ஒரு வார டெய்லி ரிப்போரட்டை எழுதிக்கொண்டிருக்கிறார்.

ஒரு மாவட்ட கலெக்டருக்கு வேறு ஊருக்குப் போகச் சொல்லி டிரான்ஸ்ஃபேர் ஆர்டர் வந்தது. கலெக்டரின் ஊழியர்கள் அவருக்குப் பிரிவு உபசார விழா நடத்தினார்கள். விழா முடிந்த பிறகு ஒருவர் மட்டும் ஓரமாக

உட்கார்த்து அழுது கொண்டிருந்தார். அவரிடம் போன கலெக்டர் அவரைப் பார்த்துக் கண்கலங்கி கவலைப்படாதே நீ என்மேல் இவ்வளவு பாசம் வைத்திருப்பாய் என்று தெரியாது அடுத்து வரப்போகம் கலெக்டர் என்னைவிட நல்லவராக இருப்பார் என்று ஆறுதல் சொன்னார்.
அதற்கு அழுதுகொண்டிருந்த அந்த நபர் சும்மா எனக்காகப் பொய் சொல்லாதீங்க சார் இதை நான் நம்பமாட்டேன் என்னா உங்களுக்கு முன்னாடி இருந்த கலெக்டரும் இதையேதான் சொன்னாரு ! என்றார்.

நாயை டெஸ்ட் செய்த டாக்டர் அது கர்ப்பமாக இருப்பதாகச் சொன்னார் அந்தப் பெண்ணுக்குப் பயங்கர கோபம் வந்துவிட்டது.
அதுக்கு வாய்ப்பே இல்லை இந்த நாயை நான் வீட்டுக்குள் கதவைப் பூட்டி வளர்கிறேன் வேறு நாயும் உள்ளே வராது பிறகு எப்படி .. ? என்றாள்.
இந்த நாயோடு சேர்த்து இன்னொரு நாய் வளர்கிறீர்களே அது ஆண்நாய்தானே ? என்று கேட்டார் டாக்டர்.
உடனே அந்தப் பெண் முட்டாள்தனமா பேசாதீங்க டாக்டர் அந்த நாய் இவளோட அண்ணன் ! என்றாள்.

எங்கப்பா பெரிய வேட்டைக்காரர் டைனோஸரஸையெல்லாம் சுட்டிருக்கிறாரு தெரியுமா .. .. ?
யார்கிட்ட கதை விடுற .. .. ?
இப்பதான் டைனோஸரைஸே கிடையாதே !
எப்படி இருக்கும் நான்தான் சொன்னேனே அவர் டைனோஸரஸையெல்லாம் சுட்டுட்டாருன்னு !

வைட்டமின் ய ெ உ ன ந ம எல்லாமே எதில் கிடைக்கும் .. .. ?
பழங்கள்
இல்லை
காய்கறிகள்
இல்லை
நீங்களே சொல்லிடுங்க
மெடிக்கல் ஷாப்பில் !

தொகுதி மக்கள் இப்படிக் கேப்பாங்கன்னு நான் கொஞ்சம்கூட நினைக்கலை
என்ன கேட்டாங்க ?
இத்தினி வருஷம் எம்.எல்.ஏ-வா இருந்து உங்க குடும்பத்துக்கே ஒண்ணும் செஞ்சுக்கலை .. .. எங்களுக்கு என்ன செஞ்சு கிழிக்கப் போறீங்கன்னு கேட்கறாங்க !

லஞ்சம் வாங்கினதுமே எங்க உயரதிகாரி வந்து கையும் களவுமா பிடிச்சுட்டார்.
ஐயோ ! அப்புறம் என்ன ஆச்சு ?
அப்புறம் என்ன எனக்குச் சேர வேண்டிய பாதி பணத்தைக் கையோடு கொடுத்துடுன்னுட்டார்.

எதுக்குத்தான் எது இனாம் கொடுக்கறதுன்னு விவஸ்தை இல்லாம போச்சு !
எதுக்குப் புலம்பறீங்க .. .. ?
அந்த பாருங்க மாட்டுச் சந்தையில ரெண்டு மாடு வாங்கினா இந்த ஆடு இலவசம்னு சொல்றார் அந்த வியாபாரி !

நன்றி ஆனந்த விகடம் 31-4-2000

மாப்பிள்ளை சினிமாத் துறைல இருக்கலாம் அதுக்காக பெண் ஈஸ்ட்டென் கலர்ல இருக்கணும்னு நினைக்கிறது தப்பு !

சார் நீங்க சமயத்துல ஆயிரம் ரூபா குடுத்து உதவி பண்ணீங்க உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே !
என்ன சார் இதுக்குப் போய் நன்றி சொல்றீங்க !
அப்படீன்னா இன்னொரு ஆயிரம் ரூபா குடுங்க ஸார் !

ஷூட்டிங் ஸ்பாட்ல பாடி-யை கையில வெச்சுக்கிட்டு அலையறாரே யார் அவர் ?
அவர் தான் அந்த நடிகையோட பாடிகார்டு.

உங்க கடைசி ஆசைய சொல்லுங்க !
நர்ஸ் மல்லிகாவுக்கு சம்பளப் பாக்கி வைக்காதீங்க !

என்ன உங்க வீட்டுக்காரர் எப்ப பார்த்தாலும் வீட்டுக்கு வெளியவே நிக்கிறார் !

வீட்டுக்கு மேலே திருஷ்டி பொம்மை வச்சிருந்தோம் அது எங்கேயோ காணாம போயிடுச்சு அதுதான் அவரை நிக்க வச்சிருக்கோம்.. .. !.

வெயில் காயுதே
நாளுக்கு நாள் விஷம்போல ஏறிக்கொண்டே இருக்கும் வெப்பநிலையைக் குறைக்கத் துப்பில்லாத இந்த அரசை எதிர்த்து பாராளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் செய்வோம் !

வெயில் தாங்க முடியலியாம் காருக்குள்ள இருந்தே நடிக்கிறேன்னு ஹிரோயின் சொல்றாங்க !

வீரப்பனுக்கு நோபல் பரிசு கொடுக்கப் போறாங்களாமே .. ?
பரிசு வாங்க வரும்போது பிடிச்சுடலாம்னுதான்.

உன் காதலி கண்ணுல ஒரு தூசி விழுந்தாக் கூட உன்னால தாங்கிக்க முடியாதுங்கிறயே ஏன் ?
அவ நூறுகிலோ வெயிட் ஆச்சே.

என்ன நீ வெயில் காலம் ஆரம்பிச்சாலே மொடாக் குடிகாரனா மாறிடுறே.
அதுவா வெயில் காலத்துல நெறைய தண்ணி குடிச்சா உடம்புக்கு நல்லதுன்னு நிறைய பேரு சொன்னாங்க அதான்.

தலைவரோட சிலை திறப்பு விழாவுல தலைவரே சிலையா நின்னாராமே ?
ஆமா ! சிலை வேலை முடியலையாம் !
நன்றி இதயம் பேசுகிறது 30-4-2000

19வது நூற்றாண்டில் வாழ்ந்த பெரிய மனிதர்களைப் பற்றி உன்னால் ஏதாவது கூற முடியுமா ?
ஓ, முடியுமே ! அவர்கள் எல்லோரும் இறந்து விட்டார்கள் !.

பம்ப் செட் லோன் வேணும்னு கேட்கிறியே எவ்வளவு நிலம் இருக்கு ?
நிலம் எதுவும் கிடையாது எஜமான் பால் வியாபாரத்துக்குத் தான் !

டாக்டர் எனக்கு சமீப காலமாக பார்வை சரியாக தெரிவதில்லை.
நான் டாக்டர் இல்லே தபால்காரர் !

பகல் தூக்கம் உடம்புக்கு கெடுதல் அதனால் பகல்ல தூங்கறதை நீங்க நிறுத்திடணும்
அதெப்படி டாக்டர் என்னால ஆபீஸ் போகாம இருக்க முடியாதே

உப்பு காரத்தை தவிர்த்துடுங்க புளியை ஒதுக்கிடுங்க சர்க்கரையை மறந்துடுங்க வியாதி வந்து செத்துடுவோம்ங்கிற கவலையே வேண்டாம் உங்களுக்கு
பட்டினியிலேயே மண்டையைப் போட்டுடலாம் அதானே டாக்டர் ?

அவன் ஒரு சரியான சோம்பேறி
எப்படி
கால்குலேட்டரை இயக்க ரிமோட் கண்ட்ரோல் உண்டான்னு கேட்கறான்.

நம்ம தலைவருக்கு மறதி அதிகம்னு எப்படி சொல்றீங்க ?
நான் அவரு கட்சி எம்.பிங்கறதையே மறந்திட்டு நீங்க நம்ம கட்சிக்கு வந்தீங்கன்னா 25 லட்சம் தர்றோம்னு எங்கிட்டேயே வியாபாரம் பேசுறாருப்பா

சார் ! நம்ம ஆபீசுல யார் யாரு லஞ்சம் வாங்குறாங்கன்னு எனக்குத் தெரியும் சார் !
அப்படியா ! உடனே சொல்லு, முதல்ல அவங்களை வேலையை விட்டுத் தூக்கறேன் !
ஆமா ! சார் யாருன்னு சொன்னா எனக்கு எவ்வளவு தருவீங்க சார் !

புத்தகத்துக்கும் கடிதத்துக்கம் என்ன வித்தியாசம் ?
தெரியலையே !
புத்தகத்தைப் படிச்சுக் கிழிக்கிறோம். கடிதத்தைக் கிழிச்சுப் படிக்கிறோம்.

எலியும் பூனையும் போல ஏன் இப்படிச் சண்டை போட்டுக்கறீங்க ?ன்னு கேட்டது தப்பாப்போச்சு.
ஏன்
யார் எலி ? யார் பூனை ?ன்னு அடுத்த சண்டையை ஆரம்பிச்சுட்டாங்க

வாழைப்பழ வியாபாரியோட பையன் எப்படி இருப்பான் ?
அப்படியே அப்பனையே உரிச்சு வைச்சிருப்பான்.

மருந்து பேரை நல்லா தெளிவா எழுதிக் கொடுத்தா என்ன டாக்டர் ?
கடைக்காரர் மருந்தை மாத்திக் கொடுத்துவிடுவார் பரவாயில்லையா ?

அரசே பக்கத்து நாட்டு அரசன் படையுடன் வருகிறானாம்.
படையுடன் வந்தாலும் சரி, சொறி, சிரங்குடன் வந்தாலும் சரி, அரண்மனை வைத்தியரைப் பார்க்கச் சொல்லும்
- நன்றி குங்குமம் 5-5-2000

என்னாங்க இது இந்த டாகுமெண்டரி படத்துல எல்லாரும் தொண, தொணன்னு பேசிக்கிட்டே இருக்காங்க ?
ஒருவேளை வயடமமெண்டரி படமோ என்னவோ !

தலைவரே .. நீங்க ஏன் சின்ன வீடு செட் அப் செய்யலே..!
சிமெண்ட் விலை ஏறிப் போயிடுச்சே.. ?

தலைவர் ஏன் கூட்டத்துல பேசும் போது முதுகுல அடிக்கடி சொறியறாரு.
தனக்குப் பின்னால ஒரு படையே இருக்கும்கிறதை காட்டறாரு.

பீச்ல சுண்டல் வித்து, இன்னிக்கு எம்.எல்.ஏ வாயிட்டார்
ஓ ! சுண்டல்காரரா இருந்து இன்னிக்கு சுரண்டல்காரரா ஆயிட்டார்னு சொல்லு !

பாத்திரத்துல உள்ள தண்ணியில் கையை நனைக்கச் சொல்றீங்களே ஏன் ?
எங்க வீட்டுக்கு யார் வந்தாலும் கையை நனைக்காம அவங்களை அனுப்புறதில்லை !

வாடகை வீடுன்னு ஒரு படம் எடுத்தீங்களே என்னாச்சு ?
சொந்த வீட்டை வித்துட்டு இப்ப வாடகை வீட்டில் குடியிருக்கிறேன் !

தனது அறையை பூட்டிக் கொண்டு கதை எழுதுகிறாரே, ஏன் ?
அவரு அரைப்பக்கக் கதை எழுத்தாளர். அதான் !

வாங்கிட்டுக் போன காய்கறியில புழுவா இருக்குன்னு சொன்னேன் !
கடைக்காரர் (?) என்ன சொன்னார் ?
விக்கிற விலையில அதுல டினோசரா இருக்கும்னு கேட்கிறார் !
- நன்றி குமுதம் 2-12-99

எதிர்க்கட்சித் தலைவரிடம் நம்ப தலைவர் சூடான கேள்வின்னு போட்டிருக்கே.. அப்படி என்னா கேட்டாரு .
இன்னிக்கு எவ்வளவு டிகிரி வெயில்னு கேட்டாரு !

நடிகையைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது நல்லதா போச்சு !
எப்படி
அவ கோபமா கத்தும் போதுஇ டேக் ஓகே ன்னு நான் சொல்லிட்டாஇ ரிலாக்ஸ் ஆயிடுறா !

உங்கப்பா போலீஸா
ஆமாங்க டீச்சர்... அதை எப்படிக் கண்டுபிடிச்சீங்க..
வஞ்சப்புகழ்ச்சின்னு சொல்றதுக்குப் பதிலா லஞ்சப்புகழ்ச்சின்னு நீ எழுதுறதை வெச்சுதான்...

தயாரிப்பாளர் கிராமத்து ஆசாமி.
அதுக்காக, ஷூட்டிங் இடைவேளையில எல்லோரும் கூழ்தான் குடிக்கணும்னு சொன்னா எப்படி

என்னது திருவோடு ஃபிலிம்ஸா
ஆமாம். நாலைஞ்சு பிச்சைக் காரங்க ஒண்ணா சேர்ந்து மெகா பட்ஜெட்ல படம் எடுக்கிறாங்க !

ஆஃபிஸ்ல தூங்கி கனவு காண்றியே... மேனேஜர் பார்த்தா திட்ட மாட்டாரா
எனக்கு வர்ற கனவை அவர் எப்படி பார்க்க முடியும்

ஒரு நடிகையிடம்
வெளியிடங்களில் ரசிகர்களிடம் எக்குத்தப்பா மாட்டிக்கிட்டீங்களா எப்படித் தப்பிச்சுக்குவீங்க
டக்குன்னு மேக்கப்பைக் கலைச்சிடுவேன்.
நன்றி குமுதம் 11-5-2000

சே... அரை மணி நேரமா பேசிக்கிட்டே இருக்காரு !
பேசட்டுமே சார்... நம்ம கட்சிப் பிரமுகர்தானே
நீங்க வேற ... அந்த ஆள் மைக் டெஸ்ட் பண்றவன் சார் !

பொண்ணுக்கு பையனைப் பிடிச்சிருக்காம்... அப்ப மீதியெல்லாம் பேசிடலாமா
ஓ ... தாராளமா ! டேய்... போய் துணியெல்லாம் சுத்தமா துவைச்சு காட்டு பார்க்கலாம்...!

அந்த ஆளுக்கு மாடு வாங்க லோன் கொடுத்தீங்களே...
என்ன செய்யறாரு...
தண்ணி காட்றாரு ...!

எனக்கு கைலதானே பிரச்னை. நீங்க கால்ல ஆபரேஷன் பண்ணப்போறதா சொல்றீங்களே டாக்டர்
பார்த்தீங்களா நர்ஸ்... இதுக்காகத்தான் மயக்க மருந்து கொடுக்கறதுக்கு முன்னே பேஷண்ட்கிட்டே கடைசியா ஒரு
வார்த்தை கேட்கறதை வழக்கமா வெச்சிருக்கேன் !

இந்த மாட்ச்ல பெட்டிங் இவ்வளவு பகிரங்கமா நடக்கும்னு நான் நெனைக்கவே இல்லே !
ஏன்
அங்கே பாரேன். டாலர்லதான் டாஸ்ஸே போடறாங்க !

இந்த ஸ்கூல் மினிஸ்டரோடது...
அதுக்காக ஒவ்வொரு பரீட்சைக்கும் அவர் கையால கொஸ்டின் பேப்பரை வெளியிட சொல்றது அவ்வளவு
நல்லாயில்லை !

ஆபரேஷன் தியேட்டர்ல ஏதோ தப்பு நடந்து போச்சுன்னு எதை வெச்சு சொல்றே
பேஷண்ட் ஃப்ரியா நடந்து வெளியே வர்றார்... டாக்டரை வார்டுக்குத் தூக்கிட்டுப் போறாங்களே !

எங்க ஆபீஸ்ல சரியா வேலை செய்யலைனா தரைலதான் உட்காரணும்.
ஏன்

சரியா வேலை செய்யலைனா எங்க மானேஜர் ஸீட்டை கிழிச்சிடுவாரு..!

உங்க பையன் ஸ்கூல்லே தன்னைவிட புத்திசாலியான பையன் ஒருத்தனை கூடவே வெச்சிருக்கான். ஆனாஇ அவனை முன்னேறவே விட மாட்டேங்கறான்...
அவன் பிற்காலத்துல பெரிய அரசியல்வாதியா வந்துடுவான் !

அந்த ஆஸ்பத்திரியில ஆறாம் நம்பர் ரூமும்இ நூறாம் நம்பர் ரூமும் ஆபரேஷன் தியேட்டர்...
ஆறலேயும் சாவு.. நூறுலேயும் சாவுன்னு சொல்லுங்க.

எனக்கு ஆபீஸ்க்குப் போனா டென்ஷன்தான்...
அவ்வளவு வேலையா..
இல்லை... நான் தூங்கறதை எங்க மானேஜர் பார்த்துடுவாரோன்னு.

நான் வெச்சிருந்த விஸ்கி பாட்டிலைத் தூக்கி என் மனைவி கிணத்துல போட்டுட்டா...
அதான் குடி முழுகிப் போனா மாதிரி இருக்கீங்களா

மாமியாரையும் மருமகளையும் ஒரே வீட்டுல வெச்சுக்கிட்டு குப்பைக் கொட்றது ரொம்ப கஷ்டமா இருக்கு...
ஏன்..
வீட்டில ஒரே ஒரு துடப்பமும் முறமும்தான் இருக்கு !
-
நன்றி ஆனந்த விகடன் 7-5-2000

ஏன் அந்த ஆளு பைத்தியக்காரத்தனமா ஒவ்வொரு பஸ்லயும் ஏறி இறங்கி இந்த பஸ் ஒடுமான்னு கேக்குறாரு !
அவரு ஒடற பஸ்ல ஏற மாட்டாராம் !

யோவ் கண்டக்டர் விசில் அடிய்யா ஒருத்தர் பஸ்ல இருந்து தவறி விழுந்துட்டாரு!
சும்மா இருய்யா ! கண்ட இடத்துல விசில் அடிச்சா டிரைவர் என்னைத் திட்டுவாரு!
யோவ் பஸ்ல இருந்து தவறி விழுந்தது டிரைவர் தான்யா !

வீட்டுக்கு வந்த விருந்தாளியை உங்க வீடு மாதிரி நினைச்சுச்சங்கன்னு சொன்னது தப்பாப் போச்சு !
என்னாச்சு .. ..
வீட்டைப் பெருக்கி பாத்திரம் துலக்கி துணி துவைத்து சமையல் வேலையெல்லாம் செய்ய ஆரம்பிச்சுட்டாரு !

நேத்து முதல் ராத்திரியில நடக்கக்கூடாதது நடந்திடுச்சு !
என்னாச்சு தூங்கிட்டியா
எல்லாம் முடிந்தவுடன் பழக்க தோஷத்துல அவள் கையில ஐம்பது ரூபா நோட்டை திணிச்சிட்டு எழுந்து வந்துட்டேன் அவ கோவிச்சுட்டு பொறந்த வீட்டுக்குப் போயிட்டா !

ஏன் இந்தப் படத்துல கதாநாயகன் முட்டையின் மஞ்கள் கரு-வை சாப்பிடுற மாதிரி அடிக்கடி காட்றாங்க
கதையில கருவே இல்லேன்னு யாரும் சொல்லிவிடக் கூடாது பாருங்க அதான்!

<u>கிரிக்கெட்டு சூதாட்ட ஜோக்</u>
நீ இப்ப என்ன தொழில் செய்ற

கிரிக்கெட் மேட்சுக்கான டிப்ஸ் புக் விக்கிறேன்.

அவரை ஏன் போலீஸ் படிச்சுக்கிட்டு போறாங்க
கிரிக்கெட் பெட் எப்படி கட்டுறதுன்னு சொல்லிக்கிட்டு இருந்தாராம்.

அம்பயர் அடிக்கடி ஏன் கையை தூக்கறாரு
ஒரு தடவை தூக்கினா ஒரு லட்சம் தர்றாங்களாம்.

அவர் மட்டும் ஏன் சோகமா இருக்காரு
பின்ன அவர்கிட்ட தோத்திடறோம்னு சொல்லி பணம் வாங்கிட்டு ஜெயிச்சுட்டாங்களாம் !

எனக்கு வந்ததும் சரியில்லை வாச்சதும் சரியில்ல
ஏன் புலம்பற
என் புருஷன் என்னனா குதிரை ரேஸ்ல தோத்துட்டு வர்றாரு என் பையன் கிரிக்கெட் பெட்டிங்ல தோத்துட்டு வர்றான்.

எது எதுக்குதான் போராட்டம் நடத்தறதுன்னு நம்ம தலைவர்க்கு விவஸ்தை இல்லாமப் போச்சு !
ஏன் என்னாச்சு
கடுமையான வெய்யிலைக் கண்டித்து சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போறாராம் !

நீங்க நல்லாத்தானே இருக்கீங்க அப்புறம் எதுக்கு எய்ட்ஸ் இருக்கறதா சொல்லி பொய் சர்ட்டிஃபிகேட் கொடுக்கச் சொல்றீங்க
ஒரு மாசமா என்னோட காதலி கல்யாணம் செய்து கொள்ளலாம்னு தொல்லை பண்றா டாக்டர் !

ப்ளஸ் டூ முடித்த உங்கள் பையனை மெடிக்கல்ல சேர்க்கணும்னு சொல்றீங்களே மிக அதிக மார்க் வாங்கி மெடிக்கல் காலேஜ்ல இடம் பிடிச்சிருவாளா
அட நீங்க வேற அவன் எங்க தேற போறான் சம்பளத்துக்கு மெடிக்கல் ஷாப்ல சேர்க்கப் போறேன்னு சொல்ல வந்தேன் !

பத்து வருஷத்துக்கு முந்தி குடும்பக் கட்டுப்பாடு பண்ணிக் கிட்ட உங்களுக்கு குழந்தை பிறந்திருப்பது எனக்க ரொம்ப ஆச்சரியமாயிருக்கு !
குடும்பக் கட்டுப்பாடு பண்ணிக்கிட்டது என் கணவர் தான் டாக்டர் !

ஏன் நீ ஒரு கவர்ச்சி நடிகையா இருக்கப் போறேன்னு சொல்ற
இந்தக் கடுமையான வெய்யில்ல நீச்சல் உடையிலயே அலையலாமில்ல அதான்!

நேத்து ராத்திரி என் மனைவியை நான் கைநீட்டி அடிச்சுட்டேன் !
ஐயோ அப்புறம் என்னாச்சி
அதுக்குள்ள என் மனைவி என்னை எட்டி உதைச்சிஇ வேலைக்குப் போக நேரமாச்சு எழுந்திரின்னு கனவைக் கலைச்சுட்டா !

நேத்து அவரை கல்யாணம் பண்ணிக்கிட்ட நீங்க 24 மணிநேரம் ஆகறதுக்குள்ள இன்னிக்கு டைவர்ஸ் பண்ணிட்டீங்களே ஏன்

இந்தக் கொளுத்துற வெய்யில் காலத்துல ராஜஸ்தான் சவுதி அரேபியாவுக்கு ஹனிமூன் போகணும்னு அடம்பிடிச்சாரு !

என்ன சார் இது தொப்புள்ல பம்பரம் விட்ட காலம் மாறி இப்ப நெஞ்சுல பம்பரம் விடணும்கறீங்க
நீங்கதானே நெஞ்சுல நிக்கற மாதிரி கேரக்டர் வேணும்னீங்க

என் பல் செட்ல ஏதோ கோளாறு டாக்டர் மாமியார எவ்வளவு கடிச்சாலும் வலிக்கவே இல்லேங்கறாங்க .. ..
சாரி .. சொல்ல மறந்துட்டேன் கடிக்கறப்ப பற்கள் ஈறுக்குள்ள போயிடற மாதிரி உங்க பல்செட்டை செய்யச் சொன்னதே உங்க மாமியார்தான் !

எதுக்கு உங்க நாயோட வாலை கட் பண்ணிட்டீங்க
அதுக்கு ஈகோ அதிகம் அடிக்கடி கண்ணாடியப் பார்த்து தனக்குத்தானே வாலாட்டிக்குது !

ஜெயில்ல இருக்கிற நம்ம பாஸ் அவரை மாதிரியே ஒரு குளோனிங்கை ரகசியமா ஏற்பாடு செய்யுங்கன்னு ஏன் சொல்றாரு
அந்த குளோனிங்கை ஜெயில்ல விட்டுட்டு தலைவரு எங்கேயாவது தப்பி ஓடிடலாம்னு திட்டம் போட்டிருக்காரு !

டாக்டர் ! என் கிட்ட யார் எது கேட்டாலும் எனக்கு கோவம் கோவமா வரும் டாக்டர் !
எதுக்கெல்லாம் கோவம் வரும்
அதைக் கேட்க நீ யாருடா நாயே !
நன்றி குங்குமம் 12-5-2000

தமிழ்நாட்லே அரசியல் நல்லா முன்னேறிடுத்துப்பா
எப்படிச் சொல்றீங்க
முன்னேல்லாம் சென்னையிலே பேரணின்னு கிராமத்திலிருந்து ஆட்களை லாரிலே கொண்டு வருவாங்க.
இப்பெல்லாம் டெல்லியிலே பேரணின்னு ஆளுங்களை சென்னையிலிருந்து ரெயில்ல கொண்டு போறாங்க !

ஆளப் பார்த்தா ஹிரோ மாதிரி இருக்கே .. .. பிச்சை எடுக்க வந்துட்டியே !
அப்படின்னா என்னை வச்சி ஒரு படம் எடுங்களேன் சார்

அந்த விழாவுக்குத் தலைவரை சீப் கெஸ்டா கூப்பிட்டதைத் தப்பா நெனைச்சட்டார் போலிருக்கு
ஏன்
விழாவுக்கு சீப் போடு போறாரே

பெண் பார்க்கப் போன இடத்தில் மாப்பிள்ளை பொண்ணோடு தனியா பேசினாரே
ஆமாம் ! அதுக்கென்ன இப்போ
பொண்ணு கர்ப்பமா இருக்குனு கடுதாசி வந்திருக்கு !

நீலகிரி மாவட்டத்தில் கஞ்சா பயிரிடஇ சாராயம் காயச்ச த.மா.கா.வினர் அனுமதி கேட்டனர்.
- செய்தி
அந்த எம்.எல்.ஏ., முதல்வர்கிட்டே என்ன கேட்டாரு
ப்ரவுன் சுகர் பேக்டரி வைக்க லைசென்ஸ் வேணுமாம் !

அந்த ஆளை எதுக்கு போலீஸ் பிடிச்சிட்டு போகது ..
அரசாங்கத்துக்கு எதிரா அவரு மூலிகை சாராயம் காய்ச்சினாராம் !

என்ன அந்த எம்.எல்.ஏ ரொம்பக் கோபமா இருக்காரு !
கஞ்சா பயிரிட அவருக்கு இலவச மின்சாரமும் கொடுக்கணுமாம் !

கல்லூரி ஜோக்
எல்.ஐ.சி கட்டடத்தோட பதினஞ்சாவது மாடியில சந்தனம் தடவினாங்க ஏன் .
ஏன் ..
ஏன்னா அது மொட்டை மாடி

மழையில் நனையாத காய் எது
எது .. ..
குடை மிளகாய்
இன்னொரு காய் எது
இன்னொரு குடை மிளகாய்

ஒரு படகுல ரெண்டு பொண்ணுங்க போனாங்க திடீர்னு படகு கவுந்துருச்சி ஒரு பொண்ணு மூழ்கிடுச்சு இன்னொரு பொண்ணு மூழ்கலை ஏன்
ஏன் ..
அவ நாட்டுக்கட்டை

பூனைக்கு வலது பக்கத்தில் எலி இருக்கு. இடது பக்கத்தில் பால் இருக்கு பூனைக்கு எது மேல் கண் இருக்கும் ..
பூனைக்கு மூக்கு மேல்தான் கண் இருக்கும் !

சலவைத் தொழிலாளி அவனுடைய பார்த்டேயை எப்படிக் கொண்டாடுவான்
டிட்டர்ஜென்ட் கேக் வச்சு !

டாக்டர் - உங்க உடம்பை ஸ்கேன் பண்ணிப் பார்த்ததில் வயிற்றுக்குள் நிறைய ஸ்பூன் இரக்கு எப்படி வந்தது
நோயாளி - டாக்டர் நீங்கதானே சொன்னீங்க தினமும் மூன்று வேளை ஸ்பூனில் டானிக் சாப்பிடணும்னு !

பார்க்க முடியாத உவைல எது
நுடநஉவசஉவைல !

ஒருவர் - அஞ்சு வாரம் முடிந்து ஆறாவது வாரம் நடக்குது
மற்றவர் - அப்படியா என்ன படம்
ஒருவர் - படமாவது மண்ணாங்கட்டியாவது .. .. ஊரிலிருந்து நீங்க வந்த விஷயத்தைப் பத்திச் சொல்றேன்.

சீக்கிரமா பஞ்சாங்கத்தைக் கொண்டாப்பா
பஞ்சாங்கம் எதுக்கு சாமி
சாம்பாரில் பல்லி விழுந்தால் பலன் என்ன போட்டிருக்குன்னு பார்க்கணும் !

மகன் - அப்பா .. .. எங்க ஸ்கூலில் அப்பாவின் உழைப்பு என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி நடக்கப் போகிறது என்ன எழுதவது
அப்பா - நான் ஆபீஸில் உழைப்பதைப் பற்றி மட்டும் எழுதுஇ வீட்டில் மாவாட்டுவதை எல்லாம் எழுதித் தொலைக்காதே !

அந்த நடிகைக்குச் சீக்கிரம் கல்யாணம் ஆகணும்னு கூட்டுப் பிரார்த்தனை பண்றாங்களா .. ஏன் கல்யாணம் ஆயிட்டா நடிக்க மாட்டாராம் !

ஊர்ல உள்ள உங்க மனைவிக்கு நீங்க செத்துப் போய்ட்டதா ஏன் தந்தி அடிச்சீங்க?
அவ அதிர்ச்சியான விஷயத்தைத் தாங்கமாட்டானு டாக்டர் சொல்லி இருக்கார்

ஒதுக்கப்பட்டோர் முற்போக்கு கூட்டணியா .. .. கேள்விப்பட்டதே இல்லையே ?
எல்லா கூட்டணிகளாலும் ஒதுக்கப்பட்ட கட்சிகளைக் கொண்டு உருான புதுக் கூட்டணியாம் !

தலைவர் எங்கேயாவது அடிவாங்கப் போறாருன்னு எப்படிச் சொல்றே .. ?
எவ்வளவு காலத்துக்குத்தான் பாட்டியைக் கட்டிப் புடிச்சுக்கிட்டு போஸ் குடுக்கறது ஒரு மாறுதலுக்கு வைப்பாட்டியைக் கட்டிப் புடிச்சிக்கிட்டு போஸ் தரட்டுமானு கேட்கறார் !

கண் திருஷ்டியாலத்தான் நம்ம கட்சிக்கு இப்படியெல்லாம் கஷ்டகாலம் வருதுன்னு தலைவரோட ஜோசியர் சொன்னாராம் .. ..
அதுக்காக இப்படியா கொடியில திருஷ்டி பொம்மை போடுறது ?

தலைவர் ரொம்ப அடிமட்டத்துலேர்ந்து வந்தவர்னு நெனைக்கிறேன் எப்படிச் சொல்றே ?
பின்னே ? தேர்தல்ல தனக்கு டிக்கெட் கொடுக்கலைனு தெரிஞ்சவுடனே ஏதாவது பிளாக்ல கிடைக்குமான்னு பார்க்கச் சொல்றாரே !

முப்பது உண்டியல்களைக் கூட்டத்தினரிடையே வசூலுக்கு அனுப்பினோம். இருபத்தெட்டுதான் திரும்பி வந்துள்ளன உண்டியலுடன் எதிர் அணிக்கு ஓடிவிட்ட அந்த இருவரையும் அப்படியே தங்கள் கட்சியிலேயே வைத்துக் கொண்டு உண்டியல்களை மட்டும் திருப்பி அனுப்புமாறு எதிர் அணியினரைப் பணிவோடு வேண்டுகிறோம் !

அன்பே ! வாங்க ஓடிப் போயிடலாம் கூழோ கஞ்சியோ நீங்க ஊத்தறதை நான் சாப்பிட்டுக்கறேன் .. ..
சந்தடிச்சாக்குல சமையல் வேலையை என் தலைலகட்டறே பாத்தியா .. .. !

ஏன்யா துணிதுவைக்கற இடத்துல வந்து பால் இருக்கான்னு கேக்கறியே நியாயமா ?
தப்பா நினைச்சுக்காதீங்க வெளுத்ததெல்லாம் பால்-னு நினைக்கறவன் நான் !

கிசுகிசு எழுதின நிருபரை நம்ம ஹீரோயின் அடிச்சுட்டாங்களாமே !
கிசுகிசு செய்தியில் தன் பெயரை ரசிகர்கள் ஈஸியா புரிஞ்சுக்கற மாதிரி எழுதலியேனுதான் அவங்களுக்குக் கோபம் !

இந்த இங்கிலீஷ் புத்தகம் ஐம்பது ரூபாயா .. .. ? கொஞ்சம் சொல்லிக் கொடுப்பா
சொல்லிக் கொடுக்கத் தெரிஞ்சா நான் ஏம்மா பிளாட்பாரத்துல கடை போடறேன்

அந்த லேடி டாக்டர் தொட்டாலே போதும் அம்பது ரூபாய் வாங்கிடுவாங்க ..
அப்படி ஒண்ணும் அழகா இல்லையே அவங்க

எங்க குடும்பத்துல மொத்தம் இருநூத்துச் சொச்சம் வோட்டு இருக்கு !
அதுக்கென்ன இப்போ ?
அதனால நாங்களே ஒரு புதுக்கட்சி ஆரம்பிச்சு பெரிய கட்சியோட கூட்டு வெச்சுக்கலாம்னு இருக்கோம் !

நீங்க ஒரு காரியம் பண்ணணுமே டாக்டர் .. ..

நான் ஆபரேஷன் வரைக்கும் மட்டும்தான் பண்ணுவேன் காரியம் எல்லாம் என்னால பண்ணமுடியாது

புத்திசாலியா இருந்தாலே பிரச்சனை சார் என் செருப்பு அறுந்து போயிடுது !
புத்திசாலியா இருந்தா எப்படி செருப்பு அறுந்து போகும் ?
என் புத்தியை அடிக்கடி செருப்பால அடிச்சுப்பேனே !

பவர்கட்டைச் சமாளிக்க லட்ச ரூபாய் செலவு செய்ததா கணக்கு எழுதி எங்க ஆபீஸ் மானேஜர் மாட்டிக்கிட்டார் .. !
ஏன் ஜெனரேட்டர் வாங்கி இருந்தாரா ?
இல்லே மொத்தமே அவர் வாங்கினது முப்பது கைவிசிறியும் நூறு மெழுகுவத்தியும்தான் !

நெட்ஜோக் !
கசாப்புக்கடை மூடுகிற நேரத்தில் வாயில் துண்டுச்சீட்டும் கழுத்தில் தொங்கவிட்ட பையுமா ஒரு நாய் வந்தது.
சீட்டைப் படித்து இறைச்சி அறுத்துக் கொடுத்த கடைக்காரனுக்குக் காசை எண்ணிக் கொடுத்துவிட்டு நகர்ந்தது.
ஆச்சரியம் தாங்காத கடைக்காரன் நாயைத் தொடர்ந்து போக அது ஒரு பஸ் ஸ்டாப்பில் நின்றது. ஒவ்வொரு பஸ் வரும்போதும் முன்னால் போய் பஸ் நம்பரைப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்து ஏழாம் நம்பர் பஸ் வந்தபோது தாவிக் குதித்து ஏறியது கடைக்காரனும் ஏறிக்கொண்டான்.
சரியான சில்லறை கொடுத்து டிக்கெட்டும் வாங்கி விட்டு வாயில் இறைச்சிப் பொட்டலத்தோடு ஆறாவது ஸ்டாப்பில் இறங்கியது நாய். கடைக்காரன் பின்தொடர்ந்தான்.
சந்து பொந்தெல்லாம் புகுந்து ஒரு வீட்டு வாசலில் நாய் நின்றது. உள்பக்கமாகத் தாழ்ப்பாள் போட்டிருக்கஇ நாய் தொடர்ந்து கதவைப் பிறாண்டியது. சற்றுப் பொறுத்து உள்ளே இருந்து வந்தவன்இ அதைக் கன்னா பின்னாவென்று திட்டினான். ஞயோவ் இத்தனை புத்திசாலி நாயை ஏன்யா திட்டறேஞ என்ற கடைக்காரன் பொறுக்க முடியாமல் கேட்டான். ஞபுத்திசாலியா இதுவா வெளியே போகும்போது மறக்காம சாவியை எடுத்துட்டுப்போ திரும்பி வரும்போது கதவைப் பிறாண்டி என் உயிரை வாங்காதே-னு எத்தனை தடவை சொன்னாலும் இதோட மண்டையிலே எறமாட்டேங்குதே இதுவா புத்திசாலி !ஞ

என்ன தலைவர் எல்லோரையும் இந்த அடி அடிக்கிறாரு ?
அவரோட பலத்தை நிரூபிக்கச் சொன்னதைத் தப்பா புரிஞ்சுக்கிட்டாரு !

நம்ம தலைவியோட கட்சி ஆபீஸுக்கு முன்னாடி இவ்வளவு வெளிநாட்டுக்காரங்க நிக்கறாங்களே ஏன் ?
அவங்கல்லாம் எதிர்க்கட்சித் தலைவர்கள் அவங்க நாட்டுல உள்ள ஆளுங்கட்சியைக் கலைக்கத் தர முடியுமான்னு கேட்க வந்திருக்காங்க !

இதென்ன குழந்தைகளுக்கு கொய்யாசிங்இ ஜீம்மாலால்னு பேர் வைக்கிறாரு தலைவர்
வடமாநில கட்சியோடு கூட்டுவெச்சிருக்காரே !

நம்ம தலைவருக்குப் பொருளாதாரம் பத்தி ஒண்ணுமே தெரியலையே ஏன் ?
பணவீக்கத்தைக் குறைக்கறதுக்கு அயோடெக்ஸ் தடவலாம்னு பேசியிருக்காரு !
- நன்றி ஆனந்த விகடன் 30-5-99

ஏகப்பட்ட நாய்கள் அவரைச் சுற்றி நிற்குதே .. ?
நான் சொல்லலை அவரு பதினெட்டு ஞபட்டிஞக்குச் சொந்தக்காரருன்னு.

ரப்பர் வியாபாரியை டி.வி சீரியல் டைரக்ட் பண்ணச் சொன்னது தப்பாப்போச்சு
ஏன் .. .. ?
இழு இழுன்னு இழுக்கறார்.

பிரிஸ்கிரிப்ஷன்ல ரெண்டு ஜோக் புக்கும் எழுதி தர்றீங்களே ஏன் டாக்டர் ?
உங்களுக்குத் தெரியாதா வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்னு !

எதுக்கு தூங்கிக்கிட்டிருக்கிற உன் கணவரை அலாரத்தை எடுத்து அடிச்சே ?
அலாரம் அடிச்சாத்தான் அவர் எழுந்திரிப்பாரு !

தரகரா இருந்தே பத்து பங்களா வாங்கிட்டீங்களா ? கல்யாணத் தரகரா ? வீட்டுத் தரகரா ?
கிரிக்கெட் தரகர்.

அட பாபுவோட தாத்தாவா ? நீங்க செத்துப் போனதா உங்க பேரன் லீவு வாங்கிட்டுப் போனானே !
நீங்கதான் அவன் கிளாஸ் டீச்சரா ? நீங்க செத்ததுக்குத் தான் ஸ்கூல் லீவுன்னு சொன்னானே !

டாக்டர் நீங்க மருந்து சீட்டுல எழுதிக் கொடுத்த ஒரு மருந்து மட்டும் மெடிகல் ஷாப்ல உள்ளவங்களுக்குப் புரியலே யோவ் அது மருந்து இல்லையா என்னோட கையெழுத்து !

என்ன போஸ்ட்மேன் தபாலுக்கு பதிலா பணம் தர்றீங்க மணியார்டரா ?
இல்ல சார் நீங்க அனுப்புற கதை எல்லாம் திரும்பி வந்துகிட்டே இருக்குது அதான் நானே பழைய பேப்பர்க்கு அதையெல்லாம் போட்டுட்டு பணம் கொண்டு வந்தேன்.

தலைவர் கையையும் காலையும் முறிச்சுட்டாங்களே ஏன் ?
ஊனமுற்றோர் நிதின்னு வசூல் பண்ணிட்டு கணக்கு காட்டலையாம் !

டெஸ்ட் பண்ணவே வேண்டாம் டாக்டர் எனக்கு வந்திருப்பது நிச்சயம் மெட்ராஸ் ஐ தான்.
எப்படி கன்ஃபார்மா சொல்றீங்க ?
உங்க கண்ணும் திடீர்னு சிவக்க ஆரம்பிக்குது பாருங்க
நன்றி குமுதம் 18-5-2000

பால்காரரை காதலிக்கிறதா சொன்னே .. ஆனா அவர் லாண்டரிகாரராச்சே
ஆமாண்டீ வெளுத்ததெல்லாம் பாலுன்னு நெனச்சுட்டேன் .. !

ராப்பிச்சையை கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பா போச்சா .. ஏன் ?
நைட் ஆனா கௌம்பிடுறாரு .. !

உங்க வாழ்க்கையில் திருப்புமுனை எது ?
ஸ்குரு டிரைவர்தான் !

உடம்பு இளைக்கறதுக்காக ஏதாவது முயற்சி செய்யக் கூடாதா ?
அதனால உனக்கென்ன ?
நாலுபேர் மத்தியில தூக்கி வைச்சுப் பேச முடியலையே !

நாளைக்கு மீட்டீங்ல தமிழ் எழுத்து எல்லாத்தையும் அறிவிக்கப் போறேன் எதுக்கு தலைவா ?
எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்னு சொல்றாங்க நாமளும் கடவுள் ரேஞ்ஜுக்கு ஆகிடலாம்னுதான் !

உங்க பையன் கமல் ரசிகனா ?
ஏன் ?
சுத்தம் சுகம் தரும்னு எழுத சொன்னா முத்தம் சுகம் தரும்னு எழுதுறான் !

உங்களுக்கு முன்னாடியே உங்க பையன் சிகரெட் பிடிக்கறானே சார் ..
சீ.. .. சீ .. .. ! அவன் பிடிக்கறதுக்கு முன்னாடியே நான் பிடிக்க ஆரம்பிச்சுட்டேன் !

நான் கறுப்புப் பூனை படையைச் சேர்ந்தவன்தான் அதக்காக தலைவர் தன் வீட்டிலுள்ள எலிகளையெல்லாம் பிடிக்கச் சொல்வது நல்லா இல்லை !

ஊழல் பண்ணிட்டதா சொல்லி அம்பயரை ஏன் கைது பண்ணிட்டுப் போறாங்க?
இதுவரை டாஸ் போட்ட நாணயத்தை எல்லாம் அமுக்கிட்டாராம் !

பூக்கடைக்காரார் பொண்ணை கல்யாணம் பண்ணினது தப்பாப்போச்சு !
ஏன் ?
எது சொன்னாலும் நார் நாரா கிழிச்சிடுவேன்ன பயமுறுத்தறா !
நன்றி இதயம் பேசுகிறது 14-5-2000

பள்ளிக்கூட வாத்தியாரா இருந்தவர்தான் இங்கே போலி டாக்டரா இருக்கார்னு எதை வெச்சு சொல்றே ?
டெஸ்ட் ரிசல்ட் கேட்டா அடுத்த மாசம் பேப்பர்ல வரும்னு சொல்றாரே !

<u>நெட் ஜோக்</u>
ரொம்ப கவலையா இருக்கே போலிருக்கு என்னாச்சு ? முகம் தொங்கிப்போய் வந்த அவனைக் கனிவோடு விசாரித்தான் நண்பன்.
நான் அப்பாவாகப் போறேன் ! என்ற அவனது பதிலில் சோகம் முழுமையாக ஆக்கிரமித்திருந்தது.
வாவ் சந்தோஷமான சமாசாரமாச்சே ! இதுக்குப் போய் ஏண்டா கவலைப்படறே
என்ன சந்தோசமான சமாசாரம் ? இந்த விஷயம் இன்னும் என் பெண்டாட்டிக்குத் தெரியாது !

டாக்டர் ! நான் நூறு வயசு வரைக்கும் இருப்பேன்னு ஜோசியர் சொல்லி இருக்காரு.
அப்ப சரி நானா ஜோசியரான்னு ஒரு கை பார்த்துடுவோம்.

உங்க ஊர்ல இவ்வளவு தண்ணி கஷ்டமா ?
ஏன் கேட்கறீங்க ?
ஓட்டல்ல காசு இல்லாம தண்ணி குடிச்சதுக்கே மாவாட்ட சொல்லிட்டாங்க !

அதோ போறாங்களே அவங்ககிட்ட நிறைய விடியோ காஸெட், காமிரா எல்லாம் இருக்கு
விடியோ கடை வெச்சு இருக்காங்களா ?
ஊஹூம் ஆசிரமம் வெச்சு நடத்தறாங்க .. . !

அந்த ஆசிரமத்துல இருக்கிற நாய் ஏன் பயங்கரமா குரைக்குது ?
அதுவா யாரோ நிஜ சாமியார் உள்ளே நுழைஞ்சிருக்காராம் அதான் !

இந்த ஆசிரமத் தலைவியை யாரும் போலின்னு கைது செய்ய முடியாது .. ..
ஏன் .. .. நிஜமான ஆசிரமமா ?
ஊஹூம் போலி ஆசிரமம்னே தைரியமா போர்டு வெச்சிருக்காரே !

அந்தப் போலி பெண் சாமியார் பயங்கர முன் ஜாக்கிரதைப் பேர்வழி போல இருக்கு
எதை வெச்சு சொல்றே ?
ஆசிரமத் திறப்பு விழாவான இன்னிக்கே முன்ஜாமீனுக்கு விண்ணப்பிச்சு இருக்காங்களே !

சார் சம்பளம் போற மாட்டேங்குது மாசக் கடைசியானா ரொம்ப கஷ்டமா இருக்கு
சரி அடுத்த மாசத்துலேர்ந்து இருபதாம் தேதியே சம்பளம் வாங்கிக்கங்க .. !

படம் பார்க்கறதுக்காக நீச்சல் கத்துக்கறீங்களா எதுக்கு ?
நான் போறது அலைபாயுதே

ஒரு தடவை பார்த்தாலே ரெண்டு தடவை பார்த்தேன்னு சொல்லிக்கலாம் அது எந்தப் படம் சொல்லு ?
எது ?
கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன் !

யுவர் ஆனார் என் சார்பா வாதாட வக்கீல் யாரும் இல்லை ..
அதுக்காக .. .. ?
நீங்களாவது என் சார்பா தீர்ப்பு சொல்லக்கூடாதா ?

தண்ணியில் வாழும் உயிரினம் மூன்று கூறு ?
தவளை., மீன், எங்கப்பா

டாக்டர் அந்த 10-ம் நம்பர் பேஷண்ட் தெர்மாமீட்டரை முழுங்கிட்டாரு !
அப்படியா ஒரு ஸ்கேன் எடுத்து தெர்மாமீட்டர்ல என்ன டெம்பரேச்சர் காட்டுதுன்னு பார்த்துடுங்க !

சர்வர் .. .. எல்லா டேபிள்லயும் ஒரு அயர்ன்பாக்ஸ் இருக்கே எதுக்கு ?
தோசை சூடு பத்தலைன்னா அயர்ன் பண்ணிக்கலாம் !

உன் மனைவிக்கும் உங்கம்மாவிக்கும் சண்டை வந்தா நீயும் உங்கப்பாவும் எந்த பக்கம் இருப்பீங்க ?
நான் வாசல் பக்கமா எங்கப்பா கொல்லைப் பக்கமா !

சின்ன ஆபரேஷன்தான் பயப்பாடதீங்கனு நர்ஸ் ஆறுதல் சொன்னாங்க !
பரவாயில்லையே !
ஆறுதல் சொன்னது எனக்கு இல்லை ஆபரேஷன் பண்ணப் போற டாக்டருக்கு !

எங்க அப்பா இனிமே என்னைத் தண்டச்சோறுன்னு திட்ட முடியாது !
ஏன் எங்கேயாவது வேலைக்குப் போறியா ?
இல்ல வீட்டுல இப்பல்லாம் டிபன்தான் சாப்பிடறேன் !

அரசியல்வாதி பேச்சில் இருந்து
எனக்குன்னு ஒரு நேர்மை , கொள்கைனு வெச்சிருக்கேன் ஒரு கூட்டணியிலே இருப்பேன் அது இல்லைன்னு
ஆனப்புறம் தான் இன்னொண்ணுக்குப் போவேன் அங்கேயும் சரிப்பட்டு வரலேன்னா மூணாவது அணிப் பக்கம்

திரும்புவேன் ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம் எந்த நிலைமையிலும் ஒரே சமயத்தில் ரெண்டு கூட்டணியில இருக்க மாட்டேன். அது அரசியல் நெறியில்லே !
நன்றி ஆனந்தவிகடன் 14-5-2000

எங்க வீட்டு வேலைக்காரிகிட்ட கவலையை விடு எதிர் காலத்தைப் பத்தி கவலைப்படாதேன்னு சொன்னது தப்பாப் போச்சு
ஏன் என்னாச்சு ?
எங்க வீட்டுக்காரர் அவகிட்ட பழகறதைப் பாத்தா எங்கே என் எதிர்காலம் போயிடுமோன்னு பயமா இருக்கு

ஏண்டி அவர்தான் ஆம்பளை அப்படி நடந்துகிட்டாரு நீ என் தடுக்கலை ?
நீங்கதானே நாங்க சொல்றதை எல்லாம் தட்டாம கேட்டு நடந்தா சம்பளம் சேத்து தாரேன்னு சொன்னீங்க.

என் கணவருக்கும் எங்க வீட்டு வேலைக்காரிக்கும் தொடர்பு இருக்குமோனு சந்தேகமா இருக்கு.
எதை வைச்சு அப்படிச் சொல்றே ?
நான் என் கணவரைத் திட்டினா மனசை சரியில்லைன்னு அன்னிக்கி லீவு எடுத்துக்கிட்டு போயிடுறான்னா பாருங்களேன்.

நம்ம வேலைக்காரிக்கு ரொம்பதான் திமிர் .. .. ?
எப்படிச் சொல்றே ?
நாம இரண்டு பேரும் எப்பம்மா சக்களத்தி சண்டை போடுறதுன்னு கேட்கிறாங்க.

உங்க கணவரது மூக்குக் கண்ணாடியை திடீர்னு ஏன் மறைச்சி வெக்கிறே ?
எங்க வீட்டு வேலைக்காரி இப்ப குனிஞ்சு பெருக்கப் போறா

எல்லாரும் காதலிக்கு வளையல் சுண்டல்னு வாங்கித் தருவாங்க நீங்க மட்டும் ஏன் தேங்கா பழம் ஊதுபத்தி வாங்கிட்டுவரீங்க ?
நம்ம காதல் தெய்வீகமானதாச்சே.
நன்றி குங்குமம் 19-5-2000

அவன் வித்தியாசமான பக்தன்னு எப்படிச் சொல்றே ?
திருப்பதிக்கு மொட்டைக் கடுதாசி போடுறேன்னு வேண்டியிருக்கான் !

உங்க வீட்ல தொங்கிட்டு இருக்கற ஸ்டார் ஏன் கறுப்பா இருந்தது ?
அது சூப்பர் ஸ்டார் !

<u>அரசியல் ஜோக்</u>
எங்க கூட்டணியில் யார் பிரதமர் என்பது முக்கியமல்ல புது பிரதமரை யார் கவிழ்க்கப் போகிறார்கள் என்பதே முக்கியம் !

தலைவர் வாசல் வழியாப் போய் வோட்டுக் கேட்காமல் ஏன் ஜன்னல் வழியா கேட்கிறார் ?
ஊழல் வழக்கில் ஜெயிலுக்குப் போனதிலிருந்து இந்தப் பழக்கமாம் !

ஒரு மதிப்பா இருக்கட்டுமேனு பத்து ஸீட் கேட்டேன் கொடுத்துட்டாங்க !

சந்தோஷடான விஷயம்தானே .. ..
அட, நீங்க ஒண்ணு கட்சியில இருக்கறதே நான் ஒருத்தன்தானே மத்த ஒன்பது வேட்பாளருக்கு நான் எங்கே போவேன் .. ?

ரத்தத்தின் ரத்தமேன்னு கூப்பிட்டது தப்பாப்போச்சு
ஏன் ?
இப்ப நம்ம கட்சி பல குரூப்பா பிரிஞ்சுடுச்சு !

தலைவரே இவர்தான் பிரபல ஸ்டண்ட் மாஸ்டர்
கரி .. .. இவரை எதக்கு அலைச்சிட்டு வந்தே ?
இந்த முறை நாம ஜெயிக்கணும்னா ஏதாவது எலெக்ஷன் ஸ்டண்ட் அடிக்கணும்னு சொன்னீங்களே .. .. !

என் பையனுக்கு டாக்டர் ஸீட்டும் என் கணவருக்கு எம்.பி ஸீட்டும் கிடைச்சுடுச்சு
அப்ப பையன் படிப்புக்கு பணப் பிரச்னை வராதுன்னு சொல்லு !

இந்தப் பிச்சைக்காரனை எதுக்கய்யா இங்க அழைச்சிட்டு வந்திருக்கே ?
வோட்டு கேட்கப் போகும்போது தொகுதி முழுக்க அறிமுகமான ஒரு நபர் கூட வரணும்னு நீங்கதானே சொன்னீங்க !

நான் கொடுத்த ராஜினாமா கடிதத்தைக் கட்சி மேலிடத்துல வாங்க மறுத்துட்டாங்க !
ஏன் ?
பதவியில இருக்கறவங்கதான் அதெல்லாம் கொடுக்கணுமாமே !

<u>நெட் ஜோக்</u>
எண்பது வயதான தாத்தா டாக்டரிடம் மெடிக்கல் செக்-அப்புக்காகப் போனார். பரிசோதித்து விட்டு டாக்டர் சொன்னார் உங்க உடம்புலே ஒரு கோளாறும் இல்லே இந்த வயசிலே எப்படி உங்களாலே இப்படி இருக்க முடியுது ?
அதுக்குக் காரணம் கடவுள் எப்பவும் என்னோடு இருக்கறதுதான் என்று தாத்தா பெருமையோடு சிரித்தார்.
டாக்டர் உங்களுக்குத் தெரியுமா நேற்று ராத்திரி தூக்கத்திலே இருந்து எழுந்து டாய்லெட்டுக்குப் போனேன் பாத்ரூம் கதவைத் திறந்ததும் டக்குனு லைட் எரியுது முடிச்சுட்டு வெளியே வந்து கதவைச் சாத்தினா தானே லைட் ஆஃப் ஆயிடுத்து எனக்காக இதை யாரு செய்திருப்பாங்கன்னு நெனைக்கிறீங்க ? கடவுள்தானே ?
தாத்தாவை அனுப்பிவிட்டுப் பாட்டிக்கு போன் செய்தார் டாக்டர் உங்க வீட்டுக்காரர் உடம்பு ஆரோக்கியமாத்தான் இருக்கு ஆனா மனநிலை பற்றித்தான் கொஞ்சம் சந்தேகம் என்ற ஆரம்பித்து தாத்தா பெருமை அடித்துக் கொண்டதை அப்படியே ஒப்பித்ததார் டாக்டர்.
பாட்டி போனில் கத்தினாள் அடக் கடவுளே அப்போ நேத்து ராத்திரி ஃப்ரிஜ்ல ஒன்பாத்தும் போய் வெச்சது அந்த மனுஷர் தானா ?

கார் ஓட்டக் கத்துக்கறதா சொன்னீங்களே .. இன்னும் முழுசா கத்துக்கலையா ?
இல்லே கொஞ்சம் கொஞ்சமா இப்பத்தான் கத்துக்க ஆரம்பிச்சிருக்கேன் !
இப்போதைக்கு என்ன கத்துக்கிட்டிருக்கீங்க .. ?
ஹாரன் எப்படி அடிக்கறதுன்னு !

பக்கத்து வீட்டுக்காரி காபி சாப்பிடணும்னா அதுக்காக எதைத்தான் இரவல் கேட்கறதுன்னு இல்லியா ?
காபி போடியா, சர்க்கரையா எதை இரவல் கேட்டாங்க ?
ரெண்டும் இல்ல காபி போட்டுத்தர அஞ்சு நிமிஷம் என் கணவரை இரவலா அனுப்பணுமாம் !

நாங்கதான் கல்யாணத்துக்கு முன்னாடியே சொல்லிட்டோமோ பையன் ரொம்ப சிக்கனம்னு .. ..
இருக்கலாம் அதுக்காக ஹனிமூனுக்குகூட பெண்ணை விட்டுட்டு தனியாப் போறேன்னு செல்றது நல்லாயில்லே !

நான் மனசு வெச்சா அந்த மார்வாடி கடைல எவ்வளவு வேணம்னாலும் கடன் வாங்குவேன் !
நகையை வெச்சாதானே கடன் கொடுப்பாங்க மனசை வெச்சாக் கூடவா கொடுப்பாங்க ?
நன்றி ஆனந்தவிகடன் 20-6-99

வீடு கட்ட லோன் வாங்கின பணத்துல இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கிட்டியாமே நிஜமா?
இப்போதைக்கு சின்ன வீடு போதும்னு ஜோசியர் சொன்னார்..

வெயில் காலம் வந்தால் உனக்குப் பைத்தியம் பிடிக்குமாமே உண்மையா?
எந்த நாய் அப்படி சொல்லிச்சி...

நான்தான் சொன்னேனே என் கணவர் பழசையெல்லாம் மறக்க மாட்டாருன்னு..
அதுக்குன்னு 1960-ம் வருஷக் காலண்டரை இன்னும் வீட்ல மாட்டி வச்சிருக்கறது நல்லாயில்லை..

உங்க படத்துல இடைவேளையப்போ தேவையில்லாம் ஒரு குண்டு வெடிப்புக் காட்சி வருதே எதுக்கு?
நல்லா தூங்கிட்டிருக்கிற எல்லோரையும் எழுப்பி விடத்தான்..

ஆப்பரேஷனில் உங்க மாமியார் பிழைச்சுட்டாங்க..
எதுக்கும் இன்னொரு தரம் ட்ரை பண்ணிப் பாருங்க டாக்டர்..

சினிமா பாடலாசிரியரை கல்யாணம் செஞ்சிக்கிட்டது தப்பா போயிடுச்சு..
ஏன்..
அவர் பேசறது கூட ஒண்ணும் புரிய மாட்டேங்குது..

அந்த காதல் ஜோடிக்கு கல்யாணம் பண்ணி வைச்சது தப்பாப் போச்சு ஏட்டையா..
ஏன் சார்..
இப்போ வளைகாப்பு பண்ணி வையுங்கன்னு வந்து நிக்கிறாங்க..

எனக்கு குழந்தை இல்லை..
டாக்டரைப் பார்க்க வேண்டியதுதானே..
பார்த்தேன்.. கல்யாணத்துக்கு அப்புறம்தான் பிறக்கும்ன்னு சொல்லிட்டார்..

உங்க கணவருக்கு எங்காவது ஓடிப்போகனும்னு போல தோணிக்கிட்டே இருக்காம்.. கவலைப் படாதீங்க..
குணப்படுத்திடலாம்..
சரி பண்ணமுடியுமான்னு பாருங்க.. இல்லை.. என்னையும் இழுத்துட்டு ஓடறமாதிரி மருந்து குடுங்க..

பாயாசத்தில் பந்து கிடக்கே..
இது பால் பாயாசம்..

<u>செய்தி</u>
<u>சிங்கம், புலி, குதிரை ஆகியவற்றை சர்க்கஸில் பயன்படுத்தக் கூடாது என்று ஹை-கோர்ட் உத்தரவிட்டுள்ளது.</u>
எதுக்கு அந்த டைரக்டரை அரஸ்ட் பண்றாங்க.. வில்லன் ஐநூறு குதிரையோட காலை உடைக்கற மாதிரி
எடுத்தாராம்..

என்ன.. புலி வரும்னு பார்த்தா பூனைதான் வருது..
புலியை சர்க்கஸில் பயன்படுத்தக்கூடாதுன்னு சொல்லிட்டாங்கல்ல..

<u>செய்தி கோவை சிறையில் கைதிகள் கேரம், செஸ், சீட்டு விளையாடுகிறார்கள்..</u>
அந்த ரெண்டு கைதிகளும் எப்படி தப்பிச்சிப் போனாங்க..

ரெண்டு பேரும் ஓட்டப்பந்தயம் விளையாடனும்னு பர்மிஷன் கேட்டாங்க சார்.. பர்மிஷன் கொடுத்தேன்..

என்ன எல்லா கைதிகளும் ஜெயில் மொட்டை மாடிக்கு போகனும்னு சொல்றாங்க..
அவங்களுக்கு காத்தாடி விடனும்னு ஆசையாம்..

கல்யாணப் பெண்ணைப் பார்த்தா கொஞ்சம் வயசான மாதிரி தெரியுது..
நீங்க சத்திரம் மாறி வந்திட்டீங்க போல.. இங்க நடக்கறது 60-ம் கல்யாணம்..

எட்டு மாசத்துக்கப்புறம்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு சொல்றீங்களே, என்ன காரணம்..
டெலிவரி டைம் அப்படதானே..

டாக்டர் 22-ம் நம்பர் ரூம்ல வச்சிருந்த பாடியைக் காணல.. டாக்டர்..
சரி சரி கவலைப் படாதே புதுசா ஒண்ணு நானே வாங்கித் தரேன்..
- நன்றி **இதயம் பேசுகிறது.**(21.5.2000)

என் சம்பந்தி அரைகுறையா எதையோ தெரிஞ்சுக்கிட்டு என் பொண்ணுக்கு வைரஸ் கல் மூக்குத்தி ஒண்ணு செஞ்சி போட சொல்றாராம்..

கம்ப்யூட்டர் இல்லாமலேயே எப்படி சார் உங்க வீட்ல காதல் வைரஸ் வந்தது..
என் பொண்ணு கல்யாணமாகாமலேயே இப்போ மூணு மாசம் சார்..

கம்ப்யூட்டர்களை தாக்கி இருக்கிற வைரஸ் போரு ப்ளேக்னு எப்படி முடிவா சொல்றீங்க.
எல்லா கம்ப்யூட்டருக்குமே மௌஸ் தொடர்பு இருக்கே.. அதான்..

இருபது வருஷமா சவ்வு மிட்டாயை வித்தவருக்கு திடீர் யோகமா.. எப்படி?
அவர் அனுபவத்தைப் பார்த்து மெகா சீரியஸ் எடுக்க சான்ஸ் கொடுத்திருக்காங்க..

அடுத்ததாக நம் தலைவர் கட்சியில் துரோகம் செய்த சில முக்கிய புள்ளிகளை மேடையிலிருந்து தூக்கியெறிய இருப்பதால் அருகில் அமர்ந்துள்ள அணைவரும் சற்று தள்ளி அமர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்..

பக்கத்துலே வீட்டை வச்சிக்கிட்டு ஓட்டல்லே சாப்பிடறீங்களே..
ரெண்டு டம்ளர் தண்ணிகிடைக்குதில்லையா அதான்..

என் காதலர் வரம்பு மீறிப் போறார்..
அய்யய்யோ..
நீ நினைக்கறமாதிரி இல்லை.. பீச்சுக்கு நான் வர்றதுக்குள்ள அவர் கையில் இருக்கிற காசுக்கு பூரா எதையாவது வாங்கி தின்னுடறார்..

அரசே.. நம் படைத் தளபதியை கைது செய்யச் சொல்லுங்கள்..
ஏன் அமைச்சரே..
போர் ஃபிக்ஸிங் செய்து தோற்றிருக்கிறார்..

அந்த டீ.வி நாடகம் மெகா சீரியலா இருக்கலாம். அதுக்குன்னு இப்படியா..
ஏன்..
அந்த நாடகத்துல கதாநாயகி ரெண்டு வருஷமா கர்ப்பமாவே இருக்காங்க.

முதல்ல விளம்பரத்துல நடிச்சி பின்னால சினிமால புகுந்து பிறகு அரசியலுக்கு போய் அப்புறமா ஆசிரமம் ஒண்ணு ஆரம்பிச்சி... . . .
கடைசியா ஜெயிலுக்கு போகப் போறே.. அவ்வளவுதானே..

நெட் ஜோக்.
அவன் தற்கொலை செய்து கொள்வதாக முடிவு பண்ணினான். விஷம் அருந்தலாமா.. தூக்கில் தொங்கலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தவனுக்கு, கடைசியில்.. ரெயில் முன் பாய்வதுதான் சரியான ஐடியாவாக தோன்றியது..

தெரிந்தவர்கள், நண்பர்கள் எல்லாருக்கும் தன் முடிவைச் சொல்லிவிட்டு, ஒரு நாள் சாயந்திரம் ஏகப்பட்ட மூட்டை முடிச்சுகளோடு புறப்பட்டான். அத்தனை மூட்டைகளிலும் சிக்கன், மட்டன் என்று அசத்தலான சாப்பாட்டு அயிட்டங்கள்!
பார்த்தவர்கள் வியந்தார்கள்.
ஆமா.. ரெயில்ல பாய்ஞ்சு தற்கொலை பண்ணிக்கப் போறேன்னு சொல்றே.. அப்புறம் எதுக்கு இத்தனை சாப்பாடு மூட்டைகள்?
அவன் சொன்னான்.. சரியாப் போச்சு போங்க..! அந்த வெவஸ்தை கெட்ட ரயில் லேட்டா வந்துச்சுன்னா, பசியிலேயே நான் செத்துடமாட்டேனா?

நான் எடுத்துட்டுருக்கற சினிமாப் படத்தோட டைட்டில் ரொம்ப வித்தியாசமானது !
அப்படி என்ன டைட்டில் வச்சிருக்கீங்க .. .. !
நான் தான் சொன்னேனே .. .. ரொம்ப வித்தியாசமானது-ன்னு .. !

சர்வரைக் கட்டிக்கிட்டது தப்பாப் போச்சா ஏன் ?
சாப்பாடு பரிமாறிட்டு என்னிடமும் டிப்ஸ் கேட்கிறார். !

என் பையன் சின்ன சின்ன விஷயங்களுக்கெல்லாம் சத்தியம் செய்யறான். அவன் மனநோயை நீங்கதான் குணப்படுத்தணம் டாக்டர் !
அப்படியா .. .. நான் குணப்படுத்தணம் டாக்டர் !
சத்தியமா குணப்படுத்துவீங்களா ?

டாக்டர் எனக்கு ஜலதோஷத்தால் மூக்கிலிருந்து தண்ணியா கொட்டுது !
அப்படியா நல்லதாப் போச்சு ! இந்தக் கோடையைச் சமாளிச்சுடுவீங்க !

என்னதான் லோ பட்ஜெட் படம்னாலும் இப்படியா ?
என்ன ஆச்சு .. ?
காதல் தோல்வியிலே கதாநாயகி சைக்கிள் முன்னாலே விழுந்து தற்கொலை பண்ணிக்கிறாளாம் !

டாக்டர் அந்த பேஷண்ட் தனக்கு ஏற்பட்ட காயத்தைப் பத்தி ஒண்ணுமே சொல்லமாட்டேங்கறார் !
ஏன் சிஸ்டர் ?
அவருக்கு ஏற்பட்டது ஊமைக் காயமாம் !

எனக்கும் என் மனைவிக்கும் பிரச்சினை டாக்டர் !
அதுக்கு நான் என்ன பண்ண முடியும் ?
உங்ககிட்ட ஆபரேஷன் பண்ணிக்கிட்டா எந்தப் பிரச்சினையும் வராதுன்னு நீங்கதானே சொன்னீங்க ?

கையில் வெண்ணெய் இருக்க நெய் தேடி அலையக் கூடாதுண்ணு பக்கத்து வீட்டுப் பையனுக்கு அட்வைஸ் பண்ணினது தப்பாப் போச்சு
ஏன் - என்ன ஆச்ச ?
என் பொண்ணை இழுத்துக்கிட்டு ஓடிப் போயிட்டான்.

மரணப் படுக்கையில் இருந்த என் தாத்தா முன்னாள் கிரிக்கெட் பிளேயர்னு எப்படிக் கண்டுபிடிச்சீங்க ?
பணத்தைக் கொடுத்ததும் அவுட் ஆயிட்டாரே !

அந்தாளு போலி டாக்டர்ங்கிறியா ? எப்படி ?
முகமெல்லாம் படை மாதிரி இருக்கு ஏதாவது கிரீம் எழுதிக் தாங்கன்னு கேட்டா ஐஸ் கிரீம்-னு எழுதிக் கொடுத்திருக்காரு !

என்ன டைரக்டர் சார் டைனிங் டேபிள்ல முட்டையும் பாலும் வச்சிருக்கீங்க ?
இந்த சீன்ல ரெண்டு பாம்புங்க சாப்பிட்டுக்கிட்டே பேசிக்கிற காட்சி எடுக்கப் போறோம் !

நானும் லீலாவும் லவ் பண்றது வெல்டிங்க ஷாப் குமார்க்குத் தெரிஞ்சு போச்சுடா !
அய்யய்யோ அப்புறம் என்ன ஆச்சு !
எங்க ரெண்டு பேர் வீட்டுலேயும் போய் பத்த வைச்சுட்டான் !

ஊஞ்சலாடுவது என் பொழுது போக்கு என்கிறார் உங்கள் மனைவி உங்களுக்கு என்ன பொழுதுபோக்கு ?
ஊஞ்சலாட்டுவது !

பௌலர் பால்காரா ?
ஏன் அப்படிக் கேட்கறே ?
பால் போடச் சொன்னா பசும்பாலா, எருமைப்பாலா-னு கேட்கறார் !

நான் எடுக்கிற டி.வி சீரியல்ல பிந்துகோஷ்தான் ஹீரோயின் .. ..
மெகா சீரியல்னு சொல்லுங்க !

என்னங்க இது .. .. உங்க வீட்டுல மட்டும் காலைல அஞ்சுமணிக்குக் குயில் கூவுது ?
சேவல்தாங்க அதுக்கு மிமிக்ரி தெரியும்.

நீதானப்பா சொன்னே.. . ஷார்ட் டிஸ்டென்ஸ்லாம் வர முடியாதுனு.. .

மெகா சீரியல் எடுக்கற தயாரிப்பாளரோட பெண்ணைப் பார்க்கப் போனது தப்பா போச்சு.. .
ஏன் ?
காலைல பொண்ணு பார்க்க வரச் சொல்லிட்டு சாயங்காலம்தான் பொண்ணைக் கண்ல காண்பிச்சாரு .. .

எங்க ஆபீஸ்ல டெலிபோன் எதுவும் வேலை செய்யலை. ..
டெலிபோனுமா.. .?

நம்ம ரெண்டு பேருக்கும் அடுத்த வாரம் கல்யாணம்ங்கற விஷயத்தை சுண்டல்காரன்கிட்டே சொல்லாதே.. .
ஏன் ?
தெரிஞ்சா சுண்டல் பாக்கியை செட்டில் பண்ணச் சொல்லுவான்.. .!

அந்த டாக்டர் கொஞ்சம் சினிமா பைத்தியம் போலிருக்கு.. .
ஏன் ?
ஆபரேஷன் தியேட்டர்ல கரண்ட் கட்டாச்சுன்னா உடனே விசிலடிக்கிறாரு.. .!

ஆபீஸ் உள்ளே பிச்சைக்காரன் வந்துட்டுப் போறானே.. . எதுவும் கேட்கமாட்டீங்களா.. .?
அவனே பிச்சைக்காரன்.. . அவன் கிட்டே போய் லஞ்சம் கேட்டா நல்லா இருக்காது சார்.. !

எலிக்கு ஆண்டவன் ஏன் வாலைப் படைச்சிருக்கான், தெரியுமா ?
ஏன் ?
செத்த பிறகு பிடிச்சுத் தூக்கிப்போட வசதியாக இருக்குமே.. . அதுக்குத் தான்.. !

ஸ்கூல் வாத்தியார் உலக மேப்பைக் காட்டி, பையன்கிட்டே இந்தியா எங்கே இருக்கு காட்டு.. ? னு சொன்னார்.பையன் அமைதியா இருந்தான்.
ஏண்டா, உனக்குத் தெரியுமா, தெரியாதா .. ? னு வாத்தியார் கேட்டதுக்கு, தெரியும்.. . ஆனா, நான் தாய்நாட்டைக் காட்டிக் கொடுக்க மாட்டேன் சார்..னு சொன்னான் அந்தப் பையன் !

ஓவியப் போட்டி ஒண்ணு நடந்தது. சின்னப் பசங்க நிறையப்பேரு படம் வரைஞ்சு கொடுத்தாங்க. ஒரு பையன் கொடுத்த பேப்பர் மட்டும் வெள்ளையா இருந்தது. மாஸ்டருக்குப் பயங்கர கோபம்.
என்னடா இது ?னு கேட்டார்.
ஒரு ஆடு புல் திங்கற ஓவியம் சார். னான் பையன்.
மாஸ்டருக்குக் குழப்பமாயிடுச்சு, ஆடு, புல் எல்லாம் எங்கேடா ? னார்.
புல் எப்படி இருக்கும் சார் ? அதுதான் ஆடு தின்னுடுச்சே ! ன்னான் பையன்
அப்படின்னா ஆடாவது இருக்கணுமே.. .? னார் மாஸ்டர்.
புல் இல்லாத இடத்தில் ஆட்டுக்கு என்ன சார் வேலை ? அதனால் ஓடிப் போயிடுச்சு!ன்னான் பையன்.

வெளியூர் போயிருந்த இன்ஸ்பெக்டர், ஸ்டேஷனுக்கு போன் பண்ணி ஏட்டிடம் கேட்டார்.
என்னய்யா. .. எப்படி இருக்கு நம்ம ஸ்டேஷன் ?
எல்லாம் மாமூலா தான் நடக்குது ஐயா !

ரோட்டில் ரெண்டு பேர் கட்டிப் புரண்டு சண்டை போட்டுக்கிட்டிருந்தாங்க. பக்கத்தில் ஒரு பையன் நின்னு அப்பா, அப்பா'னு அழுதுட்டிருந்தான். அந்த வழியா போன ஒருத்தன். அந்த பையனிடம் என்னடா பிரச்னை.. ஏன் அழறே?னு கேட்டான். அந்தப் பையன் அப்பா, அப்பா'னு தொடர்ந்து அழுதான். சண்டை போட்டுக்கிட்டிருக்கற ரெண்டு பேர்ல உங்கப்பா யாருடா ?னு கேட்டதுக்கு அதுக்குத்தான் ரெண்டு பேரும் சண்டை போடறாங்க'னு சொல்லிட்டு மறுபடியும் அழுதான் அந்தப் பையன்.

நிதி நிறுவனத்திலே இருபத்தஞ்சாயிரம் ரூபாய் டெபாசிட் போட்டிருந்தேன்.. . போயிடுச்சு.. ! தேர்தலுக்காக வெச்சிருந்தேன்.. .
அதுலே போகவேண்டிய டெபாசிட் இதுலேயே போயிடுச்சு.. . விடுங்க !

<u>நெட் ஜோக் !</u>
ஊதாரித்தனமாக செலவு பண்ணும் தனது மகனுக்கு பாக்கெட் மணி தருவது தொடர்பாக மனைவியிடம் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தார் அவர். டார்லிங்! இனிமே அவன் திருந்திடுவான்னு நெனைக்கிறேன். ஒவ்வொரு ரூபாயும் எவ்வளவு மதிப்பானதுன்னு நேத்து ராத்திரி விலாவாரியா அவனுக்கு எடுத்துச் சொல்லியிருக்கேன் !
ஓகோ. .. நீங்கதானா அது ?
எது ?
இன்னிக்கு காலை என்கிட்டே வந்து, ரூபாய்க்கு இவ்ளோ மட்டமான மதிப்பு இருக்கிறது நேத்துதான் தெரிஞ்சது. பாக்கெட் மணியை டாலர்ல கொடு-னு அவன் அடம்பிடிச்சானே.. . அது உங்களாலதானா ?

ஏன் உங்க டெலிபோனை வித்துட்டீங்க ?
அட.. . திடீர் திடீர்னு எவனாவது போன் பண்ணி, குஷி-லிருந்து ஒரு பாட்டு போடுங்க'னு படுத்தறான்யா !

ஒரு வாரமா நீங்களும் வரலே, மாணவர்களும் வரலையே.. . எப்படி போர்ஷன்ஸை கம்ப்ளீட் பண்ணீங்க ?
ரெண்டே பேர்தானே.. . தினமும் போன் பண்ணுவாங்க.. . போன்லயே சொல்லிக் கொடுத்துடுவேன் !

சே.. . நம்ம பள்ளிக் கூடத்தின் நிலைமை இப்படியா ஆகணும்.. ?
ஏன்.. ?
நம்ம பிரின்ஸிபால் ஒரு சேரை எடுத்துக்கிட்டு, தினமும் வீடுவீடா போய் ஸீட் இருக்கு.. . பசங்க கிடைக்குமா. .?னு கேட்டுட்டு வர்றாரு !

டெல்லியில மொய்க்கிற ஈ-க்கு என்ன பேர் சொல்லு.. ?
என்ன பேரு.. ?
கேபிடல் -ஈ !
நன்றி ஆனந்த விகடன் 2-7-2000

காதலிக்கிறபோது ஒரே கலகலப்பாக இருந்தது.
கல்யாணத்துக்குப் பிறகு !
ஒரே கை கலப்புதான் !

என்ன ! அந்த அரசியல்வாதி சலூான்காரர்கிட்டே போய் தகராறு பண்றாரு .
முடிவெட்டும்போது அவருக்குப் போத்தின துண்டை அவருக்கே கொடுக்கணுமாம்.

நான் மனைவியை டி போட்டுத்தான் கூப்பிடுவேன்.
நீங்க ?

எனக்குக் கூட ஆசைதான். ஆனா நீங்க கோவிப்பீங்களே.. .

டாக்டர் ! நீங்க கொடுத்த கண்ணாடியைப் போட்ட பிறகு கூட என்னால எழுதப் படிக்க முடியலை.. .
ஆச்சரியமா இருக்கே !
இதுல என்ன ஆச்சரியம் இருக்கு ? எனக்குத்தான் படிப்பு வாசனையே கிடையாதே டாக்டர்.

கு.க. ஆபரேஷன், மேஜர் ஆபரேஷனா. இல்ல மைனர் ஆபரேஷனா டாக்டர். ..?
மனைவிக்குப் பண்ணா மேஜர் ஆபரேஷன். சின்ன வீட்டுக்கு பண்ணா மைனர் ஆபரேஷன்.. .

சுடுகாட்டுக்கு எப்படிப் போகணும்.. .?
செத்துப்போகணும்.. .

உங்களுக்கு எப்போ இருந்து கண் தெரியலே.. ?
உங்க மகளைக் காதலிக்க ஆரம்பிச்சதிலிருந்துதான் சார்.

இன்ஸ்பெக்டர் ! என் கற்பு களவு போயிடுச்சு !
மேடம். நான் இப்போ கண்டுபிடிக்க வேண்டியது கற்பையா ? களவாடுன ஆளையா ?

இப்ப வர்ற படங்களோ டைடில்ல மந்த்ரா ஆ.மு. ஆ.பி".ன்னு போடறாங்களே,
ஏன் ?
மந்த்ரா ஆபரேஷன் முன், பின்.

உன்னைப் பார்க்கும் போதெல்லாம் உன் மருமகள் கீரையைக் கிள்ள ஆரம்பிச்சிடுவாளா ? ஏன் ?
என்னை அவ கிள்ளுக்கீரையா நினைக்கிறாளாம் !

இன்ஸ்பெக்டர், என் சம்சாரத்தை பத்து நாளா காணோம்ங்க
இத்தனை நாளா ஏன் வரலை ?
கொஞ்ச நாளாவது சந்தோஷமா இருக்கலாம்'னு நினைச்சேன் சார்.
நன்றி குங்குமம் 7-7-2000

டாக்டர்.. . எனக்குச் சளி பிடிச்சிருக்கு !
சளி நல்லாவே இருக்காது ! அதை போய் பிடிச்சிருக்குனு சொல்றீங்களே ?

மகளிர் அணித் தலைவியைக் காதலிச்சது தப்பு !
ஏன் ?
பீச்சுக்குக் காதலிக்க ஊர்வலமா வர்றா !

இசையமைப்பாளர் தேவாவுக்கு பிடித்த ராகம் என்ன தெரியுமா ?
தெரியலையே !
காபி ராகம்தான் !

உம் புருஷனுக்குத் குடியை மறக்க மாத்திரை தந்தது தப்பா போச்சா ஏன் ?

குடும்பத்தை மறந்துட்டுச் சுத்தறாரு !

என்னோட மீசை கமலஹாசன் மீசை மாதிரி இருக்குனு எப்படிச் சொல்றே ?
மீசையில் லிப் ஸ்டிக் ஒட்டியிருக்கே !

பத்து மணிக்கு டாண்னு ஆபீஸ் போகலாம்னு பார்த்தா முடியலை !
ஏன் .. . நடுவில் ஏதாவது பிரச்சினையா ?
இன்னும் வேலையே கிடைக்கலையே !

எலிப்பொறி செய்ய என்னை ஏன் கூப்பிடுறீங்க ?
நீங்க பொறியல் வல்லுனர்னு சொன்னாங்களே !

டாக்டர் ! நீங்க எனக்கு ஞாபகமறதி வியாதிக்கு மருந்து எழுதிக் கொடுத்தீங்களே.. . அது எங்கேயும் கிடைக்கலை.. .
எந்தக் கடைலே கேட்டீங்க.. ?
எல்லா மளிகைக் கடைலேயும் கேட்டுட்டேன் டாக்டர் !

நான் தான் சொன்னேனே ! அந்த நர்ஸரி ஸ்கூல்ல பயங்கரமா பீஸ் பிடுங்குவாங்கன்னு.. .
அதுக்காக - கத்தியைக் காண்பிச்சுப் பிடுங்கறது நல்லாயில்லை !

சாம்பார்ல ஏன் இப்படி உப்பைக் கொட்டி வெச்சிருக்கே ?
இன்னிக்கு உங்கம்மா ஊர்லேருந்து வர்றதா சொல்லியிருந்தீங்களே ?

விவசாயம் பண்றவரைக் கல்யாணம் செய்துகிட்டது தப்பா போச்சி !
ஏன் ?
குழந்தை விளையாட சோளக்காட்டுப் பொம்மையை வாங்கிட்டு வந்திருக்கார் !

தலைவரைக் கட்சியிலேருந்து நீக்கிட்டாங்களாமே ?
மனிதச் சங்கிலிக்குச் சங்கிலி வாங்கிய செலவு இரண்டு லட்சம்னு கணக்குக் காட்டியிருக்காராம்

ஆயிரம் பக்கம் உனக்கு ஒருத்தர் காதல் கடிதம் எழுதி அனுப்பியிருக்காரே.. . யாருடி அது ?
டி.வி.யில் மெகா சீரியலுக்குக் கதை எழுதறவராம் !

அந்தப் பிச்சைக்காரன் வீட்டுக்கு வீடு ஏதோ தந்துட்டுப் போறானே .. . என்ன அது?
ருசியாகச் சமைப்பது எப்படி ? ங்கற புத்தகம் !

அரசியல்வாதி மகளைக் காதலிச்சது வம்பா போச்சு !
ஏன் ?
பீச்ல நான் சுண்டல் வாங்கிக் குடுத்தால் உடனே கை தட்றா !

என் பாட்டி தினமும் ஸ்கூல் போகுது !
ஆச்சரியமா இருக்கே !
ஆயாவா இருக்கு !

டிஸ்பென்சரி வாசல்ல கடை வெச்சதுக்குப் போய் அந்த டாக்டர் ஏன் இப்படி சத்தம் போடறாரு ?
பின்ன ! டிஸ்பென்சரி வாசல்ல ரோஜா மாலை, மலர் வளையமெல்லாம் வித்தா டாக்டர் சும்மா இருப்பாரா ?

மலைவாழ் மக்கள், இடுப்பில் இலைகளைத்தான் ஆடையாகக் கட்டியிருப்பார்கள். நாம் அவர்களைச் சந்திக்கப் போகிறோம் !
இலையுதிர் காலத்தில் போகலாம் சார் !

நாம நினைச்சா முன்னப் பின்னத் தெரியாதவங்களைக்கூட சொந்தமாக்கிக் கொள்ளலாம்னு சொல்றாங்களே.. .
உண்மையா ?
உண்மைதான் !
உங்களை முன்னப் பின்னத் தெரியாத எனக்கு உங்க பொண்ணைக் குடுங்க மாமா !

நம்ம பையன் பெரியவனானதும் லஞ்சம் வாங்குவான் போலிருக்கு !
எப்படிச் சொல்றே ? அரசியல்ல ஆர்வம் இருக்கா ?
இல்ல.. . கிரிக்கெட்ல ஆர்வம் இருக்கு !

நம்ம கட்சித் தொண்டர்களுக்கு பந்தா அதிகம்னு எப்படிச் சொல்றே ?
தீக்குளிப்புப் போராட்டத்துக்கு கேஸ் சிலிண்டரோடு வந்திருக்காங்களே !
நன்றி இதயம் பேசுகிறது 2-7-2000

நமக்கு பையன் பிறக்கறதைவிட பொண்ணு பிறந்தா மேல் !
அதெப்படிங்க, பொண்ணு பிறந்தா குநஅயடந தானே ஆகும் ?

தனிக் குடித்தனம் போகணம்னு என் மனைவி குதிச்ச குதியில எங்க வீடே ரெண்டாயிடுச்சி !
அப்புறம் .. .. ?
அப்புறமென்ன, ஒரு வீட்டுல என் அம்மாவு, அப்பாவும் இருக்காங்க, இன்னொரு வீட்டுல நானும் என் மனைவியும் இருக்கோம் !

மேட்ச் ஃபிக்சிங்ல தோத்துப் போயிட்டதா சொல்றியே, கிரிக்கெட் சூதாட்டத்துல நீயுமா கலந்துகிட்டே ?
அதெல்லாம் இல்லை நான், என்னோட கல்யாணத்தைப் பற்றிச் சொன்னேன்.

பாராட்டு விழா மேடையிலேர்ந்து தலைவர் கீழே விழுந்துட்டாராமே, எப்படி ?
வந்தவங்க எல்லாம் தலைவரை புகழ்ந்து தள்ளிட்டாங்கன்னு சொன்னேன்ல !

உங்க வீட்டுக்கு வந்த விருந்தாளிங்க ஒரே நாள்ல கிளம்பிட்டாங்களே எப்படி ?
என் மனைவி சங்கீதம் கத்துக்கறா என் மக சமையல் கத்தக்கறா அதான் .. .. ..

என்ன இது .. .. மேளத்தை இந்த அடி அடிக்கிறாரு .. .. ?
மணப்பெண்ணோட மாஜிக் காதலனாம் .. .. ஆத்திரத்தை இப்படி காட்டுறாரு !

எதுக்கு பேஷண்ட் ஆபரேஷன் தியேட்டர்லேர்ந்து அலறியடிச்சுட்டு ஓடறார் .. .. ?
நாம மறைச்சு வெச்சிருந்த மாலை ஊதுவத்தி விளக்கு எல்லாத்தையும் பார்த்துட்டார்.

ரெண்டு தலைவர்களும் சந்திச்சப்ப தோள் துண்டை இடுப்பிலே கட்டிகிட்டுப் பேசுனாங்களா .. .. ஏன் ?
மரியாதை நிமித்தம் நடந்த சந்திப்பாம் .. ..!

தலைவர் நிதானமா படிப்படியா முன்னேறனும்னு நினைக்கிறாரா .. .. எப்படி .. .?
3001 - இல் ஆட்சியைப் பிடிப்போம்னு சொல்றாரே !

பேட்டை தாதா வாஸ்து சாஸ்திரம் பார்க்கிறாரே .. .. .. ஏன் ?
யாருக்கோ வூடு கட்டப் போறாரு !

பேரீச்சம் பழக் கடைத் திறப்பு விழாவுக்கு முதல்ல வர்றேன்னு ஒத்துக்கிட்ட தலைவர் கடைசியில வரமாட்டேன்னுட்டார் !
ஏன் ?
அவருக்கு னுயவந ஒத்துவரலியாம் !

மாட்டை இழுத்துட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு போறியா .. .. ஏன் ?
லாடம் கட்டுறதுக்குதான் ?

பேய் ஓட்டுறவர் ஏன் இந்தக் கூச்சல் போடுறார் ?
இந்தப் பேய்க்கு காது கேட்காதாம்.
நன்றி குமுதம் 13-7-2000

நீங்கள் குறுக்குவிசாரணை செய்யலாம் .. ..
இந்த ஆள் ஒரு பைத்தியம், மை லார்ட் !
அப்போ கிறுக்கு விசாரணை பண்ணுங்க !

அந்த மரம் அறுக்கிற தொழிலாளி பயங்கர குடிகாரனா இருப்பாருனு எப்படிச் சொல்றே .. ?
பாரேன் .. .. சரக்கு .. .. சரக்கு-னு மரத்தை அறுக்கறதை .. .. !

உங்க மனைவி இருக்கும்போது ஏன் குழந்தைக்கு வேலைக்காரி சாப்பாடு ஊட்டறாங்க .. .?
என் மனைவிக்கு ஊட்ட சக்தி இல்லைனு டாக்டர் சொல்லி இருக்காரே !

டப்பிங் ஆர்ட்டிஸ்ட்டைப் பார்த்து ஹீரோ என்ன பாட்டு பாடுவார், சொல்லுங்க .. .. ?
என்ன பாட்டு .. .. ?
நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்.

அந்தக்காலத்துக்கும் இந்தக் காலத்தக்கும் அரசியல்லே என்ன மாற்றம் பார்க்கறீங்க ?
அந்தக் காலத்துலே ஜெயிலுக்குப் போனவங்க பதவிக்கு வந்தாங்க, இப்ப பதவிக்கு வரவங்க ஜெயிலுக்குப் போறாங்க அதான் வித்தியாசம் !

காபி கொடுத்ததுக்காகவா உங்க வீட்டு வேலைக்காரி வேலையைவிட்டு நின்னுட்டா ?
ஆமாம் .. .. நான் ஏதோ ஞாபகத்துல என் கணவருக்க வெச்சிருந்த காபியைக் கொடுத்துட்டேன் !

வயதான என் அம்மா மேல உனக்குக் கொஞ்சம்கூட அக்கறையே இல்லை .. ..
அப்படியெல்லாம் சொல்லாதிங்க .. .. தினம் தினம் அவங்க போட்டோவுக்கு மனசுக்குள்ளேயே மாலை போட்டு ஊதுவத்தியெல்லாம் ஏத்தி வெக்கறேன்னா பாத்தக்கங்களேன் .. . !

சீரியஸா இருக்கிற உங்க மாமியாரைக் காப்பாத்தணுமா .. .. உடனே அட்மிட் பண்ணிடுங்க .. ..
நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க டாக்டர் அவங்கவிட்ட இரந்து நீங்க என்னைக் காப்பாத்தணும்தான் அட்மிட் பண்ணறோம் !

நம்ம இன்ஷூரன்ஸ் ஆபீஸுக்கு ஒரு பொண்ணுகிட்ட இருந்து போன் வந்து இருக்கு சார் !
என்னவாம் ?
மாமியார் மருமகள் சண்டைக்கு விபத்து காப்புறுதி உண்டானு கேக்கறாங்க !

என் புது ஜீன்ஸையும் பனியனையும் ஏன் வேலைக்காரிக்குக் கொடுத்தே ?
நீங்கதானே என் புடவையைக் கொடுக்க வேண்டாம்னு சொன்னீங்க !

என்னங்க .. .. உங்க அம்மாவுக்குன்னு தனியா நாலு கரண்டி வாங்கிக் கொடுங்க .. ..
எதுக்கு .. ..?
என்னோடு சண்டை போடும்போது அவங்க நிராயுதபாணியா நிக்கறதைப் பார்த்தா ரொம்ப பாவமா இருக்கு .. ..

உங்க பையன் இங்கிலீஷ் கிராமர், மேத்ஸ், ரெண்டுலேயும் ரொம்ப வீக்கா இருக்கான். அவனுக்கு மேத்ஸோ கராபேண்டாடிசியானா -ங்கிற வியாதி வந்திருக்கு.. .
அதுக்கு என்ன மேடம் பண்ணணும் ?
நம்ம ஸ்கூலுக்குப் பத்தாயிரம் ரூபா டொனேஷன் கட்டினா எல்லாம் சரியாயிடும்.

ஒரு கஞ்சன் தனது மனைவியின் பிறந்த நாளன்று பிஸினஸ் விஷயமாக வெளியூர்ப் போயிருந்தான். எனக்கு பிறந்தநாள் பரிசு வாங்கப் பணம் தேவை. எனவே உடனடியாக செக் அனுப்புங்கள் என்று போனில் அவனிடம் சொன்னாள் மனைவி. கணவன்தான் மகாக் கஞ்சனாச்சே ! ஒரு செக் எழுதி. அதில் ஆயிரம் ரூபாய் என்பதற்குப் பதில் ஆயிரம் முத்தங்கள் என்று எழுதியனுப்பினான்.
இரண்டு நாள் கழித்து மனைவிக்கு போன் செய்து. செக் கிடைத்ததா ? என்ற கேட்டான். ம் ! கிடைத்தது.. .
ஆனால், பாங்க் காஷியர்தான் பாவம்.. . அதை எனக்கு கொடுப்பதற்குள் ரொம்பவே தினறிப்போனார் ! என்று சொன்னாள் மனைவி.

ஒருவரை நாய் கடித்துவிட்டது. அந்த நாயின் சொந்தக்காரரைத் தேடிப்போய் விஷயத்தைச் சொன்னார் கடிபட்டவர். நாயின் சொந்தக்காரர் சொன்னார் வெறி.. ... வெறி.. .. சாரி சார் !

உங்க பையன் எங்கே இருக்கான் ?
டெல்லியில் !
அங்கே என்னவா இருக்கான் ?
அங்கேயும் என் பையனாத்தான் இருக்கான் !

<u>நெட் ஜோக் !</u>
சமீபத்தில் உடம்பு மிக மோசமாகி மருத்துவ சிகிச்சை செய்துகொண்டு வீடு திரும்பிய ஒருவருக்கு போன் வந்தது. மறுமுனையில், அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர்.
என்னிடம் உங்களக்கு ஒரு நல்ல செய்தியும். ஒரு கெட்ட செய்தியும் இருக்கிறது ! என்றார் டாக்டர்.
ஓ.கே.. . முதல்ல அந்த நல்ல செய்தியைச் சொல்லுங்க. .. டாக்டர் !

உங்களுக்கு இருபத்துநான்கு மணி நேர் ஆயுள் இருக்கிறது !
சே ! அவ்வளவுதானா ? சரி.. .கெட்ட செய்தி ?
அந்த நல்ல செய்தியை நான் நேத்தே சொல்லியிருக்கணும், மறந்துட்டேன் !

தெரிஞ்சா.. . தெரியாமலா .

டி.வி-யில் சின்னவீடு படம் ஓடிக்கிட்டிருந்தது. என் அண்ணா பையனுக்குப் பன்னிரண்டு வயசு. அவன் என்கிட்ட வந்து சித்தப்பா, சின்னவீடுன்ன என்ன ?னு கேட்டான். எனக்குத் தர்மசங்கடமா இருந்தது. நீ படிக்கிற பையன். இதெல்லாம் இப்ப தெரிஞ்சுக்க வேண்டாம். பின்னால தெரிஞ்சுக்கலாம். இப்ப போய் படிடான்னு சொன்னேன். அதுக்கு அவன் நீங்க சொல்லுங்க சித்தப்பா.. . நான் இப்பவே தெரிஞ்சு வெச்சுக்கறேன்னு சொன்னான். அடப்பாவி ! தெரிஞ்சு வெச்சக்கறது இல்லடா சின்னவீடு. தெரியாம வெச்சுக்கிட்டாதான் சின்னவீடுனு பதில் சொல்லி வெச்சேன் !

உங்க வீட்டு பேப்பரை யாராவது ஓசி கேட்டா எனக்குப் பிடிக்காது.. .
ஏன் ?
அப்புறம் நான் வந்து கேட்கும்போது இருக்காதே !

நேத்திக்கு சாப்பாட்டுல எட்டு கல் கிடந்துச்சு. .. இன்னிக்கும் எட்டு கல் கிடக்குதே..
அளவு சாப்பாட்டுல அதுக்கு மேல போட முடியாதுங்க !

நீங்க அரசியல் வாதியா ?
எப்படித் தெரியும் ?
ஷேவிங் பண்ண போர்த்தினப்ப நன்றின்னு சொன்னீங்களே !

அவர் படு கஞ்சன் .. .
எப்படிச் சொல்றே ?
ரூத்பேஸ்ட், ரூத்பிரஷ் வாங்கப் பணம் செலவாகுமேனு நினைச்சு தன்னோட முப்பத்திரண்டு பல்லையும் எடுத்துட்டார்னா பாரேன் !

கார் பம்பர் பரிசுனு சொல்லி ஏமாத்திட்டாங்க !
எப்படி ?
கார் பம்பரை - பரிசா கொடுத்துட்டாங்க

நன்றி ஆனந்த விகடன் 9-7-2000

நீ பக்கத்துல இருந்தா உலகமே எனக்கு மறந்து போயிடுது டார்லிங்.
யோவ் சுண்டல் காசைக் கொடுத்துட்டு நீ எதை வேணும்னாலும் மறந்து போய்யா !

என்ன அந்தப் பிச்சைக்காரனுக்கு மட்டும் கியூவில நின்னு பிச்சை போடறாங்க ?
அஞ்சு ரூபாய்க்கு மேல பிச்சை போடறவங்களுக்கு ஒரு கூப்பன் தர்றானாம். அதிர்ஷ்டக் குலுக்கல்ல முதல் பரிசு மாருதி கார் தர்றானாம்.

போன ஜென்மத்தில நான் நிறையப் பாவம் பண்ணியிருக்கிறதா ஜோசியா சொல்றாரு ஆனா அதில் எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை டாக்டர்.
எனக்கு நம்பிக்கையிருக்கு அதான் என்கிட்டவந்தரிருக்கீங்க.

பால் வேறே சாராயம் வேறேன்னு யாருங்க சொன்னது ?
ஏன் .. .. ?

ரெண்டுமே காயச்சிக் குடிச்சாத்தானுங்க சுவை !

சார் ! என் மனைவியை தினமும் யாரோ டெலிபோன்ல மிரட்றாங்க .. ..
உங்களுக்கு யார்மேலயாவது சந்தேகம் இருக்கா .. .. ?
அது தெரிஞ்சா நானே நேர்ல போய் பாராட்டமாட்டேனா .. ..

எங்க ஆபீஸ் லேடி டைப்பிஸ்ட் சுலோக்சனாவை செல்லமா சுலோ சுலோ-னு சுருக்கிச் சொன்னது தப்பாயிடுச்சு !
ஏன் .. ?
ஒரு லெட்டரை டைப் பண்ணி முடிக்க அவளுக்கு ஒரு மாசம் ஆகுதே !

எதற்கெடுத்தாலும் பின்னிடுவேன் கிறாரே என்ன பண்றாரு அவர் .. .. ?
சவரி வியாபாரம் பண்றாரு .. ..

திருடன் .. .. .. திருடன் எல்லாரும் ஒடி வாங்க.
ஐயோ மாமா .. .. நான் உங்க மாப்பிள்ளை வந்திருக்கேன்.
அப்படியா ? ஐயோ .. .. பெரிய திருடன் வந்திருக்கான் எல்லாரும் ஒடி வாங்க !

உங்க வாரிசு என்னோட வயித்துல வளருது டியர் !
விளையாடறியா ? நான் உன்னைக் காதலிக்க ஆரம்பிச்சு ஒரு வாரம்தானே ஆகுது !
சாரி .. .. ரமேஷ்கிட்ட சொல்ல வேண்டியதை ஞாபக மறதியா உங்ககிட்ட சொல்லிட்டேன்

உங்க பையன் குடிக்கிறானே நீங்க கொஞ்சம் கேட்கக் கூடாதா .. ?
நானே இப்ப ஃபுல்லா இருக்கேன். அவன்கிட்டே வேற வாங்கிக் குடிச்சா நான் விழுந்துடுவேன்.

டாக்டர் நான் வாழ விரும்பலை என்னைச் சாக விட்டுடுங்க.
அப்ப ஆபரேசனுக்கு ஏற்பாடு பண்ணிடறேன்.
நன்றி குங்குமம் 14-7-2000

படத்துக்கு விழா எடுக்கறாங்களே .. .. ?
நூறு நாள் ஓடினதுக்கா .. .. ?
இல்லீங்க .. .. டி.வில டாப் டென் நிகழச்சியில முதலிடம் கிடைச்சதுக்காகவாம் !

வாசகர்களைத் திரை விமர்சனம் செய்யச் சொல்லி நாம கேட்டிருந்ததை இந்த வாசகர் தப்பா புரிஞ்சுகிட்டார் போலருக்கு .. ..
எப்படி .. .. ?
ரம்பா தியேட்டர் ஸ்க்ரீனில் பெரிய கிழிசல் இருக்கு ரமீனா தியேட்டர்லே சீட்டுங்க எல்லாம் உடைஞ்சிருக்கு-ன்னு விமர்சிச்சுத் தள்ளியிருக்காரே !

போலீஸ்காரர் - ஏம்மா .. .. நீ தனியா இருக்கும்போது இந்த ஆள் உன்னைக் கற்பழிக்க முயற்சி பண்ணினார்னு ஏன் அப்பவே வந்து எங்ககிட்ட சொல்லலை.
பெண் - இவராவது முயற்சிதான் பண்ணினாரு .. .. ஆனா இங்கே நடந்துருமோன்னு பயம்தான சார் .. .. !

ஏங்க .. .. நம்ம பையனை வக்கீலுக்குப் படிக்க வைக்கப் போறேன்னு சொன்னீங்களா .. .. ?

ஆமா .. .. சொன்னேன் .. ..
இப்ப அவன் அநியாயத்துக்குப் பொய் சொல்ல ஆரம்பிச்சுட்டான் .. ..

உங்கள் கட்சியில் புதிதாக ஒரு அணியா .. .. ?
ஆமாம் ! கொடும்பாவி எரிப்பு அணி .. .. !

போலீஸ் ஸ்டேஷனை வாஸ்து சாஸ்திரப்படி இடிச்சுக் கட்டுறாங்களாமே .. .. ஏன் .. ?
வாரத்துக்கு ஒரு லாக்கப் சாவு நடக்குதாம் !

கெமிஸ்டரி டெஸ்டல .. .. நாலு பரிசோதனை செய்யச் சொன்னாங்க .. .. !
நீ என்ன சோதனை செஞ்சே ?
எனக்கு எதுவும் தெரியலை அதனால சோதனைமேல் சோதனை போதுமடா சாமின்னு எழுதினேன் .. . .. !

அந்த டாக்டர் ரொம்ப நிதி நெருக்கடியில இருக்காரு போலிருக்கு .. .. ?
எப்படி .. .. ?
வந்த ஒரு பேஷன்ட்டுக்கும் அடிபட்டதுக்குக் கட்டுகட்ட துணி இல்லைன்னு நர்ஸ் பாவாடையைக் கிழிச்சுக் கட்டுப் போடறாரே !

எனக்கப்புறம் என்னோட அரசியல் வாரிசு நீதான்னு உங்க பையன்கிட்ட நீங்க சொன்னீங்களா .. .. ?
ஆமா .. .. சொன்னேன் .. ..
அரசியல்ல இறங்கி மந்திரியாக் போற எனக்கப் படிப்பு எதுக்கு-ன்னு சரியாப் படிக்க மாட்டேங்கிறான் !

உங்க குடும்பம் கவுண்டமணி செந்தில் மாதிரி கலகலன்னு இருக்கும்னு உங்க மனைவி சொன்னாங்க .. ..
ரொம்ப சந்தோஷம் .. ..
இன்னொண்ணும் சொன்னாங்க நான்தான் கவுண்டமணி மாதிரி எங்க வீட்டுக்காரர் செந்தில் மாதிரின்னும் சொன்னாங்க .. .. !

அடுத்தவங்க ஆயிரந்தான் உங்களுக்கு அட்வைஸ் பண்ணினாலும், நீங்க கொஞ்சம்கூட காதுல வாங்கிக்க மாட்டிங்களாமே .. .. உண்மையா .. .. ?
ஆமா .. .. இப்ப நீங்க என்ன சொன்னீங்க !

பாட்டு வாத்தியார் வீட்லே வேலைக்குச் சேர்ந்தது தப்பா போச்சு ?
ஏன் ? என்ன ஆச்சு ?
வயித்துப் பாட்டுக்காக வேலைக்குச் சேர்ந்தேன் கடைசியிலே தாலாட்டுப் பாட்டு பாடும்படி பண்ணிட்டாரே !

மனைவியை அடக்குவது எப்படி-ன்னு அவரு புனைப் பெயர்ல நிறைய கட்டுரை எழுதியிருக்காரு .. .. !
என்ன பேர்ல எழுதறாரு .. .. ?
பெண்டாட்டி தாசன்-ங்கற பேர்ல .. ..

அமைச்சர் கூடவே பழைய பேப்பர்காரங்க நிறைய பேர் போறாங்களே எதக்கு ?
பொதுமக்கள்கிட்ட மனுக்கள் வாங்கறார் அத வெயிட்ல போடத்தான் .. ..

உன் காதலியை கிஸ்கிந்தாவுக்க அழைச்சிட்டுப் போனீயே எதுக்குடா ?

கிஸ் கொடுக்கத்தான் .. .. !

என் காதலி ரொம்ப மோசம்டா .. !
ஏண்டா .. ?
கிஸ் கேட்டா மனசு, உதடு, முத்தம் கட்டிக்கப் போறவனுக்குதான்னு சொல்றா !

புது மாப்பிள்ளை ஏன்டா சோகமா இருக்கே ?
ஃபுல்மூன்டேயில ஹனிமூனுக்குப் போனேன்டா, அன்னைக்கு அமாவாசை எதுவும் நடக்கலேடா !

எனக்கு இந்த சனிப் பெயர்ச்சிப்பலன் எப்படி இருக்கும் ஜோசியரே .. .. ?
அடுத்த மாசமே உங்களுக்குக் கல்யாணம் நடந்துடும் பாருங்க .. .. !

டாக்டர் சாப்பாடு சாப்பிடறதுக்கு முன்னமே ஏப்பம் வருது .. ..
அப்போ .. .. ஏப்பம் வர்றக்கு முன்னமே சாப்பிட்டுடுங்க .. ..

புதுசா அக்கவுண்ட் ஆரம்பிக்கலாம்னு பார்த்தா யாராவது தெரிஞ்சவுங்க வேணும்னு கேட்குறாங்க .. ..
எந்த பேங்குல .. ..
பக்கத்துத் தெரு மளிகைக் கடையில .. ..

பத்தாயிரம் ரூபாய் கடன் கொடுங்க சார் .. ..
இந்தாங்க என்ன பண்ணப் போறீங்க .. . ?
ஊரை விட்டு ஓடப்போறேன் .. ..

நீங்க ஆசையா வளர்த்த நாய் உங்களையே கடிச்சிட்டதாமே ? எப்படீங்க ?
என்னங்க கேள்வி இது பல்லாலதான் !
நன்றி குங்குமம் 21-7-2000

தொப்புள்ல பம்பரம் விடறது ஆம்லெட் போடறது எல்லாம் பழைய பார்முலா சார் .. .. நான் புதுசா ஒரு ஐடியா வெச்சிருக்கேன் சொல்லுங்க .. .. !
நடிகரைப் படுக்க வச்சு ஹீரோயினியும் அவரோட தோழிகளும் ஹீரோ தொப்புள்ல கோலிக் குண்டு விளையாடறாங்க .. .. இது ஓபனிங் சீன் .. .. !

பலசரக்குக் கடை முதலாளியோட குழந்தைங்கறதுக்காக தலைவர் இப்படியெல்லாம் பெயர் சூட்டிவிட்டுப் போயிருக்கக் கூடாது .. ..
ஏன் - என்ன பெயர் சூட்டினார் .. ?
கலப்படம்-னுதான் .. .. !

தலைவரே என்னைக்கும் உங்க நிழலிலேயே இருப்பேன் !
அப்ப என்னை வெயிலிலேயே நிக்கச் சொல்றியாக்கும் .. . !

ரொம்பத் தெரிஞ்சவர் வீட்டுக் கல்யாணம் போய் தலையைக் காண்பிச்சுட்டு வந்திடறேன் .. !
ரொம்பத் தெரிஞ்சவர்ங்கிறியே .. .. உன் தலையை அவர் பார்த்ததே இல்லையா ?

அந்தக் கொத்தனார் வீட்டுல மாமியார் - மருமகள் சண்டை நடந்தா வெளியே தெரியாது !
எப்படி .. .. ?

வெளியே தெரியாமல் பூசி மெழுகிடுவாங்க .. !

டைரக்டர் தீர்க்கதரிசியா .. .. எப்படி ?
இன்டர்வெல் மேலே யாரும் உட்காரமாட்டாங்கன்னு தெரிஞ்சுகிட்டு அது வரைக்கும்தான் படம் எடுத்திருக்கார்னா பாரேன் .. .. !

பிச்சைக்காரி - எம்மா .. .. உங்க வூட்டுக்காரர்கிட்ட சொல்லி என் பையனுக்கு ஒரு என்ஜினியரிங் சீட்டு பிச்சையா குடுக்கச் சொல்லுங்க .. .. ஒரு வருஷத்துக்கு உங்க வூட்டுப் பக்கமே பிச்சை கேட்க வரலம்மா !

அரவாணிகள் பேர் எல்லாம் மாத்திட்டாங்களாமே .. ?
என்னன்னு .. .. ?
மகாராணி-ன்னு .. .. !

எந்த நெட்ல மீன் பிடிக்க முடியாது .. .. ?
இன்டர்நெட்ல ... . !

டெல்லி தலைவரோட பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பாப் போச்சு .. !
ஏன் ... .. ?
முதலிரவுலகூட புல்லட் புரூஃப் ஜாக்கெட்டைக் கழட்ட மாட்டேன்னுட்டா .. .. !

நம்ப டாக்டர் கொஞ்சம் கிரிக்கெட் பைத்தியம்போல .. !
ஏன் .. .. ?
ஆபரேஷன் முடிஞ்ச உடனே அவுட் அவுட்னு கத்தறாரே .. .. !

எதுக்க டாக்டர் மருந்து பாட்டில்ல காபரே நடிகை போட்டோவை ஒட்டி வெச்சிருக்கீங்க .. ..?
அப்பதானே உங்களுக்குக் குலுக்கிச் சாப்பிடணும்னு ஞாபகம் வரும் .. .. !

குக்கர்ல எதுக்க பாம்பு படம் போட்டிருக்கே .. .. ?
அப்பதான் நல்லா உஸ்ஸுன்னு சத்தம் வரும் .. .. !

டி.வியை ஏன் பெட்ரூம்ல வெச்சிருக்கீங்க .. .. ?
அப்பதான் அணைக்கனும்னு ஞாபகம் வரும் .. .. !

நான்தான் பிழைச்சுட்டேனே .. .. இன்னும் எதுக்கு டாக்டர் எக்ஸ்ரே எடுக்கணும் .. .. ?
எக்ஸ்ரே எடுக்கிற என் தம்பி பிழைக்க வேண்டாமா .. .. ?

ராத்திரி கனவெல்லாம் சரியாவே தெரியமாட்டேங்குது டாக்டர் .. .. ?
ஐ டெஸ்ட் பண்ணி கண்ணாடி போட்டுத் தூங்குங்க .. .. !

இந்த வியாதி எனக்குப் படிப்படியா குணமாயிடுமா டாக்டர் .. .. ?
உங்களுக்கு லிட்டர் லிட்டராதான் குணமாகும் .. .. !

ஆபேரேனுக்கு எல்லாம் தயாரா இருக்கா .. .. ?
பேஷண்ட்டைத் தவிர மத்ததெல்லாம் தயாரா இருக்கு டாக்டர் .. .. !

ஏன் டாக்டர் புதன்கிழமை அன்னிக்கு உங்க டிஸ்பென்சரி லீவு .. .. ?
அன்னிக்கு .. .. பக்கத்துல என் சின்னத்தம்பி நடத்தற ஓட்டல் லீவாச்சே .. .. !

அந்த ஓட்டல்ல எதுவுமே சூடா இருக்காது .. ..
ஏன் .. .. ?
அதான் ஆரிய பவனாச்சே .. .. !

பிள்ளையாருக்குக் கம்ப்யூட்டரை ரொம்பப் பிடிக்கும் .. .. !
ஏன் .. .. ?
அவரை மாதிரி அதுக்கும் பக்கத்துல மௌஸ் இருக்கே .. .. !

நம்ம கட்சி முன்னாள் தலைவர் மேஜை நாற்காலி பூட்டு எல்லாம் எடுத்துக்கிட்டு எங்கே போறார் .. .. ?
புதுக்கட்சிக்குச் சீதனமா கொடுக்கத்தான் .. .. !

என்ன ஸார் .... .. ஆசிரமம்னு போர்டுல எழுதியிருக்கு .. .. ஆனா நிறைய பேர் பரீட்சை எழுதறாங்க .. . ?
இந்த ஆஸ்ரமத்துல சிஷ்யனா சேர்றதுக்கு நுழைவுத் தேர்வு வைக்கறாங்க.. .. அதான் .. !

ஏன் அந்தப் பக்கா திருடனை பிக்பாக்கெட் திருடங்க ஒரேடியா புகழ்ந்து பேசறாங்க .. .. ?
புதுசா திருட வர்றவங்களுக்கு வழி விடறதுக்காக பெரிய மனசு பண்ணி திருட்டுத் தொழிலுக்கே முழுக்குப் போடப் போறானாம் .. !

ஏன் அந்தத் தலைவர் துண்டுக்குப் பதிலா துப்பட்டாவைத் தோள்ல போட்டுக்கிட்டு வர்றாரு
அவருக்குப் பெண் வாசனை இல்லைன்னா மூட் அவுட் ஆயிடுமாம் .. .. !
நன்றி இதயம்பேசுகிறது 16-7-2000

தலைவர் தன்னோட டேபிள்ல பூமி உருண்டையை வெச்சிருக்காரே .. .. ஏன் .. ?
அவரை உலகம் தெரியாதவர்னு யாராவது சொல்லிடுவாங்களோன்னுதான் .. ..

வாழ்க்கையிலே படிப்படியா முன்னேறி, இப்போ ஒரு ஃபைவ் ஸ்டார் ஓட்டல்ல வேலையில் இருக்கேன் .. .. !
என்ன வேலை பார்க்கறே .. ..?
லிஃப்ட் ஆப்ரேட்டரா இருக்கேன் !

எதுக்காக அந்தக் கம்பெனி முன்னால சட்டை இல்லாமப் போராட்டம் நடத்தறாங்க .. .. ?
அவங்க கோரிக்கையை கம்பெனி நிர்வாகம் சட்டை பண்ணலையாம் .. .. !

தலைவர் வெறும் ஜட்டியோட விரலைச் சூப்பிக்கிட்டே எங்கே போறார் .. ?
அவர் முதன் முதல்ல இருந்த தாய்க் கட்சியில சேரப்போறாராம் !

எனக்கும் என் வீட்டுக்காரருக்கும் சண்டை வந்தால் பேசியே தீர்த்துக்குவோம்
உனக்கும் உன் மாமியாருக்கும் சண்டை வந்தால் .. .. !
ஏசியே தீர்த்துக்குவோம் !

எங்க வீட்டுக்காரர் கட்சித் தலைவரானவுடனே ரொம்ப மோசமாயிட்டார் !
ஏன் அப்படிச் சொல்றே .. ?
இன்னோரு குழந்தை பெத்துக்கலாமான்னு கேட்டதுக்கு பொதுக்குழு கூடி முடிவு செய்யும்ங்கறார் !

எமதர்மர் ஏன் பாசக்கயிறுக்குப் பதிலா பணக்கட்டை எடுத்துகிட்டுப் போறார் ?
ஒரு ஏழை நோயாளியோட உயிரை எடுக்கணுமாம் ! அதான் அவனோட ஆபரேஷனுக்குப் பணம் கட்டப் போறார் !

இதுவரைக்கும் எந்தப் பெண்ணையும் நான் ஏரெடுத்துப் பார்த்ததில்லை .. ..
நிஜமாவா சொல்றே ... .. ?
ஆமா .. எங்க ஊர்ல ஆண்கள்தான் எர் பிடிப்பாங்க !

என்ன கபாலி, திடீர்னு ஒரு ஸ்கூல் ஆரம்பிச்சுட்டே ?
ஹிஹி.. .. டீசண்ட்டா கொள்ளையடிக்கலாம்னுதான் !
நன்றி குமுதம் 20-7-2000

உங்களுக்குத்தானே தலைவலி ? பின்ன எதுக்கு உங்க மனைவியைக் கூட்டிக்கிட்டு வந்தீங்க?
எனக்குத் தலைவலியே என் மனைவிதான் டாக்டர் !

ஆபரேஷன் தியேட்டர் உள்ளே ஈ-மெயில் வெச்சிருக்கீங்களே .. .. எதுக்கு டாக்டர் .. ?
ஆபரேஷன் முடிஞ்ச கையோட உறவுக்காரங்களுக்குத் தகவலை ஈ-மெயில் அனுப்பத்தான்.. ..!

பாதி ஆபரேஷன் பண்ணும்போது திடீர்னு ஆபரேஷன் தியேட்டர்ல கரண்ட் ஃபெயிலாயிடுச்சு .. ..
எப்பவும் ஆபரேஷன்தானே ஃபெயிலாகும் .. .. ?

டாக்டர் .. .. என் பையன் எதைப் பார்த்தாலும் உடனே வாய்ல போட்டு முழுங்கிடறான்.
அவங்க அம்மாவை கவனமா பார்த்துக்கச் சொல்ல வேண்டியதுதானே .. .. ?
அவன் பிறந்த உடனே அவங்க அம்மாவையே முழுங்கிட்டானே .. .. !

அந்தக் கண் டாக்டரைப் பற்றி டி.வி-யில ஆனாலும் இப்படிப் பொய் விளம்பரம் பண்ணக் கூடாது.
ஏன் .. .. ?
அவர்கிட்டே கண் ஆபரேஷன் பண்ணிக்கிட்டா அமாவாசை அன்னிக்குக் கூட நிலா கண்ணுக்குத் தெரியும்னு சொல்றாங்க !

ஐயா, தூர்வார்வீங்களா .. .. ?
கிணத்துலே அது ஒண்ணுதான் இருக்கு .. .. அதையும் வாரிடறேன்றியா .. .. ?

அம்மா - எதிர்வீட்டு இளைஞன் என்ன கேள்வி கேட்டாலும் பதில் சொல்லாதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது .. .. ?

மகள் - பதில் எல்லாம் சொல்லலை, நேத்து ஏன் பீச்சுக்கு வரலைன்னு நான் அவனைக் கேள்விதான் கேட்டேன்.

எப்படி நீ தைரியமா கிச்சன்ல உன் பர்ஸை வெச்சிருக்கே .. .. ?
இந்தப் பக்கம் என் பொண்டாட்டி வர சான்ஸே இல்லியே .. .. அதான் ..!

நெட் ஜோக் !
தனது பாட்டியின் கல்லறையில் மரியாதை செலுத்த அம்மாவுடன் சென்றாள் ஒரு குட்டிப் பெண். வழியில் ஒரு கல்லறையில் எழுதப்பட்டிருந்த வாசகம் அந்தச் சிறுமியை ஒரு கணம் இழுத்து நிறுத்தியது அம்மாவிடம் அவள் கேட்டாள் அம்மா ரெண்டு மனிதர்களை யாராவது ஒரே குழியில் புதைப்பார்களா .. .. ?
இல்லையே .. .. ஆமா ஏன் கேக்கிறே .. . ?
அதோ அந்தக் கல்லறையில் பாருங்க இங்கே ஒரு அரசியல்வாதியும் நேர்மையாளனும் உறங்குகிறான்னு எழுதியிருக்கு.

இப்ப என் டி. என். ஏ-வை மாத்தி ஜாண்டிஸ், மலேரியா, டி.பி., புற்றுநோய், எய்ட்ஸ், ஜுரம் .. .. இப்படி எதுவுமே வராதபடி பண்ணிட்டா என்ன ஆகும் டாக்டர் .. .. ?
எனக்கு வருமானமே வராதபடி ஆயிடும் .. .. !

சொத்துக் கணக்கு கேட்டதுக்கு அந்த அரசியல்வாதி, அவருக்கு பாடம் சொல்லிக் கொடுத்த வாத்தியாரை கோர்ட்டுக்கு அழைச்சுக்கிட்டு வந்திருக்காரே .. .. ஏன் ?
படிக்கிற காலத்திலேயே இவருக்கு எந்தக் கணக்கும் தெரியாதுன்னு சாட்சி சொல்லத்தான்.

என்னய்யா, மஞ்சள்காமாலைக்கு இன்னும் பத்திய சாப்பாடுதான் சாப்பிடறியா .. .. ?
எனக்கு எப்ப சார் வந்தது மஞ்சள்காமாலை .. .. ?
மாட்டிக்கிட்டியா .. .. போன வாரம் நீ போட்ட லீவுக்கு அதுதான் காரணம்னு உன் டாக்டர் சர்டிபிகேட்ல எழுதி இருந்தாரே .. .. !

கவரோட சம்பளத்தைக் கொடுக்கலைனா பெண்டாட்டி திட்டுவானு சொல்றீங்களே .. .. உங்களுக்கு வெட்கமா இல்லையா .. .. ?
நீங்க கொடுக்கமாட்டீங்களா .. ... ?
நான் கவரை எடுத்துக்கிட்டு சம்பளத்தை மட்டும்தான் கொடுப்பேன் !

பஞ்ச தந்திரக் கதைகள்ல பஞ்ச தந்திரம்ங்கிறது எதையெல்லாம் குறிக்கும் .. .. ?
கட்சி தாவறது, கூட்டணியை உடைக்கறது, ஆட்சியைக் கவுக்கறது, சம்மன் வந்தா ஆஸ்பத்திரியில அட்மிட் ஆறது, சாயம் வெளுத்துப்போனா மக்கள் கால்ல விழறது.. .. போதுமா .. .. ?

கரண்ட் கட் ஆயுடுச்சு, என் ஜெனரேட்டரைக் கொண்டு வாடா .. .. புழுக்கமாயிருக்கு .. .. !
கேக்கறது பனை ஓலை விசிறி .. .. இதுக்கு இப்படி ஒரு அலட்டலா .. .. ?

அந்த ஆள் ஒருத்தருக்கு ஒண்ணு கொடுக்கமாட்டாரு .. ..
நிஜமாவா .. .. ?
ஆமாம் .. .. யாரோடையும் முகம் கொடுத்துக்கூட பேசமாட்டாருனா பாருங்களேன் !

பட்டப் பகல்ல அந்தக் கடையில புகுந்து ஏன் திருடினே .. .. ?
தொழில்னு வந்துட்டா ராத்திரி பகல்னு பார்த்தா முடியுமா சார் .. .. ?

எதுக்குங்க அந்த ரயில்வே அதிகாரியை அரெஸ்ட் பண்ணிக் கூட்டிட்டுப் போறாங்க .. .. ?
பின்ன என்னங்க .. .. டிரெயினோட வீலுக்கு பங்க்சர் ஒட்டிய வகையிலனு சொல்லி இரண்டு லட்சம் கணக்குக் காட்டி இருக்காரே .. .. !

கல்யாண வீட்ல உங்கப்பா கிட்ட இட்லி மல்லிகைப்பூ மாதிரியிருக்குனு சொன்னது தப்பா போச்சு ! பார் .. .. முதலிரவு கட்டில்ல இட்லியா போட்டு வெச்சிருக்கார் .. !

என்னப்பா சர்வரி .. .. டீ கிளாஸுக்குள்ள விரலை விட்டு டீ கொண்டுவர்றே .. .. ?
கவலைப்படாதீங்க சார் .. .. விரல் பொறுக்கற சூட்டுலதான் டீ இருக்கு .. .. !

ஏன் உங்க மூளையைப் படம் எடுத்துத் தரச் சொல்லி தொல்லைப்படுத்துறீங்க ?
எனக்கு மூளை இல்லேன்னு சொல்றவங்க கிட்டெல்லாம் காட்டத்தான் !

நிம்மதியைத் தேடி ஊர் ஊரா யாத்திரை போறதுக்குப் பதிலா, இப்படிச் செய்ஞா என்ன ?
எப்படி ?
உங்க மனைவியை கொஞ்சநாள் பிறந்த வீட்டுக்கு அனுப்பி வையுங்களேன் !

என்னங்க ! பொண்ணுப் பார்க்க வர்றதுக்கே மேளமெல்லாம் வைச்சு தடபுடலா பண்றீங்க ?
சும்மாவா ! என் பெண்ணை பார்க்க வர்றது நூறாவது பையனாச்சே.. .

என் கணவர் இரவு பகல்னு பார்க்க மாட்டார். எப்பவும் கடினமாதான் உழைப்பார். .!
அதான் இத்தனை குழந்தைகளைப் பார்த்தாலே தெரியுதே !

அன்பரே, கைவிட்டு விட மாட்டீங்களே ?
கையை எப்படி விட முடியும் கண்ணே. கைக்கு பத்து பவுன் வளையல் அல்லவா போட்டிருக்கே !

உங்க மனைவியைப் பற்றிப் பலபேர் பலவிதமா பேசறாங்களே, நீங்க கண்டிக்கக் கூடாதா ?
ஒருத்தர் ரெண்டு பேர்னா கண்டிக்கலாம். பல பேரை எப்படிக் கண்டிக்க முடியும்
சொல்லுங்க ?

போகாத கோவில் இல்லை குளிக்காத குளங்கள் இல்லை. ஆனால் இவர்களுக்குக் குழந்தையே இல்லையே.
கோவில் குளம் என்று தினம் தினம் போனவர்கள். படுக்கை அறைக்கே போகவில்லையே. எப்படி குழந்தை பிறக்கும் ?

ஓபன் ஹார்ட் சர்ஜரியை முதன் முதலில் செய்தவர் யார் ?
ஹனுமார்தான். தன் இதயத்தைக் கிழித்து ராமர் சீதையை எல்லாருக்கும் காட்டினாரே.

பசங்களை அப்பா அம்மா விளையாட்டு விளையாடச் சொன்னது தப்பாப் போச்சு.
என்ன ஆச்சு ?
பயங்கரமாக அடிச்சு சண்டை போட்டுக் கொண்டு ரத்தக் காயத்துடன் வந்து நிற்கறாங்க.

சிஸ்டர் ! எனக்காக ஒரு பாட்டு பாடுவீங்களா ?
ஓ.. .! ஆனால் திட்டக் கூடாது !

ம் .. . பாடுங்க !
ஆடி அடங்கும் வாழ்க்கையடா.. ஆறடி நிலமே சொந்தமடா.. .!
நன்றி குங்குமம் 28-7-2000

டாக்டர் சொல்படி நடக்கிறேன் !
டாக்டர் என்ன சொன்னார்.?
தினமும் வாக்கிங் போகச் சொன்னார்.. !

3001-ல் ஆட்சி அமைப்போம்னு பேசறீங்களே ஏன் ?
என்னோட பத்தாவது தலைமுறைக்குத்தான் ராஜயோகம் இருக்குன்னு ஜோசியர் சொன்னார் !

அந்த டைரக்டர் ஏன் நொந்துபோய் நிக்கிறாரு ?
தியேட்டர் வாசல்ல அவர் படத்தோட ரிசல்ட் கேட்டிருக்காரு, படம் பார்த்துவிட்டு வந்தவங்க. தியேட்டர்ல 50 சதவிகிதம் காசு 50 சதவிகிதம் மூட்டைப்பூச்சி மொத்தத்துல படம் 100 சதவிகிதம் கடின்னாங்களாம்.

நடிகை - டைரக்டர் சார் ! மார்வாடிகிட்டே என்னை ஏன் அழைச்சுட்டு வந்தீங்க ?
டைரக்டர் - அதான் சொன்னேனே.. . உங்களை வச்சுதான் இந்த படமே எடுக்கணும்னு !

அந்த மான் எதுக்கு கோவிலையே சுத்தி சுத்தி வருது ?
நான் தான் சொன்னேனே.. . அது சாதாரண மான் இல்லை.. பக்தி மான்-னு

அந்த எழுத்தாளர் ஆங்கில புத்தகத்தை கட்டிப் புடிச்சுகிட்டு இருக்காரே ஏன் ?
அதைத் தழுவி தமிழ்லே நாவல் எழுதப் போறாராம் !

ஆபரேஷனுக்கு 10 ஆயிரம் ரூபா தானே சொன்னீங்க, நர்ஸ் என்ன ஒரு ரூபா அதிகமா கேக்றாங்க ?
ஆபரேஷன் ஃபெய்லியர் ஆயிட்டா அந்த நாணயத்தை உங்க நெத்தியிலயே ஓட்டி அனுப்பிடுவோம் !
நன்றி குமுதம் 27-7-2000

சாப்பாட்டுக்கே கஷ்டமா இருக்கு டாக்டர்.. . தொண்டை வலி. .. .
இந்த மருந்தைச் சாப்பிட்டா சரியாப் போயிடும்.. . ஃபீஸ் அம்பது ரூபா.. .
ஃபீஸா ? நான்தான் சாப்பாட்டுக்கே கஷ்டம்னு சொன்னேனே டாக்டர் !

முப்பது பெட்ரூம் கொண்ட வீடு எங்கேயாவது வாடகைக்கு கிடைச்சா சொல்லேன் !
எதுக்கு .. ?
எங்க ஆபீஸுக்குதான் !

என்னது அந்த ஆளு போலி அரசியல்வாதியா !
ஆமாம். . அவரு ரொம்ப நேர்மையா, நாணயமா நடந்துக்கறாரு.. .!

டி.வி-ல இந்த மெகா சீரியல் நாடகம் ரொம்பப் பெரிசு போலிருக்கு.. .
ஏன்.. ?
நாடகத்தைத் தொடர்ந்து பாருங்கள்.. . நாடகத்தின் முடிவில் 12-6-3000 அன்று கேட்கப்படும் கேள்விக்குச் சரியாகப் பதில் சொல்பவருக்கு ஒரு கார் பரிசுன்னு சொல்றாங்களே.. . !

எங்க தலைவர் ரொம்ப நேர்மையானவர் !
எப்படிச் சொல்லறே ?
அவரு பாயைக்கூட சுருட்டமாட்டாரே !

மரியாதையா சொல்லுங்க.. . நேத்து ராத்திரி உங்க கனவுல யார் வந்தா.. .?
நீதாண்டி வந்தே !
பொய் சொல்லாதீங்க.. . பின்ன நீங்க தூக்கத்துல சிரிச்சீங்களே ?

என்னப்பா இது.. . சுண்டல் பொட்டலத்தோட ஒரு கூப்பன் தர்றே ?
அதுவா.. . இருபது கூப்பன் சேர்த்தீங்கன்னா ஊக்கப் பரிசா, லவ் லெட்டர் எழுதறதுக்கு பேனா, பேப்பர் எல்லாம் தருவேன் !

அந்த டாக்டர் ரொம்ப ரொம்ப சிம்பிள் !
ஃபீஸ் ரொம்ப கொஞ்சமா வாங்குவாரா ?
அது இல்லே.. . க்ளினிக்ல எப்பவும் லுங்கி பணியன்லதான் இருப்பாரு !

இந்த காலேஜ் பிரின்ஸிபால் டி.வி. மெகா சீரியல் தயாரிப்பாளராம்.. .
அதனாலென்ன ?
போன வாரம் புதன் கிழமை ஒளிபரப்பான எபிசோட்ல, கார்த்திகா என்ன கலர் புடவை கட்டியிருந்தாள்னு என்ட்ரன்ஸ் எக்ஸாம்ல கேள்வி கேட்டு வெச்சிருக்காரு.. ..

எப்படியாவது தலைவரா ஆயிடணும்னு முடிவு பண்ணிட்டேன்.. .
புதுக்கட்சி ஆரம்பிக்கப் போறீங்களா ?
சே.. . சே.. . புதுசா ஒரு சாதிச் சங்கம் ஆரம்பிக்கப்போறேன் .. .

நீங்க நடிச்ச ஒரு படம், தமிழ்நாட்டுல உள்ள எல்லா தியேட்டர்லேயும் நூறுநாளைக்கு மேல ஓடியிருக்குனு சொன்னீங்களே.. . அது எந்தப் படம் ?
ஒரு சோப்பு விளம்பரப் படம்ங்க.. ..

நீங்க மணிக்கு எவ்வளவு கிலோ மீட்டர் தூரம் ஸ்கூட்டர் ஓட்டுவீங்க ?
நான் எதுக்கு மணிக்க ஸ்கூட்டர் ஓட்டணும்.. . நான் என்ன அவனுக்கு டிரைவரா ?

ஏங்க .. . இந்த வாஷிங் மெஷின்லதான் எல்லா துணியும் நல்லா வெளுத்திருக்கே.. . அப்புறம் ஏன் ரிடர்ன் பண்றீங்க ?
அட வெளுக்கறதெல்லாம் கலர் துணிய்யா !

இந்த பேன் மருந்தை தலைல தடவுங்க பேனெல்லாம் செத்துப் போயிடும்.. .
என்ன டாக்டர் ! ஒவ்வொரு பேனா பிடிச்சு மருந்தை அதன் தலைல தடவறது ரொம்ப கஷ்டம் ஆச்சே !

அந்த ஆள் கடன் கேட்கறதைக்கூட ரொம்ப டெக்னிக்கா கேட்பாரு.. .
எப்படி ?
நூறு ரூபாய்க்கு சில்லறை இருந்தா கொடுங்களேன். அப்புறம் நூறு ரூபாய் தர்றேன்னு கேட்பாரு !
நன்றி ஆனந்த விகடன் 23-7-2000

எழுத்தாளர் மகளைக் கட்டினது வம்பா போச்சு !
ஏன் ?
வர்ணிச்சு வர்ணிச்சுத் திட்டுறா !

கல்யாண வீட்ல என் செருப்பை மட்டும் யாரும் திருட முடியாது !
ஏன் ?
முழுமையா சாக்கடைல நனைச்சு, நாறும்படியா விட்டுடுவேன்.. .

ஏன் அந்த டி.வி. சானல்ல எல்லாரும் நடுவுல உட்கார்ந்து செய்தி சொல்றாங்க ?
நடுநிலையோடு செய்தி சொல்றாங்களாம்.. .!

நம்ம மேனேஜர் எல்லாருக்கும் ஹேர் கிளிப் குடுக்கறாரே.. . ஏன் ?
நம்ம ஆபீஸ்ல லஞ்சம் தலைவிரிச்ச ஆடுதுன்னு வெளியில எல்லாரும் பேசிக்கறாங்களாம்.. .!

நம்ம தலைவர் அப்பாவியா இருக்கார்னு எதை வச்சி சொல்றே ?
ரகசிய காப்புப் பிரமாணம்னா எத்தனை பவுனுக்குப் போடுவாங்க'ன்னு கேட்கிறார்.. ..

கப்பல் மாதிரி கூடு பார்த்துத் தர்றேன்னு சொல்லி தரகர் ஏமாத்திட்டாரு.. .!
எப்படி ?
மழை வந்தா வீடு தண்ணில மிதக்குது.. .!

பேச்சாளரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பாயிடுச்சு !
எப்படி ?
முதலிரவுல பாலுக்குப் பதிலா சோடா எடுத்துட்டு வரச்சொல்றாரு.. .!

என் காதலர் என்னைக் கை விட்டுட்டாரு !
என்னடீ சொல்றே ?
என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறாராம் !

பையன் ரம்பா ரசிகையா இருக்கலாம். அதுக்காக பொண்ணை டவுசர் மாட்டிப் பார்க்கணும்னு சொல்றது டூ மச் !

ஆயிரம் ரூபா பிக்பாக்கெட் அடிச்ச பிளேடு பக்கிரி அம்பது ரூபா திருப்பித் தந்துட்டானா ஏன் ?
ஆடித்தள்ளுபடியாம் !

இன்னிக்கு அவருக்கு ஓசிப் பத்திரிகை கிடைக்கலையா ?
ஏன் ?
பத்திரிகை தர்மமே இல்லாமப் போச்சுன்னு புலம்பிக்கிட்டுப் போறாரே.. .

அவர் திடீர்னு கோர்ட்ல குட்டிக்கரணம் போடுறாரே.. . ஏன் ?
அதான் சொன்னேனே.. . அந்த சாட்சி பல்டி அடிப்பாருன்னு.. .

இன்று எனக்கும் அவனுக்கும் வெட்டிங்டே
புரியலையே
போன வருஷம் ஒருத்தரை ஒருத்தர் அரிவாளால் வெட்டிக்கிட்டோம்

இந்த மேட்ச்ல தோற்க பேட்ஸ்மேன் பணம் வாங்கிட்டாருன்னு எப்படிச் சொல்றே ?
பெவிலியனுக்குள்ளே வர்றப்ப பேட் இல்லாம வெறுங்கையோட வர்றாரே ? !

என்னப்பா சர்வர்.. . பேப்பர் ரோஸ்ட்ல கவர்ச்சிப் படம் போட்டிருக்கு ?
இது சண்டே ஸ்பெஷல் சார்.

உங்க பத்திரிகைக்காக கதை எழுதி வச்சிருந்தேன்.. . என் ரெண்டு வயது பையன் எடுத்துக் கிழிச்சுட்டான்.. .
தேவலாமே.. . ரெண்டு வயசுலேயே அவனுக்குப் படிக்கத் தெரிஞ்சுருக்கே !

அவரை ஏம்பா கத்தியால குத்தினே ?
அந்த நேரத்தில் கைல அதுதாங்க இருந்தது.

டைரக்டர் ஜாமெண்ட்ரி பாக்ஸோட அலையுறாரே.. . ஏன் ?
முக்கோணக் காதல் கதை எடுக்கிறாராம் !

ஏரியா தாதாவோட மகளைக் கட்டினது தப்பாப் போச்சு !
ஏன் ?
ஜாக்கெட்ல கைய மடிச்சு விட்டுக்கறா !

ஏன் அவர் ஸீட்டுக்கு கீழே நிறைய மாங்கொட்டைகள் இறைஞ்சு கிடக்கு ?
அவர் இந்த செக்ஷனில் முப்பது வருஷமா பழம் தின்று கொட்டை போட்டவர்.

நான் சொல்ல வேண்டிய விஷயத்தை மத்தவங்ககிட்டே சொல்லும் போது வேற எதையே சொல்லிடறேன் டாக்டர் !
இதுதான் உங்க பிரச்சினையா ?
அது இல்லை, வேற ஏதோ டாக்டர் !

ராத்திரி மூணு மணிக்குப் பேரணி நடத்துறாங்களே.. . இவங்க யாரு ?
குடுகுடுப்பைக்காரங்க !

கூட இருந்தே நீ குழிபறிக்கிறியாமே.. . அப்படியா ?
தலைவரே ! நம்பாதீங்க ! உங்களுக்காக வரவேற்பு ஆர்ச் வைக்க ரோட்டுல குழி தோண்டியதை யாரோ திரிச்சு சொல்லிட்டாங்க !
நன்றி குமுதம் 10-8-2000

உன்னைப் போய் கல்யாணம் பண்ணியிருக்கிறேனே.. . அப்போது நான் முட்டாளாக இருந்திருக்கிறேன் உமா .. .
ஆமாங்க.. . நானு அதைக் கவனிக்காமல் கல்யாணம் செய்துக்கிட்டேன்.

இனிமே நான் திருடறதை விட்டுட்டு சொந்தமா தொழில் பண்ணப் போறேன்.
பேஷ் ! என்ன தொழில் ?
பூட்டுக்கெல்லாம் மாத்து சாவி போடற தொழில் சார்.

சிக்கனமா வாழ்வது எப்படின்னு புத்தகம் வெளியிட்டிங்களே, அது ஏன் வியாபாரம் ஆகலை ?
புக்கோட விலை ரொம்ப அதிகமாச்சே .. .

என்ன ! உன் கணவர் தூக்கத்துல ஹலோ ஹலோன்னு டெலிபோன்ல பேசறா மாதிரிது பேசறாரு ?
நான்தான் சொன்னேனே ! அவருக்கு தூக்கத்துல கால் போடற பழக்கம் இருக்குதுன்னு.

மாப்பிளை நல்ல பசை உள்ள கை.. .
என்ன பண்றாரு ?
போஸ்ட்டர் ஒட்றாரு.. .

ஜெயிலர் வேலை கேட்கறியே.. . உனக்கு முன் அனுபவம் ஏதாவது இருக்கா ?
ஆறு வருஷம் ஜெயில்ல இருந்திருக்கேன் சார் !

டாக்டர் ! எனக்கு ரொம்ப நாளா தொடர்ந்து இருமலா இருக்கு .. .
ஒருவேளை மெகா தொடர் இருமலா இருக்குமோ ?

எனக்கு துரோகம் பண்ணிட்டு உங்களுக்கு சின்னவீடு கேட்குதா ?
சாரி முனியம்மா ! இதை தயவு செஞ்சு என் மனைவி கிட்ட சொல்லிடாதே !

காணாமல் போனவருக்கு கட் அவுட் வச்சு, கண்டுபிடிச்சுக் கொடுப்பவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்னு
எழுதி வச்சிருக்காங்களே.. . அவர் யாரு ?
இந்தத் தொகுதி எம்.எல்.ஏ.

கல்யாணத்துக்கு பிறகு நடிப்பீங்களா ?
பின்னே நடிச்சுத்தானே ஆகணும் !

பொண்ணு குனிஞ்ச தலை நிமிர மாட்டா !
அவ்வளவு அடக்கமா ?
இல்லே.. . அவ்வளவு சோம்பேறி !

ஹலோ மாட்டுக்கு உடம்பு சரி யில்லை டாக்டர். நீங்க எப்படி இங்கே வருவீங்க ?
கால்நடையா வர்றேன்.

ஒரு இன்ஸ்பெக்டரா இருக்கிற நீங்களே கிளப் டான்ஸ் பார்த்திருக்கீங்க.
யுவர் ஆனர். நீங்க சினிமாவே பார்க்கற தில்லையோ ? வில்லன்களெல்லாம் அங்கேதான் ஒண்ணு கூடுவாங்க.
பிடிச்சிடலாம்னு போனேன். என்னைப் பிடிச்சுட்டு வந்துட்டாங்க.

உங்க பொண்ணுக்கு பார்த்த டாக்டர் மாப்பிள்ளையை ஏன் வேண்டாம்னுட்டீங்க. வரதட்சனை அதிகமா கேட்டாரா ?
அது கேட்டால்தான் குடுத்துடலாமே. ஆனா வரதட்சணை வேண்டாம். தினசரி 4 நோயாளிகள் மட்டும் பிடிச்சுக் குடுங்கங்கறாரு. நடக்குற காரியமா இது.
நன்றி குங்குமம் 11-8-2000

மாமியார் பேசும்போது ஏன் ஊசி - நூலோட நிக்கறே ?
வாய் கிழியப் பேசுவாங்களே !

என் மாப்பிள்ளைக்குப் பாலும் தண்ணியும் வடியும் முகம் !
பால் வடியும் முகம்னுதானே சொல்லுவாங்க !
மாப்பிள்ளை பால்காரர் ஆச்சே.. . அதான் அப்படிச் சொன்னேன் !

என்ன ராப்பிச்சை.. . பத்து நாளா ஆளைக் காணோமே.. .
உடம்பு சரியில்லேன்னு இன்டர்நெட்ல பார்த்துத் தெரிஞ்சுக்கலையாம்மா !

அந்த டாக்டர் தையல்காரரா இருந்திருப்பார்போல !
எப்படி ?
ஆபரேஷன் முடிஞ்ச பிறகு மறுபடியும் தேவைன்னா ஓப்ன் பண்ண வசதியா, ஜிப் வைச்சுத் தைச்சுத் தரட்டுமாங்கிறாரே.. .!

சரித்திரக் கதை எழுத்தாளருக்குப் பெண்ணைக் கொடுத்தது தப்பா போச்சு !
ஏன் ?
சீர்வரிசையில ஸ்கூட்டருக்குப் பதிலா குதிரை கேக்கறாரு !

அந்தப் பையனோட அப்பா பைனான்ஸ் கம்பெனி எதுவும் வச்சிருக்காரா ?
ஏன் ?
ஓட்டப்பந்தயத்தில் நம்பர் ஒண்ணா இருக்கானே !

இது கிரிக்கெட் பிளேயரோட வாத்து-னு எப்படிச் சொல்றே ?
பக்கத்தில் பணத்தை வச்சாத்தான் முட்டையே போடுது !

அப்பா.. . உங்களுக்குத் துக்கத்தைத் தாங்கிக்கிற சக்தி இருக்கா ?
ஏண்டா அப்படிக் கேக்கறே ?
நான் பரீட்சையில ஃபெயிலாட்டேம்பா !

செவ்வாய் கிரகத்துல தண்ணீ இருக்காமே .. .?
தண்ணீ இருக்கு சரி ! தொட்டுக்க ஊறுகாய் இருக்கா .. .?

அந்த எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொல்றாரு ?
காவேரித் தண்ணீரைக் கொண்டு வர முடியலை, கிருஷ்ணாவைக் கொண்டு வர முடியலை.. . செவ்வாய் கிரகத்து தண்ணியாவது கொண்டுவர முடியுமான்னு கேட்கறாரு !

எங்க மானேஜர்கிட்டே நான் தண்ணி இருக்கிற இடமா பார்த்து டிரான்ஸ்பர் குடுங்கன்னு கேட்டது தப்பா போச்சு !
ஏன் ?
செவ்வாய் கிரகத்துக்கு மாத்திட்டாங்க !

அந்தப் படத்துல அப்படி என்ன பிரம்மாண்டமான செலவு பண்ணி எடுத்திருக்காங்க ?
கதாநாயகி குளிக்கிற காட்சியை செவ்வாய் கிரகத்துல எடுத்திருக்காங்களாம் !

என்ன நாரதரே.. . ஏன் கலைப்பாக காணப்படுகிறீர்கள் ?
மாநகரப் பேருந்தில் வந்தேன் ஸ்வாமி !

குங்ஃபு பண்ணும்போது வெளவ் வெளவ்-னு சப்தம் எழுப்பினது தப்பா போச்சி !
ஏன் ?
பிளாக் பெல்டுக்குப் பதிலா நாய் பெல்ட்டைக் கொடுத்துட்டாங்க !

இந்த ஆள் இதுக்கு முன்னாடி பனகல் பார்க்குல படுத்துத் தூங்கி இருப்பார் போலிருக்கு !
எப்படிச் சொல்ற !
டைட்டல் பார்க்குல தூங்கறதுக்கு பெஞ்ச போட்டு வச்சிருக்காங்களான்னு கேக்கறாரே !

ஸ்கூல் டீச்சரை கல்யாணம் பண்ணினது தப்பா போச்சு !
ஏன் ?
தொட்டதுக்கெல்லாம் ட்யூஷன் படிச்சிட்டு வான்னு சொல்றா .. .?

இந்த பைலில் கையெழுத்து போடுங்க.. .
சாதா கையெழுத்தா ? போர்ஜரி கையெழுத்தா ?

அந்த நடிகை ஏன் உதட்டை இன்ஷ்யூர் செய்யறாங்க ?
கமல் கூட நடிக்க வாய்ப்பு கிடைச்சிருக்காம் !

எங்கப்பாகிட்ட ப்ராக்ரஸ் ரிப்போர்ட்ல கையெழுத்து வாங்கறது ஈஸி.
எப்படி ?
ஆபீஸ் ஃபைலோட சேர்த்து கொடுத்திடுவேன். கண்ணை மூடிக்கிட்டு கையெழுத்துப் போட்டுடுவார்.
நன்றி இதயம் பேசுகிறது 6-8-2000

என் வண்டி டயருக்கு ரொம்ப வேர்க்குது சார் !
டயருக்கு எப்படி வேர்க்கும் ?
காத்தே இல்லியே, அதான் !

யானை விலை .. . குதிரை விலை சொல்லித் தொலைக்கறான் !
அப்படி என்ன வாங்கப் போனே ?
யானையும் குதிரையும்தான் !

ஐந்நூறு கிலோ ரேஷன் அரிசியை நீ கடத்தினது உண்மையா ?

இல்லை எஜமான்.. . நான் எடைபோட்டுப் பார்த்ததிலே நானூற்றைம்பது கிலோதான் இருந்துச்சு. பொய் சொல்றாங்க ரேஷன் கடைக்காரங்க !

எப்பவும் எல்லா நகைகளையும் மாட்டிக்கிட்டு இருக்கியே, ஏன் ?
எல்லாம் என் புருஷனுக்காகத்தான் !
நகையோடதான் இருக்கணும்னு சொல்லுவாரா ?
நீ வேற. .. வீட்ல வெச்சிருந்தா அவர் அடகுக் கடையில கொண்டு வெச்சிடுவார் !

மாமூல் தரமுடியாது உங்களால முடிஞ்சதைப் பாருங்க !
என்கிட்டே அப்படிச் சொல்லாதே பக்கிரி.. . ஏன்னா எனக்கும் சாராயம் காய்ச்சத் தெரியும். நான் ஆரம்பிச்சா அப்புறம் உன் தொழில் படுத்துடும்.. . பார்த்துக்க !

என்னது.. . கம்ப்யூட்டர் கிளி ஜோசியமா ?
ஆமா.. . உங்க ராசிக்கு ஏத்த மாதிரி, கிளி எடுத்துக்கொடுக்கற ஃபிளாப்பியை கம்ப்யூட்டர்ல போட்டுப் படிச்சுக் காமிப்போம் !

தினமும் நாய் துரத்திட்டு வர்ற மாதிரி கனவு வருதுனு சொல்லி டாக்டர்கிட்டே போனீங்களே.. . மருந்து கொடுத்தாரா ?
இல்லை.. . ரெண்டு மூணு கல்லைக் கொடுத்து கையில வெச்சிட்டே தூங்கச் சொன்னாரு !

அந்த டாக்டர்கிட்டே இருக்கிற பணமெல்லாம் நேர்வழில சம்பாதிச்ச பணம் இல்லை !
பின்ன எப்படி ?
எல்லாம் பைபாஸ் ஆபரேஷன் பண்ணி சம்பாதிச்சது !

மண்டையில அடிபட்டதுல உங்க மாமியாருக்குப் பழசெல்லாம் மறந்து போச்சு !
அப்ப.. . பழைய சண்டையை எல்லாம் மறுபடியும் போடலாமா டாக்டர் ?

உறவுல கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு நான் சொன்னப்போ பின்னால பிராப்ளம் வரும்-னு சொன்னீங்களே டாக்டர்.. . அது சரியாப் போச்சு .. .
என்ன ஆச்சு ?
என் முதுகுல கட்டி வந்துடுச்சு !

<u>நெட் ஜோக்</u>
தன் மகனைத் தரதரவென்று இழுத்துக் கொண்டுபோய், கணவன்முன் நிறுத்தினாள் அவள். உங்க பையன்கிட்டே கொஞ்சம் பேசுங்க.. . நான் சொல்ற எதையுமே கேக்கமாட்டேங்கிறான் !
பையன் பக்கம் திரும்பிய அப்பா, ரொம்ப கோபமாக சொன்னார். எவ்வளவு திமிர் இருந்தா உங்க அம்மா பேச்சையே மதிக்காம இருப்பே ? மனசுல என்னைவிடப் பெரிய ஆளுன்னு நினைப்பா ?

அந்த ஜவுளிக்கடையில ஆடித்தள்ளுபடி தர்றாங்களாம்.. .
ஏன்.. . ஆடாம தள்ளுபடி தரமாட்டாங்களா ?

<u>கிரிக்கெட் வீரர்கள் வீட்டில் வருமானவரித் துறையினர் சோதனை !</u> -செய்தி
என்னங்க.. . தாஜ்மகாலைப் போய் சி.பி.ஐ. ஆளுங்க ரெய்டு பண்றாங்க ?
கிரிக்கெட்காரங்க யாரோ அதை வாங்கிட்டதா கேள்விப்பட்டாங்களாம் !

நல்லா பேட்டிங் ஆடிக்கிட்டே இருக்கும்போது திடீர்னு தேவையில்லாம் அவுட் ஆயிட்டு பெவிலியனுக்குப் போயிட்டீங்களே.. . ஏன் ?
எதிரே ஓடி வர்ற பாஸ்ட் பவுலரைப் பார்த்தா வருமானவரித்துறை அதிகாரி மாதிரியே இருந்துச்சு.. அதான் !

அதோ வராரு பாரு, அவரு ஒரு மாட்சி ஃபிக்ஸர் !
நி,ஜமாவா ? பார்த்தா நம்பவே முடியலையே !
கல்யாணத் தரகர் வேற எப்படி இருப்பார் .. .?

நீங்க சாதிக்கட்சி ஒண்ணு ஆரம்பிக்கப் போறதா கேள்விப்பட்டேனே.. . எந்த சாதிங்க ?
ஒரு சாதியும் பாக்கி வெக்கலியே ! அதான், நான் என் பெண்சாதி பேர்ல ஒரு கட்சி ஆரம்பிக்கலாமானு யோசிச்சுக்கிட்டிருக்கேன். எல்லாரோட பெண்சாதிங்களும் வோட்டுப் போட்டா, கோட்டையைப் பிடிச்சுடலாமே !

தலைவரோட மகன் மார்க்ஷீட்ல அவரோட கையெழுத்தைப் போட்டு போர்ஜரி பண்ணின விஷயம் தெரிஞ்சதும் தலைவர்.. .
என்ன பண்ணினார் ?
அரசியல்ல எனக்கு வாரிசு கிடைச்சாச்சுன்னு சந்தோஷப்பட்டார் !

நம்ம புதுக்கட்சியோட சின்னம், இன்னொரு கட்சியோட சின்னம் மாதிரியே இருக்குதுன்னு அனுமதி தரமாட்டாங்களே, தலைவர் எப்படி அனுமதி வாங்கினாரு ?
இரண்டுக்கும் இடையில் ஆறு வித்தியாசம் இருப்பதை சுட்டிக் காட்டினாராம் .. !

சட்டசபையில் பக்கத்துல உட்கார்ந்திருக்கிற எம்.எல்.ஏ.க்கள் கூட தொணதொண-ன்னு தலைவர் பேசிக்கிட்டே இருக்காரே, என்ன விஷயம் ?
சட்டசபையில் தலைவர் பேசவே இல்லை-ன்னு யாரும் சொல்லிடக்கூடாதுங்கறதுக்காகத்தான் இப்படிப் பேசிட்டிருக்காரு !

என்ன தலைவரே, எல்லா ஃபைல்லயும் உங்க கால் ரேகையைப் பதிச்சிருக்கீங்க ?
எதிர்க்கட்சிக்காரன் எனக்கு கைநாட்டு மட்டும்தான் போடத்தெரியும்னு சொன்னான், அதான் !

தலைவர், தன்னோட மாமாவும் தாத்தாவும் சுதந்திரப் போராட்ட வீரர்கள்-னு சொல்றது நிஜமாய்யா ?
அவர் சொல்றது, நேருவையும், காந்தியையும்யா !

நம்ம தலைவர், உடைஞ்ச போன கண்ணாடித் துண்டுகளை வீட்டுல பத்திரப்படுத்தி வெச்சிருக்காரே, ஏன் ?
அதெல்லாம் அவர் அரசியலுக்கு வர்றதுக்கு முந்தி ஒரு கலவரத்துல உடைச்ச சோடா பாட்டில் துண்டுகளாம். ஞாபகார்த்தமா வச்சிருக்கார் !

தலைவர் உங்க செல் நம்பர் என்னான்னு கேட்டா 14-னு சொல்றீங்களே !
ஒஹோ.. .! செல்போன் நெம்பரைக் கேட்டாங்களா ? நான் ஜெயில் நெம்பரை கேட்கிறாங்கனு நினைச்சேன்.. ..

உங்க கட்சித் தொண்டர்களெல்லாம் கழுத்துல டைனாக்குலரை மாட்டிக்கிட்டு அலையுறாங்களே ! ஏன் ?
எங்க தலைவர், இனி மேல் நமக்குத் தொலைநோக்குப் பார்வைதான் முக்கியம்னு சொல்லியிருக்காரே !

காஷ்மீர் முதல்வரோட போட்டோவை யார் இங்கே மாட்டினது ?
உன் பெண்டாட்டிதான். .. சுயாட்சி வேணும்னு சிம்பாலிக்கா தெரிவிக்கிறாளாம். !

இருந்தாலும் இது ரொம்ப ஓவர்.. .!
என்ன ?
நம்ம கபாலி அவன் குடியிருக்கிற காலனிக்கு தன்னாட்சி கேட்டு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறானாம் !

கோமா ஸ்டேஜ்ல இருக்கற தலைவருக்கு நினைவு திரும்புமா ?
கீழே சில்லறை விழற சத்தம் கேட்டா மட்டும் காது துடிக்குது, மற்றபடி ஒரு முன்னேற்றமும் இல்லை !

அரசியல்வாதியின் பெண்ணை காதலித்து ஏமாந்து போய்விட்டேன். .
என்ன நடந்தது ?
உங்களுக்கு என் இதயத்தில் எப்பொழுதும் இடம் உண்டுனு சொல்லி, அவள் கல்யாணப் பத்திரிகையைக் கொடுத்தாள்.. .

நம்ம தலைவர் பீச்சுல மீட்டிங் வச்சிருக்கிறது முன் ஜாக்கிரதைக்குத் தான்னு எப்படிச் சொல்றே ?
அங்கதான் மேடை மீது எறிய சட்டுன்னு கல் கிடைக்காது !
நன்றி குமுதம் 17-8-2000

நான் இதுவரை நடத்தியதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் கேளுங்கள்.
நீங்க நடத்தினது என்ன பாடம் சார் ?

சனிப்பெயர்ச்சி அடுத்த மாதம்தானே வருகிறது. நீங்கள் போனவாரம் நடந்தது என்கிறீர்களே எப்படி ?
ஆறுமாதம் என் வீட்டில் தங்கியிருந்த என் மாமியார் போன வாரம்தானே ஊருக்குப் புறப்பட்டார் !

எங்கப்பாவுக்கு உங்கப்பா தேவலேடா !
எப்படி ?
உங்கப்பா உன்னை பத்து பைசாவுக்குப் பிரயோஜனமில்லேன்னு திட்றாரு. எங்கப்பா என்னை நயா பைசாவுக்குப் பிரயோஜனமில்லேன்னுல்ல திட்றாரு !

உன் கணவர் குஷியாக இருக்கிறாரே என்ன விஷயம் ?
நாளைக்கு ஊர்லேர்ந்து என் தங்கச்சி வர்றதா லெட்டர் வந்திருக்குல்ல அதான் !

பொறுமையா சொல்லுங்க.. உங்களுக்கு என்ன ப்ராப்ளம் ?
இப்போதெல்லாம் என்னுடைய கதாகாலட்சேபம் கேட்டு எனக்கே தூக்கம் தூக்கமா வருது டாக்டர் !

படுத்தால் தூக்கமே வரமாட்டேங்குது சார்.
ஏன் அப்பா ?
ஆபிஸ்ல உட்கார்ந்து தூங்கியே பழகிப் போச்சு.. .!

கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டுன்னு சொன்னது தப்பாப் போச்சு !
ஏன் ?

அவன் தினமும் சாணைக் கல்லுல தலையை வெச்சுத் தேய்ச்சுக்கறான்.

என்ன யோசிக்கிறீங்க ?
இங்கே ஒரு நாய்தான் மானேஜர்ன்னு பியூன் சொன்னான். நாயைக் கூடவா மானேஜரா போடுவாங்க ?

சாவுக்கும் வாணம்விடறாங்க, சாமி ஊர்வலத்துலேயும் வாணம் விடறாங்க. இது ஏன் சார். ?
அதுவா . .. முன்னது சவம் ! பின்னது உற்சவம் !

நாய், பன்றி, கழுதை, மாடு இந்த நாலு விலங்கும் உலகத்திலேயே இல்லாம போயிருந்தா என்ன நடந்திருக்கும் ?
கோபம் வந்த எதை சொல்லி திட்டுறதுன்னு திண்டாடியிருப்போம்.

எங்க தாத்தா ஓமியோபதி .. . எங்க அப்பா அலோபதி.. .
அப்ப நீங்க. .?
வெறும் சபாபதி !

கல்யாணத்துக்கப் பிறகு தான். நான் இந்த வீட்டிலே இருக்கிறேன் !
அப்போ, பிரம்மச்சாரியா இருந்தபோது எங்கே இருந்தீங்க !

பஸ்ஸில் உன் பக்கத்தில் அழகான இளம்பெண் உட்கார்ந்ததுக்காக சந்தோஷப்படாமல் ஏன் வருத்தப் படறீங்க ?
எப்படி சந்தோஷப்பட முடியும் ? வயசுப் பொண்ணு கூச்சமில்லாம நம்ம பக்கத்துல உட்கார்ந்தா என்ன அர்த்தம் ?
நம்மை வயசானவனா நினைக்கிறாள்னு தானே அர்த்தம் !

மூக்கும் முழியுமா இருக்கிற பையனை வீட்டு வேலைக்கு வைக்காதீங்கன்னு சொன்னேனே.. . கேட்டீங்களா ?
என்ன ஆச்சு ?
நம்ம பொண்ணு இப்போ வாயும் வயிறுமா இருக்கா !

நான் ஒரு பயங்கரமான கனவு கண்டேன்.
என்ன கனவு ?
நான் சினிமா தயாரிப்பாளர்.. . மேக்கப் இல்லாத நட்சத்திரங்களை வைத்து, பிலிம் இல்லாத கேமராவில் படம் பிடித்து, ஸ்கிரீன் இல்லாத திரையில் வெளியிடுவது போல் கனவு கண்டேன் !

என்னடி முனியம்மா ! உன் கணவனை டைவோர்ஸ் செய்யப் போறியாமே !
பின் என்னம்மா ? பெரிய சினிமா ஸ்டார் வீட்டு வேலைக்காரி இதுகூட செய்யாட்டா கௌரவமா இருக்கு மாம்மா ?
நன்றி குங்குமம் 18-8-2000

நான் நினைப்பேன்.. . அவர் கொடுத்துடுவார்.. .
என்ன ?
முத்தம்தான்.. .
மேட்ஃபார் ஞஇச்ஞ அதர்-னு சொல்லு

விளையாட்டு வினையாகும்ங்கிறது உண்மையாயிருச்சு பார்த்தீங்களா.. .!
யாருக்கு ?
நம்ம நாட்டு கிரிக்கெட் ஆட்டக் காரங்களுக்கு.. .!

என்னங்க இது.. . பெவிலியன்லேருந்து ஓடிவந்தவர் திடீர்னு பேட்ஸ்மேன் பேட்டை பிடுங்கிட்டு ஓடறார்.
யார் அவர். ?
கண்ட்ரோல் போர்டு ஆளாம். இந்த பேட்ஸ்மேன் மேலே இருந்த மாட்சி ஃபிக்ஸிங் குற்றச்சாட்டு இப்பதான் உறுதி ஆச்சாம் !

<u>நெட் ஜோக்</u>
ஞஅம்மா, கல்யாணப் பொண்ணுக்கு மட்டும் ஏன் வெள்ளை டிரஸ் போடறாங்க ?ஞ ஒரு திருமண விழாவில் கலந்துகொள்ள அம்மாவுடன் சர்ச்சுக்குப் போன சுட்டிப் பெண் கேட்டாள்.
ஞஏன்னா, வெள்ளை நிறம்தான் சந்தோஷத்தின் அடையாளம். தவிர, இன்னிக்குத்தான் அந்தப் பெண்ணோட வாழ்க்கையில் சந்தோஷமான நாள்.. . ஞ
அம்மா பதில் சொல்லி முடிக்கும் முன்பே அடுத்த கேள்வி வந்தது. ஞசரி.. . கல்யாண மாப்பிள்ளைக்கும் மட்டும் கறுப்பு ஸூட் போடறாங்களே .. . அது ஏன் ? ஞ அம்மா வாயடைத்துப் போனாள் !

டேய்.. . என்னடா, நீ கூட செல்போன் வாங்கிட்டியா ?
சீ.. . எவனெவனோ கைலே ஒரு செல்போனை வெச்சுக்கிட்டு ரோட்டுலே அலைஞ்சுகிட்டிருக்கான்.. . எனக்கு வெறுப்பாயிடுச்சு.. . !
கெட்டுப்போன டி.வி. ரிமோட்டை வெச்சுக்கிட்டு சும்மா பந்தா பண்ணிக்கிட்டிருக்கேன் !

பல் டாக்டர்கிட்டே போய் அந்த அரசியல்வாதி என்ன தகராறு பண்றாரு.. .?
அவருக்குப் பல் கட்டறதுக்குகூட டெண்டர் விடணுமாம் .. !

என்ன உங்க பையன் பஞ்ச பாண்டவர்கள் எத்தனை பேர்னு கேட்டால் மூணு பேர்னு சொல்றானே ?
கரெக்ட்தானே சார்.. . அதான் ராமன் லட்சுமணன் ரெண்டு பேரும் காட்டுக்குப் போய்ட்டாங்களே.. .!

எங்க வீட்டுக் கொசுக்களுக்கெல்லாம் சொகுசு ஜாஸ்தி.. .
ஏன் ?
ஃபேன் போடலைனா கோபப்பட்டு கடிக்கும்

அந்த கிரிக்கெட் பிளேயர் வீட்டுல இன்கம்டாக்ஸ் அதிகாரிங்களுக்கு நிறைய ரெக்கார்ட்ஸ் கிடைச்சிருக்காமே ?
ஆமாம்.. . அவருதான் விளையாட்டுல நிறைய ரெக்கார்ட்ஸ் வெச்சிருக்காரே !

அந்தப் பயிற்சியாளரையும்கூட ஏன் அதிகாரிங்க விசாரணை நடத்தறாங்க ?
அவருதான் எப்படித் தப்பு பண்ணலாம்னு ஆட்டக்காரங்களுக்குப் பயிற்சி கொடுத்தாராம் !

அரசியல்வாதிங்க வீட்டுல ரெய்டு வந்தா போய் ஆஸ்பத்திரியில படுத்துடறாங்களே.. . அது மாதிரி கிரிக்கெட் பிளேயருங்க ஏன் போய் படுத்துக்கலை.. .
படுத்தா, அடுத்த மாட்சுக்கு ஃபிட் இல்லைனு சொல்லிடுவாங்களே !

எதுக்கு உங்க மனைவி பேர்ல நிறைய கிரவுண்ட வாங்கிப் போட்டிருக்கீங்க.. ?
பேட்டிங் ப்ராக்ட்டிஸ் பண்ணத்தான் சார்.. .!

அந்த ஆள் பாவம், உலகம் தெரியாதவரா இருக்காரு.. .

ஏன்.. .?
ஈ-மெயில் அட்ரஸைக் கைல வெச்சக்கிட்டு ரோட்டுல போறவங்க வர்றவங்ககிட்டயெல்லாம் இந்த அட்ரஸ் எங்கே இருக்கு?-னு கேட்டுட்டு இருக்காரே .. .!

மவுண்ட் ரோட்டுல எருமை மாடு திடீர்னு ஓடிவந்துடுச்சு !
ஐயையோ .. .
அப்புறம்.. .?
டிராபிக் போலீஸ்காரர் பார்த்துட்டு, மாட்டுக்கிட்டே பாலையும் மாட்டுக்காரன்கிட்டே பணத்தையும் கறந்துட்டாரு. !
நன்றி ஆனந்த விகடன் 13-8-2000

எல்லா தகுதியும் இருந்தும், டெஸ்ட் மேட்சுல எல்லாம் நல்லா விளையாடியும், ஒரே ஒரு தகுதியில்லைன்னு என்னை இந்தியன் கிரிக்கெட் டீம்ல சேர்க்க மறுத்திட்டாங்க.. !
அப்படி என்ன தகுதி இல்லையாம்.. .?
எனக்குத் தேம்பித் தேம்பி அழத் தெரியலையாம்.. .

தலைவரே.. . பேச்சுவார்த்தை முறிஞ்சிட்டதா நேத்து மேடையில் பேசினீங்களே ?
ஆமாம்.. . அதுக்கென்ன ?
பச்சிலை கட்டுப்போட புத்தூர் நாட்டு வைத்தியர் வந்திருக்கார் !

உங்க வீட்டில நாலுபேர் இருக்கீங்க.. மாசத்துக்கு கால் மூட்டை அரிசிகூட செலவு இல்லேன்னு சொல்றீங்க.. .
எப்படி ?
வாரத்தில் மூணு நாள் என் பையனுக்குப் பெண் பார்க்கப் போயிடுவோமோ ?

எனக்கும் எங்க மாமியாருக்கும் நடக்கற சண்டை எங்க ஏரியாவுலயே ரொம்ப பாப்புலர் !
எப்படிச் சொல்றே ?
இப்போல்லாம் டி.வி-ல தினமும் எங்க வீட்டுச் சண்டையை லைவ்-வா டெலிகாஸ்ட் பண்றாங்கன்னா பார்த்துக்கோயேன் !

ஆடித் தள்ளுபடிலே டி.வி. வாங்கினீங்களே.. . எப்படி இருக்கு ?
டி.வி-யில படம் ஆடினே இருக்கு.. .!

என் மனைவி ஆடி முடிஞ்ச உடனே வருவா.. .!
அவங்க அம்மா வீட்டுக்குப் போயிருக்காங்களா ?
இல்ல ! டான்ஸ் கிளாஸ் போயிருக்கா !

ஆடி மாசம் பிறந்ததுக்கு உன் கணவர் ஏன் அவங்க அம்மா வீட்டுக்குப் போய்ட்டாரு ?
பின்ன ! அவருதான் என் விட்டோ மாப்பிள்ளையாச்சே.. .!

என்ன ! உங்க வீட்டு வேலைக்காரி டான்ஸ் ஆடினே பெருக்கற. ..?
இன்னைக்கு ஆடிப்பெருக்காம்.. .. !

இவ்வளவு வசதி இருந்தும் ஏன் பீடி அடிக்கறே ?
டாக்டர் என்னை சிகரெட் பிடிக்கக் கூடாதுனு சொல்லி இருக்கார் !

ஏன் உங்கப்பா உனக்கு ஃபைனான்ஸ் கம்பெனி வச்சுத் தரமாட்டேன்னு சொல்லிட்டார்.. .?
ஓட்டப் பந்தயத்தில் கடைசியாய் வந்தேன் !

அந்த ஓட்டல்ல ஐட்டமெல்லாம் ரொம்ப சுத்தமா இருக்கும் !
எப்படிச் சொல்றீங்க.. .?
அந்த ஓட்டல்லதான் எப்பப் பார்த்தாலும் ஈ ஓட்டினு இருக்காங்களே !

நம்ம ரகுபதிக்கு உடம்பு சரியில்லாமல் போயி, துரும்பா இளைச்சுப் போயிட்டான் !
ரகு-பாதி ஆயிட்டான்னு சொல்லு !

எதுக்குய்யா ஆபீசுக்கு காக்காவைப் பிடிச்சுகிட்டு வந்திருக்கே ?
காக்கா பிடிச்சா உங்களுக்குப் பிடிக்கும்-னு ஹெட்கிளார்க் சொன்னாரு சார். . !

நோயாளியை ஏன் ஊஞ்சல் கட்டிப் படுக்க வச்சிருக்காங்க ?
அவர் உயிர் ஊசலாடுகிறதாம் !

உங்க போலீஸ் நாய்க்கு மோப்ப சக்தி அதிகம்னு எப்படிச் சொல்றீங்க ?
புகார் கொடுக்க வர்றவங்க பாக்கெட்டில் எவ்வளவு பணம் இருக்குனு மோப்பம் பிடிச்சு சிக்னல் கொடுத்துடும் !

நேத்து எங்க தலைவர், தொகுதிக்கு குறை கேட்கப் போயிருந்தப்ப ஏகப்பட்ட நாய்கள் அவரைச் சூழ்ந்துக்கிட்டு குரைக்க ஆரம்பிச்சிட்டுது !
அப்படின்னா ! உங்க தலைவர் தொகுதிக்கு குரை கேட்கப் போனார்-னு சொல்லு !

நம்ம தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரும் ஜெயில்ல சந்திச்சுக் கிட்டாங்களாமே ?
ஆமாம், தற்ஜெயிலான சந்திப்பாம் !

உங்க வீட்டுல புரட்சி வெடிச்சிருச்சா என்ன சொல்றீங்க.. .?
எங்க அம்மாகிட்ட இருந்த சாவிக் கொத்தை என் மனைவி பிடுங்கிட்டாள்.

தலைவர் பேசும்போதெல்லாம் ரெண்டு மைக் வைக்கிறாங்களே.. . ஏன் ?
அவருக்கு ரெட்டை நாக்காம் !

அந்த ஹோட்டல் பேப்பர் ரோஸ்டையெல்லாம் பறிமுதல் பண்ணிட்டாங்களாம்.
என்ன விஷயம் ?
அதுல எடிட்டர், பப்ளிஷர், நிர்வாகி. . இவங்களோட பேர், அட்ரஸ்.. . எதுவும் போடலையாம்.. .!

பொண்ணு போட்டோவை மாப்பிள்ளைகிட்ட ஆபீஸ்ல கொண்டு போய்க் காட்டினது தப்பாப் போச்சு !
ஏன் ?
தூக்கக் கலக்கத்துல இருக்கிறப்ப என்னை ஏமாத்திட்டீங்கன்னு சொல்றாரு !

கமல் ரசிகையை காதலிச்சது நல்லதாப் போச்சு !

ஏன் ?
நான் முத்தம் கேட்கறதுக்குள்ள அவளே குடுத்துடறா !

என்ன டாக்டர், திடீர்னு கண்ணை மூடிக்கிட்டீங்க ?
பார்வை நேரம் முடிஞ்சிடுச்சு போயிட்டு நாளைக்கு வாங்க !

உங்க வீட்டுக்கு பின்னால இருக்கிற பெரிய கிரவுண்டு யாருது ?
அதெல்லாம். என்னோடதுதான் !
உங்களுக்குப் பெரிய பேக்கிரவுண்டே இருக்குன்னு சொல்லுங்க !

அந்த மெகா சீரியல் பரிசு போட்டியிலே, கலந்துக்கிட்டீங்களே ? என்ன பரிசு கிடைச்சது ?
ஒரு கிலோ ஜவ்வு மிட்டாய் கிடைச்சது !

என்ன டாக்டர் இது ? குணமான பிறகும் பேஷண்ட் டிஸ்சார்ஜ்-ஐ ஒத்திவைக்கறீங்க ?
அவர் பேர்லே, இன்னும் கொஞ்சம் சொத்து இருக்காம், நர்ஸ் !

அந்த எலக்ட்ரிக் கடைக்காரர் சரியான சபலப் பேர்வழி.. .
நிஜமாவா .. ?
ம்.. . அந்தக் கடைல வாங்கின ட்யூப் லைட் கூட கண்ணடிக்குதுன்னா பாரேன்.. .!

உங்க பையனைக் கொஞ்சம் கண்டிச்சு வைங்க.. ரொம்பத் திமிரா பேசுறான்.. .!
என்ன பேசினான் ?
ஏண்டா ரெண்டு நாளா ஸ்கூலுக்கு வரலைன்னு கேட்டான்.. . மதியாதார் தலைவாசல் மிதிக்க வேணாம்-னு நீங்கதானே சொன்னீங்கங்கறான்.. .!

தேர்தலில் வாத்து சின்னத்தில் போட்டியிட்டது தப்பாப் போச்சு !
ஏன் ?
ஒரு ஓட்டுகூட விழலையே !

ரிக்ஷா ஓட்டுகிறவரை கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பாப் போச்சா, ஏண்டி ?
வீட்ல சண்டை வந்தா மிதி மிதின்னு மிதிக்கிறாரே !

என்ன ! நம்ம கேடி கந்தன் தனி வெப்சைட் தொடங்கியிருக்கானா ?
ஆமாம், இதுவரைக்கும் எவ்வளவு திருட்டு நடத்தியிருக்கான். எத்தனை தடவை போலீஸ் மாட்டியிருக்கான். யார் யாருக்கு எவ்வளவு மாமூல் கொடுத்திருக்கான் போன்ற தகவல்களைத் தெளிவா அதுல சொல்லியிருக்கானாம் !

நிதி நிறுவனத்தைப் பத்தி வி. சேகர் படம் எடுத்தா என்ன பேரு வைப்பாரு ?
தெரிலையே .. .!
ஓடி வாழ்ந்தால் கோடி நன்மை

சரக்கு மாஸ்டர் தேவைங்கற விளம்பரத்தைப் பார்த்துட்டு அப்ளிகேஷன் போட்டியே, என்ன ஆச்சு ?
அங்கே போனப்புறம்தான் சொல்றாங்க, கள்ளச் சாராயம் காய்ச்சணும்-னு
நன்றி குமுதம் 24-8-2000

மேன் ஆஃப்தி மாட்ச் வாங்கினதுக்குப் போயா அந்த ஆட்டக்காரரை டீமை விட்டுத் தூக்கிட்டாங்க.. .?
ஆமாம் ! அவரு வாங்கினது புக்கிஸ் கிட்டே.. .

என்ன ! உங்க பையனைப் போய் பிரிட்ஜ் உள்ளே உட்கார வெச்சிருக் கீங்க ?
அப்பதானே அவன் கெட்டுப் போகாம இருப்பான்.

உங்ககிட்டே எப்படிச் சொல்றதுன்னு தெரியலை.. ..
டாக்டர் கிட்டேயும் வக்கீல்கிட்டேயும் எதையும் மறைக்கக் கூடாது. சும்மா சொல்லுங்க.. .
நானும் உங்க பொண்ணும் ரெண்டு வருஷமா உயிருக்குயிரா காதலிக்கிறோம். அதைத்தான் எப்படிச் சொல்றதுன்னு தெரியமா இருந்தேன் மாமா !

உங்களுக்குத் தமிழ் எந்த அளவு தெரியும் ?
படத்துல எனக்கு வேற ஒரு ஆள் டப்பிங் வாய்ஸ் தர்ற அளவுக்குத் தெரியும்.

எதுக்குடா போன வாரம் உன்னை ஸ்ட்ரெச்சர்ல வச்சுத் தள்ளிக்கிட்டுப் போனாங்க.. .?
எதிர் வீட்டுப் பெண்ணைப் பார்த்து ஸ்ட்ரக்சர் நல்ல இருக்குன்னு சொன்னதாலே பின்னிட்டாங்க.. .!

நான் ராஜ் டி.வியில் சித்தி பார்த்தேன்.. .
சன் டி.வி.லதானே சித்தி வரும்.
நான் சொன்னது ராஜ் டி.வி.ல நியூஸ் படிச்ச எங்க சித்தியை.. .

ஆபரேஷன் தியேட்டர் உள்ளே வந்த அந்த பேஷண்ட் என்ன முணுமுணுக்கறாரு.. .?
காடு வாவான்னுதாம், ஆஸ்பத்திரி போ போன்னுதாம்-னு .

அந்த கிரிக்கெட் வீரர் நடிகையோட வலையிலே விழுந்துட்டாருன்னு பேப்பர்ல போட்டிருக்கு !
ஓ ! இதைத்தான் நெட் பிராக்ட்டிஸ்னு சொல்றாங்களா .. !

இத்தனை வருடம் கழித்து கலாவதி மேல் கேஸ் போட்டாயே.. .
காலாவதி ஆயிடுச்சு.. .

இந்த மருந்துச் சீட்டைக் கொஞ்சம் படிச்சு சொல்லுங்க டாக்டர்.
எந்தக் கிறுக்கன் இப்படிக் கிறுக்கி வெச்சிருக்கான். !
நீங்கதான் டாக்டர். நேற்று எழுதிக் கொடுத்த மருந்துச் சீட்டு.

வானம் கூட குடிக்கும் போலிருக்கு.. .
எப்படிச் சொல்றீங்க.. .?
பின்ன ! இன்றும் வானம் தெளிவாக இருக்கும்-னு ரேடியோல சொன்னாங்களே.. .

அந்த நடிகருக்குக் கொஞ்சம்கூட டான்ஸ் ஆட வராதே.. . உங்க படத்திலே மட்டும் இவ்வளவு பிரமாதமா ஆடறாரே.. . ! எப்படி ?
அவரோட மனைவியைக் கூட்டி வந்து எதிரில் நிறுத்தினோம். அவர் உடம்பு தன்னாலே ஆட ஆரம்பிச்சுட்டது.. .!

என்னது, இசை அமைப்பாளரை வீரப்பன் கடத்திக்கிட்டு போயிட்டானா ?
ஆமாம், கேசட்டில் தன் குரலுடன் பேக்கிரவுண்ட மியூசிக் போடணுமாம்,

---

குருவே காலையில் எழுந்ததும் நீங்கள் யார் முகத்தில் விழிப்பீர்கள் ?
சிஷ்யா ! காட்டில் இருந்தால் நரி முகத்தில். கட்டிலில் இருந்தால் ஸ்த்ரீ முகத்தில்.

உன் மனைவியைக் கத்தியால் குத்தியது உண்மைதானே ?
இன்ஸ்பெக்டர் சார் ! நீங்க சொல்றது சுத்தப் பொய்யிங்க.. .. என் கையிலே அப்ப இருந்தது அரிவாளுதானுங்க.. .
நன்றி குங்குமம் 25-8-2000

நெட் கம்பெனிக்கு இன்டர்வியூவுக்குப் போனியே.. . கேள்வி எப்படி கேட்டாங்க ?
போல்டா கேட்டாங்க ?

பதவி ஏற்றதும் முதல்வர் எங்கே போயிட்டார் ?
இன்னிக்கு அவரோட பிறந்த நாளாம் ! அதனால எல்லா பிக்பாக்கெட் காரர்களையும் ரிலீஸ் பண்ண ஜெயிலுக்குப் போயிருக்கார்.. .

தமிழ்நாட்டில் டைகர் பார்க் கொண்டு வந்தது எங்கள் ஆட்சியில்தான் !
யோவ் ! அது டைடல் பார்க்யா.. ! இருக்கற வம்பு போதாதா ?

நீங்க ஆசையா வளர்த்த நாய் உங்களைக் கடிச்சுதா ? அது எப்படிங்க ?
ஏன் மாமியாரைப் பார்த்து வாலாட்டுச்சுன்னு வாலை அறுத்துட்டேன் !

பத்திரிகைலருந்து ஜோக் திரும்பி வர்றது தபால்காரருக்கூட இளக்காரமாப் போச்சா ஏன் ?
சார்.. . காப்பி வந்துருக்குன்னு கத்தறார் !

உன் வீட்டிலே அப்பப்ப எலிகள் எட்டிப் பாத்துட்டு ஓடுதே !
பொறியிலே அதுக்கு ஆகாரம் வைச்சுட்டேனான்னு வந்து பார்க்கும் !

வேரோடு பிடுங்கப்பட்ட மரத்தை ஏன் கிரேன்ல கொண்டு போறாங்க.. .?
தலைவர் மரம் நடப்போறாராம் !

வள்ளுவர் எங்கே பிறந்தார் ?
வள்ளுவர் கோட்டத்திலே சார் !

கரும்புன்னு பெயர் வைச்சது தப்பா போச்சா ஏன் !
ஆபீசிலே சக்கையாய் பிழியறாங்களே !

உன் கடைசி ஆசை என்ன ?
தி.நகர் ரங்கநாதன் தெருவிலே சாயந்தர வேளைல காலாற நடந்து போகணும் !

சார்.. . இன்னைக்குக் குலுக்கலை வாங்கிட்டுப் போங்க.. காலையிலே யோகலட்சுமி வீட்டுக் கதவைத் தட்டப்போறா !
யோவ். .. போனவாரம் நான் தனலட்சுமி வீட்டுக் கதவைத்தட்ன விவகாரமே இன்னமும் தீரலை.. .
நன்றி இதயம் பேசுகிறது 20-8-2000

சார்.. .. லேட்டஸ்ட் பட காஷெட் எல்லாம் வந்திருக்கு.. எது வேணும் ?
வீரப்பன் காஸெட் இருந்தா குடுங்க.. !

வைக்கோல் சாப்பிட்டா கண் பார்வைக்கு நல்லது !
சும்மா அளக்காதே.. .
உண்மையாதான் சொல்றேன்.. . எந்த மாடாவது மூக்குக்கண்ணாடி போட்டிருக்கா ?

<u>நெட் ஜோக்</u>
கூட்டம் திரண்டிருந்த ஒரு மதுக்கடைப் பக்கமாகப் போன ஒரு பாதிரியார், அங்கே ஒருவனை அழைத்துக் கேட்டார்.. . ஞஉனக்கு சொர்க்கத்துக்குப் போக விருப்பமா ?ஞ
அவன் ஆமாம் என்று பதில் சொல்லவும் உடனே இந்த இடத்தைவிட்டு ஓடிப்போ என்றார். அடுத்து இன்னொருவனிடமும் அதே கேள்வி.. அதே பதில்.. அதே உத்தரவு.
முழுப்போதையில் மூழ்கித் திளைத்துக்கொண்டிரந்த மூன்றாவது ஆளிடம் வந்தார் பாதிரியார். ஞஉனக்கு சொர்கத்துக்குப் போக விருப்பமா ?ஞ என்று கேட்டார். அவன் இல்லை என்றதும் திகைத்துப் போய்விட்டார்.
ஞஎன்னது.. . நீ செத்ததுக்குப் பிறகு சொர்க்கத்துக்குப் போக விருப்பம் இல்லையா ? ஞ
அவன் சிரித்தான்.. ஞஓ. . . நான் செத்ததுக்கு அப்புறமா ? ஏதோ இப்பவே ஒரு கோஷ்டியா எல்லோரையும் சொர்க்கத்துக்குக் கூட்டிட்டுப் போகப் போறீங்களான்னு நெனைச்சட்டேன் ! ஞ

அந்த டாக்டர் எதுக்கு வாய்ல துணி கட்டிக்கிட்டு பாங்க் உள்ளே போறாரு.. .?
பாங்க் அக்கௌண்டை ஆபரேட் பண்ணப் போறாராம்.

இந்த மருந்தை தினமும் காலையில வெறும் வயித்துல சாப்பிடுங்க.. .!
பனியன்கூடப் போட்டிருக்கக்கூடாதா டாக்டர் ? !

அவசியம் இருந்தால்தான் உங்களுக்கு டெஸ்டெல்லாம் எடுக்க வேண்டியது இருக்கும் !
அது எப்ப தெரியும் டாக்டர் ?
லேப் வெச்சிருக்கிற என் தம்பி போன் பண்ணுவான்.. .!

சே ! சரியான அல்ப டாக்டர்.. .. இதுக்கு முன்னாடி ஆட்டோ ரிக்ஷா ஓட்டிக்கிட்டிருந்தார் போலிருக்கு !
எப்படிச் சொல்றீங்க ?
தர்மாமீட்டர் மேல ரெண்டு ரூபா போட்டுக் கொடுங்கறாரே !

ஆபரேஷனுக்கு எனக்கு பதிலா வேற நர்ஸை ஏற்பாடு பண்ணிக்குங்க டாக்டர் !
ஏன் ?
ஆபரேஷன்ங்கிற பேர்ல நீங்க பண்ற கொலைகளுக்கு உடந்தையா இருக்கேனோனு மனசுக்குள்ளே நெருடலா இருக்கு !

நேற்று நான் வந்தப்போ நீங்க இல்லை, உங்க கம்பவுண்டர்தான் மருந்து கொடுத்தார் !
ஐயையோ.. . என்ன ஆச்சு ?

ஒரே வேளையில குணமாயிடுச்சு !

இந்த மாத்திரையைச் சாப்பிட்டப்புறம் உடம்புல அங்கங்கே ஊசி குத்தற மாதிரி இருக்கு டாக்டர் !
டோன்ட் வொர்ரி.. . ஏதோ ீமே-வினைவுன்னு நினைக்கிறேன்.

உடம்பை இவ்வளவு ஸ்லிம்மா வெச்சிருக்கீங்களே.. . என்ன காரணம்னு கேட்டா, இலை போட்டு சாப்பிடுவேன்னு சொல்றீங்களே !
ஆமாம் வெத்தலையிலதான் சாப்பிடுவேன் !

என் மாமியார் வந்த ஆட்டோ கவுந்துடுச்சு.. .
ஐயையோ.. . அப்புறம் என்ன பண்ணே ?
ஆட்டோகாரனுக்கு மீட்டருக்கு மேலே போட்டுக் கொடுத்தேன்.. .

நேத்து நம்ம வீட்டுக்கு வந்த திருடனை உங்கப்பாதான் அனுப்பியிருப்பாரோன்னு எனக்குச் சந்தேகமா இருக்க !
ஏங்க வீணா அவர்மேல பழியைப் போடுறீங்க.. .?
பின்ன என்ன.. . வரதட்சணையா வாங்கின ஐம்பதாயிரத்தை எடு-னு திருடன் கரெக்ட கேட்டானே. !

தலைவருக்கு அரேஸ்ட் வாரண்ட் வந்ததுக்குப் போய் தொண்டர்களை ஏன் சிறை நிரப்பும் போராட்டம் பண்ணச் சொல்றாரு ?
அவரு உள்ளே வரும் போது வாழ்க கோஷம் போடறதுக்கு !

ஏன்யா ! ஆபீஸுக்கு லேட்டு ?
தெரியாம பஸ்ல தூங்கிட்டேன் சார் !
பஸ்லயே தூங்க வேண்டியதுதானே எதுக்கு ஆபீஸுக்கு வந்தே ?

கிணறு தோண்டினீங்களே.. . தண்ணி எப்படி ?
இளநீர் மாதிரி.. .!
அவ்வளவு ஸ்வீட்டாவா ?
இல்ல.. . ஒரு இளநீர்ல எவ்வளவு தண்ணி இருக்குமோ, அவ்வளவுதான் இருந்தது !

புனைப் பெயரை ஆயுள் சந்தா-ன்னு வச்சுருக்கீங்களே.. . ஏன் ?
நா அனுப்புற படைப்புகளைப் படிக்கறப்ப ஆசிரியருக்குச் சந்தோஷம் வரட்டும்னுதான் !

நடிகை நந்தினி வீட்டில் சி.பி.ஐ. சோதனை போட்டதிலிருந்து.. .
என்னாச்சு ?
சி.பி.ஐ. புகழ் நந்தினி-னு டைட்டில் போடக் கட்டாயப் படுத்துறாங்க !

அவரு தனியாவே ஸ்கூல் ஆரம்பிக்கலாம் !
அப்படியா.. . அவ்வளவு பணக்காரரா ?
ம்ஹூம்.. . அவருக்கு அவ்வளவு பிள்ளைங்க.. .!

என் கடைசித் தம்பிகிட்ட நேத்து படி படி-ன்னு சொன்னேன்.. . கேட்காம .. .
என்ன.. . ஃபெயில் ஆயிட்டானா !
ம்ஹூம். .. மாடிப்படியில தடுக்கி விழுந்து காலை ஒடிச்சுக்கிட்டான் !

கிரிக்கெட்ல உனக்குப் பிடிச்சது பேட்டிங்கா ? பௌலிங்கா ?

பெட்டிங் !

மாப்பிள்ளை பிரகாஷ்ராஜ் மாதிரி இருப்பார்னு சொல்லி ஏமாத்திட்டாங்க !
ஏன் ?
அப்பு பிரகாஷ்ராஜ் மாதிரியாம் !

பீர்பால் தெரியுமா ?
இரண்டுமே பருகும் பானங்கள் சார் !

வேடந்தாங்கலுக்குப் பறவைகள் எங்கிருந்து வருது ?
முட்டையிலிருந்து சார் !

அந்த டாக்டர் போலின்னு எப்படிக் கண்டுபிடிச்சீங்க ?
ஆபரேஷன் பண்றதுக்குத் தியேட்டருக்குப் போலமான்னு கேட்டதுக்கு. இப்ப டிக்கெட் கிடைக்காது.. . மேட்னிக்கு டிக்கெட் ரிசர்வ் பண்ணிட்டுப் போலாம்-னு சொல்றாரு.

அந்த டாக்டர் போலி டாக்டர்-னு எப்படி கண்டுபிடிச்சிங்க !
எலும்பு உடைஞ்சிருக்கு.. . உடனே போய் பெவிகால் வாங்கீட்டு வாங்க, அப்படின்னு சொல்றாரு !

அந்த நடிகை கோல்டன் சர்ஜரி பண்ணிக்கிட்டதா அடிக்கடி பேட்டி குடுக்கறாங்க. ..
ஒண்ணுமே புரியமாட்டேங்குதே ?
பிளாஸ்டிக் சர்ஜரின்னு சொன்னா அவங்க இமேஜ் பாதிக்குமாம்.. . அதான் இப்படி மாத்தி சொல்றாங்க !

சித்திரகுப்தா. .. உன்னோட கோரிக்கை என்ன ?
சுவடியில் எழுதி எழுதி கைவலிக்குது.. . அதனால் ஒரு கம்ப்யூட்டர் வாங்கிக் கொடுத்தா ஈசியா இருக்கும் பிரபு !

என்னப்பா ராப்பிச்சை.. . நேத்து உன்னை ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் பக்கம் பார்த்தேனே.. .?
பிச்சைக்காரர்கள் மாவட்ட மாநாடு நடந்தது. அதான் போயிட்டு வந்தோம்
நன்றி இதயம் பேசுகிறது 27-8-2000
ஷாம்பூ போட்டுக் குளிப்பது நல்லதா ? சீயக்காய் போட்டுக் குளிப்பது நல்லதா ?
பாத்ரூமில் தாழ்ப்பாள் போட்டுக் குளிப்பதுதான் நல்லது.

எனக்குச் சர்க்கரை வியாதி.. . டாக்டருக்கே ஆயிரம் ரூபாய் செலவாகிடுச்சு.
ஆச்சரியமா இருக்கு.. . உனக்கு வந்த சர்க்கரை வியாதிக்கு டாக்டருக்கு ஏன் ஆயிரம் ரூபாய் செலவாச்சு ?

உட்காரவே முடியாத தரை எது ?
புளியோதரை !

உலகத்திலேயே பெரிய கட்டட இன்ஜீனியர் யாரு தெரியுமா ?
தெரியலையே !
அஜீத் ! ஏன்னா, அவருதான் சேலையிலேயே வீடு கட்டுவார் !

உலகத்திலேயே பெரிய ஆசாரி யாரு ?
சிம்ரன் ! ஏன்னா அவங்கதான் ஜாக்கெட்லேயே ஜன்னல் வைப்பாங்க !

காதலில் சைவம், அசைவம்னு ரெண்டு வகை இருக்கு. உதாரணம் சொல்லு பார்ப்போம்.. .
கதாநாயகி தொப்புளில் ஹீரோ தோசை சுட்டா அது சைவம். ஆம்லெட் போட்டா அது அசைவம்.

அந்தக் காலத்துல ஏன் தட்டுங்கள் திறக்கப்படும்-னு சொல்லியிருக்காங்க ?
அப்பா காலிங்கெல் கிடையாது.. . அதான் !

என்னது.. . அந்தக் குதிரை முழுசா ஒரு வரி பேசுச்சா ? ஆச்சரியமா இருக்கே ?

பின்னே.. . அது ஒரு வரிக்குதிரையாச்சே.. .!

டெலிபோனை எடுத்து என்னனு கேளு, போ !
டெலிபோன் அடிக்கலையே அத்தை !
ஆமா.. . அது அடிக்கிற வரைக்கும் காத்திருக்கணுமா ? நீயே போய் எடுத்தா குறைஞ்சு போயிடுவியாக்கும் ?

என்னடா இது, சரித்திரப் பாடத்திலே முப்பது மார்க்தான் வாங்கியிருக்கே ? நான் ஸ்கூல்ல படிக்கிறப்பல்லாம்
சரித்திரத்துல தொண்ணூறுக்குக் குறையாம மார்க் வாங்குவேன் !
நீங்க படிக்கறபோது அம்பது வருஷ சரித்ரம் கம்மியாச்சேப்பா !

எதுக்கு அந்த அரசியல்வாதி மேல வழக்குப் போட்டிருக்காங்க.. .?
வருமானத்துக்கு அதிகமா சின்ன வீடு வெச்சிருக்காராம் அதான்.. .!

அது வக்கீல்களுக்கான இன்டர்வியூ என்னைப் பொறுத்தவரைக்கும் நேர்மைதான் ரொம்ப முக்கியம் ! என்று சொன்ன
கம்பெனி முதலாளி, முதல் நபரிடம் கேட்டார் - மிஸ்டர் பீட்டர் ! நீங்க நேர்மையான வக்கீலா ?
என்ன சார் அப்படிக் கேட்டுட்டீங்க ? என்று பார்வையாலேயே கேட்ட பீட்டர், என்னோட நேர்மையைப் பத்தி
புரியவைக்க ஒரு உதாரணம் சொல்றேன் சார் ! எங்க அப்பா என்னோட படிப்பு செலவுக்காக மொத்தம்
பதினைந்தாயிரம் டார் செலவு பண்ணினார். ஒரு வக்கீலா நான் கோர்ட் படியேறி முதல் கேஸ் முடிச்சதுமே
கொஞ்சமும் பாக்கி வைக்காம அவ்வளவு பணத்தையும் திருப்பிக் கொடுத்துட்டேன் என்றான்.
அப்படியா ? ரொம்ப நல்லது. சரி, அதென்ன கேஸ் ?
அந்தப் பணத்துக்காக எம்மேல எங்க அப்பா போட்ட கேஸ்தான் சார் அது !

நம்ம பையனுக்கு நல்லா உறைக்கற மாதிரி நாலு வார்த்தை கேட்டேன் !
உடனே அவன் என்ன பண்ணான் ?
ஒரு பாட்டில் ஐஸ்வாட்டரை குடிச்சுட்டான் !

என் மனைவி என்னை அஞ்ச அடி அடிச்சா திருப்பி நான் அவளை ஒரு அடி அடிப்பேன்..
நிஜமாவா ?
ஆமாம்.. . அவ ஒரு நாளைக்கு குறைஞ்சது என் கையால நாலு அடியாவது வாங்குவா.. .!

இப்படி அடிக்கடி தூங்கித் தூங்கி என்னத்தக் கண்டீங்க ?
ரெண்டு தடவை ஐஸ்வர்யாராயையும் ஒரு தடவை சிம்ரனையும் கனவில் கண்டேன் !

நம்ம ஜனங்க நடைபாதையைப் பயன்படுத்தறதே இல்லேனு மேயர் வருத்தப்பட்டிருக்காரே ?
பயன்படுத்தற மாதிரி அவர் வைக்கலையேனு நாம வருத்தப்பட வேண்டியதுதான் !

தஞ்சையில் முடிதிருத்தும் தொழிலாளர் சங்கப் பேரணி நடந்தது. -செய்தி
சவரி-யமா எல்லாம் முடி-ஞ்சா சரிதான் !

துப்பாக்கி முனையில் மனைவியிடம் பத்திரத்தில் கையெழுத்து கேட்ட ஆடிட்டர்
கைது ! - செய்தி
கணவனே ழரசே-கண்ட தெய்வம்னு நிரூபிச்சுட்டாரு !

அமெரிக்காவில் இன்டர்நெட் பயன்பாட்டில் ஆண்களைவிடப் பெண்களே அதிகம் ! -செய்தி
வலையில் விழுவது பெண்களுக்குக் கைவந்த கலையாச்சே !

7.5 லட்சம் டன் அரிசி தமிழகத்தில் கையிருப்பு. அமைச்சர் நேரு தகவல். -செய்தி
வெல்-டன் !

ஆந்திர சட்டசபையில் அமளியில் ஈடுபட்ட எதிர்க்கட்சி எம்.எல்.ஏ-க்கள் கூண்டோடு சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.
-செய்தி
ஸ்டீல்

போளூர் பகுதியில் சாராய வேட்டை பதினெட்டு பெண்கள் கைது. -செய்தி

சரியான அராக்-கிகள் !

மாவட்டத் தலைநகரங்களில் நீச்சல் குளத்துடன் கூடிய விளையாட்டு வளாகம் அமைக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். -செய்தி
அதில் பண முதலைகள் விளையாடாமல் இருக்க வேண்டும்.

பாகிஸ்தானுக்கு சீனா உதவி, அமெரிக்க உளவு நிறுவனம் அறிக்கை. -செய்தி
உதா-சீனா-ப்படுத்த முடியாத செய்திதான் !
நன்றி ஆனந்த விகடன் 27-8-2000
தடுக்கி விழுந்ததுக்குப் போயா டாக்டர் வீட்டுக்குப் போனீங்க.. .?
ஆமாம் ! நான்தான் சொன்னேனே, எங்க தெருவுல தடுக்கி விழுந்தா டாக்டர் வீடுன்னு.. .

எங்க ஆபீஸ் ஸ்டெனோ லதா ஆபீஸ்ல எல்லாரையும் கட்டின புருஷன் மாதிரி நினைக்கிறா.
எப்படி ?
அவ, ஆபீஸ்ல யாரையுமே மதிக்கறதே இல்லை.

வீரப்பனைக் காட்டில் போய்ச் சந்திப்பீர்களா ?
ஆபத்தான காட்சிகளுக்கெல்லாம் டூப்தான்.

ரெண்டு பெண்டாட்டிக்காரன் பாடு திண்டாட்டம் என்கிறாங்களே அது உண்மையா ?
எனக்குத் தெரியாது எனக்கு மூணு பெண்டாட்டி !

அனுமதி பெற்று உள்ளே வரவும்-னு போர்ட்டு வச்சிருக்கோமே படிக்கலையா ?
அனுமதி வாங்கத்தான் சார் வந்தேன் !

ஜோசியரே ! நல்லா ஜோசியம் பார்ப்பீங்களா ?
டவுட்டா இருந்தா செக் பண்ணிப் பாருங்க.. .
உங்களுக்குப் பணம் தர என்கிட்ட பணம் இருக்கா ? இல்லையான்னு சொல்லுங்க பார்ப்போம் ?

டாக்டர், கண்ணில் இருந்து ஒரே தண்ணியா வருது டாக்டர்.. .
எப்பல்லாம் வருது ?
என் மனைவி என்னை அடிக்கும் போதெல்லாம் டாக்டர் !

அந்தாளு எதையும் முழுசாச் சொல்ல மாட்டான். மொட்டையாத் தான் சொல்வான்.
அவன் பேரு ?
திருப்பதி.

பேகன் மயிலுக்குப் போர்வை கொடுத்தான். இதிலேருந்து என்ன தெரியுது ?
அந்தக் காலத்தில் ஸ்வெட்டர் பழக்கத்தியே இல்லேன்ன தெரியுது, சார்.

அவர் கோட்டில் ஏன் இவ்வளவு கிழிசல் இருக்கு ?
வறுமைக் கோட்டுக்குள் இருக்கிறாராம்.

அவங்க ரெண்டு பேரும் ரைட் பிரதர்ஸ்.
அப்படீன்னா ?
ரெண்டு பேருமே பஸ் கண்டக்டர்ஸ், அதான் அப்படிச் சொன்னேன்.

அந்தத் திருடனை ஏன் பலமா உதைக்கிறாங்க ?
திருடுற வீடுகள்ல போலீசை நம்பாதே-ன்னு எழுதி வச்சுட்டு வர்றானாம்.

ஆஸ்பத்திரியில் இருந்து ஏன் தலைதெறிக்க ஓடி வர்றீங்க ?
ரெண்டு வாரத்துக்கு முன்னால் என் கடைவாய்ப் பல் வலி என்றேன். எடுத்து விட்டார். சென்றவாரம் மேல் வாய் பல் வலிக்கிறது என்றேன். அதையும் பிடுங்கி விட்டார்.
இன்றைக்கு என்ன ஆச்சு ?

பல்வலி இல்லை, தலை வலிக்கிறது !

மாதக் கடைசி என்றால் என் கணவர் என் காலைப் பிடித்து விடுவார். என் கையைப் பிடித்து விடுவார்.
அவ்வளவு ஆசையா ?
இல்லை. இல்லை. பணத்தேவைக்கு அடகு வைக்க என் கை வளையல் , கால் கொலுசுகளை உருவத்தான் இப்படிச் செய்வார்.

தெரியாத்தனமா, பூசணிக்காய் வியாபாரம் செய்யறவர் வீட்டுக் கல்யாணத்துக்குப் போயிட்டேன்.
சமையல்ல பூசணிக்காயா ?
அதில்ல. தாம்பூலப் பையில் ஆளுக்கொரு பூசணிக்காய்.. .! தூக்கிட்டு வந்ததில் ரெண்டு கையும் செம வலி !

என்னை டைவர்ஸ் பண்ணிட்டு இன்னொருத்தரைக் கல்யாணம் பண்ணப் போறியாமே . .. என் ?
ஒன்றை இழந்தால்தான் இன்னொன்றைப் பெற முடியும் !
நன்றி குங்குமம் 1-9-2000
நம்ம படத்துல கதை சரியில்-லேன்னு விமர்சனம் வந்திருக்கு.. .
இதுக்குதான் அப்பவே சொன்னேன்.. . கதையே இல்லாமப் படம் எடுங்கன்னு.. .

அந்த நடிகை ஏன் தகராறு செய்யறாங்க ? நடிக்கமாட்டேன்னா ?
ஊஹூம் .. . கவர்ச்சி காட்டாமல் என்னால் நடிக்க முடியாதுன்னுதான் அடம் பிடிக்கிறாங்க.

உங்களோட அடுத்த படம் பிரம்மாண்டமான பட்ஜெட்ல உருவாகப் போகுதாமே ?
ஆமா.. . அந்தப் படத்துல பல் செட்டை-க்கூட தோட்டா தரணி தான் போடப் போறாரு. !

கமலுக்குப் பிடித்த பழம் எதுன்னு சொல்லு பார்க்கலாம் ?
கிஸ் மிஸ் பழந்தான் !

லட்சாதிபதி ஆவது எப்படின்னு புத்தகம் போட்ட நீங்க ஏன் பிச்சை எடுக்கறீங்க ?
இதுவும் அதுல ஒரு வழிதாங்க !

இரண்டு மாடுகள்
அந்தப் பட போஸ்டரைத் திங்க வேண்டாம்.
ஏன் ?
அந்தப் படத்தோட கதையை ஜீரணிக்க முடியலைனு விமர்சனம் எழுதியிருக்காங்களே !

நீங்க சொன்ன கதைக்கும் நீங்க எடுத்த படத்துக்கும் சம்பந்தமே இல்லையே.. .?
நான் தான் வித்தியாசமான படம் எடுப்பேன்னு அப்பவே சொன்னேனே !

போலீஸ்காரங்கள்லாம் ஒண்ணா சேர்ந்து படம் எடுக்கிறாங்க.. .
படம் பேரு ?
கேடி வாழ்ந்தால் கோடி நன்மை.

அந்த டாக்டர் ஒரு எழுத்தாளர்னு எப்படிச் சொல்றே ?
ஆபரேஷன் முடிஞ்சதும் பேஷன்ட் உடம்பில் முற்றும்-னு எழுதி வெச்சுட்டு போறாரே !

நம்ம கிளை செயலாளர் லாரி நிறைய ஆட்களைக் கொண்டு போறாரே, ஏன் ?
நம்ம தலைவர், கட்சில களை எடுக்கணும்னு சொன்னாராம். ஆதான், களையெடுக்க ஆட்களைக் கூட்டிட்டுப் போறாரு !

இந்த நாடகத்துல நான் குண்டோதரனா நடிக்கிறேன்.. .
உன் நடிப்புக்கு சரியான தீனி கிடைக்கும்னு சொல்லு.. .

கிரிக்கெட்டை மையமா வெச்சு படமெடுத்து தப்பாப் போச்சு.
என்னங்க ஆச்சு ?
படம் ஓடும் ஓடாதுன்னு அவனவன் பெட்டிங் கட்ட ஆரம்பிச்சுட்டானே !

டாக்டர்.. . ஏழாம் நம்பர் பெட் பேஷண்ட் மாடியிலேர்ந்து குதிச்சு செத்துட்டாரு !
ஆபரேஷன் பண்றதுக்குள்ளே அவசரப்பட்டுட்டாரே !

அடியே ! நான் சாமியார் ஆகிவிட்டேன் !
சரி, இப்பவாவது நாலுகாசு சம்பாதிக்கப் பாருங்க.. .

இன்னைக்கு ஸ்டேஷனில் ஒரு கேஸைத் துருவித் துருவி விசாரிச்சேன் !
அதெல்லாம் கிடக்கட்டும்.. . முதலில் தேங்காயைத் துருவுங்க.. . அப்புறம்தான் சாப்பாடு.. .!

நாட்டு வைத்தியரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டுத் தவிக்கிறேன் ?
ஏன் ?
தலைக்கு வேப்பம்-பூ வாங்கிட்டு வந்து வச்சுக்கச் சொல்றாரு !

இருந்தாலும் நம்ம தொண்டர்கள் இப்படி இங்கிதம் இல்லாம நடந்திருக்கக் கூடாதுய்யா ?
என்ன விஷயம் ?
தொண்டரோட அப்பா இறந்ததற்குத் தலைவர் மாலை போடும் போது கூட ஜோரா கைதட்டி இருக்காங்க.. .!

உன் கணவர் கல்யாணத்துக்குப் போறாரா ?
எப்படி கண்டுபிடிச்சே ?
செருப்புப் போடாமப் போறாரே !

உன் புருஷன் உனக்கு நெஞ்சுவலின்னு டாக்டர்கிட்ட கூப்பிட்டும் நீ வரமாட்டேன்-னு மறுத்திட்டியே .. . ஏன் ?
முன்பு அப்படித்தான் பல்லுவலின்னு போனேன்.. . பல்லைக் காட்டச் சொன்னாருடி ! இப்ப நெஞ்சு வலி.. . அதைக் காட்டுன்னு கேட்பாரே !

ஆந்திராவில் மூலைக்கு மூலை காண்டம் விற்பனை குறைந்த விலைக்கு காண்டம் தர அரசு முடிவு ! - செய்தி
டிக்கெட் கூட ஒரு காண்டம் தர்றீங்களே ?
நாலணா சில்லரை இல்லை சார்.. . அதுக்குப் பதிலாத்தான் ஒரு.

இன்னைக்கு ராமாயணத்திலிருந்து சுந்தர காண்டம் நடத்தப் போறேன் !
அப்படின்னா காமசூத்ரா, ஸ்பைரல், கோஹினூர் காண்டமெல்லாம் என்னைக்கு

நான் கோர்ட்டுல போட்டிருந்த ரெண்டு கேஸையும் தள்ளுபடி பண்ணிட்டாங்கப்பா !
ஏன் அப்படிப் பண்ணினாங்க.. .?
ஆடித்தள்ளுபடியாம்.. .!

இருந்தாலும் நம்ம தலைவர் ரொம்ப ஓவரா சகுனம் பார்க்கறாரு !
ஏன் ? என்ன ஆச்சு ?
பார்லிமெண்ட்டுக்குப் போகும்போது குறுக்கே கருப்புப் பூனை படை வந்துடுச்சின்னு திரும்பி வந்திட்டாரே ?

மிளகாய்த் தூள் வியாபாரிக்கு எப்படி என் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கறது !
ஏன் ?
என் பொண்ணு கண் கலங்காம வாழமுடியாதே !

எங்க மதுரைக்கு "துரு" பஸ் இருக்கா ?
இல்லீங்க, எல்லாமே பெயிண்ட் அடிச்ச பஸ்தான்.. .!

என்னங்க.. . தலைவரு மேடை பூரா ஒரு ரூபா, ரெண்டு ரூபா, அஞ்சு ரூபா நாணயங்களைக் கொட்டி வச்சிருக்கிறாரு ?
அவரை நாணயம் இல்லாதவருன்னு ஊர்ல எல்லாரும் சொன்னாங்களாம் !
நன்றி இதயம் பேசுகிறது 3-9-2000
என்னது, அவர்கள் ஹைடெக் காதலர்களா ?

ஆமாம், முன்பு பனகல் பார்க்கில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தவங்க. இப்போது டைடல் பார்க்குக்கு வந்துட்டாங்களே. .!

ராத்திரி பனிரெண்டு மணிக்கு சபாவிலே மிருதங்கம் வாசிக்கணுமா ! யாருமே இருக்கமாட்டாங்களே ? நீங்கதானே, தனி ஆவர்த்தனம் செய்ய வாய்ப்பு கேட்டீங்க !

மாப்பிள்ளை டி.வி பார்த்து ரொம்பக் கெட்டுப் போயிட்டார்னு எப்படிச் சொல்றீங்க.
ஆபீசுக்கு போகாம. காதல் செவ்வாய்-னு நம்ம பொண்ணுகிட்ட கொஞ்சிக்கிட்டிருக்காரே !

ஓடி, ஓடி அலுத்துப் போயிடுச்சுன்னு சொல்லுறாரே, அவர் பெரிய ஓட்டப் பந்தய வீரரா ?
இல்லை பைனான்ஸ் கம்பெனி முதலாளி.

மதர் செண்டிமெண்ட் படத்துல சரத்குமார் நடிச்சாருன்னா என்ன பேரு வைப்பாரு.
தாயி.

ஆபரேஷன் தியேட்டரில் படுக்கச் சொன்னா ஏன் மார்ச்சுவரியில் படுத்திருக்கீங்க ?
சுற்றி வளைச்சு இங்குதானே கொண்டு வருவீங்க !

கட்சிக்காக தினம் இருபத்து நாலு மணி நேரம் உழைக்கறேன் தெரியுமா ?
வேண்டாம் தலைவரே.. . லேபர் ஆபீஸ்லேருந்து ஏதாவது பிரசினை பண்ணப் போறாங்க.. .!

ஏன் அந்த எழுத்தாளர் ரெண்டு டன் பேப்பர் கேட்கறாரு ?

மெகா தொடருக்கு வசனம் எழுத வாய்ப்பு கிடைச்சிருக்காம்.

கல்யாண பத்திரிகைல மாப்பிள்ளையோட பேரையும் காணோம்.. . பொண்ணோட பேரையும் காணோமே.. . ஏன் சார் ?
இது ரகசிய திருமணமாச்சே !

தலைவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்தது தப்பாகிவிட்டதா !
ஆமாம்.. . நர்ஸிங் ஹோம் வைத்து தரச் சொல்லி அடம் புடிக்கிறார் !
நன்றி குமுதம் 7-9-2000

பையன் இருக்கிற இடமே தெரியாது-னு தரகர் சொன்னப்ப, மாப்பிள்ளை பரமசாது-னு நினைச்சோம். .. ஆனா இப்பத்தான் தெரியுது - அவர் தலைமறைவாயிருக்காரு-னு !

சிஸ்டர்.. . என்ன இது. .. எல்லா பேஷண்ட்டுகளும் கட்டிலுக்கு அடியில படுத்திருக்காங்க. ?
கூரை இடிஞ்சு விழுந்துட்டா என்ன பண்றதுன்னு பயப்படுறாங்க சார்.. .!

மனைவி - நான் செத்த பிறகு சொர்க்கத்துக்குப் போவேன்.. . நீங்க .. ?
கணவன் - நான் நரகத்துக்குத்தான் போவேன். .
மனைவி - ஏன்.. .?

கணவன் - சொர்க்கத்துல நீ இருப்பியே !

பக்கத்து வீட்டுக்கார் நியூஸ் படிக்க ஓசி பேப்பர் கேட்கிறாருன்னு சொல்லி பேப்பரை நிறுத்தினது தப்பா போச்சு.. .
ஏன் ?
இப்ப நியூஸ் பார்த்துட்டு தர்றேன்னு சொல்லி டி.வி-யை ஓசி கேட்கிறாரு.. .!

என்ன.. . நம்ம தலைவர் இப்பல்லாம் பாட்டுப் பாட ஆரம்பிச்சுடறாரு ?
அவருக்கு வாய்ஸ் இருக்குன்னு காண்பிக்கத்தான்.. !

நம்ம சட்சில ஊழலைக் கண்காணிக்க பத்து பேர் கொண்ட ஒரு குழு அமைக்கப் போறோம்.
அந்தப் பத்து பேர்ல என்னையும் போட்டுக்கங்க.. . எவ்வளவு பணம் வேணாலும் தர்றேன் !

காபரே நடிகைக்கும் கிரிக்கெட் பிளேயருக்கும் என்ன வித்தியாசம் .. ?
காபரே நடிகைங்க ஆடிச் சம்பாதிப்பாங்க.. . கிரிக்கெட் பிளேயருங்க ஆடாம சம்பாதிப்பாங்க.. .!

டாக்டர், எனக்கு அடிக்கடி கழுத்துவலி வருது.. .
பொண்டாட்டியைத் தலைல தூக்கி வெச்சுக்கிட்டு ஆடினா.. . இப்படித்தான். !

எனக்குப் பொறுமையே இருக்கமாட்டேங்குது டாக்டர்.. .!
ரெண்டு, மூணு மெகா சீரியல் நாடகம் பேர் எழுதித் தர்றேன். தொடர்ந்து பாருங்க.. .!

நாளைக்கு எங்க ஆபீஸ்ல இன்ஸ்பெக்ஷன் நடக்கப் போகுது.. !
அதுக்கு நான் என்ன செய்யணும்.. ?
தூக்கம் வராம இருக்க ஏதாவது மாத்திரை எழுதிக் கொடுங்க டாக்டர் !

அந்த ஆள் போலி டாக்டர்னு எப்படிச் சொல்றீங்க.. .?
பின்ன .. ! என்னோட ப்ளட்ல யூரியா நிறைய இருக்கு.. . அதனால தலைமுடி நல்லா வளரும்னு சொல்றாரே.. .!

இன்னும் கொஞ்ச நேரம் லேட்டா வந்திருந்தீங்கன்னா அவ்வளவுதான் !
உயிருக்கே ஆபத்து வந்திருக்கும்-னு சொல்றீங்களா டாக்டர் ?
இல்லே.. . நான் கிளினிக்கை இழுத்து மூடிட்டு வீட்டுக்குப் போயிருப்பேன்.. ..

டாக்டர், ஒரு வாரமா பின்னாடி தலைமுடி ஒரே கொட்றது.. .
முன்னாடி எப்பவாவது இது மாதிரி கொட்டியிருக்கா. ?
இல்லே டாக்டர்.. . பின்னாடி தான் கொட்டியிருக்கு.. .!

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பாலும் தேனும் பெருகி ஓடும்-னு சொன்னீங்களே.. .?
சொன்னது உண்மைதான். ஆனா, எங்க சுகாதார அமைச்சர், அப்படி நடந்தால் நாட்டில் ஈக்களும் எறும்புகளும் பெருகி மக்களுக்குத் தீராத் தொல்லை யாகும்-னு சொன்னதால் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டோம். !

சார்.. .இந்தப் புடவை லேட்டஸ்ட் மாடல்.. . கட்டினா சூப்பரா இருக்கும்.. .!
அதெல்லாம் முக்கியமில்லே.. . துவைக்கிறதுக்கு ஈசியா இருக்குமான்னு சொல்லுங்க.. .!

சர்க்கஸில் பல்டியடிச்சுப் பணம் சேர்த்தே இவன் பெரிய லட்சாதிபதி ஆயிட்டான்.. .!
அப்ப பல்டி மில்லியனர்-னு சொல்லு !

ரயில்வே ஸ்டேஷன்களில் குற்றவாளிகளைக் கண்காணிக்க விடியோ காமிரா பொருத்தப்படும். -செய்தி
சே.. . விடியோ காமிரா வெச்சுக்கூட ரெண்டு பொட்டிய காணோம் !
அப்படியா.. . பொட்டிய எங்க வெச்சீங்க ?
அட, காணாமப் போனது ரெண்டு ரயில் பொட்டிய்யா !

இவரை மாதிரி ஒரு கஞ்சப் பேர்வழியை நீங்க பார்த்திருக்கவே மாட்டீங்க !
ஏன் ?

கல்யாண விடியோ செலவு மிச்சம் பண்ணணும்னு சொல்லி தன் பொண்ணோட கல்யாணத்தை சென்ட்ரல் ஸ்டேஷன்ல வெச்சிருக்கார் !

ஏன்யா, ஒரே நாள்ல ஏகப்பட்ட திருட்டு நடந்திருக்குது.. .விடியோ காமிராக்களை வெச்சுக்கிட்டு என்னய்யா பண்றீங்க. ..?
திருட்டுப் போனதே விடியோ காமிராதான் சார் !

என்னய்யா இது, அதோ ஒருத்தன் திருடிக்கிட்டுப் போறான்.. . எல்லோரும் அட்டென்ஷன்ல நின்னுக்கிட்டிருக்காங்க ?
யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்னு அறிவிச்சாங்க இல்லே.. . அதான். . .!

நேத்துதான் முதன்முதலா சமைச்சேன்னு சொன்னியே.. . ரொம்புவும் கஷ்டமா இருந்ததா ?
இல்லியே.. ..
நான் சமைச்சபோது கேட்கலே.. . சாப்பிட்ட போது கேட்டேன் !

நெட் ஜோக்

அந்தக் கட்டடத்தின் இருபத்தைந்தாவது மாடியிலிருந்து முதலாளி, முதல் மாடியிலிருந்த ஒரு குமாஸ்தாவை அவசரமாக போனில் அழைத்து, ஒரு முக்கியமான ஃபைலை உடனே எடுத்து வருமாறு பணித்தார்.
அரை மணி நேரம் ஆகியும் குமாஸ்தாவைக் காணோம். முதலாளி பதற்றத்தில் விரல்நகத்தைக் கடித்துக்கொண்டிருந்தபோது, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஆஜரானார் குமாஸ்தா.
திகைத்துப்போன முதலாளி தாமதத்துக்குக் காரணம் கேட்க, குமாஸ்தா சொன்னார். சார் வேகமா வந்துடணும்தான் ஃபைலோடு லிஃப்டுக்குப் போனேன். அங்கே பார்த்தா, அவசர காலங்களில் படிக்கட்டுகளைக் பயன்படுத்துங்க-னு எழுதி இருந்துச்சு. நான் என்ன பண்ணட்டும் ?

கல்யாண வீட்டுக்குப் போனா பழைய செருப்புதான் போட்டுக்கிட்டுப் போவேன். யாரும் எடுத்துக்கிட்டுப் போக மாட்டாங்க.
அது சரி.. . ஆனா, நீ அதைத்தானே போட்டுக்கிட்டு வரணும் !
வேற ஒரு நல்ல செருப்பு கிடைக்கலேன்னாதானே அந்த கவலை.. .?

என் மூணு பசங்களும் படிப்புல கவனம் செலுத்தாம பணம் சம்பாதிக்கணும்ங்கிற குறிக்கோள்லயே இருக்கானுங்க.. !
உன் பிசினஸைப் பார்த்துக்கறாங்களா ?
நீ வேற.. . கிரிக்கெட் கத்துக்கறாங்க !

அப்பளத்தை அரெஸ்ட் பண்ணிட்டாங்களாம், ஏன் தெரியுமா ?
ஏன் ?
ஏன்னா, அது சுட்ட அப்பளமாம் !

கொள்ளைக்காரனுக்கு தூக்குத் தண்டனை.. . கருணை மனு போடுவார்.. .
யாருக்குப் போடுவார்.. . வீரப்பனுக்கா ? !
நன்றி ஆனந்த விகடன் 3-9-2000
டாக்டர், காதுல எப்பவும் ரயில் ஓடற மாதிரி சத்தம் கேக்குது.
முதல்ல, ரயில்வே ஸ்டேஷனுக்கு பக்கத்துல இருந்து வீட்டை மாத்துங்க.

ஆஸ்பத்திரிலேர்ந்து டிஸ்சார்ஜ் ஆகி வந்த எங்க அம்மா மயக்கம் போடுற அளவுக்கு என்ன சொன்னே ?
முருகனுக்கு உங்களை அலகுக் காவடி எடுக்க வைக்கிறதா வேண்டிக்கிட்டிருக்கேன்னு சொன்னேன். அவ்வளவுதான் !

டேய் ! மாணவர்கள் யாரும் புகை பிடிக்கக்கூடாது.
யாராலேயும் புகையைப் பிடிக்க முடியாதில்ல சார் ?

டாக்டருக்குப் படிச்சிருக்கிற பையனுக்கு லவ்-லெட்டர் கொடுத்தது தப்பாப் போச்சு.
ஏன் அவர் பதில் எழு தலையா ?
அட நீ வேற.. . அவர் பதில் லெட்டர்ல என்ன எழுதியிருக்கார்ன்னே புரியல.. .

ஜெயிலுக்குப் போன அந்த போலிச் சாமியார் வெளியே வந்து இப்போ என்ன பண்ணிட்டிருக்கார் ?

போளி வியாபாரம் செய்துட்டிருக்கார். !

நாம் கல்யாணம் செய்து கொள்ளலாமா ?
நான் மேரீட்
அப்ப காதலிக்கலாமா ?

ராமன் காட்டுக்குச் சென்றான், ராமன் காட்டுக்குச் சென்றான்.. .
யார்டா காட்டுக்குச் சென்றது ?
நக்கீரன் கோபால், அப்பா.

என் கணவருக்கு நான்தான் சார் உலகமே.. .
அதான் உலகம் எப்ப அழியும்ன்னு அடிக்கடி எல்லாரையும் கேட்டுக்கிட்டிருக்காரா ?

என் கணவரை ஒருமுறை சந்திச்ச வங்க மறுமுறை சந்திக்கத் தேடி வந்துவிடுவாங்க.. .!
அவ்வளவு இனிமையா பழகுவாரா.. .?
அதில்லை.. . பாக்கெட்ல இருந்த பேனாவைக் காணோம், பர்ஸைக் காணோம்னு வருவாங்க ! ஹி. .. ஹி.. .

வாங்க சார். டாக்டர் இல்லீங்களே.. . வெளில போயிருக்கார்.
சரி.. . பரவாயில்லை. நர்ஸைக் கூப்பிடுங்க வந்ததுக்கு அவங்களையாவதுப் பார்த்துட்டுப் போயிடறேன்.

நேத்து நைட் எங்க வீட்டுக்கு வந்த திருடன் ரொம்ப அமைதியான கேரக்டர் போல.
எப்படிச் சொல்றே ?
அவன் வந்ததும் தெரியலை போனதும் தெரியலை. அப்படி காம் டைப்.

நான் எடுத்த படத்தைப் பார்த்தபோது ரெண்டு இடத்துல ரொம்பப் பிடிச்சுருந்துச்சா, எந்தெந்த இடத்துல ?
இடைவேளை-ன்னு போட்டபோதும், வணக்கம்-ன்னு போட்டபோதும் !

என்ன சார் ? ரயில்வே ஸ்டேஷன்ல ரெண்டு நாளா உட்கார்ந்துட்டு இருக்கீங்க ?
வெய்ட்டிங் லிஸ்ட்ல என் பேரு இருக்கு.

மேடம் நீங்க எப்படி நடிகை ஆனீங்க ?
அது ஒரு பெரிய கதைங்க.
சொல்லுங்க. நீங்க நடிக்கிற படத்துலதான் கதை இருக்காது. இந்தக் கதையாவது கேட்டு வைப்போம் !

உங்களுக்கு ஒரு இனிப்பான செய்தி.. .
என்ன ?
உங்களுக்கு சர்க்கரை வியாதி.. .

நீ சொல்றத நம்பறதுக்கு, நான் என்ன முட்டாளா ?
தெரியாதுங்க ! நான் நேத்துதானே வேலைக்கு சேர்ந்தேன் !

சித்தமுந்தி கேட்டப்ப பெண்ணுக்குச் சொந்தம்னீங்க. இப்ப பிள்ளைக்குச் சொந்தம்ங்கறீங்களே
ஹி.. . ஹி.. . இன்னும் கொஞ்ச நேரத்துல பெண்ணே, பையனுக்குச் சொந்தமாகத்தானே போகுது !

மூத்தவனான உனக்கு இன்னும் கல்யாணம் ஆகலே ! உன் தம்பிக்குக் கல்யாணம் ஆயிடுச்சாமே ?
அவன் பஸ் டிரைவர் ! ஓவர் டேக் பண்ணியே பழக்கம் !

டபுள்ஸ் போனதுக்கா போலீஸ் அந்த ஆளைத் தள்ளிக்கிட்டு போறாங்க ?
ஆமாங்க, எதிர் வீட்டுப் பொண்ணைக் கூட்டிக்கிட்டு டபுள்ஸ் படம் பார்க்கப் போயிருந்தாராம் !

அந்த டைரக்டர் என்ன, நடிகையோட வயித்தையே பார்த்துக்கிட்டு இருக்காரு.. ?
தொப்புள் காட்சி எடுக்க லொகேஷன் பார்க்கறாரு.. .

அவனை நாயேன்னு திட்டினது தப்பாப் போச்சு.

ஏன், என்ன ஆச்சு ?
கடிச்சுட்டான்.

அந்த ஆளுக்கு உலக அனுபவமே போறாது.
ஏன் ?
இங்கேர்ந்து பம்பாய்க்கு எஸ்.டி.டி. பேசினா பணம் அதிகமாகும்னு சொல்லிட்டு, பம்பாய்க்குப் போய் அங்க லோக்கல் கால்ல பேசிட்டு வர்றாரு.

வரப்போகிற தேர்தல்ல, அந்த இரண்டு கட்சிகளுக்கும் கண்டிப்பா கூட்டணி இருக்கும்னு எப்படிச் சொல்றே ?
இரண்டு கட்சிக்காரங்களும் ஒருத்தரை ஒருத்தர் கடுமையாகத் தாக்கிப் பேசிக்கிறாங்களே, அதை வச்சுத்தான் !

அட்சதைக்கு பதிலா எல்லோரும் பேனா இங்கைத் தெளிச்ச மணமக்களுக்கு ஆசி வழங்குறாங்களே.. . ஏன் ?
பேனா நட்பு காதலாகி கல்யாணத்துல முடிஞ்சதாம். அதான். !

அந்த விளையாட்டு வீரர் பணத்துக்கு பக்கி மாதரி அலைஞ்சிருக்காரே ?
இல்லாட்டி புக்கி-கூட தொடர்பு வச்சிருப்பாரா என்ன ?

நீங்க ஆவியோட எல்லாம் பேசுவீங்களாமே ?
ஆமாம் ! அதுக்கென்ன ?
எங்க தாத்தா ஆவியோட பேசி அவரோட உயிலை எங்கே வெச்சிருக்காருன்னு கொஞ்சம் கேட்டுச் சொல்லுங்களேன்.

இப்ப டெலிபோன்ல நீங்க உங்க மனைவிகிட்டேதானே பேசினீங்க ?
ஆமாம் ! எப்படிக் கண்டு பிடிச்சீங்க ?
தலையை ஆட்டிக்கிட்டே பேசினீங்களே.. .

காலம் தலைகீழா மாறிப்போச்சுங்க.
எப்படிச் சொல்றீங்க ?
பையன் ஃபைனான்ஸ் கம்பெனி வச்சிருக்கான்னு சொன்னதும், பெண்ணோட அப்பா ஒரே ஓட்டமா ஓடிட்டாரே !

அந்த ஆண் ஒரே வாய்ல நாலு இட்லி சாப்பிடுவாரு.
இதுல என்ன ஆச்சரியம் இருக்கு ! எல்லாரும் ஒரே வாய்லதானே சாப்பிடறாங்க.

அது என்ன ! டைரக்டர் ஷங்கரோட பாம்பா ?
ஏன் கேட்கறீங்க.. .?
பிரம்மாண்டமா படம் எடுக்குதே.. .

என்னங்க.. .! நானும் 3 மாசமா நாய் மாதிரி கத்திக்கிட்டுக் கிடக்கேன். கழுத்துக்கு ஒரு செயின் வாங்கித் தரக்கூடாதா ?
நன்றி குங்குமம் 15-9-2000
ஹோட்டல் தொழிலாளர் சங்க விழாவுக்கு நீதிபதிதான் தலைமை தாங்கணுமா.. . ஏன் ?
அவர்தான் ஆர்டர் ஆர்டர்-ன்னு நிறைய ஆர்டர் சொல்வாராம் !

நேத்து கட்சிக்காரங்க தலைவரை அடி பின்னி எடுத்துட்டாங்க.
ஓ.. . அதுதான் கட்சி செயல்பாடுகளிலிருந்து அடியோடு விலகுகிறேன்னு அறிக்கை விட்டிருக்கிறாரா !

தலைவர் ஏதோ புதுத்திட்டம் சொல்றாரே !
ஆமாம், போராட்டம், ஜெயில் இதையெல்லாம் கட்சிக்காரங்ககிட்ட இருந்து பிரிச்சுத் தனியார் வசம் விட்டுடலாம்னு சொல்றாரு.

கோரிக்கையை பற்றிய கோஷமே இல்லாம கம்பெனி வாசல்ல ஆர்ப்பாட்டம் நடத்தறாங்களே எதுக்கு ?
கோரிக்கையை ஏற்கனவே கேசட் மூலமா அனுப்பிட்டாங்களாம் ?

வீரப்பனோட கூட்டணி அமைக்கலாம்னு தலைவர் சொல்றாரே ?

எலெக்ஷன் சமயத்துல எம்.பி.க்களைக் கடத்துறதுக்கு உதவியா இருப்பானாம்.

ஆபரேஷன் மடிந்து மறுபடியும் செக்கப்புக்கு வரணுமா டாக்டர் ?
அதுக்கெல்லாம் அவசியமே இருக்காதுங்க. !

என் காதலர் ரொம்ப அல்ப்பமா இருக்கார்டீ.. .!
ஏன். .. என் செஞ்சார் ?
லிப்டிஸ்டிக் வாங்கித் தாங்கன்னு கேட்டா, நேச்சுரல் லிப்ஸ்டிக்-னு சொல்லி, வெத்தலை பாக்கு வாங்கித்தரார். ..

விண்வெளி டிரஸ் போட்டுக்கிட்டு தலைவர் எங்கே புறப்பட்டு விட்டார். ?
பெரிய தலைவர் அப்பல்லோ-வில் அட்மிட் ஆயிருக்கார்ங்கறதை தப்பாப் புரிஞ்சுட்டார் போலிருக்கே !

தன்னை கடத்திட்டு போகச் சொல்லி தலைவர் வீரப்பன்ட்டே கெஞ்சுனாராம் ஏன் ?
ஊழல் வழக்குலே அவரை உள்ளே தள்ளுறது உறுதியாயிடுச்சாம் !

அந்த கிரிக்கெட் வீரரோட வங்கி லாக்கரை சோதனை போட்டாங்களே.. . என்ன கண்டுபிடிச்சாங்க.. .
அந்த வங்கியே அவரோடது தான்னு கண்டுபிடிச்சிட்டாங்க.. .
நன்றி குமுதம் 14-9-2000

நெட் ஜோக்

தனது மகனின் முதல் நாள் பள்ளிக்கூட அனுபவம் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார் சர்தார்ஜி அப்பா.
மகன் கேட்டான் - ஞஅப்பா இன்னிக்கு கிளாஸ்ல ஏ.பி.சி.டி. சொல்லச் சொன்னாங்க. மத்த பசங்களுக்க ஒண்ணுமே தெரியலை. நான் மட்டும்தான் 26 எழுத்துக்களையும் சொன்னேன். நான் ஒரு சர்தார்ஜிங்கிறதாலதானே என்னால இப்படிச் சொல்ல முடிஞ்சது ? ஞ
ஞஇல்லை மகனே.. . நீ ஒரு புத்திசாலிங்கிறதால !ஞ அப்பா திருத்தினார்.
மகன் இன்னொரு கேள்வி கேட்டான் - ஞஇன்னிக்கு கணக்கு கிளாஸ்கூட நடந்துச்சு மத்த பசங்க பத்துவரைக்கும் மட்டுமே நம்பர் சொல்ல.. . நான் நூறுவரைக்கும் சொன்னேன். இது நான் ஒரு சர்தார்ஜிங்கிறதாலதானே ? ஞ
அப்பா மறுபடியும் திருத்தினார் - ஞஇல்லை மகனே நீ ஒரு புத்திசாலிங்கிறதால !ஞ
மகன் அடுத்த கேள்வியைத் தொடர்ந்தான் - ஞஅப்பா .. . இன்னிக்கு எங்களுக்கு மருத்துவப் பரிசோதனை பண்ணினாங்க. எல்லா பசங்களும் ரொம்ப குட்டையா இருந்தாங்க. நான் அவங்களைவிட ரெண்டுமடங்கு உயரமா இருந்தது நான் சர்தார்ஜிங்கிறதாலதானே ? ஞ
அப்பா சற்று யோசித்துவிட்டு சொன்னார் - ஞஇல்லை மகனே. உனக்கு 31 வயசாகிறதால ஞ

எந்தப் பேரைக் கூப்பிட்டாலும் கோர்ட்டுல தலைவரே ஏன் வந்து நிற்கறாரு.. .?
எல்லாம் அவரோட பினாமி பேராம் !

என்னங்க.. . வீட்டுல தண்ணி வசதி, காற்று வசதி ரெண்டுமே இல்லிங்களே.. .!
சரி, குழாய் போட்டுக் கொடுத்துடறேன். ரெண்டுல எது கிடைக்குதோ வெச்சுக்குங்க.. .

உண்மையாகவே நீ அந்த ரெண்டு பேரையும் தனியொருவனாகவே கொலை செய்தாயா ?
ஆமாங்க எஜமான்.. . கூலிப்படை வெச்சுக் கொலை பண்ற அளவுக்கு எனக்கு இன்னும் வசதி, வாய்ப்பு வரலிங்களே !

கல்யாணமான கொஞ்ச நாள் வரைக்கும் என் கணவர் பாக்யலட்சுமிங்கிற என்னைச் செல்லமா பாக்கி, பாக்கி-னு கூப்பிட்டுக்கிட்டிருந்தாரு !
அப்புறம் எப்ப நிறுத்தினாரு ?
எங்கப்பா வரதட்சணை பாக்கியைக் கொடுத்தவுடனே நிறுத்திட்டாரு !

அந்த ஸ்டார் ஓட்டல்ல சாப்பாடெல்லாம் பயங்கர காஸ்ட்லி.. .
அப்படியா !
சாப்பாட்டுல கல் இருந்தாக்கூட வைரக்கல்தான் இருக்குமாம் !

டாக்டர்.. . காய்கறியில எதெல்லாம் வாயு.. . ?

எதுவுமே வாயு கிடையாது.. . எல்லாமே திடப்பொருள்தான் !

கோடிவீட்டுக் கீதா புதுசா வாஷிங்மெஷின் வாங்கியிருக்காளாம்.. . ரொம்பத்தான் அலட்டிக்கறா
அப்படியா ?
ஆமாம் தயிரைக்கூட அதுலதான் தோய்ப்பாளாம் !

என் கணவருக்கு ஆபீஸ்ல கார் கொடுத்திருக்காங்க !
அதுக்காக ரெண்டு ஸ்பூன் காபிப்பொடி கடன் வாங்கறதுக்காக சென்னையிலிருந்து செங்கல்பட்டுக்கு கார்ல
வந்திருக்கிறது நல்லா இல்லை !
நன்றி ஆனந்த விகடன் 10-9-2000
பேய், பிசாசு எதுக்கும் என் மனைவி பயப்படமாட்டா !
அவ்வளவு வீரமான பெண்மணியா ?
எல்லாத்துக்கும் தலைவி அவதானே !

வில்லன் உன்னை நிஜமாவே கற்பழிச்சும் நீ ஏம்மா கத்தலை ?
நான் பாத்திரத்தோட ஒன்றிட்டேன் சார்.. .

ஆபீஸ் பக்கத்துல கடை போட்டேன். வியாபாரம் அமோகமா இருக்குது !
டீ, காபி கடையா ?
இல்ல,.. .. பாய், தலையணை வியாபாரம் !

அவனை வெட்டி ஆத்துல போட்டா உடம்பு முழுகிடும் .. . தலை மிதக்கும்.. .
எப்படி ?
அவன்தான் மரமண்டையாச்சே !

சாரி, சார் ! ஆபீஸுக்கு 1 மணி நேரம் லேட்டாயிடுச்ச.. அதனால அரைமணிக்கு ஒரு முத்தமா - ஒரு மணி நேர
லேட்டுக்காக இரண்டு முத்தம் தந்திடறேன் !
அப்படீன்னா நீங்க நாளையிலிருந்து ஆபீஸ் முடியற நேரத்துக்கு வந்தா போதும் !

நாள் ஆக ஆக வீக் ஆகிட்டே இருந்த என் பொண்ணு.. இப்ப.. !
இப்ப. ..?
மாசமா இருக்கா !

தலைவரோட பூனைப் படைப் பாதுகாப்பை ஏன் ரத்து பண்ணிட்டாங்க.. ?
அவங்களை தன் வீட்ல உள்ள எலிகளை பிடிக்கப் பயன்படுத்தினாராம் !

என் மனைவி எதையும் வித்தியாசமா செய்வா !
இருக்கலாம். அதுக்காக அயர்ன் பாக்சுல தோசை சுடறது நல்லாவா இருக்கு ?

கருப்புத்தான் எனக்கு பிடிச்ச கலருனு பாடினது தப்பாப் போச்சி !
ஏன் ?
இன்கம் டேக்ஸ் அதிகாரிங்க வீட்டை ரெய்டு பண்ணிட்டாங்க !
தலைவரே நிறைய ஷேர் பத்திரங்களை எதுக்கு ரெடி பண்றீங்க ?
கூட்டணிக் கட்சிங்க, ஆட்சியில பங்கு வேணும்னு கேட்டாங்களே !

எனக்கும் என் மாமியாருக்கும் சண்டை நடந்து. இன்னியோட வருஷம் ஆறு ஓடிப்போச்சு !
ஆறு வருஷமா உங்களுக்குள்ள ஒரு பிரச்சினையும் கிடையாதா .. .?
இன்னைக்கு அவுங்களோட 8-வது திவசம் டீ !

என்னது.. . ! கோர்ட்டுக்குள்ளேயே கூல் டிரிங்க் டிராலி வருதே ?
யாரோ ஒரு கிரிக்கெட் ப்ளேயரோட வழக்கு இன்னிக்கு விசாரணைக்கு வருதாம் !

பொண்ணோட பூப்புனித நீராட்டு விழாவை பிரம்மாண்டமா நடத்தப் போறேன்னு தலைவர் இப்படிப் பண்ணிட்டாரே
?

என்ன ?
ஃபங்க்ஷனை குற்றாலம் மெயின் ஃபால்ஸ்ல வெச்சிருக்காராமே !

வில்லனை சண்டை போட்டுக் கொல்லாம ஹீரோ வளவள-ன்னு நீளமா வசனம் பேசிக்கிட்டே இருக்காரே ?
வில்லனை, ஹீரோ பேசியே கொல்ற மாதிரி ஸீன் அமைச்சிருக்காங்களாம் !

என்னடி, உதடெல்லாம் காயமா இருக்கு ! எப்படி வந்துச்சு ?
ஆமாம்டி, என் புருஷன் கமலோட தீவிர ரசிகர்னு தெரியாமல் போச்சு !

ரொம்ப லோ பட்ஜெட்ல படம் எடுக்கிறார் போல இருக்கு.. .!
எப்படிச் சொல்றே ?
ஸ்டோரி டிஸ்கஷனுக்கு எல்லோரையும் டீக்கடைக்கு வரச்சொல்லியிருக்கிறாரே.. .!

உன்னைப் பார்த்தால் பிச்சைக்காரன் மாதிரி தெரியலையே.. .!
நான் உங்களை தர்ம மகாராஜா என்று சொன்னேனே, நீங்க என்ன அப்படியா இருக்கீங்க ?

எதுக்கு டாக்டர் பேஷன்ட் தலைக்கு மேல சுருக்குக் கயிறு போட்டு விட்டுருக்கீங்க. .?
ஆபரேஷனை ஈஸியா முடிச்சுடலாம்னு தான். .!

எள்ளுன்னா எண்ணெயோட வந்து நிப்பானே உங்க பையன், இப்ப என்ன பண்றான் ?
வீட்டுல கல்யாணப் பேச்சை எடுத்த உடனே கையில் குழந்தையோட வந்து நிக்கிறான். ..!

- நன்றி குமுதம் 21-9-2000
ரெண்டு கால் மௌசுக்கு என்ன பேரு ?
மிக்கி மவுஸ் !

அந்த டாக்டருக்கு வீரப்பனை ரொம்பப் பிடிக்கும் போலிருக்கு !
ஏன் ?
அவருகிட்டே வர்ற பேஷண்ட்டையெல்லாம் காட்டுக்கு அனுப்பிடறாரே !

ஏண்டா.. . மாட்டுக்கு வாய் மட்டும் வரையாம விட்டிருக்கே !
நீங்கதானே சார் சொன்னீங்க ! அது வாயில்லாப் பிராணினு !

விஜி.. . உன் வீட்டில் ரொம்ப குழப்பமா ?
ஆமாம் ! பிஜி நாட்டைப்போல !

என்ன ! உன் கணவர் டூத் பேஸ்ட்டைப் போய் தலைல தடவிக்கிறாரு. ..?
தலைல அவருக்கு நிறைய ஈறு இருக்காம் !

மேனேஜர் சார், இன்னைக்கு எல்லோரும் ஆபீசுல நைட்வொர்க் செய்யணும்னு நீங்கதானே சொன்னீங்க ?
அதுக்காக உங்க சம்சாரத்தை ஆபீசுக்கு கூட்டிட்டு வந்துடறதா ?

அந்த நடிகையோட இடுப்பைப் பிடிச்சுகிட்டே தலைவர் பிரச்சாரம் பண்ணப் போறாராமே ?
ஏன் ?
இது இடைத்தேர்தல்-னு மக்களுக்கு ஞாபகப் படுத்துறாராம் !

போலீஸ்காரன் வீட்டுக்கு கல்யாணத்துக்குப் போனது தப்பா போச்சு.. .!
மொய் எழுதாமச் சாப்பிட்டவங்களைக் கைது பண்ணி ஜெயில்ல அடைச்சுட்டாங்க. .!

சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கிற தலைவர் எதுக்குக் கோபப்படுகிறார் ?
மலர் வளையத்தோட எதிர்க்கட்சிக்காரங்க உள்ளே வந்துட்டாங்களாம் !

நகைக்கடைக்காரர் வீட்ல பொண்ணு எடுத்தது தப்பாப் போச்சா . .. ஏன் ?

பேசின நகைக்கு செய்கூலி, சேதாரம் எல்லாம் கழிச்சு, குறைச்சுப் போட்டு அனுப்பிட்டாங்க !

சினிமாவில் நடிச்ச எருமைங்க இது !
மேக் - அப் போடச் சொல்லுதா ?
ஆக்ஷன்னு கத்தினாதான் பால் கறக்குது !

பேப்பர் போடறவரைக் காதலிச்சது தப்பா போச்சு !
ஏன் ?
என்னைத் தூக்கி எறிஞ்சுட்டுப் போயிட்டாரு !

கடை அடைச்சிடு வீங்களோன்னு கீழ் மூச்சு, மேல் மூச்சு வாங்க ஓடோடி வந்தேன் ?
அதெல்லாம் நாங்க விற்கறதில்லேங்க.. .!

கறுப்பா இருக்கிற பொண்ணுக்குப் பத்து பவுன் போடறாங்களாம். ஒரு கால் நொண்டிப் பொண்ணுக்குப் பதினைஞ்சி பவுன் போடறாங்களாம். எது வேணும் ?
ஹீ.. . ஹீ.. . தரகரே.. .கறுப்புக் கலர்ல நொண்டிப் பொண்ணு பாருங்களேன் !

உங்களை நான் போன பந்தியிலேயும் சாப்பிடும்போது பார்த்தேன்.. . இந்தப் பந்தியிலேயும் சாப்பிடறீங்களே ?
போன பந்தியில் எங்கிருந்து பார்த்தீங்க ?
ஹி.. . ஹி.. . நான் சாப்பிட்டுக் கிட்டிருக்கும்போது தான் !

இருமலுக்கு நீங்க கொடுத்த மருந்தைச் சாப்பிடாமலே சரியாப் போச்சு டாக்டர்.. .!
சாப்பிடாம மருந்து எப்படி சரியா போகும் .. ?
கீழே கொட்டிடுச்சு. .!
நன்றி இதயம் பேசுகிறது 17-9-2000
டாக்டர்.. . இந்த ஒரு மாசத்துல என் பையன் ஒரு ரூபாய் காயின் பத்து முழுங்கிட்டான்.. .
இவ்வளவு நாளா ஏன் வரலே. ..?
பத்து ரூபாய் சேரட்டுமேனு பார்த்துட்டு இருந்தேன் டாக்டர் !

என் கணவர் இருபத்து நாலு மணி நேரமும் சவுண்டா டி.வி. வெச்சுப் பார்த்துட்டே இருக்காரு. .. குறைக்கறதுக்கு மருந்து ஏதாவது இருந்தா கொடுங்களேன். ..
டி.வி. சவுண்ட் குறைக்கறதுக்கெல்லாம் என்கிட்டே மருந்து கிடையாதும்மா !

யாரோ மெக்கானிக்தான் இங்கே போலி டாக்டரா இருக்கார்னு எதை வெச்சு சொல்றே ?
கை துடைக்க காட்டன் வேஸ்ட் யூஸ் பண்றாரே !

இன்னும் ரெண்டு மணி நேரம் கழிச்சுதான் எதையுமே சொல்ல முடியும்.. .
ஏன் டாக்டர். .. ரெண்டு மணி நேரம் கழிச்சு வேற யாராவது நல்ல டாக்டர் வர்றாரா .. .?

எனக்கு ஆபரேஷன் பண்ணாம வேற ஏதாவது வழி இருக்கா டாக்டர் ?
ஆளை வெச்சுத்தான் க்ளோஸ் பண்ணணும்.. .

டாக்டர் ஆபரேஷனை கொஞ்சம் ஜாக்கிரதையா பண்ணுங்க.. . நான் செத்துட்டா என் கல்லறையிலே உங்ககிட்டே ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டேன்னு எழுதச் சொல்லியிருக்கேன் !

என்னது.. . அரை டிக்கெட் வேணுமா. ..?
ஆமாப்பா. . படத்தோட முதல் பாதிதான் நல்லாயிருக்குன்னு சொன்னாங்க. .. அத மட்டும் பார்த்துட்டுப் போயிடுறேனே. ..?

ஒரே நேரத்துல நூறு குழந்தைகளுக்கு காது குத்தணும்னு சொன்னீங்களே. .. இதோ கட்சித் தலைவரை கூட்டிட்டு வந்திருக்கேன். இவரு ஒரே நேரத்துல பத்தாயிரம் பேருக்குக் கூட காது குத்துவாரு !

தினமும் என் கனவுல நடிகை ரம்பா வர்றா !
இதைப் போய் ஏன் ரொம்ப வருத்தமா சொல்றீங்க !

கூடவே சென்ஸார் போர்டு ஆபீஸரும் வர்றாரே !

உடம்பு சிக்-குன்னு இருக்கணும்னு பயங்கர டயட்ல இருந்தாளே உன் பெண்டாட்டி, இப்ப எப்படி இருக்கா ?
ரொம்ப சிக் ஆகி, டாக்டருக்கு செலவு பண்ணிகிட்டு இருக்கா !

நெட் ஜோக்

ஒரு சூப்பர் மார்க்கெட்டில் ஷாப்பிங் பண்ணிக்கொண்டிருந்த அந்த இளைஞனுக்கு முன்பின் தெரியாத யாரோ ஒரு பெண்மணி தன்னையே கவனித்துக் கொண்டு இருப்பதாகத் தோன்றியது. ஷாப்பிங் முடிந்து பணம் கட்ட கேஷ் கௌண்ட்டர் பக்கமாக அவன் முன்னேறியபோது, அந்தப் பெண்மணி குறுக்கே வந்தாள்.
ஞமன்னிக்கணும் ! நான் உன்னையே பார்த்துக்கிட்டிருந்தது உனக்குத் தர்மசங்கடமா இருந்திருக்கலாம். வேற ஒண்ணும் இல்லை. .. சமீபத்துல செத்துப் போன என் பையன் மாதிரியே நீ இருக்கே !ஞ என்றாள் அந்தப் பெண்மணி உடைந்துபோன குரலில்.
ஞஓ.. . ஸாரி !ஞ என்று நெளிந்தவன், ஞஉங்களுக்கு ஏதாவது உதவி தேவையா. . ?ஞ என்று கேட்டான்.
ஞஒண்ணும் வேணாம். . நான் இப்போ கிளம்பறேன். ஓரே ஒரு வார்த்தை.. போய்ட்டு வாங்க அம்மா-னு சொன்னேன்னா போதும். என் மனசு குளிர்ந்துடும். . ஞ என்றாள். அதன்படியே அவள் கிளம்பும்போது ஞபோய்ட்டு வாங்க அம்மா !ஞ என்று உருகினான் அவன்.
வரிசை மெதுவாக நகர்ந்து, கேஷ் கௌண்ட்டருக்கு அவன் போனபோது ஏகப்பட்ட தொகைக்கு ஒரு பில் நீட்டப்பட்டது.
ஞநான் வாங்கியது கொஞ்சம் பொருட்கள்தானே.. . எப்படி இவ்வளவு பில் ?ஞ என்று கேட்டவனுக்குக் கிடைத்த பதில் - ஞநீங்க வாங்கினது கொஞ்சம்தான். இப்ப புறப்பட்டுப் போன உங்க அம்மா வாங்கினது எக்கச்சக்கமாச்சே !ஞ

ஒரு விருந்தில் இரண்டு பெண்கள் பேசிக்கொண்டார்கள்
நீங்க தப்பான விரல்ல கல்யாண மோதிரம் போட்டு இருக்கீங்கன்னு நெனைக்கிறேன். ..
ஆமா. .. ஏன்னா, நான் கல்யாணம் பண்ணிக்கிட்டதே தப்பான ஆளைத்தானே !

நீங்க வாடகையே ஒழுங்கா தர்றதில்லையே ?
கொஞ்சம் பணக்கஷ்டம்.. . அதான்.. .
அப்ப நீங்க காலி பண்ணிடுங்க. நான் வீட்டை விற்கப் போறேன்.. .
அப்படி ஒரு எண்ணம் இருந்தா சொல்லுங்க.. .. நானே வீட்டை வாங்கிக்கிறேன்.. . .

குருகுலத்தில் இளவரசரை சேர்ப்பதில் சிக்கல் வந்திருக்கிறது மகாராஜா !
என்ன விஷயம் ?
கவுன்சிலிங் முறையை இந்த வருடம் அறிமுகப்படுத்தி இருக்கிறார்களாம் !

போர் முழக்கம் செய்தாயிற்று. .. இன்னும் படை வீரர்கள் போருக்குக் கிளம்பவில்லையே. .. ஏன் ?
அவர்களது உயிருக்கு நாம் இன்ஷூரன்ஸ் எடுத்துத் தராததால் ஸ்டிரைக் செய்கிறார்கள் மகாராஜா

ஏங்க.. . நம்ம பையனுக்கு உடனே ஒரு நல்ல பொண்ணா பாருங்க. அவனுக்கு கல்யாண ஆசை வந்திடுச்சு !
எப்படிச் சொல்றே !
அவனோட ரூம்ல போய் பாருங்க. . . சமையல் செய்வது எப்படி ?-னு புத்தகமா வாங்கி அடுக்கியிருக்கான் !

அந்த ஃபைனான்ஸ் கம்பெனிக்காரங்க என் பணம் அம்பதாயிரத்தை மோசம் பண்ணினது கூட பரவாயில்லே. .
ஆனா, பக்கத்து வீட்டுக்காரனுக்கு பத்தாயிரம் ரூபாய் செட்டில் பண்ணியிருக்காங்களே, அதான் வயிறு எரியுது. ..
அதனால உனக்கு என்ன ?
அவன் அங்கே பணமே போடலையே. .. !
- நன்றி ஆனந்த விகடன் 17-9-2000
என்னை நினைத்து தவம் இருக்கும் கோழிகளே ! உங்களுக்கு என்ன வரம் வேண்டும் ?
கடவுளே ! இந்த உலகில் ஞாயிற்றுக்கிழமை வரவே வரக் கூடாது என்று ஒரு வரம் தர வேண்டும் !

டைரக்டர் சார், ஹிரோவும் ஹீரோயினும் சந்திக்கிற ஒவ்வொரு சீனிலும் பேக் க்ரவுண்ட்ல தண்ணீர்ப் பந்தலைக் காண்பிக்கிறீங்களே ?
ஹீரோ ஹீரோயினுக்குத் தண்ணி காட்டப் போறார்னு சிம்பாலிக்கா சொல்றேன்.

என்ன ! அந்த கணக்கு வாத்தியார் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது ஒரே உறுமுறாரு. ..?

அவரு கணக்குல புலியாம்.

நான் என்னோட பர்ஸ்ல என் மனைவி போட்டோவை வெச்சுக்கிட்டு இருக்கேன். . நீங்க ?
என்கிட்டே உங்க மனைவி போட்டோ இல்லை.. .

அந்த ஆளுக்கு வைர- வியாபாரத்துல ஏகப்பட்ட நஷ்டம் வந்து இப்ப அவரோட வியாபாரமே தலைகீழா மாறிப்போச்சு.
எப்படி ?
இப்ப ! அவரு ரவை வியாபாரம் பண்றாரு.

என்ன ! உங்க பையன் உங்களையே கோவிந்தான்னு கூப்பிடுறான் ?
நான்தான் சொன்னேனே ! பேர் சொல்ல ஒரு பிள்ளை இருக்கான்னு. ..

என் மனைவி சந்தோஷமா இருந்தாள்ன்னா எனக்கு ஒரு முத்தம் கொடுப்பா. ..
நான் கொடுத்து வெச்சவன். எனக்கு அஞ்சு முத்தம் கொடுபாங்க.

மனுசனுக்கு வர்ற வியாதி யானைக்கு வர்றாதுன்னு சொல்றீங்களே, எப்படி ?
மனுஷக்கால் வியாதி யானைக்கு எப்படி வரும் ?

வேலைக்குப் போற இடத்தில் தூக்கம் வராம இருக்க ஏதாவத மருந்து கொடுங்க !
என்ன வேலைக்குப் போகப் போறீங்க ?
நைட் வாட்ச்மேன் வேலைக்கு !

அந்த ஆளோட பேருக்கும் அவருக்கும் சம்மந்தமே இல்லைங்க. .
எப்படி ?
அவரோட பேரு சம்பந்தம். ஆனா சம்பந்தா சம்பந்தம் இல்லாமப் பேசுவார. .

உங்களுடைய எதிர்காலக் கனவு என்ன ?
வேளா வேளைக்கு நல்லா சாப்பிட்டுத் தூங்கணும்.
அப்பத்தானே கனவு வரும் !

மாமியார் கைதானே ஓங்கியிருந்துச்சு. அப்புறம் எப்படி சண்டைல மருமகள் ஜெயிச்சாங்க ?
ஃபைட் ஃபிக்ஸிங் நடந்திருக்கு அதான் !

பீர்பால் பற்றி உனக்குத் தெரிஞ்சதைச் சொல்லு !
பீர்ல பெஸ்ட் 5000 (ஃபைவ் தவுசண்ட்) பீர் சார்.. . பால்-ல பெஸ்ட் ஆவின் பால் சார் !

நீங்க கிளாஸ்ல தினம் ஒரு கதை சொல்றீங்களாமே டீச்சர்.. . பசங்க சொன்னாங்க.. .
ஆமாம் மேடம்.. . என் கணவரோட கதை எப்படியும் வாரத்துல ரெண்டு திரும்பி வரும். அது இங்கேயாவது உபயோகப்படட்டுமேன்னுதான். .!

உங்க பொண்டாட்டியை நீங்களே ஆளை வைச்சு எதுக்கு அடிக்கிறீங்க. .?
கட்டின பொண்டாட்டியைக் கைநீட்டி அடிக்கக் கூடாது பாருங்க. ..!

மாநிலத்தை ரெண்டா பிரிக்கணும்னு தலைவர் சொல்றாரே. .. ஏன் ?
அவருக்கு ரெண்டு வாரிசுகள் இருக்கே !

என்ன இது . .. கம்ப்யூட்டர் ஸ்கிரீன்லே லிப்ஸ்டிக் கறையா இருக்கு ?
அதான் சொன்னேனே.. . லவ்-பக் வைரஸ் பரவியிருக்குன்னு. .!

மனைவி - உங்களுக்கு ஏதாவது ஆசை இருக்கிறதா ?
கணவன் - உன்னை ஒரு தடவை டீ போட்டுப் பேசட்டுமா ?

எல்.ஐ.சி.யிலிருந்து எண்ணெய் தேய்ச்சிட்டிருக்கும் போது ஒருத்தன் கீழே விழறான். ஆனா அடிபடலை. ஏன் ?

ஏன் ?
அவன் தேய்த்தது பாராசூட் எண்ணெய் !

போலீஸ்காரர், கைதியை வைத்துப் படம் எடுத்தால் என்ன பெயர் வைப்பார் ?
என்ன பெயர் ?
கேடி வாழ்ந்தால் கோடி நன்மை.

ரெண்டு பைத்தியம் பேசுது. நான் இந்த உலகத்தை அழிக்கப் போறேன்னு ஒரு பைத்தியம் சொல்லிச்சு.. . அதுக்கு இன்னொரு பைத்தியம் என்ன சொல்லும் ?
என்ன சொல்லும் ?
நான் அதுக்கு ரப்பர் தரமாட்டேன் !

ஒரு காக்காயும் கழுகும் தண்ணிக்குள்ள போச்சு. கழுகு வெளியில வந்துச்சு. ஆனா காக்கா வரலை. ஏன் ?
ஏன் ?
காக்கா கரையும் !

பல்வலிக்கு ஒருத்தன் மிருக டாக்டர்கிட்ட போனான். ஏன் ?
ஏன் ?
அவனுக்கு சிங்கப்பல்வலி !

நம்ம ரவுடி ராக்கப்பனுக்குத் திமிரை பார்த்தியா ?
என்ன சொல்றான் ?
எனக்கும் உங்களை மாதிரியே தொப்பை இருக்கு.. . என்னையும் போலீஸ் வேலைல சேர்த்துக்குவீங்களா-ன்னு கேட்கறான் !

கோர்ட்டு படிகளிலே இறங்காம., தலைவரு தொபுக்கடீர்னு குதிக்கிறாரே.. . ஏன் ?
அவர் இறங்கி வந்துட்டார்னு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் சொல்லிடுவாங்களாம். .!

நான் பிழைக்கமாட்டேன்னு டாக்டர் சொல்லிட்டாரு !
அப்படியா ?
ஆமா.. . எனக்கு ஆபரேஷன் பண்ணப் போறாராம் !

காதலன் - அந்த சுண்டல்காரப் பையன் என்னை ஏன் மச்சான்-னு கூப்பிடுறான் ?
காதலி - அவன்தான் என்னோட தம்பி டியர் !

டைரக்டர் ஏன் காதலர்களைக் காண்பிச்சு, சம்பந்தமில்லாம பைனான்ஸ் கம்பெனியைக் காண்பிக்கறாரு ?
ரெண்டு பேரும் ஊரைவிட்டு ஓடிப் போகப் போறாங்களாம் !

கடிவாளம் போட்டுகிட்டு கதை எழுதுறாரே.. ஏன் ?
கற்பனைக் குதிரை தறிகெட்டு ஓடக்கூடாது பாருங்க.. . அதனாலதான் !

புதிய பொருளாதாரக் கொள்கையும் அழகிப் போட்டியும் ஒண்ணா.. . எப்படி ?
தாராளமா திறந்து விடுறாங்களே. .. !

அந்த டாக்டர் ரொம்ப நிதி நெருக்கடியில் இருக்காரு போலிருக்கு ?
எப்படிச் சொல்றே ?
ஆமாம். .. ஆபரேஷனை யெல்லாம் சரியா பண்ணிடறாரே !

தலைவர் வெறும் ஜட்டியோட, விரலைச் சூப்பிக்கிட்டே எங்கே போறார் ?
அவர் முதமுதல்ல இருந்த தாய்க் கட்சியில சேரப் போறாராம் !

என்ன இது சாம்பார்ல பிஸ்கெட் வாசனை வருது !

உப்பு தீர்ந்து போச்சு. .. அதனால சால்ட் பிஸ்கட் ரெண்டு போட்டேன் !

தலைவர் பொய்க்கணக்கு எழுதி எப்படி மாட்டினாரு ?
கட்சிக்குத் தெம்பு கொடுக்க டானிக் செலவு, டாக்டர் செலவு ஒரு லட்சம்னு எழுதினாராம் !

அரசியல்வாதியை செய்தி வாசிக்கச் சொன்னது தப்பாப் போச்சு !
ஏன் - என்ன விஷயம் ?
அஞ்சு நிமிஷத்துக்கு ஓரதரம் சோட குடிச்சிட்டுல்ல நியூஸ் வாசிக்கிறாரு !
நன்றி இதயம் பேசுகிறது 24-9-2000
நீச்சல் போட்டியில முதல்ல வந்தவர் ஏன் மெடல் வாங்கறதுக்குத் தண்ணியவிட்டு வெளியே வரமாட்டேங்கறாரு ?
ரெண்டாவதா வந்தவர் வெறுப்புல இவரோட ஸ்விம்மிங் சூட்டை உருவிட்டாராம் !

உங்க பையன் வருங்காலத்துல பெரிய மெகா சீரியல் டைரக்டரா வருவான் !
எப்படிச் சொல்றீங்க ?
பின்னே.. . ஒரு வரியில பதில் சொல்லக் கூடிய கேள்விக்கெல்லாம்கூட பத்து பக்கத்துக்கு விடை எழுதி வெச்சிருக்கானே !

சாதிங்க ஒழியணும்னு சொல்றாங்களே.. .அதுக்கு என்னங்க அர்த்தம் ?
தங்கள் சாதியைத் தவிர மத்ததெல்லாம் ஒழியணும்னு அர்த்தம் !

நெட் ஜோக்

ஒரு நாள் அதிகாலை. தூங்கிக் கொண்டிருந்த தனது மகனைப் படுக்கையிலிருந்து எழுப்பினார் அந்த அம்மா.
ஞஎழுந்திரு மகனே. .. பள்ளிக்கூடம் போக நேரமாச்சு !ஞ
ஞமுக்கல் முனகலோடு லேசாக கண்திறந்து பார்த்த மகன், ம்.. . எனக்குப் பள்ளிக்கூடம் போகவே பிடிக்கலை. ஞ
ஞசரி, ஏன் பள்ளிக்குப் போகப் பிடிக்கலை.. . ரெண்டு காரணம் சொல்லு ? ஞ
ஞஅதுவா.. . பசங்களுக்கும் என்னைப் பிடிக்கலை.. . வாத்தியார்களுக்கும் என்னைப் பிடிக்கலை. . போதுமா ? ஞ
ஞஅதெல்லாம் ஒண்ணுமில்லை.. . எழுந்திரு. .. பள்ளிக்கூடம் டயம் ஆச்சு ! ஞ
ஞசரி, பள்ளிக்கு நான் ஏன் போகணும்கிறதுக்கு நீங்க ரெண்டு காரணம் சொல்லுங்க ? ஞ
ஞகாரணமா.. . ஒண்ணு, உனக்கு 52 வயசாச்சு. .. ரெண்டு, நீ அந்தப் பள்ளிக்கு பிரின்ஸிபால்ஞ

ரெண்டு காமிராமேன் வெச்சுப் படம் எடுக்கறீங்களா. ..?
நீங்க வேற. .. அதுல ஒருத்தர்தான் நம்ம காமிராமேன். இன்னொருத்தர் திருட்டு வி.சி.டி-க்காக டைரக்ட்டா ஷூட் பண்ணிக்கிட்ருக்காரு !

நம்ம படத்தோட க்ளைமாக்ஸை நாளைக்கு எடுக்கறோம். . புரியுதா ?
நீங்க வேற. .. நேத்திக்கே நம்ம முழுப் படத்தோட திருட்டு வி.சி.டி. ரிலீஸ் ஆயிடுச்சு !

என் வீட்டுக்காரர் எங்கேயும் வேலைக்குப் போகலைனாக்கூட அவருக்கு பந்தாவுல ஒண்ணும் குறையில்லை.. .
ஏன் ?
நான் சம்பளம் வாங்கிக் கொடுத்த உடனே போய் மல்லிகைப்பூவும் அல்வாவும் வாங்கிட்டு வந்துடுறாரு !

என் கணவர் எந்தக் காரியத்தையும் நாளைக்குன்னு தள்ளிப் போடமாட்டாரு !
அப்படித்தான் இருக்கணும் !
என்ன அப்படித்தான் இருக்கணும்.. . ஒரே நாள்ல எல்லா சொத்தையும் ரேஸ்ல அழிச்சுட்டு வந்துட்டாரு. .!

உன் லவ்வரை நீ இதுவரை நிமிர்ந்துகூடப் பார்த்தது இல்லையா.. .? ஆச்சரியமா இருக்கே !
அவர் என்னைவிடக் கொஞ்சம் குள்ளம் !

என் மாமியாருக்கு உடம்புக்கு எது வந்தாலும் பெரிய ஆஸ்பத்திரிலதான் கூட்டிட்டுப் போய் காண்பிப்பேன் !
அப்படியா ! ஏன் ?
அங்கேதான் தப்புத் தப்பா மருந்து கொடுப்பாங்க !
நன்றி ஆனந்த விகடன் 24-9-2000
அந்த ஃபைனான்ஸ் கம்பெனி ரொம்ப நேர்மையானது !
அப்படியா ?

ஆமாம் ! இங்கு போடப்படும் டெபாசிட்டுகளுக்கு வட்டி மட்டும் வழங்கப்படும்-னு முதல்லயே போர்டு எழுதி வெச்சுட்டாங்க !

வீரர்கள் ஏன் கைதி டிரஸ்ல வந்திருக்காங்க ?
இது தடா-களப் போட்டியாம் !

உங்க கழுத்துல கிடந்த செயின்ல ரவுடி கை வைச்சப்ப நீங்க ஏன் கத்தல ?
அவனோட நோக்கம் அந்த செயின் மட்டும்தான்னு அப்ப எனக்குப் புரியாமப் போச்சு !

ஒரு இருபது ரூபாய் தர்மம் பண்ணுங்க சாமி !
அது என்னய்யா இருபது ரூபாய் கணக்கு ?
பிரவுஸிங் பண்றதுக்காகத் தான் !

அந்த ஏரியாவுலே வழிப்பறி ஜாஸ்தி !
ஏழெட்டு கிளினிக் இருக்கே ! அதைச் சொல்றீங்களா ?

உங்களோட திருமண அழைப்பிதழில் மணமகள் பேரையே காணோமே ?
அது, கடைசி நேர மாறுதலுக்குட்பட்டது !

உங்க படத்துக்கு ஏன் ஒன்.. .டு.. . த்ரீ.. .ன்னு பேரு வெச்சிருக்கீங்க ?
நல்லா ஓடணும்-னு தான்.

குடும்பத் தொடர் மெகா சீரியலை எப்படி முடிக்கறதுன்னு தெரியாம இருந்தேன்.. .
அப்புறம், எப்படி சார் முடிச்சீங்க ?
குடும்பத்தோட தற்கொலை பண்ணிக்கிட்டு செத்துட்டதா காட்டி ஒரு வழியா தொடரை முடிச்சுட்டேன் !

கிளிசரின் போட்டால் கூட கண்ணீர் வரமாட்டேங்குது !
குடும்ப சீரியல்கள்ல நடிக்கறதைக் கொஞ்சம் குறைச்சுப் பாருங்க !

தலைவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்தது தப்பாப் போச்சா. .. ஏன் ?
பார்வை நேரம் காலை 9 வடி 2, மாலை 6 வடி 9-னு போர்டு எழுதி வீட்டுக்கு முன்னாடி மாட்டியிருக்காரே. ..!

அன்பே, இந்தக் கடலைப் பார்க்கும் போது உங்களுக்கு என்ன ஞாபகம் வருது ?
போன மாசம் நான் தள்ளிவிட்ட கவிதா ஞாபகம் தான்..
நன்றி குமுதம் 28-9-2000
உங்களுக்கு இன்னும் ரெண்டு வருஷத்துக்குப் பணக் கஷ்டம் இருக்கும் அப்புறம் சரியாப் போய்டும்.. .
ஜோசியம் பார்த்ததுக்கு ரெண்டு வருஷம் கழிச்சு உங்களுக்குப் பணம் தர்றேன்.. .

உங்க கட்சியோட பொதுக்குழுக் கூட்டத்துல ஒரே ஒரு புகைச்சலாமே. .?
ஹி.. .ஹி. .. பொதுக்கூழு உறுப்பினர்கள்ல பலபேர் அன்னைக்கு சிகரெட் பிடிச்சாங்க. . அதனாலதான் !

இந்த மருந்தைச் சாப்பிடுங்க சரியா போச்சுனா வந்து பாருங்க. ..
சரியாப் போச்சுனா எதுக்கு டாக்டர் வரணும். .?
சரியாப் போச்சுனான்னு நான் சொன்னது மருந்தை.

பொண்டாட்டிக்கு குந்துமணி நகைகூட செய்துபோட முடியாத உனக்கெல்லாம் கல்யாணம் எதுக்குடான்னு நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி கேட்டுட்டுப் போறான்.
யாரு. . மாமனாரா ?
ஊகூம், வீட்டுக்கு வந்திருந்த திருடன் !

அந்தப் பெண் சாமியாரிடம் ஏன் ஆண்கள் கூட்டம் அலைமோதுகிறது. ..
அவர் பக்தர்களின் கன்னங்களில் முத்தமிட்டு ஆசி வழங்குகிறாராம்.

எங்க காதல் முதல் முதல்லே பாட்டா-வில் ஆரம்பிச்சது ?

ஓ ! பாட்டா ஷோரூமில் உங்க காதலியை முதல் முதலா சந்திச்சீங்களா ?
இல்லை.. . பாட்டா செருப்பால அவ முதல் முதல்ல அடிச்சா ! அதைச் சொன்னேன் !

அந்த டாக்டரை ஏன் கைது செய்துட்டுப் போறாங்க ? போலி டாக்டரா ?
வாசலில் போர்ட்டு பார்த்தியா ? தீவிர வியாதிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படும்ங்கிறதை. போர்டு எழுதினவர் தப்பா தீவிரவாதிகளுக்கு-ன்னு எழுதிட்டாரு, அதான் !

என்னுடைய கதை என்று ஒருவர், நம் படத்தைப் பார்த்து விட்டு கேஸ் போட்டிருக்கிறார்.
கவலைப்படாதே ! கேஸ் தோற்றுவிடும். ஏன்னா நம்ம படத்துல கதையே இல்லையே.

பிரமாண்டமான படம் அப்படின்னீங்க படத்துல அப்படி ஒண்ணும் இல்லையே ?
இந்தப் படத்துல நடிக்கிற எல்லாரும் குண்டு குண்டா இருக்கிறாங்களே.

மீண்டும் ஆபரேஷன் செய்ய வேண்டி வரும்னு நினைக்கிறேன்.
அப்படியா ! ஏன் ?
ஆபரேஷன் முடிந்தவுடனே அதே இடத்தில் தொடரும் அப்படீன்னு எழுதராறே.

அந்த நடிகரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு பெரிய அவஸ்தை.
ஏன் ?
அவருக்கு ஆக்ஷன் சொன்னாத்தான் மூடு வருது.

என்னங்க தாலி கட்டியவுடன் மாப்பிள்ளையைக் காணோம் ?
பந்திக்கு முந்திக்கிட்டாரு.

உன்னைக் குற்றவாளி இல்லை என்று விடுதலை செய்கிறேன் !
அப்படினா நான் திருடின நகைகளை என்கிட்ட ஒப்படைக்க உத்தரவிடுங்கள் எஜமான் !

என் சம்சாரத்தை டீக்கடை மாஸ்டரா போட்டது தப்பாப் போச்சு.
ஏன் ?
வர்றவங்க எல்லாம் அவகிட்ட ஆடை இல்லாம டீ போடுங்கன்னு கேட்கறாங்க.

பேப்பர் ரோஸ்ட் கேட்டா என்னப்பா ஃபைலைக் கொண்டு வந்து வைக்கிறே ?
பிரிச்சுப் பாருங்க சார்.. . ரோஸ்ட்டை ஃபைல் பண்ணி வச்சிருக்கோம் !

மாறுவேஷத்தில் போனாலும் வீட்டில் கடன்காரன் இருக்கறதில்லே. வேறே யாரோ இருக்காங்க !
கடன்காரனும் மாறு வேஷத்தில் இருக்கிறானோ என்னவோ . .. பாத்தீங்களா ?

என் பொண்ணு, பேருக்கு ஏத்த மாதிரியே நடக்கிறா !
என்ன ? தங்கம்-னு பேரா ? தங்கமா இருக்காளா ?
இல்லை.. . பேரு காவேரி எப்பவும் பிரச்சினை பண்ணிட்டே இருக்கா !

உங்களுக்கு ஜோசியத்துல நம்பிக்கை இருக்கா. .?
கண்டிப்பா இருக்கே. !
அப்ப ஒரு ஆயிரம் ரூபா கடன் கொடுங்க.
அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம் ?
அடுத்த வாரம் லாட்டரில எனக்கு லட்ச ரூபாய் பரிசு விழும்னு ஜோசியர் சொல்லி இருக்காரே !

ஒரு மாசமா வர்றீங்களே. . ஏதாவது இம்ப்ரூவ்மெண்ட் தெரியுதா.. .?
பரவாயில்லை டாக்டர் ! உங்க நர்ஸ் லதா இப்ப கொஞ்சம் முகம் கொடுத்துப் பேசறாங்க.. !

டேய். .. மரியாதையா பீரோ சாவியை எடு. .
எடுக்கறேன். .. முதல்ல பணம் கொடு.
எதுக்கு ?

பீரோ வாங்கத்தான் !

நெட் - ஜோக்

பீட்டருக்கு இது இறுதியாண்டுத் தேர்வு. தேர்வறையில் தனது இடம் தேடி அமர்ந்தவன், சூடாக வந்து விழுந்த கேள்வித்தாளை எடுத்துப் படித்தான். அத்தனையும் ஆம் இல்லை என்ற வகையில் பதிலளிக்க வேண்டிய கேள்விகள். மூன்று முறை முழுதாகக் கேள்வித்தாளைப் படித்தவன், அடுத்து தன் பாக்கெட்டிலிருந்து ஒரு நாணயத்தை எடுத்துச் சுண்ட ஆரம்பித்துவிட்டான்.
தலை விழுந்தால் ஆம், பூ விழுந்தால் இல்லை என்று ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளிக்கத் தொடங்கிவிட்டான். தேர்வு முடிய சில நிமிடங்களே மிச்சமிருந்த கடைசி நேரம். .. நாணயத்தைத் திரும்பத் திரும்பச் சுண்டுவதும் மோட்டுவாளையைப் பார்ப்பதுமாக டென்ஷனாக இருந்த அவனைப் பார்த்த என்ஸாமினர் ஏதோ விபரீதம் என்று ஓடோடி வந்தார்.
ஞஉங்களுக்கு என்னாச்சு ? இப்ப என்ன பண்ணிட்டிருக்கீங்க ?ஞ என்று கேட்ட அவருக்கு பீட்டர் சொன்ன பதில்.
ஞஅரை மணி நேரத்திலே எக்ஸாம் முடிச்சுட்டேன் சார். எழுதின பதில்கள் சரிதானான்னு செக் பண்ணினா ஒரே குழப்பமா இருக்கு !ஞ

ஏன் சார், முதல் பரிசு கார் விழுந்ததுன்னீங்களே. .. எப்படி இருக்கு ?
விழுந்ததும் உடைஞ்சுடுச்சு !

ஏ.சி. இல்லாம என்னால் இருக்கவே முடியாது !
ஏன் நீங்க ரொம்ப பணக்காரரா ?
நோ. . நோ.. . நான் போலீஸ் இன்ஸ்பெக்டர். .!

டாக்டர். . என் கனவுல அடிக்கடி வீரப்பன் வர்றான் !
ஊடிவ-ல படுக்காம தரைல படுங்க.. . சரியா போய்டும் !
நன்றி ஆனந்த விகடன் 1-10-2000
ஏன்டீ.. . இந்த வெள்ளைக் கைக்குட்டை எப்ப வாங்கினே ?
அட.. இது நீங்க போன தீபாவளிக்கு வாங்கின இலவச வேட்டிங்க ! தண்ணி பட்டதும் சுருங்கிடுச்சு !

ஆனாலும் லதாவுக்கு சம்பாதிக்கிறோம்ங்கற திமிர் அதிகம் !
ஏன் ?
உங்க ஹஸ்பென்ட் என்ன பண்றாருன்னு கேட்டா, ஹவுஸ்பென்டுனு சொல்றாளே !

மாப்பிள்ளை டி.வி-யில மெகா சீரியல்ல நடிக்கிறவருன்னு எப்படிக் கண்டுபிடிச்சீங்க ?
தாலி கட்டுற நிகழ்ச்சியையே ஒரு வாரம் வச்சிருக்காருன்னா பாருங்களேன். ..

தலைவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்தது தப்பாப் போச்சு !
ஏன் ?
நர்ஸிங் ஹோம் வெச்சுத்தரச் சொல்லி பிடிவாதம் பண்றாரு.. .

ஏம்பா. .. டைப்பிஸ்ட் லதா மடில படுத்துத் தூங்குறியாமே ?
நீங்கதானே சார் ஆபீஸ் மேஜை மேல தூங்கக்கூடாதுன்னு சொன்னீங்க. ..!

முதியோர் இல்லத்துல என்ன கலாட்டா ?
புதுசா வந்த தாத்தாவை சீனியர் தாத்தாக்கள் ராக்கிங் பண்றாங்களாம் !

தலைவரே ! குற்றப் பத்திரிகை வந்திருக்கு.. .!
அப்படியா.. . உடனே வாழ்த்துமடல் வாங்கி அனுப்பு !

இப்பல்லாம் என் கணவரோட கனவுல சிம்ரன் வரதில்லையாம். ..?
எப்படி ? என்னிக்கிலேர்ந்து ?
என் கனவுல மாதவன் வர்றதா நான் சொன்னதிலிருந்தாம்.. !

ஐயா. .. ரெண்டு கண்ணும் தெரியலே.. .ஒரு ரூபா பிச்சை போடுங்க !
ஏன் பொய் சொல்றே.. . உனக்குத்தான் ஒரு கண் தெரியுதே !

அப்போ 50 பைசாவாவது போடுங்க !

என்ன.. . ஆபீஸ்ல வந்து ஷேவ் பண்ணிட்டிருக்கீங்க ?
மானேஜர் என்னைப் பார்த்து, இன்னிக்கு ஆபீஸ்க்கு வந்து என்ன பிடுங்கினே-ன்னு கேட்கக் கூடாது பாருங்க .. !

எங்க வீட்டுல கூட்டே பண்ணமாட்டோம். ..
ஏன் ?
நாங்கதான் கூட்டுக் குடும்பமாச்சே !

என்னங்க. .. சாம்பார்ல ரெண்டு ரூபாய் காய்ன் கிடக்குது ?
நீதானே சமையல்ல சேஞ்ச் வேணும்னு சொன்னே..

யோவ். .. என்ன இது ? பழைய சோறைக் குடுத்துட்டு புது குக்கர் கேக்கறே.. .?
நீங்கதானே பழையதைக் குடுத்துட்டு புது குக்கர் வாங்கிக்கலாமுன்னு விளம்பரம் செஞ்சீங்க !
நன்றி இதயம் பேசுகிறது 1-10-2000
சென்னையில் இதழியல் கல்லூரி ஆரம்பிக்கப் போறாங்களாமே.
கமல்ஹாசன் பிரின்ஸிபாலாக நியமிக்கப்படுவாரா ?

தலைவரை ரிப்பன் வெட்டி கடை திறக்கச் சொன்னது வாஸ்தவம் தான். அதுக்காக இப்படி அரிவாளோட வருவார்னு யாருமே எதிர்பார்க்கலைங்க.

தலைவரே.. . ! நீங்க ரொம்ப எளிமையானவருதான். .. அதுக்காக பொதுக் கூட்டத்துக்குக் கூட இப்படி வெறும் அண்டர் வேரோடதான் வர்றதா ?

சீலிங் ஃபேன் மாட்ற இடத்துல ஏன் குழாயை மாட்டியிருக்கீங்க ?
அதுலதான் நல்லா காத்து வருது.

நம்ம ஊருக்கே போலீஸ் ஸ்டேஷன் வரப்போகுதாம்.
அதை ஏன் சந்தோசமா சொல்றே ? மாமூல் கொடுக்க இனிமே நாம அடுத்த ஊருக்குப் போய் அலைய வேண்டாமே !

பெட்ல இருக்கற உங்க தாத்தாவ கண்டிச்சு வையுங்க !
குளுகோஸ் ஏத்துறப்ப சலைன் பாட்டில்ல ரம்பா படத்தை ஒட்டச் சொல்றார் !

எங்க அப்பா சிவகுமார் ரசிகர்.. .
அதனால என்ன பிரச்சினை ?
எனக்கு ஒரு சித்தியை கொண்டுவந்துட்டாரே !

அரசியல்வாதி புரொடியூசரா இருந்தால் இப்படித்தான !
என்னவாம் ?
ஹவுஸ் ஃபுல் ஆகலேன்னா வெளியூர்லருந்து ரசிகர்களைத் தியேட்டருக்கு லாரில கூட்டிக்கிட்டு வரச் சொல்றார் !

எங்க அப்பா உங்களை உதைக்கப் போறாரு.
ஏன் ?
உங்க பையன் என் வயித்துல எட்டி உதைக்கறானே.

தீவிரவாதிகளுக்குப் பிடித்த தமிழ் எழுத்து எது ?
ஃ. ..!
எப்படி ?
அதுதான் ஆயுத எழுத்து ஆச்சே !

வாக்காளர் பட்டியல் விலைக்குக் கிடைக்குமாம்.

பக்கத்திலேயே ஓட்டின் ரேட்டும் போட்டால் வேட்பாளர்களுக்கு உபயோகமாக இருக்கும்.

சீக்கிரம் தாலியை எடுத்துக் குடுக்கச் சொல்லி ஏன் படுத்தறேள் ?
யோவ், மாப்பிள்ளை கண்டிஷன் பெயில்ல வந்திருக்கார். கையெழுத்துப் போட நேரத்துக்குப் போக வேணாம் ?

இண்டியா-ன்னு எழுதச் சொன்னா ஐசூனுஐறற-ன்னு எழுதுறியே.. . ஏண்டா ?
தேசப்பற்றுதான் சார் ! ஒரு ற-கூட சேர்த்தா நல்ல காலம் பொறக்குமாமே !

தாத்தா கனவுல ஜோதிகா வர்றதுனாலதான் தூங்கும்போது கூட பல் செட்டோட தூங்கறார் !
நன்றி குமுதம் 5-10-2000
டாக்டர்.. . வர.. வர.. காது சரியாகவே கேட்கமாட்டேங்குது.. .
நீங்க ஒண்ணும் கவலைப் படாதீங்க.. . ரெண்டே நாள்ல காய்ச்சல் சரியாயிடும்.

டாக்டர், ரெண்டு நாளா நானும் கவனிச்சிட்டு இருக்கேன். என் சம்சாரத்தை எப்பப்பாரு கையை டச் பண்ணிட்டே இருக்கீங்களே ?
என் மனைவிக்கு ஆபத்து, கைவிட்டுடாதீங்க டாக்டர்னு நீங்கதானே சொன்னீங்க ?

டாக்டர், என்னால சரியா இருமக்கூட முடியலை.
இந்த டானிக்கை சாப்பிடுங்க.
சாப்பிட்டா சரியாப் போயிடுமா ?
நல்லா இருமலாம்.

அதோ போறாரே. .. அவர் பாம் தயாரிக்கிறதுல கில்லாடி.
அப்படியா. .? போலீஸ் இன்னுமா விட்டு வெச்சிருக்கு !
நீ வேற. அவர் முன்னாடி டைகர் பாம்ல வேலைப் பார்த்தாரு. இப்ப ஜண்டு பாம்ல வேலை பார்க்கிறாரு !

என்ன ! உங்க வீட்டு தயிர் ஒரு மாதிரி கலரா இருக்கு. .?
என் மனைவி தயிரை, சொட்டு நீலம் போட்டுத் தோய்ச்சிருக்கா.. .

நான் என் மாமியாரை மதிக்கவே மாட்டேன், நீ.. ?
நான் என் மாமியாரையே மதிக்க மாட்டேன். உன் மாமியாரைப் போய் எதுக்கு மதிக்கணும்

உங்க வீட்டுக்கு வந்த திருடன் போறப்ப ஏதாவது சொல்லிட்டு போயிருப்பானே. ..
சொன்னான் இன்ஸ்பெக்டர் சார், டிங் டாங் ஜாக்கு ஜக்கு. ..னு என்னவோ சொன்னான்.
ராஸ்கல் ! அவனா வந்தான் ? அவனை நாளைக்குத்தானே டூட்டி பார்க்கச் சொல்லி இருந்தேன்.

எனக்கு இது முதல் ஆபரேஷன் அதான் ரொம்பப் பயமா இருக்கு.
எனக்கும்தான் இது முதல் ஆபரேசன் நான் எங்கேயாச்சும் பயப்படறேனா ?

பொண்ணு முக்கனியாட்டம் இருப்பாள்னு புரோக்கர் சொன்னது சரியாப் போச்சு !
அவ்வளவு அழகா ?
பலா முள் மாதிரி முகமெல்லாம் பரு. மாநிறம், வாழை போல மூக்கு நீளம் - அதைத்தான் சொல்லியிருக்காரு சிம்பாலிக்கா !

அந்த பிரசவ டாக்டர் சரியான சினிமா பைத்தியம் போலிருக்கு.. .
ஏன் ?
எனக்கு என்ன பேபி பிறந்திருக்குன்னு கேட்டா, ஷக்கலக்க பேபின்னு சொல்றாரு. ..

என் கணவர் என்னை வேலைக்காரி மாதிரி நடத்துகிறார்.
அவ்வளவு ஜாலியாகவா ?

நம்ப தலைவருக்கு ஆனாலும் இந்த பந்தா ஜாஸ்தி.
ஏன் ?
அவரை ஒரு ஜெயில்லேருந்து இன்னொரு ஜெயிலுக்கு மாத்தறதுக்குக் கூட பால்காய்ச்சி சாப்பிடுறாரு.

கார் மெக்கானிக்கைக் கல்யாணம் பண்ணினது தப்பா போச்சு !
ஏன் ?
டெய்லி கட்டிலுக்குக் கீழதான் படுக்கறாரு !

ஜாதகத்துல எல்லாரும் மஞ்சள்தானே தடவுவாங்க. .. நீங்க என்ன விக்ஸைத் தடவுறீங்க. ..?
பெண்ணோட ஜாதகத்துல ஜலதோஷம் இருக்காம் !

தலைவர் கல்யாண வீட்லேயும் வந்து தன்னோட புத்தியைக் காம்பிச்சுட்டாரு !
எப்படி ?
ஆசீர்வாதம் வாங்க வந்த மணமக்களை, நிறைய சம்பாதிச்சு கூடிய சீக்கிரம் பினாமி பெயரில் நிறைய சொத்து வாங்கணும்-னு ஆசிர்வதிக்கிறார் !

முழுக்க முழுக்க நாயைப் பத்தி ஒரு நாவல் எழுதப் போறேன். !
நா-வள்-னு சொல்லுங்க !

பருவமழையே சரியா பெய்யலைன்னு ரொம்ப கவலைப்பட்டுட்டுப் போறாரே. .. அவர் விவசாயியா ?
இல்லை. பால் வியாபாரி. ..!

தலைவர் ஏன் ரம்பாவிடம் ஆசி வாங்கணும்னு அடம்பிடிக்கிறாரு ?
தேர்தலில் போட்டியிட அவருக்கு தொடை சின்னம் கிடைச்சிருக்காம் !

மன்னர் ஏன் அனைவரையும் மொட்டை போடச் சொல்லிவிட்டார் ?
பஞ்சம் தலை விரித்து ஆடாமல் இருக்கத்தான் !

நானும் உங்கம்மாவும் சண்டை போடுறப்ப ஏன் நின்று கவனிக்க மாட்டேங்கறீங்க ?
பெரிய வம்புகளில் சாட்சியாக மாற வேண்டிய கண்டம் இருக்குன்னு ஜோசியர் சொல்லியிருக்கார் !

நீங்க நடிகரா இருக்கலாம். அதுக்காக உங்க கால் ஆப்ரேஷனுக்கு டிப்பை அனுப்பி வைக்கிறது அவ்வளவு நல்லா இல்லை !

மாஜிக் நிபுணர் வீட்டில் பெண் பார்க்கப் போனது தப்பாப் போச்சுது !
ஏன் என்னாச்சு ?
வெறும் கிளாஸை நீட்டி காபி சாப்பிட்ட பிறகு பேசுங்கன்னு சொல்லிட்டாங்க !

பாரிமுனையில் ஒரு இளம் பெண்ணைக் கெடுத்துட்டாங்களாம். ..!
துப்பாக்கி முனை, கத்தி முனை சரி, அது என்ன பாரிமுனை ?

அரசாங்கம் ஒரு குழந்தை பெத்துக்கச் சொன்ன - ஏன்யா ஏழு குழந்தை பெத்துக்கிட்டீங்க ?
நான் ஒண்ணுதாங்க பெத்துக்கிட்டேன். மத்ததை எல்லாம் என் மனைவிதான் பெத்துக்கிட்டா !

மாறு வேடத்தில் அந்தப்புரத்துக்குச் சோதனைக்குச் சென்றது தவறாகிவிட்டது அமைச்சரே !
ஏன் மன்னா ?
தினமும் மன்னருக்குத் தெரியாமல் வந்து போங்கள் என்று அரசியார் சொல்லிவிட்டார் !

எனக்கு யானைக்கால் நோய் இருக்கு டாக்டர். ..!
அப்ப, காதுல எறும்பு புந்துடாமப் பார்த்துக்கங்க. ..!

எம்.டி. கோர்ஸே படிக்காத நீங்க, எந்த தைரியத்தில் உங்களை மாஸ்டர் ஆஃப் டாக்டர்-னு சொல்லிக்கறீங்க.. .?
ஒரு டாக்டரோட டீக்கடைல ரெண்டு வருஷம் மாஸ்டரா இருந்தேனே. ..!
நன்றி இதயம் பேசுகிறது 8-10-2000

நெட் ஜோக் !

தேர்தல் பரபரப்பு ஊரெங்கும் உச்சகட்டத்தில் இருந்த சமயம்.. . பக்கத்து ஊரில் வோட்டு வேட்டையாட ஒரு ஸ்பெஷல் பேருந்தில் பயணமாகிக் கொண்டிருந்தது அரசியல்வாதிகள் குழு ஒன்று. எதிர்பாராதவிதமாக அந்தப் பேருந்து ஒரு மரத்தின்மீது மோதி, மிகப் பெரும் விபத்துக்குள்ளானது.

விபத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ஒரு விவசாயி ஓடோடி வந்தார். ஸ்பாட்டை ஒரு வலம் வந்தார். பிறகு என்ன நினைத்தாரோ. .. ஆழமான குழிதோண்டி, விபத்தில் சிக்கிய ஒவ்வொருவரையும் புதைக்க ஆரம்பித்துவிட்டார். மறுநாள். .. விஷயமறிந்து வந்த உள்ளூர் போலீஸ் அந்த விவசாயியிடம் கேட்டது. எல்லோரையும் அக்கறையாகப் புதைத்து விட்டீர்கள். .. சரி ! ஆனால், அந்த விபத்தில் ஒருவர்கூடவா உயிர் பிழைக்கவில்லை ?
விவசாயி சொன்னார். சிலபேர் தாங்கள் உயிரோடு இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் நமக்குத்தான் தெரியுமே. .. அரசியல்வாதிகள் எந்த அளவுக்குப் பொய் சொல்வார்கள் என்று !

நானும் என் கணவரும் சேர்ந்துதான் தோய்ப்போம்.. .
நிஜமாவா . ..! எப்படி ?
நான் பாலைத் தோய்ப்பேன். அவரு துணியெல்லாம் தோய்ப்பாரு. ..!

தேர்தல் நேரம் வந்தாலே நம்ம வட்டச் செயலருக்கு பித்துப் பிடிச்சுப் போவுதா .. எப்படி ?
பாத்ரூம் குழாய் கழுத்துல டவலை போட்டாக்கூட அதை கும்பிட்டுட்டு தலைவர் அவர்களே-னு பேச ஆரம்பிச்சுடறாராம் . .!

இப்பல்லாம் நீங்க பேட்டிங், பவுலிங், ஃபீல்டிங் எதுலயுமே ஒடமாட்டேங்கறீங்களே.. .
ஏன் ?
ஏற்கெனவே ரெய்டு நடக்குது சார். .. அப்புறம் அந்த ஆள் ஓடிட்டான்னுவாங்க. அதான் பயமா இருக்கு !

உங்க மாமியாருக்குப் பண்ண ஆபரேஷன்ல ஒரு சின்னத் தப்பு நடந்துடுத்து. ..
என்ன டாக்டர். .. நீங்க பெரிய தப்பு பண்ணுவீங்கங்கிற நம்பிக்கைலதானே உங்ககிட்டே கூட்டிட்டு வந்தேன். ..

தலைவர் கலந்துக்கற கூட்டத்துக்கு ஏன் ஒரு நாட்டியக்காரியை நிக்க வெச்சிருக்காங்க ?
மேடைக்கு வந்ததும் தலைவர் அலங்கார வளைவு இல்லையா-ன்னு கேட்பார். .. அதுக்குத்தான்.
முதல்ல கார் டிரைவராதான் வந்தார். அப்புறம் நல்லா சமைக்கறார்னு தெரிஞ்ச உடனே. ..
சமையல் வேலைக்கு வெச்சுக்கிட்டியா ?
ஊஹூம். .. என் பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வெச்சுட்டேன் !

என் கணவர் தோசை சுட்டுப் போட்டுக்கிட்டே இருப்பார். எத்தனை-ன்னு கணக்குப் பார்க்கமாட்டார். ..
ஏன் ?
அவருக்குச் சுட்டுப் போட்டாலும் கணக்கு வராது. அதான் . .!

அர்ச்சனை உங்கள் பெயருக்கா. .?
சாமி பெயருக்கே பண்ணுங்க. .. எனக்குத் தினமும் வீட்டில் நடக்குது !

எதையும் காது கொடுத்துக் கேக்கமாட்டா, தேவையில்லாம் எல்லா விஷயத்துலயும் மூக்கை நீட்டுவா, அனாவசியமா தொண்டை கிழியக் கத்துவா. ..
யார். ..?
காது - மூக்கு - தொண்டை நிபுணரான என் மருமகள்தான். .. !

நீங்க நடிச்சது ஒரு படம்தான். .. ஆனா, உங்க படம் நிறைய வந்திருக்குன்னு சொல்றீங்களே. .. எப்போ . .?
போன வாரம் மட்டுமே நாலைஞ்சு பத்திரிகைகள்லே வந்திருக்கே !

என்னப்பா ! காபியில ஈ செத்துக்கிடக்குது.. .?
ஸ்பெஷல் காபியிலதான் சார் ஈ உயிரோட இருக்கும் !

டாக்டர் என் மாமியாருக்கு இப்போ உடல்நிலை எப்படி இருக்கு ?
மெகா சீரியல் மாதிரி. ..
புரியலையே ?
இழுத்துக்கிட்டே இருக்கு !

நான் எப்பவுமே மத்தவங்க கையை எதிர்பார்க்க மாட்டேன் !

அதுக்குனு நீங்களே என் பாக்கெட்ல கையை விட்டு பணத்தைக் கடனா எடுத்துக்கறது நல்லாயில்லை !

எங்க ஆபீஸ்ல எல்லாத்துக்கும் கம்ப்யூட்டர் வந்துடுச்சு. ..
நிஜமாவா .. ?
ஆமாம் ! சாயங்காலம் அஞ்சு மணியானா எங்களை எழுப்பறதுகூட கம்ப்யூட்டர்தான்னா பாருங்களேன் !

சாவிக்கொத்தைத்தான் எங்க அம்மா உன் கிட்ட கொடுத்திட்டாங்களே ! அப்புறமும் ஏன் சந்தேகப்படறே ?
அது சரி. . டூப்ளிகேட் சாவியை எங்க வெச்சு இருக்காங்கன்னு தெரியலையே ?
நன்றி ஆனந்த விகடன் 8-10-2000
நான் ரெண்டு நாளா குளிக்காத விஷயம் என் காதலனுக்கு தெரிஞ்சுப் போச்சு !
எப்படி ?
என்னைப் பார்த்து அழுக்கான ராட்சஸியேனு பாடினார் !

என்னங்க ! ஆபீசுக்கு நீங்க கர்சிப் இல்லாமல் போறது எனக்கு வேதனைய இருக்குங்க.
அடப்பாவி. .. ! பட்டுப்புடவைக்கு கைக்குட்டை இலவசம்ங்கிறதால வாங்கிட்டியா நீ ?

முட்டாள்களை வச்சு ராதிகா நாடகம் எடுத்தாங்கன்னா என்ன பெயர் வைப்பாங்க ?
தத்தி

காட்டுக்குப் போனது ராமனா லெட்சுமணனா ?
இல்லை டீச்சர் நக்கீரன் கோபால்.

என்னங்க. .. ஒவ்வொரு கொலு பொம்மையும் ஒவ்வொரு பக்கம் திரும்பியிருக்கு.. .?
காங்கிரஸ் கொலு பொம்மைகளாம் !

உங்க, டாக்டர் முன் ஜாக்கிரதைப் பேர்வழியாமே ?
ஆமா ! க்ளினிக் முன் பக்கம் அடகுக் கடையும், பின் பக்கம் சுடுகாடும் இருக்குன்னா, பார்த்துக்கோயேன் !

நம்ப லதா கிரைண்டர் வாங்கினதுக்குப் போய் எதுக்கு அலட்டிக்கிறா ?
அவ அல்ட்ரா கிரைண்டர் வாங்கியிருக்காளாம்.

அந்தக் கள்ளச் சாராய வியாபாரி உடம்புக்கு என்ன ?
காய்ச்சலாம்.

என் கடன் பணியன் செய்து கிடப்பதுதே-ன்னு உன் பையன் சொல்றானே. .. எங்கே வேலை பார்க்கிறான் ?
திருப்பூர்ல !

மந்திரவாதியா இருந்த உன் பையன் இப்ப என்ன பண்றான் ?
மந்த்ரா படங்களைப் பார்த்துக் கெட்டுப் போய் மந்த்ரா-வாதியாயிட்டான் !

ஏன் அந்த நடிகர் வர்ற சீன்ல எல்லாம் மத்த நடிகர்கள் அவரை வாங்க.. . வாங்க-ன்னு சொல்லி உபசரிக்கிறாங்க ?
அவரு நடிக்கறது கெஸ்ட்ரோல் ஆச்சே !

ஆபரேஷன் செய்வதற்கு முப்பதாயிரம் ரூபாய் பீஸ் சரி டாக்டர் ! அதென்ன ப்ளஸ் முந்நூறு
அது, பாடியை வீட்டுக்கு எடுத்து போக ஆம்புலன்ஸ் வாடகை !

அந்தக் காப்பி கொட்டை கடையில என்ன பி.ஏ. காப்பி, பி.காம் காப்பின்னு போர்டு போட்டிருக்கு ?
டிகிரி காப்பியாம்.

மாடு வாங்க லோன் கேட்டீங்களே, செக்குதான் கொடுப்போம்.. .
எனக்கு செக்கு வேண்டாங்க. . மாடுதான் வேணும் ?

அரைச்ச மாவுன்னு ஒரு டி.வி. மெகா சீரியல் வந்துதே, அதோட ரெண்டாவது பாகம் வரப் போகுது. ..
பேர் என்ன ?

புளிச்ச மாவு ..!

தலைவருக்கு தேர்தல் ஜுரம்னு சொல்றியே. .. எப்படி ?
வார்டு வார்டா சுற்றுப் பயணம் செய்யப் போறாராம் !
நன்றி குமுதம் 12-10-2000
போலீஸை ஏன் அரிவாளால் வெட்டுனே ?
சும்மா மாமூலை வெட்டு வெட்டுனு தொந்தரவு குடுத்துட்டு இருந்தாரு மொத்தமா வெட்டிட்டேன்.

குருவே. .. என் இரண்டு சம்சாரத்தையும் என்னால சமாளிக்க முடியலை. அதான் ஆசிரமத்துக்கு வந்துட்டேன்.
சிஷ்யா ! 2 பொண்ணுங்களையே சமாளிக்க முடியாத நீ. ஆசிரமத்துல இருக்கிற அத்தனை பொண்ணுங்களை எப்படி சமாளிக்கப்போறே ?

உனது கடைசி ஆசை என்ன ?
சரியாக வாதாடாமல், எனக்கு தூக்குத் தண்டனை கிடைத்ததற்குக் காரணமான எனது வக்கீலையும் என்னுடன் தூக்கில் போடவேண்டும் !

சார், உங்க மோதிரத்தை எனக்குக் குடுங்க !
ஏண்டா ! உனக்கு என்னாச்சி ?
கேளுங்கள் தரப்படும்னு நீங்க தானே சார் சொன்னீங்க ?

டாக்டர் அந்த பேஷண்டு ரெண்டு ஊசி போட்ட பிறகும் மயங்கவே இல்லை !
ஊசியின் விலையைச் சொல்லிப்பாரு மயங்கிவிடுவார் !

புருஷன் பொண்டாட்டியை அடிக்கிறதெல்லாம் சர்வ சாதாரணமான விஷயம் இதுக்குப் போய் ஏன் வருத்தப்படறீங்க ?
கதையை மாத்திச் சொல்றீங்களே சார். ..!

நீங்க ஏன் உங்க மேரேஜை திடீர்னு ஒத்தி வச்சிட்டீங்க ?
ஒரு வழியா டெலிவரி முடிந்த பிறகு வச்சுக்கிடலாம்னுதான்.. .!

என்ன ! நம்ப ஸ்டெனோ லதா தலைக்கு இவ்வளவு பெரிய கொண்டை போட்டுக்கறா ?
நான்தான் சொன்னேனே அவளுக்கு தலைக்கனம் ரொம்ப அதிகம்னு. ..

கேபிள் டி.வி-னால் என் பையனோட படிப்பு கெட்டுப் போய்டுமோன்னு பயந்தேன். ஆனா அதுக்கு எதிரா நடந்தது, எப்படி ?
இப்ப டி.வி-தான் கெட்டுப் போச்சு.

என்னடா முடி வெட்டாம வந்திருக்க ? உங்கப்பா என்ன வேலை செய்கிறார் ?
சலூன் கடை வைச்சிருக்கார் சார் !

சந்தேகம் இருந்தா கேளுங்க.
உங்க கொடுமைகளை தாங்கிக்கிட்டு உங்க வீட்டுக்காரர் எப்படி இருக்கார் டீச்சர்.

காதலுக்கு சம்மதம் தெரிவிக்கச் சொன்னால் மவுனமாக இருக்கிறாயே !
மவுனம் சம்மதத்திற்கு அறிகுறியா ?
ஆமாம், நான் 4 மாத கர்ப்பிணி.

ஷாஜஹான் தன் மனைவிக்காக தாஜ்மஹாலையே கட்டினாரு. நீங்க எனக்காக. என்ன அப்படி கட்டியிருக்கீங்க ?
அவராவது ஒரே முறைதான் தாஜ்மஹால் கட்டினாரு. நான் மாசாமாசம் கைகடன் கட்றேனே !

குருவே ! மோட்சத்துக்கு வழி சொல்லுங்க.
புரசவாக்கம் பக்கம் போ.

ஏங்க.. .. நம்ப பொண்ணுக்குத் தூக்கத்துல நடக்கிற வியாதிங்க !

கவலைப்படாதே. .. சரி பண்ணிடலாம் !
அதுக்கில்லைங்க.. . பக்கத்து வீட்டுப் பையனுக்கு தூக்கத்துல ஓடற வியாதியாம் !

கல்யாணக் கேசட்ல நிறைய விளம்பரமா நடுவுல வருதே !
பூக்காரர், சமையல், நாதஸ்வர வித்வான்னு எல்லோரும் விளம்பரம் செய்திருக்காங்க.. .!

எதுக்கு தீபாவளி சமயத்துல பொண்ணுக்கு மாப்பிள்ளை தேடறீங்க ?
தீபாவளிப் பலகாரமெல்லாம் என் ஒருத்தனால செய்ய முடியாதே !

விபத்துலே காயம்பட்டதை அவர் ஏன் சைகையாலே சொல்றாரு ?
ஊமைக் காயமாம் !

டாக்டர் ! நான் செத்துப் போறா மாதிரி அடிக்கடி கனவு வருது.. .!
கவலைப்படாதீங்க ! இனிமே அது கனவுல வராது.

காதலன் - நான் எப்போதுமே தோல்வியைக் கண்டு பயப்படாதவன் !
காதலி - அப்போ நல்லதா போச்சு. .. இந்தாங்க என்னோட திருமணப் பத்திரிகை !

அந்த டிக்கெட் பரிசோதகர் வேலைக்கு புதுசா ?
ஏன் கேக்கறே ?
டிரைவர் டிக்கெட் எடுக்கலைன ஃபெனால்ட்டி போட்டுட்டாரே !

கவர்ச்சி நடிகை சொந்தப்படம் தயாரிக்கப் போறாங்களா.. .?
டைட்டில் என்ன ?
மூடி வாழ்ந்தால் ஏது நன்மை !

வாகனங்கள் திரும்புற வளைவுலே ஏன் பொதுக்கூட்டம் நடத்துறாங்க ?
இந்த மீட்டிங் திருப்புமுனையா இருக்கணும்னு தலைவர் சொல்லிட்டாராம் !

தலைவருக்கு விவரம் பத்தாதா.. . ஏன் ?
இளைஞர் அணி, மகளிர் அணி மாதிரி கள்ள ஓட்டு அணிச் செயலாளரை நியமிக்கப் போறாராம் !

அவசரப் போலீஸைக் காதலிச்சது தப்பாப் போச்சு !
ஏன் ?
முதலிரவைக் கல்யாணத்துக்கு முன்னாடியே வைக்கணும்னு அவசரப்படறார் !

கராத்தே மாஸ்டரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பாப் போச்சு ?
என்னாச்சு ?
முதலிரவிலே ஆ- ஊ-ன்னு கத்தி என் மானத்தை வாங்கிட்டாரு !

ஆபீஸ்ல மாடா உழைச்சது தப்பாப் போச்சு !
ஏன் ?
எனக்க ஒரு மாட்டுக் கொட்டகையை ஒதுக்கித் தந்துட்டாங்க.. .!

ஹோட்டலில் வேலை செய்தவரை பூச்சி மருந்துக் கடையில் வேலைக்குச் சேர்த்தது ரொம்பவும் தப்பாப் போச்சா. ..
ஏன் ?
யாராவது பூச்சி மருந்து கேட்டால் சாப்பிடவா, பார்சலா-ன்னு கேட்கிறார் !

என்னப்பா ! காபியில ஒரே ஃபினாயில் வாசனை அடிக்குது. ..?
நான்தான் சொன்னேனே ! எங்க ஓட்டல்ல எல்லாம் சுத்தாமா இருக்கும்னு. ..!

உங்களுக்கு ரோடு ரோலர் மாதிரி ஒரு பொண்ணு இருப்பாளே ? எங்க ஆளையே காணும்

பக்கத்து வீட்டுப் பையன் தள்ளிக்கிட்டுப் போயிட்டான் !

வனப்பாதுகாவலர் வேலைக்கு ஆள் எடுக்க எல்லாருமே வந்தாச்சே.. .? இன்னும் ஏன் வெய்ட் பண்றாங்க ?
செலக்ஷன் செய்ய வீரப்பன் இன்னும் வரலையாம் !

என் காதலர் வீரப்பன் ரசிகர்டி !
எப்படிச் சொல்ற ?
என் பிறந்த நாளுக்கு வாழத்துக் கேசட் அனுப்பியிருக்காரே !

என் காதலி மாடர்னா மாறிட்டா !
என்னவாம் ?
இனிமே பீச் வேணாம்.. . டைடல் பார்க்ல சந்திக்கலாம்ங்கறா !

தலைவரு சினிமா பைத்தியமா இருப்பாரு போல இருக்கு !
ஏன் அப்படிச் சொல்றே ?
தேசியகீதம் பாடுனதும் ஒன்ஸ்மோர்னு கத்துறாரே !

நீயும் உன் மாமியாரும் சேர்ந்துகிட்டு டாக்டர் கிட்ட சண்டைக்குப் போனீங்களாமே.. .? ஏன்
குடும்பச் சண்டைல ஏற்படற காயத்துக்கு மருந்து போடமாட்டேன்னு டாக்டர் அடம்புடிக்கறார்
நன்றி இதயம் பேசுகிறது 15-10-2000
எங்க தலைவர் ரொம்ப எளிமையானவர்.. .
அதுக்காக அவரைக் கைது பண்ணதை கண்டிச்சு ரோடுல போற சைக்கிள் ரிக்ஷாவை யெல்லாம் கொளுத்தறது நல்லாயில்லை.. .

தலைவர் பணத்துக்கெல்லாம் ஃபேர் அன்ட்லவ்லி தடவிக்கிட்டு இருக்காரே, ஏன் ?
அதை தடவினா கருப்பெல்லாம் வெள்ளையாகும்னு சொன்னதை தப்பா புரிஞ்சுகிட்டாரு.. .

என்ன டாக்டர் ஆபரேஷனுக்கு ஃபீஸ் வாங்கமாட்டீங்களா .. ?
ஆமாம். செய்கூலி இல்லை, ஆனா, சேதாரம் உண்டு.. .

அந்த மாமியார் மருமகள் சண்டையை பார்க்க தினமும் ஏகப்பட்ட கூட்டம் வருதாமே !
ஆமா ! சண்டை முடிஞ்சதும் ஒரு கேள்வி கேட்டு பரிசு கொடுக்கறாங்களே !

கல்யாணத்துக்குப் பிறகு காதலிக்கிறதுதான் நல்லது.
அதுக்கு பெண்டாட்டி ஒத்துக்குவாளா ..?

குத்துச் சண்டை போட்டியில ஜெயிச்சவரோட மனைவிக்கு ஏன் பதக்கம் தர்றாங்க.. .?
அவங்கதான் அவருக்கு ட்ரெயினியாம்.

ஸ்டேஜ்ல இருந்த தலைவர் ஏதாவது பேசுவார்னு எல்லாரும் ரொம்ப ஆவலா இருந்தாங்க.. .!
என்ன பேசுனாரு ?
எதுவும் பேசலை, அவர் இருந்தது கோமா ஸ்டேஜ்ல ஆச்சே !

இதய ஆபரேஷன் செய்ய வேண்டிய பேஷண்ட்டுக்கு டாக்டர் எதுக்கு கிட்னி ஆபரேஷன் செய்யறார் ?
அவர்தான் மாற்று அறுவைச் சிகிச்சை நிபுணராச்சே !

டி.வி மெகா சீரியல் எடுக்கிற டைரக்டர் வீட்டுக்கு கல்யாணம் போலிருக்கு .. .!
எப்படிச் சொல்றீங்க. .?
கல்யாணப் பத்திரிகையே இருபது பக்கத்துக்கு இருக்கே.. .!

ஜூனியர் வக்கீலா லேடியை நியமிச்சது தப்பாபோச்சு !
ஏன் ?

கேஸ் கட்டை கொண்டு வாங்கன்னு சொன்னா, குக்கர்ல இருக்கிற இருக்கிற கேஸ் கட்டை கொண்டு வர்றாங்க !

அவர், ஒரு காலத்துல கோயில்ல சிதறு தேங்காய் பொறுக்கி சாப்பிட்டவராம் !
இப்ப என்ன பண்றாரு ?
படிப்படியா வளர்ந்து கோயில் சொத்தையே சாப்பிடுறாரு !
நன்றி குமுதம் 19-10-2000
டி.வி-ல அறிவிப்பாளர் வேலை கேட்கறியே. .. உனக்கு என்ன தகுதி இருக்கு.. .?
எனக்கு ழ- சரியா வராது சார். ..!

இந்த ஆபீஸில் வேலைக்குச் சேர்ந்த அன்னிக்கு எவ்வளவு கனவு-களோட இங்கே வந்தேன் தெரியுமா ?
அடப்பாவி. ..! முதல் நாளே தூங்கிக்கிட்டுத்தான் இங்கே நுழைஞ்சியா ? !

புதுசா வேலைக்கு வந்திருக்கீங்க. .. உங்களுக்கு எதுவேணும்னாலும் தைரியமா கேளுங்க. ..!
என்னோட படுக்கை எங்கே சார் இருக்கு .. .?

அந்த எறும்பு மட்டும் ஏன் உப்பைச் சாப்பிடுது.. .?
அதுக்குச் சர்க்கரை வியாதியாம் !

டாக்டர். .. நீங்க கொடுத்த டானிக்குக்குப் பதிலா ஞாபகமறதியா என் கணவர் பெட்ரோலைக் குடிச்சுட்டார் !
அவரைக் கூட்டிக்கிட்டு வரவேண்டியது தானே !
எப்படி டாக்டர். .. பிடிக்க முடியலையே !

எதுக்கு அந்த வாஸ்து சாஸ்திர ஜோசியரைப் போய் அடிக்கப் போனீங்க. ..?
பின்னே. .. இடதுபக்கம் இருக்கிற இதயத்தை எடுத்து வலதுபக்கம் வெச்சுட்டா நல்ல பணம் வரும்-னு சொல்றாரு !

சார். .. நாங்க வீட்டைப் பூட்டிக்கிட்டு வெளியே போயிருக்கும்போது யாரோ திருடன் புகுந்து வீட்டையே காலி பண்ணிட்டுப் போயிட்டான். ..
ஆச்சரியமா இருக்கே. ..
இதுக்கே ஆச்சரியப்பட்டா.. . போகும்போது வீட்டை ஒருத்தருக்கு வாடகைக்கு வேற விட்டுட்டுப் போயிட்டான் சார். !

அந்த ஃபைனான்ஸ் கம்பெனியில இன்டர்வியூவுக்குப் போனியே. .. என்ன கேள்வி கேட்டாங்க. .. ?
மணிக்கு எவ்வளவு கிலோ மீட்டர் தூரம் ஓடுவே?-னு கேட்டாங்க !

எதுக்கு தினமும் நீங்க இப்படிக் குடிக்கிறீங்க . ..?
காதலியை மறக்கறதுக்காக குடிக்கிறேன். ..
நீங்க யாரைக் காதலிச்சீங்க. ..?
அதான் மறந்து போச்சே !

ஏம்ப்பா.. . நீ தினம் தினம் திருடறதாச் சொல்றியே. ..அதெப்படி போலீஸால உன்னைப் பிடிக்கவே முடியலே.. .?
போலீஸ் பிடிச்சா என் பேர் வீரப்பன்-னு சொல்லிடுவேன். .. உடனே அவங்களால என்னைப் பிடிக்க முடியாமப் போயிடும் !

அடடா.. . உங்க மூக்குல ஏகப்பட்ட ஓட்டைகளா இருக்கே ! எப்படி.. .?
நான்தான் சொன்னேனே. .. என் மனைவி சாம்பார் வெச்சா மூக்கைத் துளைக்கும்-னு !

நீங்க எடுத்த படம் படுசூப்பரா இருக்கே. .. கதை யாருடையது. ..?
வக்கீல் நோட்டீஸ் வந்த பிறகுதான் தெரியும் !

டாக்டர் - உங்க மாமியார் பிழைக்கிறது ரொம்பக் கஷ்டம்.. .
மருமகள் - அப்புறம் பேச்சு மாறமாட்டிங்களே டாக்டர் !

ரொம்ப டென்ஷன் ஆனா கோபம் வருது டாக்டர். ..!
எப்பவெல்லாம் டென்ஷன் ஆகறீங்க.. .?

கோபம் வந்தா டென்ஷன் ஆகிடறேன் டாக்டர். ..!

வர வர டாக்டர் தொழிலையே விட்டுடலாம் போலிருக்கு ..!
ஏன்.. .?
மருந்துக்குக்கூட ஒரு பேஷண்ட் வர்றதில்லை.. .!

என்ன டாக்டர். . ஆபரேஷன் பண்ணும்போது கண்ணைக் கட்டிக்கறீங்க.. ?
ரத்தத்தைப் பார்த்தா எனக்கு மயக்கம் வந்துடும் !

டாக்டர் .. . ஆபரேஷனுக்கு அப்புறம் எல்லாம் பாதி பாதியா தெரியுது. ..!
இப்படி ஆகும்னு தெரிஞ்சிருந்தா நான் ஆபரேஷனுக்கு அப்புறம் ஃபீஸை வாங்கியிருப்பேனே !

என்னப்பா இது. .. ஆட்டோலே ஏறப்போனவரு திடீர்னு மயக்கம் போட்டு விழுந்துட்டாரு.. ?
எக்மோர் போவணும். .. என்ன கேட்கறே ?ன்னாரு.. . மீட்டருக்குக் கீழே அஞ்ச ரூபா குறைச்சு கொடுங்க-ன்னு சொன்னேங்க.. .!

சாப்பிட்டு முடிச்சவுடனே, உன்னைப் பெண்பார்க்க வந்த மாப்பிள்ளை உன்கிட்ட என்னவோ கேட்டாரே. ..
என்னவாம் ?
இதே மாதிரி சாப்பாடு எப்பவும் கிடைக்குமா ?னு கண்ணீர் மல்கக் கேட்டார் !

இந்த சொஜ்ஜி பஜ்ஜியெல்லாம் பெண்ணோட கைவண்ணமா ?
ஆமாங்க. . பெண்ணே ஓட்டலுக்குப் போய், தன் கையால வாங்கிட்டு வந்ததுதான் !

நாம ரெண்டு பேரும் ஊரை விட்டு ஓடப்போற விஷயம் எங்கப்பாவுக்கு தெரிஞ்ச போச்சு. ..!
ஐயையோ. ..! என்ன சொன்னாரு ?
போறப்ப எங்க அம்மாவையும் கூட்டிட்டுப் போகச் சொன்னாரு.. .!
நன்றி ஆனந்த விகடன் 15-10-2000
டைப்பிஸ்ட் லதாவுக்கு கோபம் வந்தால் மானேஜரை மரியாதை இல்லாம அடிச்சுடுவா.. .
என்ன சொல்றீங்க.. .?
ஆமாம் ! லெட்டர் அடிக்கும் போது மானேஜரோட பேருக்கு முன்னாடி மிஸ்டர் போடாம அடிச்சுடுவா.

வெறும் வேட்டி, துண்டோட சுத்தறாரு ! அவரைப் போய் கோடீசுவரன்-னு சொல்றீங்களே ! நம்பவே முடியலையே !
அவர் எப்பவும் கோடி வேட்டிதான் கட்டுவார் ! பேரு ஈசுவரன் அதனாலதான் கோடீசுவரன்-னு சொன்னேன் !

ஆசிரியர் - நான் இன்னைக்கு உங்களுக்கு ஒரு கதை சொல்லப் போறேன். ஒரு ஊர்ல ஒரு சாமியார் இருந்தாராம்.. .
மாணவன் - அந்த சாமியார் பெண்களை கெடுப்பாராம். அப்புறம் நரபலி சாமியாரா ஆயிட்டாராம்.. . அதானே டீச்சர் ?

நேத்துதான் கட்சி ஆரம்பிச்சீங்க.. . 2001-ல் ஆட்சியைப் பிடிப்போம்னு சொல்றீங்களே. ..
அப்படி சொன்னாத்தான் எங்க கட்சிக்கு பேப்பர்லயாவது இடம் கிடைக்கும்.. .?

என்ன ! உங்க பையன் ஆடை இல்லாத மனிதன் அறை மனிதன்னு தப்பா எழுதறான். ..
கரெக்ட்தான் சார் ! ஆடை இல்லாத மனிதன் அறைக்குள்ளவே இருக்கறதாலே அறை மனிதன்தானே.

என் பையன் ரொம்ப புத்திசாலி.. .
இருக்க முடியாதே ! உங்க மனைவி, பிள்ளை அப்படியே அப்பனையே உரிச்சு வெச்சிருக்கான்னு சொல்லிட்டு போனாங்க.

என்னது.. . இளவரசர் போர், போர்னு ஓடி வருகிறார். ஏதும் வேற்று நாடுகள் சண்டையை ஆரம்பித்து விட்டனவா ?
அட நீ வேற. .. குருகுலத்தில் நடத்தப்படும் பாடம் படுபோராம். .. அதான் குருகுலத்தை விட்டு கத்திக்கிட்டே ஓடி வந்துட்டார் !

அனஸ்தீஸியா கொடுக்கிறவர் வரலையே டாக்டர். ..?
பேஷண்ட்டுக்கு மயக்கம் வரவழைக்கணும்.. அவ்வளவுதானே ? அவரை ஆபரேஷன் தியேட்டருக்கு அனுப்பி, டேப்ரிக்கார்டர்ல, வீடு வரை உறவு.. . பாட்டைப் போடுங்க போதும் !

உண்ணாவிரத ஏற்பாடெல்லாம் எப்படி நடக்குது ?
சாப்பாட்டுக்கு, பக்கத்துல ஒரு ஓட்டல்ல சொல்லியிருக்கு !

டாக்டர் ! இந்த இயரிங் எய்ட் ரொம்ப பவர்புல்லா இருக்கு..
நிஜமாவா. ..?
ஆமாம் ! தீபாவளிக்கு கேப் வெடிச்சா கூட ஆட்டம்பாம் சத்தம் கேட்குது டாக்டர்.

உங்க குழந்தை என்கிட்ட உரிமையா பழகுறது சந்தோஷமாயிருக்கு..
இரண்டுநாள் போகட்டும். உங்க சொத்து பூராவும் கேட்பான் பாருங்க..

திருடனுக்கு ஷாக் ட்ரீட் மெண்ட் தரப் போறீங்களா. .. எப்படி இன்ஸ்பெக்டர்.. ?
நாற்காலியல் அவனைக் கட்டிப் போட்டுட்டு, டி.வி-யை எதிரில் வெச்சு ஆன் பண்ணிடு வோம் !

என்ன ! உன் கணவர் தூங்கி எழுந்த மாதிரி இருக்காரு. ..?
அவரு இப்பத்தான் ஆபீஸ் லேர்ந்து வந்தாரு.. .

நர்ஸ் - ஆபரேஷன் தியேட்டர்ல வந்து கூட எதுக்கு டாக்டர் என்னை சில்மிஷம் பண்றீங்க
டாக்டர் - புரியாமல் பேசாதே. .. பேஷண்ட்டுக்கு மயக்க மருந்து வேலை செய்யிதான்னு உன் மூலமா டெஸ்ட் பண்ணினேன், அவ்வளவுதான் !

சார் உங்க சொத்து பூராவையும் கண்ட நாய்ங்க எல்லாம் சாப்பிடணும்னு நினைக்கறீங்களா ?
இல்லையே ஏன் ?
சொந்தப்படம் ஒண்ணு எடுக்கப் போறேன்னு சொன்னீங்களே ?

பக்கத்து வீட்டுக்காரி நல்லாத்தானே இருக்கா. அப்புறம் ஏன் கழுத்துல சுளுக்குங்கிறா ?
அவ போட்டிருக்கிற வைர அட்டிகையை எல்லோரும் பார்க்கணுமாம். அதான் !

என்ன ! எல்லா எம்.பி.யும் கம்பளி, ஸ்வட்டரெல்லாம் எடுத்துக்கிட்டு போறாங்க. ..
பார்லிமெண்ட்ல குளிர்கால கூட்டத் தொடர் நடக்கப் போகுதாம்.

கணிப்பொறிக்கும், எலிப் பொறிக்கும் என்ன வித்தியாசம் .. .?
கணிப்பொறிக்கு மௌஸ் வெளியே இருக்கும். .. எலிப் பொறிக்கு மௌஸ் உள்ளே இருக்கும். ..

அவ்வளவு சொத்தையும் எப்படிடா அழிச்சே ?
ஒரு ரப்பர் ஃபேக்டரி ஆரம்பிச்சேன் ! சரியா ஓடலை ! எல்லா சொத்தும் அழிஞ்சு போச்சு !

எல்லாப் போட்டிகளிலும் நம்ம காலேஜ் தோல்வியடைஞ்சுட்டுதே என்ன காரணம் ?
எல்லாப் போட்டிகளிலும் நம்ம எதிரணியினர் ஜெயிச்சதுதான் ! ! !

குரைக்கிற நாய் கடிக்காதுன்னு எதவைச்சு சொன்னாங்க ?
தேள் குரைக்கறதில்லை. ஆனா கடிக்குதுல்ல.. .

எங்க மானேஜருக்கு ஆபீஸ்ல திடீர்னு பெண்டாட்டி ஞாபகம் வந்தா போதும்.. .
உடனே வீட்டுக்கு கிளம்பிடு வாரா.. .?
இல்ல ! ஆபீஸ்ல எல்லார் மேலயும் எரிஞ்சு விழுவாரு.. .

அது என்ன வீரப்பன் வெடி ?
மற்ற வெடியை வெடிச்சா கந்தக வாசம் வரும். .. இந்த வெடியை வெடிச்சா சந்தன வாசம் வரும் !

அது என்ன வீரப்பன் வெடி ?
பத்தவெச்சா அது பாட்டுக்குப் பேசாமலே இருக்கும். திடீர்னு நாம எதிர்பார்க்காத நேரத்துல வெடிச்சிடும் !

அது என்ன வீரப்பன் வெடி ?
இது வெடிக்கற சத்தம் போலீஸ் காரங்க தவிர, மத்த எல்லோருக்கும் கேட்கும் !

அது என்ன வீரப்பன் வெடி ?
ஒரே இடத்தில் வெடிக்காம இடம் மாறி மாறிப் போய் வெடிச்சுக்கிட்டே இருக்கும் !

எல்லா வி.ஐ.பி-யும் ஒரே இடத்துல கூடி, வர்ற ராக்கெட் வெடியை அண்ணாந்து பார்த்துக்கிட்டிருக்காங்களே. ..
என்னவாம். .?
அதுவா. .. வீரப்பன் அதுல வெச்சு ஏதோ காஸெட் அனுப்பியிருக்கானாம் !

என்ன இது, போலீஸ்காரங்கள்லாம் கூட்டமா சந்தனக்காட்டுக்குப் போறாங்க.. . வீரப்பனைப் பிடிக்கவா.. .?
இல்லீங்க.. . வீரப்பன் கிட்டே தீபாவளி மாமூல் வாங்கறதுக்கு !

அப்பா. .. தீபாவளிக்கு நீங்க வைரமோதிரம் செய்து போடாம உங்க மாப்பிள்ளை இனி இங்கே வரவே மாட்டாராம். ..
நிஜமாவா.. .? ரொம்ப சந்தோஷம். .. அப்புறம் முடிவை மாத்திக்க மாட்டாரே ?

என்ன இது. கூட்டணி வெடின்னு சொன்னீங்க. ஆனா, இந்தக் கட்டுல ஒரே ஒரு வெடிதான் வெடிக்குது.
என்ன செய்யறது. கூட்டணில அந்த ஒரு வெடிக்கு மட்டும்தான் எல்லா பவரும்.

கள்ளக் கணக்கு எழுதறதுக்கு ஒரு விவஸ்தையே இல்லாமப் போயிடுச்சு.
எதைச் சொல்றீங்க ?
தரைச் சக்கரத்துக்கு பஞ்சர் ஒட்டியதாக கணக்குக் காட்டியிருக்காங்க !

சங்கு சக்கரம் மாதிரி நீ வளைய வளைய வர்றதையும் மத்தாப்பு மாதிரி நீ சிரிக்கிறதையும் பாத்துட்டு, ராக்கெட் வேகத்துல என்னை லவ் பண்றேன்-னு அந்தப் பட்டாசுக் கடைக்காரர் பெண்ணுக்கு லவ் லெட்டர் எழுதினியே.. .
என்ன ஆச்சு ?
புஸ்வாணமாதான் !

பட்டாசை வெச்சுக்கிட்டு எதுக்கு ஜெனரேட்டரைப் போடறாரு.. ?
எலெக்ட்ரிக் பட்டாசாம். .. கரண்ட் கட்டாம் !

அனுமதி இல்லாம பட்டாசுக்கடை வெச்சிருக்கீங்களே. .. அதிகாரிங்க வந்து கேட்க மாட்டாங்களா ?
அனுமதி வாங்கி கடை வெச்சா மட்டும் அதிகாரிங்க வந்து கேட்காமலா இருக்கப் போறாங்க !

மோதிர விரல்லே தேள் கொட்டிடுச்சுன்னு மாப்பிள்ளை சந்தோஷமா குதிக்கிறார்.. .
ஏன் ?
விரல்வீங்கிப் போச்சாம். .. தீபாவளிக்கு மாமனார் பெரிய மோதிரமாத்தான் போட வேண்டி வருமாம் !

நாம அரசியல் பேசினது போதும். .. கொஞ்சம் ஆன்மீகம் பேசுவோமே.. . வாழ்க்கைலே ரொம்பவும் ஒட்டிக்காம பட்டதும் படாததுமா தாமரை இலை தண்ணீர் போல. ..
த.மா.கா-லே சிதம்பரம் போலன்னு சொல்லுங்க. ..!

இதுதாங்க கிரிக்கெட் வெடி !
இதுல என்ன ஸ்பெஷல். ..?
பெட் கட்டினாதான் வெடிக்கும் !

மாப்பிள்ளை வீட்டார் தீபாவளிக்கு பஸ்ல வர்றாங்கன்னதும் ஏன் தலையில கைவெச்சு உட்கார்ந்துட்டீங்க.. .?
தனி பஸ் வெச்சுக்கிட்டு வர்றாங்களாம் !

எங்கப்பாவுக்கு எதையுமே முறைப்படிதான் செய்து பழக்கம்.. .

அதுக்காக அவர் ராக்கெட் விடறதுக்கு, என்னை நூறலிருந்து கௌண்ட் டௌன் எண்ணச் சொல்றது டூ மச் !

சித்தி, சத்யா, கோகிலா, வைதேகினு புது வெடிங்க வந்திருக்கு போலிருக்கே. ..?
பழைய லட்சுமி, சரஸ்வதி வெடிங்கதான். .. டி.வி. பாதிப்புல பெயர் மாறி வந்திருக்கு !

என்னோட மாமனாருக்குப் பிரமாண்டமா செலவு பண்ணியே பழகிப்போச்சு. ..
தலைதீபாவளிக்கு உனக்கு என்ன பண்றார்..?
தங்கக் கம்பிமத்தாப்பு செய்ய ஆசாரிகிட்டே ஆர்டர் கொடுத்துட்டு வந்திருக்காருன்னா பாரேன் !

என்னப்பா. .. சம்பிமத்தாப்புல இவ்ளோ பெரிய கம்பியெல்லாம் இருக்குது !
இந்த மத்தாப்பை நீங்க வெடிச்சு முடிச்சவுடனே, கம்பிகளைக் கட்டட வேலைக்குப் பயன்படுத்திக்கலாம் !
நன்றி ஆனந்த விகடன் 22-10-2000
என் பையன் வெடியா கொளுத்திக் காசைக் கரியாக்கறான் !
நீங்க என்ன பண்ணறீங்க.. ?
கசாப்புக்கடை வெச்சிருக்கேன் !
அப்ப நீங்க கறியைக் காசாக்கறீங்க !

பட்டாசுக்கடையிலே கோழி புகுந்துட்டதுக்கு இப்படிப் பதர்றியே.. ?
புகுந்தது நெருப்புக் கோழியாச்சே !

தீபாவளிக்கு வந்த உங்க மாப்பிள்ளை மாடியை விட்டு இறங்காம அப்பப்ப காஸெட் கொடுத்துவிடறாரே. ..
என்னவாம்.. .?
வைரமோதிரம் போடணும்ங்கற கோரிக்கையை நிறைவேத்தினாதான் கங்கா ஸ்நானம் பண்ணக் கீழே இறங்குவாராம் !

என்ன.. . போலீஸ் ஸ்டேஷனுக்கு ஏகப்பட்ட ஜோடிங்க பெட்டி படுக்கையோட வந்திருக்காங்க ?
எல்லோரும் நம்ம ஸ்டேஷன்ல லவ்மேரேஜ் பண்ணிக்கிட்டவங்க. தலை தீபாவளிக்கு வந்திருக்காங்க !

எதுக்கு சார் உங்க வீட்ல பட்டாசு வெடிக்க என்னைக் கூப்பிடறீங்க ?
ஆபீஸ்ல நீங்க நிறைய பேரோட வேலைக்கு வேட்டு வெச்சிருக்கீங்கன்னு கேள்விப்பட்டேன். அதனாலதான் !

எப்படிடா உனக்கு தீக்காயம் பட்டுது ?
ஆட்டம் பாமை பத்த வெச்சப்போ, மழை தூறினதால நனையாம இருக்க பக்கத்துல நின்னு குடை பிடிச்சேன் !

தலைவர் புஸ்வாணம் கொளுத்தி குழந்தை மாதிரி சந்தோஷப்படறாரே.. .
வத்தி வெக்கற வேலையாச்சே.. அவருக்கு பிடிக்காம போகுமா ?
நன்றி ஆனந்த விகடன் 22-10-2000
உங்க பையன் எதுக்காக மண்ல உருண்டு அடம் பிடிக்கிறான் ?
அவனுக்கு ரோல் பட்டாசு வேணுமாம் !

நேத்து உங்க பட்டாசுக் கடைக்கு வந்து துப்பாக்கியக் காட்டி மிரட்டியவன் வெச்சிருந்தது போலி துப்பாக்கின்னு எப்படி தெரிஞ்சுது ?
மரியாதையா இருக்கற ரோல் கேப் எல்லாத்தையும் குடுத்துடு-ன்னு தானே மிரட்டினான்.. .!

யானை வெடி ஏம்பா ஈரமா இருக்கு ?
அது. .. நீர் யானை வெடிங்க.. .!

இரயில் வெடின்னு சொல்றீங்க, கொளுத்திவிட்டா மெதுவா போகுதே ?
இது கூட்ஸ் இரயிலுங்க !

எதிர் எதிர் பட்டாசுக் கடைக்காரங்களுக்குள்ள பிஸினஸ் போட்டியாமே.. .?
ஆமாம். ஒருத்தர் பாம்பு வெடி வாங்கி ஸ்டாக் வச்சார்னா, இன்னொருத்தர் கீரி வெடி வாங்கி ஸ்டாக் வச்சிருப்பாரு !

கொஞ்ச நேரத்துக்கு முன்னால பயங்கர சத்தத்தோட வெடிச்சதே, அந்த வெடி ஒண்ணு கொடுங்க.. .
யோவ், விளையாடுறியா அப்ப வெடிச்சது டிரான்ஸ்ஃபார்மர் !

நன்றி குமுதம் 26-10-2000
ஏம்மா உங்களுக்கு எத்தனாவது பர்த் ?
(கைகுழந்தையுடன்) இதுதாம்பா எனக்கு முதல் குழந்தை.

ஓடி ஓடிச் சம்பாதிச்சதா சொல்றீங்களே, என்ன வேலை பார்த்தீங்க ?
பைனான்ஸ் கம்பெனி நடத்தினேன் !

எனக்கு தீபாவளிக்கு பருத்திப் புடவையும், வேலைக்காரிக்கு பட்டுப்புடவையும் வாங்கியிருக்கீங்களே .. . ஏன் ?
இதோ பாரு கமலா உனக்கு எது கட்டினாலும் எடுப்பா இருக்கும். ஆனா அவளுக்கு பட்டு புடவை மட்டும்தானே நல்லாயிருக்கு அதான் !

என்ன முதலாளி ! ஆயுத பூஜை எல்லாம் எப்படி ?
நம்ம கடையிலே ஆயுதம் ஏதப்பா காகிதப் பூஜைதான் நடக்குது.

உங்களை பார்த்தா சிரிப்பா வருது !
ஏன் ?
நீங்க சந்தோஷ மூட்ல இருக்கிறதா சொன்னீங்களே.. . அதான் !

நீங்க கட்டிவிட்ட பல் செட்டில் இருபத்தஞ்சு பல்தானே டாக்டர் இருக்கு ?
நீங்க ஃபீஸை குறைச்சீங்க. நான் பல்லை குறைச்சேன் அவ்வளவுதான் !

நீங்க பொண்ணு வீட்டுக்கு சொந்தமா, பிள்ளை வீட்டுக்கு சொந்தமா ?
இன்னும் 5 நிமிஷத்துல தாலி கட்டினதும் ரெண்டு பேரும் ஒண்ணுக்குள்ள ஒண்ணா ஆகப் போறாங்க, பொண்ணு வீடு பிள்ளை வீடுன்னு ஏன் பிரிச்சுப் பேசறீங்க.
ஓ.கோ.. .! என்னை மாதிரி ஓசில.. . சாப்பிட வந்தவர்தானா நீங்களும். ..!
நன்றி குங்குமம் 27-10-2000
வீரப்பன் செய்தியை டி.வி-யில் வாசிச்சு வாசிச்சு அந்த அம்மாவுக்கு ரொம்ப அலுத்துப் போச்சாம் !
அதுக்காக மீண்டும் சலிப்புச் செய்திகள்-னு சொல்லணுமா ?

கச்சேரிக்குத் தலைமை வகிக்க அமைச்சரைக் கூப்பிட்டது தப்பாப் போச்சு !
ஏன்.. . என்ன ஆச்சு.. .?
அவர்கூட வர்றவங்களுக்கெல்லாம் இலவசமா ஜால்ராவும், ஜிங்குச்சாவும் கொடுக்கணுமாம் !

தலைவர் மகளிர் அணிப் பெண்கள்கூட நெருங்கிப் பழகினாரு ?
அப்புறம் ?
இப்ப புதுசா குழந்தைகள் அணி ஒண்ணு உருவாயிருச்சு !

தலைவர் தனக்கு விழற துண்டுகள்ல கட்சிக்கறை இருக்கக்கூடாதுன்னு சொல்லிட்டாரு !
ஏன் ?
நாளைக்கே கட்சி மாறினாக்கூட துண்டு உபயோகமா இருக்கணுமாம் !

ராஜ்கிரண், டைட்டானிக் படத்தைப் பார்த்துப் படம் எடுத்தால் என்ன பெயர் வைப்பார் ?
என்ன பெயர் ?
எல்லாமே என் கப்பல்தான் !

உலகில் முதன் முதலில் சிறு வயதில் பிரதமர் ஆனவர் யார் ?
யார் ?
வாஜ்-பாய் !

அந்தக் கல்யாணத்துல ரொம்ப ஈ மொய்க்குது, ஏன் ?
ஏன் ?
அது ஜாம் ஜாம்னு நடக்கற கல்யாணம் !

காக்காவுக்குப் பயங்கரக் கடன். உடனே தன்னோட குஞ்சை அடகு வச்சுது. ஏன் ?

ஏன் ?
காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு !

முனிவரைப் பாம்பு பார்க்கும், ஏன் ?
ஏன் ?
அவர் முகத்துல தவ-களை இருக்கு !

கிராமத்துல ஒரு திருவிழா, ஆனால் பெண்களே இல்லை. ஏன் ?
ஏன் ?
அது திரு-விழா, திருமதி-விழா இல்லையே !

போருக்குப் போகும் போது ஒருத்தர் குடை எடுத்துட்டுப் போனார். ஏன் ?
ஏன் ?
அங்கே குண்டுமழை பெய்யுது !

அனில் கும்ப்ளேவுக்குப் பெண் பிறந்தால் என்ன பெயர் வைப்பார் ?
என்ன பெயர் ?
பால திருப்புற சுந்தரி !

கல்யாணத்துல ஏன் மாடுகளை விடறதில்லை ?
ஏன் ?
கல்யாணம்கிறது ஆயிரம் காலத்துப் பயிர், மேய்ஞ்சிடக் கூடாதில்ல !

அழகான பெண்களைப் பார்த்தால் நாய் எப்படி குறைக்கும் ?
எப்படி ?
வாவ் வாவ்னுதான் !

ஒரு காட்டில் நாலுபேர் போறாங்க. .. திடீர்னு ஒரு சிங்கம் வந்து மூணு பேரை அடிச்சிடுச்சு.. . ஒருத்தரை மட்டும் அடிக்கலை ஏன் ?
ஏன் ?
அவர் லயன்ஸ் கிளப் மெம்பர் !

அவரு அமெரிக்காவிலிருந்து வந்தவரு !
அதுக்காக செருப்பைக் கால்ல போடாம காதுல தொங்க விட்ருக்கிறது கொஞ்சம்கூட சகிக்கலை !

என்ன. .. அந்த எம்.எல்.ஏ. எல்லாம் ஒத்தை செருப்பா வைச்சிருக்காரு ?
எல்லாம் சட்டசபையில அவர்மேல விழுந்ததாம்.

செருப்பு அழகாயிருக்குன்னு சொன்னதுக்கு அவன்கிட்ட செருப்பைக் கழட்டிக் காமிச்சது தப்பாயிடுச்சு.. .
ஏன் ?
இன்னைக்கு சேலை அழகாயிருக்குன்னு சொல்றான் !

அந்த கல்யாண மண்டப வாசல்ல, விரல்ல எதுக்கு மை வைக்கிறாங்க ?
செருப்புப் போடாம வர்றவங்களுக்கு மட்டுமாம் !

கல்யாணத்துக்குப் போயிட்டு வந்தீங்களே. .. ஜோடிப் பொருத்தம் எப்படி ?
ஒரு செருப்பு கூட என் காலுக்குப் பொருந்தலை !

மற்ற தலைவர்களைவிட நம்ம தலைவர் பலபடி மேலே போய்ட்டாரா .. ? எப்படி ?
நாங்க ஜெயிச்சா பிரிட்டீஷ் ஆட்சியை கொண்டு வருவோம்-னு சொல்றாரே !

அரசியல்வாதியை லவ் பண்ணினது தப்பாப் போச்சுங்கறீயே. .. ஏண்டி ?
ஆசைக் காதலியை அணைக்க வரும் தலைவா. .. வருக-ன்னு தொண்டர்கள்கிட்டே நோட்டீஸ் அடிச்சி, பீச் ஏரியா முழுக்க ஒட்டி வைக்கச் சொல்லியிருக்கார் !

என்னங்க.. . எதிர்ல போற உங்க அம்மா. .. அப்பாவைத் திரும்பிப் பார்த்துகிட்டே வர்றீங்க ?
போய் பேச வேண்டியதுதானே !
நீ வேற.. . நாம தனிக்குடித்தனம் போனதிலேயிருந்து நான் அவங்களைத் திரும்பிப் பாக்கிறதே இல்லைன்னு.. .
எல்லார்கிட்டேயும் சொல்லி வருத்தப்பட்டாங்களாம்.. . அதான் !

பானுப்ரியா எதுக்கு கண் டாக்டரை கன்ஸல்ட் பண்றாங்க ?
ஒரே சமயத்துல நாலஞ்சு மெகா சீரியல்ல நடிக்க வேண்டியிருக்காம். அதான், எக்ஸ்ட்ரா கண்ணீர் சுரக்க வைக்க முடியுமான்னு கேட்கறாங்க !

சங்கு சக்கரத்தை கையாலேயே சுத்துறாங்களே, யார் இவங்க ?
ரம்யா □கிருஷ்ணனாம்ங !

என்னது.. அஷ்டலட்சுமிகள் பேரை எழுதச் சொன்னதுக்கு, எக்ஸ்ட்ராவா இன்னொரு லட்சுமி பேரையும் எழுதித் தந்தியா. .?
ஆமா.. . சுவலட்சுமி பேரை.. .

ஐஸ்வர்யாராயை ஒரு ஆள் வர்றியான்னு கூப்பிட்டான்னியே.. . அப்புறம் என்ன ஆச்சு ?
ஐஸ் வர்றியா-ன்றதைத்தான் அப்படி கூப்பிட்டானாம் !

உங்க பையன் நிறைய சினிமா பார்ப்பானோ ?
ஏன் கேட்கறீங்க ?
சி ஃபார் கௌ-ன்னு சொல்லித் தந்தா, கௌசல்யாவோட சுருக்கமா சார்ன்னு கேட்கறானே !

என்ன சார், உங்க மனைவிகிட்ட ராதிகா சௌத்ரி வாங்கிட்டு வந்துட்டேன்னு சொல்றீங்க ?
நீங்க வேற, நான் சொன்னது ராதிகா ஸ்டவ் திரியை !

ஐஸ்வர்யா ராய் அதிகம்போனா பதினைஞ்சு படங்கள்ல கூட நடிச்சிருக்க மாட்டாங்க, ஆனா, அவங்களை வெச்சு நூத்துக்கணக்கான படங்களை எடுத்திருக்கறதா புருடா விடறீங்களே.. !
அட.. . படம்-னு நான் சொன்னது, ஸ்டில் போட்டோவை.. .!

கோவை சரளாகிட்டே, என் பேர் வடிவேலுன்னு சொன்னதும், உணர்ச்சி வசப்பட்டு...
என்ன செஞ்சாங்க ?
என் மூஞ்சியிலேயே, ஓங்கி ஒரு குத்து விட்டாங்க.. .!

புரொடியூசர் எதுக்கு மீனா.. . வேணாங்கறார் ?
அவர் சொல்றது, லஞ்சசுக்கு மீன் வேண்டாம்னு !

ஜோதிகா, சூர்யா ரெண்டு பேருக்கும் ஒரு ஒத்துமை இருக்கா.. . என்னது ?
ரெண்டு பேர் பேர்லயும் வெளிச்சம் இருக்கே. ..!

நீங்க ஜோதிகா ரசிகரா இருக்கலாம். அதுக்காக, விளையாட்டுப் போட்டியில ஜோதியைத் தூக்கிக்கிட்டு ஓடுறதுக்கு பதிலா ஜோதிகாவைத் தூக்கிட்டு ஓடறமாதிரி சீன் வைக்கிறது கொஞ்சங்கூட நல்லாயில்லை !

டைரக்டர், தேவயானிகிட்டே செல்லம்மா-னு ஏதோ சொல்றாரே, □பாரதி□ படத்துல நடிச்சதைப் பாராட்டறாரோ ?
உஹூம்.. . இன்னிக்கு ஷூட்டிங் முடிஞ்சாச்சு, நீ செல்லம்மா-ன்னுதான் சொல்லிக்கிட்டிருக்கார்.
நன்றி குமுதம் 2-11-2000
தலைதீபாவளிக்கு உன்னோட மாமனார் முறைப்படி எல்லாம் செஞ்சாரா.. ?
ம்.. . முறைப்படி செஞ்சார்.. . ஆனா, முறைச்சபடி செஞ்சார் !

என்னங்க இது.. . ஜவுளிக்கடைக்கு ஸ்டவ், அரிசி, பாத்திரம், பண்டம்னு டெம்போவுல வந்து இறக்கியிருக்கீங்க.. .?
என் மனைவி புடவை எடுக்கப் போறா !

அந்த ஜவுளிக்கடையில ஒரு புடவை எடுத்ததுக்கு எனக்கு அரை மாசம் சம்பளம் கொடுத்தாங்க. ..

எதுக்கு.. .?
புடவை செலக்ட் பண்ண பதினஞ்சு நாள் கடையிலேயே தங்கியிருந்தேனே !

என்னங்க.. . பக்கத்து வீட்டு பானுவோட நான் துணி எடுக்கப்போறேன். ஒரு வாரத்துக்குத் தேவையானதைச் சமைச்சு, ஃப்ரிஜ்ல வெச்சிருக்கேன். திரும்பி வர நாள் ஆனா, அட்ஜஸ்ட் பண்ணி ஓட்டல்ல சாப்பிட்டுக்குங்க. நான் அப்பப்ப போன் பண்ணிப் பேசறேன். ..

டாக்டர். .. உடம்பு ரொம்ப சூடா இருக்கு. ..
அப்படியா.. . ?
ஆமா டாக்டர். வெடியைக் கையால தொட்டாலே உடனே வெடிச்சிடுது !

என்னது. .. மெகா சீரியல் வெடியா.. .?
ஆமா சார்.. . ஒரு தடவை வெடிச்ச வெடியையே மறுபடியும் மறுபடியும் வெவ்வேற நேரத்துல வெடிக்க வைக்கலாம்.. .

ஹலோ.. . இன்ஸ்பெக்டர் சாரா ? நான் வெடிக்கப் போறேன். ரெண்டு கான்ஸ்டபிளை அனுப்பிவைக்க முடியுமா ?
எதுக்கு ?
தக்க பாதுகாப்புடன் வெடிக்கவும்-னு சொல்றாங்களே. .. அதான்.. .!

தலைதீபாவளிக்கு வந்த மாப்பிள்ளை, திடீர்னு ஊருக்குத் திரும்பிப் போயிட்டாராமே.. . ஏன் ?
தலையில சங்கு சக்கரத்தை கொளுத்திவிட்டு தலைதீபாவளி கொண்டாடறதுதான் எங்க ஊர்ப் பழக்கம்-னு சொன்னேன்.. .

எதுக்குடா ராக்கெட்ல, பெட்ரோல் விலை.. . கியாஸ் விலை-னு எழுதி கொளுத்தி விடறே.. .?
அப்படி எழுதினா, நல்ல உயரமா போவுதுடா.. .

ஏம்பா. .. என்னைக் கட்டிப்போட்டுட்டு பீரோவை உடைச்சு ஒரு லட்ச ரூபாயை எடுத்தே சரி. .. அதுல முப்பதாயிரத்தை ஏன் என்கிட்டயே விட்டுட்டு கிளம்பறே ?
முப்பது சதவிகிதம் தீபாவளி தள்ளுபடி சாமீ !

அந்த ஆளை எதுக்கு போலீஸ் பிடிச்சுக்கிட்டுப் போகுது ?
மூலிகைப் பட்டாசு தயார் பண்ணாராம் !

என் மனைவி என்னை ஒரு வேலைக்காரன் மாதிரி நடத்தறாள்.
நீங்க ஒண்ணும் கேட்க மாட்டீங்களா.. .?
தீபாவளி இனாம் கேட்டனே !

அம்மா ! தீபாவளி அன்னிக்கு நான் வேலைக்கு வரமாட்டேன். ..
பரவாயில்லை ! அன்னிக்கு ஐயாவுக்கு ஆபீஸ் லீவுதான். ..

வெங்காய வெடி கொடுங்க !
சின்ன வெங்காய வெடியா ? பெரிய வெங்காய வெடியா ?

காக்கை, குருவி எங்கள் ஜாதி-ன்னு பாரதியார் பாடிட்டுப் போனது ஒருவிதத்துல ஆபத்துதான் !
ஏன் சொல்றீங்க.. ?
அதுங்க, தப்பா புரிஞ்சுக்கிட்டு, தனிக் கட்சி ஆரம்பிச்சாலும் ஆரம்பிச்சுடும் !

அந்த டாக்டருக்கு ஆனாலும் அல்ப புத்தி !
எப்படி ?
ராக்கெட் விட காலி டானிக் பாட்டில் பாதி விலைக்கு கிடைக்கும்-னு ஹாஸ்பிடல்ல போர்டு வெச்சிருக்காரே.. .!

ஏங்க.. . லட்சுமி வெடி இருக்கா ?
அதெல்லாம் பழசுங்க. .. லேட்டஸ்டா ஜோதிகா வெடி இருக்கு.. . வேணுமா ?

இது என்ன அ.தி.மு.க - காங்கிரஸ் வெடி. .?
பார்க்கறதுக்கு சிங்கிள் வெடி மாதிரிதான் தெரியும். ஆனா, பத்த வெச்சா ரெண்டு பக்கம் போய் தனித்தனியா வெடிக்கும் !

வக்கீலான நம்ம மாப்பிள்ளை இந்தத் தடவை தீபாவளிக்கு குடும்பத்தோட வரலியாம். ..
பரவாயில்லையே !
ஊஹூம். அதுக்கு நஷ்டஈடா பத்தாயிரம் ரூபாய் பணம் கேட்டு எழுதியிருக்கார்.. .

தீபாவளிக்கு கைதிகளுக்கு எல்லாம் என் கையால செஞ்ச ஸ்வீட் தரலாம்னு இருக்கேன். ..
அவங்களுக்கு ஏற்கெனவே கொடுத்திருக்கிற தண்டனை பத்தாதா ?

என்னங்க.. .
பீரோவுக்குக் கீழே எறும்பு மொய்க்குதுங்க.. .
விடு. .. பீரோ ஆடுதுன்னு நான்தான் மைசூர்பாகை கீழே வெச்சு முட்டுக் கொடுத்தேன் !

எதுக்கு வெடிச்சிரிப்பு சிரிக்கறே. ..?
உங்க அம்மா கையில பட்டாசு வெடிச்சுடுச்சு !

என் பொண்டாட்டி பூ மாதிரினு நெனைச்சேன், ஆனா.. . அவ ரொம்ப எரிஞ்சு விழறா !
அப்ப மத்தாப்பூ மாதிரினு சொல்லு !

டைட்டானிக் படக்கதாநாயகி கேத் வின்ஸ்லெட்டுக்குச் சமீபத்தில் லண்டன் ஆஸ்பத்திரியில் பெண்குழந்தை பிறந்தது
-செய்திசந்தோஷத்தில் மூழ்கிப் போயிருப்பாரே !

வேலை கிடைக்க வேண்டி திருவண்ணாமலையில் பட்டப்படிப்பு சான்றிதழ்களுடன் □கிரிவலம்□ வந்த அதிசய இளைஞர்.
-செய்திஅப்ப, அது டிகிரிவலம் !

கொலுசு திருடிய தாயும் மகளும் கைது
-செய்திகைகளுக்குக் காப்பு-ம் கிடைத்திருக்குமே !

அரிசி வியாபாரிக்குக் குழந்தை பிறந்தது.
-செய்திஅந்தக் குழந்தை நொய்.. . நொய். .. என்று அழாமல் இருந்தால் சரி !

பிரதமர் வாஜ்பாய்க்கு ஆபரேஷன் முடிந்து, காலில் கட்டுப் போட்டுள்ளனர்.
-செய்திஇப்படியேனும் இந்தப் பிரம்மச்சாரிக்கு ஒரு கால்கட்டு- போட்டுவிட்டார்களோ !

தூத்துக்குடியில் போலி சீல் தயார்செய்து வங்கியில் மோசடி செய்தவர் கைது.
-செய்திபோலி சீல் தயாரிப்பானேன்.. . போலீசில் மாட்டுவானேன் !
நன்றி ஆனந்த விகடன் 29-10-2000
புதையல் கிடைச்ச மாதிரி வர்ற சீன்ல எப்படி அவ்வளவு நேச்சுரலா நடிச்சீங்க ?
சீன் முடிஞ்சதும் சம்பளம் தர்றேன்னு சொன்னாங்க, அதனாலதான் !

பலசரக்குக் கடை ஆரம்பிப்பதற்காகவா உன்னைக் கைது பண்ணி தண்டனை கொடுத்தார்கள் ?
ஆமாம் - கஞ்சா, அபின், பட்டை, சாராயம் போன்ற பல சரக்குகள் கடை அல்லவா ஆரம்பித்தேன் !

தாத்தாவுக்கு இப்ப எல்லாம் பக்தி அதிகமாகி விட்டது.
அதுக்காக, ரசம் வேண்டாம் பக்தி ரசம்தான் வேண்டும் என்றா கேட்டு அடம் பண்ணறது ?

குடும்பக் கட்டுப்பாடு பண்ணிக்க, இல்லே குடும்பத்தை கட் பண்ணிட்டு சாமியாரா போயிடுப்பா !
ஏண்டா அப்படிச் சொல்றே ?
என் ஒரு ஆளுக்கு மட்டும் போதுமான சொத்தை வெச்சுக்கிட்டு நிறைய பெத்துப் போடறீயே !

சலூன்-காரரை மீட்டிங்குக்கு தலைமை தாங்க சொன்னது தப்பாப் போச்சு !

ஏன் ? என்ன ஆச்சு ?
தலைவருக்கு அவர் கையால துண்டைப் போர்த்த சொன்னதும், துண்டைப் போர்த்தினவர் பழக்க தோஷத்துல, பையிலிருந்த கத்தியை எடுத்து, மேடையிலேயே அவருக்கு ஷேவ்- பண்ண ஆரம்பிச்சுட்டார் !

அடிக்கடி உன் மாமியாரைக் கொல்ல முயற்சி பண்றியாமே. .. ஏன் ?
முயற்சி திருவினையாகும்னு நினைச்சுத்தான் !

கடன் அன்பை முறிக்கும்.
கடைக்காரர் சொன்னாரா இப்படி ?
இல்லை. என் காதலி சொன்னாள். பத்து ரூபாய் கடன் கேட்ட சமயம்.

விநோதமான வழக்கு ஒன்று வந்துள்ளது வேந்தே ! ஒரு பெண்ணை இரண்டு ஆண்கள் தன் மனைவி அல்ல என்று சொல்கிறார்கள்.
அந்தப் பெண் என்ன சொல்கிறாள் ?
இருவரையுமே தன் கணவன்தான் என்று சொல்கிறாள் !
நன்றி குங்குமம் 3-11-2000
தீபாவளிக்கு வந்த படங்கள்லயே உங்க படம் மட்டுந்தான் குடும்பத்தோட பாக்கற மாதிரி இருந்துச்சு !
அப்படியா.. . ரொம்ப சந்தோஷம்.. . எதை வைச்சுச் சொல்றீங்க ?
மத்த படங்கள் எல்லாம் ஹவுஸ்ஃபுல் ஆயிட்டதால, டிக்கெட் கிடைக்கல.. . உங்க படம் காலியாயிருந்ததாலே குடும்பத்தோட பாக்க முடிஞ்சதுன்னு சொல்ல வந்தேன் !

ஒரு கட்டு வெடியில் ஒண்ணுதான் வெடிக்குமாமே.. . ஏன் அப்படி ?
அதுதாண்டி ஒலிம்பிக் வெடி !

எங்க தாத்தாகிட்ட தீபாவளிக்கு மத்தாப்பு வாங்கிட்டு வரச் சொன்னது தப்பா போச்சுடா !
ஏண்டா ?
ஜோதிகா சிரிக்கிற மாதிரி படத்தை வாங்கிட்டு வந்து, இதான் மத்தாப்புங்கறார் !

அவரு போலி டாக்டர்னு எதை வெச்சி சொல்றே. ..?
பாம்பு கடிச்சிடிச்சி டாக்டர்னு சொன்னதுக்கு, தீபாவளி வெடிக்கடைல பாம்பு மாத்திரை விக்கும். வாங்கிச் சாப்பிடுங்கன்னு சொன்னாரே.. .

தீபாவளிக்கு எல்லோருக்கும் துணி வாங்கினியே. ..?
எனக்கு என்னடி வாங்கின ?
உங்க பேர்லதாங்க கடன் வாங்கினேன் !

நம்ம தலைவர் ஏன் ரொம்ப சோகமா இருக்கார்.. .?
அவரோட வாழ்க்கைல எத்தனையோ தீபாவளி வந்துட்டுப் போயிடுச்சாம் ! ஆனா வெடி ஊழல்-னு இதுவரைக்கும் ஒண்ணும் செய்யலையேன்னு ரொம்ப ஃபீல் பண்றார் !

இந்தப் பாம்பு மாத்திரையிலிருந்து வர்ற புகை உடம்புக்கு நல்லதா ?.. . எப்படி ?
இது நல்ல பாம்பு மாத்திரை சார் !

எதுக்கு ஆடற பல்லை இன்னும் எடுக்காம இருக்கே ?
தீபாவளிக்கு என் மனைவி மைசூர்பாக் செய்றேன்னு சொல்லியிருக்கா. .. அதனால டாக்டருக்கு எதுக்கு வீண் செலவு பண்ணணும் !

ஊசி வெடி இவ்வளவு விலையா.. . ஏம்ப்பா ?
இது டிஸ்போஸபிள் ஊசி வெடி சார் !

என்னதான் மெகா சீரியல் எடுத்தாலும் இந்த மாதிரி பொறுமையைச் சோதிக்கக்கூடாது.. .!
என்னாச்சு ?
பட்டாசு கொளுத்தற சீன்ல திரி பத்து நாளா புஸ்ஸுனு எரிஞ்சுக்கிட்டே இருக்கு.. .!

தீபாவளிக்கு நாலு நாள் முன்னாடியே உங்க அம்மாவை வரச் சொல்லுங்க.. .
எதுக்குடி.. .?
நம்ப வீட்டு வேலைக்காரி லீவு எடுத்துனு ஊருக்குப் போறாளாம் !

தீபாவளி டைம்ல என் பொண்ணு கல்யாணத்தை வெச்சது தப்பா போச்சு. ..
ஏன் ?
கல்யாணப் பத்திரிகையை மாப்பிள்ளை □தீபாவளி மலர்□ சைஸ்ல போடச் சொல்றாரு.. .

என்னங்க.. . இந்த வெடியில மூப்பனார் படம் போட்டிருக்கு. ..?
வாங்கிகிட்டுப் போயி பத்த வைச்சுத்தான் பாருங்களேன். .. இது டமால்னு வெடிக்குமா. .. ராக்கெட் மாதிரி மேல போகுமா. .. இல்லை புஸ்வாணம் ஆகிடுமான்னு தெரியாது. .. ! ஒரே குழப்பமா இருக்கும் !

ஆலாபனை முடிஞ்சு, பாகவதர் ஏன் இன்னும் பாட வாயைத் திறக்கலே ?
வாயைத் திறந்து பாட ஆரம்பிச்சா மறுநிமிஷமே ராக்கெட் வெடி விடுவோம்னு செல்போன்ல மிரட்டல் வந்ததாம். அதான் முழிக்கிறாரு !

நீங்க டாக்டரா இருக்கலாம். .. அதுக்காக ஊசிப் பட்டாசை வாங்கிட்டு, கூடவே சிரிஞ்ஜ் பட்டாசையும் கேட்டா எப்படி ..?

ஏன் சார் நெளிஞ்சு நெளிஞ்சு நடக்கறீங்க ?
மறதியில் பாம்பு மாத்திரையை முழுங்கிட்டேன் !

ஏங்க.. . நம்ம வீட்டுக்கு ஒரு கொள்ளைக்காரன் வர்றது மாதிரி கனவு கண்டேன் !
நம்ம மாப்பிள்ளை தலை தீபாவளிக்கு நாளைக்கு வரார் ..!

சார், நம்ம கிளார்க் பா. விஸ்வநாதனை □படு பாவி□-ன்னு திட்டினீங்களா ?
ஆமாம்.. . அதுக்கென்ன ?
□படுத்துட்டார்.. . !□

சர்வர். .. பேப்பர் ரோஸ்ட் ஒண்ணு கொண்டு வாப்பா.. !
ஏ-4 சைஸா. .. புல் ஸ்கேப் சைஸா சார் ?

செட் தோசை இருக்காப்பா ?
மண்டப செட்டா, கோட்டை செட்டா, பூங்கா செட்டா.. . எந்த செட் தோசை வேணும் ? !

என்ன சார்.. . டெய்லி ஆபீஸுக்கு வரும்போது ஜவுளிக் கடைக்குப் போயிட்டு வர்றீங்களே ! என்ன விசேஷம் ?
அதுவா. .. என் பொண்டாட்டி போன வருஷ தீபாவளிக்குப் புடவை எடுக்கிறதா சொல்லிட்டுப் போனா.. . அவளுக்குத்தான் டெய்லி சாப்பாடு செஞ்சு குடுத்துட்டு வர்றேன் !

என்ன இது.. . படப்பிடிப்புத் தளத்துல மீட்டிங் நடக்குது ?
மீட்டிங் இல்லை.. . எடுக்கறது மெகா சீரியலாச்சே.. . நடிகர்களை எல்லாம் ஒரு சேர உட்கார வச்சு கதை சொல்றாங்க !

அரசியல்வாதி மகள்-னா அதுக்காக இப்படியா ?
என்னவாம் ?
பெண் பாக்கற சமயத்துல அறையிலேருந்து பெண் வர்றப்ப எல்லோரும் எழுந்து நின்னு கைத்தட்டணுமாம் !

கூட்டத்திலிருந்து தொண்டர்கள் ஏன் பயந்து ஓடுறாங்க ?
தலைவரு தூங்கிட்டு இருக்கிற சிங்கத்தைத் தட்டி எழுப்பப் போறேன்னு அறிவிச்சாரே.. . அதான் !

சர்க்கஸ் கம்பெனிக்காரங்களைத் தலைவர் ஏன் தூரத்துறார் ?
சிங்கத் தலைவர்னு பெயரைப் பார்த்துட்டு, சிங்கம் விலைக்கு கிடைக்குமான்னு கேட்டிருக்காங்க !

எதிர்க்கட்சித் தலைவருக்கு ரொம்ப திமிரு ஆயிடிச்சுன்னு எப்படிச் சொல்றீங்க ?

பின்னே என்னப்பா. .. நான் சிங்கத் தலைவன்-னு சொன்னா, காட்டுக்குத்தான் போகணும்ன்னு சொல்றாரே !

நம்ம தலைவர் பெண்கள்கிட்ட ரொம்ப பிரபலமாயிட்டார்னு எப்படிச் சொல்றே ?
சிங்கத் தலைவர்கிட்ட மாட்டி விட்டிடுவேன்னு குழந்தைங்களை மிரட்டி வைக்கிறாங்களாம் !

தலைவர் ஏன் இன்னிக்குப் புலி வேஷத்துல வந்திருக்காரு ?
சிங்கத் தலைவர்னு எல்லோரும் சொல்றதைக் கேட்டுக் கேட்டு போரடிக்குதாம். .. அதான் !

தலைவர் ஏன் வீட்டைக் குகை மாதிரி கட்டியிருக்காரு ?
அவரு பேருக்கேத்த மாதிரி வாழுறவராம்.. .

யானைக்கு எத்தனை கால்கள் ?
நான்குதானே.. .
இல்லை, ஒன்றுதான். யானை ஒரு காலை எடுத்தால் அது யனை ஆகிவிடும் !

ஐந்து நொடிகளில் ஐம்பது மிருகங்களின் பெயர்களைக் கூற முடியுமா ?
எப்படி ?
முப்பது சிங்கம், இருபது புலி !

கண் தானம் செய்யாத ஊர் எது ?
எது ?
ஐ-தரா-பாத் !

லக் இல்லாத நகரம் எது ?
எது ?
□லக்-னோ !□

ஊ-க்கு கண்டிப்பா கேன்சர் வரும். ஏன் ?
ஏன் ?
அது பீ.டி.க்கு நடுவில் இருக்கு.. .

டி.வி.யில் நேரடி ஒளிபரப்பா எதைத்தான் பண்றதுனு விவஸ்தை இல்லாமப்போச்சு..
என்ன பண்றாங்க ?
ஒருத்தரோட தலை தீபாவளியை நேரடியா ஒளிபரப்பறாங்களாம் !

இந்த ஸ்பெஷல் கிருஷ்ணா வெடியில என்னங்க விசேஷம் ?
பெங்களூர்ல வெடிக்க வைச்சா மெட்ராஸ் வரை வந்து வெடிக்கும். .. மெட்ராஸ்ல வெடிக்க வைச்சா பெங்களூர் வரை போய் வெடிக்கும் !
மத்த ஊர்ல வெடிக்க வைச்சா ?
வெடிக்காது.. . ஏதாவது தவறு நடந்துச்சுன்னா ஒரு வேளை டில்லி வரை போய் வெடிக்கும்.. .

அந்த நடிகைக்கு ஏன் கழுத்து நீளமா இருக்கு ?
அடிக்கடி மணமேடையில் கழுத்தை நீட்றதால் அப்படி ஆயிடுச்சாம் !

அது திருடனோட வீடு-ன்னு எப்படிச் சொல்றீங்க.. .?
பாருங்களேன் ! வீட்டு வாசற் கதவுல போலீஸ் ஜாக்கிரத்தை-ன்னு போட்டிருக்கே.. .!

நம்ம ஏரியாவில் ரவுடிகளும், மாமூலும் ரொம்பக் குறைஞ்சு போனதால், தீபாவளிக்குப் புது ஸ்கீமை அறிவிச்சிருக்கார் நம்ம இன்ஸ்பெக்டர் !
என்னது ?
ஒரு வருஷ மாமூலை மொத்தமாகக் கட்டுபவர்களுக்குத் தீபாவளி மாமூல் டிஸ்கவுண்ட் தர்றாராம் !

டாக்டர் இதுக்கு முன்னாடி மெக்கானிக்கா இருந்திருப்பாரோ ?
ஏன் கேட்கறே ?

லூஸ் மோஷன் ஆகுதுன்னா, டைட் பண்ணிடறேன்ங்கறாரே !

ஜன்னல் எப்படி வைக்கலாம்னு உங்க மனைவி கேக்கறாங்களே.. . என்ன புதுவீட்டு டிசைன் பத்தி டிஸ்கஷனா ?
அட நீங்க வேற ! அது என் மனைவியோட ஜாக்கெட் ஜன்னல் டிஸைன் பத்தி !

அன்புள்ள அதிகாரிக்கு, என் ரிட்டயர்மெண்ட் பரிசாக ஆடம்பரப் பொருள் எதுவும் வேண்டாம். நான் அமர்ந்திருந்த நாற்காலியையே பரிசாகத் தந்து, என் நிம்மதியான தூக்கம் தொடர உதவுங்கள். .. உண்மை ஊழியன், உலகநாதன்.. . !
நன்றி இதயம் பேசுகிறது 5-11-2000

வக்கீல் சார், இன்னிக்கே உங்களுக்கு ஆபரேஷன் பண்ணிடறேன் !
இல்லை டாக்டர்.. . ரொம்ப நாளைக்கு அப்புறம் எனக்கு ஒரு கேஸ் கிடைச்சிருக்கு. நான் அட்டெண்ட் பண்ணணும் !
எனக்கும் அப்படித்தானே ?

பரவாயில்லையே.. . உங்க ஆபீஸ்ல வீட்டுக்கு வந்து சம்பளம் கொடுக்கறாங்களே. ..?
ஆபீஸ்ல கொடுத்தா தூக்க கலக்கத்துல எங்கேயாவது பணத்தை விட்டுடுவோம்கிற பயம்தான். ..!

போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர்
கையால புகார் வாங்கின காலமெல்லாம் போயிருச்சே.. .
போய் அதை மெயில்ல அனுப்புங்க !

நெட் ஜோக்
உயரமான மலை உச்சியில் நின்றுகொண்டு கைகளை நீட்டியபடி ஒருவன் கடவுளிடம் கேட்டுக் கொண்டிருந்தான்.
கடவுளே.. . என் மனைவியை ஏன் இத்தனை அழகோடு படைத்தாய் ?
வானிலிருந்து ஒரு பதில் வந்தது. அப்போது தானே நீ அவளைக் காதலிப்பாய் மகனே ?
திரும்பவும் இவன் கேட்டான் - அட்டகாசமாக சமைக்கத் தெரிந்தவளாக அவளை ஏன் படைத்தாய் ?
நீ அவளைக் காதலிக்கத்தான். ..!
பொறுப்போடு வீட்டைப் பார்த்துக் கொள்ளும் குணத்தை அவளுக்கு ஏன் கொடுத்தாய் ?
அதுவும் நீ அவளைக் காதலிக்கத்தான் மகனே.
எல்லாம் சரி. அவளை ஏன் இவ்வளவு முட்டாளாகப் படைத்தாய் ?- லேசான நகைப்போடு இவன் கேட்டு முடித்ததும், சீரியஸாக குரல் சொன்னது -
அப்போதுதானே அவள் உன்னைக் காதலிப்பாள்.

என்ன இது, இப்ப எதுக்கு □விக் □ வாங்கினே ?
வாங்கலேங்க.. . இலவசமா கொடுத்தாங்க, இந்த புது ஷாம்பூ பாட்டில் வாங்கினதுக்காக.. .!

எல்லா மெகா சீரியல்-களிலேயேும் பழைய நடிக, நடிகைகளையே போடறாங்களே. .. ஏன் ?
அவங்கதான் இப்ப □மெகா□-சைஸ்ல இருக்காங்க !

போன தடவை காஸ் டிரபிளுக்கு போனப்போ, டாக்டர் அம்பது ரூபாய்க்கு மருந்து கொடுத்தார். இந்தத் தடவை அநியாயத்துக்கு நூறு ரூபாய்க்கு மருந்து கொடுத்திருக்கார் !
சும்மாவா ? □காஸ் □ சம்பந்தப்பட்ட விஷயமாச்சே.. .!

அந்த ஓட்டல் பொங்கல் மணக்க, மணக்க இருக்கும் !
மண்ணாங்கட்டி.. . நீ சொன்னியேனு போய் சாப்பிட்டேன். கைநிறைய இஞ்சி, கறிவேப்பிலை, மிளகுக்கு நடுவே கொஞ்சூண்டு பொங்கலும் இருந்துச்சு !

என்னடா பதில் சொல்றே நீ ?
தூக்கத்துல எழுப்பிக் கேட்டாகூட நான் கரெக்டா பதில் சொல்வேன் தெரியுமா ?
ஆபீஸ்ல உங்களுக்கு அப்படிப் பழகிப் போச்சுப்பா !

என் காதுல நீங்க போட்ட புதுத் தோடு எங்கேயோ விழுந்திடிச்சுன்னு சொன்னா, அதுக்குச் சந்தோஷப்படறீங்களே. .. ஏன் ?

நான் உன் காதுல போட்டதுல ஏதோ இந்த ஒண்ணாவது விழுந்திருக்கேனுதான் !

அதோ போறாரே. .. அவரு நிறைய பேருக்கு தர்மம் பண்ணவரு. அதனால ஸ்கூட்டர்ல போறப்போ ஹெல்மெட் போடவே மாட்டாராம்..
ஏன் ?
தர்மம் தலை காக்குமாம்.. .!

எங்க வீட்டுல எல்லாமே செல்ஃப் சர்வீஸ்தான். ..
இருக்கலாம். .. அதுக்காக வெளியில இருந்து வர்றவங்க, அவங்களே கிச்சனுக்குப் போய் காபி போட்டுக் குடிக்கணும்னு சொல்றது கொஞ்சம்கூட நல்லா இல்லே.. .!

டிஸ்சார்ஜ் ஆன அன்னிக்கு நர்ஸிங் ஹோம் பில்லைப் பார்த்ததும் எனக்கு மூச்சே நின்னுபோச்சு !
அப்புறம் ?
உடனே ஆக்ஸிஜன் வெச்சு, ஊசி போட்டு குளூகோஸ் ஏத்தி, அதையும் பில்லுல சேர்த்துட்டாங்க.. .!

வலது கண்ல ஆபரேஷன் முடிஞ்சு பார்வை தெரிஞ்ச அப்புறம்தான் உங்களுக்கு இடது கண்ல ஆபரேஷன் பண்ணுவேன் ..!
வலது கண், எனக்கு நல்லா தெரியுதே டாக்டர் ?
என் வலது கண்ணுக்கு ஆபரேஷன் !

ஒரு நோயாளி தன் மனைவியுடன்
டாக்டர் ! தெரியாம ஸ்பூனை முழுங்கிட்டேன். கஷ்டமா இருக்கு.. .
ஆமாம் டாக்டர். .. ஸ்பூன் இல்லாம ஊறுகாய் எடுக்க ரொம்ப கஷ்டமா இருக்கு.. .

கண்ணாடியை கழட்டிட்டா எதுவுமே தெரியமாட்டேங்குது டாக்டர்.. .
நிஜமாவா.. ?
ஆமாம் ! கண்ணாடியை கழட்டிட்டனா இல்லையான்னு கூட தெரியமாட்டேங்குது டாக்டர் !

அந்த டாக்டர், கிளினிக்ல எதுக்கு பெரிய தராசை கட்டி வெச்சிருக்காரு ?
பேஷண்ட்டுக்கு சுகர் எவ்வளவு இருக்குனு பார்க்கறதுக்காம் !

என் பொண்ணு புகுந்த வீட்டுக்குப் போனப்புறம் ரொம்ப இளைச்சுட்டா.. .
நிஜமாவா.. ?
ஆமாம் ! கல்யாணத்தன்னிக்கு நாங்க போட்ட மோதிரத்தை இப்ப அவ வளையலா போட்டுக்கறான்னா பாருங்க.. !

சார் ! பீரோல வெச்சிருந்த என்னோட மொத்தப் புடவைகளும் காணாம போச்சு..
உங்களுக்கு யார் மேலயாவது சந்தேகம் இருக்கா. .?
தோய்க்கறதுக்கு சோம்பேறித்தனப்பட்டுட்டு என் கணவர்தான் யாருக்காவது எடுத்துக் கொடுத்துட்டாரோன்னு சந்தேகமா இருக்கு.

தலைவர் ஏன் அடகு கடைக்காரரை கூட்டிட்டு வந்து கட்சி மீட்டிங்ல பேசச் சொல்றாரு.. ?
பதவிக்காக எதிர்க்கட்சித் தலைவர் கொள்கையை அடகு வெச்சுட்டாருன்னு நிரூபிக்கத்தான் !

வாஜ்பாய்க்கும், மூப்பனாருக்கும் என்ன வித்தியாசம்.. ?
வாஜ்பாய் பாக்-கோட பேசமாட்டாரு. மூப்பனார் பாக்-கோடதான் பேசுவாரு.. .

என்னய்யா இது.. . மேடையில டீக்கடை பாய்லர் இருக்கு.. ?
டீக்கடையில உட்கார்ந்து பேசிப் பேசியே நம்ம தலைவருக்குப் பழக்கமாம்.. . டீ பாய்லரைப் பார்த்தாதான் அவருக்குப் பேசவே மூடு வருமாம்.. .

என்னது.. . அங்கேயே வெட்கப்பட்டுக்கிட்டு நிக்கிறே.. .? உனக்கு யாரும் எதுவும் சொல்லித் தரலையா.. .?
சொல்லித் தந்தாங்க. மொதல்ல அஞ்சு நிமிஷம் வெட்கப்படணும்-னு சொன்னாங்க.. அதான் பட்டுக்கிட்டிருக்கேன். ..

என்ன டாக்டர் இது. .. கொசு போட்டோவைப் பெரிசா மாட்டி, மாலையெல்லாம் போட்டிருக்கீங்க.. ?

பின்னே. . எங்களை வாழவைக்கிற தெய்வமாச்சே !

கின்னஸ் சாதனை ஒண்ணு பண்ண முயற்சி செஞ்சுக்கிட்டு இருக்கேன். நீங்களும் கொஞ்சம் உதவி பண்ணணும்.. .
என்ன பண்ணணும்.. .?
இதுவரைக்கும் 99,999 பேர்கிட்டே கடன் வாங்கியிருக்கேன்.. . ஒரு லட்சமாவது ஆளா, நீங்களும் எனக்கு நூறு ரூபாய் கடன் கொடுத்து உதவி செய்யணும்.. .
நன்றி ஆனந்த விகடன் 5-11-2000

எங்கப்பா வெளியே போறப்ப சட்டை போட்டா பேண்ட் போட மாட்டாரு.. . பேண்ட் போட்டா சட்டை போட மாட்டாரு.. .!
ரொம்ப அசிங்கமாயிருக்குமே.. !
அதெப்படி அசிங்கமாயிருக்கும். .. சட்டை போட்டா பேண்ட்டுக்குப் பதிலா வேஷ்டி கட்டுவாரு.. . பேண்ட் போட்டா சட்டைக்குப் பதிலா ஜிப்பா போடுவாரு.. .!

ராத்திரி எட்டு மணி ஆனா என் கணவர் வீட்டுக் கதவைச் சாத்திடறாரு.. .
புதுசா கல்யாணம் ஆச்சே., கொஞ்ச நாள் அப்படித்தான் இருக்கும்.
அட நீ வேற ! அவரு பாத்திரம் தேய்க்கற விஷயம் வெளியே யாருக்கும் தெரியக் கூடாதாம்.

நான் என் மனைவிகிட்டே- யார்கிட்டேயும் சொல்லக் கூடாதுன்னு சொல்லி ஒரு ரகசியம் சொன்னது தப்பாப் போச்சு.. .!
ஏன். .. என்னாச்சு. .! ?
எல்லார்கிட்டேயும் ரகசியத்தை பேப்பர்ல எழுதிக் காண்பிச்சிட்டிருக்கா. ..!

ஏன் உங்க மனைவி பக்கத்துல வரும்போதெல்லாம் நீங்க ராமா, ஸ்ரீ ராமான்னு சொல்றீங்க.. ?
நான்தான் சொன்னேனே, கஷ்டம் வரும்போதெல்லாம் கடவுளை நினைப்பேன்னு. ..

டாக்டர் ! என்னால மாடி ஏற முடியலை.. .
இந்த மருந்தைச் சாப்பிடுங்க, படிப்படியா குணமாயிடும்.

ஏம்பா மூடி இருக்கிற வீட்டுக் கதவைத் தட்டி லாட்டரிச் சீட்டு வேணுமான்னு கேட்கிற ?
அதிர்ஷ்ட தேவதை உங்க வீட்டுக் கதவைத் தட்றாங்க சார் ..

பேக்டரி ஸ்ட்ரைக் நடக்குதே, என்ன விஷயம் ?
முதலாளியை டிஸ்மிஸ் பண்ணணும்னு கோரிக்கை.. .

சார் நான் பரீட்சை எழுதறப்ப இவனைப் பார்த்துதான் எழுதினேன்.
சரி.. . இண்டர்வ்யுக்கு இவரை ஏன் கூட்டிட்டு வந்தீங்க ?
எனக்கு பதில் தெரியாத கேள்வியைக் கேட்டீங்கன்னா இவரைக் கேட்டு பதில் சொல்வேன்.

என்னது.. . ரூ. 500- கொடுத்து புத்தகம் வாங்கியிருக்கியா. ..! என்ன புத்தகம் டீ அது.. .?
சிக்கனமாக வாழ்வது எப்படிங்கிற புத்தகம்ங்க !

எங்க மானேஜர் பத்திரிகை சுதந்திரத்தை பறிக்கிறாரு. ..
எப்படி ?
ஆபீஸ்ல புக் படிச்சா திட்றாரே. ..

ஏன் சார் ! உங்களுடையது காதல் திருமணமா ?
எப்படி கரெக்டா சொன்னீங்க ?
இவ்வளவு மோசமான சமையலை இவ்வளவு ருசிச்சு சாப்பிடறீங்களே ! அதை வச்சுதான் கண்டுபிடிச்சேன் !

கொலைகாரனைப் பற்றி ஏதாவது தகவல் கிடைச்சுதா ?
எஸ் சார். என்னைத் தேட வேண்டாம், உங்க கைக்கு சிக்க மாட்டேன்-னு லெட்டர் போட்டிருக்கான்.

பெப்சி விளம்பரத்துக்கு டெண்டுல்கரை ஏன் போட்டாங்க .. ?

அவருதான் ஓப்பனராச்சே.. .
நன்றி குங்குமம் 10-11-2000

என்னது கூட்டத்துல சலசலப்பு ?
பின்னாலிருந்து அட்சதை அரிசி தூவறப்ப, அதிலிருந்த கல்லு முன்னால உட்கார்ந்திருந்தவர் மண்டையை உடைச்சிருச்சாம் !

மாப்பிள்ளை, ஏன் எந்நேரமும் தலை வாரிக்கிட்டே இருக்கார் ?
அதான் பத்திரிகையிலேயே மாப்பிள்ளை பெயருக்கு முன்னாடியே சிரஞ்சீவின்னு போட்டிருக்குதே !

ஆபரேஷன் தியேட்டருக்கு போறதுக்கு பை பாஸ் வழி போட்டிருக்காங்களே, ஏன் ?
பைபாஸ் சர்ஜரி பண்ண டாக்டர் இந்த வழியிலதான் போவாராம் !

ராப்பிச்சை ஏன் கவலையா இருக்கான் ?
பிச்சையில கிடைக்கிற வருமானத்தை கணக்குக் காட்டவே கஷ்டமாயிருக்காம். இந்த நிலையில், குரோர்பதியில வேற பரிசு கிடைச்சிருக்காம் !

இந்த டாக்டர் குத்துச் சண்டை வீரராமே.. !
ஆமாம், அதெப்படி உங்களுக்குத் தெரியும் ?
கிளினிக் வாசல்ல காது, மூக்கு, சண்டை ஸ்பெஷலிஸ்ட்னு போர்டு வச்சிருக்காரே !

சிரிப்போ சிரிப்பு

வாய்விட்டு சிரித்தால் நோய் விட்டுப் போகும். சிரிப்பு, நகைச்சுவை உணர்வு மனிதர்களுக்கு கிடைத்த ஒரு அரிய பொக்கிஷம். சிரிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். நகைச்சுவை உணர்ச்சியை வளர்த்துக் கொண்டால் நமது மனத்திலுள்ள சுமைகள் குறையும். மனச்சோர்வு அகன்று விட்டாலே, மனத்தில் புத்துணர்ச்சி பிறக்கும்.
எப்படி பாடுவதோ என்ற தலைப்பில் சில பாடல்கள் எழுதப்போகிறேன். சிறிது நேரம் கவலையை மறந்து சிரிக்கவும். யாரையும் புண்படுத்துவதற்கு எழுதவில்லை. மனம் விட்டு சிரிப்பதற்கு எழுதுகிறேன். புனிதமான தொழில் செய்யும் மருத்துவர்கள், ஆசிரியர்கள், திரைப்பட கவிஞர்களும் மன்னிக்கவும்.

எப்படிப் பாடுவதோ அந்தந்த பாட்டு மெட்டிலேயே பாடவும்

டாக்டரைப் பார்த்து நோயாளி பாடும் பாடல்- சௌக்கியமா டாக்டர் சௌக்கியமா ?
அம்மாவைப் பார்த்து மகன் பாடும் பாடல்- சொன்னபடி கேளு. மக்கர் பண்ணாதே.
இளசுகளைப் பார்த்து பெரிசுகள் பாடும் பாடல்- காலம் கலிகாலம் ஆகிப் போச்சுடா கம்ப்யூட்டர் எல்லாமாகி ஆகிப் போச்சுடா.
பரீட்சையில் வினாத் தாளைப் பார்த்ததும் ஒன்றும் தெரியாத மாணவன் பாடும் பாடல்- ஒண்ணுமே புரியல்லே பரீட்சையிலே
கடன் வாங்கியவரிடம் திடீரென்று அகப்பட்டுக் கொண்டவர் பாடும் பாடல்- நான் முன்னாடி போறேன். நீ பின்னாடி வரவேண்டாம்.
மனைவியிடம் எப்பொழுதும் திட்டு வாங்கும் கணவன் பாடும் பாட்டு- சோதனை மேல் சோதனை போதுமடா சாமி.
தனக்கு அறுவை சிகிச்சை பண்ணப் போகும் டாக்டரைப் பார்த்து நோயாளி பாடும் பாடல் (கடைசி பாடல்)- நான் சிரித்துக் கொண்டே இறப்பேன்.
காப்பி அடிக்கப் பயப்படும் மாணவனிடம் காப்பி அடிப்பதையே முழு மூச்சாகக் கொண்ட மாணவன் பாடும் பாடல்- உன்னால் முடியும் தம்பி, தம்பி.
திருடனுக்குப் பிடித்த பாடல்- ஓடி ஓடி பிக்பாக்கெட் அடிக்கணும்.
போலீஸுக்குப் பிடித்த பாடல்- நான் துரத்திக் கொண்டே இருப்பேன். ஆனால் பிடிக்க மாட்டேன்.
காப்பி அடிக்கும் மாணவனைப் பார்த்து ஆசிரியர் பாடும் பாடல்- மறைந்திருந்தே பார்க்கும் மர்மம் என்ன தம்பி.
டாக்டரின் மனைவி பாடும் பாடல்- அடுத்தாத்து டாக்டரைப் பார்த்தேளா அவர் ஆப்பரேஷன் பண்ணா, பேஷண்ட் பிழைக்கறதைக் கேட்டுண்டேளா
ஆஃபிஸிலும் அல்லல்பட்டு, லோல்பட்டு, மனைவியிடமும் அல்லல் படும் கணவன் பாடும் பாட்டு- எங்கே நிம்மதி எங்கே நிம்மதி.
மனைவியின் சமையலிலிருந்து தப்பித்த சணவன் பாடுவது- நான் செத்துப் பிழைச்சவன்டா.
பெண் பார்க்கப் போன இடத்தில் பெண்ணையும் பிடித்து, பெண்ணின் தங்கையையும் பிடித்து விட்ட மாப்பிள்ளை பாடுவது- அலைபாயுதே பெண்ணே என்மனம் அலைபாயுதே.
முதன் முதலில் திருடப் போகும் திருடன் பாடுவது, அனுபவம் புதுமை.

தேர்வில் தோற்றுப் போன மாணவன் தந்தையைப் பார்த்து பாடுவது- மன்னிக்க வேண்டுகிறேன்.
டீச்சரிடம் அடிக்கடி அடி வாங்கும் மாணவன். நீண்ட நாள் கழித்து அதே ஆசிரியரை சந்திக்கும் போது பாடிய பாட்டு- அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே. டீச்சரே, டீச்சரே, டீச்சரே.
கவுண்டமணி செந்திலைப் பார்த்து பாடும் பாடல்- உதைத்து வாழ வேண்டும் பிறர் உதையில் வாழ்ந்திடாதே.
ஓட்டப் பந்தயத்தில் திடீரென்று கால் சுளுக்கியபொழுது, மாணவன் பாடும் பாட்டு- ஹம்மா, ஹம்மா, ஹம்ம ஹம்ம ஹம்மா.
கணக்கிற்கு விடை கேட்ட ஆசிரியரைப் பார்த்து மாணவன் பாடிய பாடல்- நோ ப்ராப்ளம், நோ ப்ராப்ளம்.
ஸ்கூலுக்கே போகப் பிடிக்காத மாணவனுக்குப் பிடித்த பாட்டு- கொலம்பஸ் கொலம்பஸ் விட்டாச்சு லீவு.
எப்பொழுது பார்த்தாலும் சாப்பிட்டுக் கொண்டே இருக்கும் மாணவனுக்குப் பிடித்த பாட்டு.
கல்யாண சமையல் சாதம்.
உப்புக் கருவாடு ஊற வச்ச சோறு.
அயல் நாட்டில் எல்லாம் வாங்கிவிட்டு, ஊரையும் சுற்றிப்பார்த்து விட்டு தன் சொந்த ஊர் போகும்போது பாடும் பாடல்- எந்த ஊரு என்றாலும் அது நம் நாடு போலாகுமா.

பெண் வீட்டார் மன்னிக்க

பொண்ணு பார்க்கப் போன மாப்பிள்ளைப் பையனுக்கு அங்கு கொடுத்த டிபன் போண்டாவைப் பார்த்ததும் ஞாபகம் வந்த பாட்டு-
குண்டு ஒண்ணு வச்சிருக்கேன். வெடி குண்டு ஒண்ணு வச்சிருக்கேன்.
எப்பொழுது பார்த்தாலும் டி.வி ஸீரியலைப் பார்த்து கண் சிவப்பாகிப் போன மாமியாரைப் பார்த்து மருமகள் பாடும் பாட்டு- ஸ்ட்ரா பெர்ரி கண்ணே.
ஆபிஸில் வேலை பார்ப்பவர்களிடம் மேனேஜர் பாடும் பாட்டு- தூங்காதே தம்பி தூங்காதே.
பிடிக்காத மனைவியைப் பார்த்து கணவன் பாடும் பாடல்- ஸகிக்காத ராட்சஷியே.
தன்னை அழகென்று சொன்ன கணவனைப் பார்த்து மனைவி பாடும் பாடல்- நீ பொல்லாதவன் பொய் சொல்கின்றவன்.
திருடன் ஒரு வீட்டில் திருடிக் கொண்டு போகும் போது பக்கத்து வீட்டுக்காரர் பார்க்க, திருடன் பாடிய பாட்டு.
சொல்லாதே யாரும் கேட்டால், சொன்னாலே தாங்க மாட்டார்.
போலீஸ் திருடனைப் பார்த்து பாடும் பாடல்- கண்ணா மூச்சி ஏனடா ?
பரீட்சை நன்றாக எழுதாத மாணவன் தந்தையைப் பார்த்து பாடும் பாடல்- வெற்றி நிச்சயம். இது வேத சத்தியம்.
வீட்டு வாடகை வாங்கி வந்தவரிடம் குடித்தனக்காரர் பாடும் பாட்டு- இன்று போய் நாளையும் வராதே.
டெளரி (வரதட்சிணை) வாங்கும் பையனின் அப்பாவைப் பார்த்து பெண்ணின் அப்பா பாடும் பாடல்- டெளரி கல்யாணம் வைபோகமே.
முதன் முறையாக ஆப்ரேஷன் பண்ணி வெற்றி அடைந்த டாக்டரைப் பார்த்து நோயாளி பாடும் பாடல்- நான் செத்துப் பொழச்சவன்டா எமனை (டாக்டரை) பார்த்து பயன்தவன்டா.
காப்பி அடித்த மாணவனைக் கண்டு பிடித்த ஆசிரியர் பாடும் பாடல்- கண்டு கொண்டேன், கண்டு கொண்டேன்.
சமைக்கத் தெரியாத மனைவி கணவனைப் பார்த்து பாடும் பாடல்- மயக்கமென்ன, தயக்கமென்ன வெண் பொங்கல் தான் கண்ணே.
தேர்வில் தோற்ற மாணவனை நண்பன் தேற்றும் பாடல்- கவலைப்படாதே சகோதரா.
ஆறு மனமே ஆறு.
திருடன் போலீசைப் பார்த்து பாடும் பாடல்- நீங்கள் அத்தனை பேரும் உத்தமர் தானா சொல்லுங்கள்.
வீட்டில் பாதி வேலையை வாங்கும் கணவனிடம் மனைவி பாடுவது- நீ பாதி நான் பாதி கண்ணா.
பரீட்சை வினாக்களுக்கு பதில் தெரியாத மாணவன் ஆசிரியரைப் பார்த்து பாடும் பாடல்- கேள்வியின் நாயகனே.
இந்த கேள்விக்கு பதில் ஏதய்யா ?
கவுண்டமனி படம் எடுத்தால், அவர் படத்திற்கு வைக்கும் பெயர்- உதைத்துக் கொண்டே இருப்பேன்.
செந்தில் படம் எடுத்தால் அவர் படத்திற்கு வைக்கும் பெயர்- ஆயிரம் உதை வாங்கிய அபூர்வ சிகாமணி.
பி.டி. உஷா படம் எடுத்தால் படத்தின் பெயர்- ஓடிக் கொண்டே இருப்பேன்.
ஒருத்தி தன் தோழியிடம், எதிர் வீட்டுக் காரங்க ரொம்ப பணக்காருங்க. அவங்க பையனோட பேனா தொலஞ்சதுக்கு, சி.பி.ஐ வைச்சு என்கொயரி பண்றாங்க இன்னா பார்த்துக்கோயேன்.
புதுவிதமான ரெஸிபி பண்ணி கணவனின் தட்டில் வைத்து சாப்பிடச் சொல்லுகிறாள் மனைவி. அந்த நேரத்தில் கணவனுக்கு நினைவுக்கு வந்த பாட்டு ஒண்ணுமே புரியலே உலகத்திலே. போதும் போதும் இந்த சோதனை பொறுத்திட மாட்டேன் இந்த வேதனை.

ஓடிக் கொண்டே இருப்பேன்

நிருபர்- இந்த 60 வயதிலும் ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றிருக்கிறீர்களே ? இதன் ரகசியம் என்ன ? சிறு வயதுப் பயிற்சியா ?
பெரியவர்- அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க கடன் கொடுத்தவங்க என்னைத் துரத்தும் போதும், கதை எழுதறவங்க , ஜோக் எழுதறவங்க என்னைப் படிச்சுப் பார்க்க தொந்தரவு படுத்திய போதும், காலை வேளைல ரன்னிங் போகும்

போது துரத்திய நாய்களுக்கும் பயந்து, படாத பாடு பட்டு ஓட ஆரம்பிச்சதுங்க. அதுவே இன்னைக்கு ஒட்டப் பந்தயத்தில் மெடல், வாங்கி, உங்களிடம் பேட்டி கொடுக்கிற அளவுக்கு வளர்ந்துட்டேங்க
நிருபர்- அப்ப நன்றியை யாருக்கு தெரிவிக்க விரும்பறீங்க ?
பெரியவர்- நிச்சயமா, எனக்குக் கடன் கொடுத்தவங்களுக்கும், கதை படிக்கக் கொடுக்கிறவங்களுக்கும், துரத்தின நாய்களுக்கும் தான்.

கண்டு பிடிச்சேன்

கண்டு பிடிச்சேன்

நடிகை வயதை கண்டு பிடிச்சேன்

நிருபர் நடிகையிடம்- உங்கள் வயது என்ன ?
நடிகை - நான் பேச்சு மாறாதவள். அப்ப என்ன வயசு சொன்னேனோ, அதே வயசுதான் இப்பவும்.
நிருபர்- உங்களுக்கு கல்யாணமாகி எத்தனை வருஷமாச்சு ?
நடிகை- முப்பது வருஷமாச்சு ?
நடிகை- அப்படியாங்க, எத்தனை வயசுலே கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க ?
நடிகை- எத்தனையாவது கல்யாணத்தைக் கேட்கறீங்க ?
நிருபர்- மேடம் உங்கள் முதல் திருமணத்தைப் பற்றிதான். எத்தனை வயசிலே நடந்தது.
நடிகை- என்னோட முப்பது வயசிலே தான்.
நிருபர்- உங்கள் உண்மையான வயதை சொன்னதற்கு நன்றி.
டி.வி மெகா சீரியல் பார்ப்பவர்களுக்கு (பார்த்து அழுபவர்களுக்கு) ஒரு நற்செய்தி. எங்களிடம் விசேஷமான களிம்பு இருக்கிறது. இந்தக் களிம்பை ஒரு சொட்டு கண்ணில் தடவிக்கொண்டு எந்த மெகா சீரியலையும் பார்க்கலாம். அழுது, அழுது கண் வீங்கி, கண் சிவந்து, கண்டாக்டரிடம் போக அவசியமே இல்லை. களிம்பின் விலை ரூ. 101-தான். விலையைக் கேட்டு அழுகை வருகிறதா ? களிம்பின் பெயர் கண்டு களி.
உங்களுக்கு சிவப்பாக வேண்டுமா ? எங்களிடம் விற்கும் கயசை கூஷ வடிரஉ வாங்குங்கள் இந்த கீரிமை டச் பண்ணாலே சிவப்பாகி விடலாம்.
டி.வி கடை விளம்பரம் (இதன் பெயர் சகலகலாவல்லி டி.வி.) நாங்கள் புதிதாக கண்டு பிடித்திருக்கும் டி.வி-யின் மேல் ஒரு அடுப்பு இருக்கும். நீங்கள் டி.வியில் உங்களுக்கு பிடித்த மெகா சீரியல் பார்க்கும் போது உங்களுக்கு பொரியல் பண்ணப் பிடிக்காது. அந்த வேலையை இந்த டி.வி அடுப்பே செய்து விடும். அடுப்பின் மேல் காபி, டீ, பொரியல் பலவித சாம்பார், வெஜிடேரியன் ஐடம்ஸ், நான் விஜிடேரியன் எல்லாம் இருக்கும். எது வேண்டுமோ, ரைவவடிடீ-ஐ அழுத்தி (ரிமோட்கன்ட்ரோலில் தயாரிக்கலாம். அழும் குழந்தையை சமாதானம் பண்ண அந்த அடுப்பே பாடும். டி.வி-சீரியல் பார்ப்பதற்குள், டி.வி அடுப்பு நொடியில் உங்கள் மெனுவை தயாரித்துவிடும். எதற்குமே கிச்சன் பக்கம் போக வேண்டாம். பிரிப்ப்ரோகிராம் ீசந-ிசடிபசயஅஅந) பண்ணப் பட்ட அடுப்பு. இந்த டி.வி வாங்கினால், உங்களுக்கு, மெகா சீரியல் பார்த்து அழும்போது வரும் கண்ணீரை உறிஞ்சும் விசேஷமாக தயாரிக்கப்பட்ட துண்டு தருகிறோம். இந்த துண்டு உங்கள் அழுது வீங்கிய முகத்தை 30 நொடியில் அழகாக ஆக்கிவிடும். நடக்க முடியாத பாட்டிகளுக்கும், சமைக்க போர் அடிக்கும் குடும்பத் தலைவிகளுக்கும் டி.வியின் இரண்டு பக்கமும் பல குழாய்கள் பொருத்தப்பட்டிருக்கும். ஒரு குழாய் காப்பிக்கும், மற்றொரு குழாய் தண்ணீருக்கும். தாய்மார்கள் அந்தந்த பட்டனை உட்கார்ந்த இடத்திலிருந்தே அழுத்தினால், அது, அது தட்டில் சுடச் சுட வரும். ஆனால் ஒன்று கைகழுவ நீங்கள்தான் எழுந்து போக வேண்டும் அதற்கும் வசதியாக எங்களின் நிபுணர்கள் கண்டு பிடித்து, விற்பனை கூடிய விரைவில் செய்வோம். ஆஃபர் எக்கச்சக்கம்., உங்கள் தேவைக்கு முந்துங்கள். ஏமாற்றத்தை தவிருங்கள். குடும்பத் தலைவலிகளுக்கு ஸாரி, குடும்பத் தலைவிகளுக்கு. உங்கள் கணவரை எப்பொழுதும்போல் நச்சரித்து, இதையும் இந்த 2000-த்தில் வாங்கி விட்டீர்களானால், இது உங்கள் வீட்டிற்கு பெருமை சேர்க்கும். நீங்கள் வாராவாரம் வாங்கும் துணிகளை விட மிக சீப்தான் நகைச்சுவை திங்கள், காதல் செவ்வாய், காவியபுதன், அதிரடி வியாழன், சூப்பர் ஹீட் வெள்ளி, இந்த சகலகலாவல்லி டி.வி-யில் பார்ப்பதற்கு என் வாழ்த்துக்கள்.
விளம்பரத்துறையில் வேலைபார்க்கும் மனைவி கணவனிடம் கூறுகிறார். நான் பண்ணியிருக்கிற அனகோண்டா போன்டாவை சாப்பிட்டீங்கன்னா, ஒரு கரண்டி இலவசமாகத் தருகிறேன்.
கணவன்- நீ எனக்கு அதை சாப்பிடக் கொடுக்கலேன்னா நான் உனக்கு ஒரு பாத்திரம் இலவசமாகத் தருகிறேன்.

- லக்ஷ்மி சாரதி

நீ செஞ்ச தீபாவளி பலகாரத்தை யாருக்கும் கொடுக்காதேன்னு, என் சம்சாரத்துக்கிட்ட முதல்லயே சொன்னேன். .. கேட்கல !
ஏன். .. இப்ப என்னாச்சு ?
பயங்கர ஆயுதங்கள் தயாரிச்சதா தெருக்காரங்க புகார் பண்ணி போலீஸ் என் சம்சாரத்தை கைது பண்ணிட்டாங்க !

இது கவர்ச்சி நடிகை ஆரம்பிச்சிருக்கிற ஓட்டலா ?

எப்படி கண்டுபிடிச்சே ?
ஜட்டிநாடு ஓட்டல்னு போட்டிருக்காங்களே.

என்னங்க ! ராத்திரி தூக்கத்துல ஃபைலைக் கொண்டுவான்னு உளறினீங்க ?
நான் ஆபீஸ்ல இருக்கேன்னு நினைச்சுக்கிட்டேன்.

ஏங்க ! மதுரைக்குப் போற வண்டி எந்த பிளாட்ஃபாரத்துல வரும் ?
நீங்க மீட்டர் கேஜில் போகணுமா ? பிராட்கேஜில் போகணுமா ?
ஃப்ராடு கேஜ்-ல போகணும் ! அதாவது டிக்கெட் இல்லாம !

ஆட்டோ, டாக்ஸி.. . ஏதாவது வேணும்னா இந்த நம்பருக்கு ஃபோன் பண்ணுங்க தாயி.. . உடனே வரும்.
யாரோட நம்பர் இது ?
என்னோட வீட்டு நம்பர்தான் தாயி.. . மாப்பிள்ளைக்காக 2 ஆட்டோவும், 2 டாக்ஸியும் வாங்கிக் கொடுத்திருக்கேன் தாயி !

மார்க்கண்டேயன் மாதிரி ஒரு பையன் பிறக்கணும்னு பார்த்தேன். ஒரு பெண் பிறந்து நடிகையா இருக்கா.
இப்பவும் என்றும் பதினாறு தானே !

இன்ஸ்பெக்டர் சார், இந்த ரூமை எதுக்காக ஸ்டேஷன்ல ஒதுக்கி இருக்கீங்க ?
துப்பு துலக்கறப்ப அடிக்கடி கேஸ்ல ஏதாவது பிரேக் கிடைக்கும். அந்த பிரேக்கட்டை யெல்லாம் இதுல சேர்த்து வைப்போம் செகனன்ட்ல வித்துடுவோம்.

எங்க கம்பெனியோட மேனேஜிங் டைரக்டர் இவர்தான்.
அந்த பொண்ணு ?
அவரோட மேரேஜிங் டைரக்டர்.

கபாலி, நீ மெட்ராஸ் லாக்-அப்ல இருக்கே.. . உன் குடும்பம் ஈரோட்ல இருக்கு.. .
ஆமா.. . அதுக்கென்ன.
உன்னை அடிக்கறப்ப எதுக்கு அம்மா-ன்னு கத்தறே, உங்கம்மாவுக்கு கேட்கவா போகுது.

தளபதியாரே ! என்ன இது ? போர் நடக்கும் நேரத்தில் 7 நாள் விடுப்பு வேண்டுமா ?
ஆம் மன்னா. போர் முடிந்த அடுத்தநாளே அரண்மனைக்கு வந்து விடுவேன்.

தலைவரே ! உங்க பங்களா, ஃபேக்டரிக்கு மக்கள் அன்புனு பேர் வச்சிருக்கீங்களே ஏன் ?
என்னோட அரசியல் வாழ்வுல மக்கள் அன்பைத் தவிர எதுவும் சம்பாதிக்கலைனு சொல்லிக்கலாமே ?

உங்க கைவசம் எந்த படமும் இல்லையே ஏன் ?
என்னை புக் பண்ண புரொடியூஸர்ஸ் வந்தப்ப நான் வீட்ல இல்லை. ஃபாரின் டூர் போயிருந்தேன். நான் வீட்டுக்கு வந்த சமயத்துல புரொடியூஸர்ஸ் யூனிட்டோ ஷிஃப்டிங்க்கு ஃபாரின் போய்ட்டாங்க, அதான்.. .

சார்.. . சொர்க்கம் போய் தேவர்கள் கூட உட்கார்ந்து ஏதாவது சாப்பிடுவீங்களா ?
என்ன உளர்றீங்க.. .?
காபி தேவாமிர்தம் மாதிரி இருந்ததுனு சொன்னீங்களே ?

உன் மனைவியை உன் கையாலயே கொலை செஞ்சிருக்கே ?
இல்லை. கத்தியால.. .

அது என்ன வீரப்பன் பலகாரமுன்னு சொல்றீங்க ?
இனிப்புக் கடையிலேர்ந்து கடத்தி வந்தாச்சே.

அந்த டாக்டர் பி.எம். பார்க்கிற-வர்னு சொல்றாங்களே. அவரு பிரைம் மினிஸ்டருக்கு வைத்தியம் பார்க்கறவரா ?
அட, நீங்க ஒண்ணு.. . அவருக்கு போஸ்ட் மார்ட்டம் மட்டும்தான் பண்ணத் தெரியும். அதத்தான் சுருக்கமா பி.எம். ஸ்பெஷலிஸ்ட்ன்னு சொல்றாங்க !
நன்றி குங்குமம் 17-11-2000

அந்தத் தலைவருக்குத் தமிழ் உச்சரிப்பு சரியா வராது போலிருக்கு !
அதுக்காக முத்தமிழையும் வித்தவன்-னு பட்டப் பெயர் சூட்டிக் கூப்பிடறது கொஞ்சமும் நல்லா இல்லே !

நீங்க ஒரு ரௌடியை அடிச்சுத் துவைச்சதுல மயங்கி, உங்க மனைவி உங்களைக் கல்யாணம் பண்ணிட்டாங்களே.. .
வாழ்க்கை எப்படி இருக்கு ?
இப்ப மனைவியோட துணிமணிகளை அடிச்சுத் துவைச்சுட்டு இருக்கேன் !

தலைவருக்கு பாராட்டு விழா நடத்தறாங்களே .. . ஏன் ?
இந்த மாசம் யாரையும் கட்சியை விட்டு நீக்கலையாம் !

என் பையன் பென்சில் பட்டாசு கேட்டான்னு அதை வாங்கிக் கொடுத்தேன்.. .!
அதுக்கு ஏன் சார் இப்படி அலுத்துக்கறீங்க ?
பட்டாசு பாதியிலேயே அணைஞ்சுடுச்சாம்.. . இப்போ ஷார்ப்பனர் பட்டாசு வேணும்னு கேட்கறான். !

அமைச்சர் வீட்டில் என்ன விழா ?
புது வேலைக்காரிக்குப் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்பும் செய்து வைக்கிறார் !

இன்டர்வியூல அந்த ஆளை மட்டும் எப்படி செலக்ட் பண்ணாங்க ?
இன்டர்வியூக்கு வந்தவங்கள்ல அவரு மட்டும்தான் குறட்டை விடாமத் தூங்கினாராம்.. .!

பொண்ணு வீடு பெரிய வீரப் பரம்பரைன்னு கல்யாண புரோக்கர் சொன்னதை நம்பிப் போய் ஏமாந்துட்டேன் !
என்னாச்சு ?
பொண்ணுக்குப் பெரிய மீசை இருக்கு !

அமைச்சர் முடிவெட்டப் போறப்போ எதுக்கு ஆறுபேரைக் கூட்டிகிட்டுப் போறார் ?
சலூன்ல போர்வை போத்தறப்போ கைதட்டத்தான் !

கொஞ்ச நாளைக்கு நீங்க ஓட்டல்ல சாப்பிடக் கூடாது !
சரி டாக்டர் ! அப்ப உங்க நர்ஸைச் சமைச்சுப் போட அனுப்பறீங்களா.. .?

நீதிபதியை கறுப்பு டிரஸ் போடாம வர வைக்க முடியுமா ?
எதுக்கு தலைவரே ?
இன்னைக்குக் கறுப்பு எனக்கு ராசியில்லாத நிறம்னு ராசிபலன்ல போட்டிருக்கு !

ஓட்டல் நடத்தறவர் வீட்டுக்கு விருந்தாளியா போனது தப்பா போச்சு !
ஏன் - என்னாச்சு !
சாப்பிட்டு முடிச்சதும் பில் போட்டுக் கொடுத்திட்டார் !

நம்ம பிச்சைக்காரன் முத்துவுக்குத் திமிரைப் பார்த்தீங்களா ?
என்ன பண்ணான் ?
நேத்து நான், ஏன் பிச்சை போடலைன்னு விளக்கம் கேட்டு வக்கீல் நோட்டீஸ் அனுப்பி இருக்கான் !

எந்தச் பெயரைக் கூப்பிட்டாலும் கோர்ட்டில் தலைவரே வந்து கூண்டில் நிற்கறாரா.. . ஏன் ?
எல்லாம் அவரோட பினாமி பெயராம் !
நன்றி இதயம் பேசுகிறது 12-11-2000
பெண் குண்டா இல்லாம லேசான சதைப் பிடிப்போட, அளவான உயரமா, மாநிறத்துக்கும் கொஞ்சம் தூக்கலா, கண், மூக்கு, காது, வாய் எல்லாம் அழகான அளவோட இருக்கற மாதிரி பாருங்க !
ஏன் இவ்வளவு கஷ்டப் படறீங்க ? ஐஸ்வர்யாராய் வேணும்னு கேளுங்களேன் !

எப்பவும் இழுத்துப் போத்திக்கிட்டு நடிக்கிற நீங்க இந்தப் படத்துல மட்டும் இப்படிப் படுகவர்ச்சியா ஏன் நடிக்கறீங்கன்னு கேட்டா, தயாரிப்பாளர்தான் காரணம்றீங்களே !
லோ பட்ஜெட் படமாம். டீரஸுக்கு எல்லாம் செலவு பண்ண முடியாதுன்னு கண்டிப்பா சொல்லிட்டார் !

மும்தாஜைக் கல்யாணம் பண்ணிக்கிற மாதிரி நேற்று கனவு கண்டேன்னு என் அம்மா கிட்ட சொன்னேன்.

அதுக்கு ?
இன்னிக்கு கனவில் மும்தாஜோடு எங்கம்மா சண்டை போட ஆரம்பிச்சுட்டாங்க !

தோட்டத்தில என்ன பயிரிட்டு இருக்கீங்க தாத்தா ?
ரோஜா.. .
அப்படின்னா அடுத்த வருஷம் சிம்ரனா, ஜோதிகாவா ?

ஒரேயொரு தடவை கோயிலைச் சுத்தி வர்றதுக்கு எதுக்கு மும்பை நடிகையை புக் பண்ணியிருக்காங்க ?
தமிழ் படங்கள்லே ஒரு ரவுண்டு வரணும்னு அந்த நடிகை ஆசைப்பட்டாங்களாம் !

உங்களை செக் பண்ணிட்டேன்.. . ஸ்லோ பாய்சனா இருக்குமோனு சந்தேகமா இருக்கு.. .
சந்தேகம் வேண்டாம். .. இருபத்தஞ்சு வருஷமா என் மனைவியோட சமையல்தான் !

உங்க கணவருக்குக் குளிர் ஜுரம் .. அதனால நீங்க பக்கத்துல இருக்காதீங்க.. .
ஏன் டாக்டர் ?
நீங்க பக்கத்துல இல்லன்னா அவருக்குக் குளிர்விட்டுப் போயிடும் !

பேய், பிசாசு மேலே எல்லாம் உங்களுக்கு நம்பிக்கை உண்டா ?
என்னங்க நீங்க. .. கட்டின பொண்டாட்டி மேலே நம்பிக்கை இல்லாமப் போகுமா ..

ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்து எங்க பையனுக்கு டாக்டர் ஸீட் வாங்கிட்டோம் !
தொகை ரொம்ப கம்மியாயிருக்கே ! போலி டாக்டர் ஸீட்டா இருக்கப் போவுது.. .!

கிழவன் கிழவிக்கு எல்லாம் ரொம்ப பிடிச்ச டான்ஸ் எது தெரியுமா ..?
எது.. .?
குச்சி-புடி !

பால்காரர் வீட்டுல பெண் எடுத்தது தப்பாப் போச்சு !
ஏன்.. . என்னாச்சு.. .?
அங்கே பாரேன்.. . முதலிரவுக்குப் பால் சொம்புக்குப் பதிலா, பால்கேன் எடுத்துக்கிட்டுப் போறதை !

நெட் ஜோக்

தன்னிடம் சிகிச்சைக்கு வந்திருந்த ஒரு பெண்மணியிடம் டாக்டர் சொல்லிக் கொண்டிருந்தார். ஸாரி, மேடம் ! உங்களை என்னால் காப்பாத்த முடியாது. நோய் ரொம்பவே முத்திவிட்டதால ஆறு மாசம்தான் நீங்கள் உயிரோடவே இருக்க முடியும்.
கேட்க அதிர்ச்சியாகத் தான் இருந்தது என்றாலும் சற்று நேரத்திலேயே அந்தப் பெண்மணி சுதாரித்துக் கொண்டாள். குடும்பத்துக்குச் செய்ய வேண்டிய அடிப்படையான உதவிகளை எல்லாம் செய்து முடித்துவிட்டு மீதி காலத்தை மகிழ்ச்சியோடு கழிக்கத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள் என்று சொன்ன டாக்டர், இந்த ஆறு மாத காலத்தை எப்படிக் கழிப்பதாக உத்தேசம் ? என்று கேட்டார்.
என் மாமியாரோட இருக்கப் போறேன் டாக்டர் என்றாள் அந்தப் பெண்மணி.
என்னது.. . உங்க மாமியாரோடவா ? அவங்களுக்கும் உங்களுக்கும் ஏழாம் பொருத்தம்னு ஏற்கெனவே சொல்லியிருந்தீங்களே ?
அதான் டாக்டர் விஷயமே ! அவங்களோட இருந்தா இந்த ஆறு மாத காலமே எனக்கு அறுபது வருஷமா தோணும்.

டாக்டர்.. . என் கணவர் காலைல எழுந்ததும் ரெண்டு கைகளையும் வீசிக்கிட்டு வேகமா போறார். பயமா இருக்கு.
அதுல தப்பு இல்லையே.. . நான் தான் அப்படிப் போகச் சொன்னேன்.. .
அவர் சைக்கிள்ல இல்லே அப்படிப் போறார். .. !

உங்ககிட்டே வழிப்பறி பண்ணின ஆளை உங்களால அடையாளம் காட்ட முடியுமா ?
முடியும். ஆனா, கோர்ட்ல என்னைக் காட்டிக் கொடுத்தா லாக்-அப்ல தள்ளிடுவேன்னு இன்ஸ்பெக்டர் ஐயா மிரட்டினாரு !

தலைவர் புது சாதி ஆரம்பிச்சிருக்காராமே.. . எதுக்கு ?

தேர்தல் வருதுல்லே.. . புதுக்கட்சி ஆரம்பிக்கறதுக்குத்தான் !

தலைவரே.. . முன்னாள் பிரதமரும், முதல்வரும் ஊழல் செய்ததா கோர்ட் தண்டனை கொடுத்திருக்கு.. . இதிலிருந்து உங்களுக்கு என்ன தோணுது ?
அவங்களே ஊழல் செய்திருக்கும்போது நாம செய்தா என்ன தப்புன்னு தோணுது !

உங்க முதல் பையன் என்ன பண்றான்.. .?
ஆடிட்டரா இருக்கான் !
ரெண்டாவது பையன். ..?
தினமும் குடிச்சு ஆடிட்டு இருக்கான் !

போலீஸ்காரர் யானை மீது உட்கார்ந்துட்டு எங்கே போறார் ?
கடைத்தெருவில் மாமூல் வாங்கத்தான் !

டாக்டர்.. . என் கணவருக்கு தினமும் ஸ்கூட்டர் ஓட்டற மாதிரி கனவு வருது.. .
இதுக்குப் போய் வருத்தப்படுவாங்களா ?
ஸ்கூட்டரை ஸ்டார்ட் பண்றேன்னு தினமும் ராத்திரி என்னை இல்லே உதைக்கிறாரு !

டாக்டர் .. . என் கணவர் தனக்குத்தானே பேசிக்கிறாரு.. .
அதுக்குக்கூட அவருக்கு உரிமை கிடையாதா மேடம்.. .?

இவ்வளவு அழகா எனக்கு லெட்டர் எழுதியிருக்கானே ஒருத்தன், இவனைப் பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க ?
படிச்சவன்னு தோணுது.. .!
தப்பு.. . படிச்சவன் நான்தான். இவன் எழுதினவன் !
நன்றி ஆனந்த விகடன் 12-11-2000
தமிழ் அறிஞர் மீது கல்வீச்சு நடத்தினார்களா ?
ஆமாம். அதனால் அவருக்கு ஒள-பிரிவு பாதுகாப்பு கொடுக்கணுமாம்.

டாக்டர் ! என்னை ஏன் நரபலி சாமியார் கிட்டே போகச் சொல்றீங்க ?
ஆபரேஷன் பண்ணி பண்ணி எனக்கு அலுத்துப் போச்சு !

தலைவர் ஏன் இடிஞ்சு போய் உட்கார்ந்திருக்காரு ?
அவரோட சின்ன வீடு யார் கூடவோ ஓடிட்டாங்களாம் !

உன் மாமியாருக்குக் கப்பலில் போகணும்னு ஆசையாமே ?
நீர் முழ்கிக் கப்பல் ஏதாவது வந்தால் அனுப்பி வைக்கணும்.

கல்யாணம் ஆன பிறகு தான் தெரிஞ்சுது பொண்ணு மூடி டைப்ன்ற விஷயம்.. .
பிறகு ?
இப்ப ! மாப்பிள்ளை பாட்டில் டைப்பா மாறிட்டாரு.

அரசியல் வாதியை கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பா போச்சு.
ஏன் ?
முதலிரவை சீரனி அரங்கத்துல வச்சுக்கலாம்னு சொல்றாரு.

பெண்ணை ரொம்ப பிடிச்சிருக்கு.
அப்படீன்னா பலகாரம் சாப்பிட்ட தட்டுகளைக் கழுவிட்டு, மத்தியான சாப்பாடு செஞ்சு வெச்சிட்டு போங்க.

என்னதான் பணக்காரியானாலும் இந்த பானு ரொம்பதான் பந்தா பண்றா !
என்ன ஆச்சு ?
புடவைக்கெல்லாம் கஞ்சிக்குப் பதிலாக காம்பளான்தான் போடுவாளாம்.

ஊழல் வழக்கில் தலைவரை ஜெயிலில் போட்டது விபரீதமாச்சி.
எப்படி ?

ஜெயில் கைதிகளை ஒன்று திரட்டிக் கைதிகள் விடுதலை கழகம்-னு புதுக்கட்சி ஆரம்பிச்சுட்டார் !

ஹலோ டாக்டர், என் மாமியார் மூச்சு விட முடியாம ரொம்பக் கஷ்டப்படறாங்க !
உடனே இங்கே கூட்டிண்டு வாங்க.
இதோ, மேக்கப் போட்டுண்டு ஒரு மணி நேரத்துக்குள்ளே வரேன் !

வர வர எனக்கு வர்ற கனவு கூட டி.வி. நிகழ்ச்சி மாதிரி ஆயிடுத்து.
ஏன்...?
கனவு ஆரம்பிக்கறதுக்கு முன்னாடி ஏகப்பட்ட விளம்பரம் வருது.

டாக்டர், உங்க ஹாஸ்பிடல்ல மட்டும் நர்ஸுங்க டூ பீஸ் டிரஸ்ல இருக்காங்களே ?
மயக்க மருந்துக்குனு செலவு பண்றதில்லை. இந்த காஸ்ட்யூம்ல நர்ஸை பேஷண்ட் பார்த்தா மயக்கம் போட்டுடுவாரு, நான் ஆபரேஷன் பண்ணிடுவேன்.

அந்த ரெண்டு பல் டாக்டரும் எப்படி ஒரே கிளினிக்ல ஒற்றுமையா இருக்காங்க...?
ஒருத்தர் மேல் வரிசையை பார்ப்பாரு, இன்னொருத்தர் கீழ் வரிசையை பார்ப்பாரு.

இளவரசே வீரமுடன் வேட்டைக்கு புறப்பட்ட நீங்கள் ஏன் தலை தெறிக்க, ஓடி வருகிறீர்கள் ?
போய்யா, போற வழியில் ஒரு சொறிநாய் துரத்திட்டு வருது !

உங்களுக்கு எந்த டி.வி. வேணும் ?
கேபிள் டி.வி.

தொடர்கதை எழுத்தாளரை ஜோக் எழுதச் சொன்னது தப்பா போச்சு.
என்ன சார் ஆச்சு ? 52 வாரங்களுக்கு பிரசுரம் பண்றாப்பல ஒரே ஒரு ஜோக் எழுதிக் கொண்டு வந்து இருக்கிறார்.
நன்றி குங்குமம் 24-11-2000
ஏன் அந்த அமைச்சரைக் கைது பண்றாங்க ?
அரசியல் சாக்கடையைச் சுத்தம் பண்ணி, கால்வாய் கட்டிய செலவு 10 கோடின்னு கணக்குக் காண்பிச்சாராம்...!

தலைவர் அடிக்கடி கோர்ட்டுக்குப் போனதுல இருந்து ரொம்ப மாறிட்டார் !
அப்படியா ?
ஆட்டோகிராப் கேட்டா, உண்மை... உண்மையைத் தவிர வேறில்லை-னு எழுதித்தான் கையெழுத்து போடுறார் !

உன் கணவர் வீட்டு வேலைய எல்லாம் முடிச்சுட்டாராம் ?
உனக்கு எப்படித் தெரியும் ?
இதோ பாரு கேபிள் டி.வி-யில் விளம்பரம் கொடுத்திருக்காரே !

வேகப் பந்து வீச்சாளரைக் கட்டிக்கிட்டது தப்பாப் போச்சா... எப்படி ?
பாஸ்ட் நைட் கொண்டாடிட்டார் !

ஜவுளிக்கடைல அந்தப் பொண்ணுக்கு மட்டும் ஏன் திருஷ்டி சுத்தறாங்க ?
அஞ்சு நிமிசத்துல பத்து புடவை செலக்ட் பண்ணிட்டாங்களாம் !

நுரை வரும் பூ எது ?
எது ?
ஷேம்பூ !

லைசென்ஸ் இல்லாத டிரைவர் யார் ?
யார் ?
ஸ்குரு டிரைவர் !

இட்லியை ஏன் வேக வைக்கிறோம். தோசையை ஏன் சுடுகிறோம் ?
ஏன் ?

எல்லாம் சாப்பிடத்தான் !

வாஸ்கோடகாமா இப்போ இருந்தால் அவர் பெயர் என்ன ?
என்ன ?
இஸ்கோடகாமா !

ஆப்போசிட்டுக்கு ஆப்போசிட் என்ன ?
என்ன ?
ஆப்போஸ்டேண்டு !

மார்ச்சில் பரீட்சை எழுதியவனுக்கு ரிசல்ட் வருது. எல்லாத்துலயும் அவன் பெயில். அவன் அப்பா கிட்ட போய், அப்பா... நான் எல்லாத்துலயும் பாஸாயிட்டேன் என்கிறான். உடனே அவர், அப்படியா ரொம்ப சந்தோஷம் என்கிறார். இப்போ பையன் என்ன சொன்னான் தெரியுமா ?
என்ன சொன்னான் ?
ஹய்யா... றிசடை குடிடிட ஸ

ஆபீசுக்குப் போகும் போது ஒருவர் எண்ணெயும் சீப்பும் எடுத்துக்கிட்டுப் போறார்.
ஏன் ?
ஏன் ?
அவர் ஆபீசுல ஊழல் தலை விரிச்சு ஆடுது !

கடவுள் எங்க இருக்கார் ?-னு டீச்சர் ஒரு பையனைக் கேக்கறாங்க. அதுக்குப் பையன், எங்க வீட்டு பாத்ரூம்ல என்கிறான். அதிர்ச்சி யோடு எப்படி என்கிறார் டீச்சர்.
அதுக்குப் பையன், எங்க அப்பா, அம்மாவை வீடு பூரா தேடிட்டுக் கடைசியில் பாத்ரூமில் கண்டுபிடித்து, அடக்கடவுளே... நீ இங்கதான் இருக்கியா ? என்றார் !

ஒருத்தன் பி.ஏ. படிச்சுட்டு வேலையில்லாம இருந்தான். ஒரு சர்க்கஸ்ல அவனுக்குப் புலி வேஷம் கொடுத்தாங்க. ஒரு நாள் இவனுக்குப் பக்கத்துல இன்னொரு புலி வருது. உடனே இவன் பயந்து போய் கத்தறான். அதுக்கு வந்த புலி கத்தாதே... கத்தாதே... ரெண்டு பேரும் மாட்டிப்போம். நான் எம்.ஏ. என்றது !

டெஸ்ட் டியூபில் பிறந்த பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பா போச்சு !
ஏன் ?
ஹனிமூனை வீராணம் குழாயில வச்சுக்கலாமான்னு கேட்கறா !

ஓட்டப் பந்தயத்தில் ஜெயிச்சு தங்க மெடல் வாங்கினீங்களே... உங்களோட கோச் யாருங்க ?
என் மனைவிதான் ! தினமும் என்னை ஓட ஓட விரட்டி பிராக்டீஸ் கொடுத்தா. ..!

வெளிநாட்டுத் தூதர் பதவி வாங்கித் தர்றேன்னு நம்ம தலைவர் சொன்னதை வச்சு எலெக்ஷன்ல நிக்காமப் போனது தப்பாப் போச்சு !
ஏன் - என்னாச்சு ?
வீரப்பனுக்குத் தூதரா என்னை நியமிச்சிருக்காங்களாம் !

மூட்டு வலிக்கு ஆபரேஷன் பண்ணணும்னு சொல்லி, அமெரிக்கா போய் ரெண்டு மாசம் டூர் அடிக்கலாம்னு நெனைச்சு தலைவருகிட்ட பர்மிஷன் கேட்டது தப்பாப் போச்சு !
ஏன் - என்னாச்சு ?
வீரப்பன்கிட்ட மயில் தைலம் இருக்கு. பேசாம காட்டுல போய் சிகிச்சை எடுத்துக்கோ-ங்கறார் !

பிரபு ! பூலோகத்திற்கு உயிர் பிடிக்கப் போன சித்ரகுப்தனை வீரப்பன் பிடித்து வைத்துக்கொண்டு கேசட் கொடுத்தனுப்பியுள்ளான் ?
என்னவென்று ?
செத்துப்போன மாயாண்டி, முனியாண்டி, குப்பன், சுப்பன், பக்கிரி உட்பட 124 பேரையும் உயிருடன் திரும்ப விட்டால்தான் சித்ரகுப்தனை விடுவானாம் !

என்னங்க... வீட்டில் தண்ணீர் வசதி, காற்று வசதி எதுவும் இல்லீங்களே ?

சரி, குழாய் போட்டுக் கொடுத்துடறேன். எது வருதோ அதை யூஸ் பண்ணிக்குங்க !

பொண்டாட்டின்னு ஒருத்தி இருக்கறதை என்னிக்காவது நினைச்சிருக்கீங்களா...?
ஒரே ஒருநாள்...
என்னிக்கு ?
கல்யாணத்திற்கு முதல்நாள் !

யூனியன் லீடரைக் கல்யாணம் பண்ணினது வம்பாப் போச்சு !
ஏன் ?
வீட்ல எனக்கும் அவருக்கும் சண்டை வர்றப்ப அடக்கு முறை ஒழிக-னு கத்தறார்.
நன்றி இதயம் பேசுகிறது 19-11-2000
அந்தப் பெண்ணுக்கு எழுதிய லவ் லெட்டரை சுக்குநாறாக் கிழிச்சு அவகிட்ட கொடுக்கறியே... ஏன் ?
அவ மட்டும் என்ன செய்யப்போறா ? கிழிச்சுதானே போடப்போறா !

பீச்சுக்கு எவர்சில்வர் காரியரோட வந்திருக்கியே... சுண்டல் வாங்கவா ?
நோ... நோ... என் காதலிக்கு சுண்டல் வாங்கிக் கொடுத்து கட்டுப்படி ஆகலே. அதான், வீட்டிலேயே பண்ணிக் கொண்டு வந்திருக்கேன் !

ச்சே... எப்போ பார்த்தாலும் மாமியாரைத் திட்டிக்கிட்டே இருக்கியே...
நான் உங்க மாமியாரையா திட்டறேன்... என் மாமியாரைத்தானே திட்டறேன்.. .!

உங்க வீட்டுக்கு ஏகப்பட்ட விருந்தாளிங்க வரலாம்... அதுக்காக செருப்புக்கு டோக்கன் போட்டு இரண்டு ரூபாய் வசூல் பண்ணுறது கொஞ்சம்கூட நல்லால்லே சார் !

எங்க வேலைக்காரி ரொம்பதான் அல்ட்ரா மாடர்னாயிட்டா...
எதை வெச்சு சொல்ற ?
அக்கம்பக்கம் செய்திக்குன்னே ஒரு வெப் சைட் திறந்திருக்காளே !

பூலோகத்தில் தினமும் காக்கைகளுக்கு அதிக அளவில் உணவு அளித்ததால் உனக்கு சொர்க்கம் கிடைத்திருக்கிறது...
போ மானிடனே !
பெண்டாட்டி சமையல் பிடிக்காம அப்போது கஷ்டப்பட்டதுக்கு இப்போ சொர்க்கமா ?

அந்த ஆள் குரோர்பதி புரோக்ராம்ல அம்பது லட்சம் ஜெயிச்சாரு...!
அப்ப, அவரு குரோர்பாதின்னு சொல்லுங்க !

நம்ம தலைவர் ஆனாலும் எதிர்க்கட்சித் தலைவர் மேல இவ்வளவு கோபமா இருக்கக்கூடாது...
ஏன்...?
அவரை அடுத்த ஜென்மத்துலேயும் ஜெயில்ல போடுவேன்னு சொல்றாரே !

மம்மி இன்னிக்கு நான் ஸ்கூல்ல நூறு மார்க் வாங்கினேன்.
அப்படியா... வெரி குட் ! ஆமா... எந்த பாடத்துல ?
கணக்குல 40 மார்க், அறிவியல்ல 35 மார்க், சரித்திரத்தில 25 மார்க்.

என்ன பண்ணிட்டிருக்கே ரமேஷ் ?
என் ஃப்ரெண்டுக்கு லெட்டர் எழுதிட்டிருக்கேன் மம்மி.
லெட்டரா... உனக்குதான் எழுதவே தெரியாதே ?
அதனாலென்ன... என் ப்ரெண்டுக்கும் படிக்கத் தெரியாது...!

சுரேஷ்... கண்பார்வை யாருக்கு அதிகம் ? விலங்குகளுக்கா... மனிதர்களுக்கா.. ?
விலங்குகளுக்குத்தான் டீச்சர்.
எப்படி சொல்றே ?
விலங்குகள் எதுவும் கண்ணாடி போடறதில்லையே டீச்சர்.

நெட் ஜோக்

தமிழக முதல்வர் கருணாநிதியும் கர்நாடக முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணாவும் ஒரு பூங்காவில் பேசியபடியே நடந்து செல்ல... அவர்கள் காலில் தட்டுப்பட்டது ஒரு விளக்கு. என்ன அதிசயம்... அடுத்த விநாடியே அது ஒரு அழகான தேவதையாக உருமாறி நின்றது.
சாபம் நீங்கி எனது பழைய உருவம் பெற தாங்கள் பாதம் பதித்த இந்த உதவியை எந்நாளும் மறக்கமாட்டேன். இதற்குப் பிரதியுபகாரமாக உங்களுக்கு மூன்று வரங்கள் தருகிறேன். கேளுங்கள் ! என்றது அந்த தேவதை.
திகைத்து நின்ற இரண்டு முதல்வர்களும் சகஜநிலைக்குத் திரும்பி முதலில் ஆளுக்கொரு வரம் கேட்டார்கள்.
வறுமை, வேலையில்லாத திண்டாட்டம் எல்லாம் நீங்கி தமிழகம் வளமையில் பூத்துக் குலுங்க வேண்டும் ! என்றார் கருணாநிதி. அப்படியே ஆகட்டும் என்று தேவதை தன் கரம் நீட்டி ஆசீர்வதிக்க, தமிழகம் சொர்க்க பூமியானது.
இதே வரத்தையே கர்நாடகத்துக்கும் கிருஷ்ணா கேட்க, தேவதையின் ஆசீர்வாதத்தில் கர்நாடகமும் சுபிட்சம் பெற்றது.
மீதமிருந்தது ஒரே வரம். இருவருக்கும் பொதுவான ஒன்றைக் கேட்கலாம் என்று முடிவு செய்தார்கள் இரண்டு முதல்வர்களும். இது வரமல்ல... ஒரு கேள்விதான். பதில் மட்டும் சொன்னால் போதும் என்ற முன்னுரையோடு முதல்வர்கள் கேட்டார்கள் - நடிகர் ராஜ்குமாரை சந்தனக் கடத்தல் வீரப்பன் எப்போது விடுதலை செய்வான் ?
திடுக்கிட்ட தேவதை கொஞ்ச நேரம் திருதிருவென்று முழித்துவிட்டு பின்பு, ஸாரி சொல்லி பழையபடியே விளக்காக மாறிப்போனது.

என் சம்பளம் முழுசும் டாக்டருக்கே போகுது...
அடப் பாவமே ! ஏன் அப்படி ?
என் மனைவி டாக்டராச்சே...

எதுக்கு குடத்தை எடுத்துட்டு வந்திருக்கீங்க...?
நீங்கதானே டாக்டர் சொன்னீங்க. ஒரு மாசம் ஊர்ல இருக்கமாட்டேன். வந்து மருந்து வாங்கிட்டுப் போங்க-ன்னு ...

நீங்களே கஷ்டத்துல இருக்கீங்க. எதுக்கு கல்யாணம் வேற பண்ணிக்கிறீங்க...?
கஷ்டத்தோட கஷ்டமா இருக்கட்டுமேன்னுதான்...

யோவ்... ஸ்டாப்பிங்ல ஏறாம ஏன்யா ஓடற பஸ்ஸில வந்து ஏறுறே...?
நான் ஃபைனான்ஸ் கம்பெனிக்கு இன்டர்வியூக்காக போறேன் சார்...

நேத்து ராத்திரி நம்ப ஏரியால பத்துக் கொள்ளை, அம்பது திருட்டு, நூத்துக் கணக்கிலே வழிப்பறி நடந்திருக்கு சார் !
அப்ப ஸ்டேஷன்ல மாமூல் கலெக்ஷனுக்கு ஒரு கேஷ் கௌண்டர் ஓப்பன் பண்ணிடு !

இங்க பாருங்க டாக்டர்... உங்களால முடியும்னா சொல்லுங்க... இல்லாட்டி என் மாமியாரை ஏதாவது நரபலி சாமியார்கிட்ட கூட்டிட்டுப் போறேன்... என்ன சொல்றீங்க ?

மேட்ச் பார்க்கலாம்னு நான் ஒரு நாள் லீவு போட்டேன் சார் !
இந்தியா ஆடறதுன்னு தெரிஞ்சு நான் ஒரே ஒரு மணிநேரம் பர்மிஷன்தான் போட்டேன், ஃபுல்லா பார்த்தேன் !

நீங்க ஸ்கோரர்னு சொல்றீங்க... கைல பேனாவே இல்லாம எப்படி ஸ்கோர் எழுதுவீங்க?
நீங்க வேற... இந்தியா அடிக்கற ஸ்கோருக்கு விரலால எண்ணினாலே போதும் சார். பேனா எல்லாம் எதுக்கு வேஸ்ட்டா ? !

டாக்டர் ! இந்தக் கையை இறக்கவே முடியலே !
ஏன்... உங்க தொழில் என்ன ?
இந்தியா ஆடற மேடச்லயெல்லாம் அம்பயரா இருக்கேன் டாக்டர் !

எங்க பாங்க் கிரிக்கெட் டீம்ல எனக்கு ஓபனிங் பண்ண சான்ஸ் கிடைச்சது !
அவ்வளவுதானே... கிரிக்கெட் ஆடினதால எனக்கு பாங்க்கே ஓபன் பண்ண சான்ஸ் வந்திருக்கு !

ரெண்டு அம்பயருக்கும் இடையில என்ன சண்டை ?
ஆளுக்கு அஞ்சு அவுட் கொடுக்கணும்னு ஃபிக்ஸ் பண்ணிக்கிட்டாங்களாம், ஆனா, இவரு ஆறு அவுட் கொடுத்துட்டாராம் !

உங்களை ஒரு வருஷம் மேட்சே ஆடக்கூடாதுனு தீர்ப்பு கொடுத்திருக்காங்க... ஆனாலும் ஜாலியா இருக்கீங்களே ?

ஒரு வருஷம் மேட்ச் ஆடாம இருந்தா ஒரு கோடி ரூபா தர்றதா நேத்துதான் ஒரு புக்கி ப்ராமிஸ் பண்ணாரு !

யோவ் ! யாருய்யா ஆபரேஷன் தியேட்டர் வாசல்லே சூஸைட் பாயிண்ட்-னு எழுதி வெச்சது ?

டாக்டர், மாடி மேல க்ளினிக் வெச்சிருக்கீங்களே ?
அதனாலே என்ன ?
மேலே போகும் வழி-னு போர்டு வேற வெச்சிருக்கீங்களே... பேஷண்ட்ஸ் எப்படி வருவாங்க ?

என்னப்பா ! நேத்து சாப்பிட்ட காபி மாதிரியே இருக்கு.. .?
ஆமாங்க ! அதோட ஜெராக்ஸ் காபிதாங்க இது...

படம் ரொம்ப செக்ஸியா இருக்கா ?
ஆமாம்... தியேட்டர்ல ஸ்கிரீனுக்குகூட துணி இல்லை !

பக்கத்து வீட்டு ஜிம்மி என் விரலை கடிச்சுடுச்சு டாக்டர்...
ஐயையோ... வாங்க உடனே ஊசி போட்டுடறேன்...
அதெல்லாம் வேண்டாம் டாக்டர்... ஜிம்மிங்கறது குழந்தையோட பேரு !

ஏன்தான் ஒரு சர்ஜனை கல்யாணம் பண்ணிக்கிட்டோம்னு இருக்கு !
ஏன் ?
ஃபிரிஜ்ஜிலிருந்து ஐஸ்-கட்டி எடுக்க சொன்னாகூட, அதை ஆபரேட் பண்ணித்தான் எடுப்போங்கறாரு !
நன்றி ஆனந்த விகடன் 19-11-2000
மேட்ச் பார்க்க இப்படி முண்டியடிக்கிறாங்களே, ஏன் ?
இந்தியா ஃபாஸ்ட் பேட்டிங்காம். டிக்கெட் வாங்கிட்டு உள்ளே போறதுக்குள்ளே மேட்ச் முடிஞ்சிடக்கூடாதுன்னுதான் !

பேட்ஸ்மேனுங்க ஒவ்வொருத்தரும் கிரவுண்டுக்குள்ளே வந்து டிரெஸ் மாத்துறாங்களே, ஏன் ?
அடுத்தடுத்த பந்துல பேட்ஸ் மேனுங்க அவுட்டாயிட்டு வர்றதால ரூம்ல டிரெஸ் மாத்த நேரமே கிடைக்கலையாம் !

இந்திய டீம்னா மத்த நாடுகளுக்கு ரொம்ப இளக்காரமாப் போச்சு !
என்ன சொல்றே ?
இந்தியாவோட ஆடுற மேட்ச்சுகளுக்கு அவங்கவங்க டீம்லயிருந்து மொத்தம் நாலு பேரை மட்டும் செலக்ட் பண்ணி அனுப்பியிருக்காங்க !

நம்ம அணியை ஊக்குவிக்கணும்-னு ஸ்பான்சர்ஸ் முடிவு பண்ணியிருக்காங்களாம் !
எப்படி ?
சிங்கிள் ரன் அடிச்சா அஞ்சாயிரமும் டபுள் ரன் அடிச்சா பத்தாயிரமும் தரப் போறாங்களாம் !

திரும்பத் திரும்ப என் வீட்ல திருடு போகுது சார் !
அப்ப திரும்பாம ஒரே பக்கமா இருந்துட வேண்டியதுதானே !

சமயத்தில் இவர் சொற்பொழிவு ஆற்றுவார்.
என்ன சொற்பொழிவு ?
சமயச் சொற்பொழிவு

நான் சிகரெட் குடிச்சிட்டு இருந்ததை எங்கப்பா பார்த்துட்டாரு ?
ஐயையோ, அப்புறம் ?
தண்ணி போட்டுட்டு வந்து அடி பின்னிட்டாரு.

போயும் போயும் அவரைப் போய் காதலிச்சேனேன்னு ரொம்ப வருத்தமா இருக்கு !
எதனால ?
வா கல்யாணம் பண்ணிக்கலாம்னு சொல்றாரே ..!

ஐயா இல்லீங்களா...? தீபாவளி இனாம் வேணும் !

ஐயாவும் தீபாவளி இனாம் வாங்கத்தான் அடுத்த தெருவுக்குப் போயிருக்காரு !

டாண்ணு 9 மணியானா - ஆபீஸ் போலாம்னா முடியவே மாட்டேங்குது.
ஏன் ?
வேலை கிடைச்சாதானே !

அந்த டைரக்டர் இதுக்கு முன்னால பஸ் கண்டக்டரா இருந்திருப்பார் போலருக்கு ?
எப்படி சொல்றே ?
கட், கட்னு சொல்லாம ஸ்டாப், ஸ்டாப்-ங்கறாரே !

அந்த ரௌடி என்னை அடிச்சுட்டான் சார் !
பிடிச்சு ஜெயில்ல போட வேண்டியதுதானே ?
அவன் என்னை அடிச்சதே ஜெயில்லதான் சார் !

இவ்வளவு ஸ்வீட்டா பேசுறாரே... யாருடி அவர் ?
அவர்தான் என்னோட சீனி-யர் மானேஜர் !

கட்சிக்காகத் தினம் இருபத்து நான்கு மணி நேரம் உழைக்கிறேன் தெரியுமா ?
வேண்டாம் தலைவரே... லேபர் ஆபீசிலிருந்து எதாவது பிரச்சினை வரப் போகிறது !

சர்தார் வல்லபாய் பட்டேல் தண்ணீர் பக்கமே போகமாட்டார். ஏன் ?
ஏன் ?
அவர்தான் இரும்பு மனிதராச்சே. தண்ணீர்கிட்ட போனால் துருப்பிடிச்சிடுவாருல்ல !

நேத்திக்கு எதுவரைக்கும் பாடம் நடத்தினேன் ? என்று டீச்சர் கேட்டதுக்குப் பையன் என்ன பதில் சொன்னான் தெரியுமா ?
என்ன சொன்னான் ?
பெல் அடிக்கிற வரைக்கும் !

மூக்குல ஏன் சளி பிடிக்குது ?
ஏன் ?
மூக்குக்கு மேல ஐஸ் இருக்கு !

நான்கு பெண்கள் கை காட்டிய உடன் பஸ் நின்று விடுகிறது. ஏன் ?
ஏன் ?
அதனால உட்கார முடியாது !

லட்சியம் நிறைவேறிட்டா அரசியல்லேர்ந்து விலகிடுவேன்னு தலைவர் சொல்றாரே... என்ன லட்சியம் ?
குரோர்பதி-யில கோடி ரூபாய் வாங்குறதுதானாம் !

நான் ஒருத்தன் இல்லேன்னா இந்தக் கட்சி அடுத்த நிமிஷமே இல்லாமப் போயிடும்-ன்னு பேசிட்டுப் போறாரே...
அவர் என்ன அவ்வளவு பெரிய ஆளா ?
அட நீங்க வேற... அவர் தொடங்கின கட்சியில் அவர் மட்டுந்தான் இருக்கார். அதைத்தான் அப்படிச் சொல்லிட்டுப் போறார் !

என்ன இது... என்னை வரவேற்க ஒரு தொண்டர்கூட வரலையா ?
தலைவரை வரவேற்க ஸ்டேஷனுக்கு வாங்கன்னு மொட்டையா சொன்னது தப்பா போச்சு ! எல்லோரும் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ட்டாங்க போல இருக்கு !

அவரு காது டாக்டர் சார்... அவர்கிட்டே போய் ஏன் உங்க கண் ப்ராப்ளத்தைச் சொல்றீங்க ?
கண்ணாடி போட்டா என்னோட காதுல சரியா நிற்கமாட்டேங்குது... அதான் !

விண்வெளியில் வீடு கட்டிக் குடியேற விஞ்ஞானிகள் முயற்சி !
-செய்தி.அவ பெரிய இடத்து மாப்பிள்ளை பார்த்திருக்கிறதா அலட்டிக்கிறாளே... எப்படி ?

மாப்பிள்ளை விண்வெளியில குடியிருக்கிறவராம் !

உன்னைப் போலீஸ் ரெண்டு வருஷமா தேடிக்கிட்டிருக்கே... எங்கே தலைமறைவாயிருந்தே ?
விண்வெளியில ஒரு வீட்ல பதுங்கியிருந்தேன் !

என்னய்யா... வாடகைக்கு வீடு கேட்டா, விலைக்கு வீடு சொல்றே ?
நான் சொல்ற வீடு விண்வெளியில இருக்கு சார்.. .!

ஒரு வருஷமா ஏண்டி போன் பண்ணலை ?
என் கணவருக்கு விண்வெளிக்கு மாற்றலானதால அங்கேயே குடியேறிட்டோம் !

உன் அம்மாவைக் குணப்படுத்த பயங்கர செலவாயிடுச்சா... ஏன் ?
டாக்டரை விண்வெளியிலயிருந்துல்ல வரவழைச்சோம் !

அந்த அரசியல்வாதியை ஏன் கைது பண்றாங்க ?
விண்வெளியில அனுமதியில்லாம நிறைய பங்களா கட்டிட்டாராம் !

செக்ஸ் தொழிலாளிகள் கோரிக்கை தொடர்பா அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையால் ஏதோ பெரிய பிரச்சினையாயிடுச்சாமே ?
ஆமா ! பலகட்டப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணப்படும்னு சொன்னது பத்திரிகையில் பலகட்டில் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணப்படும்னு அச்சாயிடுச்சாம் !

ஏன் உங்க தாத்தா டாக்டர்கிட்ட போறாரு ?
அவர் கனவுல ஜோதிகா, தேவயானியெல்லாம் வராம, தேவையில்லாம கமல், ரஜினியெல்லாம் வர்றாங்களாம் !
நன்றி இதயம் பேசுகிறது 26-11-2000
போலி டாக்டரா.. .! அந்த ஆள் போலி டாக்டர்னு எப்படி சொல்றீங்க...?
பின்ன ! என் உடம்பில ப்ரவுன் சுகர் இருக்குன்னு சொல்றாரே...

என்னோட சோப்பை எதுக்கு நாய்க்குப் போட்டு குளிப்பாட்றே ?
உங்களுக்கு என்ன தொற்று நோயா இருக்கு... நாய்க்குப் பரவிடும்ங்கிற மாதிரில்ல பயப்படறீங்க ?

முதலிரவுல எப்படி நடக்கணும்னு உங்கம்மா சொல்லிக் கொடுத்தாங்களா ?
அத்தான் நடைப்பயிற்சி எதுக்கு. படுத்துக்கத்தானே போறோம் ?

இங்கே ஸ்டெனோ வேலைக்கு அப்ளிகேஷன் போட்ட எத்தனையோ பேர்ல உன்னை மட்டும் நான் செலக்ட் பண்ணிய காரணம் என்ன தெரியுமா ?
சொல்லுங்க டியர்.

இந்தாளு அப்பா அம்மா மேல உயிரையே வச்சிருக்காரு.
இந்தக் காலத்துல இப்படி ஒருத்தர் இருக்காரா ?
ஆமா... பொண்டாட்டி இவர போட்டு அடிக்கும்போது அப்பா. அம்மான்னுதான் கத்துவாரு.

போன தடவை சென்ஸஸ் எடுக்க நான் வந்தபோது வயது 20-ன்னு சொன்னீங்க. இப்ப 16-ங்குறீங்களே !
முன்னே நான் எக்ஸ்ட்ரா நடிகை. இப்ப கதாநாயகியாச்சே !

அந்த ஒரு விஷயத்தை தவிர வேற எது வேணும்னாலும் சொல்லுங்க, செய்யறேன்.
பேச்சு மாறமாட்டியே டார்லிங் ?
கண்டிப்பா மாறமாட்டேன்.. . கேளுங்க.. .
ஒரு 100 ரூபாய் கைமாத்து வேணும் டியர் ?
அந்த ஒரு விஷயம்னு நான் சொன்னது இதைத்தான் ரமேஷ் !

பணம் வந்தா கூடவே கஷ்டமும் வந்துடும்.
நான் வரதட்சனை வாங்கி, உன்னைக் கல்யாணம் பண்ணிக் கிட்டதைத்தானே சொல்றே !

உங்க அப்பாவுக்கு ஆபரேஷன் பண்ணப் போறேன். உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தா கேளுங்க...
பாடியை எப்ப டாக்டர் கொடுப்பீங்க.. .

ஓட்டல் முதலாளிக்கு ஏண்டி ஜோக் எழுதி அனுப்பறே ?
பேப்பர் ரோஸ்ட்டில் என் ஜோக்கு-களை போடுவாரா என்ற நப்பாசையில் தான்.

குருவே ! பெண்ணாசை அறவே ஒழிய வேண்டும்.
பிறகு எதற்கு இந்த ஆசிரமம் வந்தாய் சிஷ்யா ?

பட்டப்பகல்ல ஏன் திருடுனே ?
தொழில்-னு வந்ததுக்கப்புறம் ராத்திரி, பகல்-னு பார்க்க முடியுமா எஜமான் ? நம்ம சர்வீஸ் 24 மணி நேரமும் இருக்கும்.

சர்வர், காபில எறும்பு இருக்கு.
அவ்வளவுதானே. என்னவோ உடும்பு இருக்கிற மாதிரி பதர்றீங்களே ?
நன்றி குங்குமம் 1-12-2000
அந்த டாக்டர் என்ன... தேங்காய் வியாபாரியோட மகனா ..?
ஏன் கேட்கறீங்க.. .?
வியாதி முத்திப்போச்சான்னு பார்க்கறதுக்கு பேஷண்ட்டைத் தூக்கிக் குலுக்கி தட்டிப் பார்க்கறாரே.. .!

இந்த ஆபரேஷன் சக்ஸஸ் ஆகலைனா வருத்தப்படும் முதல் ஆள் நான்தான்...
ஏன் டாக்டர்.. .?
பின்னே... நீங்க இருக்கமாட்டீங்களே... நான் மட்டும்தானே வருத்தப்பட்டு ஆகணும் !

என்ன டாக்டர் .. காதுல ஆபரேஷன் பண்ணச் சொன்னா கண்ல பண்ணிட்டீங்க.. .?
தெரியாம பண்ணிட்டேன்...
அதையேதான் டாக்டர் நானும் சொல்றேன்.. .

எக்ஸ்ரேல ஒண்ணும் இல்லை...
வெறும் வயித்துல எடுத்த எக்ஸ்ரே டாக்டர்.. .!

எதுக்கு டாக்டர், என் உடம்பிலிருந்து தேவையில்லாம ஒரு லிட்டர் ரத்தம் எடுத்திருக்கீங்க.. .?
சிகிச்சை முடிஞ்சு ஒழுங்கா ஃபீஸ் கட்டிட்டா, எடுத்த ரத்தத்தை திரும்ப உங்களுக்கே செலுத்திடுவோம்.. .!

இன்னும் ஒரு மணி நேரத்துல டாக்டர் உங்களுக்கு ஆபரேஷன் பண்ணப்போறார்...
ஏதாவது சாப்பிடலாங்களா ?
கடைசியா ஒரு முறை என்ன வேணாலும் சாப்பிட்டுக்குங்க.. .!

நெட் ஜோக்
முகம் இருண்டு படுசோகமாக வந்த தனது கல்லூரி நண்பனை விசாரித்தான் அவன் - மச்சான்.. .
என்னாச்சு உனக்கு ?
கம்ப்யூட்டர் வாங்கணும். .. கொஞ்சம் பணம் அனுப்புங்க-னு வீட்டுக்கு லெட்டர் போட்டிருந்தேன்.
புரிஞ்சிடுச்சு, இப்ப பணம் அனுப்ப முடியாது-னு பதில் வந்திருக்கு அதானே மேட்டர் ?
அதில்லை கம்ப்யூட்டரை வாங்கி அனுப்பியிருக்காங்க !

அவர் பயங்கர குடிகாரர்...
இருக்கட்டும்... அதுக்காக கை பம்புல தண்ணி அடிக்கிறப்பகூட ஊறுகாயைத் தொட்டுக்கணுமா ? !

எங்க வீட்ல மாமியார் - மருமகள் சண்டைகூட டி.வி. சீரியல் மாதிரி ஆயிடுச்சு...
எப்படி ?
ஒவ்வொரு நாளும் சண்டையை ஆரம்பிக்கறதுக்கு முன்னாடி முதல்நாள் சண்டைலேர்ந்து கொஞ்சம் போட்டுக் காட்டுவாங்க !

சமையலுக்குப் புதுசா ஒரு கண்டக்டரைப் போய் வெச்சிருக்கீங்களே... எதுக்கு ?

குக்கர் சரியா விசில் அடிக்கமாட்டேங்குது சார்... அதான் !

ரசத்துல நான் புளியே போட மறந்துட்டேன்... எப்படி அப்படியே சாப்பிடறீங்க ?
நீ சமையல் பண்ண ஆரம்பிச்சபோதே எனக்கு வயித்துல புளியைக் கரைக்க ஆரம்பிச்சிடிச்சு !

என்னங்க... திருடன்பாட்டுக்கு நம்ம வீட்ல புகுந்து திருடிட்டிருக்கான். நீங்க ஏதோ எழுதிட்டிருக்கீங்க.. .?
சும்மா இருடி... நாளைக்கு போலீஸ் வந்து என்னென்ன பொருள் காணாமப் போச்சுன்னு கேட்டா, கரெக்டா சொல்ல வேணாமா ?

எல்லா அலுவலகக் கதவுலேயும் தள்ளு-னு போட்டிருக்கும். இந்த அலுவலகக் கதவுலே தள்ளாதீர்கள்-னு போட்டிருக்கே... ஏன் ?
இது லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம் !

பெண் பார்க்க ஆரம்பிச்சு என் கணவர் பார்த்த 52-வது பொண்ணு நான் !
பாவம்.. .! 51 தடவை லக்கியா இருந்திருக்கார்.. .!

மாமூல் வாங்கியே இவர் பெரிய பணக்காரரா ஆயிட்டாரு !
கேடீஸ்வரன்-னு சொல்லுங்க.. .!
நன்றி ஆனந்த விகடன் 26-11-2000
பணம் எடுக்க வந்தவர் ஏன் கீழே விழுந்து விட்டார் ?
பேலன்ஸ் இல்லையாம்.

மின் வெட்டினாலே நேத்து மெகா சீரியல் பார்க்க முடியாம போச்சு.
அட... மின்சார வாரியம் இப்படி கூட சேவை செய்யுது.. .?

ஏன் அவர் வால்வே மாயம் என்று பாடுகிறார் ?
செயற்கை இருதய வால்வு பொருத்தி இருக்கிறாராம்.

சட்டை பட்டன் பிஞ்சிருக்கே... தைக்கக் கூடாதா ?
சாரிங்க... அசட்டையா இருந்துட்டேன்.

என் கிட்டே வந்து முணுக் முணுக்-னு அடிக்கடி சொல்றியே... ஏன் ?
முணுக்குன்னா உங்களுக்குக் கோபம் வரும்னீங்களே, அதான்... செக் பண்றேன் !

எதுக்கு நீங்க தினமும் இப்படிக் குடிக்கிறீங்க.. .?
மறக்கறதுக்குத்தான்...
எதை ?
எனக்கு குடிப்பழக்கம் இருக்குற விஷயத்தை...

எங்கம்மா தலைவலின்னு டாக்டரைப் பார்க்க கிளம்பினா கூடவே என் மனைவியும் உடம்புவலின்னு கிளம்பிடுவா...
மாமியாருக்கும் மருமகளுக்கும் ஆரோக்யமான போட்டி-ன்னு சொல்லு !

எந்த பிரச்சனை வந்தாலும் மாமியாரோட பேசி தீர்த்துக்க வேண்டியதுதானே.. .?
நீ வேற ! என் மாமியாரோட பேசறதாலே தானே பிரச்சனையே வருது.. .!

டான்ஸ் மாஸ்டரைக் கட்டிகிட்டது தப்பாப் போச்சா... ஏன் ?
ஆட்டி வைக்கிறார்டீ...

நம்ம தலைவர் பேசத் தெரியாம பேசி மாட்டிக்கிட்டாராமே ?
அந்தத் தலைவர் ஆட்சி அமைப்போம் என்று சொல்லிட்டிருந்தவர் வாய் தவறி ஆங்கிலேயர் ஆட்சி அமைப்போம்னு பேசிட்டார்.

என்னோட முறைமாமன் ஒரு காலத்துல பயங்கர ரௌடியா இருந்தவரு...
அப்ப, வன்முறை மாமன்னு சொல்லு

ஆபரேஷன் பண்றவரைக்கும் ஒரு சொட்டுத் தண்ணீர்கூடக் குடிக்கக் கூடாதுன்னு டாக்டர் சொல்லிட்டார் !
சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கச் சொல்றாரா...?

தலைவர் ஏன் தேவையில்லாம காலிங்பெல்லை அடிச்சுட்டு வந்து சாப்பிடறாரு ?
மணியடிச்சா சோறுன்னு பழகிட்டா பின்னாடி ஜெயிலுக்குப் போனா அதே மாதிரி பழக்கத்துக்கு வந்துடுமாம்.

எங்க தலைவர் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷம் !
அதான் ஜெயில்லே பூட்டி வச்சு பாதுகாக்கப் போறாங்களாம் !

தலைவருக்குத் தேர்தல் பற்றி விழிப்புணர்ச்சியே இல்லைன்னு எப்படிச் சொல்றீங்க?
ஓட்டுகளைப் பிரிக்கணும்-னு சொன்னா, தனக்குக் கூரையேறிய அனுபவம் நிறைய உண்டுங்கறாரே !

தலைவர், மேடைல பேசும்போது கூடவே ஒரு அதிகாரி வர்றாரே !
சென்சார் அதிகாரியாம். அவர் எதிர்க்கட்சியினரைத் தாக்கி கெட்ட வார்த்தை பேசும்போது கட் பண்ணிடுவாராம் மைக்கை.

அந்த நோயாளி உங்களைப் பார்த்து ரொம்பப் பயப்படுகிறார், டாக்டர்.
இப்போ அப்படித்தான் பயப்படுவாங்க. அப்புறம் ஆவியா வந்து பயமுறுத்துவாங்க.
நன்றி குமுதம் 7-12-2000
உன் கல்யாணப் பத்திரிகையை உன் காதலன்கிட்டே கொடுத்தபோது அவரோட ரியாக்ஷன் எப்படி இருந்துச்சு ?
பதிலுக்கு, அவரோட கல்யாணப் பத்திரிகையை என்கிட்டே கொடுத்து சரி பண்ணிட்டார் !

குடிநீர் சப்ளை செய்யும் லாரி ஓனருக்கு அடுத்த மாசம் கல்யாணம் !
பொண்ணு யாரு ?
பால் வியாபாரியோட மகள்தான்.

டியர், நீ எனக்கு சித்தி மாதிரி.
அய்யய்யோ... சதீஷ் என்ன சொல்றீங்க ?
உன்னை தினம் பார்க்காம என்னால இருக்கவே முடியலை...

குருவே ! சித்தி அடைய ஒரு வழி சொல்லுங்கள் குருவே !
சித்தாப்பாவுக்கே துரோகம் செய்ய நினைக்கிறாயே, நீ உருப்படுவியா...?

இந்த ஆண்டும் எல்லா நாட்டு மல்லர்களின் மல்யுத்தப் போட்டியை நமது அரண்மனையில் நடத்த ஏற்பாடு செய்யவா ?
வேண்டாமய்யா, வேண்டவே வேண்டாம் ! போன ஆண்டு நடத்தியபோதே மூன்று ராணிகளை அந்தப்புரத்திலிருந்து காணோம் !

5-ம் வார்டு பேஷண்ட் பீஸ் செட்டில் பண்ணாம ஓடிட்டாரு...
அப்படியா ? அங்கே ரூட்டி பார்த்த நர்ஸை கூப்பிடுங்க.
அந்த நர்ஸோடதான் ஓடிப்போய்ட்டாரு.

நர்ஸ், இந்த மருந்தை சாப்பிட்டேன். ஒரு கிஸ் குடுங்க.
எதுக்கு ?
கசப்பான மருந்தை சாப்பிட்டதும் டாக்டர்தான் இனிப்பா ஏதாவது சேர்த்துக்குங்கன்னார்.

கல்யாணங்களை நம்பித்தான் நான் கடையை ஆரம்பிச்சிருக்கேன்...
அப்படி என்ன கடை ?
செருப்புக் கடைதான் !

ஏண்டா பேங்கில் கொள்ளையடிச்சே ?
பொதுச் சொத்துக்களை நம் சொந்தச் சொத்து போலப் பாதுகாக்கணும்னு நெனச்சித்தான் !

மாப்ளே, எம் பொண்ணை கிளி மாதிரி வளர்த்துட்டேன். அவளை பத்திரமா பார்த்துக்கோங்க.
கவலைப்படாதீங்க மாமா. வீட்ல அடைச்சி வச்சேன்னா கதவைத் திறந்தே விடமாட்டேன்.

டாக்டர் ! யாரைப் பார்த்தாலும் ஒரே கோபமா வருது...
இதுக்குப் போய் ஏன்யா என்னைப் பார்க்க வந்த. எழுந்து வெளியே போய்யா...

இவ்வளவு சொத்து சேர்த்து வச்சிருக்காரே உங்க தாத்தா. அவர் என்ன அமைச்சராவா இருந்தார் ?
ஊகூம், பிரபல கிரிக்கெட் பிளேயரா இருந்தார் !

தூங்கும் போது கூட உங்க கிளினிக்கு வர்ற மாதிரி கனவு வருது டாக்டர்...
அப்போதாவது பீஸ் கொடுத்தீங்களா...?
குடுக்கத்தான் வந்தேன்... உடனே முழிப்பு வந்திடுச்சு...!

நம்ம மகளை பெண் பார்க்க வந்திருக்காங்க, இந்த சமயத்துலகூட என்னை மதிக்காமல் கேவலப்படுத்தறியே...?
காரணமாத்தான்யா... அப்பத்தான் நாளைக்கு நம்ப பொண்ணு மாப்பிள்ளையைக் கேவலப்படுத்தினாக்கூட அவர் பெரிசா எடுத்துக்கமாட்டார் !
நன்றி குங்குமம் 8-12-2000
நம்ம லட்சுமிபதி பேரை மாத்திக்கிட்டானாம் !
என்னன்னு...?
குரோர்பதி-னு !

நீ வீட்ல வெப்சைட் வெச்சிருக்கியா...?
இல்லடா... பக்கத்து வீட்டுலதான் ஒரு சைட் வெச்சிருக்கேன் !

வர்ற பத்தாம் தேதி சிறைநிரப்பும் போராட்டம் நடத்தச் சொல்லி நம்ம தலைவர் உத்தரவு போட்டிருக்கார்...!
என்ன பண்ணணுமாம்...?
அன்னிக்கு மட்டும் போலீஸ்ல மாட்டறவரைக்கும் பிக்பாக்கெட் அடிச்சுக்கிட்டே இருக்கணுமாம் !

உங்க தலைவர் சொந்தமா ஒரு ஜெயில் கட்டுறாராமே...?
ஆமா... ஆட்சிக்கு வந்ததும் உங்க தலைவரைப் புடிச்சு அதுல போடுறதுக்குத்தான் !

சார், அந்த எக்ஸ் மினிஸ்டர் கைதியை ஒரே ஜெயில்ல ஒரு வருஷம் வெச்சது தப்பாப் போச்சு...!
என்னாச்சுய்யா...?
அந்த ஜெயிலை பிளாட் போட்டு வித்துக்கிட்டு இருக்காராம் !

டாக்டர்... எங்க மாமியார் கால்ல முள்குத்திடுச்சு...
முள்ளை எடுக்கணுமா ?
முள்ளு ரொம்ப சின்னது... எடுக்கறது கஷ்டம்... காலை எடுத்துடுங்க...

வர வர எனக்குக் கண்ணே தெரியமாட்டேங்குது !
பின்ன... அன்னிக்கு நான் தூரத்துல போயிட்டிருக்கும்போது கரெக்டா என்னைக் கூப்பிட்டீங்களே, எப்படி ?
போகும்போதுதானே ? ! எனக்கு வரவரதானே கண்ணு தெரியலேனு சொன்னேன் !

நான் என் பெண்டாட்டி கழுத்துல தாலிகட்டின உடனே என் வாழ்க்கையே தலை கீழா மாறிப்போச்சு !
நிஜமாவா ?
ஆமாம் ! முதலிரவு அன்னிக்கு நான்தான் பால் காய்ச்சி சொம்புல எடுத்துட்டுப் போனேன்னா பாத்துக்குங்க !

முதல் பக்கத் தலைப்புச் செய்தி என்ன போட்டிருக்குது சார் ?
சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கு விமானம் பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்ததாம் !

நெட் ஜோக்

அந்தப் பெண் ஆழ்ந்த துயரத்தில் இருந்தாள். அன்று காலையில்தான் அவள் கணவன் செத்துப்போயிருந்தான். தனது செல்லப் பிராணியான கழுதையால் உதைப்பட்டு அவன் சாவான் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை.

எதற்கெடுத்தாலும் எரிந்துவிழும், எல்லாவற்றையும் குறை சொல்லும், கண்டதற்கெல்லாம் கை ஓங்கும் கணவன்தான் என்றாலும் அவனது இழப்பு அவளை ரொம்பவே பாதித்தது.
ஆச்சு... அடுத்த சில விநாடிகளில் மண்ணுக்குள் அவன் அடக்கமாகப் போகிறான். அந்தச் சோக நிமிடங்களில் ஆறுதல் சொல்ல வந்த ஒவ்வொருவரிடமும் அவள் தலையாட்டிக் கொண்டிருந்ததையே கவனித்துக் கொண்டிருந்தார் ஒருவர். ஆறுதல் சொல்ல வந்த ஆண்களிடம் அவள் சரி என்பது போலவும் பெண்களிடத்தில் இல்லை என்பது போலவும் அவள் தலையாட்டியது அவரை ரொம்பவே குழப்பியது. துக்கம் விசாரிப்பதில்கூட ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் இருக்குமா என்ன ? அவளிடமே நேரில் போய்க் கேட்டார்.
அவள் சொன்னாள்... மனசு கலங்காதே என்றார்கள் ஆண்கள். அந்தக் கழுதை விலைக்குக் கிடைக்குமா.. ? என்று கேட்டார்கள் பெண்கள் !

அவரு சரியான குடிகாரரா இருக்காரு...
எப்படிச் சொல்றே ?
டாக்டர் கொடுத்த டானிக்கைகூட சோடா கலந்துதான் சாப்பிடறாரு !

ஐயா... ஒரு மாசமா இந்த நர்ஸ் உங்களுக்கு சேவை பண்ணியிருக்கலாம். அதுக்காக டிஸ்சார்ஜ் ஆகிறப்ப நர்ஸைக் கட்டிப்பிடிச்சு அழறதுக்கெல்லாம் அனுமதிக்க முடியாது !

நேத்து மூக்குப்பிடிக்க சாப்பிட்டிங்களே... அதே சாம்பார்தான் இன்னிக்கும்...!
சரி...! இன்னிக்கு மூக்கைப் பிடிச்சுட்டு சாப்பிடறேன் !

நான் என் மாமியார் எதிரே வாயையே திறக்கமாட்டேன்...
அவ்வளவு மரியாதையா ?
நீ வேற... அவங்களுக்கு சுத்தமா காது கேட்காது. எதுக்குப் பேசி வீணா நம்ம எனர்ஜியை வேஸ்ட் பண்ணணும்னுதான் !

என்னய்யா இது... நம்ம தலைவர் ஒரேயடியா எதிர்க்கட்சியையே புகழ்ந்து பேசுறார்?
என்ன பண்றது... கூட்டத்துல இருக்குறது முக்கால்வாசிப் பேர் எதிர்க்கட்சிக்காரங்க...!

அந்தப் புதுமுக நடிகை, கையில் பரீட்சை பேடு எடுத்துக்கிட்டு வந்து இருக்காங்களே... ஏன் ?
அதுவா... இன்னிக்கு மேக்கப் டெஸ்ட்ன்னு சொன்னதைத் தப்பாப் புரிஞ்சுகிட்டாங்கன்னு நினைக்கிறேன்...

ஞாயிற்றுக்கிழமை லீவு நாள்னா என் கணவர் சோம்பேறி ஆயிடுவாரு.
ஏன் ?
மத்த நாள்லாம் ஆபீஸ் போகணும்னு சொல்லி சீக்கிரம் வீட்டு வேலையெல்லாம் முடிச்சுடுவாரு !

இந்த மளிகைக்கடை லிஸ்ட்டை டாக்டரான உங்க கணவர் எழுதினாரா ?
ஆமாம். எப்படிக் கண்டு பிடிச்சீங்க ?
சோப்பு 3-ன்னு எழுதறதுக்கு பதிலா சோப்பு 1-1-1-ன்னு எழுதியிருக்காரே !

அதோ போறாரே... அவரு கிராமத்தில் எங்கியோ ஒரு ஏழை வீட்ல பொறந்தாரு. ஆனா, இன்னிக்குப் பாருங்க... ஒரு ஃபைவ் ஸ்டார் ஓட்டல் கட்டற அளவுக்கு வந்திருக்கார்.
அந்த அளவுக்குப் பணம் எப்படிச் சம்பாதிச்சார் ?
கொத்தனார் வேலை செய்ய பணம் எதுக்கு சம்பாதிக்கணும் ?

இந்த தடவை எங்க வீட்டுக்கு டெலிபோன் பில் ஒரு லட்ச ரூபாய் வந்திருக்கு...
ஏன் அப்படி ?
ரெண்டு மாசமா எங்க வீட்டுல டி.வி. ரிப்பேர்னு சொல்லி என் மனைவி அவங்க அக்கா வீட்டுக்கு போன் பண்ணி டி.வி. மெகா சீரியல் கதையைக் கேட்டுண்டா...

இன்டர்வியூ முடிஞ்சு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் டைப் பண்றதுக்குள்ளேயே அந்த ஆள் தூங்கிட்டார் சார்...
குட் ! அவருக்கு பிரமோஷன் ஆர்டரை உடனே டைப் பண்ணிடுங்க...!

வாய் கூசாம இருக்க ஏதாவது மருந்து இருக்கா டாக்டர்...?
எதுக்கு கேக்கறீங்க ?

நாளைக்கு கோர்ட்டுல போய் ஒரு பொய் சாட்சி சொல்ல வேண்டியிருக்கு...!
நன்றி ஆனந்த விகடன் 3-12-2000
நடிகை ராதிகாவுக்குப் பிடிச்ச தமிழ் மாதம் எது ?
சித்தி-ரை !

யோவ் சர்வர்... என்னய்யா இது... சாவியை வறுத்துக் கொண்டு வந்து தட்ல வெச்சிருக்கே ?
நீங்கதான் சார் கீ-ரோஸ்ட் வேணும்னு கேட்டீங்க !

விவாகரத்து வக்கீல் வரதராசன் வீட்டுக் கல்யாணத்துக்குப் போனது தப்பாப் போச்சி!
ஏன் - என்ன ஆச்சி ?
என்னோட ஒரு செருப்பை மட்டும் காணலை !

இது அரசியல்வாதியோட குழந்தைனு எப்படிச் சொல்றே ?
சோடா பாட்டிலில் பால் குடிக்குதே !

சினிமா, ட்ராமா - ரெண்டில் எது சுறுசுறுப்பாய் நகரும் ?
யோசித்து, சினிமா என்றோம்.
கரெக்ட்...
ஆனால் அது ஏன்-னு தெரியுமா ?
அது தெரியாது...
ஏன்னா - நாடகம் நடக்குது., படம் ஓடுது...

ஆனாலும் அந்த டாக்டருக்கு ரொம்பத்தாண்டி நக்கல்...!
ஏண்டி...?
பல்லைப் பிடுங்கறப்போ வலிச்சா, பல்லை நல்லா கடிச்சிக்குங்கன்னு சொல்றாரே...!

துறைமுகத்துல என்ன தகராறு...?
கம்ப்யூட்டர்காரங்களுக்கு டைடல் பார்க் தொறந்த மாதிரி, கப்பல்காரங்களுக்கும் டைட்டானிக் பார்க் தொறக்கணுமாம்...!

வேலைக்குப் போகும்போது ஏண்டி கூடவே ஒரு ரௌடியையும் கூட்டிக்கிட்டுப் போற...?
ராத்திரி தனியா வரும்போது போலீஸ் தொல்லை தாங்க முடியல...?

அந்தாளு ஏன் ரொம்பக் கோபமா இருக்காரு...?
அவரு எழுதின கோபத்தைக் குறைப்பது எப்படிங்கிற புத்தகம் விற்கவே இல்லையாம்...!

என்ன அந்த யூனிட்ல மட்டும் ஒரே சந்தன வாசமா வருது ?
அங்க வீரப்பன் படத்தோட ஷூட்டிங் நடக்குதாம்...!

என் சமையலைச் சாப்பிட்டு என் கணவர் குஷி ஆயிட்டாரு !
அப்புறம் என்னாச்சி !
கட்டிப்பிடி கட்டிப்பிடின்னு பாட ஆரம்பிச்சிட்டாரு !

பக்கத்து வீட்டு வேலைக்காரியிடம் பேசியது தப்பா போச்சு ?
ஏன் - என்னாச்சு ?
எங்க வீட்டு வேலைக்காரி என்னைத் தப்பா நினைச்சுட்டா !

என் மனைவியிடம், உனக்குப் புன்னகையே அழகா இருக்குன்னு சொன்னேன் !
அதுக்கென்ன ?
உடனே அதை வாங்கித் தாங்கன்னு அரிக்க ஆரம்பிச்சிட்டா...!

ஏண்டி, ஒரு பையன் கூடப் ஓடிப்போனே ?
நான் இந்தக் காலத்துக் கண்ணகிமா ! ஒருத்தன்கூடத்தான் ஓடுவேன் !

இந்த ஓட்டல்ல மகா அநியாயம் நடக்குது !

ஏன் - என்ன பண்ணினாங்க ?
கொத்து பரோட்டா சாப்பிட்டுட்டு பில் செட்டில் பண்ணும்போது, கொத்திய கூலின்னு மாஸ்டர் தனியா டிப்ஸ் கேக்கறாரு...!

கேடிகளை வச்சுப் பரிசுப் போட்டி டி.வி-ல நடத்தறாங்களா... என்ன பேரு ?
கேடீஸ்வரன் !

பல நோயாளிங்க தங்களுக்கு என்ன நோயின்னே சரியா புரிஞ்சிக்கிறதில்லை. டாக்டர்கிட்டே குழம்பி குழப்பி சொல்லுவாங்க. அதனால சிக்கலும் வரும், சிரிப்பும் வரும்.
ரொம்பக் குண்டா இருக்கிற ஒரு அம்மா எடை மிஷின்லே ஏறி நின்னுது. அட்டை வந்தது. தயவு செய்து கூட்டம், கூட்டமாக ஏறி நிற்காதீர்கள். சே இந்த மிஷின் ரொம்ப மோசம்னு அந்தம்மா சலிச்சிக் கிட்டாங்க.
இன்னொரு குண்டு மனிதர் கிளினிக்லே இருந்த எடை மிஷின்லே ஏறி நின்னுகிட்டு டாக்டர் என் எடை என்னன்னு கேட்டார்.
டாக்டர் என்ன சொன்னார் தெரியுமா ?
இனிமே உங்க எடையைப் பார்க்கத் தேவையில்லை. மிஷினோட எடையைத்தான் பார்க்கணும், காயலான் கடையிலே போடுறதுக்கு.
சில நோயாளிங்க டாக்டர் என்ன சொல்றாருங்கிறதை சரியாப் புரிஞ்சிக்கிறது இல்லை. ஒரு நோயாளியைப் பரிசோதனை செய்துக்கிட்டிருந்த டாக்டர், உங்களுக்கு புகையிலை போடுற பழக்கம் உண்டா ?ன்னு கேட்டார்.
உண்டுங்க என்னோட நாலு ஏக்கர் நிலத்துலேயும் புகையிலைதான் போட்டிருக்கேன்-னாரு நோயாளி. இப்போ டாக்டருக்குத் தலை சுத்திருச்சி.
ஒரு அம்மா டாக்டர் கிட்டே ஓடி வந்திச்சி. டாக்டர், நேற்று சாயந்தரம் எங்க வீட்டுக்காரர் உங்ககிட்டே வந்தாரே, என்ன அட்வைஸ் கொடுத்தீங்க ?
பதட்டப்படாதீங்கம்மா. இப்ப என்ன ஆச்சு ?ன்னார்.
நேத்து ராத்திரி சரியா 12 மணிக்கு எங்க வீட்டுக்காரர் சுடுகாட்டுப் பக்கமா போயிட்டு வந்தார்.
டாக்டர் தலையிலே அடிச்சிக்கிட்டார். மூக்கு அடைச்சிருக்குன்னார். ஆவி பிடிங்கன்னு சொன்னேன். அதுக்கு அந்த ஆளு சுடுகாட்டுக்கா போனாரு ? அதிர்ந்தார் டாக்டர்.
இதே மாதிரி இன்னொரு நர்சிங் ஹோம்லே ஒரு நர்சம்மா எல்லா நோயாளிகளுக்கும் மாத்திரை கொடுத்துட்டு கொஞ்ச நேரம் கழிச்சி திரும்பி வந்தாங்க.
ஒரு நோயாளி புலம்பினாரு, என்ன நர்சம்மா, மத்தவங்களுக்கு எல்லாம் பொடிப் பொடி மாத்திரையாக் கொடுத்தீங்க. எனக்கு மட்டும் ஏன் நீளமான மாத்திரையாக் கொடுத்தீங்க ? ரொம்பக் கஷ்டப்பட்டு முழுங்கினேன். இனிமே எனக்கும் பொடி மாத்திரையாக் கொடுங்கம்மா-ன்னாரு.
நர்சம்மா-வுக்குச் சிரிப்பு தாங்கலை. ஏம்பா ! உனக்கு நான் கொடுத்தது மாத்திரை இல்லை. காய்ச்சல் எவ்வளவுன்னு பார்க்கிறதுக்குத் தெர்மாமீட்டரைத் தானே வச்சிட்டுப் போனேன். உன்னை யார் முழுங்கச் சொன்னா ?
இப்போ எதுக்கெடுத்தாலும் மாத்திரை சாப்பிடுற மோகம் வந்துருச்சி. ஒரு டாக்டர் வயதைக் குறைக்கிற மாத்திரை கண்டுபிடிச்சாராம். மாத்திரை விலை ரொம்ப காஸ்ட்லி.
ஒரு பணக்காரப் பெண்ணுக்கு தன்னோட வயசைக் குறைச்சுக்கணும்னு ஆசை. நிறையப் பணம் கொடுத்து முப்பது மாத்திரை கொண்ட ஒரு டப்பா வாங்கினாங்க. எதுக்கும் இருக்கட்டுமேன்னு இன்னும் இரண்டு டப்பா சேர்த்து வாங்கிக்கிட்டாங்க. தினம் ஒரு மாத்திரை சாப்பிட்டுக் கிட்டே வந்தாங்க. 30 நாள் முடிஞ்சதும் 50 வயசுக்காரியான அந்தம்மா 20 வயசு இளம் பெண்ணா மாறிட்டாங்க. டாக்டரை பார்க்க வந்தாங்க.
நீங்க யாரு ? ன்னாரு டாக்டர்.
வயசு குறைக்கிற மாத்திரை வாங்கிட்டுப் போனது நான் தான். மாத்திரை ரொம்ப எஃபக்டிவா வேலை செஞ்சிருக்கு.
அப்படியா, ரொம்ப சந்தோஷம் ! உங்க இடுப்பிலே இருக்கிற குழந்தை யாரு? ன்னாரு டாக்டர்.
அவர்தான் டாக்டர் என் ஹஸ்பெண்ட் ! எனக்குத் தெரியாம தினம் ரெண்டு மாத்திரையாத் தின்னுருக்கார். இப்படிக் குழந்தை ஆயிட்டார். இப்போ வயசைக் கூட்டறதுக்கு ஏதாவது மாத்திரை இருக்கா ?ன்னாங்களாம். இப்படி ஒரு பிரச்சினை வரும்னு டாக்டர் எதிர்பார்க்கவே இல்லை.
ரொம்பப் பலகீனமா இருந்த ஒரு நோயாளிக்கு மீன் மாத்திரை சாப்பிடுன்னு சொல்லிக் கொடுத்தார் டாக்டர். மறுநாள் டாக்டர்கிட்டே வந்த அந்த ஆள் ஏகப் பட்ட கூச்சல் போட்டான். டாக்டர், நீங்க எனக்குக் கொடுத்தது மீன் மாத்திரையே கிடையாது. ஒரு மாத்திரையிலே கூட முள் இல்லையே.
ஒருத்தன் ஒரு மெடிகல் ஷாப்பிலே போய் மூணு மாசத்துக்கு மட்டும் வேலை கேட்டான். அதென்ன மூணு மாசம் ?னு கடைக்காரர் கேட்டார்.
மூணு மாசத்துக்கு வைட்டமின் மாத்திரைகளைச் சாப்பிடணும்னு டாக்டர் எழுதிக் கொடுத்திருந்தார். அதுக்கு இது வசதியா இருக்கும்ன்னுதான்-னு அவன் சொன்னான்.
இவனை வேலைக்குச் சேர்த்தா கடை என்ன ஆகும் ? தின்னே தீர்த்திடுவானே !

பல்வலின்னு ஒருத்தர் டாக்டர் கிட்டே போனார். டாக்டர் □ஆ□ காட்டுங்கன்னாரு. காட்டினா பிறகு இன்னும் கொஞ்சம் □ஆ□ காட்டுங்கன்னாரு. இன்னும் கொஞ்சம் பெரிசா... வாயைத் திறங்கன்னார். உடனே நோயாளி டாக்டர் ! பல்லை வெளியே இருந்து பிடுங்கப் போறீங்களா, வாய்க்கு உள்ளே இறங்கிபிடுங்கப் போறீங்களா -ன்னு கேட்டார்.
இன்னொருத்தன் இப்படித்தான் பல் வலின்னு போனான். பல்லைப் பிடுங்கித்தான் ஆகணும். வலிக்காம இருக்க மயக்க மருந்து ஊசி போடறேன்-னாரு டாக்டர். அதெல்லாம் வேண்டாம் டாக்டர். எனக்கு தண்ணி அடிக்கிற பழக்கம் உண்டு. அப்புறம் நிறையத் தைரியம் வந்திடும். நீங்க பல்லைப் பிடுங்கிக்கலாம் அப்படின்னான். டாக்டர் அவன் வழியிலேயே விட்டுட்டார். அவன் வெளியே போய் தண்ணி அடிச்சான். என்னைக்கும் ஆஃப்தான் அடிப்பான். அன்னைக்கு ஃபுல்லா அடிச்சான். ஆஃப் ஆயிட்டான். தள்ளாடிக்கிட்டே வந்து நாற்காலியிலே உட்கார்ந்தான். தைரியம் வந்திடுச்சான்னார் டாக்டர், ஏகப்பட்ட தைரியம் வந்துடுச்சி டாக்டர் அப்படின்னு போதையிலே உளறினான்.
ஏகப்பட்ட தைரியம்னா ? ன்னார். எந்தப் பய என் பல்லுல கை வைக்கிறான்னு பார்க்கிறேன் அப்படின்னான். டாக்டர் ஆடிப்போயிட்டார்.
ஒருத்தரை டெஸ்ட் பண்ணின டாக்டர், உங்களுக்கு சுகர் வந்திருக்கு. மாத்திரை எல்லாம் தர்றேன். அது மட்டும் போதாது. தினம் 5 கி.மீ. வாக்கிங் போகணும். பத்தாவது நாள் எனக்கு போன் பண்ணுங்க, மேற்கொண்டு என்ன செய்யலாம்னு சொல்றேன்னார்.
பத்தாவது நாள் அந்த ஆள் போன் பண்ணினான். டாக்டர், நீங்க சொன்ன மாதிரி தினம் 5 கி.மீ. நடந்து இப்போ 50-வது கி.மீட்டர்லே நிக்கிறேன். மேற்கொண்டு என்ன செய்யணும் சொல்லுங்கன்னான்.

வாங்கின கடனை போன மாதம் திருப்பிக் கேட்டப்ப அடுத்த மாதம் தர்றேன்னு சொன்னீங்க. இப்பவும் அடுத்த மாதம்னு சொல்றீங்களே.. .?
இன்னைக்கு ஒரு பேச்சு நாளைக்கு ஒரு பேச்சுங்கிறது என்கிட்ட கிடையாதுங்க !

குறைந்த பட்ஜெட்டில் ஒரே வீட்டுக்குள் படம் எடுத்தீங்களே படம் எப்படி போகுது...?
டி.வி.-யில நாடகமா ஓடிக்கிட்டு இருக்கே !

புடவையை அடிச்சித் துவைக்கச் சொன்னதுக்கா அழறீங்க ?
பின்னே, என் மனைவி என்னை கைநீட்டி அடிச்சிட்டில்ல துவைக்கச் சொன்னா !

சிஷ்யா, உன் சித்தப்பாவின் அட்ரஸ் எதுன்னு உனக்கே தெரியாதா ?
குருவே, என்ன சொல்றீங்க ? புரியலை.
சித்தி அடைய என்ன வழி, அப்படீன்னு கேட்டியே ?

என்ன சார் ? இவ்வளவு பெரிய வீட்டை 25,000 ரூபாய்க்கு விக்கிறீங்க ?
சொந்த வீடா கெட்டுப் போச்சு. வாடகை வீடுதானே ?

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஊழல் என்ற வார்த்தையே இருக்காது.
அப்படியா ?
ஆமாம், அதற்கு வேறு வார்த்தை கண்டுபிடித்து விடுவோம்.

என்ன ஙஆபரேஷன்ங தியேட்டருக்கு முன்னாடி இவ்வளவு கூட்டம் ?
புதுசா ஒரு பேஷண்ட் இன்னிக்கு □ரிலீஸ்□ ஆகறாரு அதான்.. .!

உங்க டீச்சர் நம்ம வீட்டு சாப்பாட்டை சாப்பிட்டு பாராட்டினாங்கன்னு சொல்றியே, வேறென்ன சொன்னாங்க ?
உங்க அப்பாவுக்கு என் பாராட்டுக்கள்னு சொன்னாங்கம்மா.

டாக்டர், உடம்பெல்லாம் ஒரே நடுக்கமா இருக்கு...
உங்க மனைவிதான் பக்கத்துல இல்லையே ? அப்புறம் ஏன் நடுங்கறீங்க ?
நன்றி குங்குமம் 15-12-2000
கட்சியிலே நிர்வாகிகள் எல்லாம் மொட்டை அடிச்சுக்கணும்னு தலைவர் சொல்றாரே. ஏன் ?
பதவிக்காக குடுமிபிடி சண்டை அடிக்கடி நடக்குதாம் !

ஐநூறு மூட்டை ரேஷன் அரிசியை எப்படிக் கடத்தினே ?

மூக்கைப் பொத்திக்கிட்டுத்தான் எஜமான் !

தலைவர் சிறைக்குப்போய் ரிலீஸுக்கு லேட்டானா என்ன பண்ணுவாரு ?
கட்சியை லீஸுக்கு விட்டுருவாரு !

காதல் கல்யாணம்னு சொன்னீங்க ! ரொம்ப வயசானவங்களா இருக்காங்களே !
தன்னோட சீரியல் முடிஞ்சப்புறம்தான் நமக்கு கல்யாணம்னு டைரக்டர் உறுதியா சொல்லியிருந்தாராம்.

நோயாளியா நடிக்க வேண்டிய நடிகைக்கு ஒரே இருமலாம் சார் !
பயப்படாதீங்க ! அவங்க இருமறதையே வைச்சு இந்த எபிஸோட ஓட்டிடலாம் !

மர்மத் தொடர் எடுக்க வேண்டியதுதான் ! அதுக்காக இந்த அநியாயம் பண்ணக் கூடாதுங்க !
ஏன் ? என்னாச்சு ?
இருட்டையே இருபது எபிஸோடுக்கு காட்டறாங்களே !

மந்திரியாரே அதிகமாக வரி விதித்ததற்கு மக்கள் என்ன சொல்கிறார்கள் ?
ஒரே வரியில் முடியாதுன்னு சொல்லிட்டாங்க மன்னா !

மெகா சீரியல் டைரக்டரை கல்யாணம் கட்டிக்கிட்டது தப்பா போச்சுடி !
ஏண்டி ?
முதலிரவையே மூணு வருஷத்துக்கு நடத்தறார்டி !

உங்களுக்கு தண்ணில கண்டம் இருக்குன்னுதானே ஜோசியர் சொல்லி இருக்காரு... பின்ன எதுக்கு கரண்டை பார்த்து பயப்படறீங்க ?
தண்ணிலேர்ந்துதானே மின்சாரம் எடுக்கறாங்க.. .!

ஏண்டியம்மா, உன் மாட்டுப் பொண்ணை எங்க இருந்து புடிச்சிக்கிட்டு வந்தே ?
காங்கேயத்துல இருந்து மாமி !
நன்றி குமுதம் 14-12-2000
பரீட்சையில் ஃபெயில் ஆனதுக்கு என்னோட மறதிதான் சார் காரணம் !
இப்பவாவது உணர்ந்தியே !
கையில் பிட் இருந்தும் அடிக்கலைன்னா வேற என்ன சார் சொல்றது !

என்னப்பா இது... தோசையை இப்படி ஸ்டாண்ட்ல தொங்க விட்டுத் தர்றீங்க...?
சும்மா அப்படியே பிய்ச்சுத் தின்னுடுங்க... இல்லேன்னா, தட்டு கழுவுற சார்ஜ் எக்ஸ்ட்ரா போடுவோம் !

டி.டி. நியூஸ், ஸ்டார் நியூஸ், சன் நியூஸ், விஜய் நியூஸ், ராஜ் நியூஸ், ஜெயா நியூஸ்-னு மாத்தி மாத்திப் பார்த்துக்கிட்டே இருக்கீங்களே... போரடிக்கலையா உங்களுக்கு...?
உனக்கென்ன... உலகச் செய்திகள் எல்லாத்தையும் சொல்ல உனக்கு உன் வேலைக்காரி □தனம் நியூஸ்□ இருக்கு...
எனக்கு அப்படியா ?

ஏரோப்ளேன் எந்த விபத்துக்கு உள்ளானாலும் கூட, அதுல இருக்கிற பிளாக் பாக்ஸ் ஒண்ணும் ஆகாம பத்திரமா இருக்கும் !
அப்படின்னா, பயணிகளையும் பிளாக் பாக்ஸுக்குள்ளேயே உட்கார்ந்து பயணம் செய்யச் சொல்லலாமே !

நம்ம ஆபீஸ் வாசுதேவனுக்கு மலேரியா காய்ச்சல் வந்திருக்கு...
அப்ப, மலேரியா வாசுதேவன்-னு சொல்லு...

ஹிரோவுக்கும் டைரக்டருக்கும் கருத்து வேறுபாடு... அதனால ஷூட்டிங் தடைப்பட்டுப் போய், தயாரிப்பாளர் ரெண்டு பேரையும் கெஞ்சிப் பார்த்துப் பலனளிக்காமல், கடைசியில ஷூட்டிங் பார்த்துக்கிட்டிருந்த ஒருத்தரை ஹீரோ ரோல்ல போட்டுத் தானே டைரக்ட் பண்ணா ஆரம்பிச்சுட்டார் !
நான் கிசுகிசு-தான் கேட்டேன்... தொடர்கதை இல்லே !

இந்தப் புதுப் படத்தை எவ்வளவு சோதனைகளுக்கு நடுவே கஷ்டப்பட்டு எடுத்தேன் தெரியுமா ?

எந்த மொழிப் படத்துலே இருந்து.. .?

என்னப்பா இது... மீசையை இவ்ளோ சின்னதா ஒட்ட வெட்டி உட்டுட்டே... எப்படிப்பா நான் வெளியே போறது...?
வேணும்னா நாலு நாள் இங்கேயே உக்காந்துட்டுப் போங்க !

உன் கணவர் உடம்புக்கு முடியாம படுத்த படக்கையா கிடந்தாரே... இப்ப எப்படியிருக்கார் ?
ஏதோ பரவாயில்லை... காலைல எந்திரிச்சதும் காபி மட்டும் போட்டுத் தர்றார் !

நான் என்ன சாதின்னு தெரியலீங்க...
அதுக்கு ஏன் கவலைப்படறீங்க...?
தேர்தல்ல எந்த சாதிக் கட்சிக்கு வோட்டுப் போடணும்னு தெரிய வேணாமா...?

தலைவரை அவங்க மனைவி ஏன் டைவர்ஸ் பண்ணிட்டாங்க ?
வருமானத்துக்கு கம்மியா சொத்து வெச்சிருந்தாராம் !

படத்துல டூப் போடறதுக்கு ஆள் சப்ளை பண்றதுல கில்லாடி இவர்...
எப்படி ?
தேவைப்பட்டா ஆடியன்ஸுக்குக்கூட டூப் சப்ளை பண்ணுவார் !

இவர் தாங்க என்னோட மாப்பிள்ளை. கன்யாகுமரியில இருக்காரு. இவரு மனசு வெச்சா பதினெட்டு பெட்டியும் பின்னாலேயே வரும் !
பெட்டின்னு தப்பா சொல்றீங்களே... பதினெட்டு பட்டின்னு சொல்லுங்க...
அட, நீங்க ஒண்ணு.. இவரு கன்யாகுமரி எக்ஸ்பிரஸ் டிரைவருங்க... பதினெட்டு ரயில் பெட்டியச் சொன்னேங்க !

நெட் ஜோக்

புகழ்பெற்ற அறுவை சிகிச்சை நிபுணர் ஒருவரின் முன்னிலையில் நான்கு டாக்டர்கள் காரசாரமாக விவாதம் செய்து கொண்டிருந்தார்கள் - எந்த வகை மனிதருக்கு ஆபரேஷன் செய்வது எளிது...?
அக்கௌண்டன்ட்டுகளை ஆபரேஷன் செய்வதுதான் எளிது. ஏனென்றால், அவர்களது உடல் பாகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நம்பர் தரப்பட்டிருக்கும்... என்றார் முதல் டாக்டர். உடலில் எல்லாமே அகரவரிசைப்படி இருக்கும் என்பதால், லைப்ரரியன்களே ஆபரேஷன் செய்ய எளிதானவர்கள்... என்று வாதிட்டார் இரண்டாவது டாக்டர். கட்டடப் பணியாளர்களையும் எலெக்ட்ரீஷியன்களையும் அடுத்து வந்தவர்கள் முன்மொழிந்தார்கள். அதற்கான காரணங்களையும் சொன்னார்.
வாதம் முடிந்தது. தீர்ப்பு சொல்ல எழுந்தார் நடுவர். உங்கள் நான்கு பேரின் வாதமும் தவறு. கத்துக்குட்டி சர்ஜனாலும் ஆபரேஷன் செய்ய முடிந்த நபர்கள் அரசியல்வாதிகள் மட்டுமே. ஏன் தெரியுமா.. ? அவர்களுக்குத்தான் இதயமும் கிடையாது, முதுகுத்தண்டும் கிடையாது. அதுமட்டுமல்ல... தவறுதலாகத் தலையையும் காலையும் அவர்களுக்கு மாற்றிப் பொருத்திவிட்டாலும் ஒரு பிரச்சினையும் வராது...

என்ன டாக்டர் இது... பிரிஸ்கிரிப்ஷன் சீட்டு இவ்ளோ சின்னதா பஸ் டிக்கெட் சைஸ்ல இருக்கு...?
இல்லாட்டி ஒரு முழ நீளத்துக்கு மருந்து மாத்திரை எழுதிக் கொடுத்திட்டான்னு சொல்வீங்களே !

மேடம்... ஒரு அஞ்சு நிமிஷம் வெளில வெய்ட் பண்ணுங்க...
எதுக்கு டாக்டர் ?
தெர்மா மீட்டர் வெச்சு டெம்பரேசர் பார்க்கணும்... நீங்க பக்கத்துல இருக்கறதால இவரு வாயைத் திறக்க மாட்டேங்கறார் !

ஸாரியம்மா... குழந்தை ஆணா, பெண்ணான்னு ஸ்கேன்ல பார்த்து சொல்றது சட்டப்படி தப்பு !
போனாப் போகுது... குழந்தை என் ஜாடைல இருக்கா, இல்லே அவர் ஜாடைல இருக்கான்னாவது சொல்லுங்க !

டாக்டர்... அடிபட்ட கோபத்துல என் மாமியாரை நாய் கடிச்சுடுச்சு...
முதலுதவி ஏதாவது பண்ணிங்களா...?
இல்லை டாக்டர்... நாய் எங்கயோ ஓடிடுச்சு !

பிரிஸ்கிரிப்ஷனை டாக்டர் ஏன் ஸ்டாம்ப் பேப்பர்ல எழுதித் தர்றார் ?

அப்பதானே பத்திரமா வெச்சுக்குவோம் !

டாக்டர்... நீங்க ரொம்ப தெளிவா பிரிஸ்கிரிப்ஷன் எழுதித் தர்றீங்கன்னு மருந்துக் கடைக்காரங்க சண்டைக்கு வர்றாங்க...
ஏனாம்...?
நீங்க எழுதிக் கொடுக்கிற மருந்துகளைத் தேடிக் கண்டுபிடிக்க ரொம்ப கஷ்டமா இருக்காம் !

எதுக்குடி கவர்ன்மெண்ட் மாப்பிள்ளைதான் வேணுங்கிறே ?
அவங்கதான்டி பகல்ல நல்லா ஆபீஸ்ல தூங்கிட்டு, ராத்திரி வீட்டுக்கு வந்து ஜாலியா பேசிக்கிட்டிருப்பாங்க...

ராத்திரி போய் ஏன் அந்த பாங்க்ல திருடினே ?
அது ரூகூஆ. 24 மணி நேரமும் பணம் எடுக்கலாம்னு போட்டு இருந்தது சார் !
நன்றி ஆனந்த விகடன் 10-12-2000

அந்த நடிகை சந்தோஷமா விவாகரத்து பண்றாங்க சரிதான்... அதுக்காக இப்படியா?
ஏன் - என்ன சொல்றாங்க...?
பஸ்ட் நைட் மாதிரி லாஸ்ட் நைட்டுக்கு கோர்ட் வராண்டாவிலே ஏற்பாடு பண்ணணுமாம் !

தலைவர் கஞ்சா தோட்டம் போட்டிருக்கார்னு எப்படிச் சொல்றே ?
உழவர் சந்தையில கஞ்சா விற்க அனுமதி தரணும்ங்கிறாரே !

அந்த நடிகரை ஏன் எல்லாருமா சேர்ந்து அடிக்கிறாங்க ?
வீரப்பனைக் காட்டில் சந்திக்க நான் என் டூப்பையும் அனுப்பத் தயாராக இருக்கிறேன்னு அறிக்கை விட்ருக்காரு !

அந்த ஆள் நம் ஊரில் விரல் விட்டு எண்ணக் கூடிய பெரும்புள்ளிகளில் ஒருவர்!
பெரிய புள்ளிங்கிறே ! விரல்விட்டுத்தான் எண்ணுவாரா ?

அந்த வேலைக்காரியை உடனே வேலையை விட்டு அனுப்புங்க !
ஏன் ?
நம்ம பேபியைப் பார்த்து சக்களத்தி பேபி, சக்களத்தி பேபி-ன்னு பாடுறா !

என்னங்க... வெளியில சோலை - எம்.எஸ்.சி. அப்படின்னு போர்டு இருக்கு... சலூன் வச்சிருக்கிறீங்க ?
அப்படீன்னா மாஸ்டர் ஆப் சேவிங் அன்ட் கட்டிங்னு அர்த்தம் !

என்னடா... ஒரு பல்தானே வலிக்குதுன்னு டாக்டர்கிட்ட போனே... இப்போ மூணு பல்லைப் புடுங்கிட்டு வந்து நிக்கற ?
ரெண்டு பல் புடுங்குனா ஒரு பல்லை இலவசமா புடுங்குவோம்னு சொன்னாங்க... அதான் !

என் காதலி இப்படிப் பண்ணுவானு நான் எதிர்பார்க்கவே இல்லை !
ஏன் ?
இத்தனை நாளா பழகியும், அவ கல்யாணத்துக்கு என்னைக் கூப்பிடவே இல்லை !

ஒரு பாட்டி லட்டு செய்வாங்க. அடுத்த நாள் அது செத்துடும். ஏன் ?
ஏன் ?
அதைத் தூக்குல போட்டுடுவாங்க !

பெப்சோடென்ட்டை தலையில் தேய்த்தால் என்ன ஆகும் ?
என்னாகும் ?
ஈறுகள் வலுவடையும் !

பால் கெட்டுப் போகாம இருக்க என்ன செய்யணும் ?
என்ன செய்யணும் ?
குடிச்சுடணும் !

இந்த நாட்டு யானைக்கும், வெளிநாட்டு யானைக்கும் என்ன வித்தியாசம் ?
என்ன வித்தியாசம் ?
கிலோ மீட்டர்தான் !

ஒரு வீட்டில் கல்யாணம் நடக்குது. அங்கே திடீர்னு மழை பெய்யுது. ஆனா பொண்ணு மட்டும் நனையலை ஏன் ?
ஏன் ?
அவள் கட்டி இருந்தது கூரைப் புடவை !

உலகத்தில் உட்கார்ந்துகிட்டே இருக்கும் தேவி யார் ? நின்னுக்கிட்டே இருக்கும் தேவி யார் ?
யார் ?
குந்தி தேவியும் அமரா தேவியும் தான் !

முஹூனு-யில் எத்தனை எழுத்துக்கள் ?
26 தானே...
இல்லை. 23 தான். ஏன்னா ஆழுசு செத்துப்போயிட்டாரு !

ஒரு அப்பா தன் பையனை அடிச்சுகிட்டே இருப்பார் ஏன் ?
ஏன் ?
அவர் பெத்த பையன் அவர் பேரைச் சொல்லாம, ஐயாம் எ காம்ப்ளான் பாய் என்கிறான் !

ஒருவர் கிளி வளர்க்கிறார். அது கெட்ட வார்த்தையா பேசுது என்று அதைத் திருத்துவதற்காக நண்பர் ஒருவரிடம் விடுகிறார். கொஞ்ச நாள் கழித்து, இப்ப நல்ல வார்த்தை பேசும் என்கிறார் நண்பர். இவரும் கிளியைத் தன் வீட்டுக்கு அழைத்து வருகிறார். ஒருநாள் அவருடைய மனைவி, இந்த ஆளுக்கு ஒரு சாவு வந்து தொலையமாட்டேங்குதே என்கிறார். உடனே அந்தக் கிளி என்ன சொன்னது தெரியுமா ?
என்ன ?
ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் !

ஒரு பையன் நிறைய பலகாரங்களோடு ஆற்றைக் கடக்கிறான். தவறி விழுந்துடறான். எல்லாம் மூழ்கிடுது. ஒரு பலகாரம் மட்டும் மூழ்கலை. அது எது ?
எது ?
கொழுக்கட்டை !

போய்ட்டு வரும் ஊர் எது ?
எது ?
கோவா !

சினிமா டைரக்டரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பாப் போச்சு...
ஏன் ?
முதலிரவுல எப்படி நடந்துக்கணும்னு சொல்லிக் கொடுத்துட்டு வெளில போயிட்டார்!

உனக்காக நான் உயிரையே தருவேன் டார்லிங்...!
சரி... இன்னிக்காவது சுண்டலுக்கு நீங்க காசு தாங்க.. .!

அந்தக் கண் டாக்டர் போலின்னு சொல்றியே... எப்படி ?
கண்ணுலே பூ விழுந்துருச்சுன்னு சொன்னேன் ! மல்லிகையா...? ரோஜாவான்னு கேக்கறாரே !

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபகரனுக்குப் பிடிக்காத சோப்பு எது ?
சந்திரிகா சோப் !

படத்தில் ஹிரோவுக்குப் பல பிரச்சினை சார். வீட்ல சித்தியோட தொல்லை, வெளியில கடன்காரங்க தொல்லை, உடம்புல வியாதிங்க தொல்லை !
படத்துக்கு பேரு ?
ட்ரபுள்ஸ் !

என் கணவர் சரியான முட்டாள் !
எப்படி ?
501 சோப் வாங்கி வரச் சொன்னேன்... 450 சோப்தான் கிடைச்சுதுனு அவ்வளவு சோப் வாங்கி வந்திருக்காரு !

வாழ்க்கையில ஒருமுறைதான் நான் முட்டாளாயிருக்கேன் !
உங்க கல்யாணம் ஏப்ரல் மாசம் நடந்ததுனு சொல்லுங்க !

கூலி வேலை செஞ்சதுக்கா ஜெயில்ல போட்டாங்க ?
வெளிநாட்டுத் தீவிரவாதிகளுக்குக் கைக்கூலியா இருந்தேன் !

நடிகையைக் கற்பழித்த குற்றத்திற்காக உனக்கு 5 வருஷம் தண்டனை !
யுவர் ஆனர்... செய்யாத குற்றத்திற்கு எதுக்குத் தண்டனை தர்றீங்க ?
அப்போ நீ கற்பழிக்கலை ?
அவங்களுக்கு ஏதுங்க கற்பு ?

டாக்டர்... என் காதலியோட எக்ஸ்ரே ரிப்போர்ட் வேணும் !
எதுக்கு ?
முகம் பார்த்து வர்ற காதலை விட அகம் பார்த்து வர்ற காதல்தான் உறுதியானதுன்னு சொல்வாங்க ! அதான் உண்மையைத் தெரிஞ்சிக்கலாம்னு.. .!

என்ன சார் ? திடீர்னு என் சம்பளத்துல 200 ரூபா குறைச்சுட்டீங்க ?
அடுத்த மாசத்துல இருந்து இன்க்ரீமெண்ட் வேணும்னு கேட்டீங்களே ? அதான் இந்த மாசம் குறைச்சுட்டோம் !

கடல்ல தத்தளிச்சுட்டு இருக்கறப்ப, ஹெலிகாப்டர் மூலமா ஏணி வீசுனாங்களே... நீங்க ஏன் ஏறலை ?
எனக்கு ஹீ இருக்கறதால மாடிப்படி ஏறக்கூடாதுனு டாக்டர் சொல்லி இருக்காரு !

டாக்டர்... எங்கப்பாவுக்கு நீங்க கொடுத்த மருந்து கேட்கலை !
ஏன் ?
அவரு தமிழ் வாத்தியார், இங்கிலீஷ் மருந்து எப்படிச் சேரும் ?

ஃபைனான்ஸ் கம்பெனி முதலாளி சுதேசியவாதினு எப்படிச் சொல்றே ?
வெளிநாட்டுக்கு எல்லாம் ஓடமாட்டேன்னு சத்தியம் பண்றாரே !

அந்த நடிகை ஏன் கவர்ச்சி காட்டமாட்டேன்னு அடம்பிடிக்கிறாங்க ?
அதான் சொன்னேனே... அவங்க மூடி-டைப்னு !

ஐய்யா ! சாப்பாட்டைக் கண்ணால பார்த்து நாலு நாள் ஆச்சுங்க.. .!
ஒரு அஞ்சு நிமிஷம் இரு... இப்ப நான் சாப்பிடப் போறேன்... பார்த்துட்டுப் போய்டு !

அவருக்கு மறதி அதிகமாயிடுச்சுனு எப்படிச் சொல்றே ?
கதவில் சாவியை மாட்டிட்டு பூட்டை எடுத்துட்டுப் போறாரே !

கூலி வேலை செஞ்சுக்கிட்டிருந்தியே ? இப்போ ஏதாவது முன்னேற்றம் தெரியுதா ?
இப்போ கூலிப்படையில் சேர்ந்துட்டேன் !

இந்த வாரம் என்கிட்ட கோவிச்சுட்டு, பிறந்த வீட்டுக்குப் போயிட்டு வாயேன் !
என்னங்க சொல்றீங்க ?
புதுசா நகை தேடி வரும், வாய்ப்பு வரும்-னு ராசி பலன்ல போட்ருக்கு !

தலைவர் ரகசியமா காட்டுக்குள்ள போயிருக்காராமே... எதுக்கு ?
வீரப்பன்கிட்ட பேசி தன் மேல உள்ள ஊழல் வழக்குகளை வாபஸ் வாங்க முயற்சி பண்ணப் போறாராம் !

வீட்டில் மனைவி □தாடா□ சட்டம் போட்டுட்டாளா... என்ன சொல்றே ?

சம்பளத்தை அப்படியே தாடா-ங்கறா !

ராஜ்குமார் விடுதலையானதில் யாருக்கு நஷ்டம் ?
ஜோக் எழுத்தாளர்களுக்குத்தான் !

ஒரு பிணம் நடப்பதை என் கண்ணால பார்த்தேன் !
யாராவது நடைப் பிணமாக இருக்கும் !

யார் வீட்டுக்கு வந்தாலும் என் மனைவி காபி கொடுப்பா !
அப்படியா ?
அப்பத்தானே அடுத்து அவங்க எங்க வீட்டுப் பக்கமே வரமாட்டாங்க.. .!
நன்றி இதயம் பேசுகிறது 17-12-2000
தண்ணீர் கஷ்டத்தால பாட்டுப் பாடறதை விட்டுட்டேன்னு சொல்றீங்களே, ஏன் ?
நான் பாத்ரூம் ஸிங்கர் சார். தண்ணீர் இல்லாட்டி எப்படிப் பாடறது சொல்லுங்க...?

உங்களுக்கு எந்த மாதிரி சூழல்ல பாட்டுப் பாடணும்னு தோணும்...?
ம்... தனியா இருக்கும்போது பாடத்தோணும் !
அதாவது நீங்க சபாவுல கச்சேரி பண்ணும்போதுன்னு சொல்லுங்க.. .!

என்ன ஆச்சரியம் இது... வித்வான்கூட போலி வித்வான் உண்டா...?
ஆமாம்... எடுத்ததுமே முதல் பாட்டா மங்களம் பாடினார்னா பார்த்துக்கங்களேன் !

எந்த வித்வானும் இப்படியொரு ஆலாபனை பண்ணி நான் பார்த்ததே இல்லை !
ஏன் ?
விளம்பர இடைவேளைக்குப் பிறகு ஆலாபனை தொடரும்னு அறிவிச்சாங்க !

ஆடியன்ஸ்ல உட்கார்ந்தபடியே ஒருத்தர் பாடறாரே, யார் அவர் ?
அவர்தான் நம்ம பாகவதர். கச்சேரிக்கு யாருமே வரலியேங்கற துக்கத்துல அங்கேயே உட்கார்ந்து பாடிக்கிட்டிருக்கார்..
.!

ரொம்ப வேகமா சைக்ளோன் அடிச்சா அதுக்கு என்ன சார் பேரு ?
மோட்டர்- சைக்ளோன் !

என்ன சார்... படம் பார்க்கப் போய்ட்டு, உடனே வெளியே வந்துட்டீங்க.. .!
உள்ளாற தனியா உக்காந்து படம் பார்க்க ரொம்பப் பயமா இருக்குங்க ..!

நன்றி-னு சொல்லி, பத்து பேர் பெயரைப் போடறாங்களே... யாரு இவங்கல்லாம் ?
முதல் நாள் இந்தப் படத்தைப் பார்த்தவங்களாம் !

என்னது... படம் பார்க்க லோன் தர்றாங்களா...?
ஆமா படத்தைப் பார்த்துட்டு, டிக்கெட் காசை அடுத்த மாசம் கொடுத்தா போதுமாம் !

எப்படி இந்த தியேட்டருக்கு மட்டும் இவ்ளோ கூட்டம் வருது...?
இன்டர்வெல்ல, எல்லோருக்கும் இலவசமா ஐஸ்க்ரீம், சமோசா எல்லாம் தர்றாங்களாம்!

படம் ஹவுஸ்ஃபுல்லா ஓடணும்னா ஒரே ஒரு வழிதான் இருக்கு.
என்னது ?
தியேட்டர்ல இருபது ஸீட்டுக்கு மேல இருக்கக்கூடாது !

என்னது... ஃபர்ஸ்ட் கிளாஸ் டிக்கெட் இருபது ரூபாயா.. !
நாலு டிக்கெட் வேணும். பார்த்துச் சொல்லிக் கொடுங்க !
நன்றி ஆனந்த விகடன் 17-12-2000
நான் சொல்றதைக் கேட்டு நீங்க அதிர்ச்சி அடையாமல் இருக்கணும்...

ஐயோ ! மாமியார் பிழைச்சிட்டாங்களா டாக்டர்...?

நான் புதுசு. இந்த ஆபீஸ்ல டீ-டைம், லஞ்ச் டைம் எப்போது ?
டைப்பிஸ்ட் ராதா ஜி.எம். ரூமுக்குள் போனால் டீ-டைம். ஸ்டெனோ கீதா ஜி.எம். ரூமுக்குள் போனால் லஞ்ச் டைம் !

யுவர் ஆனர் ! மாத்தி மாத்தி கேள்விகேட்டு எதிர்க்கட்சி வக்கீல் என்னைக் குழப்பறார்...
அப்படியா ?
ஆமா. என் வக்கீல் சொல்லிக் கொடுத்த வரிசைக்கிரமப்படி கேட்கச் சொல்லுங்க. அப்படித்தான் நான் மனப்பாடம் பண்ணி இருக்கேன்.

டி.வி-ல ப்ரோக்ராம் ஓடிக்கிட்டு இருக்கும்போதே எங்க வீட்டு டி.வி. திருடு போயிடுச்சு.
என்ன ப்ரோக்ராம் ஓடிக்கிட்டு இருந்தது...?
காணவில்லை அறிவிப்பு நிகழ்ச்சி...

யாரைப் பார்த்தாலும் உடனே மறந்து போயிடுது டாக்டர்.
நான் இதுக்கு முன்னாடி உங்களை எங்கேயோ பார்த்திருக்கேனே ?
நான்தான் உங்க கம்பவுண்டர் டாக்டர்...

இந்த ஆபரேஷனில் நான் பிழைச்சுக்கிட்டால் உங்களை தெய்வமா வணங்குவேன் டாக்டர் !
நீங்க பிழைக்கலேன்னா நான் உங்களை தெய்வமா வணங்கிட்டுப் போறேன் !

உட்கார முடியாத தரை எது ?
புளியோதரை

ஒருத்தன் வாசல் படியிலேயே உட்கார்ந்து பரீட்சை எழுதறான் ஏன் ?
நுவேசயஉேந நுஒயஅ.

எலிக்கு ஏன் வாலு இருக்கு ?
செத்தா தூக்கி போடணுமே !

எல்.ஐ.சி. மாடியிலிருந்து ஒருத்தன் கீழே விழுந்திட்டான். ஆனா ஒரு சின்ன அடி கூட படல எப்படி?
பட்டது எல்லாம் பெரிய அடி

பஸ் போகாத ரூட் எது ?
பீட்ரூட்

டாக்டருக்கு பிடித்த வெடி எது ?
ஊசி வெடி

சமைக்க முடியாத மான் எது ?
அந்த மான்.

உண்ண முடியாத பன் எது ?
ரிப்பன்

ஞாயிற்றுக் கிழமை களில் கிடைக்காத பால் எது ?
தபால்

ஓய்வெடுக்கும் சிகரம் எது தெரியுமா ?
எவரெஸ்ட்

பெண்களுக்கு பிடித்த காரம் ?

அலங்காரம்

அரிச்சந்திரனுக்கு பிடித்த பிஸ்கட் எது தெரியுமா ?
ட்ரூ பிஸ்கட்

யேசுவுக்கு பிடித்த பிஸ்கட் எது தெரியுமா ?
மேரி பிஸ்கட்

யோவ் ராப்பிச்சை உன் பையனை எதுக்கு இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல்ல சேர்த்தே ?
அவனாவது ஃபாரின்ல போய் பிச்சை எடுக்கட்டும்னு தான்.

எதுக்குங்க ! நம்ப பையனைப் போட்டு இப்படி அடிக்கிறீங்க...?
பின்ன என்ன ! கந்தையானலும் கசக்கிக் கட்டுன்னு படிக்கிறான். அப்புறம் நம்ப பிழைப்பு என்ன ஆகறது...

மருமக பிரச்சினைதான் என் அடுத்த படத்தோட தீம்.
ஏன் அப்படி ?
இப்பவெல்லாம் ரசிகர்கள் அடிதடி படத்தைத்தானே விரும்பறாங்க ?

சார் ! என் கணவர் ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்கப் போறாரு. நீங்கதான் அதை எப்படியாவது வந்து தடுக்கணும்...
இப்ப என்னால முடியாது. என்னோட நாலாவது சம்சாரத்துக்கு பிரசவம். அவசரமா போய்க்கிட்டு இருக்கேன்.

ஒரு ரூபாய், 2 ரூபாய் கள்ள நோட்டு எதுக்கு அடிச்சே ?
சில்லறைத் தட்டுப்பாட்டுல நிறையப் பேர் கஷ்டப்படறதைப் பார்த்து மனசுக்கு கஷ்டமா இருந்துதுங்க. அதான் !

டீன் ஏஜ் பொண்ணுன்னாலே கவலை கிடையாது.
எப்படி ?
பிளஸ்-2 பாஸ் ஆனா காலேஜ், ஃபெயில் ஆனா மேரேஜ்.
நன்றி குங்குமம் 22-12-2000
சங்கீத சபா செயலாளர் நம்ம கட்சி அலுவலகத்துக்கு வந்திருக்காரே... ஏன் ?
கச்சேரிக்கு ஜால்ரா வாசிக்கிற ஆள் வரலையாம் ! நம்ம கட்சியிலேர்ந்து ஒருத்தரை கேட்கிறாரு !

செட்டுக்காக எவ்வளவு வேணும்னாலும் செலவு செய்யத் தயார்ன்னு சொன்னது தப்பாப் போச்சா... ஏன் ?
ஹீரோ புதுசா தங்கத்தில் பல்செட் வாங்கிக்கிட்டு பில்-லை நமக்கு அனுப்பிட்டாரு !

எதுக்கு ஆபீசுல கொஞ்சம் பேரை வற்புறுத்தி தூங்க வைக்கிறாங்க ?
அவங்களுக்கு □கட்டாய□ ஓய்வளிக்கிறாங்களாம் !

அந்த ஆளு பஞ்சாயத்து தலைவரா... ரொம்ப குள்ளமா இருக்காரே !
கட்டை- பஞ்சாயத்து பண்றவருங்க !

கோடீஸ்வரன் பார்த்ததிலேர்ந்து நம்ம வாத்தியாரும் சுலபமான கேள்வியாத்தான் கேட்கிறாரு !
அப்படியா ?
ஆமா... எட்டுக்கால் பூச்சிக்கு எத்தனைக் கால் ?-ன்னு சொல்லணுமாம் !

காதலின்னு நினைச்சு யாரோ ஒருத்தியோட துப்பட்டாவ புடிச்சுட்டேன்.
என்னாச்சு ?
துப்பிட்டா !

அவசர அவசரமா இங்கிலீஷ் கத்துக்கிறியே... ஏன் ?
தமிழ்ப் படத்துலே பாட்டு எழுத வாய்ப்பு கிடைச்சிருக்கே !

யோவ் எதுக்குய்யா இவ்வளவு லாட்டரிச் சீட்டுகளை வாங்கிட்டு வந்திருக்கே.. .!

நீங்கதானே தலைவரே எல்லா மாநிலமும் உங்க கைக்கு வரணும்னு சொன்னீங்க.

அந்த ஆவிக்கு எல்லா ஆவிகளும் வாழ்த்து சொல்லுதே...
இன்னிக்கு அதுக்கு இறந்த நாளாம் !

கொலையும் செய்வாள் பத்தினின்னு கல்யாணத்துக்கு அப்புறம் கண்டு பிடிச்சியா எப்படி ?
என் மனைவி சமையல் பண்ண ஆரம்பிச்சதிலிருந்து...

அந்த பஸ் ஓனர் மறைவுக்குப் பின்னால் அவரது சொத்திலே என்ன தகராறு ?
மினி பஸ்ஸெல்லாம் அவரது சின்ன வீட்டுக்கு எழுதி வைச்சுட்டாராம்.

ஏம்ப்பா இப்படி பிக்பாக்கெட் தொழில் பண்ணறே ? ஏதாவது ஒரு லட்சியத்தை வெச்சுக்கிட்டு உழைக்க வேண்டியதுதானே ?
என்னங்கையா இப்படிக் கேட்கறீங்க ? ஒரு நாளைக்குக் குறைஞ்சது அஞ்சு பர்சையாவது அடிக்கணும்ங்கறதுதானே என்னோட லட்சியமே !

கோவம் வந்தா என்வூட்டுக்காரரை கண்டபடி திட்டிடுவேன்.
சே ! சே ! நான் அப்படி எல்லாம் கீழ்த் தரமா நடந்துக்க மாட்டேன். தாமரைக்கனி பாணியிலே சும்மா மேலோட அப்படி தட்டிக் குடுப்பேன் அவ்வளவுதான்.

தூக்கத்துல நடக்கிற வியாதிக்கு மருந்து, கொடுத்தேன். இப்ப தேவலையா...?
தேவலை டாக்டர் முன்பெல்லாம் வேகவேகமா நடந்து கிட்டிருந்த நான் இப்ப மெள்ளமா நடக்கிறேன்.. .!

பஸ்லே பெரியவங்க நிக்கிறதைப் பார்த்தா என்னாலே தாங்க முடியாது.
உடனே எழுந்து இடம் கொடுத்துடுவியா ?
கண்ண இறுக மூடிக்கிட்டு தூங்குற மாதிரி பாவனை பண்ணிடுவேன்.

உங்களை வச்சு படம் எடுத்ததுலே என்னோட சொத்துல பாதி அழிஞ்சு போச்சு சார்...
கவலைப் படாதீங்க. உங்களுக்கு இன்னொரு படத்தக்கு நான் கால்ஷீட் தர்றேன் !

உங்க அப்பாவோட நிதி வர்ற அன்னைக்கெல்லாம் உங்க அம்மா ஏன் கேவிக்கேவி அழறாங்க ?
அவுங்களுக்கு பயந்து நடந்து, மரியாதை கொடுத்திட்டிருந்த ஒரே ஆசாமி போயிட்டாரேங்கிற வருத்தம்தான் !

என்னங்க.. .! ஆபீஸ் லேர்ந்து தினமும் கலகலப்பா வர்ற நீங்க இன்னைக்கு ரொம்ப வாட்டமா வர்றீங்களே, சம்திங் நிறைய வரலையா...?
சம்திங் வாங்கி மாட்டிக்கிட்டேன் சரசு.. .!
நன்றி குங்குமம் 29-12-2000
வாங்கிய கடனைத் தரமாட்டேன்னு வேணும்னா சொல்லு... அதுக்காக அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவு வந்தப்புறம் தர்றேன்னு சொல்றது கொஞ்சங்கூட நல்லா இல்லை... !

கதாசிரியரை உயில் எழுதச் சொன்னது தப்பாயிடுச்சா ?
மேற்கண்ட பெயர்கள் யாவும் கற்பனையே ! யாரையும் குறிப்பிடுவன அல்ல-னு கடைசியிலே எழுதி முடிச்சிட்டாரு !

பெண் பார்க்க வாசல் வரை வந்துட்டு திடீர்னு திரும்பிப் போறீங்களே... ஏன் ?
உள்ளே டிபன் வாசமே வரலியே !

மாப்பிள்ளை அரசியல்ல இருக்கலாம் அதுக்காக இப்படியா ?
என்னவாம் ?
பெண் பார்க்க வந்த இடத்துல பெண் வாயால வாழ்க கோஷம் போடச் சொல்றார் !

வீட்டுல உள் வேலையெல்லாம் என் மனைவி பார்த்துப்பா... வெளி வேலையெல்லாம் நான் பார்த்துப்பேன்.. .!
அதுக்குன்னு தினமும் நீங்க வீட்டு வாசல்ல கோலம் போடறது நல்லாயில்லை !

நீ ஏன் பட்டப்பகல்ல திருடினே ?

எனக்கு மாலைக்கண் வியாதி, நைட்டுல வெளியில போகக்கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்காரு.. !

திருடன், நேத்து ராத்திரி உங்க வீட்ல திருடும்போது நீங்க முழிச்சிக்கிட்டு இருந்ததா சொல்றீங்க... அப்படின்னா ஏன் சத்தம் போடல ?
சத்தம் போட்டா நாம மாட்டிக்குவோம்னு வேலைக்காரி என் வாயப் பொத்திட்டாய்யா !

உங்க மகனைக் கண்டிச்சு வைங்க...
என்ன செஞ்சான் ?
ஒட்டுண்ணி, சாருண்ணி பற்றி எழுதச் சொன்னா திவ்யா உண்ணியைப் பற்றி எழுதறான் !

டேய், நான் திருடன்... மரியாதையா எடு பர்ஸை !
டேய், நான் போலீஸ்காரன்... மரியாதையா எடு மாமூலை !

டாக்டர் மோசமா... எப்படி ?
பேஷண்ட்டைப் பார்த்து, நீங்க எப்படி இருக்கீங்கன்னு கேட்கறாரே ?
இதிலென்ன தப்பு ?
ஆச்சரியமாகக் கேட்கறாரே !

அவன் பைனான்ஸியரோட பையன்னு எப்படிச் சொல்றீங்க ?
ஓடாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்னு படிக்கறானே !

நேத்து உங்க மனைவிக்குப் பயப்படலியா... ஏன் ?
அவ அம்மா வீட்டுக்குப் போயிருந்தா !

அவர் இன்ஸ்டன்ட் சாமியாரா இருப்பார்னு எப்படிச் சொல்றே ?
ஆசிரமத்துக்குப் பக்கத்திலேயே குழந்தைகள் காப்பகம் ஒண்ணு ஆரம்பிச்சிருக்காரே!

இப்பவெல்லாம் ஆபீசுல தூங்கமாட்டேங்கறீங்களே... ஏன் ?
நீங்க தூங்கறதாலதான் ஆபீசுல உங்களுக்கு லஞ்சம் கிடைக்க மாட்டேங்குதுன்னு பொண்டாட்டி சரமாரியா திட்டுறா !

நேத்து ஆபீஸிலிருந்து வீட்டுக்குப் போகும்போது பக்கத்து வீட்டுக்குப் போயிட்டேன் !
அப்புறம் ?
களைப்பா வந்திருப்பீங்க... காபியோட வரேன்-னு குரல் கேட்டது. சரி, நம்ம வீடு இல்லைன்னு புரிஞ்சுகிட்டேன்...

என்ன ! இப்பெல்லாம் மானேஜர் உன்னைப் பார்த்து இளிக்கறதில்லை...?
நீங்க சிரிக்கும்போது எங்க தாத்தா மாதிரி இருக்கீங்கன்னு சொன்னேன் !
நன்றி இதயம் பேசுகிறது 24-12-2000
எலெக்ஷன்ல ஜெயிக்கலைன்னா ஒரு பக்க மீசையை எடுத்துக்கறேன்னு தலைவர் சொல்றாரே... ஜெயிச்சுட்டார்னா ?
ஜனங்களை மொட்டை அடிச்சுடுவார் !

என்னது... தலைவர் கின்னஸ் ரெக்கார்டு பண்ணிட்டாரா ! எப்படி ?
ஜாதிக் கட்சி கூட்டணி தலைவர்ங்க பெயரை மட்டும் முப்பது மணிநேரம் விடாம சொன்னார்னா பாத்துக்கோ !

தலைவர் கோபமா இருக்காரே, என்னாச்சு ?
தன்மானத்தோடு வாழ்வதே எங்கள் குறிக்கோள்-னு தலைவர் சொன்னதை, சன்மானத்தோடு வாழ்வதே எங்கள் குறிக்கோள்-னு பிரசுரம் செய்துட்டாங்களாம் !

தலைவருக்கு, எதுஎதுக்குத்தான் ஜோசியம் பார்க்குறதுன்னு விவஸ்தை இல்லாமப் போச்சு...
என்னாச்சு ?
வருகிற தேர்தலில் தனக்கு எத்தனை கள்ள ஓட்டு விழும்ன்னு கேட்குறாரே !

ரஷ்யக்காரர்கள் நம் நாட்டை ஆண்டபோது-ன்னு தலைவர் தப்பா உளர்றாரே ?
நேற்றைய மீட்டிங்குல புதிய வரலாறு படைப்போம்-னு அவர் பேசினதால வந்த விளைவு !

எங்க தலைவரை கம்பி எண்ண வைக்க மடியாது ஏன் ?
எங்க தலைவருக்குத் தான் படிக்கவே தெரியாதே !

உங்க தலைவருக்கு எய்ட்ஸ் வந்ததுக்கு நீ ஏன் பயப்படுற ?
அவரு கொள்கை பரப்பு செயலாளரா வேற இருக்கிறாரே !
நன்றி குமுதம் 28-12-2000
சேவர்களுக்கு எல்லாம் சரியாக ஊதியம் கொடுக்கிறீர்களா அமைச்சரே..? யாரங்கே என்று குரல் கொடுத்தால், யாருமில்லை என்று பதில் குரல் வருகிறது !

அவர் ரொம்ப சிக்கன பேர்வழினு எப்படிச் சொல்ற ?
உட்காரக்கூட நாற்காலிக்குப் பதில் முக்காலிதான் யூஸ் பண்ணுவார் ?

மழைக்கு போடற ஷூ இருக்கா...
இல்லைங்க... மனுஷங்களுக்குப் போடற ஷூதான் இருக்கு !

உன்னோட புடவை கசங்கியிருக்கே...?
கஞ்சிக்குக்கூட வழியில்லாம இருக்கேன் !

மரியாதையா பீரோ சாவியைக் கொடு...
இதையேதாம்ப்பா நான் கல்யாணம் ஆனதுலேர்ந்து என் வீட்டுக்காரிகிட்டே கேட்டுக்கிட்டிருக்கேன்...

மாவு மில் நடத்துறியே... பிஸினஸ் எப்படி இருக்கு ?
வெரி நைஸ் !

நானும் பிரதீப்பும் ஒப்பனிங் பேட்ஸ்மேன்... சியாமும் சங்கரும் ஒப்பனிங் பௌலர்ஸ்... அருணும் குமாரும் அம்பயர்ஸ்.. .
மாட்ச் பிக்ஸர் யாரு...?

அந்த தம்பதிக்கு விவாகரத்து வாங்கித் தர்றதுலே தலைவர் மும்முரமா இருக்காரே... ஏன் ?
அவங்களுக்குக் கல்யாணம் நடத்தி வெச்சது எதிர்க்கட்சித் தலைவராம் !

அதென்ன வி.ஐ.பி. சாப்பாடு ?
சாப்பாட்டுல இருக்கற கற்களை எல்லாம் நாங்களே வந்து பொறுக்கி எடுத்துவிடுவோம் .!

என்னோட ஈ-மெயில் அட்ரஸைத் தெரிஞ்சுக்கிட்டு எவனோ அசிங்கமா மெஸேஜ் அனுப்பிருக்கான்டி !
அப்போ அதை ற-மெயில்னு சொல்லு !

அது என்ன டாக்டர்... கண் ஆபரேஷன் பில்லுல ட்யூஷன் ஃபீஸ்னு சொல்லி நூறு ரூபாய் போட்டிருக்கீங்க...?
முதல்ல டெஸ்ட்டுக்கு வரும்போது உங்களுக்கு றஇ ஙஇ ஊஇ னு போர்டு காண்பிச்சு படிக்க சொல்லிக் கொடுத்தேனே...

யாருப்பா நீ... உள்ளே டிராயர்ல வெச்சிருந்த எக்ஸ்ரே ஃபிலிமை எடுத்துட்டுப் போறே...?
டாக்டர்தான் என்னை இந்த கிளினிக்ல போய் எக்ஸ்ரே எடுத்துட்டு வரச் சொன்னாரு...

ஆபரேஷனுக்கு அப்புறம் என் வயித்து உள்ளேருந்து ஏதோ சத்தம் வருது டாக்டர்.
அப்ப என் செல்போனை உள்ளேதான் வெச்சுட்டனா...?

டாக்டர்... ஆபரேஷன் பண்றதுக்கு முன்னால என் பொண்ணுக்கு ஏன் மயக்கமருந்து கொடுக்கலை ?
உங்க பொண்ணை நான் மயக்கிட்டதா யாரும் சொல்லிடக்கூடாது பாருங்க !

டாக்டர்... உங்களைக் கைராசி இல்லாதவர்னு வெளில பேசிக்கிறாங்களே... உண்மையா...?
ஏன் கேட்கறீங்க ?
என் மாமியாரை உங்ககிட்டே அட்மிட் பண்ணலாம்னு இருக்கேன் !

அந்த கண் டாக்டர்கிட்டே மட்டும் ஏன் நிறைய பேர் ஆபரேஷன் பண்ணிக்கிறாங்க...?
ஆபரேஷன் முடிஞ்சு பேஷண்டோட கண் கட்டைப் பிரிக்கிறவரைக்கும் தினம் டி.வி. சீரியலோட கதையை டாக்டர் சொல்வாராம் !

அந்தப் பொண்ணு டான்ஸ் ஆடறதுபோது முத்திரைகள் எல்லாம் எவ்வளவு அற்புதமா இருக்கு பாருங்க !
பின்னே... தபால்காரர் பொண்ணாச்சே !

எதுக்கு வித்வான் பாடும்போது அளவுக்கு அதிகமா வாயைத் திறக்கிறார் ?
அதுவா.. ? புதுசா தங்கப்பல் கட்டியிருக்காராம்... அதைக் காண்பிக்கத்தான்... !

அந்த ஜலதரங்க வித்வான் இப்ப வாசிக்கிறதே இல்லையே... ஏன்...?
அதுவா... அவருக்குத் தண்ணீர்ல கண்டமாம் !

யோவ்... பஸ்சுக்குள்ளே சிகரெட் பிடிக்கக்கூடாதுன்னு போட்ருக்குல்ல...!
கண்டக்டர், நல்லா பாருங்க... இது பீடி !

டி.வி. ஸ்டேஷனுக்கு ஏன் அருவாளோடு போறீங்க ?
புதுசா ஆரம்பிச்சிருக்கிற கேடி-ஸ்வரன் நிகழ்ச்சியில் கலந்துக்கத்தான் !

எந்த சூழ்நிலையிலும் அந்த டாக்டர் ஆபரேஷனை நிறுத்தமாட்டார் !
ஆச்சரியமா இருக்கே !
பேஷண்ட் இறந்துட்டாகூட ஆபரேஷனை முடிச்சுட்டுத்தான் வருவார் !

நான் போனவாரம் மெகா சீரியல் பார்த்துகிட்டு இருக்கும்போது என் கணவருக்கு ஹார்ட் அட்டாக் வந்துவிட்டது !
ஐயோ ! அப்புறம் ?
அநியாயமா அந்த ஒரு நாள் என்னால சீரியல் பார்க்க முடியாமப் போச்சு !

என் மனைவி நான் கூப்பிட்டா எங்கிருந்தாலும் ஒடி வந்துடுவா !
இப்ப எங்க இருக்காங்க ?
குளிச்சுகிட்டு இருக்கா !
கூப்பிடுங்களேன் பார்ப்போம் !

நீயும் உன் மாமியாரும் வாரா வாரம் - அதுவும் வியாழக்கிழமை மட்டும் சண்டை போடுறீங்களே ஏன் ?
அதிரடி வியாழன் என்பதால்தான் !

உங்க அப்பா ரொம்பவும் பணக்காரராக இருக்கலாம்... அதுக்காக கடிதம் கூட இப்படியா எழுதறது ?
அப்படி என்ன எழுதியிருக்கிறார் ?
பணம்... பணமறிய ஆவல்-னு எழுதியிருக்கிறார் !
நன்றி இதயம் பேசுகிறது 31-12-2000
ராதிகா ரசிகரை காதலிச்சது தப்பா போச்சு.
ஏன் ?
செல்லமா சித்தி-ன்னு கூப்பிடறார் !

என்னய்யா இது, ஜன... பிப்ர...-ன்னு எழுதிருக்கே ?
ஆண்டு வருமானம் ஐம்பதாயிரத்துக்குக் குறைவா இருக்கறவங்களுக்கு வரி கிடையாதே சார் !

எதுக்காக எல்லோரும் லெப்ட்-ரைட் போட்டுத்தான் நடக்கணும்-னு மேனேஜர் சொல்றார் ?
இது மார்ச் மாசமாம் !

இந்த மாசம் தேர்தல் வர்றதை நினைச்சி தலைவர் சந்தோஷமா இருக்கார் !
ஏன் ?
கொடுத்த வாக்குறுதியை ஏப்ரல் ஃபூல்-ன்னு சொல்லிடலாமே !

இங்கிலீஷ் மாசமும் தமிழ் மாசமும் ஒண்ணு சேர்ந்தா அறிவாளியாகுமா ?

ஆமாம் ! மே-தை !

அந்த டாக்டர் போலின்னா சொல்றே ?
பின்னே... என்னோட வியாதிக்குக் காரணம் ஜீன்-ங்கறதுக்கு பதில் ஜூன்...ஜூன்-னு சொல்றாரே !

வக்கீல்களுக்கு பிடிச்ச மாசம் எது ?
□ஜூ□லை□!□

உங்க ராசிப்படி ஆகஸ்ட் மாசம் பல சோதனைகளை நீங்க சந்திக்க வேண்டியிருக்கும்...!
□ஆ□கஷ்ட□ மாசம்ன்னு சொல்லுங்க !□

உங்க மனைவி பிரசவத்தை ஒரு மாசம் தள்ளி வைக்கணுமா... ஏன் ?
ஒன்பதாவது மாசத்துல குழந்தை பிறந்தா குறைப் பிரசவம்-ன்னு நீங்கதானே டாக்டர் சொன்னீங்க. செப்டம்பர் ஒன்பதாவது மாசமாச்சே !

என் பையனை எதுக்காக சார் அடிச்சீங்க ?
அக்டோபர்-2 காந்தி ஜெயந்தின்னு சொன்னதுக்கு, காந்தியைத் தெரியும்... அது யாரு சார் ஜெயந்திங்கறான் !

என்னது... நவம்பர்லயே டிசம்பர் வந்துடுமா ?
ஆமாம் ! நவம்பர் மாசத்துலயே டிசம்பர் பூ விற்க ஆரம்பிச்சுடறாங்களே !

எதுக்காக உன் லவ்வரை இன்னிக்கி சந்திக்கமாட்டேன்-னு சொல்றே ?
ஆமா நியூ இயர் அன்னிக்கு அந்த முஞ்சியை யார் பாக்கறது ? !

போன வருஷம் டைரி தரலைன்னு வருத்தப்பட்டீங்களே ..!
ஆமாம் சார் ! இந்த வருஷம் கிடைக்குமா ?
இந்தாங்க... போன வருஷத்து டைரி !

போன வருஷத்து பழக்கத்தை இந்த வருஷம் விட்டுட்டியா ?
ஆமாம் வருஷத்தை 2000-ம்னு எழுதினதைத்தான் !

தின காலண்டர் தர்றேன்னீங்களே என்ன ஆச்சு ?
தினமும் ஒவ்வொரு ஷீட்டா தறேன் வாங்கிக்குங்க !

எதுக்காகடா திருடன் கிட்டே கல்லாப்பெட்டி சாவியைக் கொடுத்தே ?
நீங்கதானே முதலாளி புத்தாண்டு அன்னிக்கி யார் என்ன கேட்டாலும் இல்லை-ன்னு சொல்லக் கூடாதுன்னீங்க !
நன்றி குமுதம் 4-1-2001
மாப்பிள்ளை கிரிக்கெட் பைத்தியம் !
அதுக்காக ஊர்வலம் வரும் போது தெருக்கடையில் உள்ள டி.வி. கடையில கிரிக்கெட் மேட்ச் பார்க்கிறது நல்லாயில்லை !

முதல் ராத்திரியிலே என் கணவர் பெரிய குண்டைத் தூக்கிப் போட்டுட்டாருடி... !
என்னடி சொல்றே ?
அவருக்கு சமைக்கத் தெரியாதுன்னுட்டாரு...!

என்ன சர்வர் சாப்பாட்டுல பெரிய பெரிய கல்லா கிடக்கு ?
ஃபேன் காத்துல இலை பறக்காம இருக்க சாப்பாட்ல நாங்க போடற டேபிள் வெயிட்தான் சார் அது !

என்னால் ஆசைகளை துறக்க முடியவில்லை சுவாமி ஜி !
அப்ப என்னை மாதிரி ஆசிரமம் ஆரம்பித்துவிடு மகனே !

பாகவதர் பாடும்போது இடை யிடையே மூக்குப்பொடி போடுவது போல் அபிநயம் காண்பிக்கிறாரே.. ஏன் ?
டி.வி-யில் கச்சேரி செய்தவராம் மூக்குப் பொடி கம்பெனி விளம்பரத்தை இப்படி காண்பிக்கிறார் !

ஒரே வயிற்று வலி என்னால தாங்க முடியல சீக்கிரமா குணப்படுத்துங்க டாக்டர்.. .!
நாசமாப் போச்சு. நான் சங்கீத வித்வான் டாக்டர் சங்கரய்யாப்பா.. .!

இது நவநாகரீக யுகம். மேட்சிங் மோகம் ஆண்களை விட பெண்களையே அதிகமாக ஆட்டிப் படைக்குது.
சிவப்புக் கலர்ல புடவையும் அதே கலர்ல ஜாக்கெட்டும் போட்டுக்கிட்டு ஒரு பொண்ணு கிச்சன்லே உட்கார்ந்திருச்சி.
புருஷன்காரன் பயந்து போயிட்டான்.
இப்படி உட்காராதேடி எம்ப்டி கேஸ் சிலிண்டர்-னு நினைச்சி சிலிண்டர் கொண்டு வர்றவன் தூக்கிட்டு போயிடப்போறான் ! அப்படின்னுட்டான்.
அந்தம்மாவுக்கு கோபம் வந்திருச்சி. கேஸ் சிலிண்டர்னு சொன்னதுக்குக் கூட இல்லை. எம்ப்டி சிலிண்டர்-னு எப்படிச் சொல்லலாம்-னுதான்.
அன்னைக்கு ஒரு வீட்டிலே கணவனும், மனைவியும் சினிமாவுக்குப் புறப்பட்டாங்க.
அந்த அம்மா பச்சை சாத்துற படலத்திலே மூழ்கிட்டாங்க. புடவை பச்சை, ஜாக்கெட் பச்சை, வளையல் பச்சை, கம்மல் பச்சை, ரிப்பன் பச்சை, நெக்லஸ் பச்சை கைப் பை பச்சை.
திருப்தி ஏற்படலை செருப்பு பச்சையா அமையலை. நல்லவேளை அவரோட ஹவாய் செருப்பு வார் கொஞ்சம் பச்சை அதைக் கொடுத்து சமாளிச்சு நிம்மதியா பெருமூச்சு விட்டார் கணவர்.
பஸ் ஸ்டாப்புக்கு வந்ததும் பிரச்சினை பெரிசாயிடுச்சி. சிவப்பு கலர்லே டவுன் பஸ் வந்திச்சி. ஏறுவோம்னார் அவர்.
வேணாம், பச்சை கலர் பஸ் வரட்டும்-னாங்க அந்தம்மா.
அந்த பஸ் நாம போற தியேட்டருக்குப் போகாதும்மா !
அப்போ தியேட்டரை மாத்துங்க ! அப்படின்னாங்களே பார்க்கலாம் !
இந்த மேட்சிங் மோகம் வந்ததினாலே தான் ஜிமிக்கி எல்லாம் இப்போ அமுக்கியா மாறிடுச்சி. புடவைக்கு மேட்சா ஒண்ணை வாங்கி காதுலே அமுக்கிடறாங்க.
புடவை எடுத்து முடிக்கவே ஒரு யுகம் ஆகும். அதுக்கு மேட்சா ஜாக்கெட் பிட் எடுக்க அலைவாங்க. அது அதைவிடக் கொடுமையானது. கடைக்காரர் அந்தப் புடவையைக் கையிலே வச்சிகிட்டு ஜாக்கெட் துணி இருக்கிற பீரோவிலே தீபாராதனை காட்டுற மாதிரி வச்சி வச்சி எடுப்பார் பாருங்க ரொம்ப வேடிக்கையா இருக்கும்.
இப்படித்தான் ஒரு ஜாக்கெட் பிட் எடுக்க புருஷனும், பெண் ஜாதியும் கடை கடையா ஏறி இறங்கினாங்க.
கட்டியிருக்கிற புடவைக்கு மேட்சா ஒரு ஜாக்கெட் துணி கொடுங்கன்னு அந்த அம்மா கேட்க, கடைக்காரர் ஒவ்வொரு பிட்டா எடுத்து இந்த அம்மா மேலே வச்சி வச்சி பார்க்க, புருஷன்காரன் மனசு படபடன்னு துடிக்க ஆரம்பிச்சது.
கடைசியிலே கடைக்காரர், அம்மா உங்களுக்கு எதுவுமே மேட்ச்சா அமையலை-ன்னு சிம்பாலிக்கா சொல்ல, ஆமா அது சரிதான்னு சொல்லி அந்தம்மா புருஷனைத் திரும்பிப் பார்த்து பெருமூச்சு விட ஒரே ரகளைதான் போங்க.
ஒரு நடிகையிடம் ஒரு பத்திரிகை நிருபர் பேட்டி எடுத்தார்.
உங்களுடைய கூந்தல் கருமையாக, பளபளவென்று நீளமாக இருக்கிறதே, நீங்கள் உங்கள் கூந்தலை எப்படி பராமரிக்கிறீர்கள் ?
ஓ...! அதுவா. காலையில் குளிக்கும்போது நன்றாக ஷாம்பூ போட்டு கூந்தலைக் கழுவுகிறேன். பிறகு ஃபேன்லே காய வைக்கிறேன். பகலெல்லாம் தூசு தும்பு படாமல் பத்திரமாகப் பாதுகாக்கிறேன். இரவு படுக்கப் போகும்போது மட்டும் கழட்டி ஆணியிலே மாட்டி விடுகிறேன்.
நிருபர் மயக்கம் போட்டு விழுந்துவிட்டார். பின்னே சவுரி முடி அப்படித்தானே இருக்கும். அதுக்கு அந்தப் பெயர் வந்ததே பொருத்தம்தான். சவுரிம்னே வச்சிக்கலாம், சவுரியமில்லாட்டி கழட்டி ஆணியிலே மாட்டிரலாம்.
ஒரு வீட்டிலே புருஷன் தன் பெண்டாட்டிகிட்டே, இந்தாடி இந்த சவுரி முடி நானே என் கையாலே தயாரிச்சது வச்சுக்கோ என்றார்.
அதுக்கு அந்த அம்மா இவ்வளவு முடி வச்சி எப்படி தயாரிச்சீங்கன்னு ஆச்சரியமா கேட்டுது.
தினம் நீ போடுற சாப்பாட்டிலே கிடக்கிற தலைமுடியை எடுத்து கலெக்ட் பண்ணித்தான் இது செஞ்சேன் அப்படின்னார் அவர்.
இப்போ சவுரி முடி எதுக்கெல்லாம் பயன்படுது தெரியுமா ? நாமெல்லாம் பஸ்சிலே இடம் பிடிக்க கைக்குட்டையைப் போடுவோம். துண்டைப் போடுவோம். ஒரு அம்மா சவுரிமுடியைப் போட்டு வச்சிருந்திச்சி. அப்புறம் கூட்டத்திலே முண்டியடிச்சி பஸ்சுக்குள்ளே ஏறிப் போய் சீட்டிலே உட்காரப் போனா பக்கத்து சீட்டு அம்மா உட்கார விடலை. ஏன்னா அடையாளம் மாறிப்போச்சே.
பஸ் பயணத்திலே இன்னொரு சம்பவம். ஆணும், பெண்ணுமா பல பேரு பஸ்சிலே கூட்டமா நின்னுகிட்டு இருந்தாங்க ஸ்டாப் வந்ததும் டிரைவர் சடன் பிரேக் போட்டார். பஸ் குலுக்கத்திலே பலபேரு தடுமாறி மேலே கம்பியைப் பிடிச்சிக் கிட்டாங்க. சிலபேர் குழப்பத்திலே முன்னாடி நின்ன பொண்ணுங்களோட ஜடைகளைப் பிடிச்சிக்கிட்டாங்க. ஆனால் என்ன ஆச்சரிம் பாருங்க. ஜடைகளெல்லாம் அவங்க கையிலே இருக்க, பொண்ணுங்க இறங்கிப் போயிட்டே இருக்காங்க.

ஒரு காலத்தில் பெண்களோட கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா இல்லையான்னு ஆராய்ச்சி நடந்துச்சாம். இப்போ கூந்தலே இருக்கா இல்லையான்னு ஆராய்ச்சி நடத்த வேண்டியிருக்கலாம். அந்த காலத்திலே பெண்கள் கூந்தலை அவிழ்த்துவிட்டா தரை வரைக்கும் வந்து விழுமாம். இப்போ தரையிலே விழுந்துடுதாம்.
முடி மட்டுமா போலி ? ஒரு காதலன் தன்னோட காதலியோட பல் அழகிலே மயங்கி உனக்கு முத்துப் போல் பல்லு-ன்னு மூச்சுக்கு மூச்சு சொல்ல ஆரம்பிச்சிட்டான். அவள் ஒருநாள், அட இருய்யா-ன்னு கழட்டி கையிலே கொடுத்துட்டா.
பெண் பார்க்கப் போன இடத்துல பையனோட அம்மா சீக்கிரம் பொண்ணைக் கூப்பிடுங்க-ன்னு சொன்னதும் பெண்ணோட அப்பா படபடன்னு சொல்ல ஆரம்பிச்சார்.
கொஞ்சம் பொறுங்க. சாயந்தரமா வர்றோம்னு சொல்லிட்டு இப்படி காலையிலேயே வந்துட்டீங்க. அவள் கண் டாக்டரையும், பல் டாக்டரையும் கன்சல்ட் பண்ணிட்டு, அப்படியே பியூட்டி பார்லர்லே ஹேர்டையும் பண்ணிட்டு வந்துடறேன்னு போனா. இப்ப வந்திடுவா. மறுநிமிடம் பொண்ணு பார்க்க வந்தவங்க அந்த இடத்திலே இல்லை.
பெண்கள் செயற்கையா தங்களை அழகுபடுத்திக்கிறதை விட அன்பால் தன் கணவனைக் கவர்வது தான் எப்பவும் நிலைச்சி இருக்கும்.
ஆடம்பரமான பெண் ஒருவனின் கவனத்தைக் கவருகிறாள். ஆழகான பெண் ஒருவனின் கலை உணர்விற்கு விருந்தாகிறாள். அன்பும், பரிவும் உள்ள பெண்தான் அவனைத் தன்னுரிமையாக்கிக் கொள்கிறாள். இது பெண்களைப் பற்றி அறிஞர் அரிஸ்டாட்டில் சொன்னது. இதைப் புரிஞ்சிக்கிட்டா இல்லறத்தில் எதுக்கு பிரச்சினை வருது ?
நன்றி குங்குமம் 5-12-2000
ஆத்துத் தண்ணியில குதிச்சு டைவ் அடிச்சேன்... உடனே டிராஃபிக் போலீஸ்காரர் வந்து ஐம்பது ரூபாய் ஃபைன் போட்டுட்டார் !
ஏன்.. !
டைவிங் லைசென்ஸ் இல்லாம டைவ் அடிச்சதுக்காக.

உலக அழகிப் போட்டியில கலந்துக்கிட்ட ஒரு பொண்ணு தோத்துப்போனது தெரிஞ்சதும் பயங்கரமா அழுதுக்கிட்டே இருந்தாளாம்.
ஐயையோ... அப்புறம்...?
உலக அழுகின்னு பட்டம் கொடுத்துட்டாங்களாம் !

அந்தாளு செருப்பு வாங்கறதுக்குக்கூட ஜோசியரை அழைச்சிட்டுப் போவாரு.
எதுக்கு..?
ஜோடிப் பொருத்தம் பார்த்து வாங்கறதுக்குத்தான்.

எப்படிய்யா கட்சியில் இவ்ளோ பெரிய பதவி உனக்கு திடீர்னு கிடைச்சது...?
வெவ்வேற கெட்டப்ல மேக்கப் போட்டு ஏழு அடையாள அட்டை வாங்கி வெச்சிருக்கிறதை தலைவர்கிட்டே கொண்டுபோய் காமிச்சேன்.

எதுக்குய்யா ஒருத்தன் போட்டோவை மட்டும் இவ்ளோ சின்னதா ஒட்டி வெச்சிருக்கே...?
அவன் கரெக்டா மாமூல் கொடுத்துடறான் சார்.

பாத்திரம் தேய்க்கிறதுக்கு வேலைக்காரி வெச்சிட்டேன், தெரியுமா...?
ரொம்ப அலட்டிக்காதே. நான் பல் தேய்க்கிறதுக்கே வேலைக்காரி வெச்சிருக்கேன்.

என் மனைவிக்கு இந்த தடவை குறைப்பிரசவம் !
நிஜமாவா...?
ஆமாம்... ஒவ்வொரு தடவையும் ரெண்டு குழந்தை பிறக்கும். இந்த தடவை ஒண்ணுதான் பிறந்தது !

சங்கீத மும்மூர்த்திகள் யாரு ?
வேற யாரு... சபா செக்ரெட்டரிகள், கான்டீன் காண்ட்ராக்டர்கள், ரசிகர்கள்தான் !

என் அம்மாவை ஏன் ஊருக்கு அனுப்பிட்டே ?
என்னை கொழுப்பையே கிட்ட சேர்க்கக்கூடாதுன்னு டாக்டர் சொல்லிட்டாரு !

நெட் ஜோக்
பாட்டு
பார்த்தியாடி... நம்ம பையனுக்கு அப்படியே என் மூளை.. .!

தெரியும்.
எப்படி ?
என் மூளைதான் என்கிட்டேயே இருக்கே !
எசப்பாட்டு
ஆம்பளைங்களைவிட பொம்பளைங்களுக்கு ஆயுள் அதிகமா இருக்கே... என்ன காரணம் ?
அவங்களுக்கு தான் பொண்டாட்டிங்கிற ஒரு தொந்தரவே கிடையாதே !

உங்க மகனை பி.ஏ. வரைக்கும் படிக்க வெச்சுட்டு வேலைக்கு அனுப்பாம ஜால்ரா போட கத்துக்கொடுக்கறீங்களே..?
பின்னாலே நல்ல வேலை ஏதாவது கிடைச்சா அவனுக்கு பிரயோஜனமா இருக்குமேன்னு தான்.. .!

உங்க சபால என் ராத்திரி கச்சேரியை, சாயங்காலம் கச்சேரியா மாத்திக் தர முடியுமா ?
ஏன் ?
வேறு ஒரு சபால ராத்திரி கச்சேரி பண்ணப்ப க்ரோர்பதி, சித்தி, பார்க்க முக்கால்வாசிக் கூட்டம் வெளியே போயிடுச்சு.. .!

ஏன் உங்க மனைவி வரும்போது, நீங்க கண்ணாடி போட்டுக்கறீங்க...?
டாக்டர்தான் தலைவலி வந்தா, என்னைக் கண்ணாடி போட்டுக்கச் சொன்னாரு...

கல்யாணப் பேச்சு பேச ராத்திரியிலே ஏன் வீட்டுக்கு வரவேண்டாங்கறீங்க ?
டி.வி. பார்த்திட்ருக்கற வீட்டுப் பொம்பளைங்க கண்ணீரும் கம்பலையுமா இருப்பாங்க... அதான் !

நான் பாட ஆரம்பிச்சேன்னா போதும்... எல்லோருமே பேசறதை நிறுத்திடுவா !
உங்ககிட்டதானே ? !

உங்க ரசிகர்கள் மேல நீங்க இப்பல்லாம் ரொம்பக் கோபமா இருக்கீங்களே... ஏன் ?
நான் பாடும்போது என்னையே மறந்து பாடறேன் சார்... அவங்களும் அதே மாதிரி என்னை மறந்துடறாங்க...
கச்சேரிக்கு வர்றதில்லே !

ஏண்டா... பக்கத்து வீட்டு மாமா சங்கீதம் கத்துத் தரேன்னு சொன்னதுக்கு வேண்டாம்னு சொல்லிட்டியாமே... ஏன் ?
அடுத்த வீட்டு சங்கதியெல்லாம் நமக்கு வேண்டாம்னு நீதானேப்பா சொல்லியிருக்கே.. .!

அவர் ஏன் பி.ஏ. மியூசிக்ல ஃபெயில் ஆயிட்டே இருக்கார்.. .?
அவர் கோட்டு வாத்தியக்காரராச்சே !

நீங்க பாட்டுக்குப் பொறுப்பே இல்லாம நான் கரடி கத்தறா மாதிரி பாடறேன்னு பேப்பர்ல எழுதிட்டீங்க !
ஏன்... இப்ப என்ன ஆச்சு ?
எல்லோரும் என்னை மிமிக்ரி ஷோ பண்ணச் சொல்லி கூப்பிடறாங்க... கச்சேரிக்கு ஒரு பய கூப்பிடறதில்லே !

தலைவர் என்ன ரொம்பக் கோபமா இருக்காரு...?
புயல் எச்சரிக்கை கொடியை ஏத்திவைக்க அவரைக் கூப்பிடலையாம் !

நான் எடுக்கப் போற படத்துல ஹீரோ குடும்பக் கட்டுப்பாடு அதிகாரியா இருக்காரு...
அப்ப முக்கோணக் காதல் கதைனு சொல்லுங்க...?

இந்தப் படம் மூணாவது முறை பார்க்கும் போதுதான் புரிந்தது...
அவ்வளவு கஷ்டமான கதையா ?
ம்ஹூம்... முதல் இரண்டு தடவையும் கேர்ள் ஃப்ரெண்டோட போனேன்...

ஒருவேளை உங்களுக்கு முந்தி எனக்கு மேரேஜ் ஆயிட்டா நீங்க என் மேரேஜுக்கு வருவீங்களா ரமேஷ் ?
கண்டிப்பா என் மனைவியையும் அழைச்சிட்டு வருவேன் டார்லிங் !

போன படத்தைவிட இது லோ பட்ஜெட் படம்னு சொன்னதும் ஹீரோயின் பயப்படறாங்க சார்.
ஏன் ?

அவங்களுக்கு டிரெஸ் இருக்குமான்னு சந்தேகப்படறாங்க !

பால் எல்லாத்தையும் பூனை குடிக்கிற வரைக்கும் என்ன பண்ணிக்கிட்டு இருந்தீங்க...
இந்தப் பூனையும் பால் குடிக்குமான்னு பார்த்துக்கிட்டு இருந்துட்டேன்.

மனைவிக்கு ஆபரேஷன் நடந்தப்போ அழுதுட்டிருந்தாரேன்னு ஆபரேஷன் சக்ஸஸ்ன்னு பொய்ச் சொன்னேன்.
சந்தோஷமாயிட்டாரா ?
ஊஹூம், இன்னும் அதிகமா அழ ஆரம்பிச்சுட்டார்.

சீரியஸ் ஆபரேஷன்ல செத்துப் பிழைச்சிருக்கே... ஆபரேஷன் பண்ணின டாக்டரே இன்று போல் என்றும் வாழ்க-ன்னு வாழ்த்தினதும் எப்படியிருந்தது உனக்கு.. ?
எமனே நேரில் வந்து ஆசீர்வாதம் பண்ணின மாதிரி இருந்தது நர்ஸ் !

எதுக்கு டாக்டர் மூச்சை இழுத்துவிட சொல்றீங்க ?
ஆபரேஷனுக்குப் பிறகு மூச்சுவிட முடியாது. அதான் இப்பவே ஆசைதீர இழுத்து விட்டுக்கங்க !

உங்க பொண்ணுக்கு பூப்பு நீராட்டு விழான்னு தபால் போட்டுருந்தீங்கள்ல... தபால் ஸ்டிரைக்னால லேட்டாதான் கிடைச்சுது.
அதனாலென்ன ? நாளைக்கு அவளுக்குக் கல்யாணம்... இருந்து வாழ்த்திட்டுப் போங்க !

நான் ஃபைனான்ஸ் முதலாளியை லவ் பண்ணுற விஷயம் எல்லாருக்கும் தெரிஞ்சு போச்சு..
அதனால என்ன ?
எப்ப ஓடிப்போகப் போறீங்கன்னு கேட்கறாங்க !

நம்ம தலைவரை ஏன் கைது பண்றாங்க ?
குளிர்கால கூட்டத்தொடருக்கு வந்த உறுப்பினர்கள் எல்லாருக்கும் கம்பளி ஆடை வழங்கிய செலவு 10 லட்சம் என்று பொய்க் கணக்கு எழுதியிருக்காராம் அதான்.

கண்டக்டர் ஏன் விசிலுக்கு பதிலா சங்கை ஊதறார் ?
டிரைவர் புதுசாம். டிரைவிங் அரைகுறையாத்தான் தெரியுமாம் !

ஏன்யா... எனக்கு மேடையில நாற்காலி போடலே.. ?
நீங்கதானே தலைவரே எனக்கு நாற்காலி ஆசை இல்லைன்னீங்க.. .!

பாடகர் முன்னாலே ஒருத்தர் டபரா செட்-டைக் காட்டுறாரே... ஏன் ?
காபி ராகத்துலே பாட்டு வேணுமாம் !

எதுக்கு உங்க மனைவி உங்களை முறைச்சிட்டுப் போறாங்க ?
புதுசா வேலைக்குச் சேர்ந்த வேலைக்காரிக்கும் உனக்கும் இடையில ஆறு வித்தியாசமிருக்குன்னு சொன்னேன்...
அதான் !

தலைவர் ஏன் தினமும் மெகா சீரியல் பாக்கறாரு ?
தன்மேல உள்ள வழக்குகளை எப்படி இழுக்கறதுன்னு கத்துக்கறாரு.

என்னதான் மெகா தொடர்னாலும் இப்படியா ?
ஏன் என்ன ஆச்சு ?
டைட்டில் கார்டை மட்டுமே அரை மணிநேரம் போட்டுட்டு தொடரும்னு போட்டுடறாங்க தினமும்.

அந்த மெகா தொடர்ல, ஒரு வீட்ல நாலு சுவத்துக்குள்ளயே நடக்கற மாதிரிதான் கதையைக் கொண்டுட்டு போறாங்க...
அதான் தொடர் முடியறப்ப, தொடரும்-னு போடறாங்களா ?

மெகா சீரியல் டைரக்டரை கட்டிக்கிட்டது தப்பாப் போச்சு.. .!
ஏன் ?

எங்கே போனாலும் என்னையும் இழுத்துக்கிட்டே போறாரு.. .!

உங்க மெகா சீரியலில் அப்பா வேஷம் இருந்தா கொடுங்க..
இதுக்கு முன்னாடி உங்களைப் பார்த்திருக்கிறேனே ?
இதே சீரியல்ல சில வருஷங்களுக்கு முன்னாடி ஹீரோவா சான்ஸ் கேட்டு வந்தேனே.. .!

இந்த சரித்திர மெகா தொடர்ல 20 எபிசோடா போர் நடக்கறதையே காட்டி வெறுப்பேத்தறாங்க...
ரொம்பத்தான் போர்-னு சொல்லுங்க !

டேய் கபாலி ! திருடின நகைகளை எங்கே வெச்சிருக்கேன்னு சொல்லிடு !
யாரும் எடுக்காம இருக்கணும்னு தபால் பெட்டி-யில போட்டு வெச்சிருக்கேன் சார் !
நன்றி குமுதம் 11-1-2001
எங்க கடைல வாங்கற டி.வி-க்கு இந்த மெகா சீரியல் முடியற வரைக்கும் கியாரண்டி உண்டு...
அப்படியா... வெரிகுட்... பத்து வருஷத்துக்கு மேலே யாரும் கொடுத்ததே இல்லையே!

பக்தா... உனக்கு என்ன வரம் வேண்டும்...?
நான் இந்த மெகா சீரியல் முடியும் வரை உயிரோடு இருக்கணும்...
சாகா வரமெல்லாம் என்னால் கொடுக்க முடியாது !

புது வருஷ தள்ளுபடி விற்பனைல உங்க மனைவிக்கு ஏதாவது வாங்கி கொடுத்தீங்களா...?
மிக்ஸி வாங்கினேன்...
உங்களுக்கு சரி ! உங்க மனைவிக்கு எதுவும் வாங்கிக் கொடுக்கலையா.. ?

மக்களுக்குச் செய்த சேவைக்காக உள்ளே வந்தியா... அப்படி என்ன செய்தே ?
எல்லாரும் கஷ்டப்படறாங்களேன்னு புது அஞ்சு ரூபா நோட்டு அடிச்சேன் !

என் பையன் இந்திய கிரிக்கெட் டீம்ல செலக்ட் ஆகியிருக்கான்...
முன்ஜாமீனெல்லாம் எடுத்துட்டீங்களா...?

என் ரெண்டு பசங்கள்ல பெரியவன் பைலட்டா இருக்கான். சின்னவன் தறுதலையா இருக்கான் சார்...
அப்ப ஒருத்தன் உலகத்தை சுத்தறான்... இன்னொருத்தன் ஊரைச் சுத்தறான்னு சொல்லுங்க !

இன்றைய டான்ஸ் புரோக்ராமுக்கு அந்த அரசியல்வாதியைத் தலைமை தாங்கக் கூப்பிட்டது தப்பாப் போச்சு.
ஏன் ?
ஜதி ரொம்ப முக்கியம்னு சொல்றதுக்குப் பதிலா ஜாதி ரொம்ப முக்கியம்னு சொல்றார் !

பரவாயில்லையே... கணவனோட நட்டுவாங்கத்துக்கு மனைவி டான்ஸ் ஆடறாளே, பேஷ் !
வீட்ல தலை கீழ் !

இந்தப் புது வருஷம் 2001-லேர்ந்து மனைவி கிட்டே பயப்படக்கூடாதுனு சபதம் எடுத்திருக்கேன்...
இந்த விஷயம் உங்க மனைவிக்குத் தெரியுமா...?
சொல்ல பயமா இருக்கு. தெரிஞ்சா திட்டுவா !

என்னது... கையில சாத்துக்குடியைச் சொருகிக்கிட்டிருக்கீங்க...?
நகச்சுத்தி பரவி, கைசுத்தி ஆயிடுச்சு டாக்டர் !

சின்ன ஆபரேஷன்தான்... பயப்பட வேண்டாம்.
டாக்டர் பெரிய ஆபரேஷன்னு சொன்னாரே...?
டாக்டருக்கு இது பெரிய ஆபரேஷன் !

நான் இப்ப தினமும் வாக்கிங் போறேன்னா, அதுக்கு நம்ம டாக்டர்தான் காரணம் !
ஏன்... ரொம்ப ஸ்ட்ரிக்ட்டா..?

நீ வேற... முதல்ல கார்ல வந்துட்டிருந்தேன். ட்ரீட்மெண்ட்டுக்குச் செலவு செஞ்சு செஞ்சு, இப்ப நடக்கும்படி ஆயிடுச்சு !

டாக்டர், பயங்கர முதுகுவலி... என்ன பண்ணலாம்...?
தைலம் அப்ளை பண்ணுங்க...
அப்படியும் வலி போகலேன்னா...?
லீவுக்கு அப்ளை பண்ணுங்க !

அந்த டாக்டர் பேஷண்ட்டுகிட்டே நைஸா பேசி, ஐஸ் வெச்சு ஆபரேஷனுக்கு முன்னாடி ஃபீஸை வாங்கிடுவாரு !
ஏன் அப்படி..?
ஆபரேஷனுக்கு அப்புறம்னா, அவரால ஐஸ் மட்டும்தான் வைக்க முடியும்... ஃபீஸை வாங்க முடியாதே !

உடம்பெல்லாம் கன்னாபின்னானு வேர்க்குது டாக்டர் !
கவலைப்படாதீங்க... செக் பண்ணிடலாம்...
நான் ட்ரீட்மெண்ட்டுக்கு வரலை டாக்டர்... உங்க ஏ.ஸி. ரூம்ல கொஞ்ச நேரம் இருந்துட்டுப் போகலாம்னு வந்தேன் !

ஹேப்பி நியூ இயர்... புது வருஷத்தன்னிக்கு என் படம் ரிலீஸ் ஆகுது !
ரெண்டுல ஏதாவது ஒண்ணு சொல்லுங்க சார்... அப்படி ரெண்டும் சேர்த்துச் சொல்லணும்னா, வெறும் நியூ இயர்-னு சொல்லுங்க !

நம்ம தலைவர் அரசியலை விட்டதும் காலண்டர் பிஸினஸ் ஆரம்பிச்சிருக்காரு, தெரியுமா...?
ஹூம்... சுருட்ட தொழிலை விடவே மாட்டார் போலிருக்கு !

டாக்டர் தொழிலும் இப்ப வியாபாரமா போச்சு...
-
எப்படி சொல்றீங்க ?
பாருங்க... அந்த டாக்டர் புது வருஷம் ஜனவரி ஒண்ணாம் தேதி அன்னிக்கு ஜூரத்தோட வர்றவங்களுக்கு ஒரு தர்மாமீட்டர் ஃப்ரீயா கொடுக்கறாராம்...
நன்றி ஆனந்த விகடன் 7-1-01
□இங்கே வந்துட்டா எப்போதும் ரொம்ப ஜாலியாகத்தான் இருப்போம். ஏன்னா வீட்டுல எங்களுக்கு பல கஷ்டம் இருக்கும். அதெல்லாம் கம்பெனி வந்ததும் மறந்திடும்□ என்று சிரிப்புக்கு வட்டம் போட்டனர் அட்டையில் இருக்கும் எக்ஸ்போர்ட் நிறுவன ஊழியைகள்.
உடனே நாமும் உஷாராகி □சரி, இப்போ நாங்க சொல்ற □ஜோக்ஸ்□ கேளுங்க, உங்க சாய்ஸை சொல்லுங்க□ என்று தொடங்கினோம். கையில், அந்த வாரம் நம் அலுவலகத்துக்கு வந்திருந்த ஜோக்குகள்.
□நான் நூறு வயது வாழ என்ன டாக்டர் பண்ணணும் ?□
□போச்சுடா, உங்களை என் கிளினிக் பக்கம் வரக்கூடாதுன்னு எத்தனை தடவை சொல்றது□ (வெ. ராஜாராம்) என்று நாம் சொன்னதும்.
□டாக்டர், எதுக்கு வீண்வம்பை விலை கொடுத்து வாங்கணும். ஒருவேளை டாக்டரால் அவர் அப்படி ஆனாரோ□ என்றார்.
அடுத்து நாம் தந்த ஜோக்
□என்ன பொங்கல் பண்டிகைக்கு போய் உங்கள் மனைவி மைசூர்பாகு பண்ணியிருக்காங்க ?□
□நீங்க வேற, அது தீபாவளிக்குப் பண்ணினது. உடைக்கறதுக்குள்ளே பொங்கல் வந்துடுச்சி.□ (வி. சாரதி டேச்சு)
பதில் ஜோக் சொல்கிறார் செல்வி. □மைசூர்பாகுல சர்க்கரைக்கு பதிலா சிமெண்ட் போட்டு செய்துட்டாங்களோ என்னவோ. ரெண்டு பேரும் சேர்ந்து உடைச்சிருந்தா பொங்கலுக்கு முன்னமே உடைச்சிருக்கலாமே.□
□இந்த வருஷம் உன் கணவர்தான் பொங்கல் பண்ணுறாராமே ?□
□உனக்கு யார் சொன்னது...?□
□இன்னைக்கு காலையிலே என் கணவர் சட்னி அரைக்கும்போது சொன்னார்.□ (சாரதி டேச்சு)
□இது ஒண்ணும் புதுசில்லே சிலரோட வீட்டுல நடக்கிறதுதான். ஆனால் ஒண்ணு மட்டும் நிச்சயங்க வருங்காலத்தில் புடவைகளுக்கு பஞ்சம் வந்திடும்□ என்று ஜூலியானா மேரி எச்சரித்தார்.
□பொங்கல் அன்னிக்கு பானை வாங்கினதுக்காக அவரைப் போய் போலீஸ் பிடிச்சுகிட்டு போய்டுச்சு.□
□என்ன அநியாயமா இருக்கே !□
□அவர் பானை வாங்கினது கள்ளச் சாராயம் காய்ச்சறதுக்காம்□ (சாரதி டேச்சு). ஜோக்கைக் கேட்டதுமே சிரித்துக் கொண்டு சீறினார் ரேவதி-□ஏங்க பொங்கல் பானைக்கும் சாராயப் பானைக்கும் வித்தியாசம் தெரியாதா...□
நாம் வியப்புடன் பார்த்ததும் சட்டென சொன்னார். □நான் சொல்லட்டுமா சாராய பானை எப்படியிருக்கும்னு□.

□அய்யய்யோ வேண்டாம்ங்க.□
இப்போ இந்த □ஜோக்□ கேளுங்க.
□அவருக்கு தொழில்ல ஜாண் ஏறினா முழம் சறுக்கறது. அதனால தொழிலையே விட்டுட்டாரு.□
□அவரு என்ன தொழில் பண்றாரு ?□
□தென்னை மரத்துல ஏறி தேங்காய் பறிக்கிற தொழில் !□ (சாரதி டீச்சு) என்றதும் □அவர் தொழில விட்டது நல்லதாப் போச்சு. மரம் ஏறும்போது படாத இடத்துல பட்டு மொத்தமும் வழுக்கிடப் போகுது□ என்று கட்டி அணைத்து ஏறும் தென்னை மரத் தொழிலின் கவனத்தைச் சொல்லியதும் நம் கவனம் அடுத்த சிரிப்புக்கு சென்றது.
□உங்களுக்கு 55 வயசு ஆகுது. உங்க வயசுக்குத் தகுந்த மாதிரி 50 வயசான பொண்ணா பார்த்து கல்யாணம் பண்ணியிருக்கலாமே !□
□யுவர் ஆனர், 50 வயசு பொண்ணு கிடைக்கல. அதனால்தான் 25 வயசு பொண்ணுங்க 2 பேரை கண்ணாலம் கட்டிக்கிட்டேன் தப்பா...?□ (சி.பி. செந்தில்குமார்)
□சரியான ஜோக் ! இப்போ பெரிசு படுதுற பாடு செம லொள்ளா போயிடுச்சு. பஸ்சுல அதுக படுத்துற பாட்டுக்கு அளவே இல்லியே. ரெண்டு என்ன மூணுகூட கேட்கும்□ என்று பெரிசுகளை வெடிச் சிரிப்புடன் சாடினார் நஸ்ரீன்.
□அது என்ன பொங்கல் சிறப்புக் குலுக்கல் ? பானையில போட்டுக் குலுக்குவாங்க□ (சாரதி).
□லூட்டிக்கு அளவே இல்லாம போயிடுச்சு. அதுக்காக பொங்கலைக் கூடவா கிண்டல் அடிக்கிறது. சரியான கடிங்க.□ - தேவி.
□களிமண்ணாட்டம் சோப் வேணும். இருக்குதா ?□
□எதுக்கு இப்படி கேட்கறீங்க ?□
□என் கணவருக்கு மூளைச் சலவை பண்ணத்தான்.□ (எஸ். சேது ராமன்)
நாம் சொன்ன ஜோக்கிற்கு...
□கணவனை கண்கண்ட தெய்வமா வணங்கும் நம் நாட்டுல புருஷனை களிமண்ணுன்னு சொல்லிட்டு அந்த அம்மா சுலக்ஷனாவின் அழகு சோப் ரெக்சோனா போலிருக்கு.□ கலா சொன்னதும் அந்தப் பகுதியே கலகலத்துப் போகிற மாதிரி சிரிப்பு அலை பரவியது.

ஆடம்பர மோகம் அதிகம் உடையவங்க ஆண்களா ? பெண்களா?ன்னு ஒரு பட்டிமன்றம் வச்சா அநேகமா பெண்கள்தான் தீர்ப்பு வரும்.
ஒரு வீட்டிலே மனைவி கணவனைப் பார்த்துச் சொன்னாங்க, □நாலு வேளைக்கு வர்ர மாதிரி புளியோதரை ரெடி பண்ணியாச்சி. போனதும் சாப்பிட இட்லி பார்சல் ரெடி. பிளாஸ்க்கில் காபி எடுத்து வச்சிட்டேன். காலியானதும் ஹோட்டல்லே வாங்கி நிரப்பிக்கலாம்.ஞ
ஞஎந்தக் கோயிலுக்குப் போறோம்ஞனார் கணவர்.
ஞகோயிலுக்கா ? என்ன மறந்துட்டீங்களா ? பொங்கலுக்கு புடவை எடுக்க ஜவுளிக்கடைக்குப் போகணும்னு சொல்லியிருந்தேனேஞ என்றார் அவர் மனைவி.
ஜவுளிக்கடை ஒண்ணுல ஒரு பாட்டியம்மா புலம்ப ஆரம்பிச்சிடுச்சி. ஞபொம்பளைக்கு புடவை மோகம் இருக்க வேண்டியதுதான். அதுக்காக இப்படியா ? செலக்ட் பண்றதுக்காக எடுத்துப் போட்ட புடவைக் குவியலை கடைக்காரன் திரும்ப எடுக்கும்போது அந்தப் பொம்பளை கட்டியிருந்த புடவையையும் சேர்த்து உருவினது கூடத் தெரியாம இப்ப பாவாடை ஜாக்கெட்டோட நிக்கிறாளே இது நல்லாவா இருக்கு ?ஞ
ஒரு மனைவி தன்னோட கணவன்கிட்டே, ஞஏங்க உங்களுக்கு கைக்குட்டை தங்குறதேயில்லை அடிக்கடி தொலைஞ்சு போவுது. அதான் ஆறு கைக்குட்டை வாங்கி யாந்துட்டேன்.ஞ
ஞஇனாமாத்தானே கொடுத்தாங்க.ஞ
ஞஅப்போ பரவாயில்லை.ஞ
ஞஆனா ஒரு சின்ன கண்டிஷன் போட்டு இருந்தாங்க. ஒரு புடவை வாங்கினாதான் ஒரு கைக்குட்டை இலவசமாம்.ஞ
இதைக் கேட்டதும் கணவர் மயக்கம் போட்டு விழுந்துட்டார்.
ஞஏங்க நாம ஜவுளிக் கடையிலே நுழையறப்போ கல்லாவிலே ஒரு வாலிபப் பையன் உட்கார்ந்திருந்தான். இப்போ அதே முகச் சாயல்லே ஒரு பெரியவர் உட்கார்ந்திருக்காரே. அவரு அந்தப் பையனோட அப்பாவா ?ஞ
ஞமண்ணாங்கட்டி ! அந்தப் பையனேதான். நீ புடவை எடுத்து முடிக்கிறதுக்குள்ளே இப்படி ஆயிட்டான்.ஞ
ஒரு ஜவுளிக் கடையின் அறிவிப்பு. ஞபுடவை எடுக்க வருகிறவர்கள் தயவு செய்து வாரக் கணக்கில் தங்க வேண்டாம். புதிதாக வருகிறவர்களுக்கு வாய்ப்பளிக்கவும்.ஞ
இந்த பிரச்சினையைத் தீர்க்க இன்னொரு ஜவுளிக் கடையில் வேறு மாதிரியாக எழுதிப் பேட்டிருந்தார்கள். ஞஎங்கள் ஜவுளிக் கடையின் மேலே லாட்ஜ் வசதியுள்ளது. எவ்வளவு நாட்களானாலும் தங்கி புடவை எடுக்கலாம்.ஞ
ஒருத்தரோட மனைவி கணவர் கிட்டே கேட்டாங்க. ஞஏங்க ! எனக்குப் புடவை எடுக்கப் போறேன். பிள்ளைகளுக்கு டிரஸ் எடுக்கப் போறேன். நீங்க என்ன எடுக்கப் போறீங்க ?ஞ அவர் ஞதிருவோடு எடுக்கப் போறேன்ஞனார்.
பெண்களுக்கு எந்த நேரமும் புடவை நினைப்புத்தான். சென்னையை நோக்கிப் போய்க் கிட்டிருந்த பஸ் ஒரு ஊரிலே நின்னதும் பின் சீட்டிலே இருந்த ஒரு அம்மா முன்சீட்டிலே இருந்த இன்னொரு அம்மாவோட தோளைத்

தொட்டு, ஞஏங்க ! இது செங்கல்பட்டா ?ஞன்னு கேட்டாங்க. அதுக்கு அம்மா திரும்பிப் பார்த்து ஞஇது செங்கல்பட்டு இல்லை, சின்னாளப் பட்டுஞன்னுது.
கடைத் தெருவுக்குப் போயிட்டு வந்த ஒரு அம்மா வீட்டுக்குள்ளே வந்ததும் ஞஏங்க ! இன்னைக்கு நியூஸ் பார்த்தீங்களாஞன்னு புருஷன்கிட்டே கேட்டுது.
ஞம்... பார்த்தேனே ! இந்திய பார்டர்லே ஏதோ பிரச்சினையாம்.ஞ
ஞஐயோ அதைக் கேட்கலைங்க. இன்னைக்கு நியூஸ் வாசிச்ச பொண்ணு என்ன கலர் புடவை கட்டியிருந்தா ? பார்டர் கலர் என்ன ?ஞ
ஞஅதை நான் கவனிக்கலையே !ஞ
ஞஎன்ன நீங்க நியூஸ் பார்க்கிற லட்சணம்ஞனு அந்த அம்மா சலிச்சிக்கிட்டாங்களாம்.
கணவனும் மனைவியும் ரோட்டிலே நடந்து போய்க்கிட்டு இருந்தாங்க. எதிர்த்தாப்பல மூணு பெண்கள் நடந்து வர்றதைப் பார்த்ததும் கணவனோட பார்வை அவங்க மேலே போயிருச்சி. மனைவி கணவனோட விலாவிலே முழங்கையாலே ஒரு இடி இடிச்சி, ஞபார்வை என்ன அங்க போவுது. கண்ணைத் தோண்டிப் போடுவேன்ஞ னுது.
பதறிப் போன கணவன், ஞஅய்யய்யோ, நான் தப்பா பார்க்கலைம்மா. அங்கே நடுவுல வர்ற பொண்ணு கட்டியிருக்கிற புடவை ரொம்ப நல்லாயிருக்கு. அது மாதிரி உனக்கு எடுக்கலாமான்னு பார்த்தேன்ஞனார்.
ஞம்ம்... அப்படின்னா நல்லா பாருங்கஞன்னு மனைவி அனுமதி கொடுத்திருச்சி.
ஒருத்தரோட மனைவி தன் கணவர்கிட்டே ஞஎதிர்த்த வீட்டுக்காரரு அவரோட மனைவிக்கு தினமும் ஒரு புடவை வாங்கித் தரார். நீங்களும் இருக்கீங்களேஞன்னு சலிச்சிக்கிட்டாங்க. அதுக்கு அவர், ஞஎனக்கும் வாங்கிக் குடுக்கலாம்னு ஆசைதான். ஆனா அவங்க வாங்கிக்குவாங்களோ மாட்டாங்களோன்னுதான் பயமாயிருக்கு.ஞ அப்படின்னிருக்கார்.
எப்படி நம்ம ஆளு ?
இந்தப் பெண்கள் புடவைச் சீட்டு போடுவாங்க. நகைச்சீட்டு போடுவாங்க, பாத்திரச் சீட்டு போடுவாங்க. என்னைக்காவது வேட்டி, சட்டை சீட்டு போட்டிருக்காங்களா ?
எதிர்த்த வீட்டுக்காரி, அடுத்த வீட்டுக்காரி என்ன வாங்கினாளோ அதை உடனே வாங்கணும். இல்லை, அதுக்கு கூடுதலா வாங்கணும். இது பெண்களோட குணம்.
ஒரு அம்மா, எதிர்த்த வீட்டுக்காரி எடுத்துட்டு வந்து காட்டுன புடவையைப் பார்த்துட்டு அன்னைக்கு சாயந்திரமே ஜவுளிக் கடைக்குப் போயி அதே கலர்லே அதே பார்டர்லே புடவை வேணும். ஆனா விலை கூடுதலா இருக்கணும்-னு கேட்டுது. கடை முதலாளி பையனைக் கூப்பிட்டு காதிலே ஏதோ கிசுகிசுத்தார். அப்புறம் அந்த அம்மாவைப் பார்த்து ஞஉங்களுக்கு ஸ்பெஷல் வெரைட்டி கொண்டு வரச் சொல்லியிருக்கேன். கொஞ்சமா இருக்கிறதாலே எல்லாருக்கும் கொடுக்கிறதுக்கு இல்லை. உங்களை மாதிரி ரெகுலர் கஸ்டமர்களுக்கு மட்டும்தான் கொடுக்கிறது. விலை 1500 ரூபாய் கூடுதலா வரும்ஞ-னு சொன்னார்.
ஞபரவாயில்லைஞன்னு அந்த அம்மா சந்தோஷமா வாங்கிட்டு போயிட்டுது. பழைய விலை இருந்த லேபிளைக் கிழிச்சிட்டு அதிக விலை லேபிளை அதே புடவையிலே ஒட்டிக் கொண்டு வந்த பையன் அசந்து போய் நின்னான். காலங்கார்த்தாலே ஒருத்தரோட மனைவி கணவரை அடிச்சி எழுப்பினாங்க.
ஞஎன்ன இப்படி தூங்கறீங்க. உலகத்திலே என்ன நடந்தாலும் உங்களுக்குக் கவலையே இல்லை. ராத்திரியோட ராத்திரியா ஏதோ ஒரு பெரிய பொருளை எதிர்த்த வீட்டுக்காரங்க வாங்கி அவங்க வீட்டுக்கு முன்னாடி நிறுத்தி இருக்காங்க. உடனே அது மாதிரி ஒண்ணு நமக்கும் வாங்கணும். வந்து பாருங்கன்னாங்க.□
அவரும் கண்ணைக் கசக்கிக்கிட்டே வந்து பார்த்தாரு. ரோடு போடுற ரோலரை ரோட்டு வேலை செய்யறவங்க அங்கே நிறுத்திட்டுப் போயிருக்காங்க. அதைப் போய் எப்படி வாங்குறது ?
ஒரு மனைவி எவ்வளவு செலவழிக்கிறாளோ அந்த வேகத்துக்கு இணையாக சம்பாதிப்பவன்தான் சிறந்த கணவனாம்.
நன்றி குங்குமம் 12-1-01
நம்ம இன்ஸ்பெக்டர் டியூட்டியில ரொம்ப கரெக்ட் !
எப்படிச் சொல்ற ?
நேத்து சந்தேக கேஸ்ல அவரோட தம்பியைத் தெரியாமப் புடிச்சிகிட்டு வந்துட்டேன். மனுசன் மாமூல் வாங்காம அவரை விடலியே !

அந்த டாக்டருக்கு ரொம்ப கிண்டலா போச்சு !
எப்படி ?
தலை ரொம்ப சுத்துதுனு சொன்னா, கண்ட்ரோல் பண்ண ரெகுலேட்டர் வைக்கட்டுமா-னு கேக்கறார் !

அப்பா... இந்த வரனுக்கு ஏற்கெனவே கல்யாணமாயிடுச்சானு விசாரிங்க !
ஏம்மா சந்தேகம் ?
பெண் பாக்க உள்ளே வந்தப்ப, ஸாரி... இன்னிக்கும் ஆபீஸ் விட்டு வர லேட்டாயிடுச்சு-னு சொல்லிக்கிட்டே உள்ளே வந்தார் !

வீரப்பனைப் பிடிக்க மத்திய அரசு எப்ப உதவி செய்யும் ?
வீரப்பனிடமிருந்து சிக்னல் வந்த பிறகு !

ரெண்டு காலண்டர் குடுத்த மேனேஜரைப் போய் கஞ்சத் திலகம்னு திட்டறியே... ஏண்டி ?
அவர் குடுத்தது போன வருஷத்துக் காலண்டரை !

அந்த திருடன் குடுத்த காலண்டர்ல என்ன சிறப்பம்சம் ?
தினமும் தூங்குவதற்கு உகந்த நேரம் போட்டிருக்குது !

அவர் பீச்ல புதுமையா சுண்டல் வியாபாரம் செய்றாரா... எப்படி ?
ரெண்டு மாதம் தொடர்ந்து சுண்டல் வாங்கற ஜோடிக்கு ரெண்டு காலண்டர் இனாமா கொடுக்கறாராம் !

அந்தப் பிச்சைக்காரனுக்குக் கொழுப்பைப் பார்த்தியா ?
என்னவாம் ?
ஒரு வாரம் பிச்சை போடறவங்களுக்கு ஒரு காலண்டரும், ஒரு மாதம் பிச்சை போடறவங்களுக்கு ஸ்பெஷல் டைரியும் தரப் போறானாமே !

சமையலறையில எதுக்குடி காலண்டரை மாட்டி வைச்சிருக்கே ?
என் கணவர் நாள், கிழமை தெரியாம அசைவம் செய்து தொலைக்கறார்டி !

உன் கணவர் மீனா, சிம்ரன் ஜோதிகா, மும்தாஜ், ராதிகா சவுத்ரி படம் போட்ட காலண்டரை வாங்கி மாட்டினாரா...
அதுக்கு நீ என்ன செஞ்சே ?
விஜய், அஜீத், அப்பாஸ், மாதவன் படம் போட்ட காலண்டரை வாங்கி மாட்டிட்டேன் !

உன் மகளுக்குத் திருமண ஆசை வந்துடுச்சின்னு எப்படிச் சொல்றே ?
முகூர்த்த நாளெல்லாம் காலண்டர்ல பெரிய வட்டம் போட்டு வைச்சிருக்காளே !

போஸ்ட் ஆபீஸ்ல வேலை பார்க்கறவரை கோடீஸ்வரன் நிகழ்ச்சிக்குக் கூப்பிட்டது தப்பாப் போச்சு !
ஏன், என்னாச்சு ?
கோடீஸ்வரன் முத்திரைக்குப் பதிலா தபாலாபீஸ் முத்திரையைத்தான் பயன்படுத்துவேன்னு தகராறு பண்ண ஆரம்பிச்சிட்டாரு !

மாமியார் - மருமகள்

என்னதான் இன்டர்நெட் யுகம் வந்தாலும் மாமியார் - மருமகள் சண்டை ஓயப் போறதில்லை. இன்டர்நெட்லேயே ஒருத்தரை ஒருத்தர் திட்டிக்கிறாங்க. இதுக்காகவே வெப்சைட் ஓபன் பண்ணி யிருக்காங்களாம்.
வீட்டிலே எல்லா வசதியும் இருந்தாலும் வெறும் ஈகோ ப்ராப்ளத்தாலே, இரண்டு பேரும் சண்டை போட்டுக்கிட்டே இருப்பாங்க.
ஒரு மருமகப் பொண்ணு எல்லோருக்கும் ஸ்வீட் கொடுத்தாளாம். □என்ன விசேஷம்?□னு கேட்டப்போ □மாமியாருக்கு சுகர் 400க்கு மேலே ஏறிடுச்சாம்.□
மாமியார் சும்மா இருப்பாங்களா ? அதுக்கு உதாரணம் இந்த விஷயம்.
ஒரு மாமியார் என்கிட்டே ரொம்ப வருத்தப்பட்டு சொல்லிச்சு. □தம்பி இந்த அநியாயத்தைப் பார்த்தீங்களா ? நான் எப்பவுமே காலையிலே 6 மணிக்கெல்லாம் படுக்கையை விட்டு எந்திரிச்சிருவேன். அன்னிக்கு உடம்பு ரொம்ப அசதியா இருக்குன்னு கூட ஒரு அரைமணி நேரம் படுக்கையிலே படுத்துட்டேன். அதுக்குள்ளே மருமகள் என்னோட தலை மாட்டிலே குத்துவிளக்கை ஏத்திவச்சி. ஊதுவத்தியைப் பொருத்தி வச்சி, கால் மாட்டிலே உட்கார்ந்து அத்தே போயிட்டீங்களேன்னு அழ ஆரம்பிச்சிட்டா.□
எங்க வீட்டுக்கு எதிர்த்த வீட்டிலே ஒரு அற்புதமான காட்சி. மாமியாரை நாற்காலியிலே உட்கார வச்சி மருமகள் பவ்யமா நகம் வெட்டிவிட்டுக் கொண்டிருந்தாள்.
அன்னைக்கு சாயந்திரம் கடைத் தெருவிலே அந்தப் பொண்ணைப் பார்த்தப்போ □என்ன மாமியார் மேலே ரொம்ப அக்கறை வந்திடுச்சா ? நகமெல்லாம் வெட்டி விடறாப்பிலே இருக்கே !□ அப்படின்னேன்.
அதுக்கு அந்தப் பொண்ணு, □போங்க சார் ! பிரியமாவது ஒண்ணாவது. நாளைக்கு சண்டை வந்தா பிறாண்டி விட்டிரும். அதுக்காகத்தான் வெட்டினேன்□ என்றாள்.
வீட்டுக்கு முன்னாடி மாமியாரோட உருவத்தை அச்சா பெரிய கோலமா ஒரு பொண்ணு போட்டுகிட்டிருந்தாள். போகிற வருகிறவங்களெல்லாம் இதைப் பார்த்து, □மாமியார் மேலே இவ்வளவு பிரியமா கோலமெல்லாம்

போடுறியே□ன்னாங்க. அதுக்கு அந்தப் பொண்ணு, □ஆசையாவது, மண்ணாவது, போற வர்றவங்க எல்லாம் நல்லா மிதிச்சிட்டு போகட்டும்னுதான் போட்டேன்□ என்றாள்.
அன்னிக்கு ஒருநாள், ஒரு மருமகள் சாயந்திரம் டிபனுக்கு கடாமுடான்னு சீடை, முறுக்கா பண்ணி வச்சிருந்தாள். □என்னடி இன்னிக்கு சீடை, முறுக்கா பண்ணியிருக்கே□ன்னு புருஷன் காரன் கேட்டான். அதுக்கு அவள். □உங்களுக்கு விஷயம் தெரியாதா ? உங்க அம்மாவுக்கு மிச்சமிருந்த பல்லெல்லாம் விழுந்திருச்சி□ன்னாள். மாமியாரும் விடலை. சீடை, முறுக்கை எடுத்து வெற்றிலை உரல்லே போட்டு இடிச்சி மென்னு காட்டிச்சு. இப்படி ஒரு மௌனப் போராட்டம் தேவையா ?
ஒரு விநோதமான விஷயத்தை கேக்கலாமா ?
□அதெப்படி மாமியாரையும், மருமகளையும் ஒரே சமயத்திலே தேள் கொட்டுச்சி ?□
□மாமியாரைத் தேள் கொட்டியதும் மருமகள் சபாஷ்னு சொல்லி தேளைத் தடவிக் கொடுத்தாளாம். அவளையும் பொட்டுன்னு போட்டிருச்சி.□
□பேய் வந்தா நாய்க்குத் தெரியுமாம். நம்ம வீட்டு நாய் குரைக்குது பார்த்தீங்களா-ன்னு ஒருத்தி சொன்னப்போ, புருஷன் சொன்னான். □நம்ம வீட்டுக்கு ஏண்டி பேய் வரப் போவுது ?□ அதுக்கு அவ விடலை. □கரெக்ட் ! அதோ உங்க அம்மாதான் வந்துக்கிட்டு இருக்காங்களே□ என்றாள்.
காலையிலே ஒரு வீட்டிலே புருஷன், □ஏண்டி நீண்ட நாட்கள் வாழ்வது எப்படின்னு ஒரு புத்தகம் வாங்கிட்டு வந்தேனே அதை எங்கே எடுத்து வச்சே□ன்னு கேட்டான். அதுக்கு அவன் மனைவி, □நாளைக்கு உங்க அம்மா ஊரிலே இருந்து வர்றாங்க. அவங்க எடுத்து படிச்சிடக் கூடாதேன்னு அடுப்பிலே போட்டு எரிச்சிட்டேங்க□ என்று பதில் சொன்னாளாம்.
□என்னடி நான் பத்து தடவை மிதிச்சும் ஸ்டார்ட் ஆகாத வண்டி நீ ஒரே மிதி மிதிச்சதும் ஸ்டார்ட் ஆயிருச்சே எப்படி?□ன்னு புருஷன் கேட்டான். □அது ஒண்ணும் பெரிய வித்தை இல்லை. உங்க அம்மாவை நினைச்சுக்கிட்டு ஓங்கி மிதிச்சேன்.□
ஒரு அம்மா இன்னொரு பொண்ணுகிட்டே □உங்க மாமியாருக்கு சீரியஸ்னு ஆஸ்பத்திரியிலே அட்மிட் பண்ணுனீங்களே, என்ன ஆச்சு?□ன்னாங்க. □ப்ச்சு, ஒண்ணும் ஆகலை□ன்னு சலிப்போட பதில் சொன்னாள்.
□மருமகப் பொண்ணே நீ கொடுத்த மர்ம நாவலை ஒரு தடவை படிச்சேன். பாதி உயிர் போயிருச்சுடி.□
□அப்படின்னா இன்னொரு தடவை படிச்சிருங்க அத்தை□ -இது மருமகள்.
ஒருத்தன் தன் மனைவிகிட்டே, □இறந்து போன எங்கம்மா நேத்து என் கனவிலே வந்தாங்க□ அப்படின்னு கண்கலங்கச் சொன்னான். உடனே அவன் மனைவி, □அடடா ! என்னை எழுப்பியிருக்கக் கூடாது, நல்லா சண்டை போட்டிருப்பேனே□ என்றாள்.
நம்ம பெண்களுக்கு இங்கே மட்டுமில்லை, வெளிநாட்டுக்குப் போனாலும் இந்த மனோபாவம் மாறுவதில்லை. கொடுமைப்படுத்துற மாமியாரைப் பழிவாங்குறதுக்கு சந்தர்ப்பத்தை மருமகள் எதிர் பார்த்துக்கிட்டு இருந்தாள். அமெரிக்காவுக்கு வரவழைச்சு தன்னோட தமிழ்நாட்டு மாமியார் கிட்டே இங்கிலீஷ்லேயே பேசிக்கிட்டு இருந்தா. அது புரியாம அந்தம்மா அலங்க மலங்க விழிச்சிகிட்டு இருந்தது.
ஒருநாள் எலி ஓடறதைப் பார்த்ததும் மாமியார்காரம்மா □ஐயய்யோ நம்ம வீட்டிலே எலி ரொம்ப இருக்கும் போலிருக்கே□ அப்படின்னுது. உடனே மருமகள் □ரியலி□ அப்படின்னாள். □அந்த எலியெல்லாம் இல்லைம்மா. எல்லாம் சுண்டெலிதான்□ என்றது மாமியார் அப்பாவியாக.
மருமகளை மட்டம் தட்டறதுன்னா மாமியாருக்கு அல்வா சாப்பிடற மாதிரி. ஒரு நாள் மகன் கிட்டே, □ஒம் பொண்டாட்டிக்கு காது கேக்கிற மிஷின் வாங்கிக் கொடுடா. வர வர சரியா காது கேட்க மாட்டேங்குது. சண்டை போட்டா ரெஸ்பான்ஸே இல்லை□ அப்படின்னுதாம்.
இது கூட பரவாயில்லை. □சட்டு புட்டுன்னு இன்னொரு கல்யாணம் பண்ணிக்கோடா. இவகிட்டே சண்டை போட்டு அலுத்துப் போச்சு□ அப்படின்னுதாம்.
ஒரு அம்மா இன்னொரு அம்மா கிட்டே, □அதோ போறா பாரு அந்தப் பொண்ணு இருக்கே அடங்காப்பிடாரி. ஆனா அவ மாமியார் தங்கமானவங்க□ அப்படின்னாளாம்.
□அந்த மாமியார் யாரு?□கேட்டுதாம். □நான்தான்□னாங்க இந்தம்மா. இவங்களை நல்லவங்கன்னு இவங்களைத் தவிர யார் சொல்லப்போறா?
மருமகக்கூட எதுக்குத்தான் போட்டி போடறதுன்னு இல்லாமப் போச்சு. அவ ரெட்டை சடை போட்டிருக்காங்கறதினாலே இதுவும் இத்துனூண்டு முடியிலே ரெட்டை சடை போட்டுக்கிட்டு அலையுதாம்.
தன் மகளை இன்னொரு இடத்திலே கட்டிக் கொடுத்திருக்கிற தாய் அவ கண் கலங்காம இருக்கணும்னு நினைக்கிறவ, தன்னை நம்பி வந்திருக்கிற மருமகளையும் அதைப் போலவே நடத்தலாமே ! மருமகளும் தன் தாயைப் போலவே மாமியாரை நேசிக்கலாமே அப்போது இல்லறம் என்பது அமைதிப் பூங்காவாகத் திகழுமே !

நாம தனியா சந்திக்கிறது எங்க அப்பாவுக்குத் தெரிஞ்சிட்டுது !
ஐயய்யோ ! என்ன ஆச்சி ?
ஒண்ணும் ஆகலே ! உங்களைக் கேட்டு ஒரு ஆயிரம் ரூபாய் கடனா வாங்கிட்டு வரச் சொன்னாரு !

என்னோட ஆபரேஷன் மேல நம்பிக்கை இல்லைன்னா, பிறகு ஏன் என்னிடம் ட்ரீட்மெண்டுக்கு வந்தீங்க ?
சாதாரண கொசுக்கடி தடிப்பை இந்தளவுக்கு கொண்டு வருவீங்கன்னு நெனைக்கலையே டாக்டர் !

இன்ஸ்பெக்டர் ரொம்ப தமிழ்ப் பற்றுள்ளவர் போல.
எப்படிச் சொல்றே ?
வருக. மனம் போல் மாமூல் தருக-னு போர்டு வெச்சிருக்காரே.

டேய், பாடங்களில் எல்லாம் சைபர் மார்க் வாங்கியிருக்கிறாயே, நிறைய மார்க் வாங்க வேண்டும் என்ற ஆசையே கிடையாதா ?
அப்பா, ஆசையே அழிவுக்குக் காரணம் என புத்தர் சொல்லியிருக்காருன்னு என்னோட வாத்தியார் சொன்னாரே !

நீங்க கடைசியா அந்த கட்சிகூட கூட்டணி வச்சிட்டீங்களே, அதுக்கு என்ன காரணம் ?
வெட்கத்தைவிட்டு உண்மையைச் சொல்றேன். எங்ககூட கூட்டணி வச்சுக்க வேற எந்த கட்சியும் விரும்பலை !

அந்த வீட்டில் பூட்டை ஏன் உடைத்து திருடினாய் ?
எஜமான் ! நானும் எவ்வளவோ சாவியைப் போட்டுப் போராடிப் பார்த்தேன். திறக்க முடியலை... கடைசியாதான் பூட்டை உடைச்சேன் சாமி... !

குருவே ! இல்லறம் துறவறம் என்ன வித்தியாசம் ?
சிஷ்யா ! தனிமையாக காட்டில் இருந்தால் துறவறம். சம்சாரத்தோடு உடிவ-ல் இருந்தால் இல்லறம்.
நன்றி குங்குமம் 19-1-2001
சரி... உங்க மாமியாருக்கு நாளைக்கு ஆபரேஷன் செய்றேன்...
இந்தாங்க டாக்டர் அட்வான்ஸ் ஐயாயிரம் ! காரியத்தை கச்சிதமா முடிச்சிட்டா மேற்கொண்டு ஐயாயிரம் தருவேன் !

ஏன் அருவாளை எடுத்துக்கிட்டு வந்திருக்கே ?
நீங்கதானே தலைவரோட தோளில் துண்டு போடச் சொன்னீங்க !

சார், உங்களுக்கு அடுத்த வாரம் ரிட்டயர்மென்ட்டாமே.. ?
ஆமா சார்... நான் தூங்க ஆரம்பிச்சு முப்பத்தி மூணு வருஷம் ஓடிப் போச்சுங்கறதை நம்பவே முடியலை.

ஆபரேஷன் தியேட்டருக்கு டாக்டர் ஏன் பந்து எடுத்துட்டுப் போறார் ?
பேஷன்ட் உயிரோடு விளையாடத்தான் !

சாப்பிட்டவுடனேயே இது மெகா சீரியல் டைரக்டர் வீட்டு பொங்கல்னு எப்படிக் கண்டுபிடிச்சீங்க ?
பொங்கல் ஜவ்வு மாதிரி இருந்துச்சே.. .!

எங்க காதல் தெய்வீகமானது.. .!
எப்படி ?
கல்யாணம் ஆகாமலே எங்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கு முருகன், லஷ்மினு பேர் வச்சிருக்கோமே...

என் மனைவி வீக்-கா இருக்கான்னு நாலு முறை சொல்றீங்களே... ஏன் டாக்டர் ?
அவங்க மாசமா இருக்காங்க அதான் !

எதிர் ஜவுளிக் கடையில தானே சேலை திருடு போச்சு ? நீங்கள் ஏன் பதறிட்டு நிக்கறீங்க !
மேட்சிங் பிளவுஸ் திருட ராத்திரி நம்ம கடையிலும் திருடன் நுழைஞ்சுட்டா ?

வரவர நம்ம பேட்டை ரவுடிக்கு கிண்டல் அதிகமாயிடுச்சு சார்.. .!
ஏன் என்ன கேட்டான் ?
அப்பாவை கொலை செய்தா... கவர்ன்மென்ட்டுல உதவித் தொகை கொடுப்பாங்களான்னு கேட்கறான் !

டேய் இருக்குன்னு நம்புற நீங்க, கடவுள் இருக்காருன்னு ஏன் நம்ப மறுக்கிறீங்க ?
என் மனைவிக்கிட்டே இருந்து என்னைக் காப்பாற்ற யாருமே இல்லையே சார் !

வீட்டுச் சுவத்துல... விளம்பரம் செய்யாதீர்... மீறினால் போலீஸ் வசம் ஒப்படைப்போம்...ன்னு எழுதிச் தொலைச்சது வம்பாப் போச்சு..!
ஏன் ?
அதுக்கு மாசா மாசம் மாமூல் கொடுக்கணும்..ன்னு ஸ்டேஷன்லேர்ந்து வந்து சொல்லிட்டுப் போய்ட்டாங்க. .!
நன்றி குமுதம் 18-1-2001
காலண்டர் புதுமையா இருக்குன்னு ஏன் சொல்றீங்க ?
கட்சி ஆரம்பிக்க, கூட்டணி அமைக்க, ஆட்சியில் பங்கு கேட்க, ஆதரவை வாபஸ் வாங்கன்னு எல்லாத்துக்கும் நல்ல நாள் எது எதுன்னு போட்டிருக்கே !

அந்த ஆள் தினமும் ஜோசியம் பார்ப்பாரு...
தினமுமா...?
ஆமாம் ! ஜோசியம் பார்க்கறது அவரோட தொழிலாச்சே !

என்னடி... ஒரு சாமியாரைப் போய் கல்யாணம் பண்ணிக்கிட்டே ?
மாப்பிள்ளை சாது-னு சொல்லி தரகர் ஏமாத்திட்டார் !

ஒரு ஐந்நூறு ரூபாய் இருந்தா கடன் கொடுங்களேன்... சம்பளம் வாங்கின உடனே கொடுத்துடறேன்...
உங்களுக்கு சம்பளம் எத்தனாம் தேதி வரும்... ?
அது வேலை கிடைச்சப்புறம்தான் தெரியும் !

அதென்ன ரெடிமேடு பொங்கல் பானை... ?
பொங்கல் பண்றதுக்குத் தேவையான அரிசி, வெல்லம், எல்லாத்தையும் இதுல ரெடியா போட்டு வெச்சிருக்கோம்... நீங்க வாங்கிட்டுப் போய், தண்ணி மட்டும் ஊத்தி, அடுப்புல வெச்சுப் பொங்க வேண்டியது தான்...

இன்ஸ்பெக்டர்... நாங்க எல்லோரும் அசந்து தூங்கிட்டிருந்த நேரத்துல திருடன் வந்து பத்து லட்ச ரூபாயைத் திருடிட்டுப் போய்ட்டான்.
வீட்ல எதுக்கு அவ்வளவு பணம் வெச்சிருந்தீங்க ?
வீடா ? சரியாப் போச்சு...
திருட்டு நடந்தது எங்க ஆபீஸ்ல !

ஆபீஸுக்கு ஏன்யா லேட் ?
ஸாரி சார். பஸ்ல வர்றப்ப அசந்து தூங்கிட்டேன்.
ஆபீஸ் வர்றதுக்குள்ள அப்படி என்னய்யா அவசரம் ?

என்ன சார் ! கால் மணி நேரமாக ரிஸீவரைக் காதுல வச்சுக்கிட்டிரக்கீங்களே தவிர, நீங்க ஒரு வார்த்தைகூட பேசலையே...
தொந்தரவு செய்யாதீங்க. என் மனைவியோடு பேசிக்கிட்டிருக்கேன் !
நன்றி ஆனந்த விகடன் 14-1-01
நான் காதலிச்சது இன்ஸ்பெக்டர் பொண்ணுடா !
அப்புறம் ?
அப்புறம் என்ன... மாமூல் கட்டி கண்டினியூ பண்ணச் சொல்லிட்டாரு !

நரசிம்மராவும் ராமராவும் ஊருக்குப் போனா எப்படி போவாங்க ?
எப்படி ?
ராவோடு ராவா !

காக்கா ஏன் கருப்பா இருக்கு ?
ஏன் ?
அது உஜாலாவுக்கு மாறலை !

ஃபுட்பால் டீமுக்கும் மகாகாளிக்கும் என்ன ஒற்றுமை ?
டீமுக்கு நாக் -அவுட். காளிக்கு நாக்கு அவுட் !

எந்த மிருகங்களுக்குப் பக்தி அதிகம் ?

எதுக்கு ?
யானைக்கும் கரடிக்கும்தான்.
ஏன்?
ஏன்னா ஒண்ணுக்கு மதம் பிடிக்கும். இன்னொன்னு சிவபூஜையில நுழையும்!

வகுப்பு நடந்து கொண்டிருக்கும் போதே மாணவர் வெளியே வருவது ஏன் ?
அவருக்குத் தூக்கத்துல நடக்கிற வியாதி !

கழுதைக்கும் மனிதனுக்கும் என்ன வித்தியாசம் ?
என்ன வித்தியாசம் ?
மனிதனைக் கழுதைன்னு கூப்பிடலாம். கழுதையை மனிதன்னு கூப்பிட முடியாது !

நகை போடாம இருக்கிறதே மேல் !
ஏன் ?
நகை போடுவது ஃபீமேல் !

தூங்கறதுக்கு முன்னால எல்லாரும் என்ன செய்வாங்க ?
என்ன செய்வாங்க ?
முழிச்சிருப்பாங்க !

தோசை நடுவில் ஏன் ஓட்டை இருக்கு ?
ஏன் ?
அதைச் சுடுகிறார்கள் !

துறைமுகத்துல வேலை செய்பவர்க்கு இரட்டைக் குழந்தை பிறக்குது. என்ன பெயர் வைப்பார் ?
என்ன பெயர் ?
ஏற்றுமதி ரூ இறக்குமதி !

ஏரிக்கு ஆப்போசிட் என்ன ?
என்ன ?
இறங்கி !

கழுதையை வைத்துப் படம் எடுத்தால் என்ன பெயர் வைப்பார்கள் ?
என்ன பெயர் ?
உதைக்காமல் விடமாட்டேன் !

ஈ மெயிலுக்குப் போட்டி எது ?
எது ?
கொசு மெயில் !

அந்த புக்குல உன்னோட ஏ-ஜோக் ஒண்ணு வெளியிட்டாங்கன்னு சொன்னியே... சன்மானம் எவ்வளவு அனுப்பினாங்க ?
ரெண்டு பாக்கெட் காண்டம்ஸ் !

டாக்டர்... டாக்டர்... மூணாவது வார்டுல இருக்கிற வயித்துவலி பேஷண்ட்டுக்குக் காய்ச்சல் மருந்து கொடுத்துட்டேன் !
டோன்ட் ஒர்ரிமா... ரெண்டுத்துக்கும் பத்து ரூபாய்தான் வித்தியாசம்... ஃபீஸ்ல சேத்து கலெக்ஷன் பண்ணிக்கலாம் !

ஏய்யா... கிழிஞ்ச ரூபாய் நோட்டு கொடுக்கறே... இது செல்லாது... வேற கொடு !
நீ மட்டும் டிக்கெட்டைக் கிழிச்சிக் கொடுக்கிறியே... அது மட்டும் செல்லுமா ?

என்னது.. உங்க பையன் சோறு செய்யப் பயன்படுத்துவது அரிசிதானே-ன்னு சந்தேகமா கேட்டுட்டுப் போறான் ?
கோடீஸ்வரன் நிகழ்ச்சியில கலந்துக்கறதுக்கு அழைப்பு வந்திருக்கு... அதுக்கு பிரிப்பேர் பண்றான் !

புதுசா கிரகப்பிரவேசம் நடத்தின அந்த வீட்டுக்காரங்க, ரொம்ப வித்தியாசமான டைப் !
எப்படிச் சொல்றே ?
புருஷன் - பொண்டாட்டிக்கு பெட்ரூம், இருக்கிற மாதிரி, மாமியார் - மருமகளுக்கும் தனியே ஃபைட் ரூம் வச்சிருக்காங்க...

உங்க ஃபேமிலி பேக்ரவுண்டைப் பத்திச் சொல்லுங்க...
எனக்கு ஃபேமிலியே கிடையாதுங்க... பேக் க்ரவுண்டும் இல்லை ! ஃபிரண்ட் க்ரவுண்டும் இல்லை ! வாடகை வீட்ல இருக்கேன் !

நீங்க முன்னாள் அமைச்சரா... நம்பவே முடியலையே ?
ஏன் ?
இது வரைக்கும் ஒரு சம்மன் கூட வரலே... ஒரு தடவை கூட கைது ஆகலே... முன்ஜாமீனே எடுக்கலே...

எதுக்கு டாக்டர் ஆபரேஷன் தியேட்டருக்கு நாயைக் கூட்டிக்கிட்டு வந்திருக்கீங்க ?
ரத்தம்னா அதுக்கு ரொம்பப் பிடிக்கும் அதான்...

பழைய கதையை தூசிதட்டி சொன்ன உன்னை தயாரிப்பாளர் துரத்திட்டாரா... ஏன் ?
அவருக்கு டஸ்ட் அலர்ஜியாம் !

அந்தப் பிச்சைக்காரன் ஏன் அம்மா தாயி-ன்னு சொல்லாமல் அய்யா- சாமி-ன்னு பிச்சை கேக்கறான் ?
தாய்குலத்தை நம்பி படம் எடுத்த தயாரிப்பாளர் அவரு... லேடீஸ் யாரும் படம் பார்க்காமல் நஷ்டம் ஏற்பட்டு இந்த நிலைக்கு வந்துட்டதால பெண்கள் மேல வெறுப்பாம்... !

அவருக்கு நாக்கு தொங்குதே... ஏன் ?
அழகிப் போட்டிகளுக்கு தொடர்ந்து நடுவரா இருந்து இப்படி ஆயிட்டாரு !

கவர்ச்சி நடிகையை த்ரௌபதியா போடாதீங்கன்னு சொன்னேனே கேட்டீங்களா.. .!
ஏன் என்ன ஆச்சு ?
சீன்லே சிரிச்சுக்கிட்டு நிக்கறாங்க !

ஆபீசுக்கு ஏன்யா லேட் ?
அது ஒரு பெரிய கதை சார்.
ஏன்யா, நான் என்ன டி.வி. மெகா சீரியலுக்கா உன்கிட்ட கதை கேட்டேன் !

பொங்கல் முடிஞ்சு ரெண்டு நாள் கழிச்சுதான் என் கணவர் பொங்கல்ல உப்பு கொஞ்சம் அதிகம்-னு சொன்னாரு ?
ஏன்...?
பொங்கலை வாய்ல போட்ட உடனே ரெண்டு நாள் அவராள வாயையே திறக்க முடியலையே.. .!

பேசினபடி வரதட்சணையை கொடுத்தா தான் என் பையன் தாலி கட்டுவான்னு நான் சொன்னதுக்கு எதுக்கு சிரிக்கறீங்க ?
நீங்க பேசாதபடி போலீஸை கூட்டிட்டு வந்திருக்கேனே !

ஏட்டையா, நீங்களே கூப்பிட்டு அட்ரஸ் குடுத்து அந்த வீட்டை கொள்ளையடிக்க சொல்றீங்களே... !
அட நீ வேற... அது என் சம்பந்தி வீடு தாம்பா... பொங்கலுக்கு என் வீட்டுலேர்ந்து சீதனமா அள்ளிட்டு போனதைத்தானே எடுத்துட்டு வரச் சொல்றேன் ?
நன்றி குமுதம் 25-1-2001
கரும்பால அடிச்சா ரொம்ப ஜாலியா இருக்கும்... தெரியுமா ?
எப்படி ?
அடிக்கரும்பு இனிக்குமே !

இளவரசரைப் பல்லக்கில் செல்வதற்குத் தடை போட்டிருக்கிறீர்களாமே, பிரபு ?
பல்லக்குகளில் அமர்ந்தபடியே திருட்டு தம் அடிப்பதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது அமைச்சரே !

சார்... என் மாமியாரை ஒரு வாரமா காணலை...

ஒரு வாரமா என்ன பண்ணீங்க...?
வேற வழியில்லாம ஒரு வாரமா என் நாத்தனாரோட சண்டை போட்டுட்டு இருந்தேன்.

எங்க வீட்டுல மாமியாரும் மருமகளும் காலைல சண்டையை ஆரம்பிச்சா அன்னிக்கு நான் ஆபீஸுக்கு லேட்டுதான்.. .!
ஏன்...?
ஆஸ்பத்திரிக்குப் போய் யாராவது ஒருத்தருக்கு காபி கொடுத்துட்டு வரணுமே.. .!

நெட் ஜோக்
வேட்டையாடுவதில் விருப்பமுள்ள ஒரு அப்பாவுக்கு வினோதமான ஒரு ஆசை. குறி தவறாது சுடும் தனது திறமையை மகன் எதிரில் நிரூபிக்க விரும்பினார். ஒரு நாள் வேட்டைக்குப் போகும்போது மகனையும் கூடவே அழைத்துக் கொண்டு போனார்.
சற்று தூரத்தில் கொக்கு ஒன்று அமர்ந்திருந்தது கண்டு அப்பாவுக்கு குஷி !
சில நிமிடங்கள் துப்பாக்கி முனையில் கொக்கை குறிபார்த்துவிட்டு, மகனே... இப்ப பார் என்றபடி ட்ரிகரை அழுத்தினார். கொக்கு செத்துவிழப் போகிறது என்று மகன் எதிர்பார்க்க, துளி காயமுமின்றி எம்பிப் பறந்தது கொக்கு. அப்பாவை மகன் நகைப்போடு பார்க்க, சிறிதும் தயங்காமல் அவர் சொன்னார் - மகனே .. ஒரு அதிசயத்தைப் பார்க்கிற பாக்கியம் உனக்குக் கிடைச்சிருக்கு. அதோ பார்... செத்துப்போன ஒரு கொக்கு பறந்துக்கிட்டிருக்கு !

இனிமே மனிதப் பிறவியே எடுக்காம இருக்க என்ன செய்யணும் சாமி...?
ஏன் கேட்கிறாய் மகனே ?
என் மனைவி ஏழேழு ஜென்மத்துக்கும் எனக்கே மனைவியா வரணும்னு வேண்டிக்கிறாளே !

என் கண் எதிர்லயே கல்யாண வீட்டுல செருப்பை திருடிட்டு போயிட்டான்...
செருப்பு உங்களுதா...?
இல்லை... நான் எடுத்துட்டு போலாம்னு பார்த்து வெச்சிருந்த செருப்பு !

எதுக்கு நாதஸ்வரத்தைக் கொண்டுவந்து என்கிட்டே காட்டுறீங்க...?
நீங்கதானே என்னோட பீப்பி பார்க்கணும்னு சொன்னீங்க...

அந்த டாக்டர் ஆபரேஷனைவிட, போஸ்ட்மார்ட்டத்தின் போதுதான் ரொம்ப ஜாக்கிரதையா இருப்பாரு..
ஏன் ?
கத்தியை உள்ளே வெச்சுட்டா அப்புறம் கிடைக்காதே...

ஆபரேஷனுக்கு எல்லாம் ரெடி பண்ணியாச்சா...?
உறவுக்கார்களுக்கு தந்திகூட கொடுத்தாச்சு டாக்டர்...

டாக்டர் நீங்க எழுதிக் கொடுத்த மாத்திரையை தினம் சாப்பிடறதுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு
அப்ப தேன்ல கொழைச்சு சாப்பிடுங்க...
மாத்திரை வாங்கறதுக்கே காசு இல்லை... தேனுக்கு நான் எங்க போவேன் !

டாக்டர்... ஒரு மாசமா தூக்கமே வரலை...
ஒரு மாசமா என்ன பண்ணீங்க...?
முழிச்சிட்டு இருந்தேன் டாக்டர்...

டாக்டர் அந்த ஆளுக்கு கிட்னில கல் இருக்குன்னு சொன்னதும் அவர் எதுக்கு ஜோசியர்கிட்டே போறாரு...?
ராசியான கல்லான்னு பார்க்கறதுக்காம்...
நன்றி ஆனந்த விகடன் 21-1-01
மாப்பிள்ளை சைவம்னு எப்படிச் சொல்றே ?
பொண்ணுக்கு முட்டைக் கண்ணுனு சொன்னதும் பெண் வேண்டாம்னு சொல்லிட்டாரே !

நம்ம முருகன் கம்பெனி ஆரம்பிச்சிருக்காரே... எப்படி ?
எல்லாருக்கும் வேலை மட்டும் கொடுத்துடறார் !

குரோர்பதியில ஒரு குடிகாரன் 25 லட்சம் ஜெயிச்சிட்டானாமே ?
அப்ப குவாட்டர்பதி-ன்னு சொல்லு ?

கிரிக்கெட் வீரரைக் காதலிச்சது தப்பா போச்சு !
ஏன் - என்னாச்சு ?
லவ் பிக்ஸிங் பண்ணிட்டார் !

ஏங்க ! ஷாஜகான் மும்தாஜின் நினைவா தாஜ்மஹால் கட்டினார். நீங்க என் நினைவா என்ன கட்டுவீங்க ?
எனக்கு அவ்வளவு வசதியில்லை... வேணும்னா உன் தங்கச்சியைக் கட்டிக்கிறேன் !

பொங்கல் சாப்பிடறேன்னு சொல்லிட்டு, பொங்கலில் எதையோ ஊத்தி ஊத்திச் சாப்பிடறீங்களே... என்ன அது ?
கள் !
அப்படின்னா பொங்-கள்னு சொல்லுங்க !

பொங்கல் வாழ்த்து ஏன் வெள்ளையா இருக்கு ?
இது வெண் பொங்கல் வாழ்த்து !

என் மனைவி என்னைப் பேர் சொல்லிக் கூப்பிடமாட்டா ?
அப்புறம் ?
வாடா போடா-ன்னுதான் கூப்பிடுவா ?

இருந்தாலும் நம்ம தலைவர் இப்படி முட்டாள்தனமா இருக்கக் வடாது !
ஏன் - என்னாச்சு ?
இந்தத் தேர்தலில் நான் வெற்றி பெற்றதை ஏற்றுக் கொள்ளமாட்டேன். இதில் ஏதோ எதிர்க்கட்சிக்காரர்களின் சதி உள்ளது அப்படின்னு மேடையில் பேசுறார் !

மனைவியை அடிச்ச குற்றத்துக்காக உனக்கு என்ன தண்டனை தந்தாங்க ?
இரண்டு பேரும் சேர்ந்து வாழணும்னுட்டாங்க !

அந்த பைனான்ஸ் கம்பெனிக்காரங்க விளம்பரம் செய்திருக்கிறது கொஞ்சம் கூட நல்லாயில்லை !
ஏன் - என்ன ஆச்ச ?
நீங்க தெருக்கோடீஸ்வரன் ஆகணுமா ? நாங்க ரெடி... நீங்க ரெடியா ? அப்படின்னு விளம்பரம் கொடுத்திருக்காங்க !

இந்த தடவை ஓட்டுக் கேட்கப் போகும்போது, போனதடவையே தொகுதியை துபாய் ஆக்குவேன்னு சொன்னீங்களே-ன்னு நம்ம தலைவரை ஒரு ஆள் கேட்டுட்டாரு !
தலைவர் என்ன சொன்னாரு ?
உடனடியா நூறு ஓட்டகங்களை இறக்குமதி பண்ண ஆர்டர் குடுத்திருக்காரு !

அவன் பேட்டை ரௌடி சரி, அவன் மனைவி...?
பெட்டை ரௌடி !

அந்த நடிகை ஆண்களை வெறுக்கறவங்க போலிருக்கு !
எப்படி சொல்றே ?
அவங்க (மேல்) ஆயடந ஆடையை போட்டுக்கறது இல்லையே !

பொங்கல் நல்ல இருக்கா ?
இவ்வளவு நேரமா அதை இட்லின்னு நெனச்சேன் !
நன்றி இதயம் பேசுகிறது 21-1-2001
ஆபரேஷன் பண்ணும் போது பிழைச்ச பேஷண்ட் தையல் பிரிக்கும்போது போயிட்டாரு.
எப்படி ?
டாக்டர் ஏதோ ஞாபகத்திலே போஸ்ட் மார்ட்டம் பண்ணிட்டாராம் ..!

என்ன இது... பிளாட்பாரத்தை இப்படி அசிங்கம் பண்ணி வச்சிருக்காங்க ?

நடைபாதையைப் பயன்படுத்தவும்-னு போர்டு வச்சதை ஜனங்க தப்பா புரிஞ்சிகிட்டாங்க !

பக்கத்து வீட்டு லதாவைப் பார்த்தியா. அவளோட மாமியார் பெயரையே அவ மகளுக்கு வச்சிருக்கா... எவ்வளவு மரியாதை ?
மரியாதையெல்லாம் இல்லை. அப்போதானே பேரைச் சொல்லி மாமியாரைத் திட்டலாம். அதான் !

குருவே ! சாந்தியைத் தேடி வந்துள்ளேன்.
சிஷ்யா ! இந்த ஆசிரமத்திலே சாந்தினு யாரும் இல்லை. அடையாறு பிரிவுல ஒரு ஆசிரமம் இருக்கு. அங்கே விசாரிச்சுப் பாரு.

காதல் இருட்டிவிட்டது என்பதற்காக ஒத்தி வைக்கப்படாத ஒரு விளையாட்டு என்பார்கள்.
இதுலே ஆபத்தும் உண்டு. பீச்சில் பேசிக்கிட்டு இருந்தப்போ காதலி சொன்னா வாங்க சீக்கிரம் போலாம், இருட்டிட்டு வருது, பயமாயிருக்கு.
ஏன் பயம் ? அதான் நான் இருக்கேனே அப்படின்னான் அவன்.
அதனாலேதான் பயமா இருக்கு-ன்னா அவ.
வேற மாதிரியும் நடக்கிறது உண்டு. ஒரு பொண்ணு தன்னோட தோழிகிட்டே என் காதலரோட சினிமாவுக்குப் போனனேன்டி ரொம்ப எரிச்சல் படுத்திட்டாரு-ன்னா.
என்ன... ஏதாவது பண்ணித் தொலைச்சிட்டாரா ? அப்படின்னு தோழி கேட்டா.
ஒண்ணுமே பண்ணலை-ன்னு சலிச்சிக்கிட்டா இவ.
இந்த மாதிரி இருட்டுக்குள்ளே என்னவேணாலும் நடக்குங்க...
படம் பார்த்துக்கிட்டு இருக்கும்போதே கரண்டு போயி திரும்பி வந்தது.
கரண்டு வர இவ்வளவு நேரமாகும்னு தெரிஞ்சிருந்தா உனக்கு ஒரு முத்தம் கொடுத்திருப்பேனே அப்படின்னான் காதலன்.
அப்படின்னா, கொஞ்ச நேரத்துக்கு முந்தி முத்தம் கொடுத்தது நீங்க இல்லியா-ன்னு பதறினாள் அவள்.
ஒருத்தன் தன் நண்பன்கிட்டே கேட்டான். பல மாதங்களா கடிதம் மூலமே ஒருத்தியைக் காதலிச்சேன்னு சொன்னியே, நேரிலே போய் பார்த்தியா ? எப்படி இருக்கா ?
பார்த்தேன் வாயும் வயிறுமா இருக்கா.
அம்மி மிதிச்சி அருந்ததி பார்க்கிறது அப்படின்னா என்னன்னு தெரியுமா ?-ன்னு வாத்தியார் பையன் கிட்டே கேட்டார்.
தெரியும் சார் எங்க வீட்டுலே ஜன்னலுக்குக் கீழே கிடக்கிற அம்மியை மிதிச்சுதான் எங்க அண்ணன் எதிர்த்த வீட்டு அருந்ததிங்கிற பெண்ணைப் பார்த்து கிட்டு இருக்கிறான். இப்போ காதல் அந்த ரேஞ்சிலே போகுது.
ஒருநாள் ஒரு பொண்ணுதன் காதலன் கிட்டே, அத்தான் உங்க அன்புச் சின்னம் என் வயித்துலே விளையாடுதுன்னு சொன்னா. உடனே அவன் பதறிப் போய், நாம காதலிக்க ஆரம்பிச்சு ஒரு வாரம் தானே ஆச்சு அப்படின்னான் !
பயப்படாதீங்க. முந்தா நாள் நீங்க வாங்கித் தந்த பாதுஷா இன்னமும் ஜீரணம் ஆகலை. அதைச் சொன்னேன் அப்படினாள்.
காதல்லே கடிதம் எழுதுறதும், கொடுக்கிறதும் ஒரு கலை. ஒருத்தன் தன்னோட காதலிக்கு எழுதின கடிதத்தைப் பாருங்க.
கண்ணே காஞ்சனா ! இந்தக் காதல் கடிதம் உனக்குப் பிடிக்கா விட்டால் கிழித்துப் போட்டு விடாதே. உன் தங்கை கமலாவிடம் கொடுத்து விடு, இது எப்படி இருக்கு.
காதல்னா இரண்டு மனசு இணையணும். ஒருதலைப்பட்சமா இருந்தா கஷ்டம்தான். ஒருத்தன் தன் நண்பன் கிட்டே, ஏண்டா மூஞ்சியெல்லாம் காயமா இருக்கு?ன்னு கேட்டான்.
எதிர்த்த வீட்டுப் பெண்ணை சைட் அடிச்சேன். பூவை வீசினா-ன்னான்.
பூவை வீசினா எப்படிடா காயம் படும்-ன்னான். அவ வீசும் போது பூ, தொட்டியிலே இருந்தது அப்படின்னான் இவன்.
இரயில்வே ரிசர்வேஷன் கவுண்டர்லே வேலை பார்க்கிற பொண்ணைக் காதலிச்சியே என்னாச்சு ? அப்படின்னு ஒருத்தன் இன்னொருத்தன்கிட்டே கேட்டான். அதுக்கு இவன்.
வெயிட்டிங் லிஸ்ட்லே 51-வதா இருக்கிறேனாம் அப்படின்னான்.
ஒருத்தன் பரப்பரப்போட சொன்னான். எனக்கும் என் காதலிக்கும் ஒரே நாளிலே கல்யாணம்.
இதுலே என்ன அதிசயம்-னான் அவன் நண்பன்.
எனக்கு மதுரையிலே கல்யாணம். அவளுக்குத் திருவாரூரிலே கல்யாணம்-ன்னான் இவன்.
ஒரு காதலி தன் காதலன்கிட்டே, அன்பே ! வாழ்ந்தாலும் ஒண்ணாவே வாழ்வோம். செத்தாலும் ஒண்ணாவே சாவோம் அப்படின்னாள்.

அதுக்கு அவன், உங்க அக்காவைக் காதலிக்கும்போதும் அப்படித்தான் சொன்னாள். உன் தங்கையைக் காதலிக்கும்போது அவளும் அப்படித்தான் சொன்னாள். ஏண்டி குடும்பமே இந்த டயலாக்கை மனப்பாடம் பண்ணி வச்சிருக்கீங்களா-ன்னு எரிச்சலா கேட்டான்.
இதைப்போலவே ஒரு காதலன் தன் காதலிக்கிட்டே பேசினான்.
அன்பே நீயின்றி நானில்லைங்கிற நிலைமைக்கு நான் வந்துட்டேன். அதுக்கு அவ.
மவனே !... இப்படியே டயலாக் விட்டுகிட்டு இருந்தா... நீ இல்லைன்னாலும் பரவாயில்லைங்கிற முடிவுக்கு வந்துடுவேன். ஒழுங்கா வேலை வெட்டி பார்த்து தாலிகட்டி குடும்பம் நடத்துற வழியைப் பாரு-ன்னா. இதுதான் யதார்த்த காதல்.
இதை மாதிரி இன்னொரு டயலாக்கை கேளுங்க... ஒருத்தன் சொல்றான்.
அன்பே எத்தனை ஜென்மம் எடுத்தாலும், நீதான் எனக்குக் காதலி. நான் தான் உனக்குக் காதலன். இதுலே மாற்றமே கிடையாது. அதுக்கு அவ, நாசமாப் போச்சு. அப்போ நாம கணவன் - மனைவியா ஆகப்போறதே இல்லியா-ன்னு கவலையோட கேட்டாள்.
டாக்டரைக் காதலிச்சியே என்னாச்சுடி அப்படின்னு ஒருத்தி தன் தோழிகிட்டே கேட்டாள். அதுக்கு அவ.
டாக்டர் கொடுக்கிற லவ் லெட்டர்லே எழுத்து புரியலைன்னு கம்பவுண்டர்கிட்டே கொடுத்து படிக்கச் சொன்னேன்.
இப்போ நாங்க இரண்டு பேருமே காதலிக்க ஆரம்பிச்சிட்டோம்-னா.
இப்படி காதல் சர்வ சாதாரணமா போறதுக்கு சினிமாவும் ஒரு காரணம். கண்டதும் காதல், கை தொட்டதும் காதல் அப்படின்னு ஆகிப் போச்சு.
ஒரு இளைஞன் சினிமா பார்த்துட்டு வந்தான். அந்தப் படத்துல திரும்பத் திரும்ப வந்த ஒரு வசனம் இவன் மனசிலே ஆழமாப் பதிஞ்சு போயிடுச்சி. ஓடிப்போயிறலாமா... ஊரை விட்டே ஓடிப் போயிறலாமா... அப்படின்னு சொல்லிக்கிட்டே வந்தான். பஸ் ஸ்டாப்பிலே ஒரு பொண்ணு நின்னா. அவகிட்டேயும் இதே வசனத்தை எடுத்து விட்டான்.
செருப்பு பிஞ்சிடும்-னா அவ
எதுக்கு பிஞ்சு போவுது ? கையிலே எடுத்துக்கிட்டே ஓடுவோம்-ன்னான் அவன்.
காதல் தோல்வியிலே வர்ற கவிதைகள் கூட சுவையா இருக்கும். ஒரு காதலனின் புலம்பல் இது,
கண்ணே !
உன்னை நான் என் மனச்சிறையில் வைத்தேன்
நீயோ உன் அப்பாவிடம் சொல்லி என்னை மத்திய சிறையில் வைத்து விட்டாயே.
ஒரு பெண்ணைத் தேர்வு செய்யும்போது அவள் பூகோளத்தைப் பார்த்து தேர்ந்து எடுப்பதைவிட அவள் சரித்திரத்தைப் பார்த்துத் தேர்ந்தெடுப்பதே நல்லது.

தலைவரை ஈவ் டீசிங்ல பிடிச்சிட்டுப் போயிட்டாங்களாமே !
காலேஜ் பொண்ணுங்களாப் பார்த்து கன்னிப் பொங்கல் வாழ்த்து சொன்னாராம் !

ஆச்சர்யமாயிருக்கே பொங்கல் முடிஞ்சதும் உங்க மாப்பிள்ளை ஊருக்கு கிளம்பிட்டார் போலிருக்கு !
நாசமா போச்சு ! அவர் தீபாவளிக்கு வந்தவர் !

நம்ம தலைவர் 2001-ல் முதல்வராமே !
ஆமாம்... ஒரு கல்லூரிக்கு முதல்வர் ஆகப் போறாரு !

புகுந்த வீட்டுக்குப் போறே... அங்க நல்ல விதமா நடக்கணும் !
இப்படிச் சொல்வீங்கன்னு தெரிஞ்சுதான் ஒரு வாரத்திற்கு முந்தியே ஹை ஹில்ஸ் ஷூ வாங்கி வச்சிருக்கேன் !

ஒரு பையன் தன் தலைக்கடியில் டிக்ஷனரியை வச்சுகிட்டுத் தூங்கறான் ஏன் ?
ஏன் ?
அவனுக்கு அர்த்தமில்லாத கனவு வருதாம் !

நீருக்கு வேதியல் குறியீடு எழுது என்றதும் பையன், □ழஐதுமுடுசூடீ□ என்று எழுதினான். ஏன் ? என்று டீச்சர் கேட்டாங்க. நீங்க தானே ழ வடி டீ-ன்னு சொன்னீங்க என்றான் பையன் !

ஒரு பையன் ஸ்கேலைக் கையில் வச்சுக்கிட்டு சாப்பிடறான். ஏன் ?
ஏன் ?
அளவோட சாப்பிடறான் !

பயப்படாதீங்க. முதல் ஊசி போடும்போது வலிக்கும். இரண்டாவது ஊசி வலிக்காது என்றார் டாக்டர்.
அப்படின்னா ரெண்டாவது ஊசியையே போடுங்க என்றான் நோயாளி.

நேத்துதான் ஹாஸ்பிடல்ல இருந்து டிஸ்சார்ஜ் ஆனீங்க... அதுக்குள்ள ஆபீஸுக்கு வந்துட்டீங்களே !
டாக்டர் ஒரு மாசத்துக்கு எந்த வேலையையும் செய்யாம ரெஸ்ட் எடுக்கச் சொல்லியிருக்காரு... அதான் !

நம்ம தலைவரும் வெளிநாட்டுத் தலைவரும் எதிரெதிரே உட்கார்ந்து பேசாம இருக்காங்களே !
அமைதிப் பேச்சு வார்த்தைங்கறதைத் தப்பா புரிஞ்சுக்கிட்டாங்க !

புடவையைப் பற்றிப் பேசினதுக்கா உன்னை அவள் அடித்தாள் !
ஆமாம் அந்தப் புடவை இல்லாமலே நீ அழகாக இருப்பாய் என்று சொன்னேன் !

உங்களுக்கு வேண்டாதவங்க யாராச்சும் இருக்காங்களா, தலைவரே !
எதுக்குய்யா கேட்கிறே ?
மாட்டுப் பொங்கல் வாழ்த்துன்னு போட்டு யாரோ அனுப்பியிருக்காங்களே !

பொங்கல் முதல் அந்த ஆபீஸில புது வசதி செஞ்சிருக்காங்களாமே !
ஆமாம்... லஞ்சப் பணத்தை கிரெடிட் கார்டு மூலம் ஏற்றுக் கொள்கிறார்களாம் ?

கோயில்ல பொங்கலிடும் போது ஏன் டேப் ரிக்கார்டும் கையுமா நிக்கிறீங்க ?
பால் பொங்கும் போது குலவை விடணும். அது என் மனைவிக்கு தெரியாது. குலவைச் சத்தம் பதிவு
பண்ணியிருக்கிற கேஸட்டை போட்டுடுவேன் !

நீ போன வாரம் பண்ணின பொங்கலை எங்க கட்சி தலைவர் வாங்கினு வரச் சொன்னாரு !
எதுக்கு ?
கட்சி போஸ்டர் ஒட்ட வேணுமாம் !

உனக்கு பொங்கல் வாழ்த்து அனுப்ப ஸ்டாம்பு கிடைக்கலே அதனாலே வாழ்த்தை கையிலே குடுக்கிறேன்...
எனக்கு வாழ்த்து வாங்கக் கூட நேரமில்லே - இந்தா காசு தர்றேன்... நீயே கடையிலே வாங்கிக்க...

என் மனைவி என்னை மனுஷனாவே மதிக்கறதில்லை...
அப்ப ! உங்க வீட்டுல மாட்டு பொங்கல்தான் ரொம்ப விசேஷம்-னு சொல்லுங்க...?
நன்றி இதயம் பேசுகிறது 28-1-2001
எதைக் குடித்தாலும சுடவெச்சுக் குடிங்க...
விஸ்கி, பிராந்தியையுமா, டாக்டர் !

டாக்டர், வயிறு எரியுது...!
எப்பத்திலிருந்து ?
நீங்க ஃபீஸ் வாங்கறத பார்க்கும் போதெல்லாம்...!

அப்படி என்னடா... இன்டர்வியூல கஷ்டமான கேள்வியை கேட்டுட்டாங்க ?
தமிழ்நாட்டிலே மொத்தம் எத்தனை கட்சிகள் இருக்குன்னு கேட்டாங்களே !

சே... நம்ம பக்கத்து வீட்டு பரமசிவத்தோட பெரிய ரோதனையாப் போச்சு...!
ஏங்க... என்னாச்சு ?
நியூஸ் படிச்சிட்டு தர்றேன்னு சொல்லி பேப்பர் கேட்டாரு. சரின்னு கொடுத்தேன். இப்ப வந்து டி.வியை தாங்களேன்.
நியூஸ் பார்த்துட்டுத் தர்றேன்னு கேக்கறார் !

இது ரொம்பவும் லோ-பட்ஜெட் படமா இருக்காலாம் ! அதுக்காக இப்படியா ?
என்னாச்சு ?
இலவச டீ வழங்கிய டீ-ஸ்டால் உரிமையாளர் முனுசாமிக்கு நன்றி-ன்னு டைட்டில்ல போடுறாங்களே !

பிச்சைக்காரர்கள் மாநாடு நடத்துறாங்களே ஏன் ?

எலெக்ஷன் வருதுல்ல, ஏதாவது ஒரு கட்சியோடு கூட்டணி வைக்கத்தான் !

திறப்பு விழாவுக்கு கூப்பிட வந்தவங்களை தலைவர் திட்டி துரத்துறாரே... ஏன் ?
நரபலி ஆசிரமத்தை திறந்துவச்சு முதல் போணி பண்ணச் சொன்னாங்களாம் !

உங்க மகன் சிகரெட் பிடிக்கிறானே, உங்களுக்குத் தெரியுமா ?
எனக்கு சிகரெட் பிடிக்கத் தெரியாதுங்க !

ஸ்பீக்கர் இருந்தாதான் நிகழ்ச்சி நல்லா இருக்கும்...
பாலயோகியா ? பழனிவேல் ராஜனா ?
அட... மைக்செட்காரர்ட்டே இருக்கிற ஸ்பீக்கரை சொன்னேன்.

எனக்கு ஒரு வேலைக்காரி வேணும். அவங்க ரம்பா ரசிகையா இருந்தா நல்லது...!
ஏன்.. ?
அவங்கதானே நல்லா தொடை-ப்பாங்க !

புயலடிக்கும் போது கையிலே குண்டூசியை வச்சுக்கணுமா... என் ?
புயலுக்கு பின்-னே அமைதின்னு சொல்றாங்களே !

என்ன இது, டி.வி-ல கிரிக்கெட் ஒளிபரப்பறதா சொல்லிவிட்டு நடிகை லைலாவோட பேட்டியை ஒளிபரப்பறாங்க ?
அதுவா, லைவா ஒளிபரப்பணும்னு சொன்னதை லைலானு தப்பா புரிஞ்சுக்கிட்டாங்க...!

மன்னர் ஆயிரம் பொற்காசுகள் பரிசுன்னு அறிவிச்சிருக்காரே எதுக்காம் ?
இயற்கையிலேயே டி.வி சீரியலுக்கு நீளம் உண்டா?ன்னு ஐயப் பாடு வந்துடுச்சாம் !

எங்கே... ஈ காட்டுங்க பார்க்கலாம் ?
ஏன் டாக்டர்.. .! நீங்க ஈயே பார்த்ததில்லையா...?
நன்றி குமுதம் 1-2-2001
தலைவருக்கு கம்ப்யூட்டர் மோகம் அதிகமாயிருச்சா... எப்படி...?
நேத்து வரைக்கும் தொண்டர்கள்தான் ஆணிவேர்-னு சொன்னவர், இப்ப தொண்டர்கள்தான் சாஃப்ட்வேர்-னு சொல்றாரே !

பக்கத்து வீட்டுல ஒரு அரசியல்வாதி குடியிருக்கிறது தெரியாம, என் பையனைப் பொறம்போக்குனு திட்டினது தப்பாப் போச்சு !
ஏன்...?
பையன் அவருக்குச் சொந்தம்னு கூட்டிப்போக வந்துட்டார் !

அங்கே உட்கார்ந்திருக்கிற மாமியார், மருமகளை வாயால கெட்டவங்கனு சொல்றியே... பயங்கரமா சண்டை போடுவாங்களா ?
இல்லே... டாக்டர் சொன்ன டயட்-ல இல்லாம கண்டபடி சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக்கிட்டவங்க !

இவரை ஆங்கிலத்துல புலினு எல்லோரும் பாராட்டுவாங்க...
அதெப்படி... ஆங்கிலத்துல டைகர்-னுதானே பாராட்டணும் ?

அண்டைநாட்டு மன்னரிடம் இருந்து வந்துள்ள தூதுவர் என்ன கொண்டு வந்திருக்கிறார்... ஏதேனும் ஓலையா...?
இல்லை மன்னா... புது வருட காலண்டர் கொண்டு வந்திருக்கிறார் !

வேறு வேறு அணியைச் சேர்ந்த நாம் காதல் கூட்டணி அமைச்சே சில மாசம்தானே ஆகுது. அதுக்குள்ளே கல்யாணத்துக்கு என்ன அவசரம் ?
என் வயித்துக்குள்ள மூன்றாவது அணி உருவாயிடுச்சே !

நெட் ஜோக்

வேடிக்கை பார்க்க கிராமத்துக்கு விஜயம் செய்த அவருக்கு ஒரு வேதனையான காட்சி காத்திருந்தது. கால் ஒன்றை முழுவதுமாக இழந்து அதிலிருந்து லேசாக ரத்தம் கசிந்தபடி முனகிக்கொண்டிருந்தது ஒரு ஆடு.

ஆட்டுக்குச் சொந்தக்காரர் அருகிலேயே இருக்கவும் அவரை விசாரித்தார் நம்ம ஆள். அது பெரிய சோகக் கதைங்க - என்று இழுத்தவர். ஒரு நாள் ராத்திரி திடீர்னு எங்க வீடு தீப்பிடிச்சுடுச்சு. எதுவும் தெரியாம வீட்டுக்குள்ளே நாங்க தூங்கிட்டிருந்தோம். அப்ப எங்களை எழுப்பிவிட்டுக் காப்பாத்தின ஆடு சார் இது ! - என்றார்.
சரி... அவ்வளவு உதவி பண்ணிய ஆட்டை இப்படி வெச்சுட்டிருக்கியே... இது நியாயமா ? என்று கேட்டார் நம்ம ஆள்.
இன்னும் கேளுங்க. ஒரு தடவை டிரராக்டர்ல இருந்து நான் தவறி விழுந்துட்டேன். உடனே ஓடிப்போய் ஆட்களையெல்லாம் அழைச்சுட்டு வந்து, என் உயிரைக் காப்பாத்தினதும் இந்த ஆடுதான் !
இன்னமும் நான் கேட்ட கேள்விக்குப் பதில் வரலை...
பதில்தான் சார் சொல்லிட்டிருக்கேன். இவ்வளவெல்லாம் உதவி பண்ணிய ஆட்டை ஒரே நாள்ல எப்படி சார் மட்டனாக்க மனசு வரும் ? !

சார்... தாலிய வெச்சு ஒரு சென்டிமெண்ட் கதை சொல்லவா ?
நானே அடகு கடைல ஒட்டியாணத்தை வெச்சு பூஜை போடறேன்... நீ வேற...!

என்ன இது... இட்லிக்குத் தொட்டுக்க ஜாம், வடைக்குத் தொட்டுக்க ஜாம், தாம்பூலப் பையில ஜாம் பாக்கெட்னு ஒரே ஜாம் மயமா இருக்கு.
அதுவா... கல்யாணத்தை ஜாம் ஜாம்-னு நடத்துவோம்னுதான் சொன்னாங்களே !

விமானம் மாதிரி பஸ்லேயும் ஸீட் பெல்ட் போட்டுக்கச் சொல்றாங்க !
பாதுகாப்புக்கா ?
நீங்க வேற ! செக்கிங் வரும்போது இறங்கி ஓடிடாம இருக்கறதுக்காம் !

பேப்பர் ரோஸ்ட் ஓரத்துலே வரிசையா சின்னச் சின்ன ஓட்டை இருக்கே... ஏன் ?
இது கம்ப்யூட்டர் பேப்பர் ரோஸ்ட் சார் !

அந்த டாக்டர் எதுக்கு எல்லோர்கிட்டேயும் கடன் வாங்கறாரு...?
கடனைத் திரும்ப வாங்கற சாக்குலயாவது நாலு அஞ்சு பேர் கிளினிக் பக்கம் வருவாங்களே... அதுக்குத்தான் !

ஞாபகமறதிக்கு நான் கொடுத்த மாத்திரைல நல்ல குணம் இருக்குன்னு சொல்றீங்களே, எப்படி ?
இவ்வளவு நாளா உங்ககிட்டே என் பேர் சோமு-ன்னுதானே சொல்லிட்டிருந்தேன்... இப்பதான் நினைவு வந்தது... என் பேர் சுந்தரம்-னு !

எனக்குத் தூக்கத்தில் நடக்கற வியாதி இருக்கு டாக்டர்.
வெரிகுட் ! எனக்கும் அது இருக்கு. ராத்திரி வீட்டுக்கு வாங்க. பேசிக்கிட்டே நடப்போம்.

வீட்டுக்கே வந்து டாக்டர் பிரசவம் பார்த்தார் !
அப்ப டோர் டெலிவரி-ன்னு சொல்லு !

தெரியாத்தனமா சரித்திரப் பேராசிரியரை என் மகனுக்குப் பேர் சூட்டக் கூப்பிட்டது தப்பாப் போச்சு !
ஏன்... என்ன பேரு வெச்சாரு ?
முதுகனிங்குன்ற செங்கோட்டுச் சீர்வளவப் பாண்டியன்னுதான் !

அந்தப் பத்திரிகை ஆசிரியர், அவரோட பத்திரிகைல எழுத உன்னைக் கூப்பிட்டு அனுப்பினாரா... ஆச்சரியமா இருக்கே !
இதுல என்ன ஆச்சரியம் ? என் கையெழுத்து அழகா இருக்கும்கறதால அவரோட அறுபதாம் கல்யாண பத்திரிகைகளுக்கு என்னை அட்ரஸ் எழுதிக் கொடுக்கச் சொன்னார் !
நன்றி ஆனந்த விகடன் 28-1-2001
டாக்டர் அந்த பேஷண்ட்டை ஆபரேஷன் செய்ய ஏன் இவ்வளவு யோசிக்கிறீங்க. காம்ப்ளிகேட்டான கேஸா ?
தான் பிழைத்தால் 10 ஆயிரம் தருவதாக பேஷண்டும், பேஷண்ட் செத்துட்டா 15 ஆயிரம் தருவதா அவரோட சொந்தக்காரங்களும் சொல்றாங்க சிஸ்டர்.

மற்ற மிருகங்களைக் காட்டிலும் நாய்களைச் சுற்றி நடக்கின்ற நகைச்சுவைக் காட்சிகள் ஏராளம்.
ஒருத்தர் நாய்கள் ஜாக்கிரதை-ன்னு ரொம்ப பெரிய போர்டை வீட்லே மாட்டியிருந்தார். இத்துணூண்டு சின்ன நாய்க்குட்டி வளக்கிறீங்க. அதுக்கு இவ்வளவு பெரிய போர்டு எதுக்கு ?-ன்னு வீட்டுக்கு வந்த ஒருத்தர் கேட்டார்.

என்ன செய்யறது ! இவ்வளவு பெரிய போர்டு வச்சிருந்தாலும் வர்றவங்க நாய்க் குட்டியை மிதிச்சிடுறாங்களே - என்று சலிச்சிக்கிட்டார் இவர்.
வீட்டுக் காவலுக்கு நாய் வளர்க்கிற காலம் போய் இப்போ மனுஷன் நாய்க்கு காவல் காக்கிற காலமாப் போச்சி.
ஒருநாள் ராத்திரி ரெண்டு மணிக்கு பட்டிமன்ற நிகழ்ச்சியை முடிச்சிட்டு ஒரு தெரு வழியா போய்க்கிட்டிருந்தேன்.
ஒரு வீட்டு வாசல்லே என்னோட நண்பர் உட்கார்ந்திருந்தார்.
என்ன ! இந்த நேரத்திலே இப்படி வெளியே உட்கார்ந்திருக்கீங்களே-ன்னு கேட்டேன்.
சத்தம் போடாம மெல்லப் பேசுங்க ! உள்ளே நாய் தூங்குது-ன்னார் அவர்.
மனைவியைக் கிண்டலடிக்க இதுவா நேரம் ?-னு நான் கேட்க.
அட நீங்க ஒண்ணு ! உண்மையிலேயே நாய்தான் தூங்குது. ஐயாயிரம் ரூபா கொடுத்து அபூர்வ நாய் வாங்கியிருக்கேன். எவனாவது தூக்கிட்டுப் போயிடக் கூடாதேன்னு பயமாயிருக்கு. அதான் காவலுக்கு உட்கார்ந்திருக்கேன்-னார் அவர். நெலைமையைப் பார்த்தீங்களா ?
நாய் நன்றியுள்ள பிராணி தான். அதையே தங்களுக்கு மூலதனமா ஆக்கிடுறவங்களும் உண்டு. ஒருத்தர் ஒரு நாயை எங்கிட்ட விக்கிறதுக்கு வந்தார்.
என்ன விலை?ன்னேன். பத்தாயிரம்-ன்னார். அப்படி என்ன இந்த நாய்க்கிட்ட விசேஷம் ?ன்னேன். நன்றி உணர்ச்சியிலே மற்ற நாய்களை விடக் கூடுதல்-ன்னார்.
அதை எப்படி நம்புறது-ன்னேன்.
என்ன இப்படி சந்தேகமா கேட்கிறீங்க.
இந்த நாயை இது மாதிரி பத்து பேருகிட்டே வித்துருக்கேன். ஒவ்வொரு தடவையும் எங்கிட்டேயே திரும்பி வந்திருக்குன்னா அதோட நன்றி உணர்ச்சியை நீங்க புரிஞ்சுக்கணும்-ன்னாரே பார்க்கலாம்.
அப்புறம் நாயை வாங்குவேனா நான் ?
இதுகூடப் பரவாயில்லை இன்னொருத்தர் நாயைக் கொண்டு வந்து இரண்டாயிரம் ரூபாய்தான் வாங்கிக்கோங்க-ன்னார்.
ரெண்டாயிரம் கொடுத்து வாங்க இதிலென்ன விசேஷம்-ன்னேன்.
இது போலீஸ் நாய் ரிடையர் ஆயிருக்கு. மோப்பம் பிடிக்கிறதுல சிறந்தது-ன்னார்.
போலீஸ் நாய் என்பதற்கு அடையாளம் எதுவும் இல்லயே-ன்னேன்.
இது ரகசியப் போலீஸ் நாய் ! அப்படித்தான் இருக்கும். அப்படின்னார். எவ்வளவு சாமர்த்தியம் பாருங்க.
நம்ம பொழைப்பு நாய் பொழைப்பா போயிருச்சின்னு சில பேர் ரொம்ப சலிச்சுக்குவாங்க. அது உண்மைதான் போல இருக்கு. ஒருத்தருக்கு நேர்ந்த கதியைப் பாருங்க.
ஒருநாள் காலங்கார்த்தால படுக்கையை விட்டு எழுந்திரிச்சி ஒருத்தர் காப்பிக்காக காத்துக்கிட்டிருந்தாரு. அவரோட மனைவியோ காப்பி குடுக்கிற மாதிரி தெரியலை. காரணம் என்னன்னா முந்தின நாள் ரெண்டு பேருக்கும் சண்டை. குடுத்தா குடிப்போம்னு இவர் இருக்கார். கேட்டா கொடுப்போம்னு அந்தம்மா வீம்போட இருந்தாங்க. மணி எட்டுக்கு மேலே ஆயிருச்சி. அந்தம்மாவுக்கு இரக்கம் வந்துடுச்சி. அப்பவும் நேரடியாக் கொண்டுபோய் குடுக்காம மகனைக் கூப்பிட்டு,
இந்தாடா ! இந்த காப்பியை அதுக்கிட்ட குடு-ன்னாங்க. அவருக்கு ரோஷம் வந்திடுச்சி.
இந்தக் காப்பியை எந்த நாய்டா குடிக்கும்-ன்னாரு. அதுக்கு அந்த அம்மா பதினைஞ்சி வருஷமா எந்த நாய் குடிச்சிதோ. அந்த நாயைக் குடிக்கச் சொல்லுடா-ன்னாங்க.
இவருக்கு எப்படியும் காப்பி வேணும். கோபத்தோட கோபமா காப்பியை வாங்கிக் குடிக்க ஆரம்பிச்சார். அப்போ பையன் மெதுவா ஆரம்பிச்சான்.
அப்பா ! நம்ம வீட்டுக்கு ஒரு நாய் வங்கணும்பா-ன்னான். அவருக்கு கோபம் எகிறிடுச்சி.
எதுக்குடா தனியா நாய் ? நான் தான் ஒருத்தன் இந்த வீட்டிலே நாய் மாதிரி குலைச்சிக்கிட்டு கெடக்கேனே-ன்னார்.
அதுக்குப் பையன் அலட்டிக்காம சொன்னான்.
நல்ல நாயா வாங்கணும்-ப்பா !
இவருக்கு வாத்தியார் வேலை. பள்ளிக்கூடத்துக்குப் போய் பாடம் நடத்த ஆரம்பிச்சாரு. அங்கேயும் பிரச்சினை. வகுப்பறை ஜன்னலுக்குப் பக்கத்துல ஏழெட்டு நாய்ங்க பயங்கரமா கொரைச்சி சண்டை போட்டுக்கிட்டு இருந்திச்சி. இவரால பாடம் நடத்த முடியலை. நிறுத்திட்டாரு.
பையன்களெல்லாம் அதையே வேடிக்கைப் பார்த்துக்கிட்டிருந்தாங்க. சண்டை முடிஞ்சி கொரைப்புச் சத்தம் அடங்கினதும் ஒரு பையன் எழுந்திரிச்சி.
சார் ! நாய்களெல்லாம் கொரைக்கிறதை நிறுத்திடுச்சி. இனிமே நீங்க ஆரம்பிங்க-ன்னான். பையன்களெல்லாம் கொல்-லுன்னு சிரிச்சிட்டாங்க. விபரமான பையன்கள்தான்.
சாயந்திரம் ஸ்கூல் முடிஞ்சதும் ரோட்டிலே நடந்து போயிக்கிட்டு இருந்தாரு நம்ப ஹீரோ. ஏதிர்த்தாப்பில வந்த ஒருத்தனோட கால்லே இருந்து ரத்தம் கொட்டிக்கிட்டு இருந்தது.
என்ன ஆச்சு-ன்னார் இவர். நாய் கடிச்சிருச்சிங்க-ன்னான் அவன்
உடனே ஆஸ்பத்திரிக்குப் போய் ஊசி போட்டுக்கோங்க-ன்னு ஆலோசனை சொன்னார் இவர்.
ஐயய்யோ ! ஊசியா ? தொப்புளைச் சுத்திப் போடுவாங்களாமே. நான் போக மாட்டேன்-ன்னான்.

ஊசி போடாட்டா விபரீதமாயிடும். நீ கொஞ்ச நாள்லே நாயா மாறி எல்லோரையும் கடிக்க ஆரம்பிச்சிடுவே-ன்னு திரும்பவும் அழுத்தமா ஆலோசனை சொன்னார்.
அப்படியா. நாயா மாறிடுவேனா நல்லதாப் போச்சு-ன்னு சொன்னபடியே அந்த ஆளு ஒரு பேனாவும் பேப்பரும் எடுத்து ஏதோ லிஸ்ட் போட்டான்.
என்ன எழுதுறீங்க-ன்னு இவரு கேட்க, அதுக்கு அவன், ஒரு வேளை நான் நாயா மாறிட்டேன்னா யாரை யெல்லாம் கடிக்கலாம்-னு லிஸ்ட் போட்டுட்டிருக்கேன்-ன்னார்.
அதுல ஆலோசனை சொன்ன இவரு பேரு முதல்ல இருந்திச்சிங்கிறது முக்கியமான சமாச்சாரம்.
அப்படியே ஓரங்கட்டி கடைத் தெருவுலே இவரு நடந்தப்போ இவரோட நண்பர் வாங்க சார், எங்க இந்தப் பக்கம் ? பார்த்து ரொம்ப நாளாயிடுச்சி. நம்ம வீடு பக்கத்துலதான் இருக்கு. வாங்க டிபன் சாப்பிட்டுட்டுப் போலாம்-ன்னார்.
ஏற்கனவே ஜுரத்துலே நடுங்கிட்டிருந்த இவரு.
வேண்டாங்க. நான் என் வீட்டுக்கே போயி சாப்பிட்டுக்கிறேன்-னார். அதுக்கு அந்த ஆளு. என்ன சார் ! பிரியமா கூப்பிடுறேன் வரமாட்டேங்கிறீங்க. எந்தெந்த நாயெல்லாமோ எங்க வீட்லே வந்து சாப்பிடுதுங்க. நீங்க வரக் கூடாதா சார் ! அப்படின்னார்.
அவ்வளவுதான் நம்ம ஆளு தலைதெறிக்க ஓட ஆரம்பிச்சிட்டாரு.
நாவின் கற்பு மௌனம்தான் யார் மனதையும் இப்படிப் புண்படுத்த வேண்டாமே !

லாட்டரிச் சீட்டு அதிபர் கட்சி ஆரம்பிக்கிறாருன்னு நம்பி பின்னாடி போனது தப்பா போச்சு.
ஏன் ?
தேர்தலுக்கு எழுபது லாட்டரி சீட்டைக் கொடுத்து அனுப்பிட்டாரு ?

இன்ஸ்பெக்டர் நேத்து நைட் எங்க வீட்டுக்கு ஒரு திருடன் வந்துட்டான்.
இருக்காதே ? ஸ்டேஷன்ல இருந்து யாரையும் நான் அனுப்பலையே ?

12 மணிக்கு சாப்பிட வேண்டிய மாத்திரையை 6 மணிக்கே விழுங்கிட்டேன் டாக்டர் !
அய்யய்யோ... அப்புறம் ?
வாட்சில் 12 மணிக்கு முள்ளை திருப்பி வச்சிட்டேன்.

டாக்டர் டி.வி. சீரியல் மாதிரி கனவு வருது.
அப்படீன்னா ?
கடந்த நூத்தி அறுபது ராத்திரியா ஒரு கனவு முடியவே இல்ல.

குழந்தை பிறக்க வாய்ப்பு இருக்கா, இல்லையான்னு ஓப்பனா சொல்லிடுங்க டாக்டர்...?
எனக்கு என்னமோ வாய்ப்பு இருக்குன்னுதான் தோணுது.
உங்களுக்கு கேட்கலை டாக்டர், எனக்கு கேட்டேன்.

அந்த ஆள் ஒரு மாதிரிப்பா !
எப்படிச் சொல்ற ?
ஆவி பிடிச்சா ஜலதோஷத்திற்கு நல்லதுன்னு சொன்னேன். உடனே சுடுகாட்டுக்கு போயிட்டாம்பா !

பைனான்ஸ் கம்பெனி முதலாளிக்கு ஆபரேஷன் பண்ணுனீங்களே நிலமை எப்படி?
இழுத்துக்கிட்டிருக்கு !

உங்க மெண்டல் டென்ஷன் குறையணும்னா எப்பவும் சந்தோஷமா இருங்க. உங்களுக்கு பிடிக்காத எந்தக் காரியத்தையும் செய்யாதீங்க.
ஓ.கே. டாக்டர் அப்போ ஃபீஸ் தர வேணாமா ? தேங்க்யூ டாக்டர்.

ஆபரேஷன் பண்ணிக்க போற பேஷண்ட் எங்கே நர்ஸ் ?
டாக்டருக்கு எதுக்கு வீண் சிரமம். நானே போய் தற்கொலை செய்துக்கறேன்னு சொல்லிட்டு போயிட்டார் டாக்டர்.

அகண்ட தமிழகம் அமைக்கணும்னு சொல்றீங்களே... ஏன் ?
நம்ம கூட்டணிக் கட்சிங்க கேட்கறதைப் பார்த்தா ஆயிரத்துக்கும் மேலே தொகுதிகள் தேவைப்படுதே !

உங்களுக்குப் போட்ட காபியை டிரைவருக்கு கொடுத்திட்டேங்க !

பரவாயில்லை வுடு ! வேறே டிரைவரை வேலைக்கு வச்சுக்கலாம் !

எங்க மாமா ஒரு முன்னாள் மந்திரி !
அப்படியா ? இப்ப எந்த ஊர் ஜெயில்லே இருக்காரு ?

உனக்கு இந்த சம்பளம் தருவதை வேறு யாரிடமும் சொல்லக் கூடாது... தெரியுதா ?
சத்தியமாகச் சொல்ல மாட்டேன் முதலாளி... சொன்னால் எனக்குத் தானே கேவலம் ?

வருஷக் கடைசிங்கிறதால மாமூல் ரொம்ப கம்மியா வசூல் ஆச்சு.
அதுக்காக ? போலீஸ் ஸ்டேஷன்ல கடமை, கண்ணியம், தட்டுப்பாடு-னு எழுதி வைக்கிறதா ?

திருடிகிட்டு போறதில்லாம ஒரு கூப்பனை வேற கொடுத்து நிரப்ப சொல்றியே ஏம்பா !
மாசக் கடைசியில இந்த மாதிரி கூப்பன்ல இருந்து ஒரு அதிர்ஷ்டசாலியை தேர்ந்தெடுத்து ஆறுதல் பரிசு கொடுப்பேன், அதுக்குத்தான்.

அந்த கிரிக்கெட் வீரர் ஆரம்பிச்சிருக்கிற ஃபைனான்ஸ் கம்பெனியில தைரியமா பணம் போடலாம்ங்கிறியே... எப்படி ?
அவருதான் ஓடமாட்டாரே !

மாட்ச் ஃபிக்ஸிங்கில் அம்பயருக்கும் பங்கு இருக்கும்னு நினைக்கிறேன் !
எதை வெச்சு அப்படிச் சொல்றீங்க ?
ரன் அவுட் கொடுக்கிறதுக்கு முன்னாடி சூட்கேஸ் ரெடியானு அப்பப்ப சதுரம் போட்டு சைகை காட்டறாரே !

தலைவர் போற வழிகள்ல வரிசையா பத்து அடிக்கு ஒரு மாடலிங் ஃபிகரை நிறுத்தி வெச்சிருக்காங்களே ஏன்...?
அலங்கார வளைவுகள் நான் போற பக்கம் நிறைய இருக்கணும்னு தலைவர் சொல்லி இருந்தாராம்.

தலைவர் என்ன உயில் எழுதறாரு ?
அவர் காலத்துக்குப் பிறகு ஆட்சியில் பங்கு கேட்கற உரிமை அவர் பேரனுக்குத்தான் சேரணுமாம் !

நம்ம தலைவர் அரசியலையும், குடும்பத்தையும் பிரிச்சே பாக்கறதில்லை.
எதை வெச்சு சொல்றே ?
இல்லைன்னா, தன்னோட பையன் கல்யாணத்துக்குக்கூட லாரியில ஆளுங்களை கூட்டிக்கிட்டு வருவாரா ?

நடிகருக்கும் தயாரிப்பாளருக்கும் என்ன வித்தியாசம் ?
நடிகர் கிழிஞ்ச வேட்டியோட சென்னைக்கு வந்து கோடீஸ்வரரா மாறுவாரு ! தயாரிப்பாளர் கோடீஸ்வரரா சென்னைக்கு வந்து வேட்டியை கிழிச்சுக்கிட்டு அலைவாரு !

ஜெயில்கள்தான் எனக்கு யாத்திரைத் தலம்னு தலைவர் சொல்ல ஆரம்பிச்சிருக்காரே... ஏன் ?
ஊழல் வழக்குகள்ல அடுத்தடுத்து தீர்ப்பு வர இருக்குல அதான் !

தலைவரே ! நம்ம கட்சித் தொண்டர்கள் ரொம்ப சோர்வடைஞ்சிட்டாங்க !
என்ன செய்யலாம் ?
கட்சிக்குள்ளேயே கோடீஸ்வரன், லட்சாதிபதின்னு போட்டி வைக்கலாம் !

நேத்து என் வீட்டில் இன்கம்டாக்ஸ் ரெய்டு நடந்துச்சு !
உனக்கு பரவாயில்லை ! என்மேல் அதிகமாக சொத்து சேர்த்ததாக கேஸே போட்டுட்டாங்க !
நன்றி குமுதம் 8-2-2001
ஆபரேஷன்ல பாதிதானே முடிஞ்சிருக்கு... அதுக்குள்ளே டாக்டர் ஏன் சக்ஸஸ்... சக்ஸஸ்-னு கத்தறார்...?
இந்த பேஷண்ட்டுக்கு போனவாட்டி பண்ணின ஆபரேஷன்ல மிஸ்ஸான கத்திரிக்கோல் இந்த வாட்டி கிடைச்சிடுச்சாம் !

உங்க பொண்ணை பிளேடு பக்கிரிக்கு ஏன் கொடுக்கலை...?
அருவா வேலு கிராஸ் பண்ணிட்டாரு... அதனால அவருக்குத் தரும்படியாயிடுச்சு !

ஆபரேஷன் சார்ஜ் எனக்கு மட்டும் அதிகமாக இருக்கே டாக்டர்...?
உங்களுக்கு ஸ்பெஷலா எம்ப்ராய்டரி தையல் போட்டிருக்கோம் சார் !

நீ எங்க வீட்டுல எந்த வேலையும் செய்ய வேண்டாம். தினமும் அக்கம் பக்கத்து வீட்டு நியூஸை மட்டும் சொன்னா போதும், மாசம் எவ்வளவு கேட்கிறே ?

என்னது உங்களோட புதுக்கட்சி பேரு ஸ்பெஷல் முன்னேற்றக் கழக-மா...?
ஆமா... தேர்தல் முடிஞ்ச உடனே கலைச்சிடுவோம்.. .!

புது தலைவர் சரியான குடாக்கு-ன்றியே... ஏன் ?
எப்படி எலெக்ஷன்ல ஜெயிக்கறதுனு கேட்டா, நம்ம கட்சிக்குன்னு வோட்டு வங்கி இருக்காமே... அங்கே போய் வோட்டுகளை லோன் போட்டு வாங்கிக்கலாமேன்றார் !

நம்ம ராமமூர்த்தி எள்ளுனா எண்ணெய்யா இருப்பாரு...
நிஜமாவா...?
ஆமாம்... ஃபைனான்ஸ் கம்பெனி ஆரம்பிக்கலாமான்னு கேட்டேன். சரி-னு சொல்லிட்டு உடனே ஓடிட்டாரு.

என் கணவர் டியூட்டில இருக்கும்போது முதலாளிகூட இவர் முன்னாடி உட்காரமாட்டாரு...
நிஜமாவா...?
ஆமாம்... இவர்தான் லிஃப்ட் ஆபரேட்டராச்சே.. .!

அடுத்து நான் எடுக்கப் போற இந்த டி.வி-சீரியல் பெரிய மெகா சீரியல்...
நிஜமாவா...?
ஆமாம்... டி.வி-யை ஆஃப் பண்ணாகூட சீரியல் ஓடிட்டே இருக்கும்.

எங்க மாமாவுக்கு கிராமத்துல சொந்தமாக நிறைய மாடு இருக்கு...
அப்ப மாடெல்லாம் உங்க மாமாவுக்கு தூரத்துச் சொந்தம்-னு சொல்லுங்க.. .!

என்ன... உங்க வீட்டுக்கு உன்னோட சின்ன மாமியார், ரெண்டு நாத்தனாரெல்லாம் வந்திருக்காங்க போலிருக்கே...?
ஆமா... என் மாமியார் என்னோட சண்டை போட மெகா கூட்டணி அமைச்சிருக்காங்க.. .!

ஆபீஸ் கம்ப்யூட்டர்ல ஏம்பா உன் சொந்த வேலையெல்லாம் பண்ணே... ?
இது என் சொந்த வேலை இல்லை சார்... எங்க பக்கத்து வீட்டுக்காரர்து.. .!

உங்களுக்கு லஞ்ச் டைம் எப்போ ?
ஒரு மணியிலிருந்து மூணு மணி வரைக்கும் !
ஐயோ... ரெண்டு மணி நேரத்துக்குக்கான சாப்பாட்டை எப்படி எடுத்துட்டுப் போறீங்க ?
நன்றி ஆனந்த விகடன் 4-2-2001
எங்க கெஸ்ட்ரூமில் இருக்கிற கட்டில், எங்க தாத்தா உபயோகிச்ச கட்டில்-னு எப்படிக் கரெக்டா கண்டுபிடிச்சீங்க ?
நேத்து ராத்திரி அந்தக் கட்டிலில் நான் படுத்துத் தூங்கினப்போ, அஞ்சலி தேவி, தேவிகா, பத்மினி, பானுமதி, சாவித்திரி-ன்னு பழைய நடிகைகளா கனவுல வந்தாங்களே !

வெளிநாட்டு ஹார்டுவேர் கம்பெனிகளோடு நம்ம தலைவர் தீவிரமா பேச்சு வார்த்தை நடத்திகிட்டு இருக்கார் !
எதுக்கு ?
தேர்தலில் நிற்கத் தடை வந்தால் அதை உடைப்பதற்கு வேண்டிய உயர்ரக சுத்தியல் வாங்கத்தான் !

ஏன் உங்க மருமகளைக் கோவிச்சுக்கறீங்க ?
நான் லேசா இருமினால், விக்கினால் கூட - உடனே காசி தீர்த்த சொம்பை எடுத்து வந்து பக்கத்தில் உட்காந்துக்கறா !

குரு எட்டாமிடம் வந்துட்டா, உங்களை எந்த அரசியல்வாதியாலும் அசைக்க முடியாது !
எட்டாமிடம் கொண்டு வர்றதுக்கு, எவ்வளவு பணம்யா வேணும் !

தலைவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்தது தப்பாப் போச்சு !

என்னங்க ஆச்சு ?
அவரோட சின்ன வீட்டை நர்ஸாக்கணும்-னு அடம்பிடிக்கிறார்.. !

உங்க நண்பர் டி.வி. விளம்பரமெல்லாம் நிறைய பார்ப்பாரோ ?
ஏன் கேக்கறீங்க ?
அந்த கல்யாணத்திலே அம்பத்தோரு ரூபாய் மொய் எழுதறப்போ அம்பது ரூபா பணமும், ஒரு ரூபாய்க்குப் பதிலா ஷாம்பூ பாக்கெட்டும் தர்றாரே !

கொலைக் குற்றத்துக்காக ஆயுள் தண்டனை பெற்ற அந்த கணவன் மனைவி ரெண்டு பேரும் இப்போ ஏன் தூக்குத் தண்டனை கேக்கறாங்க ?
ரெண்டு பேரையும் ஒரே சிறையில் அடைக்கப் போறதா பேசிக் கிட்டாங்களாம் ! அந்த வெறுப்பில்தான் !

போலி ஜாமீன் ரெடி பண்ணி சிறைக் கைதிகளை விடுதலை செஞ்சு பணம் சம்பாதிச்சுட்டு இருந்தாரே உன் வார்டர் மாமா ! இப்ப என்ன பண்றார் !
சிறையில் இப்ப அவரே வாடுகிறார் !
நன்றி இதயம் பேசுகிறது 4-2-2001
வாங்க சிரிச்சிட்டு போகலாம்
இந்தக் காலத்துப் பிள்ளைங்க பெரியவங்களை விட வேகமா இருக்காங்க. அவங்க வேகத்துக்கு ஈடு கொடுக்காம போனா விபரீதமும் ஆயிடுது, வேடிக்கையும் நடக்குது.
அன்னைக்கு ஒரு வீட்டிலே காலங்கார்த்தாலேயே ஒரு பையனுக்கு ஏதோ சிந்தனை. விபரம் கேட்கலாமேன்னு அடுப்பங்கரையிலே இருந்த அம்மாகிட்டே போய் அம்மா-ன்னு கூப்பிட்டான். அந்த அம்மாவுக்கு சமையல் பண்ற அவசரம். ஏண்டா சனியனே, காலங்கார்த்தாலே வந்து கழுத்தை அறுக்கிறே... அப்படின்னு கரிச்சுக் கொட்டினாங்க. இது லாயக்கு படாதுன்னு அப்பாகிட்டே வந்தான். போடா... கழுதை-ன்னு விரட்டிட்டு அவசர அவசரமா ஷேவ் பண்ண ஆரம்பிச்சார். பிள்ளை வாடிப் போயிட்டான். இவனுக்காகத்தான் உழைக்கிறாங்க. ஆனா இவனுக்குப் பதில் சொல்ல நேரமில்லை.
சரி, வாத்தியார்கிட்டே போய் கேட்டுக்கலாம்னு நினைச்சு ஸ்கூலுக்கு வந்தான். வாத்தியார் எதிர்த்தாப்பில வந்தார். சார்... ஒரு சந்தேகம்னு ஆரம்பிச்சான். போடா மண்டு, கண்ட கண்ட நேரத்துல வந்து சந்தேகம் கேட்கக் கூடாது அப்படின்னு கடிச்சுத் துப்பினார்.
தன்னை யாருமே மதிச்சு ரெண்டு வார்த்தை பேச மாட்டேங்கிறாங்களேன்னு ஒரே ஆதங்கம். அதை வேற மாதிரி வெளிப்படுத்தினான். நேரே ஹெட்மாஸ்டர்கிட்டே போய், சார்... எங்க தாத்தா காலங்கார்த்தாலே மண்டையைப் போட்டுட்டார். எனக்கு லீவு வேணும்-னான். தாத்தா செத்துட்டாருல்ல லீவுக்கு உனக்கு நல்ல சாக்கு கிடைச்சுப் போச்சு. போடா அப்படின்னார்
சாயந்திரம் ஸ்கூல் முடிஞ்சி ஹெட்மாஸ்டர் அந்த தெரு பக்கமா வந்துகிட்டிருந்தார். அந்தப் பையனோட தாத்தா திண்ணையிலே உயிரோட இருக்கிறதைப் பார்த்ததும் இவருக்கும் ரொம்ப ஆச்சரியமாப் போச்சு. என்னாங்க ! நீங்க மண்டையைப் போட்டுட்டதா சொல்லி உங்க பேரன் லீவு போட்டுட்டு வந்தானே ! அப்படின்னார்.
உங்க கிட்ட அப்படிச் சொன்னானா. எங்கிட்டே வந்து தாத்தா... ஹெட்மாஸ்டர் மண்டையைப் போட்டுட்டாரு, ஸ்கூலுக்கு லீவு விட்டுட்டாங்க-ன்னு சொன்னானே-ன்னார். ஹெட் மாஸ்டருக்கு தலை சுத்திருச்சி.
இப்போ உள்ள பையன்களோட சிந்தனையும் புதுமையா இருக்கு. ஒரு வகுப்பிலே ஒற்றுமையைப் பற்றி ஒரு வாத்தியார் பாடம் நடத்திட்டு இருந்தார். நாம் நமக்காக மட்டுமின்றி பிறருக்காகவும் வாழணும். நான்-னு சொல்லிப் பாருங்க. உதடு ஒட்டாது. நாம்-னு சொல்லிப் பாருங்க உதடு ஒட்டும்-னார்.
உடனே ஒரு பையன் எழுந்திருச்சி நாம்-னு சொல்லும்போது மட்டுமில்லை பாம்-னு சொல்லும் போதும் உதடு ஒட்டுமே அப்படின்னான். வாத்தியார் ஆடிப் போயிட்டார்.
வாடகைக்கு சைக்கிள் எடுத்து ஓட்டறதுக்கு பையன்களுக்கு ரொம்ப குஷி. சைக்கிள் ஓட்டிக் கிட்டே போகும்போது கால் வலிச்சுது. உடனே நிறுத்தணும் போல இருந்தது. பார்த்தா அந்த இடத்திலே சைக்கிளை இங்கு நிறுத்தக்கூடாது-ன்னு போர்டு வச்சிருந்தது. அதுக்காக இவன் கவலைப்படலை. சைக்கிளைப் படுக்க வச்சிட்டான். இவனைப் பொறுத்தவரைக்கும் நிறுத்தக் கூடாதுன்னுதானே போர்டு வச்சிருக்கு. படுக்க வைக்கக் கூடாதுன்னு இல்லியே.
வகுப்பறையிலே இவங்களோட சாகசங்களைப் பார்க்கணும்.
பாம்புக்கு கால் உண்டா ?-ன்னு வாத்தியார் கேட்டா, உண்டு சார். இல்லேன்னா பம்புன்னு ஆயிடும்-பான். பாம்பு படம் எடுக்குமா-ன்னு கேட்டா, எடுக்கும் சார், ரிலீஸ் மட்டும் ஆகாது-ம்பான்.
சரித்திர வகுப்பிலே இந்த உலகப் படத்தில் இந்தியா எங்கே இருக்கு காட்டு-ன்னார் வாத்தியார். அவன் மேப் கிட்டே வந்து சோகமா தலை குனிஞ்சி நின்னான். வாத்தியார், என்னடா... சீக்கிரம் காட்டு-ன்னார். அதுக்கு அவன், என் தாய்நாட்டைக் காட்டிக் கொடுக்க நான் விரும்பவில்லை அப்படின்னான். தெரியாததையே தேச பக்தியா மாத்திடுவான்.

இதே கேள்வியை இன்னொரு பையன்கிட்டே வாத்தியார் கேட்டாரு. அதுக்கு அவன், சார் ஒரு சின்ன உதவி செய்யுங்க-ன்னான். என்னடா-ன்னாரு. இலங்கை எங்கே இருக்குன்னு காட்டுங்களேன் - அதுக்கு மேலேதான் இந்தியா இருக்கும்-னான். இதையாவது தெரிஞ்சு வச்சிருக்கானே.
சில நேரங்களிலே கேள்விகளையே கத்தல்லே விட்டுருவான்.
வாத்தியார், முத்துசாமி ! உலகப் படத்திலே அமெரிக்கா எங்கே இருக்கு ? காட்டு-ன்னார். அவன் கரெக்டா வந்து காட்டிட்டான். அப்புறம் வாத்தியார் இன்னொரு பையன்கிட்டே அமெரிக்காவைக் கண்டு பிடிச்சது யார் ?-ன்னு கேட்டார். உடனே அவன் முத்துசாமி சார்-ன்னு பதில் சொன்னான். வகுப்பறையே குலுங்கியது.
அறிவியல் வகுப்பிலே மெழுகு வர்த்தியைப் பொருத்தி வச்சுகிட்டு ரொம்ப சிரத்தையா, இந்த மெழுகு வர்த்திக்கு ஒளி எங்கே இருந்து வந்தது-ன்னு சொல்ல முடியுமான்னு கேட்டார். ஒரு பையன் வேகமா எழுந்து வந்து ஊதி அணைச்சிட்டு சார் ! இப்போ இந்த ஒளி எங்கே போச்சுன்னு சொல்லுங்க. நான் எங்கே இருந்து வந்ததுன்னு சொல்றேன்-னான். இப்போ வாத்தியார் தலையைச் சொறிஞ்சார்.
கட்டுரை எழுதுறதிலேயும் நம்ம பையன்க சாமர்த்தியசாலிகள் தான். நான் அமைச்சரானால்...ன்னு தலைப்பு கொடுத்து உடனே கட்டுரை எழுதச் சொன்னார் வாத்தியார். எல்லாப் பையன்களும் வேகவேகமா எழுதினாங்க. ஒரு பையன் மட்டும் பேனா முனையை முகவாய்லே தட்டிகிட்டு யோசனை பண்ணிக்கிட்டிருந்தான்.
ஏண்டா நீ இன்னும் எழுத ஆரம்பிக்கலையா-ன்னு வாத்தியார் கேட்டார்.
சார் ! மரியாதையா பேசுங்க. நான் இப்போ அமைச்சராகிட்டு இருக்கேன் அப்படின்னான். உடனே வாத்தியார் அப்படியா ! சரி அமைச்சர் அவர்களே ! நீங்கள் கட்டுரை எழுத ஆரம்பிக்கலாமே அப்படின்னார்.
அமைச்சரான பிறகு நான் எப்படி எழுதுவேன். என் பி.ஏ.வை வரச் சொல்லி இருக்கிறேன். அவர் வந்து எழுதுவார் என்று ஒரு போடு போட்டான்.
இன்னொரு வகுப்பிலே கிரிக்கெட் ஆட்டம் பற்றி கட்டுரை எழுதச் சொன்னார் வாத்தியார். ஒரு பையன் ரெண்டே வரி எழுதி வாத்தியார்கிட்டே நீட்டினான்.
அதிலே இன்னைக்கு மழை பெய்வதால் கிரிக்கெட் ஆட்டம் கிடையாது அப்படின்னு இருந்திச்சி.
இப்படித்தான் பரீட்சையிலே ஒரு கேள்வி. இரண்டாம் குலோத்துங்க அரசனைப் பற்றி ரெண்டு வரி எழுதுக. பையன் படிக்கலைன்னாலும் பக்குவமா பதில் எழுதினான். முதல் வரி- இரண்டாம் குலோத்துங்க அரசன் என்பவன் முதல் குலோத்துங்க அரசனுக்குப் பின்பு பிறந்தவன். அடுத்த வரி இரண்டாம் குலோத்துங்க அரசன் என்பவன் மூன்றாம் குலோத்துங்க அரசனுக்கு முன்பு பிறந்தவன்.. இதற்கு மார்க் போடுறதா, வேண்டாமான்னு வாத்தியார் தலையைப் பிச்சிக்கிட்டார்.
இதை விடவும் வேடிக்கையான விஷயத்தைப் பாருங்க. கஸ்தூரிப் பாய் குறிப்பு வரைக அப்படின்னு கேள்வி வந்திருந்திச்சி. பையன் பதில், கேள்வியே தவறு கஸ்தூரி என்பது பாய் அல்ல, கேர்ள்.
பேப்பருக்குக் கீழே பிட் வச்சி ஒரு பையன் காப்பியடிச்சிக்கிட்டு இருந்தான். வாத்தியார் பிடிச்சிட்டாரு. பேப்பருக்குக் கீழே என்ன வச்சிருக்கே-ன்னு கேட்டார். அவன் ரொம்ப சர்வசாதாரணமா சார் உங்களுக்கு இங்கே என்ன வேலை?ன்னு கேட்டான். சூபர்வைசர்-ன்னார். அப்படின்னா தமிழ்லே என்ன அர்த்தம் சார் ?னு கேட்டான். மேற் பார்வையாளர் அப்படின்னார். அதுக்கு அவன் அப்படின்னா மேலே பார்க்க வேண்டியது தானே ! ஏன் கீழே பார்க்கறீங்க அப்படின்னான்.
பிள்ளைகளோட அறிவுக் கூர்மையை அங்கீகரிக்கலைன்னா ஆபத்தாயிடும். பெற்றவர்களும், ஆசிரியர்களும் உஷாராக இருக்கிறது நல்லது.

.உங்க சம்சாரம் வீட்டு வேலையெல்லாம் அவங்களே செய்றாங்க ! எப்பவும் நீங்கதானே செய்வீங்க ?
இன்னைக்கு எங்க கல்யாண நாள் அதனால இன்னைக்கு மட்டும்தான் இந்த ஏற்பாடு !

நான் உங்ககூட பேசணும்னு சொன்னதும் உள்ள போயி எதுக்குக் குப்பைக்கூடையை எடுத்துட்டு வர்றீங்க ?
நீங்கதானே மனசுல உள்ளதையெல்லாம் கொட்டப் போறேன்னு சொன்னீங்க.. .!

புவனா... எப்பாடு பட்டாவது உடம்பைக் குறைச்சிடு...
ஏன் அத்தான் ?
என் நண்பர்கள் எல்லாம் என்னைய யானைப் பாகன்னு கிண்டல் பண்றாங்க.. !

பஸ்ஸுக்கு பெண் டிரைவரை அப்பாயிண்ட் பண்ணியது தப்பாப் போச்சி !
ஏன் ?
கண்டக்டர் அடிக்கடி விசில் அடிக்கிறாரே !

தலைவர் என்ன ஒரு மாதிரி சிரிச்சுகிட்டே இருக்கார் ?
எந்தக் கட்சியோட கூட்டணி வைக்கலாம்னு யோசிச்சு லூசாயிட்டார் !

ஒண்ணுக்கும் உதவாத பொருட்களைக் கூட அடுத்தவங்க தலையில் கட்டி விடுவதில் சாமர்த்தியசாலி எங்க அப்பா !
அதைத்தான் உன்னைக் கட்டிக்கிட்ட மறுநாளே தெரிஞ்சுக்கிட்டேன்.

உங்க பொண்ணு மிஸ் ஆயிட்டாளே... கிடைச்சாளா ?
மிஸஸ் ஆகி-கிடைச்சா !

திருடுனா இதுமாதிரி வீட்டுலேதான் திருடணுமா... ஏன் ?
மரியாதையா பீரோ சாவியைக் கொடு-ன்னு கேட்டேன்... உடனே ஒரு தட்டுலே தேங்காய், பூ, பழம் வெத்தலை பாக்கோட சாவிக் கொத்தை வச்சு ரொம்ப மரியாதையா கொடுத்தாரு.. .!

என் காதலர்கிட்ட நான் பாதி நீ பாதின்னு சொன்தைத் தப்பா புரிஞ்சிகிட்டாரு !
ஏன் - என்னாச்சு ?
ஒரு சுண்டலை வாங்கி பாதி, பாதின்னு சொல்றாரு !

கு-க்கும் ஐ-க்கும் நோய் வந்தா கவலையே இல்லை ?
ஏன் ?
அதான் மூ.மூ. பக்கத்திலேயே இருக்கே !

பத்து பவுன்ல பொண்ணு வேணும்னு சொன்னதை தரகர் தப்பா புரிஞ்சுகிட்டாரு !
எப்படி ?
பத்து டன்லனு நினைச்சுக்கிட்டு குண்டான பொண்ணா பார்த்துட்டாரு !

அந்த டாக்டர் சினிமா பைத்தியம் போலிருக்கு !
எப்படி ?
முகத்துல கரும்புள்ளிகள் இருக்குனு சொன்னா, கருப்புதான் எனக்குப் பிடிச்ச கலர்-னு பாடறாரு !

போலீஸ்காரர் எழுதின கதையை நம்ம பத்திரிகையில் பிரசுரம் பண்ணினது தப்பா போச்சி !
ஏன் அப்படிச் சொல்றீங்க ?
கதைக்கு சன்மானம் மட்டும் இல்லாம, மாமூலும் வேணுமாம் !
நன்றி இதயம் பேசுகிறது 11-2-2001
ஏண்டி உன் கல்யாணத்துக்கு என்னை கூப்பிடலை ?
ஸாரி... மறந்துட்டேண்டி..
போடி... இப்படித்தான் ஒவ்வொரு கல்யாணத்துக்கும் சொல்றே !

எங்கிட்ட சொல்லாம உங்க பழைய சட்டையை வேலைக்காரன் கிட்ட ஏன் கொடுத்தீங்க ?
அதுக்கு என்ன...?
நீங்கதான்னு நினைச்சு அவன் முதுகுல ஓங்கி அடிச்சுட்டேன் !

நெட் ஜோக் (சிந்திக்க)
சுயநலம் கருதாது மாணவர்களின் முன்னேற்றத்தை மட்டுமே லட்சியமாக் கொண்டு வாழும் பேராசிரியருக்குக் கடவுள் ஒரு பரிசு தர விரும்பினார்.
ஒரு சுபயோக சுபதினத்தில் அவர்முன் தோன்றி, அளவற்ற அறிவு, குறைவற்ற செல்வம். அசத்தும் அழகு... இதில் எது வேண்டும், சொல்லுங்கள் ! என்றார்.
அகமகிழ்ந்த பேராசிரியர், அழகு செல்வம் எல்லாவற்றையும்விட எனக்கு அறிவே தேவை... என்றார். அப்படியே ஆகட்டும் ! என்று வரம் தந்துவிட்டு மாயமானார் கடவுள்.
பேராசிரியரின் முகத்தில் அறிவுக்களை தாண்டவமாடியது. விஷயமறிந்து அவரைச் சுற்றித் திரண்ட கூட்டம், அறிவுத் திலகமே ! ஏதாவது வாய் திறந்து சொல்லுங்கள். முதல் வேண்டுகோள் எழுப்பியது.
பேராசிரியர் சொன்னார்... குறைவற்ற செல்வமே தேவை என்று நான் சொல்லியிருக்க வேண்டும்...

நான் தான் சொன்னேனே... என் பொண்ணு கல்யாணத்தை ரொம்ப சிக்கனமா பண்ணுவேன்னு
அதுக்காக... அட்சதை போட்ட அரிசியையெல்லாம் பொறுக்கி எடுத்து மறுபடியும் இன்னொருத்தர்கிட்டே கொடுத்து போடச் சொல்றது நல்லாயில்லை !

நாம ரெண்டு பேரும் அடுத்த வாரம் கல்யாணம் பண்ணிக்கப் போற விஷயத்தை சுண்டல்காரன்கிட்டே சொன்னியா...?
ஆமாம்... ஏன் ?
பாரு இப்ப... சுண்டல் வாங்கின பாக்கியெல்லாம் கேட்கிறான்.. .!

அரண்மனை சமையல்கட்டில் இருந்த இட்லி தட்டு-கள் எல்லாமே திருட்டுப் போயிடுச்சே...?
திருட்டெல்லாம் ஒண்ணும் போகலை... திடீர்னு கேடயம் ஷார்ட்டேஜ்னு சொல்லி, மகாராஜாதான் எல்லாத்தையும் போருக்கு எடுத்துட்டுப் போயிருக்கார் !

செத்துப் போன எங்க பாட்டி பயங்கர டி.வி. பைத்தியம்.
நிஜமாவா ?
ஆமாம் ! தினமும் என் கனவுல ஆவியா வந்து இன்னிக்கு அந்த தொடர்லே என்ன ஆச்சுன்னு கேட்கிறாங்கன்னா பாரு...

என்னப்பா ! தோசைல இவ்வளவு பெரிய கல் இருக்குது ?
பேப்பர் ரோஸ்ட் ஃபேன் காத்துல பறந்துடக்கூடாதுன்னு சொல்லி, நாங்கதான் சார் ஸ்பெஷலா போட்டிருக்கோம் !

எங்க மாமியாரோட அம்மா காலத்துலேர்ந்து இந்த குக்கரை யூஸ் பண்றோம் !
அப்ப, இது ஆவி வந்த குக்கர்னு சொல்லு !

என் ரூமுக்கு வெளியே யாராவது இறந்துட்டாங்களா...? என்ன அழுகைச் சத்தம்...?
அதுவா... நீங்க வெயிட்டிங் ஹால்ல வெச்சிருக்கிற டி.வி.ல சீரியலைப் பார்த்துட்டுத்தான் பேஷண்ட்ஸ் ஒப்பாரி வெச்சுட்டு இருக்காங்க !

என் கணவர் தூக்கத்துல பேசறாரு டாக்டர்...
இதுக்கு நீங்க என் ரொம்ப வருத்தப்படறீங்க...?
என்னை வேற உம் கொட்டிக் கேட்கச் சொல்றாரு டாக்டர் !

என்னப்பா... முதுகுல எக்ஸ்ரே எடுத்துட்டு வரச் சொன்னா வயித்துல எடுத்துட்டு வந்திருக்கே...?
எக்ஸ்ரேயைத் திருப்பிப் பார்த்துட்டிருக்கீங்க டாக்டர் !

நான் வேற பில் எதுக்கும் பணம் கொடுக்க வேண்டியது இருக்குமா டாக்டர்...?
நோ... நோ... ! ஆபரேஷனுக்குப் பணம் கட்டினதோட எல்லாமே முடிஞ்சிட்டதே !

டாக்டர்... எதுக்கும் தலைல ஸ்கேன் எடுத்துப் பார்த்துடுங்களேன்...
ஒண்ணுமில்லாத விஷயத்துக்கெல்லாம் பயப்படாதீங்க !

அந்த ஆள் பக்கத்து வீடு ஓட்டையெல்லாம் திருடி தன் வீட்டுக் கூரைக்கு போட்டுட்டாரு !
அப்ப, கள்ள ஓட்டு வீடுன்னு சொல்லுங்க !

தினமும் காலையும் மாலையும் வந்து போலீஸ் ஸ்டேஷன்ல கையெழுத்துப் போட்டுட்டுப் போகணும், தெரியுதா...?
சரிங்கய்யா... அப்புறம் வழக்கம் போலத் திருடப் போகலாங்களா...?

சமையல் செய்வதில் அனுபவம் மிக்கவர்கள் விண்ணப்பிக்கவும்-னு ஒரு விளம்பரம் வெளியிடக் கொடுத்திருந்தேன்...
ஆமா... அதுக்கென்ன ?
சொல்ல மறந்துட்டேன்... விளம்பரத்தின்மேல் மணமகன் தேவை-னு போட்டுடுங்க !

என் கல்யாணத்துக்கு லைன் க்ளியராயிடுச்சு !
வீட்ல சகோதரிக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுச்சா...?
இல்லே... என் காதலிக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுச்சு !

நீங்க திருப்பதிக்கு நடந்து போறதுக்கு இங்க வந்து லோன் கேட்கறீங்களே, ஏன் ?
நீங்கதானே கால்நடைக்கு லோன் தருவீங்கன்னு சொன்னீங்க !

நாங்க புதுசா முதியோர் இல்லம் ஆரம்பிக்கப் போகிறோம்... உங்களால் ஏதாவது தரமுடியுமா அம்மா...?
தாராளமா... என்னோட மாமனார், மாமியாரைத் தர்றேன் !

என்னங்க... நாலு போன் கால் பேசிட்டு ஒண்ணுக்கு காசு தர்றீங்க ?
யோவ்... நாலு கால் ஒண்ணுதானேய்யா.. !
நன்றி ஆனந்த விகடன் 11-2-2001
கல்யாணத்துக்குப் பிறகு உங்க அம்மா கூட சண்டை வந்தா நீங்க அம்மா பக்கம் இருப்பீங்களா...? என் பக்கம் இருப்பீங்களா ?
ரொம்ப பாதுகாப்பா பக்கத்து தெரு பக்கம் இருப்பேன் !

எதுக்கு உன் மடில படுக்க விட மாட்டேங்கற...?
இது ராசியில்லாத இடம்... பழைய காதலர் தலைவச்ச மறுநாளே அவருக்கு கல்யாணம் நிச்சயமாயிடுச்சு !

எழுத்தாளரைக் காதலிச்சது நல்லதாப் போச்சு !
எப்படி ?
லவ் லட்டருக்குப் பதில் எழுத, உள்ளேயே ஸ்டாம்ப் வச்சு அனுப்பறார் !

சுண்டல்காரருக்கு கடன் ஏறிக்கிட்டே போகுதேன்னு கவலைப்படாதீங்க ! வரதட்சணையிலே கழிச்சுக்கலாம் !
எப்படி ?
அவர்தான் எங்க அப்பா !

நான் லவ் லெட்டர் கொடுத்த அந்தப் பெண் டெலிபோன் டிபார்ட்மென்டில் வேலை பாக்கறான்னு நினைக்கிறேன் !
எப்படிச் சொல்றே ?
ட்ரை ஆஃப்டர் ஸம் டைம்-ன்னு சொன்னாளே !

என்னது... வாலன்டைன்டே-க்கு உன் பாட்டிக்கு லவ் லெட்டர் வந்திருக்கா... !
ஆமா... ஐம்பது வருஷத்துக்கு முன்னால எங்க தாத்தா எழுதினது, லேட்டா வந்திருக்கு.. .!

காதலர் தினத்தன்னிக்கு கை மேல பலன் கிடைக்கும் ஜோசியர் சொன்னது பலிச்சிடுச்சு.. .!
அப்படியா ?
ஆமாம்... என் காதலி ரெண்டு பவுன் மோதிரம் வாங்கித் தந்திருக்காளே !

காதலர் தினப் பரிசா நீ வாங்கித் தந்த லவ் பேர்ட்ஸை உன் காதலி கூண்டுலேர்ந்து திறந்துவிட்டான்னு சந்தோஷமாச் சொல்றியே.. .!
நாமும் ஓடிப்போகலாமான்னுல்ல சிம்பாலிக்கா கேட்கறா.. .!

நெடுஞ்சாலைத் துறை அமைச்சருக்கு காதலர்கள் பாராட்டு விழா நடத்துறாங்களே ஏன் ?
ஓடிப் போறதுக்கு வசதியா நிறைய தார்ச்சாலை போட்டிருக்காராம் !

உங்களுக்கு மாசம் எவ்வளவு சம்பளம் ?
பதினைஞ்சாயிரம் சம்பாதிப்பேன்... அது போதாதா ?
அது எனக்கு போதும் ! உங்க செலவுக்கு என்ன பண்ணுவீங்க டார்லிங் ?

பழகினவர்களுக்காக நம்ம மேனேஜர் உயிரையும் கொடுப்பாங்கறது என் விஷயத்தில் சரியாப் போச்சு.. .!
எப்படிச் சொல்ற ?
அவர் கொடுத்த உயிர் இப்ப என் வயித்துல வளருதே.. .!

என்னது... அந்த ஆள் ஜோடியா இருக்குற லவ்வர்ஸ்-ஸை-யெல்லாம் கையெடுத்துக் கும்பிடறாரு ?
அவர் காதலுக்கு மரியாதை தர்றாராம்.. .!

காதலர் தினத்தன்னிக்கு சினிமாவுக்கு வரச்சொல்லி என் காதலர் கூப்பிடறார்டீ.. .!
ஏன்... .அதுல என்ன ப்ராப்ளம் ?
ஒரே படத்தை, ஒரே நாள்ல மூணு தடவை பார்க்கணுமே.. .!

வாரப் பத்திரிகைல வேலை பார்க்கற உன் காதலி, வாலன்டைன்ஸ் டே-க்குன்னு ஸ்பெஷலா ஏதோ பரிசு குடுத்தான்னியே, என்னது ?
இலவச அணைப்பு.. .!

என்னடி சண்டை... முரடன் கிட்டேர்ந்து உன்னை காப்பாத்தறாரா ?
ஊஹூம்... ஒரு மாச கடன் பாக்கியை கேட்டார் சுண்டல்காரர் அதான் !

வாங்க சிரிச்சிட்டு போலாம்

சின்ன வயசுல குறும்பு பண்றது இயல்புதான். ஆனா எல்லையை மீறாமப் பாத்துக்கணும்.
ஒரு பையன் அலறி அடித்துக் கொண்டு ஓடிவந்து அப்பாவிடம் புகார் செய்தான். □அப்பா ! அடுத்த தெருப்பையன் என்னை அடிச்சிட்டாம்பா.□
□எவண்டா உன்னை அடிச்சது ? அடையாளம் தெரியுமா ?□
□தெரியும்பா ! அவனுக்கு ஒரு காது இருக்காது.□
□ஒரு காது என்னடா ஆச்சி ?□
□நான் தான் அதைக் கடிச்சி கையிலே வச்சிருக்கேனே.□
இப்போது அப்பாவே அவனைப் பார்த்து நடுங்க ஆரம்பிச்சிட்டாரு.
ஒரு வீட்டிலே சாமிக்கு முன்னாடி பலகாரங்களைப் படையல் போட்டிருந்தாங்க. சாமி கும்பிட்டுவிட்டுப் பலகாரங்களைச் சாப்பிட வேண்டும் என்பது திட்டம். ஒரு பையன் அவசரப்பட்டான். □அம்மா ! சாமி கும்பிட ரொம்ப நேரம் ஆகும் போலத் தெரியுது. இப்பவே எனக்கு கொஞ்சம் பலகாரம் கொடேன்.□
□அய்யய்யோ ! அப்படியெல்லாம் செய்யக் கூடாது ! சாமி கண்ணைக் குத்திடும்□னு பதறினாள் அம்மா.
□அதெல்லாம் சாமி கண்ணைக் குத்தாது. நான் தான் ஏற்கெனவே ரெண்டு லட்டு எடுத்து சாப்பிட்டேனே !□
இப்போ அம்மா என்ன பண்ணுவாள் ?
ஒரு பையன் தன்னோட அக்காகிட்டே, □அக்கா ! உங்ககிட்ட கொடுக்கச் சொல்லி நிறைய பேர் லவ் லெட்டரை என்கிட்டே தர்றாங்க. கூரியர் சர்வீஸ் மாதிரி அதுக்கு எல்லாம் நான் ஒரு ரேட் ஃபிக்ஸ் பண்ணியிருக்கேன். நீங்க யாரையும் லவ் பண்ணாட்டியும் பரவாயில்லை. ஒவ்வொண்ணுக்கும் நாலைஞ்சு வரியிலே பதில் மட்டும் எழுதித் தந்துகிட்டு இருங்க. இந்த வயசிலே சம்பாதிக்க இது ஒரு நல்ல வழியாத் தெரியுது□ன்னு சொன்னான்.
இவனுக்காக அந்த அக்கா எத்தனை பேரைக் காதலிக்க முடியும் ?
அன்னைக்கு மெரீனா பீச்சிலே ஒரே கூட்டம். ஒரு பையன் எப்படியோ அப்பா அம்மாவை விட்டு மிஸ்சாயிட்டான். ஒரே அழுகை. அங்கே இருந்தவங்க எல்லாரும் அவனை சமாதானப் படுத்தறதுக்காக சாக்லெட், ஐஸ்க்ரீம் வகைகளெல்லாம் வாங்கிக் குவிச்ச வண்ணம் இருந்தாங்க. எல்லாத்தையும் ஒரு கை பார்த்துக் கிட்டிருந்தான் அந்தப் பையன்.
ஒரு வழியா அவன் அப்பாவும் அம்மாவும் அவனைத் தேடி வந்துட்டாங்க.
பையன் ரொம்ப சலிப்போட □அதுக்குள்ளே என்னப்பா அவசரம் ? நீங்களும் ஒண்ணும் வாங்கித் தரமாட்டீங்க. நானா ஒரு ஐடியா பண்ணி காணாம போன மாதிரி நடிச்சேன். வேண்டியது எல்லாம் கிடைச்சுது. வந்து கெடுத்திட்டீங்களே□ன்னு சொன்னான். இது எப்படி இருக்கு ?
இப்படித்தான் ஒரு சின்னப் பிள்ளைய திருடன் தூக்கிட்டுப் போயி மறைவான ஒரு இடத்துலே வச்சி, □பாப்பா ! உங்க வீட்டிலே நகைகளை எல்லாம் எந்த எடத்துலே வச்சிருக்காங்கன்னு சொல்லு. ஐஸ்கீரிம், சாக்லேட் எல்லாம் வாங்கித் தர்றேன்□னான். □முதல்ல அதெல்லாம் வாங்கிக்குடு சொல்றேன்□னுது குழந்தை.
தயாரா வச்சிருந்த ஐட்டங்களை எடுத்துக் கொடுத்தான். குழந்தை தின்னுகிட்டே இருக்குதே, தவிர பதில் சொல்லக் காணோம். □உங்க வீட்டிலே நகையெல்லாம் எங்க வச்சிருக்காங்க ? சீக்கிரம் சொல்லு□ன்னு திருடன் அவசரப்படுத்தினான். ஐஸ்கிரீமைத் தின்னுகிட்டே குழந்தை சர்வ சாதாரணமா பதில் சொல்லுச்சி.
□எங்க வீட்லே நகையெல்லாம் அடகுக் கடையிலே வச்சிருக்காங்க.□ திருடன் என்னத்துக்கு ஆவான் ?
இப்ப உள்ள பையன்க ரொம்ப விபரமாத் தான் இருக்காங்க. ஒரு பையன் திடீர்னு அம்மாகிட்டே கேட்டான். □அம்மா நான் எப்படி நம்ம வீட்டுக்கு வந்தேன் ?□ நேரடியா பதில் சொல்ல முடியாம அந்த அம்மா, □காக்கா கொண்டு வந்து போட்டுச்சு□ன்னாங்க.
□தம்பி எப்படி வந்தான் ?□
□கொக்கு கொண்டு வந்து போட்டுச்சி.□
□அப்போ கல்யாணத்துக்கு முந்தியே நீயும், அப்பாவும் குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் பண்ணிக்கிட்டீங்களா ?□
பையனோட நெத்தியடி கேள்வியிலே நிலைகுலைஞ்சி போயிட்டாங்க அம்மா !
வீட்டிலே யாருமே இல்லைங்கிற தைரியத்துலே ஒருத்தர் டி.வி. சேனல்ல கொஞ்சம் செக்ஸியான இங்கிலீஷ் படத்தைப் பார்க்க உட்கார்ந்திட்டாரு. ஏற்கனவே போட்ட படம் தான். சில முக்கியமான காட்சிகளை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தார்.
விளையாடப் போயிருந்த அவரோட பையன் திடீர்னு வீட்டுக்குள்ளே வந்து படம் பார்க்க ஆரம்பிச்சிட்டான். அவருக்கு டி.வி.யை நிறுத்தவும் மனசில்லை. அவனை விரட்டவும் முடியலை. இப்போ ஒரு முத்தக் காட்சி வரப்

போவுதுன்னு தெரிஞ்சது உடனே பையனைக் கடத்துற வேலையிலே ஈடுபட்டார் அவர். □டேய் ! அப்பாவுக்கு தாகமா இருக்கு. உள்ளே போயி தண்ணி எடுத்தட்டுவா□ன்னார். பையன் தண்ணி கொண்டு வர்றதுக்கும் அந்த சீன் முடியறதுக்கும் சரியா யிருந்தது.
கொஞ்ச நேரம் கழிச்சி அதைவிட மோசமா ஒரு சீன் வரப் போவுது. என்ன செய்றதுன்னு தெரியாம தவிச்சாரு அப்பா அவரோட காதுகிட்டே வந்து பையன் கேட்டான். □அப்பா தண்ணி கொண்டு வரட்டுமா ?□ சில நேரங்களிலே அவங்க கேட்கிற கேள்வியும் ரொம்ப அர்த்தம் உள்ளதாயிருக்கும்.
ஒரு சேவை நிறுவனம் முதலுதவி செய்யிறதைப் பத்தி தெருவிலே வந்து விளக்கிச் சொல்லிகிட்டிருந்தாங்க. ஒருத்தன் தண்ணிக் குள்ளே விழுந்துட்டா அவனோட தலைமுடியைப் பிடிச்சித் தூக்கணும்னு சொன்னப்போ அந்தப் பையன் கேட்டான். அந்த ஆளு மொட்டைத் தலையா இருந்தா என்ன பண்றது ?ன்னு. இப்போ முதலுதவிக்காரர் ஆரம்பிச்சிட்டாரு.
டூர் போயிருந்தப்ப ஒரு விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடத்துக்கு மாணவர்களை ஆசிரியர்கள் அழைச்சிட்டுப் போயிருந்தாங்க. ரொம்ப சிரத்தையா ஆராய்ச்சி பண்ணிகிட்டிருந்த ஒரு விஞ்ஞானிகிட்டே போயி ஒரு பையன், □என்ன கண்டு பிடிக்கப் போறீங்க□ன்னு கேட்டான். அதுக்கு அவர் □எல்லாப் பொருளையும் கரைத்துவிடக் கூடிய ஒரு திரவத்தைக் கண்டு பிடிக்கப் போறேன்□னார். □அப்படி கண்டு பிடிச்சிட்டீங்கன்னா அதை எங்கே வைப்பீங்க□ன்னு பையன் கேட்டது விஞ்ஞானிக்கு தலை சுத்திடுச்சி.
சில அசட்டுத்தனமான பிள்ளைகளும் உண்டு. அப்பா அம்மாவோட கல்யாணப் போட்டோவை எடுத்து வச்சுகிட்டு ஒரு பையன் அழுதான். □ஏன் என்னை விட்டுட்டு போட்டோ எடுத்தீங்க□ன்னு.
ஒரு அம்மா இடுப்பிலே குழந்தையை வச்சுகிட்டு எதிர்த்த வீட்டு வயசுப் பொண்ணோட பேசிக்கிட்டிருந்தாங்க. திடீர்னு □அக்காவுக்கு ஒரு முத்தம் கொடு□ன்னு குழந்தைகிட்டே சொன்னாங்க.
□மாட்டேன் அக்கா அடிப்பாங்க.□
□அதெப்படி உனக்குத் தெரியும் ?□
□தெரியும். அப்பா இந்த அக்காவை முத்தம் கொடுக்கப் போகும்போது அடிச்சதைப் பார்த்திருக்கேனே□ன்னான் குழந்தை. இப்போ அப்பா மாட்டிக்கிட்டாரு.
பிள்ளை வளர்ப்பிலே பெற்றோர்கள் சரியாக இல்லாமல் போனால் இலக்கணத்தில் சந்திப்பிழை போல இல்லறத்தில் சந்ததிப் பிழைகள் வந்து விடும்.

டாக்டர், எங்க வீட்டுக்காரர் ராத்திரிக்கு தூங்கவே மாட்டேங்கிறார்.
எவ்வளவு நாளா அப்படி யிருக்கு ?
என் தங்கச்சி ஊர்ல இருந்து வந்ததுலயிருந்து.

ஷாஜகான் - மும்தாஜ் பற்றி ஒரிரு வரிகள் சொல்.
ஷாஜகான் பற்றி சரியா தெரியலை சார். ஆனா மும்தாஜ் நிறைய படத்துல புக் ஆகிட்டு வர்றாங்க

அந்த ராமசாமி, தன்னோட பிசினஸ் பற்றிப் பேச ஆரம்பிச்சா லட்சம், கோடின்னுதான் பேசுவார்...
ஓ... அப்படியா. என்ன பிசினஸ் பண்றார் ?
நீ வேற. பிளாட்பாரத்தில் லாட்டரிச் சீட்டு விற்கிறார் !

குருப் பெயர்ச்சியால் எனக்கு ஒரு நன்மை ஏற்பட்டது.
என்ன நன்மை ?
எங்க தூங்குமூஞ்சி வாத்தியார் மாறுதலாகிப் போயிட்டார் !
நன்றி குங்குமம் 23-2-2001
தலைவரை பார்க்கணும்.. .!
தலை வரை யாரைப் பார்க்கணும்.. .?

தலைவர் உடம்பு வீங்கியிருக்கே... ஏன் ?
எப்போதும் செய்திகள்லே அடிபட்டுக்கிட்டே இருக்காரே !

அந்த டாக்டர் ஒரு அரசியல் வாதின்னு எப்படிச் சொல்றீங்க ?
ஓட்டு எண்ணிக்கை குறைஞ்சுடும்னு தேர்தல் முடியும் வரை எந்த ஆபரேஷனும் செய்ய மாட்டேன்னு சொல்கிறாரே !

தன்னோட கால்ல யாரும் இனிமே விழ வேண்டாம்னு தலைவர் சொல்லிட்டாராமே, ஏன் ?
போன தடவை யாரோ அவரோட வேட்டில மூக்கைத் துடைச்சி அசிங்கம் பண்ணிட்டாங்களாம்...

அரசியல் தலைவர் வீட்டுக்கு ஏன் திருடப் போனாய் ?

எதிர்க்கட்சித் தலைவருடன் பேச்சு நடத்த கதவு திறந்தே இருக்கும் என்று அறிக்கை விட்டிருந்தாரே.

நம்ம தலைவர் ஏன் தன் தலைவர் பதவியை திடீர்னு ஒரு கிரிக்கெட் பிளேயர்கிட்ட கொடுத்துட்டாரு ?
அவருக்கு ஊழல் பண்ணி பண்ணி அலுத்துப் போச்சாம்.. .!
நன்றி குமுதம் 22-2-2001
டாக்டர்... நாலாம் நம்பர் பேஷண்ட் ஆபரேஷனுக்கு முன்னாடியே மொத்தப் பணத்தையும் கொடுத்துட்டாரு.. .!
பாவம்... ! பிழைக்கத் தெரியாத ஆளா இருக்காரே !

நம்ம டாக்டர் என் கனவுல ரெண்டு நாளா தொடர்ந்து வரார் !
அவர்கிட்டே இதை உளறி வெக்காதீங்க... ரெண்டு விசிட்டிங் ஃபீஸ் கேட்டுருவார் !

எங்க டாக்டர்கிட்ட எப்பவும் பேஷண்ட்ஸ் கூட்டம் இருந்துக்கிட்டே இருக்கும் !
இருக்கலாம்... அதுக்காக இப்படி அரை நாளுக்கு மட்டும் பிரிஸ்கிரிப்ஷன் கொடுத்துட்டு, திரும்பவும் சாயந்திரம் வரச்சொன்னா எப்படி ?

ஒரு குடும்பத்தையே காப்பாத்த வேண்டிய நிலைமையில நான் இருக்கேன். எனக்கு அவசியம் ஆபரேஷன் பண்ணியாகணுமா டாக்டர்... ?
வேற வழியே இல்லை... நானும் உங்க நிலைமையிலதான் இருக்கேன் !

ஊரே இந்த வதந்தியை நம்பிக்கிட்டிருக்கு... எப்படி நீங்க மட்டும் நம்பாம கூலா இருக்கீங்க...?
கிளப்பிவிட்டதே நான்தானே !

பார்த்தீங்களா இந்த அநியாயத்தை... நான் செத்ததா ஒரு வதந்தியைக் கிளப்பிவிட்டுட்டாங்க...
அடப்பாவிங்களா... அப்ப நீங்க இன்னும் சாகலையா.. ?

கவனிச்சீங்களா... ஏதோ வதந்தியை நம்பி நிறைய பெண்கள் தாலி மாத்திக்கிட்டாங்க...
நீங்க வேற... சில பெண்கள் கணவனையே மாத்திட்டாங்களாம் !

நம்ம தலைவரோட செல் நம்பர் 286.
என்னது... மூணே நம்பர்தானா... ?
நான் சொன்னது... ஜெயில்ல அவரோட செல் நம்பரை !

ஆபீஸ்ல யாராவது தூங்கினா என்கிட்டே வந்து சொல்லு.. .!
சரி சார்.. .!
நான் தூங்கிட்டு இருந்தாகூடப் பரவாயில்லை... எழுப்பிச் சொல்லு !

பள்ளிக்கூட வாத்தியாரை லவ் பண்ணியது தப்பாப் போச்சுடி...
ஏன் ?
பிச்சுக்குக் கொஞ்சம் லேட்டா போனாக்கூட படகு மேல ஏறி நிக்கச் சொல்றாரே !

வந்த ஆரம்பத்துல உன் மருமகள் உன்னை மதிக்கறா-னு சொல்வியே... இப்ப எப்படி... ?
இப்ப மிதிக்கறா !

அந்த நடிகர் பேசின பணத்தை விடக் கூடுதலா கேட்கிறாரா... ஏன் ?
அவர் ஓவர் ஆக்டிங் பண்ணியிருக்கிறதா எல்லா பத்திரிகையும் விமர்சனம் செய்திருக்காம் !

என்னங்க... இந்த எறும்பு பேப்பர் திங்குது !
கழுதை தேஞ்சு கட்டெறும்பு ஆயிடுச்சு !
நன்றி ஆனந்த விகடன் 18-2-2001
அந்த கோடீஸ்வரன் நிகழ்ச்சியில் என்ன தகராறு ?
கோடி ரூபாய் பரிசு வாங்கினவரு கண்டக்டராம்... சில்லரையா கொடுத்தாத்தான் போவேன்னு அடம் பிடிக்கிறாரு !

சர்வரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டோமேன்னு ஏண்டி சலிச்சுக்கறே ?

பின்ன என்னடி... வீட்ல சாப்பிட்டு முடிஞ்சவுடன் தட்டுல டிப்ஸ் வச்சுட்டுப் போறாருடி !

அவன் பெயர் ஏ. கிருஷ்ணன், வயசு 47, கோபம் வந்தா வெடிப்பான் !
ஏ.கே. 47ன்னு சொல்லு !

பெண் கைதியை மடக்கிப் பிடித்தேன் !
இனிமேல் மடக்காமல் பிடி !

தாத்தாவை முதியோர் பள்ளிக்கு அனுப்பியது தப்பாப் போச்சா ஏன் ?
டீச்சருக்குப் பிறந்திருக்கிற குழந்தை தாத்தா ஜாடையில் இருக்கே !

வரியே இல்லாம பட்ஜெட் போடுவோம்னு தேர்தல் வாக்குறுதி தர்றீங்களே எப்படி முடியும் தலைவரே...
வரிக்குப் பதில் கட்டம் போட்டுடுவோம்... ?

அப்பா, அண்ணன் ஒண்ணும் மரமண்டை இல்லை !
உனக்கு எப்படித் தெரியும் ?
இப்பதான கல்லால அடிச்சேன்... மண்டை உடைஞ்சு ரத்தம் ஒழுகுதே !

அவரு போலி டாக்டருன்னு, எத வச்சி சொல்றே... ?
நீங்க ஹோமியோபதியா, அலோபதியான்னு கேட்டதுக்கு, நான் திருப்பதின்னு சொன்னாரே... .!

உங்க ஹாபி என்ன ?
ட்ரஸ் போட்டுக்கறது !

எனக்கு கால் வலி டாக்டர் !
அப்பவும் முழு பீஸ்தான் !

ஜோசியர் என்ன அங்கே பார், இங்கே பார்-ங்கறார் ?
குறி சொல்லறாராம் !

அவர் என்ன டெய்லி ஆபீஸ்ல பாடிட்டு, படுத்துடறாரு ?
மேனேஜர் பாடு-படுன்னு சொன்னதைத் தப்பாப் புரிஞ்சுக்கிட்டாரு !

பாயும் புலி-ன்னு நினைச்சு அவனுக்கு வேலை கொடுத்தேன்.. .ம் !
என்ன ஆச்சு ?
பாயும், தலையணையுமா இருக்கான் !

என்ன மாயாண்டி... மாமூலா கொடுத்த இந்த மோதிரம் என்னோடது மாதிரியே இருக்கு !
ஸாரி சார்... இது உங்க வீட்ல இருந்து அடிச்சதுதான் !

தோல்விக்குப் பின்தான் வெற்றி வரும்ங்கிறது என் வாழ்க்கைலே உண்மையாயிடுச்சி !
எப்படி ?
நான் காதல்ல தோத்துப்போன பிறகு தான் அதைவிட சூப்பர் ஃபிகரா ஒண்ணு செட்டப் ஆகியிருக்கு !

உங்க பொழுதுபோக்கு என்ன ?
பழைய கணவர்கள் ஜீவனாம்சம் கேட்டு பக்கம் பக்கமா எழுதற கடிதத்தைப் படிக்கறது ?

நம்ம ஏட்டு வடிவேல் பலே பேர்வழி ?
என்னவாம் ?
மாமூலும் வாங்கி மறனு சொல்றார் !

அலுவலகத்துலே வைக்கோல் போரைக் குவிச்சு வச்சிருக்காங்களே... ஏன் ?
காலியிடங்களை நிரப்பணும்னு யூனியன்லே கேட்டாங்களாம் !

தலைவலருக்கு ஜீரண சக்தி அதிகம்னு சொல்றியே... எப்படி ?
கோடி... கோடியா... முழங்குறாரே !

தலைவரே ! எதிர்க்கட்சித் தலைவருக்கு நீங்களே உங்க சொந்தச் செலவுல ஏன் சிலை வைக்கறிங்க ?
நடுரோட்டுல உன்னை நிறுத்திக் காட்டறேன்னு சவால் விட்டிருக்கேனே ?

நான் புதுசா ஒரு நாய் வாங்கி யிருக்கேன் வந்து பாருங்களேன்.
அந்த நாய் கடிக்குமா...?
அதைத் தெரிஞ்சுக்கத்தான் உங்களைக் கூப்பிடறேன்.

லைலா படத்துக்கு இவ்வளவு கூட்டம் இருக்கே ! எப்படி போறது.
லைனா-தான் போகணும் !

வொர்க்கிங் டைம்ல சீட்டு விளையாடினேன்னு சொல்லி எங்க எம்.டி. என் சீட்டை கிழிச்சிட்டார்.
அடடே, அப்புறம்...?
வேற சீட்டு வாங்கிட்டு வந்து மறுபடியும் விளையாடினோம்.
நன்றி குமுதம் 1-3-2001
உன் அப்பா ஏழையா ?
ஆமாம் ! சமயத்தில காருக்குப் பெட்ரோல் போடக்கூட அவரிடம் காசு இருக்காது !

டாக்டர்களுக்குப் பிடிச்ச புத்தகம் எது ?
கிறுக்கல்கள் !

மூன்றாம் தாரமா ஒரு இளம் பெண்ணைக் கட்டிக்கிட்டீங்களே எப்படி சமையல் பண்றா ?
நாலாம் தரமா இருக்கு...

அந்த டாக்டர் நடந்துதான் மருத்துவமனைக்கு வந்து போவார் !
அப்ப கால்நடை மருத்துவர்னு சொல்லுங்க !

ஆபீஸ் முடிஞ்சி வீட்டுக்குப் போனதும் உன் பொண்டாட்டி காபி தருவாளா ? ஹார்லிக்ஸ் தருவாளா ?
மாவு ஆட்றதுக்கு கிரைண்டரைக் கழுவச் சொல்லுவா !

மேடையில தலைவர் இப்படிப் பேசியிருக்கக்கூடாது...
என்ன பேசினார் ?
தலைக்கு ஐம்பது வாங்கிக்கொண்டு, லாரியில் ஏறி வந்திருக்கும் ஜால்ராக்களேன்னு சொல்லிட்டாரு.. .!

யோவ் டிரைவர் ! நீர் இந்த ரூட்டுக்குப் புதுசா ? எங்க ஊருக்கு வழி மாறி ரைட்ல போறீர் !
கண்டக்டர்தானே ரைட் ! போட்டு-ம்ன்னு சொன்னார் !

சார்... கேடி கோவிந்தன் கிட்ட மாமூல் வாங்கறதை எல்லாம் வீட்டு போலீஸ்-கிட்ட கொடுத்திடுவேன்னு
சொல்றீங்களே... அது யாரு ?
என் மனைவிதான் !

பொண்ணு பார்க்க வந்த மாப்பிள்ளை அவசரமா டைனிங் டேபிள் பக்கம் ஓடறாரே... ஏன் ?
டிபன் சாப்பிடுறதுக்கு கர்ச்சீப் போட்டு இடம் பிடிக்கிறதுக்குத்தான் !

கூட்ஸ் வண்டி டிரைவரைக் கட்டிக்கிட்டது தப்பா போச்சிடி !
ஏன் ?
தனியாத்தான் படுத்துப்பாராம் !

அரசியல் ஒரு சாக்கடைன்னு சொன்னது தப்பா போச்சி !
ஏன் அப்படிச் சொல்றே ?

சாக்கடையைச் சுத்தம் பண்ண உலக வங்கி கொடுத்த லோனை எல்லா அரசியல் தலைவர்களும் ஆளாளுக்குப் பங்கு போட்டுக்கிட்டாங்க !

ஜெயில்ல இருந்து வந்த மறுநாளே உன்னை மறுபடியும் உள்ளே தள்ளிட்டாங்களே ! ஏன் ?
கைதி டிரஸ்ஸைத் திருடிட்டு வந்துட்டேன் !

அவருக்குப் பத்து மகன்களாமே ?
ஆமா...
அதான் எப்பவும் டென்-சனோடு இருக்காரா ?

ஒரு லட்டை மாடியிலிருந்து கீழே போகிறவர் தலை மீது போட்டால் என்ன ஆகும். ?
பூந்தியாகும்

அந்த முனிவர் முகத்தையே பாம்பு அடிக்கடி கொத்துகிறது. ஏன் ?
அவர் முகத்தில் தவ-க்களை இருக்கே ?

அந்த வீட்டுல மாமியாரும் மருமகளும் டி.வி.ல வர்ற எல்லா சீரியலும் பார்ப்பாங்க...
அப்ப ரெண்டு பேருக்கும் சண்டை போடறதுக்கே நேரம் இருக்காதுன்னு சொல்லுங்க ?
நீங்க வேற... விளம்பர இடைவேளை வேற எதுக்காம் !

அந்த நான்வெஜ் ஓட்டல்ல என்ன பிரச்சினை ?
கஸ்டமர் ஒருத்தர் டினோசர் பிரியாணி இருக்கானு கேட்டாராம் !

கிராபிக்ஸ் டெக்னீஷியனைக் கல்யாணம் பண்ணினது ரொம்ப தப்பாப் போச்சுடி !
ஏன்டி என்ன ஆச்சு ?
முதலிரவு அறையிலே அவரைக் காணோம் அப்புறமா பால் சொம்புக்குள்ள இருந்து வர்றாரு...!

என்ன சார் இது... மீட்டர்ல 80 ரூபாய் காண்பிக்குது... வெறும் பத்து ரூபாய் எடுத்து மீட்டர் மேல் வைக்கறே ?
நீதானேப்பா மீட்டருக்கு மேல பத்து ரூபாய் கொடுன்னு சொன்னே !

உங்க வீட்டில வாடகைக்கு இருந்தவரை எப்படி மாப்பிள்ளை ஆக்கிட்டீங்க ?
வாடகை பாக்கி அதிகமாகிகிட்டே போச்சு, அதனால மடக்கிப் போட்டுட்டேன் !

உங்க ஆபீஸ்லே அவனுக்கு செல்வாக்கு ஜாஸ்தியா, எப்படி ?
மானேஜர் ரூமில் போய்தான் தூங்குவான்னா பாரேன்...
நன்றி இதயம் பேசுகிறது 25-2-2001
உங்க வீட்டுல திருடினவனைப் பத்து வருஷமா தேடியும் கண்டுபிடிக்க முடியலை !
அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றீங்க சார் ?
அவன் கொடுக்க வேண்டிய பாக்கி மாமூலை நீங்களே கொடுத்துட்டீங்கன்னா, ஃபைலை க்ளோஸ் பண்ணிடுவேன் !

நான் ஃபைனான்ஸ் கம்பெனி நடத்தறேன்.. என் வொய்ஃப் டான்ஸ் ஸ்கூல் நடத்தறா !
ஓடி ஆடி சம்பாதிக்கிற குடும்பம்னு சொல்லுங்க !

எங்க தாத்தாவுக்கு இன்னியோட நூறு வயசு... இதுவரைக்கும் ஒரு தடவைகூட டாக்டர்கிட்ட போனதே கிடையாது !
அவருக்கு நூறு வயசுன்னு சொல்லும்போதே நெனைச்சேன்...

டாக்டர் என் கணவர்கிட்டே சாப்பாட்டுல காரமே சேர்க்கக்கூடாதுன்னு சொல்லிட்டாரு !
ஏன்... அவருக்கு அஸ்சரா...?
இல்லை... எனக்கு.. .!

காதலிச்சுக்கிட்டிருக்கும்போதே என் ஆளு, என்னைக் கணவனா நினைக்க ஆரம்பிச்சுட்டா !
எப்படிச் சொல்றே...?
இனிமே காசு கொடுத்துச் சுண்டல் வாங்க வேண்டாம்... வீட்டிலேயே செஞ்சு கொண்டுவந்துடுங்க-னு சொல்றாளே !

என் கணவர் தூங்கி எழுந்த உடனே ஆபீஸுக்குப் போய்டுவாரு...
ஆபீஸ்ல எப்படி...?
அங்கேயும் அப்படித்தான் தூங்கி எழுந்த உடனே வீட்டுக்குக் கிளம்பிடுவாரு.. .!

என்னது... உங்க ஆபீஸ்ல லஞ்ச் டைமே கிடையாதா ?
ஆமாம்... யார் யாருக்கு எப்பப்ப முழிப்பு வருதோ, அப்பப்ப சாப்பிடுவோம் !

நம்ம தலைவர் சி.பி.ஐ. ரெய்டு வராங்கன்னு தெரிஞ்சதும் ஆஸ்பத்திரில அட்மிட் ஆயிட்டாரு !
இனி அவர் எப்படியும் தப்பிக்க சான்ஸே இல்லேன்னு சொல்லு !

எங்க அம்மாவை வீட்டை விட்டுப் போ-ன்னு சொன்னியாமே ?
அப்படியெல்லாம் மரியாதை இல்லாம சொல்வேனா ? போங்க-ன்னுதான் சொன்னேன் !

அந்த ஆளை நம்பி ஜனங்க எல்லோருமே தைரியமா பணம் போடுவாங்க !
ஐயோ... இன்னொரு ஃபைனான்ஸ் கம்பெனியா ?
சே... சே, நம்ம தெரு பிச்சைக்காரன் !

என் பையன் ஹிஸ்டரியில் கொஞ்சம் வீக் !
அப்படியா ?
ஆமாம்... தாத்தா பேரைக் கேட்டாலே தெரியாதுங்கறான்...!

டாக்டர், முந்தி ஆட்டோ டிரைவரா இருந்திருக்கலாம்-னு எப்படி நெனைக்கிறீங்க ?
ஆபரேஷன் பீஸுக்கு மேல இருநூறு ரூபா போட்டுத் தாங்கன்னு கேட்கிறாரே !

என்ன டாக்டர் இது... மருந்துச் சீட்டில் சா-வுக்கு முன்... சா-வுக்குப் பின் என்று எழுதியிருக்கீங்க !
ஏன் பதறுறீங்க...?
சாப்பாட்டுக்கு முன், சாப்பாட்டுக்குப் பின் என்பதன் சுருக்கம்தான் அது !

டீ ஒண்ணு மீடியமா கொடு. .!
தமிழ் மீடியமா ? இங்கிலீஷ் மீடியமா ?
முண்டம்... டீ-னு இங்லீஷில் தானே கேட்டேன்... தேநீர்-னு கேட்டால்தான் தமிழ் மீடியம், தெரியுதா ?

ஏன் உங்க காதலி நந்தினி கோபமா போறாங்க ? !
எல்லாத்திற்கும் என் நந்தி நீ-ன்னு சொன்னேன்... அதான் !

நீ என்னத்தடா பெரிசா சாதிக்க போறேன்னு நான் சொன்னா என் பையன் எனக்கெதிரா சாதிச்சுக் காட்டிட்டான் !
அப்படியா ?
ஆமா ! மெகா சீரியல் இயக்குநரா ஆயிருக்கான் !

உன்னைப் பெண் பார்க்க வந்தவரு என்னடி சொன்னார் ?
நான் கேட்கப் போற 14வது கேள்விக்குப் பதில் சொன்னா நீங்கதான் என் மனைவின்னு சொன்னாரு !

ஒரு கல்யாணத்துக்குக் கூட என் கணவரைக் கூட்டிட்டுப் போக முடியலை. ..!
ஏன் ?
பழக்க தோஷத்துல நேரா சமையல் நடக்கற இடத்துக்குப் போய் சமையல் பண்ண ஆரம்பிச்சுடறார் !

ஆனாலும் என் மனைவி எங்க வீட்டு நாயை இப்படி பழக்கி வெச்சிருக்கக் கூடாது...
ஏன் ?
என் மனைவிக்குத் தெரியாம நான் பீரோவைத் திறந்தாலே உடனே நாய் குரைக்குது !

மின்னலே படம் சுமாராத்தான் போவுதாம் ?
மின்னல் அ-ன்னு வைச்சிருந்தா சூப்பரா போயிருக்கும் !

அரசியல் வாதியைக் காதலிச்சது தப்பா போச்சுடி !

ஏண்டி ?
உங்கப்பா பாத்த மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்கோ... நான் வெளியிலிருந்து ஆதரவு தர்றேனு சொல்றார்டி !

ஏன் அந்தக் கிரிக்கெட் வீரர் பேப்பர் பேனா எல்லாம் எடுத்து விளையாட போறாரு !
டெஸ்ட் மேட்ச்ங்கிறதைத் தப்பா புரிஞ்சுக்கிட்டாரு !

த.மா.கா.வைச் சேர்ந்த நடிகரை நம்ம படத்துக்கு புக் பண்ணது தப்பா போச்சு !
ஏன் ?
அவர் பேசற வசனம் ஒண்ணுகூட புரியல !

ஃபைட் படத்துக்குப் போனது தப்பா போச்சு !
ஏன் ?
பக்கத்து சீட் ஆள்கூட ஒரே சண்டை !

அரிச்சந்திரன் கதையில் இருந்து நீ தெரிந்து கொண்டது என்ன ?
கஷ்டம் வந்தா மனைவியை விற்கலாம்னு தெரிஞ்சுகிட்டேன் சார் !

அந்த நடிகை ரொம்ப படத்துக்கு அப்புறம் சேலை கட்டி ஒரு படத்துல நடிச்சுட்டாங்க !
அதுக்காக சேலைமாமணி பட்டம் கேட்கறது சரியில்ல !

டாக்டர் பசி எடுக்கலை, பண்ற சாப்பாடெல்லாம் மிச்சமாப் போகுதுன்னு என் பொண்டாட்டி திட்றா !
பேசாம உங்க வீட்ல இருக்கற சாப்பாட்டை எல்லாம் எங்க வீட்டுக்கு அனுப்பிடுங்க !

எங்க பைனான்ஸ் கம்பெனியில பணம் போட்டா அஞ்சி வருஷத்துல டபுள் ஆகும், பத்து வருஷத்துல டிரிபிள் ஆகும் !
அப்போ பதினைஞ்சி வருஷத்துல ?
போட்ட பணம் கையில கெடைக்கிறதுக்கே டிரபிள் ஆகும் !

அவர் ஏன் ரொம்ப வீக்-கா இருக்காரு ?
நிறைய பொண்ணுங்களை மாசமா ஆக்கிட்டாராம் !

என்னங்க... உங்களுக்கு மாடு கறக்கத் தெரியுமான்னு கேட்டா எனக்கு ஆடத் தெரியாது, பாடத் தெரியாதுன்னு சொல்றீங்க ?
ஆடுற மாட்டை ஆடிக் கறக்கணும், பாடுற மாட்டைப் பாடிக் கறக்கணுமே !
நன்றி இதயம் பேசுகிறது 4-3-2001
என் கணவர் ஆபீஸ்லேர்ந்து வீட்டுக்கு வந்து ஒரு வாரம் ஆச்சு...
ஏன்...?
டாக்டர்தான் அவரை ஒரு வாரம் பெட் ரெஸ்ட்ஸ் இருக்கச் சொன்னாரு...

டாக்டர்... நாலாம் நம்பர் பேஷண்ட் ஆட்டோ டிரைவர் போலிருக்கு...
எப்படிக் கண்டுபிடிச்சே...?
அவருக்கு ஜுரமே இல்லை... ஆனா, தர்மா-மீட்டர் மட்டும் நிறைய காட்டுது.

உங்களுக்கு எத்தனை நாளா இந்த உடம்பு...?
பிறந்ததுலேர்ந்தே எனக்கு இந்த உடம்புதான் டாக்டர் !

ஊசி போட்ட அப்புறம் இப்ப எதுக்கு டாக்டர் திடீர்னு ஸ்கேன் எடுக்கச் சொல்றீங்க ?
உள்ளே போன ஊசி இப்ப எங்கே இருக்குன்னு பார்க்க எனக்கு ஆசையா இருக்கு !

கால்வலினு அட்மிட்டான உங்களுக்கு வயித்துல ஆபரேஷன் பண்ணியிருக்காரே... அப்புறம் ஏன் நீங்க டாக்டரை எதுவும் கேட்கலை ?
எதுக்குக் கேட்கணும்... அவரைப் பத்தி தெரிஞ்சுதானே நான் வயித்துவலிக்கு பதிலா கால்வலினு சொல்லி அட்மிட் ஆனேன் !

இந்தக் காலத்துல யாரையும் நம்ப முடியலைன்னு சலிச்சுக்கறியே... என்னாச்சு ?
ஃபைனான்ஸ் கம்பெனில போட்ட பணத்தை வட்டியோட திரும்பத் தந்துட்டாங்க !

என் பாங்க்ல ஆறு கிளார்க், எட்டு ஆபீஸர் வி.ஆர்.எஸ்-ல போயிட்டாங்க... நம்புவீங்களா ?
நீ வேற... என் பாங்க்ல எல்லா கஸ்டமருங்களுமே வி.ஆர்.எஸ்.-ல போயிட்டாங்க !

நான் டி.வி-யில நியூஸ் வாசிக்கிற அன்னிக்கு என் மனைவி டி.வி பார்க்க மாட்டாள்.
ஏன்...?
அவதான் என் பேச்சை கேட்கமாட்டாளே.. .!
நன்றி ஆனந்த விகடன் 4-3-2001
நாம லவ் பண்ற விஷயம் எங்க விட்டுக்கு தெரிஞ்சு போச்சு டார்லிங், எனக்கு ரொம்ப பயமாயிருக்கு... .!
அதனால் என்ன...? என்றைக்காவது ஒருநாள் தெரிய வேண்டியதுதானே.. .!
தெரிஞ்சதாலே ஒண்ணுமில்ல, நம்ம இரண்டு பேருக்கும் கல்யாணம் செஞ்சு வச்சிடுவாங்களோன்னுதான் பயமாயிருக்கு.

என்னது நடிகையாக்குறதுக்காக உன் பொண்ணை கான்வெண்டுல படிக்க வெக்கிறியா ?
ஆமா ! அப்பத்தானே தமிழ் சரியா பேச வராது !

கள்ள நோட்டு அடிக்கிற கும்பல்ல இருக்கிற உன்னை போலீஸ் எப்படி பிடிக்காமே விட்டாங்க ?
நான் அவங்களுக்கு கொடுத்த மாமூல் பணமெல்லாம் நல்ல நோட்டாச்சே.

நிதி அமைச்சர் பதவி கேட்கிறீயே உனக்கு என்ன முன் அனுபவம் இருக்கு ?
என்ன அப்படி கேட்டுட்டீங்க தலைவரே, பைனான்ஸ் கம்பெனி வச்சு நடத்தி இருக்கேனே, அது போதாதா !

என் கடைக்கு கஸ்டமரே வராம நானே ஈ ஓட்டிக்கிட்டு இருக்கேன். உனக்கெப்படிப்பா நான் வேலை தர்றது ?
அந்த ஈ ஓட்டுற வேலையையாவது கொடுங்க முதலாளி நான் நல்லா செய்றேன்.
நன்றி தினத்தந்தி குடும்பமலர் 25-2-2001
முதியோர் இல்லத்துக்குப் போன நடிகை ஏன் கடுப்பாயிட்டாங்க !
மெம்பர் ஆக வந்திருக்கீங்களான்னு கேட்டுட்டாங்களாம் !
தலைவர் வீட்டு காலிங்பெல்லைக் கவனிச்சியா ?
என்னவாம் ?
அமுக்கினால் தலைவர் வாழ்க-னு சத்தம் போடுது !

ஐ லவ் யூ சொன்னதும் ஏன் ஸ்வீட் கொடுக்கிறே ?
நீங்கள் என் நூறாவது காதலன் !

அவன் கம்ப்ளீட் சோம்பேறியா... எப்படி ?
கல்யாணத்துக்கு முன்னாடி, உனக்குப் பார்த்திருக்கிற பெண் முழுகாம இருக்காளேன்னா, அப்பாடா ஒரு வேலை மிச்சம்ங்கிறான் !

அவர் மோசமா ? எப்படி ?
பொஞ்ஜாதிகள் இரண்டொழிய வேறில்லைங்கிறாரே !

மாப்பிள்ளை வீட்டுக்காரங்க அநியாயத்துக்குப் பொய் சொல்லி என் பொண்ணைக் கட்டிட்டுப் போயிட்டாங்க.. .!
ஏன்... மாப்பிள்ளைக்குப் பெரிய உத்யோகம்னு ஏமாத்திட்டாங்களா ?
அதில்லை... நல்லா சமைக்கத் தெரியும்னு ஏமாத்திட்டாங்க.. .!

வர வர எதுக்குத்தான் சிபாரிசு கடிதம் வாங்கறதுன்னு விவஸ்தையே இல்லாமப் போச்சு ?
ஏன் - என்ன ஆச்சு ?
குமாஸ்தா சீட்டை டைபிஸ்ட் பக்கத்திலே போடுறதுக்கு மந்திரிகிட்ட சிபாரிசுக் கடிதம் வாங்கிட்டு வந்திருக்காரு. .!

ஜவுளிக் கடைல துணி மணிகளைத் திருடினதோட, அங்கே இருந்த டி.வி.யையும் அபேஸ் பண்ணிட்டுப் போயிட்டியாமே... ஏன் ?

பத்தாயிரத்துக்கு மேல ஐவுளி எடுத்தா கறுப்பு வெள்ளை டி.வி. இலவசம்னு கடைல போர்டு பார்த்தேன் !

அந்த புது சேர்மன் என்ன எப்பப் பார்த்தாலும் ஈஸி சேர்ல சாய்ஞ்சுகிட்டு, யார் என்ன சொன்னாலும் டேக் இட் ஈஸி-ங்கறார் !
ஈ.சி. சேர்மன்ங்கறதைத் தப்பா புரிஞ்சுகிட்டார் போலிருக்கு !

உண்ணாவிரதப் போராட்டத்துல தலைவர் பாதில எந்திரிச்சுப் போயிட்டாரே... ஏன் ?
பந்தல்ல இருந்தவங்க எல்லாரும் தலைவர்கிட்ட ஓசி பான்பராக் கேட்டாங்களாம் !

தலைவர் வன்முறைப் பேர்வழிதான் !
எப்படி உறுதியா சொல்ற ?
மாசத்துக்கு ஒரு தடவை ஆயுத பூஜை கொண்டாடுறார் !

என்ன ! உன் கணவர் உடம்பெல்லாம் ஒரே தீக்காயமா இருக்கு...?
அவரை அடுப்பை அணைக்கச் சொன்னேன், தப்பா புரிஞ்சுக்கிட்டாரு !

மருந்து சாப்பிட்ட உடனேயே உடல் இளைக்க மருந்து கண்டுபிடிப்பு ! அமெரிக்க விஞ்ஞானிகள் எலிகளுக்குக் கொடுத்து சோதனையில் வெற்றி அடைந்தனர் !
-செய்திஅந்த போலீஸ்காரர் மருந்து சாப்பிட்டதாலே வேலை போச்சா ?
ஆமாங்க ! அவருக்கு இப்ப தொப்பை இல்லை, அதனால தூக்கிட்டாங்க !

உடல் இளைக்க, கண்டுபிடிச்ச அந்த மருந்து ரொம்ப பவர்ஃபுல் !
எப்படி ?
அந்த மருந்து எங்க வீட்டு டி.வி.மேல கொட்டிடுத்து... உடனே பெரிய டி.வி. போர்டபிள் டி.வி.யா ஆயிடுத்து !

அந்த மருந்தைப் போய் எதுக்கு உன் மாமியாரைத் தலைல தடவிக்கச் சொல்ற...?
அப்படியாவது அவ ஹெட் வெயிட் குறையுதான்னு பார்க்கலாம்னுதான் !

அந்த டி.வி. மெகா சீரியல் டைரக்டர் என்ன அந்த நடிகை கிட்டே கெஞ்சிக்கிட்டு இருக்காரு ?
உடம்பு இளைக்கற மாத்திரையைச் சாப்பிடப் போறேன்... சீக்கிரம் சீரியலை முடிங்கன்னு தகராறு பண்றாங்க அந்த நடிகை !

நம்ப தலைவர் ஏன் உடம்பு இளைக்கற மருந்தை வாங்கிட்டு சாப்பிடாம இருக்காரு ?
நாளைக்கு அவருக்குக் கட்சில எடைக்கு எடை தங்கம் தரப் போறாங்களாம் !

அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு நான் ரொம்ப தாங்க்ஸ் சொல்லணும் !
ஏன் ?
அந்த மருந்தைச் சாப்பிட்டதுல எனக்குக் கடன் கொடுத்த பழைய ஆளுங்களுக்கெல்லாம் என்னை அடையாளமே தெரியலை.. .!

கள்ளச்சாராயக் கண்ணுச்சாமியைக் கண்டிச்சு வையுங்க !
ஏன் ?
வீட்டு வாசல்ல குடி உயர மாமூல் உயரும்-னு போர்டு மாட்டிருக்கான் !

உங்க கட்சி ஊர்வலம் அண்ணாசாலை வழியாகப் போக எப்படி பெர்மிஷன் கொடுத்தாங்க ?
ஊர்வலம் போகப் போறதே நானும் எங்க தலைவரும் மட்டும்தானே ?

மியூசிக் டீச்சரை விரட்டிட்டு திரிஞ்சியே என்னாச்சு !
இசை-யாது போல இருக்கே !

சாப்பாட்ல என்னடி முடி கிடக்கு ?
என் தலை முடிதாங்க... நீங்க சம்பாரிச்சுக் கிழிக்கிறதுக்கு யானை முடியா போட முடியும் !

சினிமாவில் காஸ்ட்யூம் டிசைனரா வேலை செய்யலாம்னு நினைச்சேன் !

அப்புறம் !
நடிகைக்கு எதுக்கு டிரஸ்னு வேற வேலை செய்யப் போயிட்டேன் !
நன்றி இதயம் பேசுகிறது 11-3-2001
கோடீஸ்வரன் முத்திரை வேணுமா.. எதுக்கு ?
தவறான பதிலை நீக்கிவிடத் தான் சார் !

நர்ஸ், ஆபரேஷனுக்கு எல்லாம் ரெடி பண்ணிட்டீங்களா...?
மாலைகூட வாங்கியாச்சு... ஊதுவத்தியும் ஏத்திட்டேன் சார் !

கபாலி தப்பிச்சு ஓடினதை நீ நேர்ல பார்த்தியா ?
என்ன சார் இவ்வளவு சந்தேகமா கேக்கறீங்க ? 500 ரூபாய் நோட்டை என் பாக்கெட்ல திணிச்சுட்டு ஓடினான் சார் !

உன் மாமியாரைக் கடிச்ச பாம்பு உன்னையும் கடிச்சிட்டதா... எப்படி ?
மாமியாரைக் கடிச்சதும் சபாஷ்னு அதை தட்டிக் கொடுத்தேன் !

கையில 25 ரூபாயோட சென்னைக்கு வந்தேன். இப்ப பெரிய பணக்காரனா இருக்கேன்
உழைப்புதான் காரணமா ?
ஊஹூம் ! கையில தான் 25 ரூபா வச்சிருந்தேனே தவிர, சூட்கேஸ்ல 2 லட்ச ரூபா வச்சிருந்தேன் !
நன்றி குமுதம் 15-3-2001
நீங்க ஏகப்பட்ட மாத்திரை எழுதிக் கொடுத்திருக்கீங்களே... ரொம்ப கஷ்டமா இருக்கு டாக்டர்...
மாத்திரை வாங்கறதுக்கா ?
இல்லை... அந்த மாத்திரையெல்லாம் சாப்பிட தண்ணிக்கு டாக்டர் !

இவ்வளவு தண்ணி கஷ்டம் இருக்கு வீட்டுல ஜாலியா இருக்கியே, எப்படி ?
தினமும் காலைல ஆறு மணிக்கு என்னை எழுப்ப எம் மனைவி என் மூஞ்சில தண்ணிய கொட்டுவா இப்ப முடியலியே !

சே... முப்பது ஸீட் தர்றோம்னு சொன்ன உடனே நம்ம தலைவர் அந்தக் கட்சியோட கூட்டணிக்கு ஒப்புக்கிட்டார்...
முப்பது ஸீட்டுங்கிறது நம்ம கட்சிக்கு அதிகம்தான். ..!
அட, நீங்க வேற மெடிக்கல் காலேஜ் ஸீட் பதினைந்து, இன்ஜினீயரிங் காலேஜ் ஸீட் பதினைந்து தர்றோம்னு சொல்லியிருக்காங்க.. .!

பாத்திரக் கடைக்காரர் பொண்ணை கட்டிக்கிட்டது ரொம்ப தப்பா போச்சுடா !
ஏன்...?
பொண்ணு கையில அன்பளிப்பு, கே. ராமநாதன்-னு பச்சை குத்தி விட்டுருக்கார்டா...

தலைவர் இன்னிக்கு பொதுக்கூட்டத்துல விறியோகிக்க கட்டுக்கட்டா எதையோ கார் டிக்கியிலே ஏத்தறாங்களே...
என்னவா இருக்கும் ?
வேறென்ன... தேர்தல் வாக்குறுதிகள்தான்.. .!

நீ லவ் பண்ணின அந்த அரசியல்வாதியோட பெண்ணை ஏன் கழற்றி விட்டுட்டே ?
அதுவா... என் வருமானத்துக்கு அதிகமா சுண்டல் வாங்கிச் சாப்பிடறா !

எங்க ஓட்டல்ல முதல்ல பணம் கொடுத்து பில் வாங்கின அப்புறம்தான் சாப்பிடணும்..
அப்ப நான் மாவாட்டிட்டுச் சாப்பிடறேன் !

ஏண்டா... வெக்கமா இல்லே ? ஹிஸ்டரி பேப்பர்ல சைபர் மார்க் வாங்கிட்டு வந்திருக்கியே ?
ஏம்ப்பா... பழசையெல்லாம் மறந்துடணும்னு நீதானே அடிக்கடி சொல்வே !

அந்த ரேஷன் கடைக்காரர் குழந்தை பிறந்தவுடனே மனைவியைச் சந்தேகப்படறாரு...
ஏன் ..?
குழந்தை எடை கொஞ்சம் கூடுதலா இருக்காம் !

நீங்கதானே நல்லா இல்லைனா திருப்பி எடுத்துக்கறேன்னு சொன்னீங்க...?

அதுக்காக ப்ரோக்ராம் நல்லா இல்லைங்கறதுக்காக டி.வி-யைத் திருப்பி எடுத்துக்க முடியுமா ?

சார்... நாளைக்கு இண்டியா - ஆஸ்திரேலியாவுக்கு இடையே ஒன்டே மாட்சா... டெஸ்ட் மாட்சா ?
டெஸ்ட் மாட்ச்தான்.. .ஆனா, இண்டியா அதை ஒண்டேல முடிச்சுடறதா இருக்கு !
நன்றி ஆனந்த விகடன் 11-3-2001
கரகாட்டக்காரியைக் கல்யாணம் செஞ்சது தப்பாப்போச்சு !
ஏன் ?
முதலிரவுக்கு வரும்போது பால் சொம்பை தலைமேல தூக்கி வெச்சிட்டு ஆடிக்கிட்டே வந்தாளே !

என் பெற்றோர்க்கு என்மேல் அக்கறை இல்லை !
எதை வெச்சு சொல்றே ?
லவ் லெட்டர் கொடுத்து வாங்க எனக்கு ஒரு தம்பியை பெத்துக்காமல் இருந்திட்டாங்களே !

அவன் மனைவி அவ்வளவு மோசமா காப்பி போடுவா போலிருக்கு !
எப்படி சொல்றே ?
காப்பியை பார்த்ததும் பாலியல் வன்முறைங்கறானே !

அந்த ரேஷன் கடையிலே இரண்டு கிலோ சர்க்கரைக்கு அரை கிலோ கம்மியா எடை போட்டுத் தர்ராங்க.. .!
அதை ஏன் என்கிட்டே சொல்றீங்க...?
நீங்கதானே சுகர் கம்ப்ளைண்டு இருந்தா என்கிட்டே வந்து சொல்லுங்கன்னு சொன்னீங்க.. .!

குற்றம் சரிவர நிரூபிக்கப்படாததால் குற்றம் சுமத்தப்பட்ட குப்புசாமியை நிரபராதி என்று தீர்ப்பளிக்கிறேன்.
ரொம்ப நன்றி எசமான். இனிமே ஒழுங்கா நடந்துக்கிறேன் சாமி !

மூணு மாசத்துக்கு முன்னாடி உம் பொண்ணை கரும்பு வியாபாரிக்கு கட்டிக் கொடுத்தியே... இப்ப எப்படி இருக்கா ?
ம-சக்கை-யா !

என் கணவருக்கு தூரப் பார்வை இருக்கு !
எப்படி கண்டுபிடிச்சீங்க ?
எப்பவும் பக்கத்திலே இருக்கிற நான் தெரிய மாட்டேங்கறேன் ! ஆனா தூரத்திலே இருக்கிற பெண்ணெல்லாம் அவர் கண்ணுக்கு பளிச்சுன்னு தெரியுது !

ஜெயில்ல இருக்கிற பையன் ஜாதகமா பார்த்து எதுக்கு கொடுக்கறீங்க...?
நீங்க தானே உங்க பொண்ணுக்கு மாமியார் வீட்டோட இருக்கிற மாப்பிள்ளையா வேணும்னு சொன்னீங்க !

உண்ணாவிரதப் பந்தலில் பகிரங்கமா இலை போட்டு சாப்பிட்டுக்கிட்டிருக்கீங்களே தலைவரே?
பத்து மணிக்கு உண்ணாவிரதம் தொடங்குவதாகத்தானே போஸ்டர்ல போட்டிருக்கு. இப்ப ஒன்பது அம்பத்தஞ்சுதானே ஆகுது !

அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை, நிரந்தர நண்பனும் இல்லைன்னு சொன்னது தப்பாப் போச்சு...
ஏன் தலைவரே ?
நிரந்தரப் பதவியும் இல்லைன்னு சீட் தரலை !

கட்டெறும்பு கடிச்ச எனக்கு கழுதை கடிச்சதுக்கான ட்ரீட்மென்ட் கொடுக்குறீங்களே... ஏன் டாக்டர் ?
உங்களை கடிச்சது கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பானதா இருக்கலாம்ல அதான் !

நம்ம தலைவரும், கூட்டணிக் கட்சித் தலைவரும் கைகளைப் பிடிச்சுக்கிட்டு, துண்டால மறைச்சுருக்காங்களே... ஏன் ?
ஸீட் பேரம் பேசுறாங்களாம் !

அரண்மனையில் என்ன கலாட்டா ?
மன்னர் தேர் வாங்கினதிலே செஞ்ச ஊழல் தெரிஞ்சி போச்சாம் !

என் வீட்டுக்காரருக்கு பிடிக்காததை நான் செய்யவே மாட்டேன்.

நல்லது ! மனைவின்னா உன்னை மாதிரிதான் இருக்கணும்.
அதனாலதான் அவரையே சமைச்சு சாப்பிட சொல்லிட்டேன்.

அந்த கிரிக்கெட் வீரரின் தலை மொட்டையா இருக்கே ! ஏதாவது வேண்டுதலா ?
அதெல்லாம் ஒண்ணுமில்லே, ஒரு ஷாம்பு விளம்பரத்தில் நடிச்சதிலிருந்துதான் இப்படி ஆயிடுச்சி !

நான் மக்களுக்காக எவ்வளவோ செஞ்சிருக்கேன் !
எங்கே ! அதில ஒண்ணு, ரெண்டை சொல்லுங்க பார்க்கலாம் ! ?
ஒண்ணு
ரெண்டு
மூணு
நாலு
அஞ்சு...

முதன் முதலா உன் காதலியோட வெளியில போயிருக்கே. வெறும் 10 ரூபாதான் செலவு பண்ணுனியா ? ஏன் ?
நான் என்ன பண்றது ? அவகிட்டே 10 ரூபாதானே இருந்தது.

மாட்டுக்கு எதனால அஜீரணக் கோளாறு வந்தது ?
கண்ட கண்ட கூட்டணிச் சுவரொட்டிகளைத் தின்னதுனாலதான் !

இன்ஸ்பெக்டர், எனக்கு ஒரு மிரட்டல் கடுதாசி வந்திருக்கு.
யார் எழுதினது ?
என் மாமியார்தான். உடனே புறப்பட்டு இங்கே வர்றாங்களாம் !

தலைவர் ஏன் கோர்ட்லேர்ந்து வரும்போது வாயை மூடிக்கிட்டே வர்றாரு...?
அவரோட சொத்தையெல்லாம் பிடுங்கிட்டாங்களாம்.

உங்க பையன் ஏன் செக்யூரிட்டி வேலைக்குத்தான் போவேன்னு சொல்றான்...?
அதுலதான் ஜாப் செக்யூரிட்டி இருக்குமாம்.

பாதி படத்துக்கு மேல கதாநாயகன் வில்லனா மாறிட்டாரு
ஏன்...
தயாரிப்பாளர் பேசின பணத்தை கொடுக்கலையாம்.
நன்றி குமுதம் 22-3-2001
நூறு மில்லி லிட்டர் என்ன ?
செம கிக் சார் !

அந்த வெட்டியான் ஏன் இவ்வளவு சந்தோஷப்படறான் ?
நிறைய பிண வரவு வரா மாதிரி கனவு கண்டானாம் !

இன்டர் நெட்ங்கிற புனைப் பெயரில் கதை எழுதியது தப்பாப் போச்சி.. .!
ஏன் ?
எனக்கு வைரஸ் வந்திருச்சி !

இந்தப் படத்தோட தயாரிப்பாளர் குடை கம்பெனி வச்சிருக்கார்-னு எப்படி சொல்றே ?
இடைவேளைக்கு பதிலா குடைவேளை-னு போடறாங்களே !

டாக்டர் ஒரே இருமலா இருக்கு ?
நீங்க பணக்காரரா இருக்கலாம்... அதுக்காக ஒரே ஒரு இருமல் வந்ததுக்கே என்னைத் தேடி வரணுமா ?

உங்க பையனைக் கொஞ்சம் கண்டிச்சு வையுங்க சார் !
ஏங்க... ஏதாவது குறும்பு பண்ணினானா ?
ஆழம் தெரியாமல் காலை விடாதேன்னு சொல்லிக் கொடுத்தா கையை விடலாமா சார்ன்னு லொள்ளா கேட்கறான் !

தினமும் ஒரு பழம் சேர்த்தா உடம்பு தேறும்னு போன மாசமே சொன்னேனே... கடைப் பிடிக்கலையா ?
நீங்க சொன்னபடிதான் செய்தேன் ! இதுவரைக்கும் வீட்டுலே ஒரு கூடையிலே முப்பது பழம் சேர்த்து வச்சிருக்கேன் !

இவ்வளவு பெரிய க்யூ நிக்குதே... எதுக்காக ?
இது க்யூ இல்லீங்க ! தேர்தலுக்கு புதுசா சேர்ந்திருக்கும் கூட்டணி !

வேட்பாளர் ஏன் முகமூடி அணிஞ்சுக்கிட்டுப் பேசறாரு ?
போன தேர்தல்லே ஜெயிச்ச பிறகு தொகுதிக்கே போகலயாம் ! அந்த மூஞ்சியைக் காட்ட பயந்துகிட்டு முகமூடி அணிஞ்சுக்கிட்டு இருக்காராம் !

வேட்பாளர் ஏதோ பொட்டலம் கட்டிக் கொண்டு வந்திருக்காரே, அது என்னவாம் ?
அவரது தேர்தல் சின்னம் எறும்பாம் ! அது ஓடிப் போகாமே இருக்கப் பொட்டலம் கட்டிக் கொண்டு வந்திருக்கார் !

இந்தத் தடவை என் சார்பாகத் தேர்தல் பிரசாரம் செய்ய ரஷ்ய ஜனாதிபதி புஷ்ஷோ அல்லது சிங்கப்பூர் பிரதம மந்திரி வாஜ்பாயோ வர ஒப்புக்கிட்டு...
ஏன் வேட்பாளர் இப்படி உளர்றாரு ?
இப்படித் தப்புத் தப்பா உளறினாத்தான் அரசியல்ல நீண்டகாலம் நீடிக்க முடியும்னு வேற சொல்வாரு !

உங்கள் ஆட்சிக்காலத்தில் ஆயிரக் கணக்கான மரக்-கன்றுகளை நட்டதாகக் கூறுகிறீர்களே... அவற்றில் ஒன்றாவது மரப்-பசுவாக வளர்ந்திருக்கிறதா ?

தலைவர் அவசர அவசரமா இந்தப் பொதுக் கூட்டத்துக்கு வந்துருக்கார்-னு சொல்றியே... எப்படி ?
அவர் தோள்லே துண்டுக்குப் பதிலா தாவணி தொங்குதே !

அந்த கோடீஸ்வரன் பெண் பித்தனா ?
ஆமா... அவன் லேடீஸ்வரன் !
நன்றி இதயம் பேசுகிறது 18-3-2001
எங்கே போய்த் தொலைந்தாய் ?
ரிஷி பார்க்க குருவே

ஏன் தினமும் ஒரு சொட்டு மண்ணெண்ணையை உண்டியலில் ஊத்தறே ?
எரி பொருள் சேமியுங்கள்-னு அரசாங்கமே சொல்லுதே !

சீக்கரமா பரீட்சை எழுதி முடிச்சிட்டா ஒரு தடவை திரும்பிப்பாரு.
திரும்பிப் பார்த்தால் சார் திட்றாங்கப்பா !

என் கணவர் இப்ப முன்பு மாதிரி இல்லாமல் தலைகீழா மாறிட்டார்...
எப்படி ?
காதலிக்கும்போது என்னை ரம்பா... ரம்பா...ன்னு புகழ்ந்தவர் இப்ப பாரம்... பாரம்...னு சொல்றார்டீ!

கேமராவைப் போட்டு உடைக்கிறாரே... டைரக்டருக்கு அப்படி என்ன கோபம் ?
இந்தக் கேமரால அவர் எடுத்த சினிமாவெல்லாம் ப்ளாப் ஆயிடுதாமே !

தங்க நகைக்கு லோன் கிடைக்கு மாங்க ?
கிடைக்குமே.. .! எவ்வளவு லோன் வேணும் உங்களுக்கு ?
பொண்ணு கல்யாணத்துக்கு ஒரு 10 பவுன் வாங்கணும். அதுக்குத் தேவையானதைக் கொடுங்க!

நான் மனைவிக்கு பயப்படமாட்டேன் !
எப்படி ?
எனக்குத்தான் கல்யாணமே ஆகலையே !

என்ன ! உன் கணவர் ரெண்டு காதுலேயும் பஞ்சை வெச்சுகிட்டு தூங்கறாரு...?

அவரு விடுற குறட்டை சப்தமே அவருக்குக் கேட்டு தூக்கம் முழிச்சுடக் கூடாது பாரு, அதான்.

யோவ் தரகரே ! பொண்ணு அநியாயத்துக்கு ஒல்லியா இருக்காளேய்யா !
நான்தான் சொன்னேனே, பொண்ணோட அப்பா ஊதுவத்தி கம்பெனி வெச்சிருக்கார்னு...

என் கணவர் வாரத்துல ஒரு நாள்தான் குடிப்பாரு.
பரவாயில்லையே...
ஆமாம் ! அவரு ஒரு தடவை குடிச்சாலே ஆறு நாள் போதைல இருப்பாரு.
நன்றி குங்குமம் 23-3-2001
என்ன அந்த போலீஸ் ஸ்டேஷனில் முகூஆ-னு போட்டிருக்கு...?
றுலே கூஅநை மாமூல் வாங்குவாங்களாம்.

சே... பிணத்துக்கு போடற சென்ட்-டாட்டம் இருக்கு !
நீங்கதானே பாடி-ஸ்ப்ரே கேட்டீங்க !

தேர்தல்ல நிற்க வீணா செலவு பண்ணாம அந்தப் பணத்தை ஏதாவது ஃபைனான்ஸ் கம்பெனில போடணும்னு என் மனைவி சொல்லிட்டா...
எப்படி பார்த்தாலும் உங்க டெபாசிட் காலி !

உங்களை ஏற்கெனவே இன்னொரு வீட்டுல பாத்த மாதிரி இருக்கே !
ஹி...ஹி... இது என்னோட சின்ன வீடுங்க...

நீங்கதான் குடும்பத் தலைவரா...?
சே ! சே... என்னோட மனைவிதான் குடும்பத் தலைவி... நான் சும்மா உதவி குடும்ப தலைவர்ங்க !...

ப்ளஸ்-டூ-வில் நீங்க எந்த குரூப் எடுத்து படிக்க விருப்பப் படறீங்க ?
ஏ குரூப்பையும், பி குரூப்பையும் கூட்டணியா சேர்த்து வச்சிப் படிக்கலாம்னு இருக்கேன் சார்!

இராமு... நான் கொடுத்த பிரம்படி எப்படியிருந்தது ?
பாவம்... உங்க வீட்டுக்காரர் எப்படித்தான் வீட்டில் சமாளிக்கிறாரோ ?

இந்த ஆளுக்கு பூலோகத்தில கணக்கு முடிஞ்சு போச்சே... ஏன் கொண்டு வரலை ?
சட்டமன்றப் பொதுத் தேர்தலில் ஓட்டுப் போட வசதியாக 3 மாதம் உயிர் நீடிப்பு தந்துள்ளேன் பிரபு !

அந்த பைனான்ஸ் கம்பெனியில போட்ட பணத்தைத் திருப்பிக் கொடுத்துடுவாங்க !
அப்படியா ?
ஆமா ! 15,000 ரூபா போட்டேன்... 00051 ரூபா கொடுத்துட்டாங்க !

ஏண்டா, மாலதி பின்னால் சுத்தறீயாமே... உண்மையா ?
நான் சுத்தலையே... நடந்துதான் போறேன் !

ரெண்டு முறை மொய் எழுதுறீங்களே ஏன் ?
பந்தியில் நான்கு முறை சாப்பிட்டுட்டேன். அதனாலதான் !

யோவ் ! எதுக்குய்யா மூட்டை தூக்குற ஆளைக் கூட்டிட்டு வந்திருக்கே ?
நீங்கதானே சார் சொன்னீங்க நேத்து ! நிறைய ஃபைல்களை இன்டர் நெட்டில் இருந்து டவுன் லோட் பண்ண வேண்டியிருக்குன்னு !

சரத்குமாரை வச்சி மெகா சீரியல் தயார் செஞ்சா, என்ன பெயர் வைப்பாங்க தெரியுமா ?
சித்தப்பா !

ஞாபக மறதியால என் வாழ்க்கையே போயிடுச்சு !

என் மனைவி காணாமப் போனதை கம்ப்ளெயின்ட் பண்ணக் கூடாதுனு நினைச்சேன். ஞாபக மறதில கம்ப்ளெயின்ட் பண்ணிட்டேன் !

உன்கிட்டே கோவிச்சிக்கிட்டு உன்னை எரிக்கிற மாதிரி பார்த்திட்டுப் போறது யாருடி !
மை லவ்வர் சூரியன் !

ஏண்டா பாக்கெட் சாராயத்தை உடைச்சி, பானையிலே ஊத்தறீங்க ?
இன்னியோட பாக்கெட் சாராயம் ஒழிக்கப்படும்னு தலைவர் பேப்பர்லே நியூஸ் குடுத்துட்டாராம் !

சர்க்கஸ் கூண்டுலேருந்து ஒரு புலி தப்பிச்சு ஓடிடுச்சாமே...?
அப்ப விடுதலைப்புலின்னு சொல்லுங்க.. .!

தலைவருக்கு புத்தி கெட்டுப் போச்சுன்னு எப்படிச் சொல்றீங்க !
சின்ன வீடு பிரிஞ்சு போனதுக்கு எதிர்க்கட்சி சதின்னு அறிக்கை விட்டிருக்காரே !

நாம மோசம் போயிட்டோமா ? என்னய்யா சொல்றே ?
கூட்டணிக் கட்சிகளுக்குச் சீட்டு கொடுத்தது போக, பாக்கி நமக்கு ரெண்டு இடம்தான் இருக்கு !

தலைவர் மாதிரியே குளோனிங்-லே ஒருத்தரைப் தயார் பண்ணணுமா...
ஏன் ?
பூகம்பப் பகுதியைப் பார்வையிடப் போக பயமா இருக்காம் !

மசாலா கதை இருக்கா...?
சொல்லுங்க !
இஞ்சி வியாபாரி மகளை பூண்டு வியாபாரி மகன் காதலிக்கிறான்.. .!

கலைச்சேவை செய்ய துபாய் போன நடிகை குசலா எங்கே ?
கலைச்சே ஆகணும்-னு ஆஸ்பத்திரி போயிருக்கா !

நாங்க ஓட்டுப் போட்டு உங்களை ஜெயிக்க வச்சா என்ன பண்ணுவீங்க ?
என்னோட ஓட்டு வீட்டை பங்களாவா மாத்திடுவேன் !
நன்றி இதயம் பேசுகிறது 1-4-2001
உங்க வீட்டுக்காரர் உம் மாதிரியே எல்லாத்துலயும் மேட்ச் பார்ப்பார் போலிருக்கு.
எப்படிச் சொல்றே ?
சாராயத்தைக் குடிக்கும் போதுகூட சரக்கு ரெயில்ல நின்னுகிட்டுல்ல குடிக்கிறாரு !

டி.வி-யில நியூஸ் வாசிக்கிற பெண்ணுக்கு ஏதோ வருத்தம் போல இருக்கு.. .!
எப்படிச் சொல்றே ?
மீண்டும் தலைப்புச் செய்திகள்-ன்றதுக்கு பதிலா மீண்டும் சலிப்புச் செய்திகள்-னு சொல்றாங்களே.. .!

நம்ம தலைவர் ஏன் தன் அண்ணனுக்கு 3வது கல்யாணம் செய்து வைக்கறாரு ?
மூன்றாவது அணிதான் உருவாக்க முடியல, மூன்றாவது அண்ணியையாவது உருவாக்கலாம்-னு தான்.. .!

தேர்தல் முடியற வரைக்கும், நானும் என் லவ்வரும் பீச்சுக்கு போகக்கூடாதுன்னு முடிவு பண்ணிட்டோம்.
ஏன் ?
நாங்க ஆட்சிக்கு வந்தா, உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வைக்கிறோமுன்னு ஓட்டு கேட்டு வர்றாங்க.

தலைவருக்கு ஸீட் கிடைச்சதில் தலைக்கால் புரியலை !
என்ன ?
கழுத்துல விழுந்த மாலையை கழட்டி வீசுறதுக்கு பதிலா வேஷ்டியை அவிழ்த்து வீசுறாரே !
நன்றி குமுதம் 5-4-2001
சின்னச் சின்ன விஷயத்துக்கு வாத்தியார் கோபப்படறார் !
அப்படியா ?

ஆமா, பரீட்சைல பிட் அடிச்சேன்னு நடவடிக்கை எடுத்திருக்கார் !

இனிமே கவர்ச்சியா நடிக்க மாட்டேன்னு அறிக்கை விட்டேன். நாட்ல பாதிப்பேரு பாராட்டினாங்க.
இனிமே நடிக்கவே மாட்டேன்னு அறிக்கை விட்டுப் பாருங்க. நாடு என்ன நாடு... உலகமே உங்களைப் பாராட்டும்.

அந்தக் கவிஞர் இதுக்கு முன்னால மளிகைக்கடை வச்சிருந்தாரோ ?
ஏன் அப்படிச் சொல்றீங்க ?
காதல் பாட்டு எழுதச் சொன்னா, புளியைப் போல நீயிருந்தா புளியங்கொட்டையாய் நானிருப்பேன், மிளகாயா நீயிருந்தா காரமாக நானிருப்பேன்னு எழுதறாரு...

காதுல, மூக்குலெல்லாம் எதுவும் இல்லையே, ஏன் ?
எல்லாத்தையும் அடகுக் கடையில வச்சு என் புருஷன் குடிச்சிட்டான்.
யாருக்கு காது குத்தறே... எந்த அடகுக் கடையில சாராயம் விக்கிறாங்க...?

பேயைக் கண்டா நாய் குரைக்கும்னு சொல்றாங்களே... உண்மையா சார் ?
ஏன் கேட்கிறீங்க ?
என் மனைவியைக் கண்டா நாய் குரைக்குதே !

புடவைக்கும், புருஷனுக்கும் என்ன வித்தியாசம் ?
புடவையை கடைல புரட்டிப் பார்த்து செலக்ட் பண்ணி லேடீஸ் கட்டிக்கறாங்க. புருஷனை கல்யாணம் கட்டிக்கிட்டு புரட்டி எடுக்கறாங்க.

டாக்டர், குண்டான உடம்பு குறைய என்ன வழி?-னு கேட்டா நிறை பேருக்கு கடன் குடுங்க...னு சொல்றீங்களே ?
கடனை வசூல் பண்ண நடையா நடப்பீங்க. வாக்கிங் போனா ஒல்லி ஆகிடுவீங்களே ?

இன்சூரன்ஸ் பாலிஸி யார் பேர்ல போடறது ? உங்க பேர்லயா ? உங்க கணவர் பேர்லயா.. ?
அவர் பேர்லயே போடுங்க. ஏன்னா எனக்கு முதல்ல அவர்தான் போய்ச் சேருவார்னு ஜோசியக்காரன் சொல்லியிருக்கான்.

என் மனைவி டீச்சரா இருக்கா...
அப்படியா ! நீங்க என்னவா இருக்கீங்க ?
நான் அவளுக்கு புருஷனா இருக்கேன்.

தலைவர் தேர்தல் பிரச்சாரத்துக்கு போறப்ப கூடவே கவர்ச்சி நடிகையையும் எதுக்கு கூட்டிட்டு போறாரு ?
ஒரு டேன்ஸுக்கும், அடுத்த டேன்ஸுக்கும் நடுவுல இருக்கற கேப்ல பேசுவாரு. அப்போதான் கூட்டம் வரும்.
நன்றி குங்குமம் 6-4-2001
என்ன தலைவரே சொல்றீங்க ? பெண்கள் வோட்டெல்லாம் நமக்குக் கிடைக்கணும்னா, மேடையில அழுது அழுது வோட்டுக் கேட்கணுமா ?
ஆமாய்யா... மெகா சீரியல் பாத்துப் பாத்து, எதையுமே அழுதுகிட்டுச் சொன்னாத்தான் பெண்கள் கவனிக்கிறாங்க !

எப்படியோ நம்ம தொகுதியைக் கூட்டணிக் கட்சியிலுள்ள ரெண்டு கட்சிகளும் சமமா பங்கு போட்டுக்கிட்டாங்க..
எப்படி ?
ஜெயிக்கிற வேட்பாளர் இந்தக் கட்சியில இரண்டரை வருஷமும் அந்தக் கட்சியில இரண்டரை வருஷமும் இருக்கணுமாம் .. !

யாருப்பா அந்த ஜோடி... ரெண்டு மணி நேரமா ஒரே இளநியைக் குடிச்சுக்கிட்டு இருக்காங்க.. ?
கடை விளம்பரத்துக்காக நான் தான் காசு கொடுத்து நிக்க வெச்சிருக்கேன். ..!

அடடே... இளநியா...?
இல்லீங்க... இது பிளாஸ்டிக் இளநிப்பாத்திரம். உள்ளே கூல்டிரிங்க்ஸ் ஊத்தி வெச்சிருக்கோம்.. !

நான் ஊர்ல இல்லைனா என் மாமியாருக்கு கை உடைஞ்சா மாதிரி இருக்கும்.
நீ ஊர்ல இருந்தா ..?

மாதிரியெல்லாம் இருக்காது.

டாக்டர்... என்னால வாயையே திறக்க முடியலை...
சரி, சரி... உங்க மனைவியைக் கொஞ்சம் வெளியே வெயிட் பண்ணச் சொல்லுங்க...

யோவ், பேசாம இந்த ஈ.என்.டி தொழிலையே விட்டுடலாம்னு இருக்கேன் !
ஏன் சார் ?
துக்கம் தொண்டையை அடைக்குது. அதுக்கு ஏதாவது மாத்திரை இருக்கா...?னு கேக்றான்யா அந்த ஆளு !

நீங்க சொன்ன மாதிரி தினமும் பதினஞ்சு கிலோ மீட்டர் நடக்கறேன் டாக்டர் ! ஆனா...
வெரிகுட் ! ஏன் தயங்குறீங்க...?
நான் நடக்கறது என் தூக்கத்துல டாக்டர் !

நம்ம மந்திரி பாங்க்குக்கு போறதுக்கு பயப்படறாரு !
ஏன் ?
கௌன்டர்ல கேஷ் வாங்கும்போது யாராவது வீடியோ எடுத்துடுவாங்களோன்னுதான் !

ஏன்யா... இப்ப லேட்டஸ்டா நாம வாங்கிப் போட்ட ஆயுத பிஸினஸ்ல என்ன கமிஷன் வரும் ?
விசாரணை கமிஷன்தான் வரும் !

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்கிறது சரியாப் போச்சா... எப்படி ?
காலையில் மனைவியைத் திட்டினேன், சாயங்காலம் பின்னிட்டா !

தலைவருக்கு தேர்தல் பற்றி விழிப்புணர்ச்சியே இல்லைன்னு எப்படி சொல்றீங்க ?
ஓட்டுகளைப் பிரிக்கணும்னு சொன்னா தனக்குக் கூரையேறிய அனுபவம் நிறைய உண்டுங்கறாரே !

பொண்ணு சுமாரத்தான் பாடுவா !
பையனும் சுமாரத்தான் சமைப்பான் !
சரி, கல்யாணம் எப்ப வைச்சுக்கலாம் ?

வளவளன்னு பேசாம, சுருக்கமா ஒரே வார்த்தையிலே புரியும்படி சொல்லு.
செலவுக்கு 1000 ரூபாய் கடன் வேணும் !

என்னது... திருவோடு ஃபிலிம்ஸா ?
ஆமாம், நாலைஞ்சு பிச்சைக்காரங்க ஒண்ணா சேர்ந்து மெகா பட்ஜெட்ல படம் எடுக்கிறாங்க !

எங்க கூட்டுக் குடும்பத்தில் அறுபது பேர் இருக்கோம்.
அப்ப தேர்தல் கூட்டணிக்குப் பேச்சு நடத்தலாமே ?

எதுக்கு நின்னுக்கிட்டே சாப்பிடுறீங்க.. .?
பொண்டாட்டி சம்பாத்தியத்துல உட்கார்ந்து சாப்பிடறான்னு மத்தவங்க கேலி பண்ணக் கூடாதுல்லே.. .!

அந்த சாமியார் நடிகைகளோட மேனியழகு நிஜம் தானானு பல பேர் கிட்ட விசாரிக்கிறார் !
தீர விசாரிப்பதே மெய்னு நினைக்கறார் போல !

நாலஞ்சு ராஜினாமா கடிதம் எழுதிக் குடுங்க தலைவரே !
எதுக்குப்பா ?
பேப்பர்ல அப்பப்ப ஏதாவது நியூஸ் வந்தால் ஆட்சிக்கு நல்லது !

அவர் பல் டாக்டரா ?
எப்படித் தெரிஞ்சது ?
பல்லாண்டு வாழ்க-னு வாழ்த்தறதுக்குப் பதிலா !, பல் ஆடி - வாழ்கனு சொல்றாரே !

நம்ம தலைவர் தீவிர ராமராஜன் ரசிகர் ஆயிட்டார்ன்னு சொல்றீயே... எப்படி ?

நான் ஊழலே பண்ணலைன்னு நிரூபிக்க - வேப்பிலை கட்டி, கையிலே தீச்சட்டி ஏந்தி பூ மிதிக்கத் தயார்னு சொல்றாரே !

தலைவருக்கு எல்லாமே பொருத்தமாய் அமைஞ்சிடுச்சா... எப்படி ? !
அவருக்கு ஒரு சின்ன வீடாம் ! தேர்தலில் அவர் சின்னமும் வீடாம் !

அவன் சோழர் பரம்பரை, துணிக்கடை வெச்சிருக்கானா... அவன் பெயர் ?
குளோத் (ஊடடிவா) துங்க சோழன் !

நான் மேலே படிக்கப் போறேன் !
ஆயல-லேதான் விடுமுறை ஆச்சே !

தலைவர் சரியான கோழை !
என்னவாம் ?
புலி, யாகம், ரத்தம் இந்த மாதிரி செய்திக்குப் பிறகு வீட்டுச் சமையல்ல புளி உபயோகப் படுத்தறதைக்கூட விட்டுட்டார் !

உனக்கு அப்பா பிடிக்குமா... அம்மா பிடிக்குமா ?
எனக்கு சித்திதான் பிடிக்கும் !

சிகை அலங்காரம் செய்ய வந்த பெண்ணுக்கு லவ் லெட்டர் கொடுத்தியே... என்னாச்சு ?
பின்னி எடுத்துட்டா !

என் - பையனுக்கு ராஜா-ன்னு பெயர் வெச்சது தப்பாப் போச்சு !
ஏன் என்ன ஆச்சு ?
எப்பவும் (உடம்பில்) படையுடன் இருக்கான் !

என் மனைவி என் மேலே கோபம்னா சமைக்கமாட்டா !
என் மனைவி என் மேலே கோபம்னா சமைப்பா !

ஆபீஸில் உன் மேலே குற்றச்சாட்டு எழுந்துள்ளதா ? என்ன ?
நான் எழுந்திருக்கிறதே இல்லைன்னு !

அதிரடி மெகா சீரியல் எடுக்கிறீங்களா... என்ன தலைப்பு ?
இதுவாடா முடியும் !

நேற்று ஏன் லீவு ?
ஒரு சேஞ்சுக்கு வீட்டிலேயே தூங்கிட்டேன் சார் !

சதா வாந்தி வருது டாக்டர் !
சாதா வாந்தியா... ஸ்பெஷல் வாந்தியா !

போஸ்ட் மேனைக் காதலிக்கிறீயே... என்ன சொல்றார் ?
ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாம்கிறார் !

அந்த டாக்டர் போலின்னு எப்படிச் சொல்றே ?
சுகர் டெஸ்ட் பண்ண எவ்வளவுன்னு கேட்டா ஒரு கிலோ 20 ரூபாய்ங்கறாரே !

வெயிலுக்கு எங்கேயாவது வெளியூர் போகலாம்னு இருக்கேன். .!
வெயிலுக்கா... அதுக்கு ஏண்டா வெளியூர் போறே ? சும்மா வெளியிலே போய் நில்லு... போதும்.. .!

என்னப்பா... என் பாடு எவ்வளவோ தேவலாம்னு சொல்லிக்கிட்டுப் போற ?
தேர்தல்ல நிக்கிறவங்க படுற பாட்டைப் பார்த்துட்டுச் சொல்றேன் தாயி !
நன்றி இதயம் பேசுகிறது 8-4-2001

ஹலோ டாக்டர் ஸ்ரீதரா ..? அவசரமா ஒரு நூறு ரூபாய் இருந்தா கொடுக்க முடியுமா ..?
யாருய்யா நீ டெலிபோன்ல கடன் கேட்கறது ?
நான்தான் உங்க பேஷண்ட்... நீங்கதானே ஏதாவது அவசரம்னா உடனே போன் பண்ணச் சொன்னீங்க !

டாக்டர் சொன்ன இடத்துல நான் எக்ஸ்ரே எடுக்காம கொஞ்சம் தள்ளி எடுத்துட்டேன். அதுக்குப் போய் டாக்டர் எக்ஸ்ரேவைப் பார்க்க முடியாதுன்னு சொல்லிட்டாரு !
அப்படியா.. .!
ஆமாம்... டாக்டர் அவரோட தம்பி கிளினிக்ல எக்ஸ்ரே எடுக்கச் சொன்னாரு. நான் தள்ளி பக்கத்துல இருந்த வேற ஒரு கிளினிக்ல எடுத்துட்டேன்.

உன் வீட்டுக்காரர் என்ன எப்ப பார்த்தாலும் தலைல கட்டு போட்டுட்டிருக்காரு ?
நான்தான் சொன்னேனே... அவரு சின்ன விஷயத்துக்கெல்லாம் மண்டையைப் போட்டு உடைச்சுப்பாருன்னு...

ரொம்ப அக்கிரமமா இருக்கு !
எது ?
என் மனைவி என்கிட்டேயே வி.ஆர்.எஸ். கேட்கிறா !

வி.ஆர்.எஸ். திட்டத்துல ரிட்டயர்மெண்ட் வாங்கிட்டீங்களாமே...
பின்னே... இப்பல்லாம் தூக்கமே வரமாட்டேங்குது ! எத்தனை நேரம்தான் ஆபீஸ்ல கொட்டு கொட்டுன்னு உட்கார்ந்துகிட்டு இருக்கறது ? !

டாக்டரா இருக்கிற உங்க பையனுக்கு எதுக்கு டாக்டர் பெண்ணையே பார்க்கறீங்க...?
கிளினிக்ல அவனுக்கு பேச்சுத் துணைக்கு ஒரு ஆள் கிடைக்குமே !

எங்கம்மாவுக்கு சர்க்கரை வியாதி இருக்கிற விஷயம் என் மனைவிக்குத் தெரியாது !
ஏன்... தெரிஞ்சா கவலைப்படுவாங்களா ?
இல்லை... நிறைய ஸ்வீட் பண்ணி கொடுத்துடுவா !

என்ன உங்க பாக்கெட்ல பிளேடு இருக்கு ?
நான்தான் சொன்னேனே... பஸ்ல யாரோ என் பாக்கெட்ல பிளேடு போட்டுட்டாங்கனு !

எங்க ஆபீஸ்ல மானேஜர் இருக்காரு, ஸ்டெனோ இருக்காங்க...
இதை ஏன் என்கிட்டே வந்து சொல்றீங்க ?
நீங்கதானே படிச்சுட்டு யாராவது வேலை இல்லாம இருந்தா சொல்லச் சொன்னீங்க !

உங்க மனைவிகிட்டே உங்களுக்குப் பிடிச்ச விஷயம் எது ?
என்ன சண்டை வந்தாலும், கோபம் இருந்தாலும், என்னோட சமையல்ல மட்டும் குறையே சொல்ல மாட்டா !
நன்றி ஆனந்த விகடன் 8-4-2001
உங்கள் வயிற்றில் நிறைய ஸ்பூன்கள் கிடக்கிறதே !
நீங்கதானே மருந்து கொடுத்து இரண்டு ஸ்பூன் சாப்பிடச் சொன்னீங்க.

இண்டர்வியூவுக்கு வந்த என்கிட்டே தாத்தா, பாட்டி பற்றி விசாரிக்கறீர்களே ?
ஆமாய்யா... வேலைக்குச் சேர்ந்ததும் அவங்க செத்துட்டாங்க, இவங்க போய்ட்டாங்கன்னு அடிக்கடி லீவ் போட்டுறக்கூடாது இல்லையா ?

உங்க தாத்தா ஏன் தூங்கும் போதுகூட கைல தடியைப் பிடிச்சுக்கிட்டே தூங்கறாரு...?
அவருக்கு தூக்கத்துல நடக்கிற வியாதி இருக்கு. அதான்...

ஒரு ஓட்டோட மதிப்பு பத்து லட்சம்னு வேட்பாளர் புலம்பறாரே ! ஏன் ?
எலக்ஷனில் ஒரு கோடி செலவு பண்ணியும் அவருக்கு பத்து ஓட்டுதானே விழுந்திருக்கு !

கண்ணுல மண்ணு விழுந்திடிச்சின்னு ட்ரீட்மெண்ட் பண்ணிக்கிட்டாரே அவர் ஃபீஸ் கொடுக்காமல் போயிட்டார் டாக்டர்...

நம்ம கண்ணுல மண்ணைத் தூவிட்டுப் போயிட்டானா... ?

என்ன... உன் மாமியாரோட நன்மைக்காகத்தான் நீ தனிக்குடித்தனம் போறியா ?
ஆமாம். ஏன்னா அவங்களைப் பார்க்கும்போதெல்லாம் என்னை அறியாமல் எனக்குள் பாக்ஸிங் மூட் ஏற்படுதே !

அந்த இ.என்.டி. டாக்டர் என்ன மருந்து சீட்டுல மஞ்சள் தடவி கொடுக்கறாரு..?
குழந்தைக்கு காது குத்தலுக்கு மருந்து எழுதிக் கொடுத்திருக்காரு...

என்ன ! பொண்ணு பார்க்க வந்த மாப்பிள்ளை வீட்டுக்காரங்களை பாத்ரூம் பக்கத்துல உட்கார வெச்சிருக்கீங்க...?
திடீர்னு அவங்க பெண்ணை பாட்டு பாடச் சொல்லிட்டாங்கன்னா... என் பொண்ணுக்கு பாத்ரூம்ல பாடிதான் பழக்கம்.
நன்றி குங்குமம் 13-04-2001
பாகவதர் வீக்-கா இருக்காரே...?
அவருக்கு சப்த ஜுரம் !

முனிவர் வீட்டுக் கல்யாணம்னு எப்படிச் சொல்றே ?
சாப முகூர்த்தப் பத்திரிகைன்னு போட்டிருக்கே.

இந்தியாவுல அவர் காலடி படாத இடமே இல்ல !
அப்படியா ?
கீழே கிடந்த மேப்பைக் கவனிக்காம முழுசா மிதிச்சிட்டாரு !

அவர்தான் எனக்கு மெக்கானிக் தொழில் சொல்லிக் கொடுத்தவர் !
ஸ்குரு நாதர்னு சொல்லு...

நன்றி கெட்ட நாய் ஜாக்கிரதை-ன்னு போர்டு மாட்டி இருக்கீங்களே ஏன் ?
பின்னே என்ன சார் ? வளர்த்த என்னையே கடிச்சிடுச்சே !

என்னடி இது... உன் கணவர் நைட்டி மாட்டிகிட்டு துவைக்கிறார் ?
வெளியிலிருந்து பாக்கறவங்களுக்கு நான் துவைக்கற மாதிரி தெரியுமே !

உலகிலேயே மிக நீளமான மெகா சீரியல் அவர் தயாரிக்கிறார் !
அப்படியா ?
ஆமாம். டைட்டில் சாங் மட்டும் நாலு வாரம் வரும்னா பாருங்களேன் !

என்னய்யா மேடையில ஓடா வந்து விழுது...
ஓட்டை அள்ளி வீசுங்கன்னு சொன்னதை யாரோ தப்பா புரிஞ்சிகிட்டாங்க...

அலைகடலென திரண்டிருக்கும் உங்களைப் பார்க்கும் பொழுது...
நீ உப்பு வித்தது ஞாபகம் வந்திடுச்சா ?

நண்டு கர்ப்பமா இருக்கு !
ப்ரக்நண்டு-ன்னு சொல்லு !

பீச்சிற்குப் போகணும்னு சொன்னப்போ என் மனைவி என்னை அனுமதிக்கவே மாட்டேன்னுட்டா.. !
அப்புறம்...?
சுண்டல் செய்து கொடு, பீச்சில வித்திட்டு வர்றேன்னு சொன்னேன்... சுண்டல் வாளியுடன் என்னை அனுப்பிட்டாள் !

இந்த ஆஸ்பத்திரியில் எல்லாரும் இன் பேஷன்ட்தான்.
ம்...
ஆனால் எல்லா பேஷண்டும் அவுட்.

என்னப்பா இது... நரை முடியை மட்டும்தானே வெட்டச் சொன்னேன்... நீ எல்லா முடியையும் வெட்டிட்டியே...?

கோவிச்சுக்காதீங்க சார்... வெள்ளெழுத்துக் கண்ணாடியைப் போட்டுக்கிட்டதால எல்லாமே வெள்ளையா தெரிஞ்சது அதான்.. .!

நடிக்க வரலைன்னா நான் என்ன பண்ணிட்டு இருந்திருப்பேன் தெரியுமா ?
அதான் நடிக்க வந்துட்டீங்களே !

வேலை செய்யாம என்னப்பா பண்றே ?
உங்களுக்குத் தூக்கம் வரலைன்னா என்னை ஏன் சார் டிஸ்டர்ப் பண்றீங்க ?

பெண் பாடகி ஏன் உணர்ச்சி இல்லாமப் பாடறாங்க ?
பெண் பாவம் பொல்லாததாம் !

பஸ்ஸில் உனக்குப் பட வாய்ப்பு கிடைச்சதா ? என்ன சொல்றே ?
ஒரு பெண்ணின் மீது !

ஆபீஸை மையமா வெச்சு ஒரு படமா ? என்ன தலைப்பு ?
போர்வை ஒன்றே போதுமே !

உன் மனைவிக்கு இடது கைப் பழக்கமா ?
எப்படிக் கண்டுபிடிச்சே ?
உன் வலது கன்னம் வீங்கி இருக்கே !

படம் படு கவர்ச்சியா ?
எப்படி ?
ஹிரோயினின் எலும்பு, நரம்பெல்லாம்கூட காட்டறாங்கன்னா பாரேன் !

ஏங்க நீங்க வேறொரு பெண்ணோட இருக்கிறதா பகல் கனவு கண்டேங்க !
அதையே விடியக்காலம் கண்டதா நெனச்சிக்க.. .!

ஆபீஸ் வேலையை வீட்டிலும் பார்ப்பியாமே... என்ன ?
தூங்கறதுதான்.

என் காதலிக்குப் பெரிய கண்கள் !
அப்படியா ?
சும்மா வாயசைச்சாகூட எனக்குத் தெரியாம எதைத் தின்னுறீங்கனு கேட்கறா !

அந்த நடிகையின் ரெக்கார்டு 10-10-15-2.
அப்படியா ?
ஆமா ! 10 முறை கல்யாணம், 10 முறை டைவர்ஸ், 15 குழந்தைகள், 2 முறை இரட்டைக் குழந்தைகளாம் !

என்னய்யா இது... ஊது பத்தி புகை-யைப் படம் எடுத்து இணைத்திருக்கிறாய் ?
அப்ளிகேஷன்ல புகைப்படம் இணைக்கவும்னு போட்டிருந்ததே சார்... அதான். ..!

அந்த நர்ஸிங் ஹோம்ல போயி வேலை கேட்டது ரொம்பத்தப்பாப் போச்சுடா. ..!
என்னடா சொல்றே ?
அந்த டாக்டரு வெட்டியான் வேலைதான் காலியா இருக்குன்னுட்டாரு !

டாக்டர் மாப்பிள்ளையை தரகர் பார்த்தது தப்பாப் போச்சு.. .!
ஏன்... என்னாச்சு ?
பெண் பார்க்க வருகிறார்களானு கேட்டதுக்கு, 48 மணி நேரம் போனதுக்கு அப்புறம்தான் எதுவும் சொல்ல முடியும்னு சொல்லிட்டார்.
நன்றி இதயம் பேசுகிறது 15-4-2001
தினமும் பீச்சுக்கு வந்ததும் என்னை நிக்கச் சொல்லி சுத்தி வர்றீங்களே... ஏன் டார்லிங் ?

எனக்கு ஜாதகத்துல தோஷம் இருக்கறதால தினமும் சனீஸ்வரனை சுத்திவரணும்னு ஜோஸியர் சொல்லி யிருக்காரே !

சாரி டியர், இன்னிக்கு எனக்கு ஷூட்டிங் இருக்கு. உங்ககூட பீச்சுக்கு வரமுடியாது.. .!
அதனால என்ன... உன்னோட டூப்பை அனுப்பி வையேன்...

யோவ்... யாருய்யா நீ... ஏன் என் கையைப் புடிச்சு இழுக்கறே...?
அய்யோ சுமீ... நான்தான் உன் சுந்தர். சுண்டல்காரனுக்கு பயந்து இப்படி மாறுவேஷத்துல வந்திருக்கேன்.. .!
நன்றி குமுதம் 19-4-2001
நம்ம கட்சிக்குக் கள்ளவோட்டுப் போடறவங்களுக்கு என்ன குடுக்கப் போறீங்க தலிவா...?
கள்ளநோட்டுதான் !

எங்க தலைவர் பின்னாலே ஒரு தொண்டர் படையே இருக்குது, தெரியுமா ?
எங்க தலைவர் பின்னாலே ஒரு குண்டர் படையே இருக்குது, தெரிஞ்சுக்க !

இன்னிக்கு சமையல் குறிப்பு ரொம்ப இன்ட்ரஸ்டிக்கா இருந்ததுங்க. நாளைக்கு உங்களுக்கு அதை செய்து தரப்போறேன்.
என்ன அது ?
ஸ்டவ்ல வெந்நீர் வெச்சு, அதுல ஹார்லிக்ஸ் கரைச்சு கொடுக்கப் போறேன்.

தலைவர் வீட்ல ஆயிரக்கணக்குல செருப்புகள் இருந்ததுக்கு, அதிகாரிகள் கணக்கு கேட்டாங்களாமே... தலைவர் என்ன சொன்னார் ?
வாங்கினா கணக்கு காட்டலாம். மேடைல வந்து விழுந்ததுக்கெல்லாம் எப்படி கணக்கு காட்டறதுன்னாராம்.. !

உன் மூணாவது பையனுக்குப் பெண் பார்க்கறீயாமே, மருமகள் எப்படி இருக்கணும் ?
என்னோட கூட்டணி அமைச்சு, என் மூத்த மருமகள்களை ஓரங்கட்டணும். ..!

எப்படிடா உங்க மெட்ராஸ் டிரிப்... அத்தை வீட்ல ஜமாய்ச்சீங்களா. ..?
மண்ணாங்கட்டி ! எங்களை லாரில தண்ணி பிடிக்கவும் தெரு பம்ப்ல தண்ணி அடிக்கவும் விட்டுட்டு, நாள்பூரா அத்தையும் மாமாவும்தான் ஊர்சுத்திட்டு வந்தாங்க !

நானும் என் கணவரும் வீட்டுவேலையைப் பங்கு போட்டுச் செய்வோம்...
நிஜமாவா...?
ஆமாம்... பத்துப்பாத்திரம் தேய்ச்சாகூட, ஆளுக்கு அஞ்சு தேய்ப்போம் !

தேள் கொட்டினதுக்கு இப்பத்தானே மருந்து வாங்கிட்டுப் போனீங்க... மறுபடியும் எதுக்குக் கேக்கறீங்க...?
மருந்து கொட்டிடுச்சு டாக்டர் !

டாக்டர், நாலாம் நம்பர் பேஷண்ட்டுக்குக் கொஞ்சம் முன்னாடி ஆபரேஷன் பண்ணிட்டீங்க...
இதுக்குப் போய் ஏன் இவ்வளவு பதற்றப்படறே ?
இல்லை டாக்டர்... முதுகுல ஆபரேஷன் பண்றதுக்குப் பதிலா, வயித்துல பண்ணிட்டீங்க !

ஆபரேஷன்ல உங்க மாமியார் பிழைச்சுட்டாங்க...
ஹூம்... உங்களைப் போய் கைராசி டாக்டர்னு சொல்றாங்களே !

என் மனைவி இட்லி பண்ணா மல்லிகைப்பூ மாதிரி இருக்கும்...
நிஜமாவா ?
ஆமாம் ! மீந்துபோன இட்லியைத் தொடுத்துத் தலையில வெச்சுப்பாள்னா பாருங்களேன்...

அந்த நடிகை, இது என்னோட மானப் பிரச்னை, விடமாட்டேன்-னு சொல்றாங்களே... என்னாச்சு ..?
படத்துல அவங்க குளிக்கிற ஸீனை சென்ஸார்ல கட் பண்ணிட்டாங்களாம் !

சந்தோஷத்தைப் பணம் கொடுத்து வாங்க முடியாது.
ஆனா கஷ்டத்தை வாங்க முடியும்...
அப்படியா !

ஆமாங்க... நாங்க வரதட்சணை கொடுத்தோமே !

சாதாதோசை, ரவாதோசை... சரி ! அதென்ன கூட்டணிதோசை-னு போர்டு வெச்சிருக்கீங்க...?
அதுவா ! பழைய மாவு, புளிச்ச மாவு, மீந்துபோனது... எல்லாத்தையும் கலந்து சுட்டதுதான் !

மாப்பிள்ளை மெகாசீரியல்ல நடிக்கறார். ..!
அப்ப பர்மனண்ட் வேலைல இருகார்னு சொல்லுங்க !

சொந்த ஊரு எது ?
அந்த அளவுக்கு நமக்கு வசதி இல்லீங்க. சொந்த வீடுதான் இருக்கு !
நன்றி ஆனந்த விகடன் 15-4-2001
கொஞ்சங்கூட பொறுமையே இருக்க மாட்டேங்குது டாக்டர்...?
அப்படியா ..! அப்ப வெளியே போய் உட்கார்ந்திருங்க, மற்ற பேஷண்ட்ஸைப் பார்த்துட்டு கடைசியா உங்களைக் கூப்பிடறேன்.. .!

முன்னே உங்க பையன் லா-காலேஜ் போறான்னு சொன்னீங்க. இப்ப மெடிக்கல் காலேஜ் போறான்னு சொல்றீங்களே ?
ஆமா, முன்னே லா காலேஜ் பெண்கள் பின்னாடி சுத்தினவன் இப்ப மெடிக்கல் காலேஜ் கேர்ள்ஸ் பின்னாடி சுத்தறான் !

எம் மவனை ஏன் வெட்னரி டாக்டர் கிட்டே வைத்தியம் பண்ண கூட்டிப்போறே ?
நீங்கதானே சார் எம் மவன் வாயில்லா ஜீவன்னு சொன்னீங்க !

என்னது... பரீட்சைக்கு முதல் நாள்தான் தயார் பண்ணுவியா...! போதுமா அது ?
பிட் தயார் பண்றதை ஒரு வாரத்துக்கு முந்தியா செய்ய முடியும் !

அந்த வேட்பாளர் தேர்தலில் ஜெயிச்சா தொகுதி முழுவதும் நடப்பேன்கறாரே, ஏன் ?
றுறடுமு உறுதி கொடுக்கறாராம்.

இது உங்கள் மகனின் உயிர் பிரச்னை. கண்டிப்பா இந்த ஆபரேஷன் செய்தே ஆகணும் !
அதனாலதான் அவன் நேத்தே எங்கேயோ ஓடிட்டான் !